7B 26

# தமிழரசு

மலர் 26 இதழ் 2-6

16.7.95 — 16.9.95

JL
N95.26.2-6.
199918


தமிழரசு
சிறப்பு மாநாடு





திரு. யூ. ஸ்ரீனிவாஸ் - மாண்டலின்

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர்!

**கலை நிகழ்ச்சிகளில் சில....**

சரசாலயா குழுவினர் "சாகுந்தலம்" நாட்டிய நாடகம்.



# இந்த இதழில்...


தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் சங்க மாநில மாநாட்டில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ........ 2

டாக்டர் ஜெ. ஜெயலலிதா கல்வி உதவித் தொகைத் திட்டம் ........ 7

காயிதே மில்லத் பிறந்தநாள் நூற்றாண்டு விழா : மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ........ 9

மாணவ, மாணவிகளுக்குப் பரிசளிப்பு : மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரை ........ 17

உலகின் முதன் மொழிக்கு உயர்வளித்த முதல்வர்! –மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் ........ 21

தமிழகத் திட்டங்களுக்கு ராஜஸ்தான் மாநில முதல்வர் பாராட்டு ........ 24

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ராணி அம்மையார் பாராட்டு ........ 25

நன்னிலத்தில் பாவேந்தர் பிறந்தநாள் விழா ........ 27

நூல்நயம் ........ 31

பாரதி! நீ ஒரு ஞானத் தீ
கவிஞர் மு. மேத்தா ........ 33

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் காயிதே மில்லத் நூற்றாண்டு விழா ........ 38

திருநெல்வேலியில் அரசுப் பொருட்காட்சி ........ 41

காரைக்குடியில் கவியரசு கண்ணதாசன் பிறந்தநாள் விழா ........ 43

தமிழில் மருத்துவம்
டாக்டர் பி.பி. ராஜன் ........ 46



## தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026

ஆனித் திங்கள் : 32

மலர்: 26 இதழ்: 2

16.7.1995

விலை ரூபாய்: 3




**இதழ்தோறும் ஓர் இனிய குறள்**

இருமை வகைதெரிந்து ஈண்டு அறம்பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு

பிறப்பு வீடு என்பன போல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அறத்தை மேற்கொண்டவரின்பெருமையே உலகத்தில் உயர்ந்தது.

"தமிழக மக்களின் பேராதரவுடனும், பேரன்புடனும், தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்று, மக்கள் சக்தி என்ற, மாபெரும் சக்தியின் துணையுடன், நான்கு ஆண்டுக் கால மக்கள் பணியை முடித்து ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும், மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் சங்கத்தின் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் பெரு மகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

சோதனைகளும், சாதனைகளும் நிறைந்த, ஒரு நான்காண்டு காலகட்டத்தை வெற்றி கரமாகக் கடந்துவிட்டு, உங்கள அன்பு






# "பெண்களையும் கிராம உதவியாளர்களாக்கிப் பெருமை கொண்டது இந்த அரசு!; பகுதிநேரப் பணியாளர்களை முழுநேர அரசுப் பணியாளர்களாக்கி ஆணை பிறப்பிக்கப்படுகிறது!"

199918

## தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் சங்க மாநில மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் விழாப் பேருரை

## முதல் அமைச்சர் செய்தி

அன்னை இந்தச் சீரிய விழாவில் பங்கேற்க வந்துள்ளேன். பொய்யையும், புரட்டையும், சிலர் செயற்கையாக உருவாக்கிய இடர்ப் பாடுகளையும், மக்கள் சக்தியின் மகத்தான துணையுடன் நான் துணிவுடன் எதிர் கொண்டேன். தமிழகத்தை முன்பு ஆட்சி செய்தவர்கள் சாதித்திராத பல்வேறு சாதனைகளையும், இன்று நிகழ்த்திக் காட்டி இருக்கிறோம். எனவேதான், சோதனைகளும் சாதனைகளும் நிறைந்த நான்காண்டுக் காலகட்டம், என்று குறிப்பிட்டேன். சிந்தனை யில் தெளிவும் செய்கையில் நேர்மையும் மக்கள் முன்னேற்றத்தில் உண்மையான ஈடுபாடும் மக்கள் சக்தி என்ற மாபெரும் சக்தியின் துணையும், முழுமையாக இருந் தால், நாம் எதிர்கொள்ளும் இன்னல் களையும், இடர்ப்பாடுகளையும் முழுமை யாகச் சமாளித்து வெற்றி அடைய முடியும் என்பதையும், சந்தேகமற நிரூபித்துக் காட்டியுள்ளோம்.

பல துறைகளில், பின்னடைவு பெற்றிருந்த தமிழகம், கடந்த நான்கு ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால், இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது. கல்வித் துறை, தொழில் துறை, சமூக நலத் திட்டங்கள் என்று, எல்லாத் துறைகளிலும் இன்று தமிழகம், தன்னிகரற்று விளங்குகிறது என்றால், அது மிகையாகாது.

நல்லதொரு நிர்வாகத்தை அமைத்தால் தான், அரசின் பல்வேறு நலத் திட்டங்களின் பயன்கள், அடிமட்டத்தில் வாழ்கின்ற, ஏழை எளிய மக்களுக்குச் சென்றடையும். எனவே தான், நிர்வாகத்தின் ஆணிவேர்களாக, அடிமட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர் களும், பணியாளர்களும், மகிழ்ச்சியுடனும், மனநிறைவுடனும் பணியாற்றுகின்ற ஒரு சாதகமான சூழ்நிலையை, எங்கள் அரசு- உங்கள் அன்பு அன்னையின் அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தி லிருந்தே, கிராமம் என்பது, நிர்வாகத்தின் ஒரு அடிப்படை அலகாக- அதாவது, Basic unit of the Administration ஆக, விளங்கி வருகின்றது. இன்றும் அதே நிலை நீடித்து வருகின்றது. கிராம நிர்வாகத்தில் மிக முக்கியமான, அத்தியாவசியமான, அடிப்படைப் பணி களை ஆற்றிக் கொண்டிருக்கும், கிராம உதவியாளர்களை; உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, ஒரு மனிதாபிமான உணர்வுடன் நடத்தி வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட நான் கடமைப் பட்டுள்ளேன்.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்., அவர்களின் காலத்தில் தான், அதாவது 1980 ஆம் ஆண்டில் தான் தமிழ்நாடு கிராம உதவியாளர்களுக்கான பணி விதிகள் வகுக்கப்பட்டன. அதன் பின்னர், பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வந்த, இந்த ஊழியர்கள் அனைவரும் 1.6.1992 முதல் "கிராம உதவியாளர்கள்" என்று, பொதுவாக அழைக்கப்பட வேண்டும் என்று ஆணை யிடப்பட்டது உங்கள் அன்பு அன்னையின் ஆட்சிக் காலத்தில் தான் என்பதைச் சுட்டிக் காட்டுவதில் நான் பெருமிதமும், பெரு ம்கிழ்ச்சியும் அடைகின்றேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, 592 ரூபாய் மட்டுமே, மாதாந்திர மதிப்பூதியமாகப் பெற்று வந்த, கிராம உதவியாளர்களின் மதிப்பூதியத்தை, 1.1.1992 முதல், 612 ரூபாயாக உயர்த்தினோம். பின்னர் பல்வேறு கால கட்டங்களில், இந்த மதிப்பூதியத் தொகையை, உயர்த்திக் கொண்டே வந்து, இன்று குறைந்தபட்சம் 1,111 ரூபாய் மதிப்பூதியம் பெறுகின்ற, ஒரு உன்னதமான சூழ்நிலையை உங்கள் அன்பு அன்னையின் அரசு, ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பூதியம் மட்டுமின்றி, 1993 ஆம் ஆண்டு முதல் கிராம உதவியாளர்கள்

அனைவருக்கும் அகவிலைப்படியும், கூடுதல் அகவிலைப்படியும் வழங்கப்பட்டு வருகின்றது. 1994-ஆம் ஆண்டு முதல், கிராம உதவியாளர்களின் துயர் துடைக்க, இடைக்கால நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. இவ்வாறு, நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர், இந்தப் பணியாளர்களின் நிலையை உயர்த்த, பல நடவடிக்கைகளை மேற்கொண்டோம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

575 ரூபாய் மட்டுமே, பெற்று வந்த கிராம உதவியாளர்கள், இன்று குறைந்தபட்சம், 1,111 ரூபாய், மதிப்பூதியமாகப் பெற்று வருகிறார்கள் என்பதிலிருந்து கிராம உதவியாளர்களின் நல்வாழ்க்கையிலும், பொருளாதார முன்னேற்றத்திலும் நாங்கள் கொண்டிருக்கும் உண்மையான ஈடுபாடு விளங்கும் என்று பரிபூரணமாக நம்புகிறேன்.

கிராம உதவியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பண்டிகை முன்பணத்தையும் 200 ரூபாயிலிருந்து, 300 ரூபாயாக உயர்த்தி வழங்கியதும், உங்கள் அன்பு அன்னையின் அரசு தான். ஆண்கள் மட்டும் தான், கிராம உதவியாளர்களாகப் பணியாற்ற முடியும், என்ற ஒரு நிலையை மாற்றி-பெண்களையும், கிராம உதவியாளர்களாக நியமனம் செய்யலாம் என்று நான் ஆணைபிறப்பித்தேன். இன்று பல பெண்மணிகள், கிராம உதவியாளர்களாக நியமனம் பெற்று நன்முறையில் செயலாற்றி வருகிறார்கள். அவர்களில் பலரை, இந்த விழாவில் காணும்போது எனது மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

கிராம உதவியாளர்கள், பணியில் இருக்கும்போது, மரணம் அடைய நேரிட்டால் 40,000 ரூபாய் மட்டுமே, குடும்ப நல நிதியாக, வழங்கப்பட்டு வந்தது. உங்கள் அன்பு அன்னை அந்தத் தொகையை, 60,000 ரூபாயாக உயர்த்தி, ஆணை வழங்கியுள்ளேன் என்பதையும், இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பகுதி நேர ஊழியர்களாகப் பல நூற்றாண்டுகள் செயல்பட்டு வந்த, கிராம



உதவியாளர்கள் தங்களைத் தமிழக அரசின் முழு நேர அரசு ஊழியர்களாக, அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை 1980-ஆம் ஆண்டு முதல், வலியுறுத்தி வருகின்றார்கள் என்பதை அறிந்தவுடன், இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண உடனடியாக, உயர்மட்ட அலுவலர் குழு ஒன்றை, நியமனம் செய்தேன்.

1993-ஆம் ஆண்டு நான் நியமனம் செய்த உயர்மட்ட அலுவலர் குழு, கிராம உதவியாளர்களைப் பகுதி நேர ஊழியர்கள், என்ற நிலையில் இருந்து மாற்றி, முழு நேர அரசு ஊழியர்களாக உயர்த்துவது குறித்து சில ஆலோசனைகளை வழங்கியுள்ளது. கிராம உதவியாளர்களுக்கு 500 ரூபாய் அடிப்படை ஊதியமாகக் கொண்டு, ஒரு ஊதிய விகித்தை நிர்ணயம் செய்யலாமா என்று, ஒரு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள், வாழ்க்கையில் வளம் பெற, பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற, உங்கள் அன்பு அன்னை, பகுதி நேர அரசுப் பணியாளர்களாகப் பணியாற்றி வந்த உங்கள் அனைவரையும் இன்று முதல் முழு நேர அரசுப் பணியாளர்களாக மாற்றி ஆணைபிறப்பித்துள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 31,000க்கும் மேற்பட்ட கிராம உதவியாளர்கள், இன்று முதல் நிரந்தரப் பணியாளர்களாக முழு நேர அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

உயர்மட்டக் குழு 500 ரூபாய் அடிப்படை ஊதியம் வழங்கலாம் என்று கூறி இருந்த பரிந்துரையை, நான் ஏற்றுக்கொள்வதோடு, 500 ரூபாய் என்கின்ற நிலையை மாற்றி,

★ நீங்கள் ஒவ்வொருவரும் சமத்துவம் காண, மாறுதல் கொள்ளப் பாடுபடுங்கள்! உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதம் ஒழிய உழையுங்கள்!

- தந்தை பெரியார்

★ ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுக்குள் தலையாய பற்று மொழிப்பற்றேயாகும்.

- தந்தை பெரியார்

இன்னும் 100 ரூபாய் கூடுதலாகச் சேர்த்து 600 ரூபாய் அடிப்படை ஊதியமாக நிர்ணயம் செய்யவும் ஆணைபிறப்பித்துள்ளேன் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 600 ரூபாய் அடிப்படை ஊதியமாகக் கொண்ட ஊதிய விகிதத்தில், கிராம உதவியாளர்களுக்கு, ஊதியம் நிர்ணயிக்கப்ப்டும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி, இந்தப் புதிய ஊதிய விகிதம் 1.6.1995 முதல் நடைமுறைப் படுத்தப்படும் என்பதையும், இந்த விழா மேடையில் அறிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

எனவே, தற்போது பணியில் இருக்கும் கிராமப் பணியாளர்கள் ஒவ்வொருவரும், இந்த மாதத்திற்கான ஊதியம் பெறும்போது, 300 ரூபாய் கூடுதலாகப் பெறுவார்கள் என்பதை அறியும்போது, இந்த அறிவிப்பு எத்தகையதொரு பொருளாதார முன்னேற்றத்தை அவர்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தும் என்பதை நினைத்து, எனது மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

பகுதி நேர ஊழியர்களாக, இத்தனை ஆண்டுக் காலமாகப் பணியாற்றி வந்த கிராம உதவியாளர்கள், முழு நேர அரசு ஊழியர்கள் ஆவதால் 31,000 பேருக்கு மேற்பட்ட, கிராம உத்வியாளர்கள், இனி ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள் என்பது, மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும்.

அதுமட்டுமின்றி, பணியிலிருக்கும்போது இறக்கின்ற, அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு, கருணையின் அடிப்படையில், வழங்கப்படுகின்ற வேலைவாய்ப்பும், கிராம உதவியாளர்களுக்கும் கிடைக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நலன் காக்கும் தமிழக அரசு- உங்கள் அன்பு அன்னையின் அரசு பல ஆண்டுளாக, எவராலும் கவனிக்கப்படாமல் இருந்த கிராம உதவியாளர்களின் கோரிக்கையை- நிதிச் சுமை ஏற்பட்டாலும் துணிவோடு அதை ஆராய்ந்து இன்று அதற்கு நல்லதொரு தீர்வையும் கண்டுள்ளது. இந்த அறிவிப்பினால் ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபாய்க்கும் அதிகமாகக் கூடுதல் நிதிச்சுமை ஏற்படும் என்றாலும் சாதாரண ஏழை எளிய மக்களுடன் நெருங்கிப் பழகிப் பணியாற்றுகின்ற, கிராம உதவியாளர்களின் வாழ்க்கையில், இது ஒரு புதிய வசந்தத்தை ஏற்படுத்தும் என்பதை எண்ணி நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று தமிழக அரசு வழங்கியுள்ள இந்தச் சலுகைகள், உங்களுக்குப் புதிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தரும் என்று உறுதியாக நம்புகிறேன். தமிழக அரசின் வளர்ச்சித் திட்டங்கள், மற்றும் பல்வேறு சமூகநலத் திட்டங்களின் பயன்கள், ஏழை எளிய மக்களுக்குச் சென்று அடையும் வண்ணம் உங்கள் செயல்பாட்டை வகுத்துக் கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், கிடைக்கச் செய்வதோடு, கல்வியைப் புகட்டி, அவர்களது அறிவுக் கண்களைத் திறந்து வைக்க வேண்டும் என்பதே, எனது பேரவா! இந்தக் கொள்கைகளைச் செயலாக்க, நான் மேற்கொள்ளும் அனைத்துப் பணிகளிலும், நீங்கள் அனைவரும் எனக்கு உறுதுணையாக நிற்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் அவர்தம் இன்னல்கள் களையப்பட வேண்டும் என்று முழு மூச்சுடன்- உறுதியான ஈடுபாட்டுடன் செயல்பட்டு வரும், உங்கள் அன்பு அன்னையின் அரசு, அதே ஈடுபாட்டை அடிமட்டத்தில் பணிபுரிகின்ற அரசு ஊழியர்களிடமும், காட்டி வருகின்றது. மக்களின் அனைத்துப்

பிரிவினரும் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்கின்ற, ஒரு உந்துதலின் காரணமாகத்தான் கடுமையான நிதி நெருக்கடியின் நடுவிலும், நிதிப் பற்றாக்குறை நிலையிலும் நல்ல பல நலத் திட்டங்களை முனைப்புடன் தீட்டி நாளும் செயல்படுத்தி வருகின்றோம் என்பதற்கு, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நிகழ்ச்சியே ஒரு அருமையான எடுத்துக்காட்டு என்றால் அது மிகையாகாது.

கிராம நிர்வாகத்தில், கிராம உதவியாளர்களின் பணி, எத்தனை முக்கியமானது என்பதை நான் அறிவேன். அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் கிராமங்களுக்குச் செல்லும்போது, அவர்களது பணிகளைச் செவ்வனே மேற்கொள்ள, இந்தக் கிராம உதவியாளர்களை நாடுவார்கள் என்பதையும் கிராம உதவியாளர்களும் வளர்ச்சிப் பணிகளிலும், வருவாய்த்துறைப் பணிகளிலும், தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றி வருகிறார்கள் என்பதையும், நான் நன்கு அறிவேன். கிராம உதவியாளர்களின் உதவி, பல துறைகளைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைக்காதபோது, அதனால் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளையும் சிரமங்களையும் நான் நன்கு அறிவேன். எனவே தான், சிறப்பான பணிகளை ஆற்றி வருகின்ற, கிராம உதவியாளர்களின் வாழ்க்கைத் தரம் மேலும் உயர்வதற்கும் அவர்களின் பணி மேலும் சிறக்கவும் பல நல்ல முடிவுகளை இன்று நான் அறிவித்துள்ளேன்.

கிராம உதவியாளர்கள், என்றென்றும் இந்த அரசுக்கு, உறுதுணையாகச் செயல்படுவார்கள் என்று, உங்கள் சங்கத்தின் சார்பில், நீங்கள் வழங்கிய வாக்குறுதிக்கு, நான் எனது நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். அதே உணர்வுடன் உங்கள் வாழ்க்கையில் ஏற்றம் பெற, உங்கள் வாழ்வு சிறப்படைய நல்ல திட்டங்களைத் தமிழக அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்ற உறுதியையும் இந்த நேரத்தில், உங்களுக்கு அளிக்க விரும்புகிறேன். நீங்கள் அனைவரும், கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு, உறுதுணையாக இருந்து, அவர்களது நலன் காக்கும் காவலர்களாகச் செயல்பட வேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் அனைவரும், வாழ்வில் எல்லா வளமும், நலமும் பெற வேண்டும் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்தி- இந்தப் பிள்ளைகளின் நலன்களைக் காக்க, இந்த அன்னை எப்போதும் ஆயத்தமாக இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

**—23-6-95 -இல், சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் சங்க மாநில மாநாட்டில் ஆற்றிய பேருரை.**

## கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு வெள்ளி ரதம்

சென்னையை அடுத்த திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலின் நிர்வாகத்தினர், இத்திருக்கோயிலுக்கு வெள்ளி ரதம் ஒன்றினை அமைக்க வேண்டும் என்ற கருத்துரு ஒன்றினைத் தமிழ்நாடு திருக்கோயில் வாரியத்திற்கு அனுப்பி வைத்திருந்தார்கள். அதனைப்பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு வெள்ளி ரதம் ஒன்று செய்வதற்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிட்டுள்ளார்கள்.

வெள்ளி ரதம், 367 கிலோ வெள்ளியில் 12 அடி உயரத்தில், 510 சதுர அடி பரப்பளவில் 33.60 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். இந்த ரதம் செய்யும் பணி, தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வாரியத்தின் 'பூம்புகார்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.





## டாக்டர் ஜெ.ஜெயலலிதா கல்வி உதவித் தொகைத் திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு உரிய பாதுகாப்பினை அளிக்கும் பணியினை மேற்கொண்டிருக்கும் தமிழகக் காவல்துறையின் ஒரு பிரிவான 'சிறப்புப் பாதுகாப்புக் குழு' (Special Security Group)வில் பணி புரிவோர் ஒவ்வொருவரும், தங்களுக்கு அளிக்கப்படுகின்ற 'இன்னல்படி' (Risk Allowance)விருந்து முதல் மாதத் தவணையாக 1,000 ரூபாயை வழங்கி அதன் மூலம் மொத்தம் 4,00,000 ரூபாயை காவல்துறை பணியாளர்களின் குடும்பத்தாருக்கான கல்வி ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் ஒன்றினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய திருப்பெயரில் 'டாக்டர் ஜெ.ஜெயலலிதா கல்வி உதவித் தொகை' என்ற பொது நல நிதி ஒன்றினை உருவாக்கினார்கள்.

காவல்துறையில் பணிபுரியும் காவல் ஆய்வாளர் நிலைக்கும் குறைவான பணிகளில் பணி புரிவோரது குழந்தைகளின் கல்வி ஆர்வத்தை ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்துள்ள இத்திட்டத்தினை வெகுவாகப் பாராட்டிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், சிறப்புப் பாதுகாப்புக் குழுவினர் திரட்டிய 4,00,000 ரூபாயோடு சேர்த்து, அரசு சார்பில் 6,00,000 ரூபாய் நிதி உதவியினை வழங்கி, மொத்தம் 10,00,000 ரூபாய் முதலீட்டினை உருவாக்கி அதனை வைப்புத் தொகையாக அரசு நிறுவனம் ஒன்றில் இட்டு அதன்மூலம் ஆண்டுதோறும் கிடைக்கக் கூடிய வட்டித் தொகையான 1,50,000 ரூபாயிலிருந்து மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு மற்றும் தொழில் கல்வி மேல்படிப்புக்களுக்கான நுழைவுத் தேர்வு ஆகிய இரண்டிலும் சேர்த்து வெவ்வேறு தொழில் படிப்புகளுக்குத் தேர்ச்சி பெற்ற முதல் ஆறு மாணவ மாணவியர்களுக்கு முதல் பரிசாக 40,000 ரூபாயும் மற்றும் 20,000 ரூபாய் வீதம் 5 பரிசுகளும், வழங்க் உரிய ஆலோசனை



களையும் வழங்கினார்கள்.

கடந்த ஆண்டு (1994) தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு (1995) 'டாக்டர் ஜெ.ஜெயலலிதா கல்வி உதவித் தொகைப்' பரிசுகளை வென்ற காவல்துறை அலுவலர்களின் குடும்பங்களைச் சார்ந்த கீழ்க்கண்ட 6 மாணவ மாணவியர்களுக்கு 29.6.1995 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நேரில் பரிசுகளை வழங்கினார்.

செல்வி எஸ். மீனாட்சி, மருத்துவம் (ரூ.40,000), திரு எம். சண்முகசுந்தரம் அவர்களின் மகள், தலைமைக் காவலர், கோயம்புத்தூர் ஊரகம்

செல்வி கே.எஸ். ராஜராஜேஸ்வரி, மருத்துவம் (ரூ.20,000) திரு கே. சுபாஷ்சந்திர போஸ் அவர்களின் மகள், காவல்துறை ஆய்வாளர், கோயம்புத்தூர் நகரம்

செல்வி வி. அனுபமா, மருத்துவம் (ரூ.20,000) திரு கே. வரதராஜன் அவர்களின் மகள், காவல்துறை ஆய்வாளர், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்

திரு சி. நாகசுப்பிரமணியன் பொறியியல் (ரூ.20,000) திரு எம்.பி. சொக்கநாதன் அவர்களின் மகன், தலைமைக் காவலர், சேலம்.

செல்வி எஸ். புவனேஸ்வரி, விவசாயம் (ரூ.20,000) திரு ஆர். சேகரன் அவர்களின் மகள், தலைமைக் காவலர், திருச்சிராப்பள்ளி

திரு ஜெ. ஷங்கர், பொறியியல் (ரூ.20,000) திரு டி. ஜெயவேலு அவர்களின் மகன், முதல்நிலைக் காவலர், கோயம்புத்தூர் மாவட்டம் (ஊரகம்)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடமிருந்து பரிசுகளைப் பெற்ற மாணவ மாணவியர்கள் 6 பேரும் தங்கள் பெற்றோர்களுடனும், குடும்பத்தாருடனும் வந்திருந்து பரிசுகளை நேரில் பெற்றுக் கொண்டார்கள்.

பரிசுகளை வென்ற மாணவ மாணவியர்கள் 6 பேருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா தன்னுடைய மனமார்ந்த பாராட்டுதல்களையும், அவர்கள் மென்மேலும் தங்களது மேற்படிப்பில் வெற்றிகளையும் பெற நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்கள். பின்னர், பரிசு பெற்ற மாணவ மாணவியர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுடன் புகைப்படம் ஒன்றினையும் எடுத்துக் கொண்டார்கள்.





# காயிதேமில்லத் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை

“**நா**ட்டுப் பற்று, மொழிப் பற்று, ஆகியவற்றை முன்னிறுத்தி தேசிய ஒருமைப்பாடு, மற்றும் இந்தியத் துணைக் கண்டத்தின், இறையாண்மையைப் பாதுகாக்கப் பாடுபட்ட, கண்ணியம் மிக்க காயிதேமில்லத் மொகமத் இஸ்மாயில் சாகிப் அவர்கள், நம் அனைவரின் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரியவர் ஆவார். இந்திய அரசியல் வானில், சுடர் விட்டுப் பிரகாசித்த நட்சத்திரங்களின் பொது வாழ்க்கையில் மற்றவர்களுக்கு, ஓர் எடுத்துக் காட்டாக விளங்கிய, காயிதேமில்லத் அவர்களின், பிறந்தநாள் விழாவை, இன்று துவக்கி வைத்ததில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

பொது வாழ்க்கையிலும், அரசியலிலும் ஈடுபடுபவர்கள், எப்படிப்பட்ட பண்பாட்டையும் நாகரீகத்தையும், கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்கு, ஒரு இலக்கணமாக- எடுத்துக்காட்டாக வாழ்ந்து மறைந்த, ஒரு பெரியவரின் நூற்றாண்டு விழாவைச் சீரோடும் சிறப்போடும், நாம் நடத்திக் கொண்டிருப்பது, மிகவும் ஏற்புடைய ஒன்றாகும்.

வாழ்ந்து மறைந்தவர்களின் வாழ்க்கை எல்லாம், சரித்திரம் ஆவது இல்லை. வாழ்கின்ற போது, சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும், பொது நலத்துடன் பாடுபட்டு தனது மறைவிற்குப் பின்பு, தான் வாழ்ந்த வாழ்க்கை, மற்றவர்களுக்கு வழிகாட்டியாகத்





திகழும் வண்ணம், எவர் வாழ்ந்து விட்டுச் செல்கிறார்களோ அத்தகைய சான்றோர்கள் தான், மக்கள் மனதில், என்றென்றும் நிலைத்து நிற்பார்கள்.

மதம், இனம், மொழி, இடம், காலம், ஆகிய அனைத்தையும் கடந்து, வாழும் மாந்தர் தம் மனதில், நிலையான ஒரு இடத்தை, நிச்சயம் அவர்கள் பெற்று விடுவார்கள்.

தமிழகத்தின் தென் கோடியிலே பிறந்தாலும், இமயம் முதல் குமரி வரை பரந்து கிடக்கும் இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும், இஸ்லாமிய சமுதாய மக்களின், ஒருமித்த மதிப்பையும், அன்பையும் காயிதேமில்லத் அவர்கள், பெற்றிருந்தார்கள் என்றால் அவர் எத்தகைய உயர்ந்த குணங்களையும், உயரிய நெறிமுறைகளையும், தனது வாழ்க்கையில் கடைப்பிடித்து இருப்பார் என்பது, சொல்லாமலே விளங்கும்.

அத்தகைய ஒரு நல்லவரின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை, இன்று தொடங்கி வைத்ததிலும் தமிழக அரசின் சார்பில், இந்த ஆண்டு முழுவதும், எல்லா மாவட்டங்களிலும், விழா நடத்துவதற்கு ஏற்பாடு செய்ததிலும் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

பெரியவர் காயிதேமில்லத் அவர்கள், அரசியலில் நேர்மை, பொது வாழ்வில் தூய்மை, என்ற இரண்டு அடிப்படைக் கொள்கைகளைத், தனது தாரக மந்திரமாகக் கொண்டு, செயல்பட்ட உத்தமர் ஆவார்.

இன்னல்கள், இடையூறுகள், எத்தனை ஏற்பட்டபோதும் மனம் தளராமல், அவற்றை எல்லாம் துணிவுடன் தாங்கி தனது சீரிய கொள்கைகளை, எந்தக் காலத்திலும், விட்டுக் கொடுக்காமல் வாழ்ந்தார், என்பதை அறியும்போது பொது வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு, காயிதேமில்லத் அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஒரு வழிகாட்டி நூல், என்கின்ற எண்ணமே விஞ்சி நிற்கின்றது.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களின் நலன் மட்டும்தான் முக்கியம், என்ற குறுகிய மனப்பான்மையுடன், செயல்பட்டவர் அல்ல, பெரியவர் காயிதேமில்லத் அவர்கள்.

இஸ்லாமியச் சமுதாயத்தின் வளர்ச்சியையும், இந்திய நாட்டின் மேன்மையையும் தனது இரண்டு கண்களாகக் கொண்டு செயல்பட்டார். 1920-ஆம் ஆண்டு, அண்ணல் காந்தியடிகள், ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தபோது, கல்லூரி மாணவராக இருந்த, காயிதேமில்லத் அவர்கள், நாட்டுப்பற்றினால் உந்தப்பட்டு, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். கல்லூரிப் படிப்பை உதறித் தள்ளினார்.

மொழியாலும், மதத்தாலும் வேறுபட்டாலும், இந்தியத் துணைக் கண்டத்தில் வாழ்பவர்கள் அனைவரும், ஒரு தாய் மக்கள் என்ற உணர்வை, அனைவர் மத்தியிலும் ஊட்டி வளர்க்க, அரும்பாடுபட்டவர் பெரியவர் காயிதேமில்லத் அவர்கள்.



தான் சார்ந்துள்ள சமுதாயத்தின் நலனைவிட, ஒட்டுமொத்த நாட்டு நலன் தான், உயர்வானது என்பதைத் தனது புனிதமான எண்ணத்தாலும் புரட்சிகரமான செயலாலும் வெளிப்படுத்திக் காட்டியவர் அவர்.

இந்திய நாடு விடுதலை அடைந்த பின்னர், இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும், கட்டிக் காக்கின்ற வகையில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியை, அவர் நடத்திச் சென்ற பாங்கு, போற்றிப் பாராட்டத்தக்கது ஆகும்.

1945-ஆம் ஆண்டு முதல், அவர் மறைந்த 1972-ஆம் ஆண்டு வரை ஒரு கால் நூற்றாண்டுக்கு மேல், அந்தக் கட்சியின், செயலாற்றல் மிக்க தலைவராக விளங்கி, அருந்தொண்டாற்றினார் என்பதே, அவருக்குப் பெருமை சேர்க்கின்ற செய்தி ஆகும்.

மதம் என்கின்ற குறுகிய வட்டத்தை விட்டு அகன்று சமத்துவம், சமதர்மம், தாய்நாடு, தாய்மொழி, போன்ற பரந்த கொள்கைகளை, முன்னிறுத்திச் செயல்பட்டதால்தான் மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டு, மக்கள் மனங்களைக் கவர்ந்த, பேரறிஞர் பெருந்தகை அண்ணா மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஆகியோர், போற்றிப் பாதுகாத்த, திராவிட இயக்கத்தின் மீது காயிதேமில்லத் அவர்களுக்கு, ஒரு ஈடுபாடு ஏற்பட்டது என்றால் அது மிகையாகாது. தனது தாய் மொழியாம், தமிழ் மொழி மீது, பெரியவர் காயிதேமில்லத் அவர்கள், கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டையும், அளப்பரிய பற்றையும் அவர் பல முறை வெளிப்படுத்தி உள்ளார். செந்தமிழ் மொழியை, இந்த நாட்டின் தேசிய மொழியாக, ஆக்க வேண்டும் என்று, நாடாளுமன்றத்தில் முழங்கிய, அவரது தமிழ் மொழிப் பற்றினைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நமது நாடு விடுதலை அடைவதற்கு முன்பு, அரசியலில் ஈடுபட்ட அவர் அரசியல் நிர்ணய சபையில் ஓர் உறுப்பினராக இருந்து ஆற்றிய அரும்பணி, நாம் என்றென்றும் போற்றிப் பாராட்டத் தக்கது ஆகும்.

பின்னர், சென்னை மாகாண சட்டப் பேரவை, நாடாளுமன்றத்தின் மக்களவை, மாநிலங்களவை ஆகியவற்றின் உறுப்பினராக விளங்கி தனது தெளிவான கருத்துக்களையும், தூய உணர்வுகளையும், சீரிய முறையில் வெளிப்படுத்தி, சாதனை படைத்தவர், பெரியவர் காயிதேமில்லத் ஆவார். தமிழ்நாட்டிலே பிறந்திருந்தாலும், கேரள மாநிலத்தின், ஒரு நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து மக்களவைக்கு மூன்று முறை, தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பதில் இருந்தே, அவரது பரந்த மனப்பான்மையை தேசிய உணர்வை தெளிவாக வெளிப்படுத்தும் என்று கருதுகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், என்ற மாபெரும் மக்கள் இயக்கத்தை, மனித நேயத்தின் அடிப்படையில் தோற்றுவித்த, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பெரியவர் காயிதேமில்லத் அவர்களின் பெயரும், புகழும் என்றென்றும் நிலைத்து நிற்க அவரது பிறந்த நாளை, அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும் என்று, 1977-ஆம் ஆண்டிலேயே, ஆணை பிறப்பித்தார்கள் 1983-ஆம் ஆண்டு, கண்ணியம் மிக்க காயிதேமில்லத் அவர்களின், வாழ்க்கை வரலாறு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆணையின் பேரில், பாடப் புத்தகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு சட்டப் பேரவையில், காயிதேமில்லத் அவர்





களின், திருவுருவப் படம், 1980-ஆம் ஆண்டு, திறந்து வைக்கப்பட்டது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் அடியொற்றி வந்த, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், கடந்த நான்கு ஆண்டுகளில் கண்ணியம் மிக்க காயிதேமில்லத் அவர்களின் திருநாமம், என்றென்றும் தழைத்திட அவர் பெயரை, புதிய மாவட்டம் ஒன்றிற்குச் சூட்டி மகிழ்ந்தேன். நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், என்றென்றைக்கும், அவரது பெயரையும், புகழையும் பரப்பிக் கொண்டிருக்கும், என்பதில் ஐயமில்லை.

இன்று காயிதேமில்லத் அவர்களின், நூற்றாண்டு விழாவைத் தமிழகத்தின் தலைநகரத்தில் தொடங்கி வைத்துள்ளேன். அவரது வாழ்க்கையைச் சித்திரிக்கும், ஒரு புகைப்படக் கண்காட்சியையும், துவக்கி வைத்துள்ளேன். அவரது பல்கலைத் திறனையும், பெருமைகளையும், பன்முக ஆற்றலையும், உயரிய பண்புகளையும், வெளிப்படுத்தும் வண்ணம், கருத்தரங்கம் ஒன்றும் நடைபெற்றுள்ளது. தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் இந்த நூற்றாண்டு விழா, சிறப்பாகக் கொண்டாடப் படும்.

காயிதேமில்லத் மொகமத் இஸ்மாயில் சாகிப் அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு சீரோடும், சிறப்போடும் கொண்டாடிக் கொண்டிருக்கும், இந்த நல்ல வேளையில் அந்தப் பெரியவரின் நினைவைப் போற்றிடும் வண்ணம், சிறப்புத் தபால் தலை ஒன்றை வெளியிட வேண்டும் என்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு, 3.6.1995 அன்று ஏற்கெனவே கடிதம் ஒன்றை எழுதியுள்ளேன்.

பெரியவர் காயிதேமில்லத் அவர்களின் திருவுருவம் பதித்த சிறப்புத் தபால் தலையை விரைவில் வெளியிட வேண்டும் என்று மத்திய அரசை நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

முகமதிய' சமுதாயத்திற்குப் பல நன்மைகளைச் செய்துள்ள உங்கள் அன்புச் சகோதரியின் அரசு தமிழ்நாடு 'Wakf வாரிய நிறுவனங்களின் பராமரிப்பிற்கு வழங்கப்பட்ட நிதியை ஒரு சில இலட்சம் ரூபாய் என்ற நிலையை மாற்றி இன்று ஒரு கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தி உள்ளது.

இதுபோன்ற எண்ணற்ற நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வரும் எங்கள் அரசு Ulema ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கையையும், ஓய்வூதியத் தொகையையும் உயர்த்தி உள்ளது.

1991-ஆம் ஆண்டு 1300 பேர் மட்டுமே பெற்று வந்த Ulema ஓய்வூதியம், கடந்த நான்கு ஆண்டுகளில் மேலும் 400 பேருக்குக் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. இன்றைய அளவில் 1700 பேர் வரை Ulema ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதில் பெருமிதம் அடைகிறேன். பல காலமாக உயர்த்தப்படாமல் இருந்த Ulema ஓய்வூதியத்தை, 250 ரூபாயிலிருந்து 400 ரூபாயாகக் கடந்த 1.12.1994 முதல் உயர்த்தி ஆணை வழங்கினேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காயிதேமில்லத் அவர்களின் நூற்றாண்டு விழாவின் நினைவையொட்டி, 5.6.1995 வரை Ulema ஓய்வூதியத்திற்காக விண்ணப்பம் செய்துள்ளவர்களில் தகுதியான அனைவருக்குமே இன்னும் 3 மாதங்களுக்குள் Ulema ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி, பெரியவர் காயிதேமில்லத் அவர்களின் பெயரில், சென்னையில் மணி மண்டபம் ஒன்றை அமைப்பதற்குத் தமிழக அரசின் சார்பில், முக்கியமான ஓர் இடத்தில், நிலம் வழங்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"நாம் எந்தக் கட்சியை ஆதரித்தாலும், எதனுடன் கூட்டுச் சேர்ந்தாலும் சரி; இந்த நாட்டிற்கு நன்மை பயக்கிறதா, என்பதை யோசித்தே முடிவு செய்ய வேண்டும்" என்று தெளிவான சிந்தனையுடன், தீர்க்கமான கருத்தை வெளியிட்ட பெரியவர் காயிதேமில்லத் அவர்களின் நினைவு என்றென்றும் நமது மனதில், நீங்காமல் நிலைத்து இருப்பதற்கு உங்கள் அன்புச் சகோதரி ஆகிய நான், அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரின் திருவுருவப் படத்தையும், இங்கே திறந்து வைத்ததில், நான் மட்டற்ற மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றேன்.

பெரியவர் காயிதேமில்லத் அவர்கள், தனது வாழ்நாள் முழுவதும், கல்வியின் வளர்ச்சிக்கு ஆற்றிய அரும் பணி அவர் இந்தியாவின் சிறந்த எதிர்காலத்தின் மீது வைத்திருந்த ஒரு தொலைநோக்குப் பார்வைக்கு அடையாளம் என்றால், அது மிகையாகாது.

தான் பிறந்த பேட்டைப் பகுதியில், Young Muslim Society என்ற அமைப்பை, ஆரம்ப காலத்தில் ஏற்படுத்தினார். சென்னையில் புதுக் கல்லூரி, மலபாரில் Feroke கல்லூரி, அதிராம்பட்டிணத்தில் காதர் மொய்தீன் கல்லூரி என்று அவர் ஆரம்பித்து வைத்த பல்வேறு கல்வி நிறுவனங்கள் இன்றளவும், மத, இன பேதமின்றி, தமிழக மக்களுக்குக் கல்வித் தொண்டாற்றி வருகின்றன. மத நல்லிணக்கத்திற்கும், சகோதரத்துவத்திற்கும், கல்வியின் மூலம், வழி வகுக்க வேண்டும், என்ற எண்ணத்துடன் செயல்பட்ட, காயிதேமில்லத் அவர்களை, நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

1946-ஆம் ஆண்டிலேயே சென்னை சட்டமன்றப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவராகக் கண்ணியத்துடன் செயல்பட்ட

வர் என்பது குறிப்பிடத்தக்க ஒரு அம்சம் ஆகும். அனைவரின் மனத்தையும் கவர்ந்த, காயிதேமில்லத் அவர்கள், சட்டமன்றத்தில் எழுந்து நின்று பேசத் தொடங்கினால், அனைவரும் அவரது பேச்சை, கூர்ந்து கேட்பார்கள் என்று இன்றும் கூறுகிறார்கள்.

அவரது வழி வந்த, திரு ஜி.எம். பனட்வாலா அவர்களும், திரு ஏ.கே.ஏ. அப்துல் சமது அவர்களும் அவரது உயர்ந்த கொள்கைகளைப் பின்பற்றி அவரது புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வண்ணம் செயல்பட்டு வருகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுவதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

குறுகிய மனப்பான்மைகளையும், குறுகிய வட்டங்களையும் கடந்து தேசிய உணர்வுடன் மக்கள் நலனில் அவர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டை, நான் மனம் திறந்து பாராட்டுகிறேன். தமிழகத்தின் உயிர்மூச்சுப் பிரச்சினைகளில், அரசிற்கு முழு ஆதரவளித்து, அவர்கள் செயல்பட்ட விதம் காயிதேமில்லத் அவர்களின் உணர்வுகள், இன்றளவும் மங்கி விடவில்லை என்பதைத் தான், நாட்டுக்குத் தெள்ளத் தெளிவாக், எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் மட்டுமில்லாமல், இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும், இஸ்லாமிய சகோதர சகோதரிகள் அனைவரின் உணர்வுகளையும் இந்த அரசு உங்கள் அன்புச் சகோதரியின் அரசு மதிக்கின்றது என்பதை இங்கே நடைபெறும் இந்த விழா, கண்கூடாக எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது.

நாட்டின் நலமும், சிறுபான்மையினரின் நலனும், இரண்டு கண்களாகக் கொண்டு, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, தொடர்ந்து மக்கள் நலன் காக்கும் அரசாகச் செயல்படும் என்பதை எடுத்துரைக்கக் கடமைப்பட்டுள்ளேன். காயிதேமில்லத் அவர்களின் சீரிய சிந்தனைகளுக்கும், உயரிய இலட்சியங்களுக்கும் நாம் முழு வடிவம் கொடுப்பதே, அவருக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடன்.

## விரைவில் செயல்படவிருக்கும் தீயணைப்புக் கோட்ட அலுவலகங்கள்!

சட்டமன்றப்பேரவையில் 10.4.1995 அன்று தீயணைப்புத் துறை தொடர்பான மானியக் கோரிக்கைகளின் மீது, தனது பதில் உரையை அளிக்கும் போது, தர்மபுரி மாவட்டத்திற்கும், பெரியார் மாவட்டத்திற்கும் தனித் தனியே கோட்டத் தீயணைப்பு அலுவலகங்கள் (Divisional Fire Offices) ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தார்கள், அந்த அறிவிப்பின்படி, சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களை உள்ளடக்கிய சேலம் தீயணைப்புக் கோட்டப் பிரிவினை இரண்டாகப்பிரித்து, சேலம் மாவட்டத்திற்கு எனத் தனியே ஒரு கோட்டத் தீயணைப்புப் பிரிவும், தர்மபுரி மாவட்டத்திற்கு எனத் தனியே ஒரு கோட்டத் தீயணைப்புப் பிரிவும் இயங்குவதற்குத் தேவையான அலுவலர்களும், தளவாடங்களும் வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

அதேபோல, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தீயணைப்புக் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டத்தை உள்ளடக்கிய ஒரு கோட்டத்தையும், பெரியார் மாவட்டத்தை உள்ளடக்கிய ஒரு தீயணைப்புக் கோட்டத்தையும், புதிதாக உருவாக்கி ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

புதிதாக உருவாக்கப்பட்ட கோட்டத் தீயணைப்பு நிறுவனங்களுக்குத் தேவையான அலுவலர்கள், சாதனங்கள், அலுவலகத் தளவாடச் சாதனங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

இந்தத் தீயணைப்புக் கோட்ட அலுவலகங்கள், அலுவலர்கள் நியமனம் செய்த பின்பு விரைவில் செயல்படத் தொடங்கும்.



# கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் பிறந்தநாள் நூற்றாண்டு விழா

இஸ்லாமிய சமுதாயத்தின் விடிவெள்ளி, கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா 5.6.1995 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அவரைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சமூகநீதி காத்த வீராங்கனை புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார். அப்போது காயிதேமில்லத் புகழ் வாழ்க என்று தமிழிலும், உருது மொழியிலும் வாழ்த்துக்கள் அரங்கம் முழுவதும் முழங்கின. அதனைத் தொடர்ந்து நூற்றாண்டு விழாக் கண்காட்சியும் மேடையில் இருந்த வண்ணம் போத்தானை அழுத்தி திறந்து வைக்க அரங்கத்தின், உள்ளும் புறமும் வைக்கப்பட்டிருந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில் அழகுறக் காட்சியளித்தது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியை வெளியே திரண்டிருந்த பொதுமக்கள் அனைவரும் கண்டு களித்தனர்.

மாநில சிறுபான்மையினர் கமிஷனின் தலைவர் திருமதி பாதர் சயீத் அவர்களும், அரவக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி க. மரியம் உல் ஆசியா அவர்களும், சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜீனத் ஷெர்புதீன் அவர்களும், ஆர்க்காட்டு இளவரசர் திரு நவாப் முகமது அப்துல் அலி அவர்களும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் அனைத்திந்தியப் பொதுச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு மாநிலக் குழுவின் தலைவருமான திரு ஏ.கே.ஏ. அப்துல் சமது அவர்களும், திரு ஜி.எம். பனத்வாலா அவர்களும், தமிழ்நாடு வக்ப் வாரியத்தின் தலைவர் திரு முகமது ஆசிப் அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ் நாகூர் மீரான் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். அடுத்து, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையுரையாற்றிய பின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சமூகநீதி காத்த வீராங்கனை புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் விழாப் பேருரை யாற்றினார். இறுயாக, செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் திரு தி. சண்முகராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையாற்றினார்.

இவ்விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர். மேலும், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த இஸ்லாமியப் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

காயிதேமில்லத் அவர்களின் பிறந்தநாள் விழாவினையொட்டி, கலைவாணர் அரங்கம் அழகுற மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்ததைப் பார்க்கும்பொழுது இது கலைவாணர் அரங்கமா அல்லது பள்ளிவாசலின் முகப்பா என்ற வினாக்களை நம் நெஞ்சத்தில் எழுந்தது. அரங்கின் உள்ளேயும், வெளியேயும் பல்லாயிரக்கணக்கான இஸ்லாமியப் பெருமக்களும் அமர்ந்து இருந்தனர்.

காயிதேமில்லத்தின் நூற்றாண்டு விழாவைத் தமிழகம் முழுவதும் ஓராண்டுக் காலம் கொண்டாட ஆணையிட்டுள்ள மாண்புமிகு முதல்வர்

அவர்களுக்கு இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் தலைவர் திரு ஜி.எம். பனத்வாலா அவர்களும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் பொதுச் செயலாளரும் மற்றும் தமிழ்நாடு மாநிலக் குழுவின் தலைவருமான திரு ஏ.கே.ஏ. அப்துல் சமது அவர்கள்,கோலாலம்பூரில் உள்ள ஒரே நேரத்தில் 25,000 நபர்கள்தொழுகை நடத்தக்கூடிய பள்ளிவாசலின் வடிவமைப்புக்கொண்ட அழகிய நினைவுப் பரிசை வழங்கினார்கள். இந்தச் சிறப்புமிகு விழாவின் நிகழ்ச்சிகளை திரு சுதா சேஷய்யன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் தொடக்கத்தில் புலவர் புலமைப்பித்தன் அவர்களின் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. 'அண்ணாவின் தோழர்' என்ற தலைப்பில் புலவர் புலமைப்பித்தன் அவர்களும், "அரசியல் மேதை" என்ற தலைப்பில் திரு கே.எம். காதர் மொகீதின் அவர்களும், "விடுதலை வீரர்" என்ற தலைப்பில் திரு மேத்தா அவர்களும், "அருந்தமிழ் ஆர்வலர்" என்ற தலைப்பில் கவிஞர் இளந்தேவன் அவர்களும், "எளிமையின் இலக்கணம்" என்ற தலைப்பில் திரு இசட் ஜபருல்லா அவர்களும் உரையாற்றினார்கள்.

காயிதேமில்லத் நூற்றாண்டு விழாவையொட்டி, அவரது வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சி 5.6.95 அன்று தொடங்கி 12.6.95 வரை நடந்தது.

–நிகழ்ச்சித் தொகுப்பு:

அ. மதிமாறன்

## சமூகப் பாதுகாப்புத்துறையில் சிறந்த சேவை புரியும் பணியாளர்களுக்கு:

# 'தமிழக முதலமைச்சர் சமூகப் பாதுகாப்பு நற்பணிப் பதக்கம்'

கல்வித் துறையில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் 'நல்லாசிரியர் விருது' வழங்கப்பட்டு வருகின்றது. அதே போன்று சிறைத் துறை மற்றும் காவல் துறையில் சிறந்த சேவை புரியும் அலுவலர்களுக்கும் 'தமிழக முதலமைச்சர் சிறைத் துறை நற்பணிப் பதக்கம்' மற்றும் 'தமிழக முதலமைச்சர் காவலர் பதக்கம்' ஆகிய விருதுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இதே போன்று சமூகப் பாதுகாப்புத் துறையில் சிறந்த சேவை புரியும் பணியாளர்களுக்கு விருதும், ரொக்கப் பரிசும் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்து உள்ளார்கள்.

குடும்பச் சூழ்நிலை மற்றும் பொருளாதாரக் காரணங்கள் ஆகியவற்றினால், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டு, சுற்றித் திரியும் சிறுவர் சிறுமிகளை நல்வழிப்படுத்தி அவர்களுக்குக் கல்வியூட்டி, தொழிற்பயிற்சி அளித்து, அவர்களை மீண்டும் சமுதாயத்தில் பொறுப்புடன் வாழ வழிவகுக்கும் சிறந்த பணியினை ஆற்றிக் கொண்டிருக்கும் சமுதாயப் பாதுகாப்புத் துறை அலுவலர்களை ஊக்கப்படுத்தும் வண்ணம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய எண்ணத்தின் அடிப்படையில், ஆண்டுதோறும் வழங்கப்பட உள்ள இந்தத் 'தமிழக முதலமைச்சர் சமூகப் பாதுகாப்பு நற்பணிப் பதக்கம்' என்ற விருது வழங்கும் திட்டத்தின் கீழ், இரண்டு விருதுகள் இந்தத் துறையில் மிகச் சிறந்த சேவை புரியும் அலுவலர்களுக்கு வழங்கப்படும்.

இவ்விருதினைப் பெறும். துணைக் கண்காணிப்பாளர் நிலையில் உள்ள அலுவலர்களுக்கு மாதம் 25 ரூபாய் மாதாந்தரப் படியும், முதன்மைக் காவலர், இல்லத்தாசிரியர் ஆகிய நிலையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு மாதம் 20 ரூபாய் மாதாந்தரப்படியாகவும் பணி ஓய்வு பெறும் வரையில் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.





## அதிகமான மதிப்பெண் பெற்ற மாணவ-மாணவிகளுக்குப் பரிசளிப்பு:

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிவுரை

"*1995*-ஆம் ஆண்டு நடைபெற்ற, மேல்நிலைப் பள்ளி, இறுதித் தேர்வுகளில்- அதாவது Plus Two தேர்வுகளில், பல்வேறு பாடங்களில், அதிக மதிப்பெண்கள் பெற்று, சாதனை படைத்த மாணவ மாணவியர்களுக்குப் "புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அறக்கட்டளையின்" சார்பில் பதக்கங்களும், பரிசுகளும் வழங்குவதிலும், இந்த இனிய விழாவில் பங்கேற்று, அன்றலர்ந்த தாமரை மலர் போன்ற மலர்ந்த முகங்களுடன் வீற்றிருக்கும் உங்கள் அனைவரையும் காண்பதிலும், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

"ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காக உழைப்பது தான், நமது பொது வாழ்க்கையின் அடிப்படை இலட்சியம்" என்ற மாபெரும் தத்துவத்தை, நமது மனங்களிலே ஆழமாக ஊன்றச் செய்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். இளம் வயதில் வறுமையின் காரணமாக வயிறார உணவும், அறிவை வளர்க்கும் கல்வியையும் பெற இயலாமல் தவிக்கின்ற பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவிகளுக்கு ஊன்றுகோலாக நின்று உதவிபுரிய வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் புரட்சித் தலைவரின்

★ கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.

- தந்தை பெரியார்



நினைவாக, அவரது பெயரும் அவர் கட்டிக்காத்த இலட்சியங்களும் மனித நேயக் கோட்பாடுகளும் என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும் என்கின்ற உன்னதமான எண்ணத்துடன் தான் அவரது அடியொற்றி வந்த உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், இந்த அறக்கட்டளையை ஒரு புனிதமான உணர்வுடன் தொடங்கினேன்.

மாபெரும் மக்கள் சக்தியின் துணையுடன் புரட்சித் தலைவர் நமக்குக் காட்டிச் சென்ற புனிதப் பாதையில், நான்கு ஆண்டுகளாக மக்கள் பணி ஆற்றி வருகிறேன்.

இன்று தமிழகம் அகில இந்திய அளவில் அனைவரும் வியக்கும் வண்ணம் பல்வேறு சமூகநலத் திட்டங்களை, முனைப்புடன் செயல்படுத்தி மற்ற மாநிலங்களுக்கு- ஏன் மத்திய அரசிற்கே ஒரு முன்னோடியாக இருந்துவருகின்றது. சமூகநலத் திட்டங்கள் அதாவது- Social Sector களில் நாம் முதலீடு செய்வதை, வீண் என்று பரிகாசம் செய்தவர்கள் Populist Schemes என்று கூறி கேலியும் கிண்டலும் செய்தவர்கள், இன்று தங்கள் நிலைகளை மாற்றிக் கொண்டு, தமிழகத்தை முன்னுதாரணமாகக் கொண்டு சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்த முன் வந்துள்ளார்கள். இது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் மனித நேயக் கோட்பாடுகளுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்றால் அது மிகையாகாது.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைகள் திட்டம், 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம் பள்ளிக் குழந்தைகளுக்கான மருத்துவ நல முகாம்கள், மகளிர் குறைகளைத் தீர்க்க அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், ஒரு இலட்சம் பெண்களுக்குச் சுயமாகத் தொழில் தொடங்கப் பயிற்சி, கட்டாயத் தொடக்கக் கல்வி- என்று பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு- உங்கள் அன்புச் சகோதரியின் அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது என்பதைக் காழ்ப்புணர்ச்சி கொண்ட சிலர் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும், பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் தமிழகத்தின் சாதனைகளை மனம் திறந்து பாராட்டி வருகின்றன.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கல்வியின் வளர்ச்சியில் காட்டிய ஈடுபாட்டை என்றென்றைக்கும் மக்கள் மனதில் நிலை நிறுத்தவே இன்று நாம் இந்த விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். மேனிலைப் பள்ளி இறுதித் தேர்வுகளில், 500 மாணவ மாணவியர்களுக்குக் குறையாமல், தேர்வு எழுதிய 45 பாடங்களில் முதல் மூன்று மதிப்பெண்களைப் பெற்ற, 135 மாணவ மாணவியர்களுக்கு 10 இலட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபாய் பணப் பரிசுகளாக மட்டும் அறக்கட்டளையின் சார்பில் வழங்க உள்ளேன். முதல் பரிசாக 10,000 ரூபாயும் இரண்டாம் பரிசாக 7,500 ரூபாயும், மூன்றாம் பரிசாக 5,000 ரூபாயும் வழங்கப்பட உள்ளன. பரிசு பெறவுள்ள அனைவருக்கும், இந்த இனிய விழாவின் நினைவு நிலைத்து நிற்கும் வண்ணம், ஒரு பதக்கமும் வழங்கப்பட உள்ளது.

இங்கே வழங்கப்பட உள்ள இந்தப் பரிசுகள், அவர்கள் தொடர்ந்து கல்வி கற்கும்



**உடனடியான பலனை இன்பத்தை அளிக்கக் கூடியதாக மக்களது சங்கடங்களைத் தீர்க்கக்கூடியதாக எழுத்து அமைய வேண்டும். —பேரறிஞர் அண்ணா**

போது புதிய சாதனைகளைப் படைப்பதற்கு, ஆக்கமும், ஊக்கமும், அளிப்பதோடு அறக்கட்டளையின் சார்பில், வழங்கப்பட உள்ள பணப் பரிசு, சிலர் மேற்படிப்பை மேற்கொள்வதற்கும், அடிப்படையாக அமையும் என்பதை எண்ணி, நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். மாணவ மாணவி களை, உற்சாகப்படுத்தும் அதேவேளையில், அவர்கள் படிப்பைத் தொடரவும், இந்தப் பரிசு உதவும் என்பதில் ஐயமில்லை.

இன்று பதக்கங்களையும், பரிசுகளையும் பெறுகின்ற மாணவ மாணவிகளுக்கு, என் இதயங்கனிந்த பாராட்டுதல்களையும் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துகளையும் நிறைந்த மனதுடன் உரித்தாக்கிக் கொள் கிறேன். எனது அன்பிற்குரிய மாணவச் செல்வங்களே! உங்களுக்கு நான் கூற விரும்புவதெல்லாம் நீங்கள் சோதனைகளைக் கண்டு துவளாதீர்கள். பல நேரங்களில், சோதனைகளே, வெற்றிக்குப் படிக்கட்டு களாக அமைந்துவிடுகின்றன என்பதையும் மறந்து விடாதீர்கள். நேர்மையையும், உழைப்பையும், உங்கள் நிரந்தரத் தோழர்களாக்கிக் கொள்ளுங்கள். ஏற்றுக் கொண்ட பணி எத்தகையதாக இருந்தாலும், அதைச் செவ்வனே செய்து முடித்துப் பழகுங்கள். சோர்வடையாத மனதையும், வெற்றி பெற்றே தீருவேன் என்ற உறுதி யையும், வளர்த்துக் கொள்ளுங்கள்! அப்படிச் செயல்பட்டால், வெற்றி என்றென் றைக்கும், உங்களுக்குத் தான் சொந்தம் என்பதை என்னால் ஆணித்தரமாக எடுத்துக் கூற முடியும்.

புதிய சாதனைகளைப் படைக்க வேண்டும் என்கின்ற வளமான சிந்தனை யால் உந்தப்பட்டு, கொள்கை உரம் படைத்த வர்களாக, நீங்கள் அனைவரும் உருவாக வேண்டும் என்பது, எனது பேரவா. கல்வி என்ற ஆயுதத்தைக் கொண்டு சமுதாயத்தில் நிலவும் வறுமை, அறியாமை, போன்ற பிணிகளை ஒழிக்க, நீங்கள் கடுமையாக உழைத்து சமுதாய மேம்பாட்டில், புதிய சாதனைகளை நிகழ்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளி இறுதிப் படிப்பை முடித்த பின்பு, பட்டப்படிப்பைப் படிக்க வேண்டும் என்று, நான் மிகவும் விரும்பினேன். ஆனால், எனது குடும்பச் சூழ்நிலையின் காரணமாக, நான் பட்டப் படிப்பை, மேற்கொள்ள இயல வில்லை. எனவே நீங்கள் எத்தகைய ஒரு உணர்வுடன் எத்தகையதொரு மன நிலையில், இன்று இருப்பீர்கள் என்பதை என்னால் நன்கு உணர முடியும்.

நீங்கள் அனைவரும் மேலும் படித்துப் பட்டம் பெற்று- சிறந்த மேதைகளாக, நமது



## ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவர்க்கு உதவி!

**ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நன்முறையில் கல்வி பயின்று தங்களது வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையில், தமிழக. அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர் தங்கியுள்ள விடுதிகள் மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிகள் ஆகியவற்றில் தங்கியுள்ள மாணவ, மாணவியர்களின் அன்றாட வாழ்க்கை மற்றும் சுகாதாரம் ஆகியவை உயர வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், தற்போது அவர்களுக்குச் சோப்பு, சிகைக்காய், எண்ணெய் முதலிய பொருட்கள் வாங்குவதற்கும், சலவை மற்றும் முடிவெட்டுதல் போன்ற செலவினங்களுக்கும் நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 5/ வழங்கப்பட்டு வந்த சில்லறைச்செலவினம், நடப்புக் (1995-96) கல்வி ஆண்டு முதல் ரூ. 10/ ஆக உயர்த்தி அளிக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தக்க ஆணை பிறப்பித்துள்ளார்கள். இதனால் 86741 ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவ, மாணவியர்கள் பயனடைவார்கள்.**

சமுதாயத்தின் தூண்களாக இந்த நாட்டின் எதிர்காலச் சிற்பிகளாக உருவாக வேண்டும் என்று நான் விரும்புகிறேன். வாழ்த்துகிறேன். நீங்கள் மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளிலும், முழுமையான வெற்றியடைய வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன். நீங்கள் நாளை அடையப் போகும் மாபெரும் வெற்றியின் அச்சாரங்கள் தான், இங்கே வழங்கப்படப் போகும் பதக்கங்களும், பரிசுகளும் என்பதை, உங்களது எதிர்கால வரலாறு, உலகிற்குப் புரிய வைக்க வேண்டும்.

மாணவப் பருவத்தில், குறிப்பாகப் பள்ளிப் பருவத்தில், உங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து கல்வியின்பால் மனதைச் செலுத்தி, இத்தகைய சாதனைகளைப் படைக்கக் காரணமாக இருந்தவர்கள் உங்கள் ஆசிரியப் பெருந்தகைகள் என்றால், அது மிகையாகாது. உங்கள் கல்விக் கண்களைத் திறந்துவைத்து, உங்கள் வளர்ச்சிக்கு ஒரு ஏணியாகச் செயல்பட்ட பல ஆசிரியப் பெருமக்களின், கடுமையான உழைப்பை இந்த நேரத்தில் நினைவுகூர்ந்து, அவர்களுக்கு நமது பாராட்டுதல்களையும், நன்றியினையும் உரித்தாக்குவது, பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அத்தகைய நல்ல மனம் படைத்த ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும் நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாய உணர்வுடன் ஆசிரியப் பெருமக்கள், மேற்கொள்ளும் கல்விப் பணி, மென்மேலும் உயர வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துகிறேன்.

இன்று பதக்கங்களும், பணப்பரிசுகளும் வென்ற மாணவ மாணவியர்கள் அனைவரும் தங்கள் வாழ்க்கையில் மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும், புதிய எல்லைகளைத் தொட வேண்டும், சரித்திரம் போற்றும் சாதனைகளைப் படைக்க வேண்டும் என்று மீண்டும் நெஞ்சார வாழ்த்துகிறேன்.

பிறந்த வீடும், வாழ்ந்த நாடும் சிறப்புப் பெறும் வண்ணம் பயனுள்ளதொரு வாழ்க்கை வாழ்ந்து, உங்கள் கடமைகளைச் செவ்வனே ஆற்றுகிற ஆற்றலை- எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு வழங்க வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துகிறேன்.

***–22.6.1995 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய சிறப்புரை.***



# உலகின் முதல் மொழிக்கு உயர்வளித்த முதல்வர்!

## மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள்

**த**மிழர் கண்ட சமுதாயத்தின் தலை சிறந்த தலைவியாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அறிஞர் அண்ணா 2-வது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். 5-வது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார். அறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய இருபெரும் தலைவர்களின் ஒரே வாரிசான ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஓங்குபுகழ்த் தலைவி நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 8-வது உலகத் தமிழ் மாநாட்டை உலகமே வியக்கும் வண்ணம் ஈடு இணையற்ற முறையில் இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உலகத்தின் முதன்மையான மொழி தமிழ் மொழிக்கு, இந்திய முதல்வர்களில் முதன்மையான நம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மகத்தான மாநாடு காண்பதுதான் சாலப் பொருத்தமாகும்.

தமிழகத்தில் கடையேழு வள்ளல்கள் தோன்றினார்கள். அந்த 7 வள்ளல்களும் மக்களைக் காத்து, புலவர்களைப் போற்றி, மாத்தமிழ் காத்து வளர்த்தார்கள். அந்த 7 வள்ளல்களும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியென, ஒருருவில் வந்தது போல் மண்ணைப் போற்றிக் கன்னித் தமிழைக் காத்து வருகிறார்கள். அதன் மெய்ப்பாடுதான் இந்த மாபெரும் உலகத் தமிழ் மாநாடாகும்.

கொடையில் ஈடிணையற்றவர்களாக, வரிசையறிந்து வழங்குபவர்களாக, இரக்க உள்ளம் கொண்டவர்களாக, இசையிலும், கூத்திலும் ஈடுபாடு உடையவர்களாக, இரப்போர்க்கு இல்லையெனாது அளிக்கும் ஈகை மனம் கொண்ட வள்ளல்களின் ஒரே வடிவாக இருக்கின்ற காரணத்தினால்தான், சரியான பணி எனக் கருதித் தந்தை பெரியார் அவர்களின் அறக்கட்டளைக்கு நிதி தந்தார். தன்னைத் தேடி வருபவர்களுக்கு மட்டுமல்லாமல், சமுதாயத்தில் துன்பப்படுகிறவர்கள் எங்கெங்கிருக்கிறார்கள் என்று தேடி உதவி வழங்குவதில் வள்ளலுக்கெல்லாம் வள்ளலாக இருப்பவர் அருள் நெஞ்சம் படைத்த நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள்தான்.

தஞ்சை மாவட்டமே இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது. பழைய சோழ நாட்டைப் பார்த்தது போல் இருக்கிறது என்று சொல்லி, சில பத்திரிகைகள்கூட மறுக்கமுடியாத சில உண்மைகள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உலகம் முழுவதிலுமிருந்து தமிழ் அறிஞர்கள் இந்த விழாவுக்கு வருகை தந்திருக்கிறார்கள். உண்மையான தமிழ் மொழிப் பற்றும் உணர்வும் கொண்டவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தஞ்சை மண்ணின் வளம்நாடி காவிரி நீர் கேட்டு 85 மணிநேரம் தன்னை வருத்திக் கொண்டு தவம் இருந்த பொன்னெழுத்துத் தலைவிதான்,



# வரலாற்றுப் பெட்டகங்கள்!

தமிழகத் திருக்கோயில்கள் தொன்மையானவை. அவை தெய்வீக வழிபாட்டுத் திருத்தலங்கள் மட்டுமின்றி, நம் பண்பாட்டுச் செழுமையையும், வரலாற்றுச் சிறப்பினையும், நமக்கு இன்றும் எடுத்துரைக்கும் அரிய கலைச் செல்வங்கள்.

தமிழகத்திலுள்ள திருக்கோயில்களை ஒருமுறை தரிசித்து வந்தாலே, தமிழகத்தின் பழம்பெருமை வாய்ந்த வரலாற்றுப் பின்னணியை நாம் நன்கு அறிந்துகொள்ள முடியும்.

அத்தகைய திருக்கோயில்கள் ஒவ்வொன்றும் நம் முன்னோர்கள் நமக்காக விட்டுச் சென்றுள்ள அரிய கலைப் பொக்கிஷங்களாகும். சரித்திரப் புகழ்பெற்ற தொன்மையான நமது சமூகத்தின் பண்பாட்டு நிலைக்கலன்களாகவும், நாகரிகத்தின் சின்னங்களாகவும், வரலாற்றுப் பெட்டகங்களாகவும் அவை இன்று விளங்குகின்றன.

தொன்றுதொட்டு, நமது கலாச்சாரக் கருவூலமாக விளங்குகின்ற நமது திருக்கோயில்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை, ஒவ்வொரு இந்தியருக்கும் உண்டு.

நமது வருங்காலச் சந்ததியினருக்கு இந்தக் கலைச் செல்வங்களை அழியாது, பேணிப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டுமென்ற மாபெரும் கடமையை ஆற்றத்தான், எங்கள் அரசு பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன் முக்கியத் தொடர் நடவடிக்கையாக, மாநில அளவிலான திருக்கோயில் நிர்வாக வாரியம் அமைக்கப்பட்டது.

**புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-1 என்னும் நூலிலிருந்து.**

---

அதே தஞ்சையில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வந்த பிறகுதான் தமிழகத்திலும், கடல் கடந்த நாடுகளிலும் தமிழ் மணம் பரவிக் கிடப்பதைத் தமிழார்ந்த நெஞ்சங்கள் அறியும். மலையில் பிறந்து, புகழைக் கடந்து, கலைகளில் சிறந்த தமிழ் மணம் இந்த மாநாட்டில் பரவிக் கிடக்கிறது. நற்குடியில் பிறந்த பெருமக்கள் நிச்சயம் இந்த மாநாட்டை - மனதாரப் பாராட்டிக் கொண்டிருப்பார்கள்.

சிலம்புச் செல்வர் அவர்கள் 'பாரதி பிறந்த மண்' என்று அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆம். திருவல்லிக்கேணியில், அமரகவி பாரதியார் அவர்கள் வாழ்ந்த வீட்டினை அரசின் நினைவிடமாக ஆக்கியவர் புரட்சித் தலைவி அவர்கள்தான். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை வாழ்ந்த நாமக்கல் வீட்டினை அரசின் சார்பில் நினைவிடமாக ஆக்க உத்தரவிட்டிருப்பவர்களும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்தான். கவியரசர் கண்ணதாசன் அவர்களுக்கு காரைக்குடியிலே மணிமண்டபத்தையும், தலைநகரில் சிலையையும் திறந்து வைத்திருப்பவர் தன்னிகரில்லாத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள்தான். தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் நினைவாகத் தலைநகரில், சென்னையில் சிலை அமைக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருப்பவர்களும் புரட்சித் தலைவி அவர்கள்தான். அமரர் ஜீவா அவர்கள் வாழ்ந்த வீட்டை அரசு சார்பில் நினைவிடமாக மாற்ற வேண்டும் என்று அன்பர் வேண்டுகோள் விட்டவரும் புரட்சித் தலைவி அவர்கள்தான். குமரி மாவட்டம் தமிழ் வீரர் செண்பகராமன் நினைவாக, சென்னையில் சிலை வைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விட்டிருப்பவரும் புரட்சித் தலைவி அவர்கள்தான். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த ஊரான பட்டுக்கோட்டையில் அழகான நினைவகம் அமைக்க வேண்டும் என்று ஆணையிட்டிருப்பவரும் புரட்சித் தலைவி அவர்கள்தான். மறைந்த தமிழ் அறிஞர்களை மதித்து அவர்களின் நினைவைப் போற்றுவதில் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அரசு யாருக்கும் குறைந்ததல்ல. சங்க காலத்து மன்னர்கள் மண்ணைப் போற்றினார்கள், மக்கள் நலன் காத்தார்கள், அன்னைத் தமிழின் புகழை அவனிக்குப் பரப்பினார்கள். அதே வகையில்தான் அருமை அன்னை... இன்று



எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டைச் சீரோடும் சிறப்போடும் நடத்திக் காட்டிக் கொண்டிருக்கிறார்.

தமிழர் கண்ட சமுதாயத்தின் தத்துவத் தலைவியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவியின் ஆட்சியில் பெண்களை மேம்படுத்தத் திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மகளிர் காவல் நிலையங்கள், தொட்டில் குழந்தைகள் நலத் திட்டம், பெண்கள், குழந்தைகள் நலம் காக்க 15 அம்சத் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்கள் இந்த ஒரு செயலுக்காக மட்டுமே தமிழ்ச் சமுதாயம், எக்காலமும், காலம் உள்ள வரைக்கும் புரட்சித் தலைவி அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கும். 69% இட ஒதுக்கீடு பெற புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளை, உலகமே வியந்து நோக்கிப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. அன்னைத் தமிழின் பெருமையை அகில உலகெங்கும் உயர்த்திட அயராது பாடுபட்டுவரும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை, நாளைய சமுதாயம் நிச்சயமாகப் பாராட்டும்.

வள்ளுவன் தன்னை உலகினுக்குத் தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு என்று முன்பு பாடினோம். இன்று, புரட்சித் தலைவிதனை இப்புவிக்குத் தந்து புண்ணியம் பெற்றது தமிழ்நாடு என்று பாடிக்கொண்டேயிருப்போம்.

***(எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - மூன்றாம் நாள் கருத்தரங்கில், முன்னிலை வகித்து ஆற்றிய உரையிலிருந்து)***

# மன வளர்ச்சி குன்றிய 3 சிறுவர்கள் உலக விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள



## –மாண்புமிகு முதல்வர் உதவி!

மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்குக் கல்வி மற்றும் பயிற்சி அளித்து வரும் சென்னையைச் சேர்ந்த துர்காபாய் தேஷ்முக் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பயிற்சிப்பள்ளியின் நிர்வாகி, தங்களது பயிற்சிப் பள்ளியைச் சேர்ந்த மூன்று சிறுவர்களுக்கு வாலிபால் விளையாட்டில் சிறப்புப் பயிற்சி அளிக்கவும், அமெரிக்க நாட்டிலுள்ள New Haven என்ற நகரில் நடைபெறும் உலகக் கோடைக்கால (World Summer Games) விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க நிதி உதவியும் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு கருணை மனு ஒன்றினை அனுப்பி வைத்திருந்தார்.

அந்தக் கருணை மனுவினைக் கருணையோடு பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இந்த மன வளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான பயிற்சிப் பள்ளியில் பயிலும் மூன்று சிறுவர்களும், அமெரிக்காவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள ஏதுவாக, தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சி (Sports Development Authority of TamilNadu) ஆணையத்தின் சார்பில், ஒவ்வொருவருக்கும் 18,000/ ரூபாய் வீதம் மூன்று சிறுவர்களுக்கு ரூ 54,000 மற்றும் அவர்களது பயிற்சியாளர்களுக்கும் ரூ 18,000 ஆக மொத்தம் 72,000 ரூபாய் வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

# தமிழகத் திட்டங்களுக்கு ராஜஸ்தான் மாநில முதல்வர் பாராட்டு!

மாண்புமிகு ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் திரு. பைரான் சிங் ஷெகாவத் 3.7.1995 அன்று மர்ண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்கள். இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது.

தமிழகத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளைப் பற்றியும், பல்வேறு திட்டங்களைப் பற்றியும், தமிழகத்திலுள்ள தொன்மைவாய்ந்த கலைச் சிறப்புகள் மிகுந்த புராதன திருக்கோயில்களைப் பராமரிப்பதற்காக எடுக்கப்பட்டு வரும் சீரிய நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம், மாண்புமிகு ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், திருக்கோயில்களை நன்முறையில் பராமரிப்பதற்காக, "முதலமைச்சர் திருக்கோயில்கள் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதி" (Chief Minister's Temple Renovation and Maintenance Fund) ஏறபடுத்தியது பற்றியும், திருக்கோயில் நிர்வாக வாரியம் (Temple Administration Board) அமைத்தது குறித்தும், அவற்றின் செயலாக்கம் குறித்தும், ஒரு காலப் பூசை கூட நடைபெறாமல் இருந்த ஆயிரக்கணக்கான கோயில்களுக்கு 25,000 ரூபாய் வீதம் ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்தி அதன்மூலம் ஒருகாலப்பூசை நடத்தும் திட்டத்தைச் செயல்படுத்தி வருவதைக் குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். மேலும், புராதன திருக்கோயில்களைப் பராமரிக்கவும், கும்பாபிஷேகம் நடைபெறவும், உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கவும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் விளக்கினார்கள்.

**நான்காம் ஆண்டை சொல்லும் செய்தி:**

திருக்கோயில்களின் புனரமைப்பிற்காகத் தமிழகத்தில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை ராஜஸ்தான் மாநிலத்திலும் அமல்படுத்த, மாண்புமிகு ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் விருப்பம் தெரிவித்ததன் பேரில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளரை உடனடியாக ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, தமிழகத்தில் செயல்படுத்தி வரும் திட்டங்கள் பற்றிய விவரங்களைக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

மேலும், தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் குடும்ப நலத் திட்டம் (Family Planning Programme), 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம் (15 Point Child Welfare Programme) ஆதிதிராவிடர் முன்னேற்றத்திற்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்கள் ஆகியவற்றைப் பற்றியும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

ராஜஸ்தான் மாநிலத்தில் பழுப்பு நிலக்கரி (Lignite) கிடைப்பதால் அதை உபயோகித்து மின்சாரம் தயாரிக்க ஜெயங்கொண்டம் அனல்மின் நிலையத் திட்டத்தைப்போல் ஒன்று உருவாக்குவதற்காகத் தமிழகத்தில் செயல்படுத்தி வரும் அனல்மின் நிலையத் திட்டங்களைப் பற்றி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் கேட்டறிந்தார்கள்.

இறுதியாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை, ராஜஸ்தானுக்கு வருகை தர வேண்டும் என்று மாண்புமிகு ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்தார்கள்.



# மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ராணி அம்மையார் பாராட்டு

பேரறிஞர் அண்ணாவின் நூல்கள் அரசுடைமை ஆக்கப்பட்டதற்குப் பேரறிஞர் அண்ணாவின் துணைவியார் திருமதி ராணி அம்மாள் அவர்கள், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார். அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:



எனது கணவர் எழுதிய நூல்கள் அரசுடைமை ஆக முதல்வர் முயற்சி எடுத்து அரசுடைமை ஆக்கி விட்டதற்கான அறிவிப்பை வெளியிட்டு இருப்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

முதல்வர் எனது கணவரின் படைப்புகளை அரசுடைமை ஆக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்று சொன்னார். சொன்னபடி செய்திருக்கிறார். அதற்காக என் குடும்பத்தின் சார்பிலும், என் கணவர் மீது அளவற்ற பாசத்தைப் பொழிந்த தமிழ் மக்கள் சார்பிலும் முதல்வர் ஜெயலலிதாவுக்கு மனப்பூர்வமான பாராட்டுதல்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு திருமதி ராணி அம்மாள் அவர்கள் கூறினார்.

அண்ணா அவர்களின் மகன் டாக்டர் சி.என்.ஏ.பரிமளம், திருமதி சரோஜா பரிமளம் ஆகியோர் கூறியதாவது:

1991-ஆம் ஆண்டு முதல்வராகப் புரட்சித்தலைவி பதவியேற்றதற்குப் பிறகு, அண்ணாவின் பிறந்த நாளை, செப்டம்பர் 15- ஆம் தேதி முதன் முதலாகக் கொண்டாடிய போது, அம்மாவுக்கு (ராணி அம்மாளுக்கு) 5 லட்சம் ரூபாய் அன்புக் காணிக்கையாக முதல்வர் புரட்சித்தலைவி வழங்கினார்.

அப்போது உங்களுக்கு வேறு என்ன செய்ய வேண்டும் என்று முதல்வர் கேட்டார். வேறு எதுவும் எங்களுக்கு வேண்டாம். அண்ணாவின் படைப்புகளை ஏழை, எளிய மக்கள் படித்துப் பயன்பெறத்தக்க வகையில் மலிவு விலையில் புத்தகங்கள் வெளியிட அவரது நூல்களை அரசுடைமை ஆக்கினால் போதும் என்று சொன்னோம்.

**அண்ணா பெயரிலான அரசு அண்ணாவின் படைப்புகளை அரசுடைமை ஆக்குவதைத் தனது கடமையாகக் கருதி, அரசுடைமை ஆக்கி இருக்கிறது. இதற்காக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியை மனப் பூர்வமாகப் பாராட்டுகிறோம். அரசுடைமை ஆக்கப்பட்டதை அறிந்து அளவில்லா மகிழ்ச்சி அடைந்தோம்.**

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்
## செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்




### சி ற ப் பு அ ம் ச ங் க ள்

- $5\frac{1}{2}$ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 13.13% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.

DIRP/DIS/95




# நன்னிலத்தில் மாநில அளவிலான பாவேந்தர் பிறந்தநாள் விழா:

## மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பங்கேற்பு

**பா**ட்டுத் திறத்தால் பைந் தமிழ் நாட்டைப் பாலித்தவர் புரட்சிப் பாவேந்தர் பாரதி தாசன் ஆவார். அவர்களின் பிறந்தநாள் பெருவிழா, நற்றமிழ் காக்கும் வித்தக அரசின் சார்பில் நன்நாகை என்று போற்றப்படும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் நன்னிலத்தில் *(30.6.95)* சிறப்புற நடைபெற்றது.

**தொடக்கவுரை**

விழாவில் - செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் தொடக்க உரையில் பேசியதாவது:

"மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆலோசனைபேரில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு விழா எடுத்துக் கொண்டிருக்கிறோம். மிகச் சிறந்த கவிதைகளை இயற்றி, சமுதாய மறுமலர்ச்சிக்கு அடிகோலிய அத்தகைய மிகச் சிறந்த ஒரு புரட்சிக் கவிக்குப் பிறந்த நாள் விழா எடுத்துக் கொண்டிருக்கிறோம். இத்தகைய பெரும் தலைவர்களை- நாட்டுக்காக உழைத்தவர்களை நல்லது செய்தவர்களை, யாருடைய வாழ்க்கையை எல்லாம் நாம் அறிந்துகொள்ள வேண்டுமோ, அவர்களுடைய வாழ்க்கையின் கருத்துக்களையெல்லாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற இந்த வகையில் தான் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா அரசு சார்பிலே நடந்துகொண்டிருக்கின்றது. புரட்சிக் கவிஞர் அவர்கள் பொது உடைமைச் சமுதாயத்தைக் காண- போர் அற்ற புதியதோர் உலகம் செய்ய முழங்கியவர்.

" இத்துணைச் சிறந்த கவிஞன்



நமக்குக் கிடைத்தது- இந்தச் சமுதாயத்திலே ஒரு மறுமலர்ச்சிக்கு வழி கோலியது - நமக்குக் கிடைத்த பெருமை.

★ கலைகள் மக்களின் அறிவை வளர்ப்பதாக இருக்க வேண்டுமே அல்லாது, அவர்களை மடமையில் ஆழ்த்துவதாக இருக்கக்கூடாது.

- தந்தை பெரியார்

**சிறப்புரை**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கி விழா சிறப்புரையாற்றும்போது:

"கோடான கோடி மக்கள் இருக்கின்ற இடத்தில் கோடிக் கணக்கானவர்களில் ஓரிருவருக்கு மட்டும் விழா எடுத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், ஏன்- என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் எல்லாம் வாழ்கின்றபொழுது தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும் மட்டுமே வாழாமல், நாட்டு மக்களுக்காக, சமுதாயத்திற்காக வாழ்ந்தவர்கள். அப்படி சமுதாயத்திற்காக வாழ்கின்றவர்களை நினைவுகூரும் வகையில்தான், இப்படிப்பட்ட விழாவைக் கொண்டாடுகிறோம். இப்படித்தான் பாரதிதாசனை எண்ணிப் பார்க்கின்றபோது நாம் ஏன் அப்படி வரக்கூடாது, ஏன் வர முடியாது என்ற உணர்வுகளை மாணவமாணவியர்களும் பெறுவதற்குத்தான் இப்படிப்பட்ட விழா, இங்கே மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான தமிழக அரசால் கொண்டாடப்படுகிறது.

மொழிக்காகவும், நாட்டைக் காக்கவும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் பலரும இருந்ததனால்தான்; இந்தியத் துணைக் கண்டம் விடுதலை அடைந்தது. இந்தியத் துணைக் கண்டம் விடுதலை அடைவதற்காகப் பாடுபட்டவர்கள், பல்வேறு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்.

"நம்முடைய புரட்சிக் கவிஞர் அவர்கள் மொழிப் போராட்டத்திற்குத் துணை சென்றவர்; 1927-இல், இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலாகக் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றிப் பாடியவர்".

**தலைமையுரை**

விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் விழாத் தலைமையேற்றுப் பேசும்போது:

"இன்றைக்குத், தமிழ்நாடு அரசு தமிழர் நலம் பேணும் அரசாக, ஏழை எளியவர்களுக்கும், அடித்தள மக்களுக்கும், அற்புதமான திட்டங்களை அறிமுகப்படுத்தும் அரசாக அடித்தள மக்களுக்கு- ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட நலிந்துபோன, மெலிந்துபோன, வாடிப்போன, வதங்கிப்போன, வாழமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிற மக்களை வாழவைக்கிற அரசாக, வறுமைக்கே வறுமையை ஏற்படுத்தும் அரசாக, ஏழ்மைக்கே ஏழ்மையை ஏற்படுத்தும் அரசாக மட்டும் நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு செயல்படவில்லை; நாட்டுக்கு உழைத்தவர்களை மக்கள் மனதிலே நிலைக்க வைக்க வேண்டும் என்ற வகையிலேயும், நாட்டிற்குத் தேவையான கருத்துக்களை யார் எந்த வடிவத்திலே சொல்லியிருந்தாலும் அப்படிப்பட்டவர்களையெல்லாம் போற்ற வேண்டும் புகழ வேண்டும் என்ற வகையிலேயும் நம் புரட்சித்தலைவி அவர்களின் அரசு செயல்பட்டு வருகின்றது.

"வீரர்களுக்கு விழா எடுப்பது, வித்தகர்களுக்குச் சிலை வடிப்பது, இவர்களையெல்லாம் மக்கள் மனதில் நிலைப்படுத்துவது யார்? யார் பெருமைக்குரியவர்களோ, யார் பாராட்டுக்குரியவர்களோ, யார் யார் மண்ணிற்குப் பெருமை சேர்ப்பவர்களோ, யார் யார் இனத்திற்காக- நாட்டிற்காக உழைத்திருக்கிறார்களோ, பாட்டுத்திறத்தாலே சமுதாயக் கொடுமைகளைப் பாடியிருக்கிறார்களோ, அப்படிப்பட்டவர்களையெல்லாம் பெருமைப்படுத்த டாக்டர் புரட்சித்தலைவி அரசு என்றைக்கும் தயங்கியது இல்லை என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில்தான், புரட்சிக் கவிஞரின் பிறந்தநாள் விழாவை எழிலோடும், ஏற்றத்தோடும், சீரோடும், சிறப்போடும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

"எத்தனையோ கவிஞர்கள் இந்த மண்ணிலே தோன்றியிருக்கிறார்கள். கவிதைகள் தந்திருக்கின்றார்கள். ஆனால், கவிதைகள் வடிப்பவர்கள் அத்துணைப் பேருமே கவிஞர்கள் அல்ல. அப்படி வடித்த கவிதைகள் அனைத்தும் நிலை பெறுவது இல்லை. எந்தக் கவிதை மக்களுக்குப் பயன்படுகிறதோ, எந்தக் கவிதை புரட்சியை உருவாக்குகின்றதோ எந்தக் கவிதை அந்தக் கவிஞர்கள் மறைந்த பின்னும், நிலைத்து நிற்கின்றதோ, அத்தகைய கவிதைகளைத் தந்த பெருமை புரட்சிக் கவிஞருக்கு உண்டு.

"இந்த மண்ணிலே பூக்கின்ற பூக்கள் எல்லாம் பூசைக்குச் செல்லுவதில்லை. மண்ணிலே மலர்கின்ற மலர்கள் அனைத்தும் மணம் தருவதில்லை!

"எல்லாக் கவிஞர்களின் கவிதைகளுமே என்றும் நிலைத்திருப்பதில்லை. ஆனால், மங்காப் புகழ்பெற்ற வரிகளாக அவர் மறைந்த பின்பும், இன்றைக்கும் புரட்சிக் கவிஞருடைய பாட்டுக்கள் நிலைத்து நிற்கின்றன.

"வீட்டிலே நாள்தோறும் விளக்கு ஏற்றுகிறோம். அந்த விளக்கெல்லாமே பெருமை சேர்ப்பதில்லை. ஆனால், ஆண்டிற்கு ஒருமுறை ஏற்றப்படுகின்ற கார்த்திகைத் தீபத்திற்குத்தான் சிறப்பு ஏற்படுகிறது. அதேபோல, அத்தகைய சிறப்புக்குரியவர்களை, கவிதைச் சிறப்புக்களை மக்கள் மனதிலே என்றைக்கும் நிலைத்து நிற்கின்ற கவிதைகளைப் பாரதிதாசன் மறைந்தாலும், பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம் சாய்ந்தும் சாயாதிருப்பது போல, அவருடைய கவிதைகள் மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றன. மக்களுக்குப் பயன்பாட்டைத் தந்து கொண்டிருக்கின்றன. அத்தகைய கவிஞரைத்தான் நாம் "புரட்சிக் கவிஞர்" என்று சொல்லுகின்றோம்.

"பெண்ணினம் பெருமைப்பட வேண்டும், பெண்ணடிமை தீர்க்கப்பட வேண்டும், விதவைக்கு மறுமணம் வேண்டும் என்று சொன்னவர். "கோரிக்கை அற்றுகிடக்கிறதே வேரில் பழுத்த பலா" என்று சொன்னவர் புரட்சிக் கவிஞர் அவர்கள்.

"பெண்கள் இந்த நாட்டின் கண்கள் என்று கூறி, பெண்ணுரிமைக் காவலனாகக் கவிதைகளைத் தந்த புரட்சிக் கவிஞருடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற தலைவியாகத்தான் இன்று நமது புரட்சித்தலைவி அவர்கள் இருக்கின்றார்கள்".



★ அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும், ஆற்றலும் சேர்ந்து உழைத்தால், வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.

**விழாப் பேருரை**

பாவேந்தரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழாப் பேருரையாற்றும்போது:

"இன்று நன்னிலமே விழாக் கோலம் பூண்டு நிற்கிறது. நன்னீரைப் பாய்ச்சுகின்ற காவிரி நீர் பாய்கின்ற நன்னிலத்தில் இந்த விழா நடைபெறுவது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. டாக்டர் புரட்சித்தலைவியின் சீரிய தலைமையின் கீழ் மக்களுக்கு அன்பையும், அரவணைப்பையும் பெற்று, பிறருடைய போற்றுதலையும், பாராட்டுதலையும் பெற்று, எல்லோருடைய மதிப்பையும் மரியாதையையும் பெற்று இன்று நடைபோட்டுக் கொண்டிருக்கின்ற தமிழக அரசு, பல்வேறு சீரிய பணிகளைச் செம்மையாகச் செய்து முடித்திருக்கிறது.

"தமிழகத்தில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எப்படிப்பட்ட பணிகளை எல்லாம் செய்து வருகிறார்கள் என்பதை விளக்கமாகக் கோடிட்டுக் காணப்போவோமேயானால் நேரம் போதாது.

"பேரறிஞர் அண்ணா ஜனநாயக நெறிமுறையை- தந்தை பெரியார் கொள்கை முறையை- டாக்டர் எம்.ஜி.ஆர் வள்ளல் முறையை அடிப்படையாக வைத்துத்தான் டாக்டர் புரட்சித்தலைவியின் அரசு பணியாற்றிக்கொண்டு வருகிறது.

"தமிழகத்தில் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காணப்பட்டவர் பாரதியார். அவரைப் பின்பற்றி வாழ்ந்தவர்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். வேண்டப்படாத பழமையை அழித்து, வேண்டப்படும் புதுமைக்குத் தனி வரலாறு அளிக்கக்கூடியவன் எவனோ, அவன்தான் புரட்சிக்கவிஞன். இன்றைய சமுதாயத்தில் பெரும்பாலான இளைஞர்கள் உணர்ச்சி கொண்டவர்கள்; அவர்களையெல்லாம் ஈர்த்து ஒரு குறிப்பிட்ட கொள்கைக்கு கோட்பாடுகளுக்கு, திட்டங்களுக்கு, குறிக்கோளுக்கு மதிப்பளித்து, அவற்றை இதயத்தில் வைத்து, அந்தக் கருத்துக்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து உருவாக்கிய பேறு பாரதிதாசனுக்கு உண்டு. அப்படி உசுப்பி விடுகின்ற தன்மையைப் பெற்றவர் அவர்.

"இவை செய்யவேண்டியவை இவை செய்யக்கூடாதவை என்று அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொன்னவர் புரட்சிக் கவிஞர். அருமையாக எதுகை மோனையோடு கவிதைகள் எழுதி வடிவம் தந்து, அவை ஆயிரம் ஆயிரம் ஆண்டுக்காலம் தங்கத் தக்க அளவிற்கு ஆளாக்கிய பெருமை புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு உண்டு.

"புரட்சிக் கவிஞர்தம், வாழ்நாள் எல்லாம் எவ்வளவோ அருமையான பாடல்கள் பாடி





★ வேற்றுமையில்லாத மனித சமுதாயம் வேண்டுமென்பதுதான் நமது குறிக்கோளே ஒழிய, வேற்றுமை பாராட்டி யாரையேனும் ஒதுக்கிவைக்க வேண்டுமென்பது அல்ல நமது குறிக்கோள்.

உணர்ச்சியையும் எழுச்சியையும் ஊட்டி இந்த நாட்டிற்கு ஏற்றமும் எழிலும் தந்தார். பண்டிதர்கள் மட்டுமே பழகிவந்த பழகு தமிழைப் பாமரரும் புரிந்து கொள்ளுகின்ற அளவுக்குக் கொண்டுவந்தார். அரண்மனையிலே இருந்த அழகு தமிழை ஆலமரத்தடிக்குக் கொண்டு வந்தார்.

"இப்படிப் பல்வேறு சிறப்புக்குரிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், 75 ஆண்டுகள் வாழ்ந்து 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரும்பெரும் பாடல்களைப் பாடி மக்களுக்கு எழுச்சியும், உணர்ச்சியும் ஊட்டியவர்".

—முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஆர். பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு வருகைதந்தவர்களை வரவேற்றார். பின்னர், தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு ஓ.எஸ். மணியன் அவர்கள் முன்னிலையுரையாற்றினார். அதனைத் தொடர்ந்து சிறுசேமிப்புத் துறையின் துணைத் தலைவர் டாக்டர் பெ. பரந்தாமன், சட்டமன்ற உறுப்பினர் திரு எல். ஆசைமணி, திரு டாக்டர் கே. கோபால் ஆகியோர் இவ்விழாவில் சிறப்புரையாற்றினார்கள்.

விழாவில் பல்வேறு துறையிலிருந்து 559 நபர்களுக்கு 71,13,700 ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வழங்கினார்கள்.

நன்னிலத்தில் நடைபெற்ற இந்தச் சிறப்புமிகு புரட்சிக் கவிஞர் பிறந்தநாள் விழாவில், புகைப்படக் கண்காட்சிகளும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், கருத்தரங்கம், நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. விழா முடிவில்- அரசு சாதனை விளக்கச் செய்திப்படங்களும், 'கலங்கரை விளக்கம்' திரைப்படமும் காண்பிக்கப்பட்டது.

விழா முடிவில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்- (நிலையகங்கள்) திரு அரி கிருஷ்ணன் நன்றி நவின்றார்.

**-எல். கிரிராஜன்**
உதவி மக்கள் தொடர்பு - அலுவலர் - (விளம்பரம்)
நாகப்பட்டினம்-
காயிதேமில்லத் மாவட்டம்



# நூல் நயம்

## சங்கத் தமிழ்ச் சோலை

ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசனார்

வெளியீடு: கலைவாணர் பதிப்பகம்
3/17, சத்தியமூர்த்தி நகர்,
நந்தனம், சென்னை-35

விலை: ரூ.40 பக்: 263

இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாக விளங்குபவை. அக்கால வாழ்க்கை, கலை, நாகரிகம், பண்பாடு முதலான தன்மைகளை உலகுக்குப் பறைசாற்றுபவை. சங்க கால இலக்கியங்கள், தமிழின் அருமை பெருமைகளை உணர்த்தும் அதே வேளையில், தமிழர்களின் அகவாழ்வையும், புறவாழ்வையும் படம் பிடித்துக் காட்டுவன. அத்தகைய காட்சிகளையெல்லாம் கண்முன் கொண்டு வருகிறார் நூலாசிரியர்.

மொத்தம் 57 தலைப்புகளில் இலக்கியத் தேன்துளிகளை இனிக்க இனிக்கத் தருகின்றார் நூலாசிரியர். படித்துச் சுவைக்கலாம்.

—பொ.மறைமலை.

## சிந்திக்க வைக்கும் அறிவியல்

ஆசிரியர்: வே. தமையந்திரன்

வெளியீடு: மருதம் பதிப்பகம்
59, ஆடம் தெரு,
சென்னை-4

விலை: ரூ.27 பக்: 168

அறிவியல் தமிழை வளர்க்க முடியுமா?

முடியும். தமிழால் முடியாதது எதுவும் இல்லை என்று அறிஞர் பெருமக்கள் அறுதியிட்டுக் கூறி வருகின்றனர். அத்துடன் அவை தொடர்பான நூல்களும் பெருமளவில் வெளிவந்து கொண்டிருப்பது, தமிழ் வளர்ச்சிக்கு நல்ல அறிகுறி. அந்த வகையில், இந்த நூலில் பல அறிவியல் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

விண்மீன்கள், மின்சாரம், நுண்ணோக்கி, கதிரியக்கம், பறக்கும் தட்டு, செயற்கைச் சிறுநீரகம் மற்றும் நுரையீரல்கள்— இப்படி 18 கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. மாணவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் படித்து அறிவியல் தமிழை அறிந்து கொள்ளலாம்.

—பி.வி.கிரி.

## தேவர் திருமகன்

ஆசிரியர்: பி.எல்.ராஜேந்திரன்

வெளியீடு: பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக் குளம்
மேற்கு வீதி,
மயிலாப்பூர்,
சென்னை-4

விலை: ரூ.22 பக்: 141

'தென்னாட்டு நேதாஜி, என்று போற்றிப் புகழப்படும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் வாழ்க்கை வரலாற்றைப் படம் பிடித்துக்காட்டும் வகையில் இந்நூல் பாங்குற அமைந்துள்ளது.

தெய்வ பக்தியும் தேசபக்தியும் மிக்க பசும்பொன்னாரின் பிறப்பு, வளர்ப்பு, தொண்டுகள் எல்லாம் இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அத்துடன் அன்னாரின் அருமை பெருமைகளையெல்லாம் அவரை அறிந்தவர்கள் புகழ் மாலை சூட்டியுள்ளார்கள்.

சென்னையில் தேவருக்குச் சிலை எழுப்பி சிலையைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை முதலான முழுத் தகவல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

—பொ.மறைமலை

## பரந்தாமனார் கவிதைகள்

தொகுப்பாசிரியர்
அ.ப. சோமசுந்தரன்

வெளியீடு: அல்லி நிலையம்
19, முத்து முதலித் தெரு
சென்னை 600 007

விலை: ரூ.75 பக்: 464

அ.கி. பரந்தாமனார் இயற்றிய அருந்தமிழ்க் கவிதைகளின் தொகுப்பே இந்நூல். அவரது எண்ணத்திலே முகிழ்த்த வண்ணத் தமிழ்க் கவிதைகளைப் படிக்குந்தோறும் இன்பம் பயக்கின்றன— இனிய வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் விளங்குகின்றன.

தொடக்கத்தில் தன் கவிதை பிறந்த கதையைக் கூறும் கவிஞர், இயற்கை இன்பத்திலே திளைக்கின்றார். பிறகு காதல் நிலைக் கவிதைகளைத் தந்து, பைந்தமிழ் மகட்குப் பாமாலை சூட்டி மகிழ்கின்றார்.

வாழ்க்கைப் பாடல்களும், உதிர்ந்த மலர்களும் நம் உள்ளத்தைத் தொடுவன. இதேபோல குழந்தை இலக்கியப் பாடல்கள் குழந்தைகளை மட்டுமல்ல, பெரியவர்களையும் குதூகலிக்கச் செய்யும்.

கவிதைகளிலே வாழ்க்கை நெறிகள், முறைகள் எல்லாம் இழைந்திருக்கின்றன. கவிதை வரிகள் வைர வரிகளாய் மின்னித் தெறிக்கின்றன. எல்லாத் திறத்தாரும் படித்து மகிழத்தக்க பைந்தமிழ்ச் சோலை இது.

- பொ. மறைமலை

## மனோரமா இயர்புக்-1995

வெளியீடு: மலையாள மனோரமா,
கோட்டயம்,
கேரளம்-686 001

விலை: ரூ.35 பக்: 720

பொது அறிவுத் தகவல்கள் நிறைந்த புதுமைத் தொகுப்பு இது.

உலக நாடுகள் குறித்த தகவல்கள், இந்திய மாநிலங்கள் பற்றிய புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குறித்த கண்ணோட்டம் நாம் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள தொகுப்புகளாக விளங்குகின்றன. இவையின்றி, பொதுப்படையான தகவல்கள் உலக அதிசயங்கள், சாதனைகள், பரிசுகள் – விருதுகள் முதலான குறிப்புகளும், அறிவியல் தொடர்பான செய்திகளும் மாணவர்க்கு மட்டுமல்ல, பெரியவர்க்கும் பயன் படுவன.

தமிழகத்தில் வளர்ந்து வரும் பெருநகரங்கள், தமிழகப் பொருளாதார நிலை, தபால் தலையில் தமிழகம், தற்காலத் தமிழ் இலக்கியத்தின் போக்கு ஆகிய கட்டுரைகள் சிந்தைக்கு விருந்தூட்டுவதாகும். உலகப் படங்கள், கண்டுபிடிப்புகள், விண்வெளி ஆராய்ச்சி, தகவல் தொடர்பு, உணவும் ஊட்டச் சத்தும், கம்ப்யூட்டர், கண்டங்கள், உலக மொழிகள், இந்திய அரசியலமைப்பு, பத்திரிகைகள், தொலைக்காட்சி, சுற்றுலா, தமிழக வரலாறு முதலான ஏராளமான கட்டுரைகள், தகவல்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

தஞ்சையில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாடு குறித்த கட்டுரையும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் ஒரு பொது அறிவுத் தகவல் களஞ்சியம் என்றால் அது மிகையல்ல.

–பி.வி.கிரி.

எழுத்தாளன் ஆவதற்குச் சாமர்த்தியம் மட்டுமிருந்தால் போதாது, சரக்கும் இருக்க வேண்டும்.
–எமர்சன்

எழுத்தாளனின் தொழில் மிகவும் மேன்மையானது. –பிரன்டீஸ்

ஆபாசமான செய்திகளை வைத்து எழுதாமலிருப்பதே, ஓர் எழுத்தாளனுக்குரிய கற்பாகும்.
–மாண்டேன்

### வளம் தரும் மரங்கள் (இரண்டாம் பாகம்)

ஆசிரியர்: பி.எஸ்.மணி

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41 பி, சிட்கோ
எஸ்டேட், சென்னை-98

விலை: ரூ.32 பக்: 263

ஒரு நாட்டுக்கு வளத்தையும், வனப்பையும் தருவது மரங்களாகும். மரம் இன்றேல் மழை இல்லை, மழை இன்றேல் வாழ்க்கையும் இல்லை. உயிர் வாழ்வதற்கு அடிப்படையாக விளங்கும் மரங்களை வளர்ப்பது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம் என்கிற உறுதியோடு நாம் செயல்பட்டால் அது இன்றைய சமுதாயத்துக்கு மட்டுமல்ல, நாளைய சமுதாயத்துக்கும் பலனைத் தரும் என்பது உண்மையாகும். அந்த வகையில் இந்த நூல் பல்வேறு மரங்களை வளர்ப்பதற்கான உத்திகளைக் கூறுகின்றது. எந்தெந்த மரங்களை எங்கெங்கே, எப்படி வளர்க்கலாம் என்கிற பயிர் முறையும் விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் மரத்தின் மருத்துவப் பயன்களும் கூறப்பட்டுள்ளன.

–பி.வி.ஜி.

### விஞ்ஞான ரீதியில் கோழிப் பண்ணை அமைத்தல்

ஆசிரியர்: டாக்டர் எப்.ஆர். ஷெரிப்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41 பி, சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை 600 098

பக்கம்: 248 விலை ரூ.35

நாளுக்கு நாள் பல அரிய அறிவியல் கண்டுபிடிப்புகள் பெருகிவரும் இந்நாளில், இது நாள் வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள கோழியின அறிவியல் பூர்வமான முறைகளுடன் கோழிப் பண்ணைப் பராமரிப்பு, வீரிய இனக் குஞ்சுகள், தீவனம், நோய் அறிகுறிகள், தடுப்பு முறைகள், சிகிச்சை முறைகள் அதற்கான மருந்துகள், அவை கிடைக்கும் இடங்கள் ஆகிய முழு விவரங்கள் தரப்பட்டுள்ளன. அத்துடன், இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புப் பெறவும், வங்கிக் கடனுதவி பெறவும் வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. கோழிப் பண்ணை தொடங்க இருப்பவர்களுக்கும், கோழிப் பண்ணை நடத்தி வருபவர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

–கு. மல்லிகா



# பாரதி! நீ ஒரு ஞானத்தீ!

## கவிஞர் மு.மேத்தா

தாயே, தமிழே, தஞ்சைக்கு ஏன் நீ வந்தாய்?
இந்த நெருக்கடியில் எதற்காக நீ வந்தாய்?
தென்பொதிகைக் காற்றுத் தேரேறி பவனி வரும்
ஆனிமுத்துப் பொன்மேனி அன்னைக்கு
வேர்க்காதா?
இந்த நெருக்கடியில் எதற்காக நீ வந்தாய்?
தாயே, தமிழே தஞ்சைக்கு ஏன் நீ வந்தாய்,
ஓ. அழைப்பு விடுத்த அன்னையே நீதானோ?
கடலையே வரவழைத்த கட்டளையே உன்
குரல்தானோ?
பூமிப் பரப்பெங்குமிருந்து பறந்து வந்த
தமிழ்த்தாயின் புதல்வர்கள் இவர்களெல்லாம்.
நீங்களோ முதல்வர்!

உங்களைக் கவியரங்கத் தலைவர் காற்று என்றார்.
அப்புறம், புயல் என்றார். ஆம்.
காத்திருக்கும் வரைக்கும் உங்கள் பெயர் காற்றாக
இருக்கிறது.
புறப்பட்ட பின்னால்தான் அது புயல் என்று
தெரிகிறது.

தலைவருக்கு வணக்கம்,
ஓசைக் கவி படைக்க ஒன்றிவந்த பறவைகளே,
நேசக் கவிஞர்களே, நெஞ்சத்தின் நண்பர்களே,
பாசமிகு மானுடத்தின் பாடகன் நான்,
வணங்குகிறேன்.
இங்கே மாநகர வீதிகளில், மனித நதிகள்
எல்லாம் காவிரிக் கரை வந்து கடலாகிப்
போனதுவோ?
அலைகளோ, அலைகள் என்றால் அசையுமே,
ஓ! இவைதாம் தலைகளோ, இவர்தம் உள்ளங்கள்
தமிழ்த்தாய் உணவருந்தும் இலைகளோ!
பாரதியே நான் உனக்கு
ஆவாரம் பூ எடுத்து அழகான செந்தமிழில்
தேவாரம் பாடவா?
திருப்பாவை சொல்லவா?
கையில் குறள் எடுத்து காலில் சிலம்பு அணிந்து
கம்பனிடம் வார்த்தைகளைக் கடன் வாங்கிச்
சூடவா?
ஒருவாசகத்தில் உயிரை உருகவைக்கும்
திருவாசக அமுதம் தெளிக்கவா?
மாறாப்புகழுடைய மாணவியைப் போற்றிவரும்
சீறா தனைப் புகழ்ந்து செப்பவா?
பூம்பாதத் தாமரையாய் குளிரவைக்கும்
ஏசுபிரான்தேம்பாவணிதனைத் தேர்ந்து மனம்
ஒப்பவா?
பாரதியே, நான் உனக்கு
ஆவாரம் பூ எடுத்து அழகான செந்தமிழில்
தேவாரம் பாடிடவா?



# நேசமணி நூற்றாண்டு விழாவை அரசு நடத்தும்!

**-மாண்புமிகு முதல்வர் ஆணை**

குமரித் தந்தை என்றும், மார்ஷல் நேசமணி என்றும் கன்னியாகுமரி பகுதி மக்களால் போற்றிப் பாராட்டப்படும் திரு ஏ.நேசமணி அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை, அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

திரு ஏ. நேசமணி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பிற்பட்ட மக்களுக்குச் சமூகநீதி கிடைப்பதற்காகப் பாடுபட்டவர் என்பதைக் கருத்தில் கொண்டும், அவர் தமிழகத்திற்கு ஆற்றிய சேவையைக் கருத்தில் கொண்டும், அவரது பெயருக்கு மேலும் புகழ் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த ஆணையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்துள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி திரு நேசமணி அவர்களின் நூற்றாண்டுப் பிறந்த நாள் விழாவும், அவரது வாழ்க்கையைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சியும், மாநில அரசின் சார்பில், கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் நடத்தப்படும்.

திரு நேசமணி அவர்களின் பெயரையும், புகழையும் பரப்பும் வண்ணம், தமிழக அரசு ஏற்கெனவே திரு நேசமணி அவர்களின் பெயரில் போக்குவரத்துக் கழகம் ஒன்றை இயக்கி வருகிறது.

மூத்ததமிழர் உயிர் காத்ததற்காய் தேவாரம்
பாடிடவா?
முத்தமிழ் உயிர் காத்ததற்காய் தேவாரம்
பாடிட வா.
புதிர் அடிப்படையாய் இருந்த புதையல்களை
மீட்டு வந்த
அதிரடிப்படையாய் புதிரடிப்படையாய்
ஆர்த்தெழுந்து
தேடிடவா? ஆராரோ, ஆரிரரோ, ஆராரோ நான்
யாரோ? ஆரிரரோ ஆராரோ அவர் குறியில்
இன்னும் யார் யாரோ?
யாரப்பா, இங்கே அணிவகுத்த தமிழ்த்தலையைப்
பாரப்பா,
இங்கே அணிவகுத்த தமிழ்ப்படையைப் பாரப்பா,
...பன்னிரெண்டு தென்னைமரம் கேட்டவன்
...ப்பா,
...ரு புலவன் பாரதி அவன் பேர்
கூறப்பா,
இரவில் சரண் புகுந்து நீயும் ...து சேரப்பா,
நல்வழியைத் தேடப்பா, வீரப்பா!
வீரப்பா, பாரதிக்கும் உனக்கும் உள்ள
வித்தியாசத்தைப் பார்த்தாயா?
அவன் உன்னைப்போல சந்தன மரப்
கேட்கவில்லை.
தென்னைமரம் கேட்டான். அதுவும்
பத்துப் பனிரண்டு தென்னை மரம் கேட்டான்.
ஆனால், நீயோ அநியாயமாக ஆயிரம் கோடி
கேட்டாய்.
இட ஒதுக்கீட்டிற்காக,
எண்ணத்தில் இடம் ஒதுக்கியவர்கள் ...பேர்.
இட ஒதுக்கீட்டிற்காக
இதயத்திலும் இடம் ஒதுக்கியவர்கள் இவர்கள்தான்.
சாதனையின் சரித்திரத் தாய்!
இனி வீரப்பா, உனக்கு ஒரு இட ஒதுக்கீடு



செய்யத் தயாராய் இல்லை!
இங்கே மேலாண்மை காட்டி விஜயாலய சோழன்,
வேளாண்மை காட்டி வளர்த்த நகர் தஞ்சை!
வேளாண்மை அமைச்சர் தொடங்கிவைத்தார்.
அவருடைய நூலாண்மையை, ஏற்கெனவே
நான் அறிவேன்!
இப்போதுதான் அவர் எழுதி வந்த
தாளாண்மையை அறிந்தேன். வாழ்த்துகிறேன்.
வாடகை வண்டியிலே வந்தாலும் தமிழை
வாடகைக்கு விடாதவர்கள் நாங்கள் என்றீர்.
ஏனென்றால், நீங்கள் எல்லாம்
வாட கைவிடாத ஆட்கள் அன்றோ!
கவிஞன் ஒரு ரோஜாச் செடி. இந்த உலகம்
மலர்களைப் பறித்துக்கொண்டு முட்களை
அவன் நெஞ்சிலேயே குத்துகிறது.
கவிஞன் ஒரு காகிதம்.
இந்த உலகம் படித்து முடித்த பிறகு
கவனமாக அவனைக் கிழித்து விடுகிறது.
பாரதியே!
புதிய சிந்தனை புதிய கற்பனை பூத்திடும்
பூந்தோட்டம்,
உன் வாசலைத் தேடி வாசனை தேடி வருவேன்
வண்டாட்டம்.
நீதான் எங்கள் தமிழின் கொண்டாட்டம்.
தென்றல் மலர்களுக்குத் தலைசீவி விடுகிறது.
புயலோ மலர்களின் தலைகளையே சீவிவிடுகிறது!
ஒரு கவிஞனுக்குப் பாராட்டு நடந்தால்
வாழ்க்கை தேரோட்டமாகிறது.
கண்ணில் நீரோட்டம் நடந்தால்
வாழ்க்கை போராட்டமாகிறது.
கூட்டுக்குள் பாடாத குயில், பாரதி.
அவனின் கோட்டுக்கும் பாட்டு வரும்.
குலுங்கி இசை போட்டு வரும்.
பாட்டுக்குள் பாட்டு நீ,
நீ பட்ட பாட்டை உரைத்தால்
இப்பாட்டரங்கம் போதாது!
பாரதி, பாட்டுக்கு நட்சத்திரப் பந்தல் விரித்தான்.
தன் வீட்டுக்கு நைந்ததொரு கந்தல் விரித்தான்.
வெள்ளையனின் துப்பாக்கி, வெறிபிடித்த
பீரங்கிச் சேனையை எதிர்த்துச்
சிறகடித்த கவிஞரை ஒரு யானையா கொன்றது?
அவையோரே சிந்திப்பீர்!
ஒரு பானைதான் அவனைப் பழிவாங்கிக்
கொன்றது!

**நாடு வாழ நம்முடைய உழைப்பும் தேவை என்ற உணர்வு எல்லோருக்கும் வேண்டும். நாம் யாவரும் நமது அறிவாற்றலை நாட்டுக்கு எந்த அளவு தருகின்றோமோ, அந்த அளவுக்கே நாட்டுப் பொது நன்மை உயரமுடியும்!**

**-பேரறிஞர் அண்ணா**

அரிசியைக் காணாமல் அண்ணாந்து பார்த்திருந்த
வெற்றுச் சோற்றுப் பானைதான்
அவனைப் பழிவாங்கிக் கொன்றது.
வறுமையன்றோ அவனது திறமையைத் தின்றது.
பூமிக்கு நாணம் வந்தது.
ரோஜாக்கள் பூத்தன.
ரோஜாவுக்குக் கோபம் வந்தது.
முட்கள் முளைத்தன. முட்களுக்கு யோகம் வந்தது.
ஏசுவின் தலையின் கிரீடமானது,
பாரதியே,
உன்னோடு சேர்ந்து வாழ்ந்த காரணத்தால்
வறுமையும் கூட பெருமை பெற்றது!
பாரதி, துட்டுக்கு நீ ஆசைப்பட்டிருந்தால்
எட்டயபுரத்துப் பணப்பெட்டிகள் உன்னையே
வட்டிக்கு விட்டிருக்கும்.
நீ சிலப்பதிகாரம். சிலம்பை உடைக்கவில்லை.
பழைய சிந்தனைகளை உடைத்தாய்.
நீ அட்சயபாத்திரத்தை ஏந்தவில்லை. நீ
மணிமேகலை!
அட்சர லட்சங்கள் பெறும்
பாத்திரங்களைப் படைத்து வார்த்தாய்.
பாரதியே நீ ஒரு முகில்.
மழையைத் தமிழுக்கு வழங்குவதற்காக
மேகமாய் எங்கெங்கோ மிதந்து திரிந்தவன்.
நீ ஒரு நதி.
பாதம் பட்ட இடமெல்லாம்
தமிழைப் பயிரிட்டவன்.
நீ ஒரு கடல், உன்னையே விழுங்கிக் கொண்டவன்,
நீ ஒரு காற்று, உன்னையே துரத்திக் கொண்டவன்,
நீ ஒரு வானம், நீ அணிந்திருந்த கந்தல்
துணிக்குள்ளே
நட்சத்திரங்களையெல்லாம் கட்டி வைத்திருந்தவன்.
தீபமாய் எரிந்த திரி நீ!
நாங்கள் உன்னைக் கையில் வைத்து
கரிக்கோடு போடுகிறோம்!
பாரதியே நீ ஒரு ஞானத் தீ.
உன்னுடைய நெருப்பில் நீயே எரிந்தாய்.

விழுந்தது சாம்பல் அல்ல. சந்தனத் தமிழ்.
நீ நெருப்பு. எனக்கிருக்கும் ஒரே ஆச்சரியம்.
எழுதுகிறபோது, நீ எழுதுகிற தாள் எப்படி
எரியாமல் இருந்தது?
இன்றைய தமிழ்நாடு எப்படியிருக்கிறது?
அன்று, முல்லைக்கொடிக்குப்
பாரி தேர்கொடுத்தான்!
இன்றைய மாமன்னார்களோ, முல்லைக்
கொடியையும் கொடுத்து
தேருக்குப் பதிலாகக் காரையும் கொடுக்கிறார்கள்.
மயிலுக்குப் போர்வை தந்த பேகனே,
எங்கு போய்த் தொலைந்தாய்? வா,
இலட்சோப இலட்சம் பச்சை மயில்கள்,
வறுமை, அடிமை, வாதட்சணைக் கொடுமை
இவற்றில் வாடுகின்றன, என்றேன்.
அவசர அவசரமாக வந்த பேகன், வேகவேகமாய்ப்
போர்வையை எடுத்து
தன் முகத்தைப் போர்த்திக்கொண்டான்.
தலைகொடுத்தான் அன்று குமணன் தமிழுக்கு,
ஆனால் இன்று, இந்த நாட்டில் சிலர்
தமிழை விற்பதற்குத் தயங்கவே மாட்டார்கள்.
சிலர் தாமதிப்பது கூட தயக்கத்தால், அல்ல,
நல்ல விலை கிடைக்காதா
என்ற நப்பாசையாலேதான்!
தமிழ் என்ற தங்கச்சப்பு
எப்போதும் உள்ளது எங்கள் கைகளில்.
என்ன செய்வது,
நாங்கள்தான் ஒருவரையொருவர்
மொட்டையடிக்கிற
முயற்சியிலேயே உள்ளோமே?
'மாகாளி பராசக்தி கடைக்கண் வைத்தாள்
—ஆகா என்று எழுந்தது பார் யுகப்புரட்சி'
என்றான் பாரதி.
பாரதி, தேவி கடைக்கண் வைத்தாள்
ரஷ்யா பிறந்தது.
எந்த மூதேவி கடைக்கண் வைத்தாள்,
ரஷ்யா உடைந்தது?
ஸ்டாலின் காலத்தில்
ரஷ்யா பதிவு செய்யப்பட்ட தபாலாக இருந்தது.
உள்ளே இருப்பதென்ன, ஒருவருக்கும் தெரியாது.
குருஷ்சேவின் காலத்தில், அது
உள்நாட்டு அஞ்சல் உறையாகிப் போனது.
திரைகளை எட்டிப் பார்க்க முடிந்தது.
அப்படி இப்படிப் பார்த்து
ஒரு நாலு வரிகளைப் படிக்கலாம்.





அச்சம் தவிர்ந்தது வாழ்வு-நல்
வன்பின் விளைவது வாழ்வு
மச்சினில் வாழ்பவ ரேனும்-அவர்
மானத்தில் வாழ்வது வாழ்வு!
உச்சி மலைவிளக் காக-உல
கோங்கும் புகழ்கொண்ட தான
பச்சைப் பசுந்தமிழ் நாட்டில்-தமிழ்
பாய்ந்திட வாழ்வது வாழ்வு!

—பாவேந்தர் பாரதிதாசன்.

கோர்ப்பசேவின் காலத்திலோ
ரஷ்யா அஞ்சலட்டை போல ஆகிவிட்டது!
எவர் வேண்டுமானாலும் எடுத்துப் படிக்கலாம்.
தபால்காரர் கூட படித்துவிட்டுக் கொடுக்கலாம்!
ஆனால், அதை அடிக்கடி வெள்ளை
மாளிகைதான்
விரும்பிப் படிக்கிறதா?
வேலை செய்பவர்களுக்கு
இங்கே கூலி கிடைப்பதில்லை.
வேலை செய்வது போல் நடிப்பவர்களுக்கு
இங்கே விருது கிடைக்கிறது.
பாரதிக்கு நிலாச்சோறு உண்ண நீண்ட நாள்
ஆசை.
அபூர்வமாய்க் கிடைத்தது சோறு.
அப்போதெல்லாம் அமாவாசை.
இந்த உலகில் சட்டை மாற்றாமல்
சாஸ்வதமாய் இருப்பது
சிற்பிகள் வடித்த சிலைகள் மட்டுமே.
பாரதியோ தமிழைப் பற்றிய இலட்சத்தில்
தடுமாறாமல் இருந்தான்.
பாரதி ஒரு புத்தகம்.
ஆனால், எதுவும் எழுதாத
வெள்ளைத் தாள்களுக்குத்தானே இங்கே

## தெற்காசிய நாடுகளுக்கு இடையேயான 7-வது விளையாட்டுப் போட்டிகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆலோசனையின் பேரில், தெற்காசிய நாடுகளுக்கு இடையேயான 7-வது SAF விளையாட்டுப் போட்டிகள் இவ்வாண்டு டிசம்பர் மாத இறுதியில் தமிழகத்தில் சென்னையில் நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் ஏற்கெனவே தமிழக அரசு செய்துவருகிறது. ரூ.120 கோடி மதிப்பில் நடத்தப்படும் இந்தப் பெருமைமிகு விளையாட்டுப் போட்டிகள் நடப்பாண்டு 1995 டிசம்பர் மாதம் 18.12.1995 முதல் 27.12.1995 வரை 10 நாட்களுக்குச் சென்னையில் நடைபெற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

இந்த விளையாட்டுகள் மிகச் சீரிய முறையில் நடைபெறுவதற்காக, சென்னை நகரில் புதிய விளையாட்டு அரங்கங்களும், ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு வருகிற பல்வேறு விளையாட்டு அரங்கங்களைப் புதுப்பிக்கும் பணியும், மேலும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள வருகின்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் நடுவர்கள் தங்குவதற்காகச் சென்னை அருகே கோயம்பேட்டில் SAF விளையாட்டுக் கிராமம் அமைக்கும் பணியும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் வெகு விரைவாக நடைபெற்று வருகின்றன.

பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு போட்டிகளுக்குத் தயாராக ஓரிரு மாதங்களுக்கு முன்னரே வைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

விலை அதிகம்!
பழைய புத்தகக்கடை பாரெங்கும் உண்டே.
வெள்ளைத் தாள்களை அப்படி விற்கிறார்களா?
ராக்கெட் சோதனையில் இந்தியா
வெற்றி பெற்றது.
மகிழ்ச்சிதான்.

இப்போது ராக்கெட்டுக்கே
சோதனை வந்துவிட்டதே.
வெளிநாட்டுக்குப் போய்விட்டதாம் ரகசியங்கள்.
வேலிகள் பயிரை மேய்ந்தால்,
ஆடுமாடுகளுக்கு அதிருஷ்டமல்லாவா?
பாரதியே, உன் பெருமை பாரறிய வேண்டாமா?
உன்னைப்
பாவேந்தர் சொற்களினாலேயே பாராட்டுகிறேன்.
நீ குடிசைவாசிகளின் குடும்ப விளக்கு.
நீ அடக்க முடியாத அழகின் சிரிப்பு.
தகர்க்க முடியாத தமிழச்சியின் கத்தி.
நீ எங்களுக்குக் கிடைத்த எதிர்பாராத முத்தம்.
இறுதியாக முதல்வரிடம் கவிதை மனுப்போட்டு,
என் கடமையினை முடிக்கின்றேன்!
எல்லாரும் கோவிலுக்குச் சென்று
தம் குறை சொல்வார்கள்.
எவரேனும் கோவிலின் குறை தீர்க்க
நினைத்ததுண்டா?
இவ்வுலகில் கோவிலுக்குச் சென்று
குறை சொல்வார் எவரேனும்
கோவிலின் குறை தீர்க்க நினைத்ததுண்டா?
நலிந்த மனிதர்க்கே உதவுவார் நாட்டில் இல்லை.
நலிந்த கோவில்களின்
நலன் பெருக்க நினைப்பவர் யார்?
நினைத்தார் நம் முதல்வர்!
ஆலயப் பணிக்காக ஆயிரம் பணி செய்தார்.
முதல்வர் அவர்களே,
தமிழை ஆட்சி மொழியாக்கி
அகம் மகிழ வேண்டுகிறேன்.
சாட்சி மொழியாகத் தவிக்கின்ற தமிழை
ஆட்சி மொழியாக்கி அகம் மகிழ
வேண்டுகின்றேன்.
கல்வியில், அரசாங்கக் கட்டளையில்,
நீதி மன்றத்தில், எல்லா இடங்களிலும்
தமிழுக்கு ஏற்றம் தர
வேண்டுகிறேன்,
வணக்கம். நன்றி.



திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்

# காயிதே மில்லத் நூற்றாண்டு விழா

**கா**யிதே மில்லத் இஸ்மாயில்சாகிப்பின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா, அரசு சார்பில் 18.7.95 அன்று திருநெல்வேலிகட்டபொம்மன் மாவட்டத்தைச் சேர்ந்த மேலப் பாளையத்தில் உள்ள பஜார் திடலில் நடைபெற்றது.

விழாவுக்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் காயிதே மில்லத் படத்தைத் திறந்து வைத்தார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் விழாத் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஜெயக்கொடி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். புலவர் காஜாமொய்தீன் கவிதை பாடினார்.

விழாவில், சட்டமன்ற உறுப்பினர் நெல்லை திரு வேலையா பேசும்போது, "காயிதே மில்லத் வாழ்ந்த பேட்டை வீட்டை அரசு ஏற்று நினைவுச் சின்னமாக அதைப் பாதுகாக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.

பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு தர்மலிங்கம் பேசும்போது, "நெல்லை சந்திப்பில் காயிதே மில்லத் திருவுருவச் சிலை அமைக்க வேண்டும்" என்றார்.

விழாவில் மாண்புமிகு திரு நாகூர் மீரான் அவர்கள் பேசும்போது கூறியதாவது: "வாழ்ந்து மறைந்த தலைவர்களின் வரலாற்றை இளைஞர்கள்-எதிர்காலச் சந்ததியினர் அறிந்து, அதற்கேற்ப நடக்க இந்த விழாவைப் புரட்சித்தலைவி அவர்கள் தமிழகம் முழுவதும் நடக்க உத்தரவிட்டு உள்ளார்.

"எத்தனையோ முதலமைச்சர்கள் இந்த நாட்டை ஆண்டார்கள். ஆனால், கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத்துக்குப் பெருமை சேர்த்தவர் புரட்சித் தலைவிதான்.

இந்த இஸ்லாமிய சமுதாயத்திற்குக் காவலன், பாதுகாப்பாளன் என்று முதலைக் கண்ணீர் வடித்தவர்கள்கூட 'வக்ப்' வாரியத்திற்கு ரூ.2 இலட்சம் கேட்டபோது நிதி இல்லை என்று சொல்லி விட்டனர். ஆனால், புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர் அவர்கள் தான் இந்தச் சமுதாயத்திற்காக ரூ.1 கோடியே 65 இலட்சம் கொடுத்தார்.

"உலமாக்களுக்கு ஓய்வூதியத் திட்டம் கொண்டு வந்து ரூ.250 வழங்கினார். புரட்சித்தலைவி அவர்கள் ரூ.250 பென்சன் தொகையை ரூ.400 ஆக உயர்த்தி உத்தரவிட்டுள்ளார். 1,700 உலமாக்கள் இதன்மூலம் பயன் பெறுகின்றனர். அதை இந்தச் சமுதாயம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் எல்லாம் டாக்டர் புரட்சித்தலைவிக்கு நன்றியோடு இருக்கவேண்டும்.

"வக்ப் வாரிய அலுவலகம் சென்னையில் கட்ட நம் புரட்சித் தலைவி அவர்கள் ரூ.5 இலட்சம் வழங்கியுள்ளார்.

"பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு தர்மலிங்கம் அன்பின் காரணமாக இங்கே பேசும்போது, காயிதே மில்லத்துக்குச் சிலை அமைக்க வேண்டும் என்று கூறினார். இஸ்லாமிய வழக்கப்படி தலைவர்களுக்குச் சிலை வைப்பதில்லை. ஆதலால் காயிதே மில்லத்திற்கு மணி மண்டபம் கட்ட புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

> ★ மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாடு அடைய வேண்டுமானால், தன்னம்பிக்கை உடையவனாகவும், தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.
> \- தந்தை பெரியார்

"இந்தச் சமுதாயத்திற்கு வாரி வழங்கிய புரட்சித்தலைவர் அவர்களின் வாரிசாக விளங்கும் புரட்சித்தலைவி அவர்களுக்கு, இந்தச் சமுதாயத்தின் ஒட்டுமொத்த ஆதரவைத் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்".

விழாவில் இந்திய யூனியன் முஸ்லிம்லீக் தமிழ் மாநிலத் தலைவர் திரு. அ.க.அ. அப்துல் சமது அவர்கள் பேசியதாவது:

"காயிதே மில்லத் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவைத் தமிழகத்தில் மாதம் ஒரு நகரில் அரசு விழா எடுக்கும் என்று நினைத்தோம். ஆனால், 15 நாட்களுக்கு ஒரு ஊரில் இந்த விழா இந்த ஆண்டு முழுவதும் கொண்டாடப் புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

"கேரளாவில் நடக்கும் ஆட்சியில் முஸ்லிம்லீக் பங்கேற்கிறது. ஆன்ால், அங்குகூட இப்படி காயிதே மில்லத்திற்குச் சிறப்பான விழா எடுக்கப்படவில்லை. தமிழகத்தில் இப்படிப்பட்ட விழா எடுத்ததற்குப் புரட்சித் தலைவிக்கு இந்தச் சமுதாயம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆட்சிக்கு உறுதியாக இருப்போம். இந்தச் சமுதாயமும் உறுதியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழுக்குப் பாடுபட்டவர் காயிதே மில்லத். புரட்சித் தலைவர் அவர்கள் காயிதே மில்லத் படத்தைச் சட்டமன்றத்தில் திறந்தார். காயிதே மில்லத் மாவட்டம் தஞ்சை மாவட்டத்தில் பிரித்து வைக்கப்படும் என்று அறிவித்தார். அரசு விழாவாகக் காயிதே மில்லத் விழாவைக் கொண்டாடினார் இவர்."

விழாவில் மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் ரூ.10 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசும்போது கூறியதாவது:

"நம் புரட்சித்தலைவி அவர்கள் அரசியல் ஆதாயம் தேட இப்படிப்பட்ட விழாக்களை நடத்தவில்லை. ஏழை எளிய மக்களுக்காக அடித்தள மக்களைக் காப்பதற்காகப் பாடுபடும் அரசாக இந்த அரசு உள்ளது.

"யார் யார் இந்த நாட்டுக்காக, சுதந்திரத்திற்காகப் பாடுபட்டனரோ அந்தத் தலைவர்களைப் பெருமைப்படுத்த நம் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்.

"அந்த வகையில் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் விழாவை மாநிலம் முழுவதும் கொண்டாட மாண்புமிகுபுரட்சித் தலைவி அவர்கள் உத்தர விட்டுள்ளார். அதன் பேரில்

## வாய்மையும் தூய்மையும்

காயிதே மில்லத் இசுமாயில் சாகிப் அவர்கள், இசுலாமியச் சமுதாயம் நெடுங் காலத்திற்குப் பிறகு பெற்ற பெரும் பரிசு ஆவார்.

சனநாயகத்திற்குக் கிடைத்த அறப்போர் வாளாக அவர் இருந்து வந்திருக்கிறார்.

தொடர்ந்து அப்படி இருந்து வருவார் என்கிற நம்பிக்கையில் நாங்கள் நல்லாட்சி நடத்தத் துணிந்திருக்கிறோம்.

கண்ணியத்துக்கு உரிய காயிதே மில்லத் அவர்கள் முசுலீம் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவர் மட்டும் அல்லர். தமிழர் சமுதாயத்தின் தன்னேரில்லாத் தலைவரும் கூட!

நம் நாட்டின் முதுபெரும் அரசியல் மேதையான அவருடைய வாய்மையும், தூய்மையும் அனைவராலும் பாராட்டப் பெற்றவை.

—பேரறிஞர் அண்ணா

இங்கு விழா சிறப்பாக நடக்கிறது.

"காயிதே மில்லத் அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே வரலாறு படைத்தவர். ஆதலால் மறைந்தும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். காயிதே மில்லத் என்றால் வழிகாட்டி என்பது பொருள். காயிதே மில்லத் இந்தியத் துணைக் கண்டத்திற்கு வழி காட்டி. தமிழகத்திற்கு வழி காட்டி. அவரது பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாடத் தகுதி உள்ளது.

"காயிதே மில்லத் பெயரில் தனி மாவட்டத்தை உருவாக்கியவர் நம் புரட்சித்தலைவி அவர்கள் ஆவார். காயிதே மில்லத் கனவை நனவாக்கும் தலைவியாக நம் புரட்சித் தலைவி அவர்கள் உள்ளார். ஆதலால், காயிதே மில்லத் எண்ணங்கள் எல்லாம் இந்த ஆட்சியில் நிறைவேற்றப்படும்".

இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் பேசினார்.

தமிழ்நாடு வக்ப் வாரியத் தலைவர் திரு முகமது ஆசிப், எம்.எல்.ஏ.சேப்பாக்கம்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜீனத்சர்புதீன், மற்றும் நெல்லை சிதம்பரனார் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு கே.ஆர்.பி. மணிமொழியன் உள்படப் பலர் பேசினார்கள்.

நெல்லை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு லாரன்சு நன்றி கூறினார்.

முன்னதாக, "நெல்லைச் சீமை வழங்கிய அகில இந்தியத் தலைவர் காயிதே மில்லத்" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது.

இதில், திருவாளர்கள் ஏ.கே. ரிபாயி, பேராசிரியர் கே.எம். காதர் மொகைதீன், எஸ். காதர் மொகைதீன், வி.எஸ்.டி. சம்சுல் ஆலம், எல்.கே.எஸ். மீரான் மொகைதீன், நெல்லை மஜீத் ஆகியோர் பேசினார்கள்.

மேலப்பாளையம் முஸ்லிம் மேல்நிலைப் பள்ளிக்கூடத்தில் காயிதே மில்லத் பற்றிய புகைப்படக் கண்காட்சியும் நடந்தது. இதை மாண்புமிகு அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் நாகூர் மீரான் அவர்கள் திறந்து வைத்தார். விழாவில், சட்டமன்ற உறுப்பினர்கள் தர்மலிங்கம், ஆர்.பி. ஆதித்தன், 'வக்ப்' வாரியத் தலைவர் ஆசிப், முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் சமது, மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெயக்கொடி, முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி தாளாளர் அபுபக்கர், ஆகியோர் கலந்து கொண்டனர். புகைப்படக் கண்காட்சியில் காயிதே மில்லத் பற்றிய 100க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தன. அவற்றை ஏராளமானோர் கண்டுகளித்தனர்.



# திருநெல்வேலியில் அரசுப் பொருட்காட்சி

நெல்லை டவுன் மாநகராட்சித் திடலில், அரசுப் பொருட்காட்சியின் தொடக்க விழா 5.7.95 அன்று நடந்தது.

இதன் தொடக்க விழாவிற்கு, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் தலைமை தாங்கினார்.

நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. விகு. ஜெயக்கொடி இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. எஸ். நாகூர்மீரான் அவர்கள் முன்னிலை வகித்தார். மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் திரு. வெ.நடேசன் பால்ராஜ் அவர்கள் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்தார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் திரு.வெ. நடேசன் பால்ராஜ் அவர்கள் பேசும்போது கூறியதாவது:

"பாளையங்கோட்டைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தர்மலிங்கம், பேசும்போது, நெல்லையப்பர் கோவில், பாளைங்கோட்டை கோபால சாமி கோவில் ஆகியவற்றுக்குக் கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். புரட்சித்தலைவி ஆட்சிக்கு வந்த பின், தெய்வீகப் பணிக்குச் சிறப்பிடம் கொடுத்து இன்று பல கோவில்களில் கும்பாபிஷேகம் நடத்தப் பட்டுள்ளன. திரு. தர்மலிங்கம், அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும். ஏப்ரல் மாதத்திற்குள், நெல்லையப்பர் கோவிலுக்கும், கோபாலசாமி கோவிலுக்கும் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) நடைபெறும்.

விழாவில், மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் பேசும் போது கூறியதாவது :

"நெல்லையில் இன்று நடைபெறும் பொருட்காட்சி தமிழகத்தின் 83 -வது பொருட்காட்சி ஆகும். இது நெல்லையில் நடைபெறும் 8- வது பொருட்



# தந்தை பெரியாரின் பொன்மொழிகள்



★ மனிதன் நம்பிக்கை வழி நடப்பதை விட்டு, அறிவின் வழிச் சென்று எதையும் சிந்திக்க வேண்டும்.

★ மொழிப்பற்று இராதவரிடத்து நாட்டுப் பற்று இராதென்பது நிச்சயம்.

★ நாடு என்பது மொழியை அடிப்படை யாகக் கொண்டு இயங்குவது.

★ பெண்களுக்குப் பகுத்தறிவும், கல்வியும், உலக நடப்புக் கல்வியும், தாராளமாகக் கொடுத்து மூடநம்பிக்கை, பயம் ஆகியவற்றை ஊட்டக்கூடிய கதை களையோ, சாத்திரங்களையோ, இலக் கியங்களையோ, காணவும், கேட்கவும் சிறிதும் இடமில்லாமல் செய்ய வேண்டும்.

காட்சியாகும். அரசுத் திட்டங்கள், சாதனைகள், செயல்பாடுகள், மக்கள் தெரிந்துகொள்ள், அறிந்து கொள்ள இந்தப் பொருட்காட்சி நடத்தப் படுகிறது.

"இந்தியாவில் எந்த மாநிலத் திலேயும் அரசே நேரிடையாகப் பொருட்காட்சியை நடத்து வதில்லை. ஆனால், புரட்சித் தலைவியின் ஆட்சி நடக்கும் தமிழகத்தில், அரசு சார்பில் பொருட்காட்சி இலாபகரமாக நடந்து வருகிறது. இந்தப் பொருட்காட்சி புரட்சித் தலைவி யின் ஆட்சியின் சாட்சியாகச் சாதனைகளைக் குறிப்பிடும் பொருட்காட்சியாக இருக்கும்.

"இங்கு 17 தமிழக அரசு அரங்குகளும், 3 அரசுச் சார்பு அரங்குகளும் அமைக்கப்படுகின் றன. இந்தப் பொருட்காட்சியில் கிடைக்கும் நிகர வருமானத்தில் 50 சதவீதம் நெல்லை மாநகராட்சிக்கு வழங்கப்படும்".

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் பேசும்போது கூறியதாவது :

"அரசுத் திட்டங்களை விளக்க இப்படிப்பட்ட பொருட் காட்சியை நடத்தி வருகிறோம். இந்தப் பொருட்காட்சிகள் இடை யில் - நடத்தப்படாமல் நிறுத்தப் பட்டன. புரட்சித்தலைவி ஆட்சிக்கு வந்தபின் மீண்டும் இதை நடத்தி வருகிறார்.

"மாவட்ட அளவில் உள்ள கல்லூரி, பள்ளிக்கூட மாண வர்களை அழைத்து வந்து பொருட்காட்சியைப் பார்க்க மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்ய வேண்டும். சென்னையில் 5 இலட்சம் மாணவர்கள் பொருட்காட்சியைப் பார்த்துள் ள்னர். பொருட்காட்சியைப் பார்க்க வரும் மாணவ, மாணவி களுக்கு அரசுத் திட்டங்களை விளக்க வேண்டும்."

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் வே. கோபாலகிருஷ்ணன், ஆர்.பி.ஆதித்தன், ஆர். முருகையா, பாண்டின், பி. தர்மலிங்கம், தமிழக அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. தி. சண்முக ராஜேஸ்வரன் இ.ஆ.ப. ஆகி யோர் பேசினார்கள். செய்தித் துறை இணை இயக்குநர் திரு பா. ஜெயப்பிரகாசம் அவர்கள் நன்றி கூறினார். விழாவில், கட்ட பொம்மன் போக்குவரத்துக் கழகக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடந்தது.







# காரைக்குடியில் கவியரசர் கண்ணதாசன் 68-வது பிறந்தநாள் விழா

கவியரசர் கண்ணதாசன் அவர்களது 68-வது பிறந்தநாள், மாநில அளவிலான விழா 2.7.95 அன்று காலை 10 மணி முதல் இரவு 10 மணிவரை, தமிழ்நாடு அரசின் சார்பில், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் காரைக்குடியில் உள்ள கவியரசர் கண்ணதாசன் மணிமண்டப வளாகத்தில் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப் பட்டது.

**கலை நிகழ்ச்சியும், கவியரங்கமும்!**

பள்ளி மாணவ, மாணவி யரின் கலை நிகழ்ச்சிகள் நடை பெற்றன. கலைநிகழ்ச்சியைப் பொதுமக்கள் மிகவும் ரசித்தனர். மருதுபாண்டியர் போக்கு வரத்துக்கழக மேலாண்மை இயக்குநர், திரு.ஆர்.முத்துச்குமார சாமி அவர்கள் வரவேற்புரை யாற்றினார்.

அடுத்து நடந்த கவியரங்கம் நிகழ்ச்சிக்குக் கவிஞர் மீனவன் அவர்கள் தலைமை தாங்கினார். 'குடும்பம்' என்னும் தலைப்பில் கவிஞர் திரு கஸ்தூரிநாதனும், 'வீரம்' என்னும் தலைப்பில் கவிஞர் திரு குறள்பித்தனும், 'பக்தி' என்னும் தலைப்பில் கவிஞர் சங்கரநாராயணனும், 'காதல் என்னும் தலைப்பில் கவிஞர் திரு அப்துல்வாஹித் அவர்களும் கவிதை மழை பொழிந்தனர். காரைக்குடி நகராட்சி ஆணையர் திரு ஆ. பத்மநாபன் அவர்கள் நன்றி கூறினார்.

அன்று மாலை சிங்கம்புணரி தங்கராஜ் குழுவினரின் கிராமியக்கலை நிகழ்ச்சிகள் நடந்தன. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் திரு மோ.பெ. ஜவகர்லால் அவர்கள் தொடக்க உரையாற்ற, மாவட்ட ஆட்சி யரின் நேர்முக உதவியாளர் திரு பாண்டியன் அவர்கள் நன்றி கூறினார்.

**பட்டிமண்டபம்**

பிறகு பட்டிமண்டபம் நடைபெற்றது. மத்திய வங்கியின்

மேலாண்மை இயக்குநர் திரு இராசேந்திரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். கவியரசரின் பாடல்களில் விஞ்சி நிற்பது 'இன்பச்சுவையா? தத்துவநெறியா?' என்னும் தலைப்பில் நடந்த பட்டிமண்டபத்தில், மக்கள் கவிஞர் திரு அருநாகப்பன் அவர்கள் நடுவராக இருந்தார். 'இன்பச்சுவையே!, என்ற தலைப்பில் திரு சாதுசாரங்கபாணி, பேராசிரியர் திருமாவளவன் ஆகியோரும்,



'தத்துவநெறியே' என்ற தலைபபில் திருமதி. நா. சரசுவதி, பேராசிரியர் அழகு பன்னீர் செல்வம், பேராசிரியர் திரு நீலம் மதுமயன் ஆகியோர் வாதிட்டனர். காரைக்குடி வட்டாட்சியர் திரு சர்தார் அவர்கள் நன்றி கூறினார்.

**சிறப்புக் கூட்டம்**

அன்று மாலை சிறப்புக் கூட்டம் தொடங்கியது. பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ப. சிவக்குமார், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாத் தொடக்க உரையை, செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் நிகழ்த்தினார். காரைக்குடி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திருமதி கற்பகம் இளங்கோ அவர்கள் முன்னிலை உரையாற்றினார்.

**கண்ணதாசன் ஒரு கார்த்திகைத் தீபம்!**

மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள், விழாத் தலைமை ஏற்று கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கிப் பேசும்போது, "சிறுகூடல்பட்டியில் பிறந்த மகாகவி கண்ணதாசன் மக்களுக்காக மக்கள் ஏற்றுக்கொள்கிற கருத்தை நாட்டு மக்களுக்காகத் தந்தவர். கண்ணதாசன் மெட்டுக்கும் பாட்டு எழுதினார். இவருடைய பாட்டிற்கும் மெட்டுப் போடப்பட்டது. கண்ணதாசனின் காலத்தில் திரைப்படப் பாடல்கள் பல்லக்கில் பவனி வந்தன. இசை ஏவல் செய்தது. பாரதியாரின் பாடல்களில் ஈரஓசை வெளிப்படும். பாரதிதாசனின் பாடலில் இடியோசை முழங்கும். கண்ணதாசனின் பாடலில் இவை அனைத்தும் வரும்" என்று கூறினார்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் கவியரசர் கண்ணதாசன் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்து, ரூ.10 இலட்சம் மதிப்பில் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். அவர் தமது விழாப் பேருரையில், "கவியரசர் கண்ணதாசன் பிறந்த ஊரான சிறுகூடல்பட்டி என்னுடைய சட்டமன்றத் தொகுதியான திருப்பத்தூரில் உள்ளது. காலத்தால்அழியாத கவிஞன் நிரந்தரக் கவிஞன். எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் கவிதை பாடியவன். இதனால் தான் நிரந்தரக் கவிஞனான கண்ணதாசனுக்கு நம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விழா எடுத்திருக்கிறார். சிலர் கண்ணதாசனின் நண்பர் எனக்கூறி 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்றார்கள். ஆனால், அவர்கள் எல்லாம் அவ்வாறு நடந்துகாட்டவில்லை. ஆனால், இன்று சென்னையில் முக்கிய இடத்தில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கண்ணதாசனுக்கு வெண்கலச் சிலை அமைத்துள்ளார்" எனப் பேசினார்.

கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபத்தில் ரூ.14 ஆயிரம் மதிப்பில் ஏற்பாடு செய்துள்ள ஒலி அமைப்பை மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்கள் தொடங்கிவைத்து விழாச் சிறப்புரை ஆற்றினார்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள், திரு கரு. முருகானந்தம், திரு மா.சா.மா. இராமச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

**– ரெ. இராவணன்,**
செய்தி-மக்கள் தொடர்பு
அலுவலர்,
சிவகங்கை.



## கவியரசு கண்ணதாசன்

**புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அடிச்சுவட்டில் இன்று எத்தனையோ கவிஞர்கள் மக்களிடையே எழுச்சி முரசு கொட்டி வருகிறார்கள். இலட்சிய கீதம் இசைத்து வருகிறார்கள்.**

**படத்துறை மூலமாகவும் மக்கள் மனத்திலே இடம் பிடித்துக்கொண்டு, சீரிய கருத்துக்களால் செல்வாக்குப் பெற்றுவரும் கவிஞர்களையும் காண்கிறோம். அவர்களால் தமிழுக்குத் தனி வலிவு, தனிப் பொலிவு ஏற்படுகிறது என்பதையும் நாம் மறுப்பதற்கு இல்லை. உடுமலை நாராயண கவி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருதகாசி, கண்ணதாசன் முதலானோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.**

**இந்த நேரத்தில் கண்ணதாசனின் கவிதைத் திறனைப் பாராட்ட மறந்தால், நான் தமிழ் மொழியையே அறியாதவன் ஆகிவிடுவேன்.**

**கவிதைத் துறையில் அவருக்குத் தனி இடம் உண்டு**

**- பேரறிஞர் அண்ணா**

# தமிழில் மருத்துவம்

**டாக்டர் பி.பி. ராஜன்**
**துணை வேந்தர்**
**டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம்**

இன்று தமிழ்ச் சரித்திரத்தில் ஒரு பொன்னான தினமாக நாம் கருதவேண்டும். தமிழர்கள் தஞ்சைத் தரணியில் கூடி, தமிழுக்காக விழா எடுத்துக்கொண்டு இருக்கும் இந்த நேரத்தில், இந்த நன்னாளில், தமிழுக்காகத் தொண்டு செய்து வரும் ஒவ்வொருவரையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். சிவனடியாருக்கு ஒருவர் செய்யும் தொண்டு சிவனுக்கே போய்ச் சேருவது போல் தமிழ்த் தொண்டர் ஒருவருக்கு நாம் செய்யும் பணி தமிழன்னைக்கே போய்ச் சேரும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

இன்று தமிழக முதல்வர் மூலமாக நாம் தமிழன்னையையே நேரில் காண்கிறோம் என்றால் அது மிகையாகாது. இன்று நடக்கும் இந்த விழா சரித்திரத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். ஏனென்றால், இதுவரை கொடுக்காத முக்கியத்துவம் இந்த ஆண்டு தற்போது தமிழுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அறிவியலால்தான் அறிவு வளரும்; அறிவியலால்தான் அறிவு என்ற சொல்லே உண்டாகி இருக்கிறது. நாம் அறிவியலை வளர்த்தால் மக்கள் அறிவு தானாகவே வளரும் என்பதில் ஐயமில்லை. எங்கு பார்த்தாலும் இன்று அறிவியலைப் பற்றிப் பேசப்படுகிறது.

இந்த மாநாட்டில்தான் முதன் முதலாக அறிவியலுக்காகச் சிறப்பு மலருடன் - அறிவியல் மலர் ஒன்றும் வெளியிடப்படுகிறது. அறிவியல் அறிந்த ஆன்றோர் ஒவ்வொருவரும் இதற்காக முதல்வர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அறிவியல் மலரையும், அறிவியல் மலருக்காக நாம் செய்துவரும் தொண்டுகள் அனைத்தையும் தமிழன்னையின் பொற்பாதங்களில் வைத்து மலராகச் சமர்ப்பிக்க முற்படுகிறோம்.

எத்தனையோ இடைஞ்சல்கள் வந்தாலும் தமிழ் மாநாட்டை நடத்தியே தீர வேண்டும் என்ற மன உறுதியோடு செயல்பட்டு - அறிவியலுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அவர்களைச் சார்ந்த அனைவருக்கும் நம் சமுதாயம் - அறிவியல் சமுதாயம் என்றென்றைக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

அறிவியலை நாம் தீவிரப்படுத்த முற்படுகிறோம். ஆனால் எப்படித் தீவிரப்படுத்துவது, எங்கு போனாலும் அறிவியல், குறிப்பாக மருத்துவ அறிவியலைப் பற்றி நாம் பேசும்போது, மருத்துவத்துறையில், எங்கள் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் இதற்காக ஒரு தனிக் குழுவை வைத்திருக்கிறோம். 'மருத்துவ மேம்பாடு தமிழ் மேம்பாட்டுக் குழு' என்று வைத்திருக்கிறோம்.

நாம் எப்படி மருத்துவத்தில் தமிழை வளர்ப்பது? அறிவை எப்படிப் புகுத்துவது, அறிவை எப்படிக் கொண்டுவருவது என்றால், அதிலும் தீர்மானமாக ஒரு முடிவை எடுக்க முடியவில்லை.

நாம் சாதாரணமாக மருத்துவத்தை எடுத்துக்கொண்டோமானால், கிராமத்துக்கு ஒரு மருத்துவர் போய் அங்கு தமிழிலேயே பேசி, அந்த மருத்துவத்தைப் பற்றிச் சொல்லி விளக்கி அவர்களுக்கு அதைக் கூறி அந்த மருந்து எப்படி வேலை செய்கிறது என்று சொன்னால், வியாதி சீக்கிரமாகவே குணமாகிவிடும். அதை விட்டுவிட்டு, அவர்களிடம் போய் ஆங்கிலத்தில் சொன்னால், அவர்களுக்கு ஆங்கிலமும் புரியாது. அவர்கள் சொல்லுவதில் என்ன இருக்கிறது என்றும் புரியாது.

அறிவியலில் ஏன் தமிழ் வேண்டும்? தமிழன் மற்ற மொழியில் பேசும்பொழுது ஒரு கடமைக்காகப் பேசவேண்டியிருக்கிறது. தமிழில் ஒரு தமிழன் மருத்துவத்தைப் படிக்கும்போது, அவன் தேர்வு எழுதும்போது, முதலாவதாக மருத்துவத்தைப் புரிந்து கொள்வதற்காக முன்னால் அந்த வேறு அந்நிய பாஷையைப் படித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதை முதலில் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அதைப் படித்துக் கொண்டே - அதற்குப் பிறகு சிந்தனை செய்து அதைத் தமிழில் மாற்றி, மறுபடி அதை ஆங்கிலத்தில் மாற்றி, அதற்குப் பிறகுதான் எழுத வேண்டிய நிலை உருவாகிறது.

நான் கூட எங்கள் பல்கலைக் கழகம் மூலம் ஒரு புத்தகம் வெளியிட்டேன். 'எய்ட்ஸ்' என்பதைப் பற்றி. எய்ட்ஸ் என்றால் என்ன? என்று தெரியும். பத்திரிகைகளில் வருகிறது. இதை மக்களுக்குப் புரியவைக்க வேண்டும். பல்கலைக் கழகம் தேர்வு மட்டும் நடத்திக் கொண்டிருக்கக் கூடாது. மருத்துவத்தைப் பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்றுதான் எளிய முறையில் அதை எழுதி வெளியிட்டோம். ஆங்கிலத்தில் எய்ட்ஸ் என்று தலைப்புக் கொடுத்தோம்.

> ★ **நம் மனம் ஒரு மியூசியம் போல இருக்கிறது. எது கொள்ளத் தக்கதோ, அதை ஏற்றுக் கொள்ளுங்கள். எது தள்ளத் தக்கதோ, அதைத் தள்ளி விடுங்கள்.**
>
> **- பேரறிஞர் அண்ணா**

இதைத் தமிழாக்கம் செய்து, தமிழிலே இதற்கு என்ன தலைப்புப் போடுவது என்று ஆராய்ந்தோம். ஒரு மணி நேர ஆராய்ச்சிக்குப் பிறகும் அதற்குச் சரியான தமிழ்ப் பதம் கிடைக்கவில்லை. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில்.. தொலைபேசி மூலம் பேசி, இதற்கு என்ன தமிழாக்கம் கொடுக்கலாம் என்று கேட்டோம். அப்போது பதில் வந்தது - ஏமக் குறைவு நோய் அல்லது ஏம இழப்பு நோய் என்று போடலாம் என்று சொன்னார்கள்.

உடனே சிலரைக் கூப்பிட்டு 'ஏம இழப்பு நோய்' பற்றித் தெரியுமா என்று கேட்டோம். தெரியவில்லை. அப்படி ஒரு நோய் இருப்பதாகவே தெரியாது என்றனர். எய்ட்ஸ் தெரியுமா என்று கேட்டால் தெரியும் என்றார்கள். எல்லோருக்கும் எய்ட்ஸ் என்றால் தெரியும்.

இதற்கு நடுவில் மற்றொரு குழப்பம் - இது ஏம இழப்பு நோயா? அல்லது ஏமக்குறைவு நோயா? எய்ட்ஸ் நோயை எய்ட்ஸ் என்பது 'அக்யுர்டு யுமினிட்டி சின்ட்ரோம் எபிஸியன்ஸி சின்ட்ரோம்' என்று சொல்கிறோம். அப்படியென்றால் இது ஏம இழப்பு நோய் இல்லை ஏமக் குறைவு நோய் என முடிவெடுத்து, கடைசியாக அதை ஏமக் குறைவு நோய் என்றே புத்தகத் தலைப்பாகப் போட்டோம். முடிவில், இதெல்லாம் வேண்டாம் என்று முடிவு செய்து, எல்லோருக்கும் புரியும் என முடிவெடுத்து எய்ட்ஸ் என்றே போட்டு முடித்து விட்டோம். இதுதான் மருத்துவத்தில் நாம் தமிழைப் புகுத்தும் போது எங்களுக்குள்ள சிரமம்.

இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பில் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஏனென்றால், மருத்துவ நூல்களை மருத்துவர்கள்தான் மொழிபெயர்க்க வேண்டும். இதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன்.

ஒரு சமயம் ஒரு நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்போது ஒரு வாசகம் Government has got a great role to play என்று வந்தது. இதைத் தமிழாக்கம் செய்யும்போது 'அரசு விளையாடுவதற்காக ஒரு பெரிய உருளை வைத்திருக்கிறது' என்று மொழிபெயர்ப்பார்கள். அது எப்படிச் சரியாகும்? ஆகையினால், ஆங்கிலத்தில் உள்ளதைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது, குறிப்பாக இந்த மருத்துவத்தில் ஆங்கிலத்தில் நூல்கள் இருந்து அதை மொழிபெயர்க்கிறபோது முதலில் அந்த மருத்துவர்கள் அதைப்புரிந்து கொண்டாக வேண்டும்.

'மருந்தென வேண்டாவாம்
யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி யுணின்'

- என்றார் திருவள்ளுவர்.

மருத்துவம் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி அந்தக் காலத்தில் நம்முடைய சித்தர்கள் சொல்லாத மருத்துவ முறையே கிடையாது. ஏராள மான மருத்துவ முறைகள், மருந்துகள் எப்படி செய்வது என்பதைப் பற்றியும், அந்த மருந்துப் பொருள்களில் என்ன குறைகள் இருக்கிறது என்பதைப் பற்றியும் அந்தச் சித்தர்கள், தெளிவாகச் சொல்லி இருக் கிறார்கள். காலத்தால் மறைந்தது போக, வழிவழி வந்த சித்த மருத்துவ முறைகள் சுவடிகளில் இருக்கின்றன. எஞ்சிய சில சுவடிகளை நாம் பார்க்கிறோம். அன்னிய ஆதிக்கத்தில் - படை யெடுப்புகளினால், அந்த மருத் துவ முறைகள் ஓரளவுக்கு இன்று சீர்குலைந்து குறைந்து இருக்கிறது.

தாய்மொழியில் மருத்துவக் கல்வி கற்பதை ஒரு பாடமாகக் கொண்டு வரலாமா என்ற ஒரு சர்ச்சை எழும்பியது. நாம் ஏன் இந்த மருத்துவத் துறையில் மருத்துவ மாணவர்களுக்கு மருத்துவம் சொல்லிக் கொடுக்கும்போது தமிழிலும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாது? ஏன் என்றால் இப்போது வரும் மாணவர்கள் - மருத்துவக் கல் லூரியில் சேர வரும் மாண வர்கள் அதிகமாகத் தமிழிலேயே பாடங்களைப் படித்துவிட்டு வருகிறார்கள். முதலாவதாக இந்த அனாடமி, பிசியாலாஜி ஆங்கிலத்தில் இருக்கும்போது அவர்களுக்கு அந்த ஆங்கிலப் பாடத்தில் சரியாகப் புரிவ தில்லை. ஆனால் இதை முழுமை யாகத் தமிழிலேயே பாடம் சொல்லிக் கொடுப்பதிலும் சில சிக்கல்கள் இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் தமிழி லேயே மருத்துவம் சொல்லிக் கொடுக்கிறார்கள். பட்டமும் கொடுக்கிறார்கள். ஆனால் நமது மருத்துவக் கல்லூரி மாண வர்கள் இந்திய நாட்டில் - பல நாடுகளிலிருந்து வந்திருக் கிறார்கள். பல மொழியையும் படித்து வந்திருக்கிறார்கள். துணை மொழியாக ஆங்கிலத் தில் படித்து முடித்தவுடன் மாலை நேரங்களில் அதை எளிய தமிழில் மொழிபெயர்த்து நாம் அதைச் சொல்லிக் கொடுப்பேமேயானால், அவர் களுக்கு அது நன்றாக விளங்கு கிறது. இதற்காக ஒரு ஊக்கத் தொகையைக் கொடுக்க வேண் டும். சில கல்லூரிகள் இதற்காக அந்தக் கல்லூரி முதல்வர் மூலமாக அவர்களில் யார் யார் தமிழில் படிக்க விரும்புகிறார் களோ, ஆசிரியர்களில் யார் யார் தமிழில் சொல்லிக் கொடுக்க விரும்புகிறார்களோ, ஆசிரியர்களுக்கும் ஊக்கத் தொகை கொடுத்து அந்த மாணவர்களுக்கும் அதை எளி தில் சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம்.

இது அறிவியல் தமிழ் மருத்துவத்தில் சீக்கிரமாக வளர உதவும். தவிர, இந்தத் தமிழி லேயே மருத்துவம் படித்து வருபவர்கள் பிற நாடுகளுக்குப் போக வேண்டாம் என்று சொல்லி, பிற மாநிலத்திற்குப் போக வேண்டுமென்றால் ஆங்கிலத்தில் படித்துக் கொண்டு அதற்குப் பிறகு போகலாம்.

ஜெர்மன் நாட்டில் ஜெர்மன் மொழியில்தான் மருத்துவம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஜப்பான் நாட்டில் ஜப்பான் மொழியில்தான் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அதனால் ஜப்பான் டாக்டர்கள் வெளி நாட்டிற்குப் போகாமல் இல்லை. ஜெர்மனி டாக்டர்கள் வெளி நாட்டிற்குப் போகாமல் இல்லை. அதே நிலையைத்தான் நாமும் உருவாக்க முற்பட வேண்டும். தவிர, தமிழில் மருத்துவம் படித்தவர்கள் தமிழ்நாட்டிலேயே இருக்கவேண்டும் என்று சொன் னால்,கிராமங்களுக்கு டாக்டர்கள் போவது இல்லை என்று சொல்கிறோம். ஓரளவுக்கு அது தவிர்க்கப்படும்.

ஏனென்றால், இவர் தமிழி லேயே மட்டும் மருத்துவப் படிப்பு படித்தால் அவர்கள் அந்தக் கிராமங்களில் போய் இருக்கும்போது அவர்களுக்கு - அவர்கள் தமிழிலே வைத்தியம் செய்யும்போது, மற்ற மாநிலங் களுக்கோ மற்ற ஊர்களுக்கோ போய்ச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

ஆகவே, இந்த அறிவியல் தமிழினை மருத்துவத்திலும் வளர்க்க வேண்டும். மற்ற துறை யைப் பற்றிப் பேசுவதற்கு நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனால், குறிப்பாகப் பண்டைக் காலந்தொட்டு தமிழில் மருத்து வம் வளர்ந்து வருவதைப் போல் நாம் அதற்கு ஒரு முன்னோடி யாக இருந்து இப்பொழுது அதற்கு என்னென்ன தொண்டு செய்ய வேண்டுமென்று ஆராய்ந்து நாம் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927




தூய
பட்டு

தூய
சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.




Licence No.TN/MS(C)/PP-23



செல்வியர் பிரியா சகோதரிகள் - இன்னிசை

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர்!

கலை நிகழ்ச்சிகளில் சில....

டாக்டர் விஜயலட்சுமி நவநீத கிருஷ்ணன் - கிராமியப் பாடல்கள்



# இந்த இதழில்...


இலண்டன் பல்கலைக் கழகத்தில் திருவள்ளுவர் திருவுருவச் சிலை
–மாண்புமிகு முதல்வர் உதவி ................ 2

தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரித் தொடக்க விழா
–மாண்புமிகு முதல்வர் உரை ................ 3

'நாட்டாமை' திரைப்பட வெற்றி விழாவில் ...
–மாண்புமிகு முதல்வர் உரை ................ 9

பர்கூர் தொகுதி மக்களுக்கு
–மாண்புமிகு முதல்வர் உதவி ................ 13

திருச்சி மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்படும் ................ 15

21-ஆம் நூற்றாண்டும் கலைகளும்!
–மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் ................ 17

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில், மாநில அளவில் காயிதே மில்லத் பிறந்தநாள் நூற்றாண்டு விழா ................ 24

கலையாத கலை எங்கள் கலையே!
–டாக்டர் பத்மாசுப்பிரமணியம் ................ 27

நூல் நயம் ................ 33

இலக்கியத்தில் காதல்!
–புலவர் இளஞ்செழியன் ................ 35

மாணவர் பக்கம் ................ 39

தமிழும் அறிவியலும்
–டாக்டர் வ.செ. குழந்தைசாமி ................ 41




## இதழ்தோறும் ஓர் இனிய குறள்

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும்–
காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து (24)

அறிவு என்னும் கருவியினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கிக் காக்க வல்லவன், மேலான வீட்டிற்கு விதை போன்றவன்.


தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026

ஆடித் திங்கள் : 16

மலர்: 26 இதழ்: 3

1.8.1995

விலை ரூபாய்: 3



# இலண்டன் பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் திருவுருவச் சிலை!

## –மாண்புமிகு முதல்வர் உதவி

இங்கிலாந்து நாட்டிலுள்ள இலண்டன் பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகின்ற கீழை நாடுகள் மற்றும் ஆப்பிரிக்கன் கல்வி மையம் (The School of Oriental and African Studies, University of London) தங்களுடைய வளாகத்தில் உலகப் பொதுமறையாம் திருக்குறளை யாத்த வள்ளுவப் பெருந் தகையின் திருவுருவச் சிலை ஒன்றினை நிறுவ வேண்டுமென்று கருதி, அதற்கான உதவிகளைப் புரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கோரிக்கை ஒன்றினை அனுப்பி வைத்திருந்தது.

'தமிழ் மறையாம்' திருக்குறளின் புகழ் உலகெங்கும் தழைத்தோங்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலும், மேலை நாடுகளிலும் தமிழ்க் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்ற சீரிய எண்ணத்தின் அடிப்படையிலும் அக்கோரிக்கையை உடனடியாக ஏற்றுக் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், வள்ளுவப் பெருந்தகையின் திருவுருவச் சிலையை அமைக்கப் பெற முதலில் 2.75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்கள். அதன்படி 5 அடி 3 அங்குலம் உயரமுள்ள வெண்கலத்திலான திருவள்ளுவரின் திருவுருவச் சிலை ஒன்று தற்போது செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருவுருவச் சிலையானது சுமார் 12 டன் எடையினைக் கொண்டு வெண் கலத்தினால் அமையப் பெற்றுள்ளது. இதற்கான பணிகள் முடிவடைந்து, இந்தத் திருவுருவச் சிலை இலண்டனுக்கு அனுப்பு வதற்காகத் தயாராக உள்ளதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இதனைச் சரக்கு விமானம் மூலம் அனுப்பி வைப்பதற்கு ஏதுவாக 1,00,000 ரூபாய் (ஒரு இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

இதனைக் கொண்டு திருவள்ளுவரின் திருவுருவச் சிலையானது உடனடியாக இங்கிலாந்து நாட்டிலுள்ள இலண்டனுக்கு அனுப்பப்பட்டு, அங்கு இலண்டன் பல்கலைக்கழகத்தில் விரைவில் நிறுவப்பட இருக்கின்றது.





# தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரி

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்

முதல் ஆட்டை சொல்லும் கட்டுரை

சென்னை எழும்பூரில் உள்ள தில்லையாடி வள்ளியம்மை வளாகத்தில் 21.7.95 அன்று தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரியின் தொடக்க விழா நடந்தது. தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரி தொடக்க விழாவுக்கு மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு வெங்கட்சுவாமி அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு விருந் தினராகக் கலந்துகொண்டு தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரி யைத் தொடங்கி வைத்தார். புதியதாக வடிவமைக்கப்பட்டுள்ள திருமணப் பட்டுச் சேலைகளையும் மாண்புமிகு தமிழக முதலவர் அவர்கள் அறிமுகப்படுத்தினார். இந்த விழாவில், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:

"சர்வதேச அளவில் புகழ்பெற்ற கலாச் சார மையமான சென்னையில் அதிக வருமானத்தை ஈட்டக்கூடிய தொழில் நுட்பத்துடன் நாகரீக ஆடைகள் தயாரிக்கும் வகையில் தேசிய ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கப்படுவது மிகவும் பொருத்தமானதும், பாராட்டத் தக்கதும் ஆகும். இதன்மூலம் நாகரீக ஆடைகள் தொழில் நுட்பத்தில் வளர்ந்து வரும் தேவை பூர்த்தியாகி வருகிறது என்பது



உறுதி. இந்தப் பெருமைக்குரிய நிலையத்தைத் திறந்து வைப்பதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்திருக்கும் மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு வெங்கட்சுவாமிக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆடைகள் உலகில் இந்த மையம் சிறந்த நாகரிகக் கல்வியின் மையமாகத் திகழும் என்பது எனது கருத்தாகும்.

"உலகம் முழுவதும் நாகரிக சாம்ராஜ்யத்தில் புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்தியா அதில் விதி விலக்கு அல்ல. தீவிரமான கலாச்சார மாற்றங்கள் எல்லா இடங்களிலும் நிகழ்ந்து வருகின்றன. இந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப, பொதுவாக மக்களிடமும் நாகரீக உணர்வு அதிகரித்துள்ளது.

"டெலிவிஷன் மூலம் காட்டப்படும் வண்ணமயமான கலாச்சாரக் காட்சிகள், மின்னும் நாகரிக அணிவகுப்புகள் ஆகியவை பொழுதுபோக்குக்காக மட்டுமல்ல. திறமை உள்ளவர்கள் நல்ல தொழில் வாய்ப்பினைப் பெறுவதற்கு உறுதியை அளிக்கும் ஒரு புதிய துறையும் ஆகும்.

"பழங்காலத்தில் இருந்த ஆடைகளை விட, தற்போது உள்ள ரசனைக்கு ஏற்றவாறும், தாங்கள் வேலை செய்யும் இடத்துக்குத் தக்கபடியும் உடைகளை அணியும் பழக்கம் ஆண், பெண்களிடையே ஏற்பட்டுள்ளது. இளைஞர்கள் பலர் வடிவமைப்புத் துறையை முழுநேரப் பணியாக ஏற்கத் தொடங்கி இருப்பதாலும், இதற்கு வர்த்தக வளம் இருப்பதாலும் இதுபோன்ற மையம் அமைப்பது மிகவும் அவசியம் ஆகும்.

"மேற்கத்தியக் கல்வி அடிப்படையில் வடிவமைப்புத் துறையில் நல்ல பயிற்சி அளிப்பதன் மூலம், தேசிய வடிவமைப்பு பயிற்சி மையம், தமிழக இளைஞர்களுக்கு அவசியத் தேவையான நவீன வடிவமைப்புத் தொழில்நுட்பத்தை வழங்கும் என்று நம்புகிறேன்.

"இந்திய ஜவுளித்துறையைப் பற்றிச் சில உண்மைகளை இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. இந்தியத் தொழில் கலைஞர்களின் நெசவுத் தொழிலாளர்கள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் அதிக அளவில் சுரண்டப்பட்டு வருகிறார்கள். செயற்கை இழைக்கு வரவேற்பு இருப்பதால் பருத்தி ஜவுளித் தொழில் மிகவும் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறது.

"இந்திய நெசவுத் தொழிலாளர்கள் மிகவும் தரமான துணிகளை நெய்கிறார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அது உலகம் முழுவதிலும் உள்ள சந்தைகளிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இருந்தபோதிலும் நவீன தொழில்நுட்ப உதவியுடன் தயாராகும் துணி உற்பத்திக்கு



எதிராகவும், வளர்ச்சி அடைந்த வெளி நாடுகளில் குறைந்த விலையில் தயாரிக்கப்படும் செயற்கை இழைத் துணிகளுக்கு எதிராகவும் அவர்கள் நம்பிக்கையற்ற நிலையில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

"வெளிநாடுகளில் பருத்தி ஆடைகள் அவர்கள் சூழ்நிலைக்கு ஏற்ப செயற்கை இழைத் துணிகளைவிட உகந்தது என்றாலும், விலையின் அடிப்படையில் பார்க்கும் பொழுது பருத்தி ஆடைகள் வெளிநாட்டுச் சந்தைகளைப் பிடிக்க முடியவில்லை. இதனால் நெசவாளர்கள் வருமான இழப்பு அடைகிறார்கள். இதனால் நாம் மலிவான விலையில் புதிய வடிவமைப்புகளுடன் கூடிய துணிகளைத் தயாரிக்க வேண்டும். இதன்மூலம் கைத்தறி மற்றும் விசைத்தறித் துறைகள் உலகச் சந்தையில் போட்டி போட்டு வளர்ச்சி அடைய முடியும்.

"நம் நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய வடிவமைப்புடன் இந்திய நெசவாளர்களால் தயாரிக்கப்படும் பருத்தி மற்றும் பட்டுச் சேலைகள், இந்தியாவின் புகழை வெளிநாடுகளில் பரப்புவதில் பெரும்பங்கு வகிக்கும் என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. மலைப் பகுதிகளில் வசிக்கும் நமது நெசவாளர்கள், வெளி நாட்டினரை வசீகரிக்கும் வகையில் அபூர்வமான வடிவமைப்புகளை உருவாக்கும் திறம் பெற்றுள்ளனர். அவர்களின் இத்தகைய திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்ள இந்தக் கல்லூரி முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

"கைத்தறி மற்றும் ஜவுளித் துறையின் முன்னேற்றத்திற்காகத் தமிழக அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளை இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் முன்பு வைக்க விரும்புகிறேன். சேமிப்பு பாதுகாப்புத் திட்டங்கள், சிக்கன நிதித் திட்டம் மற்றும் நல்வாழ்வுப் பணிமனைத் திட்டங்களை நெசவாளர் சமூகத்தினருக்கு அறிமுகம் செய்வதில் தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

"நமது நாட்டில் கைத்தறி நெசவாளர் குடும்பப் பென்ஷன் திட்டத்தை அமல் படுத்திய ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். இந்தத் திட்டத்தின்கீழ் நெசவுத் தொழிலாளி மரணம் அடைந்து

## ஊனமுற்ற பெண்ணுக்கு அரசு வேலை

**பிளஸ் 2 தேர்வில் வரலாறு பாடத்தில் மாநிலத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்ற பாளையங்கோட்டையைச் சேர்ந்த செல்வி எல்.எஸ்.மீனாட்சி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் 22.6.1995 அன்று கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் பரிசு பெறும்போது, உடல் ஊனமுற்ற தனக்கு ஏதாவது ஒரு வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தரும்படி கேட்டுக்கொண்டார். அதே விழா மேடையில் அவருக்கு உடனடியாக வேலைவாய்ப்புக்கு ஏற்பாடு செய்து தரும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். அதன்படி, அவருக்கு, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் நிரந்தர வேலைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.**

**கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிய நியமன ஆணையை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அவரிடம் வழங்கினார்கள். செல்வி எல்.எஸ். மீனாட்சி, மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்குத் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.**

# காவலர்களுக்குப் பதவி உயர்வு

**இவ்வாண்டு (1995) நடந்து முடிந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் காவல்துறை மானியத்தின் மீதான விவாதத்தின் இறுதியில், பதிலுரை ஆற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஏற்கெனவே 21,000 இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு, 1992-ஆம் ஆண்டே முதல்நிலைக் காவலர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்ட நிலையில், தற்போது ஆயுதக் காவல் படையிலும், தமிழ்நாடு சிறப்புக் காவல் பிரிவிலும் பணிபுரியும் காவலர்களுக்கு முதல்நிலைக் காவலர் நிலைக்குப் பதவி உயர்வு அளிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். இப்பிரிவுகளில் பணிபுரியும் காவலர்கள் முதல்நிலைக் காவலர்களாகப் பதவி உயர்வு பெற Lance Naik மற்றும் Grade II Naik என்ற இரண்டு நிலைகளைக் கடக்க வேண்டியுள்ளதைக் கருத்தில் கொண்டும், இந்தக் காவலர்களுக்கு ஒரு பதவி உயர்வு மட்டும் அளித்தால் அவர்கள் முதல்நிலைக் காவலர்களுக்குச் சமமான Naik தகுதிக்குப் பதவி உயர்வு பெற முடியவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், இத்தகைய காவலர்களுக்கும் Naik பதவிக்கும் இடைப்பட்ட Lance Naik மற்றும் Grade-டII Naik போன்ற பதவிகள் முற்றிலுமாக நீக்கப்பட்டு, அவர்களுக்கு முதல்நிலைக் காவலருக்குச் சமமான Naik தகுதிக்குப் பதவி உயர்வு வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்கள். இதன்மூலமாக ஆயுதப் படையிலும், தமிழ்நாடு சிறப்புக் காவல் பிரிவிலும் பணிபுரிகின்ற 1,700 காவலர்கள் பயன் அடைவார்கள்.**

விட்டால் அவரது குடும்பத்தினருக்கு மாதம் 250 ரூபாய் வீதம் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்குப் பென்ஷன் தொகையாக வழங்கப்படுகிறது.

தமிழகக் கைத்தறி ஜவுளித் துறை கடந்த 1994-ஆம் ஆண்டிற்கான 3 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது. பட்டு மற்றும் பருத்தி ஆடைகளில் சிறந்த வடிவமைப்புகளை உருவாக்கியதற்காகவும், ஒருங்கிணைந்த பயிற்சித் திட்டத்தின் மூலம் 25 ஆயிரம் பெண் நெசவாளர்கள் தொழில் நுட்பத் திறனை மேம்படுத்தியதற்காகவும் இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் சில ஆண்டுகளில் தமிழகக் கைத்தறி, ஜவுளித்துறை மிகப் பெரிய வளர்ச்சியை அடையும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பரம்பரையாக இந்தத் துறையில் ஈடுபட்டுவரும் நெசவாளர்களுக்குத் தங்களின் கலைப் பொருட்களுக்கு உலகம் முழுவதிலும் நல்ல விலை கிடைப்பதற்கான வழிவகைகளைக் காண, தமிழக அரசு தன்னை உறுதியாக அர்ப்பணித்துக் கொள்ளும்.

"தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரி இங்கு தொடங்கப்பட்டதன் மூலம், பல்வேறு விதமான புதிய டிசைன்களில் துணிகள் மார்க்கெட்டில் விற்பனைக்கு வரும். இதனால், கைத்தறித் துணி வியாபாரம் அமோகமாக நடத்த வாய்ப்பு உள்ளது. மேலும், இங்கு தொடங்கப்பட்டுள்ள இந்தத் தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரி சென்னை அருகே கேளம்பாக்கத்தில் முழு அளவில் செயல்பட ஏற்பாடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தத் தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கப்படும். தமிழக அரசு ஏற்கெனவே இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கி விட்டது. நமது மத்திய அமைச்சர் திரு வெங்கட்சாமியிடம், இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டாம் என்று மேல் பதவியில் உள்ளவர்கள் கோரியுள்ளனர். அப்படி இருந்தும் அதைப் பொருட்படுத்தாமல் அவர் திட்டமிட்டபடி நிகழ்ச்சியில் பங்குபெற்றுக் கவுரவித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்".



## தென்னிந்தியாவில் முதல் முறையாக

# "தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பக் கல்லூரி"

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

**தெ**ன்னிந்தியாவில் முதன் முறையாகத் தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில்நுட்பக் கல்லூரியின் தொடக்க விழா சென்னை எழும்பூரில் உள்ள தில்லையாடி வள்ளியம்மை வளாகத்தில் 21.7.95 அன்று சிறப்புற நடைபெற்றது.

இவ்விழாவில், மத்திய துணித்துறை அமைச்சகச் செயலரும், தேசிய ஆடை வடிவமைப்புக் கல்லூரியின் தலைவருமான திரு டி.எஸ்.ஆர். சுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். பின்பு, மாண்புமிகு சமூகநலம் - கைத்தறித் துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய துணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் பொன்னாடை வழங்கிச் சிறப்பித்தார்.

பின்பு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தேசிய ஆடை வடிவமைப்புக் கல்லூரியைத் தொடங்கி வைத்தார். பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொத்தானை அழுத்தியவுடன், மேடைக்கு எதிரில் வட்ட வடிவ மேடையில் புகை மண்டலம் சூழ, புதிய வடிவமைப்புடன் கூடிய திருமணச் சேலை அணிந்த அலங்காரப் பொம்மையொன்று காட்சி அளித்தது. இக்காட்சி, காண்பவரைக் கவர்ந்தது.

மாண்புமிகு சமூகநலம் - கைத்தறித்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள் பேசும்பொழுது, "இந்தத் தொழில் நுட்பக் கல்லூரியில் இருக்கும் மொத்த இடங்களில் 20 சதவிகிதம் மாநிலத்தில் உள்ள நெசவாளர்கள் பிள்ளைகளுக்கென ஒதுக்கப்படும் என்று கூறினார். பின்பு மாண்புமிகு மத்திய துணித்துறை அமைச்சர் திரு ஜி. வெங்கட்சாமி அவர்கள் பேசும் பொழுது - "தமிழகம் கைத்தறித் துறையிலும் உள்ளாடைகள் உற்பத்தி செய்வதிலும் முன்னணியில் இருந்து வருகிறது. இந்நிலையில் இத்தகைய தொழில் நுட்பக் கல்லூரி ஒன்று சென்னையில் அமைவது மிகவும் பொருத்தமாகும்.

"இக்கல்லூரி அமைவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர்தான் காரணம் என்றும் கடந்த ஆண்டு (1994-95) ஆடைகள் ஏற்றுமதியின் மூலம் 44 கோடியே 30 இலட்சம் ரூபாய் அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது" என்றும் கூறினார்.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உரையாற்றினார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிறந்த முறையில் துணிகளை வடிவமைத்த திரு நந்தகுமார், திரு ஞானமணி, திரு கதிர்வேல், திரு ஹரி, திரு சீனிவாசன், திரு துளசிராம், திருமதி பொன்னம்மாள், தவத்தம் சங்கரய்யா, மிரியாளு சீனிவாசலு போன்ற நெசவாளர்களுக்கு ரொக்கப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கினார். பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், மாண்புமிகு சமூகநலம், கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள், 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு முதல்வர் நிவாரண நிதிக்கென வழங்கினார். மாண்புமிகு மத்திய துணித்துறை அமைச்சர் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார். விழாவின் முடிவில் அரசு தலைமைச் செயலர் திரு என். அரிபாஸ்கர்

இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையாற்ற விழா இனிதே முடிந்தது. இச்சிறப்பான விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

விழா நடைபெற்ற இடத்தின் முகப்பு கோ-ஆப்டெக்ஸ் சின்னமான வண்ணத்துப் பூச்சியின் வடிவம் கொண்டதாக அழகுற அமைக்கப்பட்டு இருந்தது. முன்னதாக மாண்புமிகு முதல்வர் அவர்களை கோ-ஆப்டெக்ஸ் சின்னமான வண்ணத்துப் பூச்சி போன்று வேடமணிந்த பள்ளி சிறுமிகள் வரவேற்று மகிழ்ந்தனர்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
அ. மதிமாறன்

# மொரிஷியஸ் நாட்டில் தமிழ்நாட்டுக் கலை நிகழ்ச்சிகள்

அண்மையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகைபுரிந்த மொரிஷியஸ் நாட்டுக் கல்வி அமைச்சர் திரு ஆறுமுகம் பரசுராமன் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், மொரிஷியஸ் நாட்டிற்குத் தமிழகக் கலைக்குழு ஒன்றினை அனுப்பிவைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்கள். அவரது வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கலைக்குழு ஒன்றினை அனுப்ப ஆணையிட்டார்.

25 பேர் அங்கம் வகிக்கும் அக்குழுவில், தமிழ் வளர்ச்சித்துறைச் செயலாளர் திரு கிருத்துதாசு காந்தி, நாதசுரக் கலைஞர்கள், மதுரை சகோதரர்கள் எம்.பி.என். சேதுராமன் மற்றும் என்.பி.என். பொன்னுசாமி, நடனம், டாக்டர் செல்வி பத்மா சுப்பிரமணியன், வாய்ப்பாட்டு பிரியா சகோதரிகள், புல்லாங்குழல் சிக்கல் சகோதரிகள் முதலியோர் இடம் பெற்றிருந்தனர். 20.7.1995 அன்று புறப்பட்டு சென்று 5 நாட்கள் கலை நிழக்ச்சிகளை மொரிஷியஸ் நாட்டில் நடத்திவிட்டு 26.7.1995 அன்று அந்தக் கலைக்குழு சென்னை திரும்பியது.

மொரிஷியஸில் உள்ள அருள்மிகு சொக்கலிங்கம் மீனாட்சியம்மன் கோவிலில் மொரிஷியஸ் நாட்டுப் பிரதம மந்திரி திரு அனிருத் ஜகநாத் அவர்கள் தலைமையில் அந்நாட்டுக் கல்வி அமைச்சர் திரு ஆறுமுகம் பரசுராமன், பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு ச்தூனி, இந்தியத் தூதர் திரு சியாம் சரண் ஆகியோர் பங்குபெற்ற விழா ஒன்றில் தமிழ்நாட்டுக் கலைக் குழுவின் பரதநாட்டியம், நாதசுரம், புல்லாங்குழல், கர்நாடக வாய்ப்பாட்டு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும் கிராண்ட் பே (Grand Baie) என்ற இடத்தில் நடந்த ஆடிக்கிருத்திகைக் காவடி விழாவிலும், மொரிஷியஸில் உள்ள மகாத்மா காந்தி மையத்திலும், இந்திரா காந்தி மையத்திலும், தமிழ் லீக் நடத்தும் அரங்கத்திலும் கலை நிழக்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

தமிழ்நாட்டிலிருந்து சிறந்த கலைஞர்கள் கொண்ட கலைக் குழு ஒன்றை மொரிஷியஸ் நாட்டிற்கு அனுப்பி இரு நாட்டவர் இடையேயும் கலாச்சார இணைப்பை ஏற்படுத்தியதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு மொரிஷியஸ் நாட்டுக் கல்வி அமைச்சர் திரு ஆறுமுகம் பரசுராமன் தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துள்ளார்.






# "திரைப்படம் என்பது மாபெரும் மக்கள் தொடர்புச் சாதனம்!"

## மாண்புமிகு முதலமைச்சர் உரை

அண்மைக் காலத்தில் நான் பார்த்த தமிழ்ப் படங்களில், 'நாட்டாமை' திரைப்படம்தான் எனக்கு உண்மையான மன நிறைவையும், அக மகிழ்ச்சியையும் அளித்தது. ஏதோ இந்தப் படத்தின் வெற்றி விழாவில் நான் கலந்துகொள்வதால், இதை நான் சொல்லவில்லை. உண்மையாகச் சொல்கிறேன்.

பொதுவாக, எனக்குப் பழைய படங்கள்தான் மிகவும் பிடிக்கும். Late Forties, குறிப்பாக Fifties and Sixties Period-இல் தயாரிக்கப்பட்ட திரைப்படங்கள் என்றால், நான் மிகவும் விரும்பிப் பார்ப்பேன். காரணம் அந்தக் காலங்களில் தயாராகி, வெளிவந்த படங்களில், சண்டைக் காட்சிகள் இருந்தாலும், வயிற்றைக் கலக்கும் பயங்கரமான கற்பனைக்கு எட்டாத வன்முறைச் சம்பவங்கள் இருக்காது. அதேபோல ஆபாசமும், விரசமும் இருக்காது. சமுதாயத்தில், மரபு வழியே, நாம் மதிக்கின்ற நல்ல பண்புகள் – அதாவது Moral Values என்பார்களே, அந்த அடிப்படையில்தான் கதை அமைந்திருக்கும். அதுமட்டுமின்றி, ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும், ஒட்டுமொத்தமாக உட்கார்ந்து ரசிக்கின்ற Wholesome family entertainment தருகின்ற படங்களாகவும் அவை இருந்ததை எவரும் மறுக்க முடியாது.

### வன்முறைக் காட்சிகள்

ஆனால், சமீப காலமாகத் தமிழ்த் திரைப்பட உலகின் தனித் தன்மைகள் மறைந்து, இளைய தலைமுறையினரின் மனங்களைக் கெடுக்கும் வண்ணம், மிகப் பயங்கரமான, அருவருப்பான வன்முறைக் காட்சிகள் அதிகரித்துவிட்டன. ரசிகர்களின் எதிர்பார்ப்பு என்கின்ற போர்வையில்,

மிதமிஞ்சிய வன்முறைக் காட்சிகள் பெருகி வருகின்றன. இத்தகைய மிதமிஞ்சிய வன்முறைக் காட்சிகளைத்தான், இந்தக் காலத்து ரசிகர்கள் விரும்புகிறார்கள் என்ற ஒரு தவறான கருத்து பரப்பப்படுகிறது. ஒரு வேளை வன்முறைக் காட்சிகள் நிறைந்த படங்களைத் தயாரித்து வழங்கும் சமுதாய உணர்வு அற்ற சில வியாபாரிகள், தங்களது செய்கைகளை நியாயப்படுத்துவதற்காக இது போன்ற பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்களோ என்று நான் சந்தேகப் படுவது உண்டு.

***ரசிகர்கள் தவறா?***

வன்முறைக் காட்சிகளும், விரசமான காட்சிகளும் இல்லாமலே, ரசிகர்களின் மனங்களைக் கவர்ந்து, வசூலில் ஒரு புதிய சரித்திரத்தைப் படைத்த 'நாட்டாமை' திரைப்படத்தை நான் பார்த்த போதுதான். எனது சந்தேகம் நிரூபணமானது. ஒருபுறம் மித மிஞ்சிய வன்முறைக் காட்சிகள் நிறைந்த சில படங்கள் நன்றாக ஓடி, வசூலில் சாதனை படைத்துள்ளன. உண்மைதான். ஆனால், அதே காலகட்டத்தில், 'நாட்டாமை' போன்ற ஒரு நல்ல படமும், ஒரு Clean family entertainerம் மக்கள் மத்தியில் பேராதரவைப் பெற்று, வசூலிலும் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது என்பதிலிருந்து, "தவறு ரசிகர்களிடம் இல்லை" என்ற உண்மை வெளிப்பட்டுள்ளது.

கருத்தாழமிக்க கதையுடன், நியாயமான கற்பனையுடன் இணைந்த நிகழ்ச்சிகளைக் கொண்ட திரைப்படமாக இருந்தால், தமிழக ரசிகப் பெருமக்கள் விரும்பி ஏற்றுக் கொள்ள எப்போதும் தயாராக இருக்கிறார்கள் என்ற உண்மையையும், திரைப்பட வெற்றிக்கு வன்முறைக் காட்சிகள்தான் அடிப்படை என்ற எண்ணம் அர்த்தமற்றது என்பதையும், 'நாட்டாமை' படத்தின் மாபெரும் வெற்றி நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

***பழைய படங்களில்***

எனது அரசியல் ஆசான் புரட்சித்தலைவர் டாக்டர் எம்ஜிஆர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோர், தமிழ்த் திரைப்பட உலகில் கொடி கட்டிப் பறந்த காலத்தில், அதாவது 1950-ஆம் ஆண்டுகளிலும், 1960-ஆம் ஆண்டுகளிலும், வெளிவந்த படங்கள், குடும்பத்துடனும் உற்றார் உறவினர் களுடனும் ஒன்றாகச் சேர்ந்து ரசித்துப் பார்க்கும் வண்ணம் அமைந்திருந்தன. அவை Clean and wholesome family entertainmentஆ வழங்கின. நாடோடி மன்னன், எங்க வீட்டுப் பிள்ளை, அன்பே வா, ஆயிரத்தில் ஒருவன், பாசமலர், பாகப் பிரிவினை, பாலும் பழமும் என்று எண்ணற்ற திரைப்படங்களை அந்த வரிசையிலே, என்னால் கூற முடியும். அந்தக் காலகட்டத்தில் மக்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பைப் பெற்று வெற்றி அடைந்த படங்களில் சண்டைக் காட்சிகள் இருக்கும். ஆனால் மிதமிஞ்சிய வன்முறைக் காட்சிகள் அறவே இருக்காது. அந்தப் படங்களில் ஆபாசமும் இருக்காது. விரசமும் இருக்காது.



எனவே, ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து பார்க்க முடிந்தது.

ஆனால், இன்று வரும் சண்டைக் காட்சிகள் எல்லாம் மனதைச் சிதைக்கின்றன. பயங்கரமான வன்முறைக் காட்சிகளாக அமைக்கப்படுகின்றன. அத்துடன் விரசமான காட்சிகளும், சம்பவங்களும் தமிழ்த் திரைப்படங்களை family entertainers என்ற பெருமையை இழக்கச் செய்துவிட்டன. இப்போதெல்லாம் தங்களது குழந்தைகளை நல்ல பிள்ளைகளாக வளர்க்க வேண்டும் என்ற அக்கறை உள்ள பெற்றோர்கள் முதலில் இந்தத் திரைப்படங்களைத் தாங்கள் சென்று பார்த்துவிட்டு, தங்களது குழந்தை களும் இப்படங்களைப் பார்ப்பதற்குத் தகுதியுடையவைதானா என்று பார்த்து முடிவு செய்த பின்னர்தான், குழந்தைகளை அழைத்துச் சென்று படம் பார்க்கின்ற ஒரு சூழ்நிலை இன்று ஏற்பட்டுள்ளது என்பதை, எவரும் மறுக்க முடியாது. இத்தகைய ஒரு சூழ்நிலை தொடர்ந்தால், இந்தச் சமுதாயத்தின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு இது உகந்ததாக இருக்குமா என்ற அச்சம் என் மனதில் ஏற்பட்டது.

***மனம் விட்டு ரசிக்க முடியவில்லை!***

அண்மைக் காலத்தில் வெளிவந்த சில படங்களை, என்னால் மனம் விட்டு ரசிக்க முடியவில்லை. ஏன்? சில படங்களில் வன்முறைக் காட்சிகளைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. மனிதாபிமானம் அற்ற வன்முறைச் சம்பவங்கள் காட்சிக்குக் காட்சி வருவதோடு, கத்தியை எடுத்துக் குத்துவதும், வாளை எடுத்து வெட்டுவதும், ரத்தம் ஆறாக ஓடுவதும் பலவிதமான துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு சரமாரியாகச் சுடுவதும், வெடிகுண்டுகளை எடுத்து வீசுவதும், மோசமான முறையிலும், கேவலமான முறையிலும் மனிதர்களைச் சித்திரிப்பதும், ஈவிரக்கம் இல்லாத முறையில், சித்திரவதை செய்வதைக் காட்டுவதும், தமிழ்த் திரைப் படங்களில் சாதாரணமாகிவிட்டன.

தமிழ்ச் சமுதாயத்தின் கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற்கும், ஊறு விளைவிக்கும் இத்தகைய படங்கள் எப்படி வெற்றி பெறுகின்றன என்று நான் ஆராய்ந்து பார்த்தேன். இத்தகைய வெற்றிக்கு யார் காரணம்? நிச்சயமாகத் தாய்மார்கள் அல்ல. அறிவு முதிர்ச்சி பெற்றுள்ள ஆண் மக்களும் அல்ல. வயது முதிர்ந்த ஆண் மக்களும் அல்ல. இளைய தலைமுறையினர்–குறிப்பாக ஆண் பிள்ளைகள்தான் இத்தகைய படங்களை, மிக அதிகமான அளவில் கண்டுகளிக்கிறார்கள் என்பதும், அவர்கள்தான் அத்தகைய படங்களை வெற்றிபெறச் செய்கிறார்கள் என்பதும் தெளிவாகிறது.

## சுற்றுலா

1994-ஆம் ஆண்டில் 19 இலட்சம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருகை புரிந்துள்ளனர். அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது இரண்டு சதவிகிதம் அதிகம். 1995 ஜனவரி முதல் மே மாதம் வரை எட்டு இலட்சத்து 44 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வந்துள்ளனர். 1994-ஆம் ஆண்டில் இதே காலத்துடன் ஒப்பிடுகையில் இது 3.6 சதவிகிதம் அதிகம். 1995-ன் முதல் ஐந்து மாதங்களில் ரூ.3,232 கோடி அன்னியச் செலாவணி கிடைத்தது. அதற்கு முந்தைய ஆண்டைவிட இது 10.2 சதவிகிதம் அதிகம்.





ஆதிதிராவிடர் மேம்பாட்டு மேல்நிலைக் கண்காணிப்புக் குழுவின் நான்காவது கூட்டம், சென்னைத் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எம். ஆனந்தன், தலைமைச் செயலர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர். (20.7.95)

**மக்கள் தொடர்புச் சாதனம்**

சினிமா என்பது ஒரு சக்திவாய்ந்த மக்கள் மனதில் ஆழமாக ஆதிக்கம் செலுத்தக்கூடிய ஒரு மாபெரும் மக்கள் தொடர்புச் சாதனம் என்பதை எவரும் மறுக்க முடியாது. சமுதாயத்தில் நிலவி வந்த, சில கொடுமைகளை மாற்றி அமைத்து, நல்ல மாறுதல்களுக்கு வழிகாட்டிய, திரைப் படங்களைத் தயாரித்து வழங்கியதும், இதே திரைப்பட உலகம்தான் என்பதை எவரும் மறந்துவிட முடியாது. இசையிலும், பாடல்களிலும் மக்கள் மனதை மாற்றி, திருப்பி நல்வழிப்படுத்திய பெருமையும், நம் திரைப்படங்களுக்கு உண்டு. நல்ல கருத்துக் களை மக்களுக்கு வழங்கி, மாபெரும் சமுதாய மாற்றங்களுக்கு வழி வகுத்த பெருமை படைத்த சாதனம் திரைப்படம். வெறும் பணம் சம்பாதிக்கும் சாதனமாகப் பயன்படுத்தி, எத்தகைய மோசமான வன்முறைக் காட்சிகளாக இருந்தாலும், அவற்றைக் காட்டி அதன்மூலம் லாபம் சம்பாதிக்கச் சிலர் முயலுவது, விரும்பத்தக்க முன்னேற்றம் அல்ல. இதில் நான் இவ்வளவு கவலை கொள்வதற்கு இன்னொரு முக் கியமான காரணமும் உண்டு. திரைப்படங் களைக் காண்போர்களின் எண்ணிக்கையும், காணுகின்ற வாய்ப்புகளும் இன்றைய சூழ்நிலையில் அதிகரித்துள்ளது என்பதே, எனது கவலைக்குக் காரணம் ஆகும்.

**(சென்னை கலைவாணர் அரங்கத்தில், 27.7.95-இல் நடைபெற்ற 'நாட்டாமை' திரைப்பட விழாவில் பேசியதிலிருந்து)**





# பர்கூர் தொகுதி மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி!

**பி**ன்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தில் பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அந்தத் தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டு அவற்றைக் களையவேண்டும் என்பதற்காக, பர்கூர் நகரில் தொகுதி அலுவலகம் ஒன்றைத் தொடங்கி மனுக் களைப் பெற்று வருகிறார்கள்.

இந்த அலுவலகத்தில் பெறப்படும் அனைத்து மனுக்களையும் தனது நேரடிப் பார்வையில் பரிசீலனை செய்து, அரசுத் துறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய மனுக்களைப் பல்வேறு அரசுத் துறையின் பிரிவுகளுக்கு மேல்நடவடிக்கைக்கு அனுப்பிவைத்து, அரசின் சார்பிலான உதவிகளைப் பெற்றுத் தருகிறார்கள்.

எஞ்சியுள்ள மனுக்களில், அரசு உதவிகள் கிடைக்க இயலாத வண்ணம் உள்ள மனுக்களைத் தேர்ந்தெடுத்து, அந்த மனுதாரர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தனது சொந்த நிதியிலிருந்து, பொருட்களை



# மக்கள் சக்தியே மகாசக்தி!



தமிழக அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் வழிவந்த மக்கள் அரசு. இதுவரை ஆட்சி செய்தவர்களைப் போல, பழங்கதை பேசாமல் மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட, ஆழ்ந்து சிந்தித்து, ஆய்ந்து அறிந்து, திட்டங்களைத் தீட்டுகின்ற அரசாகத் திகழ்கிறது எங்கள் அரசு. அந்தத் திட்டங்கள்தான், இன்று செயல்வடிவம் பெற்று, சாதனைகளாக மலர்ந்துள்ளன.

இந்தத் திட்டங்கள் அனைத்துமே, மக்களின் நல்வாழ்வினைத், தங்களது நியாயமான மைய நோக்கமாகக் கொண்டவை. பொதுமக்களின் எல்லா வாழ்வு நிலைகளையும், அம்சங்களையும், குறைபாடுகளையும் சரி செய்து, அவர்களை மேம்படுத்துவதற்காக, எங்கள் அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளும், அடைந்த சாதனைகளும், எண்ணில் அடங்கா என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

மகளிர் உட்பட வேலைவாய்ப்பற்றோருக்கு, சுய வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்தோம். எழுத்தறிவில்லாதவர்களுக்கு, அறிவொளி இயக்கத்தின் மூலம் அறிவூட்டினோம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், தன்னிறைவு அடையச் செய்தோம். நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம், நகர்ப்புறங்கள் அடிப்படை வசதிகளைப் பெறச் செய்தோம். தற்போது, தொழில் வளர்ச்சி காண்பதன் மூலம், பொருளாதார முன்னேற்றத்தின் முதற் கட்டத்தைத் தாண்டி உள்ளோம்.

மக்கள் சக்தி என்ன என்பது, புரட்சித் தலைவருக்கும் எனக்கும், மற்றவர்களைவிட மிக நன்றாகவே தெரியும். அந்த மகாசக்தி தான் எனக்குப் பேராதரவாய், பக்க பலமாய், ஊக்கப் பொருளாய் இருக்கின்றது, என்பதை எண்ணும்போது, பெருமிதமும், பூரிப்பும் அடைகின்றேன்.

—புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-2-லிருந்து

---

வாங்கவும், நிதியாக வழங்கியும் வருகின்றார்கள். இதுவரை 1,088 நபர்களுக்கு இத்தகைய உதவிகள் பொருட்களாகவும், நிதி உதவிகளாகவும் வழங்கப்பட்டுள்ளன.

24.7.95 அன்று, மேலும் 163 நபர்களை, தனது இல்லத்திற்கு வரவழைத்து, தனது சொந்தச் செலவிலிருந்து பொது நிதி உதவி கோரிய 72 நபர்களுக்கும், பெட்டிக்கடை வைக்க நிதி உதவி கோரிய 26 நபர்களுக்கும், காய்கறிக்கடை வைக்க, நிதி உதவி கோரிய 2 நபர்களுக்கும், ஆடுகள் வாங்க நிதி உதவிகோரிய 12 நபர்களுக்கும், மளிகைக் கடை வைக்க நிதி உதவி கோரிய 3 நபர் களுக்கும், நிதி உதவியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் வழங்கினார்.

மேலும், திருமணம் செய்வதற்காக 7 நபர்களுக்கும், மருத்துவச் சிகிச்சைக்காக 6 நபர்களுக்கும் நிதி உதவியினை வழங்கினார்.

இவை மட்டுமின்றி, கறவை மாடு கோரிய 9 நபர்களுக்குக் கன்றுடன் கூடிய உயர்ந்த ரகக் கறவை மாடுகள் தலா ஒவ்வொன்றும், மாட்டு வண்டி கோரிய 8 நபர்களுக்கு உயர்ந்த ரகக் காளை மாடுகளுடன் கூடிய இரட்டை மாட்டு டயர் வண்டி தலா ஒவ்வொன்றும், தையல் இயந்திரம் கோரிய 3 நபர்களுக்குத் தலா ஒரு தையல் இயந்திரமும், சலவைப் பெட்டி கோரிய 2 நபர்களுக்குத் தலா ஒரு சலவைப் பெட்டியும் வழங்கினார்.

மேலும், கட்பீஸ் கடை வைக்க 2 நபர் களுக்கும், டீ கடை வைக்க 2 நபர்களுக்கும், நடமாடும் இஸ்திரிக் கடை வைக்க ஒரு நபருக்கும், சிற்றுண்டிக் கடை வைக்க ஒரு நபருக்கும், பேக்கரிக் கடை வைக்க 3 நபர்களுக்கும், நிதி உதவியினை வழங்கி, 4 நபர்களுக்குச் சைக்கிள் கடை வைக்க தலா 6 சைக்கிள்களும், கடை வைக்கத் தேவையான இதர உபகரணங்களையும் வழங்கினார்.






# திருச்சி மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்படும்!

## 1. திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம்

## 2. கரூர் தீரன் சின்னமலை கவுண்டர் மாவட்டம்

## 3. பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம்

திருச்சி மாவட்டம் பெரிய மாவட்டமாக இருப்பதால், நிர்வாக வசதிக்காகப் பிரிப்பது என்று தமிழக அரசு ஏற்கெனவே திட்டமிட்டு இருந்தது.

தமிழக அமைச்சரவைக் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 25.7.95 அன்று நடந்தது. திருச்சி



பெரும்பிடுகு முத்தரையர்

மாவட்டத்தை 3ஆகப் பிரிப்பது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அமைச்சரவைக் கூட்ட முடிவு பற்றி பின்னர் தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:

"25.7.95 அன்று மாலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை நிர்வாக நலன் கருதி பிரித்து, திருச்சிப்பள்ளி, கரூர், பெரம்பலூர் ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்டு, மூன்று மாவட்டங்களாக அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்திற்குத் திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம் என்றும், கரூரைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, கரூர் தீரன் சின்னமலை கவுண்டர் மாவட்டம் என்றும், பெரம்பலூரைத் தலைமையிட மாகக் கொண்ட மாவட்டத் திற்குப் பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் என்றும் பெயர் சூட்டுவது எனவும் அமைச்சரவையில் முடிவு எடுக்கப்பட்டது".



தீரன் சின்னமலை



திருச்சி மாவட்டம் 3 ஆகப் பிரிக்கப்படுவதால், தமிழ் நாட்டில் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை 25 ஆக உயருகிறது.

☆ தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

நீங்கள் பிறரிடம் அன்பு செலுத்தினால், கடவுள் உங்களிடம் அன்பு செலுத்துவார். குடும்பத்துடன் நீங்கள் பிரார்த்தனை செய்தால், கடவுள் உங்களை அடைவார்.

–அன்னை தெரசா



# 21-ஆம் நூற்றாண்டும் கலைகளும்!

## மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள்

'காவிரி பாயும் கன்னித் தமிழ்நாடு கலைகளுக்கெல்லாம் தாய்வீடு' என்ற உணர்வோடு நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சைத் தரணியிலும், நெஞ்சை அள்ளுகின்ற விதத்திலே எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினை, சிறப்பாக நடத்தி வெற்றிக்கொடி பிடித்திருக்கிற வித்தகத் தலைவியாம், ஓராயிரம் ஆண்டுகள் தவமிருந்து எங்களுக்குக் கிடைத்த - வாராது வந்த மாமணி, விழியசைவில் சாதனைகள், விரலசைவில் சரித்திரங்கள், எந்தச் செயலையும் துணிச்சலோடு எதிர்க்கின்ற ஆற்றல், வானத்தின் வள்ளல் தன்மை, பூமியின் பொறுமை, எரிமலையின் போர்க்குணம், இத்தனையும் ஒருங்கே அமையப் பெற்று, சங்கத் தமிழுக்குப் புகழ் சேர்க்கின்ற சிங்க நிகர் தலைவியின், தங்கத் தலைவியின் திருப்பாதம் தொட்டு வணங்கி, என் தலைமை உரையைத் தொடங்குகின்றேன்.

கலை என்றால் என்ன என்பதற்குப் பைந்தமிழ்க் கவிஞன் பாரதிதாசன் சொல்கின்றான்:

"கலை என்றால் கல்வி அல்ல; ஒருவருக்குள்ள வெள்ளறிவின் தனி ஆற்றலால் பிறக்கும் வியத்தகுமோர் பொதுச் செல்வம்" என்றான் அந்தப் பாரதிதாசன். ஆக, கலை என்பது வெறும் கல்வி மாத்திரம் அல்ல, அந்த வியத்தகு ஆற்றலை வெளிப்படுத்துகின்றபோது தான் அந்தக் கல்வி கற்றது மாத்திரம் அல்ல, அதைத் தெரிந்து கொண்டது மாத்திரம் அல்ல, அதை வெளிப்படுத்துகின்ற உணர்விலேதான் அவனுக்கு மரியாதை வருகிறது அந்தக் கலைக்கு மரியாதை வருகின்றது என்ற உணர்வோடுதான் பாரதிதாசன் மெலிவாக, கனிவாகச் சொன்னான் - 'கலை என்றால் கல்வி அல்ல; ஒருவருக்குள்ள வெள்ளறிவின் தனி ஆற்றலால் பிறக்கும் வியத்தகுமோர் பொதுச் செல்வம்' என்று.

ஒரு மனிதன் தன்னுடைய உள்ளத்தை வயமாக்கி, நிரம்பி, அத்தோடு நின்று விடாமல், வெளிப்படுத்தும் ஆற்றலே கலை. அதை வெளிப்படுத்துகின்ற ஆற்றல் வேண்டுமென்று சொல்கிறான்.

பாரதிதாசன், அந்தக் கலைகளையெல்லாம் அன்னைத் தமிழ் மொழியிலே காணுகின்றான்.

தமிழிலே ஆடல், பாடல், இசை என அந்தக் கலைகளையெல்லாம் காணுகின்றான் நம்முடைய பாரதிதாசன். ஆக, தமிழிலே அத்தனையும் இருக்கிறது என்ற உணர்வோடு இன்றைக்குக் கலைக்கு ஒரு வடிவம்

கொடுத்த ஒரு மொழி தமிழ் மொழி என்பதை அன்றைக்கே நம்முடைய பாரதிதாசன் உணர்த்தி இருக்கிறான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

பாரதிதாசன் அதற்குப் பின் னாலே சொல்கிறான்:

"அந்நாளில் இலக்கியத்தை ஆய்தல் ஒன்றே
அரும்புலமை என்னும்
மடமையகற்றி
இந்நாளில் பழந்தமிழில் புதுமை இயற்றி"

—என்கிறான்.

பழங்காலக் கலைகளை அவன் மறுக்கவில்லை. பழங் காலக் கலைகள் இன்றைக்கும் போற்றுகின்ற வண்ணம் இருக் கின்றன. கட்டடக் கலையானா லும் சரி, இசைக் கலையானா லும் சரி, ஓவியக் கலையானா லும் சரி, நாட்டியக் கலையானா லும் சரி, இயற்கை என்ற அழகுக் கலையானாலும் சரி, திரைப் படக் கலையானாலும் சரி, இதிலே சொல்ல முடியாத பல கலைகள் இருக்கின்றன; காவியக் கலை இருக்கிறது - இதிலே ஓவியக் கலை பற்றிச் சொல்ல வில்லை. ஏனென்றால், அரசி யலேகூட ஒரு கலைதான். அதையும்கூட நாம் விவாதித்து இருக்கலாம்.

ஆனால் அத்தனைப் பொருள் களையும் விவாதிக்க முடியாது என்ற காரணத்தினால்தான் ஒரு குறிப்பிட்ட கலைகளை மாத்திரம் இங்கு நாம் விவாதிக் கிறோம். அரசியல் கலை என்றாலே, ஒரு நாட்டை நடத் துவதே ஒரு கலை. ஒரு கட்சியை நடத்துவதே ஒரு கலை. ஒரு நாட்டையும், கட்சியையும் ஆட்சி யையும் காப்பாற்றி நடத்துகின்ற ஒரு பான்மையே ஒரு கலைதான். இன்றைக்கு அதற்கு இலக்கண மாகத் திகழ்ந்து கொண்டிருப் பவர் புரட்சித் தலைவி.

அரசியல் கலையைக்கூட இன்றைக்கு ஒரு விவாதத்திலே வைத்து இருக்கலாம். அதைப் பேசுவதற்கு ஒரு அறிஞரைப் போட்டிருக்கலாம். ஆக, இன் றைக்கு நிறைய இருக்கிறது. அதிலே குறிப்பிட்டவைகளை மாத்திரம் இன்றைக்கு எடுத்து வைத்திருக்கலாம். ஆகவே, கலை களைப் பற்றிச் சொல்கின்ற பொழுது, அதைத்தான் நான் சொன்னதைப்போல, அன் றைக்கு இருந்த கலையுணர்வு என்ன? இன்றைக்கு இருக்கின்ற

★ **ஒவ்வொரு வகைப் புத்த கமும் ஒவ்வொரு பயனை ஒவ்வோர் அளவுக்குத் தருவ துடன், நமது மனத்தை உரு வாக்க உதவுகின்றது.**
**- பேரறிஞர் அண்ணா**

கலை உணர்வு என்ன? அன் றைக்கு எப்படிக் கலையைப் பழந்தமிழர் காப்பாற்றினர்? இன்றைக்கு அந்தப் பழந்தமிழ்க் கலைகளுக்கும் புது வடிவம் கொடுத்து, புதிய தொழில் நுட்ப ரீதியாக இன்றைக்குப் புரட்சித் தலைவி என்னென்ன செயல் பாடுகளைக் கொண்டிருக்கிறார் என்பதை ஒன்றிரண்டை மாத் திரம் இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

பாரதிதாசன் சொல்வியதைப் போல, பாரதியாரும் சொல் கிறார். கலைகளைப் பற்றிச் சொல்கின்றபொழுது,

"மந்திரம் கற்போம் - வினைத்
தந்திரம் கற்போம்
வானை அளப்போம் - கடல்
மீனை அளப்போம்
சந்திர மண்டலத்தியல்
கண்டு தெளிவோம்
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம்
கற்போம்!
காவியம் செய்வோம் - நல்ல
காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம் - கொல்ல
ருலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் - நல்ல
ஊசிகள் செய்வோம்"

ஆக, இப்படி ஒவ்வொன்றா கச் சொல்லிக்கொண்டு வரு கின்றபோது, பாரதியாரும் கலை களைப் பற்றிச் சொல்கிறார். ஒவ்வொரு கலையைப் பற்றியும் இயற்கைக்கு உதாரணம், ஓவியத் திற்கு உதாரணம். ஆகவே, தமிழ்ப் பாட்டிலே, பாரதியின் வடிவிலே பல கலைகளை நாம் இன்றைக்குப் பார்க்க முடிகிறது.

மேலும் பாரதி கூறுகின் றான்:

"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள்
கூறும்
மெத்த வளருது மேற்கே"

என்று சொன்னான். மேற்கே என்று சொன்னான். புதிய சிந் தனைகள் இன்றைக்கு மேலை நாடுகளிலே வளர்ந்து கொண் டிருக்கிறது என்று சொன்னான். இன்றைக்கு அந்தப் புதிய சிந் தனைகளை இங்கே உருவாக்கிக் கொண்டிருப்பவர் புரட்சித் தலைவி; மேலை நாட்டிலே புதிய புதிய கட்டடங்களை நாம் பார்க்கிறோம். ஆனால், மேலை நாட்டிலே இன்றைய ஆண்டு களிலே [illegible] முடிக்க கூடிய தேர [illegible] ஆரம்பம்,

இன்றைக்கு 6 மாதக் காலத்திலே, அண்மையிலே சென்னையிலே கட்டி முடிக்கப்பட்டது. ஆகவே, தமிழ்நாடு மேலை நாடுகளுக்குக் குறைந்தது இல்லை என்பதை நிரூபிக்கின்ற விதத்திலே அன் றைக்குப் பாரதி கண்ட கனவை நனவாக்குகின்ற புதுமைப் பெண்ணாக, அவன் என்ன கலை உணர்வு இந்த நாட்டிலே வர வேண்டும் என்று நினைத் தானோ, அவன் நோக்கம் என்ன வென்று அன்றைக்கு நினைத் தானோ, அவன் சிந்தனை என்ன வென்று தந்திருக்கின்ற, சிந் தனைத் தலைவிதான் நம்மு டைய புரட்சித்தலைவி என்பதை நீங்கள் நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு நாட்டியக் கலை யைப் பற்றிச் சொல்லுகிறோம். இன்றைக்கு நாட்டியத்திற்கு ஏது மகிமை என்று நினைக்கலாம். இன்றைக்கு நாட்டியக் கலைக்கு புதிய வடிவம் தந்து, நாட்டி யாஞ்சலி நடத்தியவரே புரட்சித் தலைவி அவர்கள்தான். மாமல்ல புரத்திலே விழா எடுத்து ஒருமாத காலம் நாட்டியாஞ்சலி நடத்தி, இன்றைக்கும் அந்தக் கலை பட்டுப் போகாமல், கெட்டுப் போகாமல் பாதுகாக்கின்ற ஒரே தலைவி எங்கள் புரட்சித் தலைவி. இருபத்தோராம் நூற் றாண்டிலும் அந்த நாட்டியக் கலை பெருமை மங்காதிருக்கும் வகையில் அதை அவர் புதுப் பித்துக் கொண்டிருக்கிறார்.

ஆகவேதான், பரதநாட்டியம் இன்றைக்குப் புகழ் பெற்றிருக் கிறது. ஏனென்றால் அவரே நாட்டியத்திலே தலை சிறந்து விளங்கியவர் என்பதை மறுக்க

**கலையையும், இலக்கியத்தையும் நான் பெரிதும் மதிக்கிறேன் விரும்புகிறேன். ஏனென்றால், கோடிக்கணக்கான மக்களுடன் பேசும் சக்தி கொண்டவை அவை.**
**—காந்தியடிகள்**

முடியாது. ஆகவே, இன்றைக்கு அத்துணையும் அவரிடத்திலே இருக்கிறது. நாட்டியக் கலை அவரிடத்திலே இருக்கிறது. திரைப்படக் கலை அவரிடத் திலே இருக்கிறது. இயற்கை அழகை ரசிக்கும் அழகு அவரிடத்திலே இருக்கிறது. நம் தங்கத் தலைவி, நெஞ்சிலே நிறைந்து இருக்கின்ற உத்தமத் தலைவி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நினைவாலயத்தை உருவாக்கிய கட்டடக் கலை அவரிடத்திலே இருக்கிறது. அந்தக் கலையார்வம் அவரிடத் திலே இருக்கிறது. காவியம் அவரிடத்திலே இருக்கிறது. ஓவியம் அவரிடத்திலே இருக் கிறது.

ஆகவே, இன்றைக்கு இருபத்தொன்றாம் நூற்றாண் டின் புதிய சிற்பியாக, இருபத் தொன்றாம் நூற்றாண்டிற்கு இன்றைக்கு நம்மை அழைத்துச் செல்கின்ற ஒரு ஒப்பற்ற தலைவியாக, சிந்தனைத் தலைவி யாக, கலைத் திறன் பெற்ற தலைவியாக, புரட்சித் தலைவி இருக்கிறார் என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத் தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இசைக் கலையைப் பற்றிச் சொல்கின்றபொழுது, நான் கூடப் பாடலிலே கேட்டிருக் கிறேன். 'இசையால் வசமாகா இதயம் எது' என்று. ஒரு காலத் திலே கோகுலத்திலே பசுக் களைக் கண்ணன் தன் குழலூதி வயப்படுத்தினான். கம்பால் அடித்து அல்ல. அன்றைக்குக் குழலூதி பசுக்களைக் கண்ணன் வயப்படுத்தினான் என்று சொன் னால், அந்த இசைக்கு அன் றைக்கு மிருகங்களும் ஆட் பட்டன என்பதை யாரும் மறுக்க முடியாது.

யாரையும் மயக்குகின்ற ஆற்றல், யாரையும் கவருகின்ற அந்தத் திறன், இசைக்கு இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க முடிகிறது. பண்டைய காலத்தை எடுத்துப் பார்த்தால் ஒரு குழந்தை இருக் கிறது- அந்தக் குழந்தைக்குத் தூக்கம் வரவில்லை என்றால், தாயினுடைய தாலாட்டு 'ஆராரோ ஆரிரரோ' என்னும் அந்த இனிய இசை, அந்தக் குழந்தைகளுக்கு உறக்கம் வர வைக்கிறது. ஆகவே, அடித்துப் படுக்க வைக்க முடியாது. அதட்டிப் படுக்க வைக்க முடியாது. ஆனால், அதைத் தாலாட்டிப் படுக்க வைக்க முடியும். இசையால் அதை வழிப்படுத்த முடியும். அறிவு வளர்ச்சி பெறாத குழந்தைகளுக் குக்கூட இசைஞானம் இருக் கிறது என்று சொன்னால், இசைக்கலை கீழே இருந்து மேலே வரை அத்தனைப் பேரையும் வயப்படுத்துகின்ற

ஆற்றலைப் பெற்று இருக்கிறது என்பதை நாம் காண முடிகிறது.

பண்டைய காலத்திலே இருந்த, இசை முழக்கிய வாத்தியங்கள் பற்றியும் சொல்ல வேண்டும். இன்றைக்குக்கூட புதுப்புது வாத்தியங்கள் புதிய சிந்தனைகள். ஆனால் அன்றைக்கு வீணை, குரல், துத்தம், கைக்கிளை, இளி, விளரி, தாரம் என்று பல்வேறு வாத்தியங்கள், இன்றைக்குக்கூட அந்த வாத்தியங்களுக்கு மகிமை இருக்கிறது. இந்த வாத்தியங்களையெல்லாம் ஒன்றுசேர நாம் எப்போது பார்க்க முடிகிறது என்று சொன்னால், எங்கள் தங்கத் தலைவி, புரட்சித்தலைவி, ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் செல்லுகின்றபோது, மொத்தமாக அந்த இசை வாத்தியங்களை நாங்கள் பார்க்க முடிகிறது.

இதுபோன்ற பல பழம் பெரும் இசை வாத்தியங்களெல்லாம் இன்னும் தமிழகத்திலே, இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட இங்கே நடந்த 30,35 நிகழ்ச்சிகளிலும் இது போன்ற பண்டைக்காலத்து இசை நாகரீகம் உள்ள வாத்தியங்களையெல்லாம் நாங்கள் முழங்கி இருக்கிறோம். இன்றைக்கும் பழங்காலத்து இசை வாத்தியங்கள் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம். ஆகவே, இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

திருநாவுக்கரசர் கூட 'ஈசன் எந்தை இணையடி நிழல் மாசில்லா வீணையொலி போன்றது' என்றார். மாசற்ற

**★போற்ற வேண்டியவை உண்மை - உழைப்பு - உயர்வு. பின்பற்ற வேண்டியவை கனிவு - பணிவு - துணிவு. பேணப்பட வேண்டியவை கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு.**

**- பேரறிஞர் அண்ணா**

வீணையொலி என்பது ஈசனுடைய இணையற்ற அடிக்குச் சமானம் என்று சொன்னார். ஆக, அன்றைக்கு –

இறைவன் கூட, அந்த வீணையின் ஒலிக்குக் கட்டுப் படுகிறான் என்பதை நாம் தெளிவாகப் பார்க்கின்றோம்.

கட்டடக் கலைக்கு மிகவும் பெயர் பெற்ற இடம் தஞ்சைத் தரணி. சோழ மன்னர் காலத்தில் கட்டப்பட்டிருக்கிற ராஜராஜன் கோயில், அதைப் போலப் பல்லவர் காலத்தில் கட்டபட்டிருக்கின்ற கட்டடக் கலைகள், நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டிருக்கின்ற கட்டடக் கலைகள், மொகலாய மன்னர் காலத்தில் கட்டப்பட்டிருக்கின்ற கட்டடக் கலைகள், இன்றைக்கு அதையும் விஞ்சி, பல்வேறு கட்டடக் கலைகள் பரிணாம வளர்ச்சியாக வந்தாலும், இந்தியாவிற்கே முன்னுதாரணமாகத் தமிழ்நாட்டிலே கட்டடக் கலையை இன்றைக்குப் புரட்சித் தலைவி வளர்த்து வருகிறார். ஆகவே, தமிழகம் இன்றைக்குப் புரட்சித்தலைவியினுடைய தலைமையிலே கட்டடக் கலைக்கு முன்னுதாரணமாக இருக்கிறது என்பதற்கு நான் பல உதாரணங்களை இங்கே எடுத்து வைத்தேன்.

எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது சிற்பக் கலை. கல்லிலும், உலோகத்திலும், மெழுகிலும் கூட, மரத்திலும் கூட, உருவங்களை அமைக்கின்ற பாங்குதான் சிற்பக் கலை. சிற்பக் கலை என்பது இயல்பாக வந்து விடுவது அல்ல. ஒரு சிற்பி என்பவன் சிறந்த ஞானியாக இருக்கிறான். மேலெழுந்தவாரியாக அவன் ஒரு சிற்பத்தைச் செதுக்கிவிட முடியாது. அவன் உள்ளத்திலே இருக்கின்ற உணர்வுகளையும் அந்த உருவத்தையும் மனதிலே வைத்துக்கொண்டு அந்தச் சிலையைச் செதுக்குகின்றான். ஐம்புலன்களையும் அடக்கி ஒருசேர ஆட்படுத்தி, அவன் உணர்வுகளை அந்தச் சிலையிலே வடிக்கின்றபோதுதான், அந்தச் சிற்பம் புதிய பரிணாமம் பெறுகின்றது.

ஆகவே, இப்படிச் சிற்பக் கலை செய்வதற்கு நமது கணபதி ஸ்தபதி போன்றவர்களெல்லாம் இன்றைக்கு இருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கும் அந்தச் சிற்பக் கலை மறைந்துவிடவில்லை. எத்தனையோ குகைக் கோயில்கள், சித்தன்னவாசல் போன்ற இடங்கள் உள்ளன. மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலே நீங்கள் பார்க்கலாம். காஞ்சி கைலாசநாதர் கோயிலிலே நீங்கள் பார்க்கலாம். ராமேஸ்வரத்திலே நீங்கள் பார்க்கலாம். இன்றைக்கும் அந்தச் சிற்பக் கலை பாதுகாக்கப்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஓவியக் கலையைப் பற்றி நாம் சொல்ல வேண்டும். ஓவியம் தீட்டுவது என்பது மிகச் சிறந்த ஒரு கலை. அதை மிக



எளிதாக நாம் யாரும் செய்து விட முடியாது. ரவிவர்மா இருந்தார். நினைத்த மாத்திரத்திலே ஓவியங்களை வரைவார். ஒரு சிறந்த ஓவியம் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு விலை போகின்றது. நாம் அதனுடைய மதிப்பைப் பார்த்தோம் என்று சொன்னால், மிகக் குறைந்ததாகத்தான் இருக்கும். என்ன ஒரு ஐம்பது ரூபாய் இருக்குமா - நூறு ரூபாய் என்றுகூட நினைக்கலாம். ஆனால், பல இலட்சம் ரூபாய்களைக் கொடுத்து வாங்குகின்ற அளவிற்கு ஓவியக் கலையை இன்றைக்கு மேலைநாட்டவர் போற்றுகின்றனர்.

அந்த ஓவியக் கலை நம்மிடத்திலே பல இடங்களில் இருக்கின்றது. அதையெல்லாம் நாம் பேணிக் காக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி எடுத்த முடிவுதான் இன்றைக்குப் பெரிய கோயிலிலே இருக்கும் ஓவியத்தைப் பாதுகாப்பதற்காகப் பல இலட்ச ரூபாய்களைச் செலவழித்து மிக அழகாக இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்.

ஆகவே, இருபத்தோறாம் நூற்றாண்டிலும் புரட்சித் தலைவி ஓவியக் கலையையும் இன்றைக்குக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறார்.

அடுத்து- திரைப்படக் கலை. இன்றைக்குத் திரைப்படத்தைப் பொறுத்த மட்டிலே, மறைந்தும் நெஞ்சிலே மறையாமல் இருக்கின்ற மாணிக்கத் தலைவர் - புரட்சித்தலைவர், தான் இருக்கின்ற வரையிலே மக்கள் நெஞ்சிலே புகழ்க்கொடி ஏற்றிய உத்தமத் தலைவன். அவர் ஆளுகின்ற வரை அவர்தான் முதலமைச்சர். அவர் அன்றைக்குத் திரைப்படத் துறையிலே இருந்த வரையில் அவர்தான் முடிசூடா மன்னன். அன்றைக்குத் திரைப்படக் கலைக்கு அவர் புதிய பரிணாம வளர்ச்சி தந்தார்.

திரைப்படக் கலை என்பது ஒரு சாதாரணக் கலை அல்ல. மற்ற கலைகளைப் பார்ப்பதற்கு நாம் சென்று பார்க்க வேண்டும். ஆனால், ஒரே நேரத்திலே கோடிக்காணக்கான மக்களின் உள்ளத்திலே அந்தக் கலை உணர்வை ஏற்படுத்துகின்ற ஒரு இயல்பான அமைப்பு திரைப் படம். ஒரே நேரத்திலே கோடிக் கணக்கான பேர்கள் இன்றைக்கு அதைப் பார்க்க முடிகிறது. புரட்சித் தலைவருடைய படங்கள் படங்களல்ல. அவை பாடங்கள். ஆகவேதான், இன்றைக்கும் மக்கள் மத்தியிலே, அந்தத் திரைப்படக் கலையின் வடிவாக அந்தத் தலைவனைக் கண்ட மக்கள் அவரை இன்றைக்கும் நெஞ்சிலே நினைவுறுத்திப் போற்றிக்கொண்டிருக் கிறார்கள்.

அந்தத் தலைவனோடு எத்தனையோ பேர் நடித்து இருக்கலாம். ஆனால், அத்தனைப் பேரும் ஒளிவீசும் நவரத்தினமாக

**★ நல்ல எண்ணங்களைத் தூவினால்தான், அவை நல்ல பலனைத் தரும். பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்தில் நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது.**

**- பேரறிஞர் அண்ணா**

உயர்ந்தது கிடையாது. ஆனால், ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி ஒருவர்தான் அந்தத் தலைவனுடைய அரசியல் வாரிசாக, கலைத் துறையிலும் சரி, அரசியல் துறையிலும் சரி, இன்றைக்கு வாரிசாக மிகச் சிறந்து விளங்குகிறார். புரட்சித் தலைவி ஏற்காத வேடமே கிடையாது.

அவர் எந்த வேடத்தை எடுத்தாலும் வெற்றிக்கொடி நாட்டியவர். அவரும் நம்முடைய புரட்சித்தலைவரும் இணைந்து நடித்தால் அந்தப் படங்கள் தோற்றதே கிடையாது. ஆகவே, அவர்களை வைத்துப் படம் எடுத்தவர்கள் எல்லாம் அன்றைக்குப் பணம் சம்பாதித்தார்கள். ஆகவே, புரட்சித் தலைவர் காலத்திலும் சரி, புரட்சித்தலைவி காலத்திலும் சரி, இன்றைக்குத் திரைப்படக் கலை அன்றைக்கு உருப்பெற்றிருந்ததற்கு முழு வடிவம் தந்தார்.

எங்கே திரைப்படம் முடிந்து விடுமோ – வீடியோக்கள் வந்து விட்டனவே என்று எண்ணிய நேரத்திலும்கூட, ஏறத்தாழ 21 கோடி ரூபாய் செலவழித்து திரைப்பட நகரை ஆசியாவிலேயே மிகப் பெரிய திரைப் பட , நகரமாக உருவாக்கிய பெருமை புரட்சித்தலைவிக்கு உண்டு. ஆக, திரைப்படக் கலையையும் இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறார். .

'ஜெயலலிதா திரைப்பட நகர்' என்று நம்முடைய தங்கத் தலைவியின் பெயராலே இன்றைக்கு ஒரு திரைப்பட நகரை, யாரும் செய்ய முடியாத

வண்ணம், உருவாக்கி, திரைப் படக் கலையைக் காத்தவர் புரட்சித் தலைவி. திரைப்படத் துறையிலே பிரச்சினை ஏற்படு கின்றபொழுது தமிழனுக்கு மட்டுமல்ல, தெலங்குப்பட உல குக்குப் பிரச்சினை வந்தால் கூட, அதையும் தீர்த்து வைக் கின்ற ஆற்றல் நம்முடைய புரட்சித் தலைவிக்கு இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு மத, இன, உணர்வு, மொழி ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டுத் திரைப்படத் துறையைக் காப்பாற்றிக் கொண் டிருக்கிற ஒரே முதலமைச்சர் நம்முடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி என்பதை யாரும் மறுக்கமுடியாது.

அதைப்போலத்தான் நாடகக் கலை. இன்றைக்கு நாடகம் பல்வேறு இடங்களிலே நடந் தாலும் யாரும் பார்க்க மாட் டார்கள். அந்தக் காலத்திலே பவளக்கொடி, வள்ளித் திரு மணம், நந்தனார், அரிச்சந்திரா நாடகம், பிரகலாதன் போன்ற நாடகங்கள் நடிக்கும்போது பார்த்திருக்கிறோம். இன்றைக் கும் அந்த நாடகக் கலையைப் போற்றுகின்ற விதத்திலேதான் நம்முடைய மனோகர் அவர்கள் 'திருநாவுக்கரசர்' என்ற நாடகத் தைத் தயாரிப்பதற்கு இயல், இசை, நாடக மன்றத்திற்கு குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களைத் தலைவராகவும், மனோகர் அவர்களைச் செய லாளராகவும் போட்டு அதற்குப் பல இலட்சம் ரூபாய்களைச் செலவழித்து அந்தக் கலையைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார் காவல் தெய்வமாம் புரட்சித் தலைவி அவர்கள். இருபத் தோறாம் நூற்றாண்டிலும் சரி,

**★பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு, நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள்.**

**- பேரறிஞர் அண்ணா**

இருபதாம் நூற்றாண்டிலும் சரி, அத்தனைக் கலைகளுக்கும் இன்றைக்கு வடிவமும் பாது காப்பும் வழங்கும் தலைவியாகப் புரட்சித் தலைவி இருக்கிறார்.

கலையை வளர்க்கின்ற ஆற்றல், தமிழை வளர்க்கின்ற அறிவு, தமிழை வளர்க்க வேண்டுமென்ற உணர்வு, எண் ணம் இல்லாதவர்கள் இன்றைக் குப் புரட்சித் தலைவியைப் புறம்பேசிப் பயனில்லை.

உலகத் தமிழ் மாநாடு நடத் திய பெருமை நம் நெஞ்சிலே நிறைந்து இருக்கின்ற உத்தமத் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உண்டு. மதுரையிலே நடத்திக் காட்டி னார். எந்தப் பெயராலே இயக் கம் அமைத்து இருக்கிறோமோ எந்த அண்ணனுடைய திரு வுருவப்படத்தைக் கொடியிலே பதித்து இருக்கிறோமோ, அந்த அண்ணன் நடத்திக் காட்டினார். அதற்குப் பின்னாலே, அந்தத் தலைவனுக்குப் பின்னாலே, நம்முடைய தங்கத் தலைவி இன்றைக்குத் தஞ்சையிலே நடத்திக் கொண்டிருக்கிறார்.

மானமொன்றே நல்வாழ் வெனக் கொண்டு வாழ்ந்த என் மறவேந்தர் -

பூணைகளல்ல, அவர் வழி வந்தோர் புலிநிகர் தமிழ் மாந்தர் -

ஆணை, என் தமிழ் ஆட்சியை நிறுவ அல்லல் வரின் ஏற்பேன் -

ஊனுடல் கேட்பினும் செந் தமிழ் நாட்டிற்கு உவப்புடன் நான் சேர்ப்பேன் -

என்று தங்கத் தமிழ்மொழிக்காக இன்றைக்குப் போராடுகின்ற தங்கத் தலைவி, சிங்கநிகர்த் தலைவி, புரட்சித் தலைவி அடி வணங்கி அமைகிறேன்.

**★அனுபவம் என்பது தேர்வு இல்லாத பாடம். அனுபவம் என்பது பாடம் கற்கும் பொழுது வெற்றி தோல்வி களை நிர்ணயிக்கும் கல்வி முறையாகும்.**

**- பேரறிஞர் அண்ணா**

**(–'21ஆம் நூற்றாண்டும் கலைகளும்' என்ற தலைப்பில் '8ஆம் உலகத் தமிழ் மாநாடு' - 4ஆம் நாள் கருத்தரங்கில் பேசியதிலிருந்து)**





# விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குவோருக்கு காவல்துறையில் 10 சதவிகித இட ஒதுக்கீடு: மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

**கடந்த 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குகின்ற படித்த இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோரை ஊக்கு விக்கும் வண்ணம், அவர்கள் காவல்துறைப் பணிகளுக்குப் போட்டியிடும்போது அவர் களுக்காக 10 சதவிகிதம் சில குறிப்பிட்ட பணிகளில் ஒதுக்கீடு செய்யப்படும் என்ற அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டிருந்தார்.**

**மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டிருந்த இந்த அறிவிப்பின் அடிப்படையில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வாணையம் தற்போது இதற்காக விதிமுறைகளை உருவாக்கி, அவற்றை மாண்புமிகு முதல்வர் அவர் களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத் திருந்தது.**

**அப்பரிந்துரையை முழுமையாக ஏற்றுக் கொண்ட மாண்புமிகு முதல்வர், காவல் துறையில் இனி வரும் காலங்களில் நடத்தப்படுகின்ற நேரடித் தேர்வுகளில் 10 சதவிகிதம் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குகின்ற இளைய தலைமுறை யினருக்கு ஒதுக்கீடு செய்யப் படும் என்று ஆணை பிறப்பித்துள்ளார்.**

**இவ்வாணை, இந்த ஆண்டு முதல் அமலுக்கு வரும். இதன்படி இரண்டாம் நிலை ஆண் காவலர், இரண்டாம் நிலை பெண் காவலர், ஆண், பெண் சப் இன்ஸ்பெக்டர், துணை போலீஸ் சூப்பிரண்டுப் பிரிவு ஒன்று ஆகிய பணி இடங்களுக்கு இந்த 10 சதவிகித இடஒதுக்கீடு விதிமுறை பொருந்தும்.**

**இந்த ஒதுக்கீட்டின்கீழ், போட்டியிடும் போட்டியாளர்கள் பல்கலைக்கழக அள விலேனும், மாநில முதுநிலை - இளநிலை அளவிலேனும் அல்லது சர்வதேச விளை யாட்டுப் போட்டிகளில் நமது நாட்டைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். இந்த ஒதுக்கீடானது பொதுவாக அனைத்துப் பிரிவுகளுக்கும் செய்யப்பட்டுள்ள 69 சதவிகித இட ஒதுக்கீட்டின்கீழே வரும்.**

**இதற்கான விரிவான விதிமுறைகளை, தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வாணையம் இரண்டாம் நிலைக் காவலர் முதற்கொண்டு சப் இன்ஸ்பெக்டர் பதவி வரையிலும், காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் பதவிக்கான விரிவான விதிமுறைகளைத் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் வெளியிடும்.**





# வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில், மாநில அளவில்- காயிதேமில்லத் பிறந்தநாள் நூற்றாண்டு விழா

**க**ண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் அவர்களின் பிறந்தநாள் விழா, வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் மாநில அளவிலான விழாவாக *30.7.95* அன்று, வாணியம்பாடியில் செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அறிஞர் பெருமக்களுக்கும், தலைவர்களுக்கும், வாழ்கின்றபோதே வரலாறு படைத்தவர்களுக்கும் மிகச் சிறந்த முறையில் அரசு சார்பாகப் பிறந்தநாள் விழா



கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையிலும், கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு மிகச் சிறப்பாகப் பிறந்தநாள் விழாவினை மாவட்டந்தோறும் நடத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டதன்பேரில், முதலாவதாகச் சென்னையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மிகவும் சீரும் சிறப்புமாகத் தொடங்கி வைக்கப்பட்டது.

இரண்டாவதாகக் காயிதேமில்லத் அவர்கள் பிறந்த மாவட்டமான திருநெல்வேலியில் கொண்டாடப்பட்டது.

மூன்றாவதாக வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் வாணியம்பாடியில் *30.7.95* அன்று, மிகவும் சிறப்பான முறையில் காயிதேமில்லத் நூற்றாண்டு விழா நடைபெற்றது. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை ஏற்றார். மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துணிநூல் துறை அமைச்சர் புலவர் திருமதி இந்திர குமாரி அவர்கள் காயிதேமில்லத் புகைப்படக் கண்காட்சியையும் மற்றும் அவர் திருவுருவப் படத்தையும் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்.

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள், தமது உரையில்- "கண்ணியத்திற்கும் மரியாதைக்குமுரிய காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் அவர்களின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு அவருடைய திருவுருவப் படத்தைத் திறந்து வைப்பதில் பேருவுவகையும் பெருமகிழ்ச்சியும் அடைகிறேன். காயிதேமில்லத் அவர்கள் *1945*-ஆம் ஆண்டிலிருந்து முஸ்லீம் லீக் தலைவராகத் தொடர்ந்து இருந்திருக்கின்றார். அவருக்குச் சீரும் சிறப்புமாக விழா எடுப்பதில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிகவும் அக்கறையுடன் உள்ளார் எனக் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்குத் தலைமையேற்று உரை ஆற்றிய மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் "காயிதேமில்லத் அவர்கள் மொழிப் பற்று மிக்கவர். வாழ்கின்ற போது வரலாறு படைத்தவர்களுக்கு, அவர்களை நினைவுகூரும் வகையில் அரசு சார்பில் விழா எடுக்கப்பட்டு வருகிறது; அதன் பொருட்டு, காயிதேமில்லத் நூற்றாண்டு பிறந்தநாள் விழா அரசு சார்பில் கொண்டாடப்படுகிறது" என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில் முன்னிலை உரை நிகழ்த்திய மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் பேசுகையில் "கண்ணியமிக்க காயிதேமில்லத் அவர்களின் உருவம் பொறித்த அஞ்சல் தலையை மத்திய அரசு வெளியிட வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களிடம் பரிந்துரை செய்துள்ளார். அதன் அடிப்படையில் விரைவில் மத்திய அரசால் கண்ணியமிக்க காயிதேமில்லத்திற்கு அஞ்சல் தலை வெளியிடப்படவுள்ளது" என்று தெரிவித்தார்.

சிறப்புரை நிகழ்த்திய தமிழ் மாநில முஸ்லீம் லீக் தலைவர் சிராஜில் மில்லத் அப்துல் சமது அவர்கள் பேசுகையில் "காயிதேமில்லத் அவர்களின் நூற்றாண்டு விழா, தமிழ்நாடு முழுவதும் தமிழக அரசால் அதற்குரிய சிறப்போடும், கண்ணியத்தோடும், கொண்டாடப்பட்டு வருகிறது. காயிதேமில்லத் அவர்கள் காலமாகி ஏறத்தாழ 24 ஆண்டு ஆகிவிட்ட போதிலும் கூட, இன்றும் அவரின் வாழ்க்கை நினைவுகூரப்படுகிறது. அவருடைய போதனைகள் எடுத்துரைக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் காயிதெமில்லத் அவர்கள் மனிதர்களை ஆழமாக நேசித்தார்கள். ஆகவேதான் மக்களாலும் ஆழமாக நேசிக்கக்கூடியவராக இன்றும் இருந்து வருகின்றார்."

தமிழ்நாடு வக்ஃப் வாரியத் தலைவர் திரு முகமது ஆசிப், சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு தோல்வளர்ச்சிக் கழகத் தலைவர் மற்றும், நிர்வாக இயக்குநர் திரு கே. பாண்டுரங்கன், மாநில தேசியச் சிறுசேமிப்பு ஆலோசனைக் குழுத் தலைவர் மற்றும் பேரணாம்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு டாக்டர் ஜே. பரந்தாமன், தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத் தலைவர் திரு கோபால், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டப் பால் வளத் தலைவர் திரு பா. நீலகண்டன் மற்றும் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

முன்னதாக நிகழ்ச்சியில் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ம.ப.

# நுகர்வோருக்கு நீதி

**புலவர் வீ.செ. கந்தசாமி**

நுகர்வோரே நுகர்வோரே ஓடி வாருங்கள்
நுமதுகுறை என்னவென்று எடுத்துக் கூறுங்கள்
தகராறு வேண்டாங்க எங்கு பார்த்தாலும்
நுகர்வோரின் குறை தீர்க்க மன்றம் இருக்குதே!

விலைகொடுத்து வாங்கிவந்த பொருளைச் சோதித்து
விதித்திருக்கும் தரமதற்கு இல்லை என்பதால்
நிலைகுலைந்து நின்றதெல்லாம் அந்தக் காலங்க!
நீதிக்காக மன்றம்போதல் இந்தக் காலங்க!

சேவைசெய்வ தாகச்சொல்லித் தொகையை வாங்கினோர்
தேர்ந்தசேவை செய்யவில்லை என்று கண்டபின்
சேவைக்கென்று பெற்றதொகையும், இழப்பு ஈடுமே
சேர்ந்தமனச் சோர்வுக்கென்று கேட்டு வாங்கலாம்!

தரங்குறைந்த பொருளைநீங்கள் வாங்கி விட்டதால்
சரியதுபோய்த் தொலையட்டும் என்றெண்ணி விடாதீர்!
சிரமமின்றி நுகர்வோரின் குறைகள் தீர்க்கவே
சிறந்திலங்கும் மன்றம்நாடி நீதி கோருவீர்!

ஆட்சிமக்கள் நலனுக்கென்று போட்ட சட்டத்தை
அனைவருமே பயன்படுத்திக் கொள்ள வேணுங்க
தாழ்ச்சிகொண்ட தரம்குறைந்த பொருளை வாங்கியோர்
தயங்கிடாது மன்றம்சென்று நீதி வேண்டுவீர்!

---

விஜயகும்மார், இ.ஆ.ப., அவர்கள், வருகைபுரிந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள், விழாத் தொடக்கவுரை ஆற்றினார். முடிவில் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு பா. நாராயண மூர்த்தி நன்றி கூறினார்.

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்துகொள்ளும் வகையில், புகைப்படக் கண் காட்சி 30.7.95 முதல் 1.8.95 முடிய மூன்று நாட்கள் நடத்தப்பட்டது. பொதுமக்களும், பள்ளி மாணவ மாணவிகளும் திரளாக வந் திருந்து அதனைக் கண்டு பயன் அடைந்தனர்.

**—எம். விஜயகுமார்**
உதவி மக்கள் தொடர்பு
அலுவலர் - விளம்பரம் -
வேலூர்



# கலையாத கலை எங்கள் கலையே!

**—டாக்டர் பத்மாசுப்பிரமணியம்**

இன்று 21-ஆம் நூற்றாண்டை நோக்கி- அதாவது இன்னும் 5 ஆண்டுக் காலத்திற்குள் அடுத்த நூற்றாண்டிற்குள் நுழைய இருக்கிறோம். அடுத்த நூற் றாண்டில் கலைகள் எப்படி இருக்கப்போகிறது என்று, ஒரு ஜோசியம் போல நாம் இப் போது சொல்லமுடியாது; என் றாலும், ஜோதிடக் கலை என்பதே, வரப்போகும் நல்லது கெட்டதை அறிந்துகொண்டு, அதற்குத் தகுந்தாற்போல நம்மைத் தயார் செய்து கொள்வ தற்காகத்தான். அந்த வகையில் தான் இந்த ஏற்பாடுகள் என்று தான் நினைக்கிறேன்.

ஒரு தீர்க்க தரிசனத்தோடு முதல்வர் அவர்கள் இந்தக் கருத் தரங்கை ஏற்பாடு செய்திருப்பது மிகவும் பாராட்டுதலுக்குரியது. அந்தத் தீர்க்க தரிசனத்தில்தான் அவர் – 'முத்தமிழ் என்று சொன்னால் போதாது; விஞ்ஞானத்தையும் சேர்த்து நான்கு தமிழாகச் சொல்ல வேண்டுமென்று' மிக அருமை யாக ஒரு கருத்தைத் தெரிவித் திருக்கிறார்கள். நமக்குப் பின்னர் வரக்கூடிய விஷயங்களை நினைத்துப் பார்க்கும்போது, சில சரித்திர நிகழ்ச்சிகளையும் மனதில் கொண்டு, அதை ஒரு வழிகாட்டியாக நாம் எடுத்துக் கொண்டு 'புதியன புகுதலும், பழையன கழிதலும்' என்ற கருத்தோடு, நாம் எதிலும் இறங்க வேண்டும். அப்படிப் பார்க்கும் போது, பழையன எல்லாமே ரொம்ப நல்லது என்று எடுத்துக்கொள்ளவும் முடியாது. புதியன எல்லாம் கெடுதல் என்று விடவும் முடியாது. ஆகவே, ஒரு வார்த்தை ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். அதாவது, Balance-அது நமக்கு மிகவும் தேவையாக உள்ளது. அந்தக் காலகட்டத்தில்தான் நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

மாறுதல் என்பது இன்றிய மையாத ஒரு விஷயமாகும். மரபையே பிடித்துக்கொண்டு, மாறவேமாட்டேன் என்று நினைத்து முரண்டு செய்து கொண்டிருந்தால், காலத்தோடு சேர்ந்து நாம் நகராமல் தேங்கி விடும் ஒரு அபாய கட்டத்தில் இருந்துவிடுவோம். ஆகவே, மாறுதல் என்பது அவசியம்தான். ஆனால், எதை மாற்ற வேண்டும், எதை மாற்றக்கூடாது என்றும் நாம் சற்றுக் கவனமாகச் சிந்தித் துச் செயல்பட வேண்டும்.

கலைகள் மனித வாழ்க் கையில் ஒரு முக்கிய அம்ச மாகும். இவை மனிதமேம் பாட்டின் நிலையைச் சித்திரிக் கும் வெளிப்படைப் பொருள் களாகும். மனித எண்ணங்கள், தெள்ளத் தெளிந்த புனித கங்கையாக ஓடும்போது, கலைகளும் அந்தக் கலவரமற்ற, கசடற்ற, குழப்பமற்ற நிலையைச் சித்திரித்து, மிகவும் முக் கியத்துவம் பெறுகின்றன. அக் கலையில் 'சிமிட்ரி' என்று சொல்லுவோமே, அந்தச் சீரான பரிணாமங்கள் இருப்பதைக் காணலாம்.

இன்று தஞ்சை ஆலயத்தில்- பெருவுடையார் ஆலயத்தில் சென்று நீங்கள் பார்ப்பீர் களானால், அங்கு இருக்கும் சித்திரங்களும், சிற்பங்களும் காலத்தைக் கடந்து நிற்கின்றன. அந்தச் சிற்பங்களைக் காணும் போது, மனதில் ஒரு சாந்தம் ஏற்படுகிறது. ஏனென்றால், ஒரு சிற்பியோ நடனக் கலைஞரோ, இசைக் கலைஞரோ, அவருக் குள்ளே ஒரு கொந்தளிக்கும் மனம் இருந்தாலும், அந்தக் கொந்தளிப்புகளைக் கலையில் பிரதிபலிக்கச் செய்யக்கூடாது என்பது நம்நாட்டு மரபு. மனக் குழப்பங்களுக்கு அப்பாற்பட்ட அந்த 'சாந்தி' என்ற மனோ பக்குவ நிலையில்தான் கலைஞர்கள் இயங்க வேண்டும். அப்பேர்ப்பட்ட ஒரு கலையைத் தான் ரசிகர்களுக்கு நாம்

அளிக்க வேண்டும். உலகில் ஏற்கெனவே எத்தனையோ குழப்பங்கள். எங்கு திரும்பினாலும் 'டென்ஷன்'. இந்த டென்ஷனை அதிகப்படுத்துவதற்காகவா நாம் ஒரு கலை நிகழ்ச்சிக்குப் போகிறோம்? அங்கே போய் மனதிற்கு ஒரு சாந்தி ஏற்பட வேண்டாமா?

சமச்சீர் என்று சொல்லக் கூடிய 'சிமெட்ரி அண்டு புரப்போஷன்' - இது சுருதி சேர்ந்து பாடுவதற்கு ஒப்பாகும். ஒரு கலைஞன் 'நான் சட்ஜமத்திலும், பஞ்சமத்திலும் மட்டும் சுருதி சேர்த்துப் பாடுகிறேன், மற்ற சுரங்களை என்னால் சுருதி சேர்த்துப் பாட முடியாது' என்றால் எப்படியிருக்கும்? யார் கேட்பது? இந்த அபசுரத்தைக் கேட்டால், அது தலைவலி! மட்டுமல்ல ; அது மகாபாவமும் கூட. தலையே குழம்பிப் போகும்.

நம் சாஸ்திரம் சொல்கிறது தவறான அதாவது 'சிமெட்ரி' இல்லாத ஒரு சிற்பத்தைப் பார்ப்பதோ, செய்வதோ மகத்தான பாவம். அதேபோல தாளம் இல்லாமல், ஒரு லாவகம்- அழகு இல்லாமல் இருக்கக்கூடிய நடனத்தைப் பார்ப்பதும் செய்வதும் மகாபாவம். நான் பாவம் என்று சொல்கிறேன் என்றால் இதை விஞ்ஞான முறையிலும் கூட விளக்க முடியும்.

இப்பொழுது விஞ்ஞானிகள் சொல்கிறார்கள் every object has a radiation என்று. ஒவ்வொரு பொருளிலிருந்தும் சில vibrations, radiations, அலைகள், ஒலி அலைகள் கிளம்புகின்றன. நம் முன்னோர்கள், இசையையும், நடனத்தையும், சிற்பத்தையும் ஆலயங்களில் ஒரு வழிபாட்டு முறையோடு ஏன் சேர்த்து வைத்தார்கள் என்று யோசனை செய்து பாருங்கள். இவை மங்கலம் தரக்கூடியவிஷயங்கள். மங்கலம் என்றால் ஏதோ ஆடுபவர்களுக்கும், பாடுபவர்களுக்கும் மட்டுமல்ல; ஊருக்கு நல்லது, நாட்டுக்கு நல்லது. இந்தக் கலைகளைக் கண்கொண்டு பார்ப்பதால், காது கொடுத்துக் கேட்பதால் ரசிகர்களுக்கு மனதிலும் ஒரு அமைதி ஏற்படும் என்பதால் வழிபாட்டோடு சேர்த்து வைத்தார்கள் நம் முன்னோர்கள்.



**எப்படிப்பட்ட கலையானாலும் சரி அது ஒழுக்கக் குறைவுக்கும் மூட நம்பிக்கைக்கும் சிறிதும் உதவுவதாய் இருக்கக்கூடாது!**



**பகுத்தறிவு எனனும ஒ்ரே மருந்தால்தான் மூடநம்பிக்கை என்னும் நோயைப் போக்க முடியுமே தவிர, வேறு எந்த மருந்தாலும் போக்க முடியாது.**

**இப்பொழுது 21-ஆம் நூற்றாண்டை நாம் நெருங்கிக் கொண்டிருக்கையில் யோசனை செய்துபார்த்தால், இந்த முறை மாறிவிடுமோ என்று சற்று பயமாக இருக்கிறது.**

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் எழுதினார்கள். "கலையாத கலை எங்கள் கலையே" என்று, எவர் கலைத்திட நினைத்தாலும், மறுத்தாலும், எதிர்த்தாலும், கலையாத கலை எங்கள் கலையே என்ற ஒரு ஆர்வத்தோடு, கவிதையிலும், கட்டடக் கலையிலும், சிற்பத்திலும், ஓவியத்திலும், இசையிலும், நடனத்திலும், சினிமாவிலும், நாடகத்திலும், என்று எல்லா விதத்திலும் புதுமையைப் புகுத்த வேண்டுமென்ற ஒரு எண்ணத்தோடு அடிக்கடி நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்?

மேல் நாட்டவர் எதைச் செய்கிறார்களோ, அதில் கூட அவர்கள் செய்யும் எத்தனையோ நல்ல விஷயங்கள் எல்லாம் இருக்கின்றன. அதையெல்லாம் விட்டுவிட்டு- எப்பொழுதுமே கெடுதல் வேகமாக வரும்; அது போல அங்குள்ள மெசின் மியூசிக், அங்குள்ள சில- அது நாட்டியம்தானா? எனக்கு சொல்லத் தெரியவில்லை. நடனம் என்று சொல்கிறார்கள். சட்டென்று பார்த்தால் காக்கா வலிப்பு மாதிரி இருக்கும். அது எதைக் காட்டுகிறது என்றால் மனதிலே ஒரு அமைதியில்லாத தன்மையையும், மூளையிலே ஒரு தெளிவு இல்லாத அறிவினையும் காட்டுகிறது.
ஒரு வரையறைக்குள் இல்லாத, தெளிவு இல்லாத



சுரங்கள். இந்த மைக்கேல் ஜாக்சன் எல்லாம் தமிழ்நாட்டுக்குத் தேவையா?

மற்ற எல்லாக் கலைகளையும் விட அதிகமாகத் தமிழ் மரபைப் பாதுகாத்துவந்த ஒரு கலை பரதக் கலை என்று சொல்ல வேண்டும். ஆனால் அதற்குக் கூட அண்மையில் சில ஆண்டுகளாகச் சில அபாயங்கள் வந்திருக்கின்றன. அண்மையில் நான் ஒரு பூ விற்கும் பெண்ணிடம் கேட்டேன், அவள் சின்னப் பெண், வயது 10 லிருந்து 12-க்குள் இருக்கும். ஆடுவாயா என்று கேட்டேன். அதற்கு அந்தப் பெண் "ஆடுவேன்" எனச் சொல்லி, நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை; ஒருவரின் பெயரைச் சொல்லி; ஒரு ஆபாசமான திரைப்படப் பாடலையும் சொல்லி "நான் ஆடுவேன்" என்று சொன்னாள். அவள் எங்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பெண் என்பதை நினைக்கும்போது மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. நான் மிகவும் வருத்தப்பட்டேன். ஏனென்றால் நான் இந்தக் காவிரி மண்ணைச் சேர்ந்தவள்.

இது ஒருபுறம் இருக்க- இன்னொரு பக்கத்தில் பார்க்கிறபோது, அப்படியே மரபையே பிடித்துக்கொண்டு சற்றும் மாறமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கும் இன்னொரு சாராரும் இருக்கிறார்கள். மரபு வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், கண்களைச் சற்று அகல விரித்து, நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டியது கலைஞர்களுக்கு மிகவும் தேவையான ஒரு விஷயம். அந்தக் காலத்திலே சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னால்கூட, பரதத்தை எடுத்துக்கொண்டால் தஞ்சை பாணி, பந்தனைநல்லூர் பாணி, வழுவூர் பாணி, காஞ்சிபுரம் வழி என்றெல்லாம் பிரித்துப் பேசுவோம்.

**உரிமையைத் தருவதற்குத் தியாக உணர்ச்சியும் தீரமும் அதிகம் தேவை.**

**-பேறிஞர் அண்ணா**

இன்னும் சொல்லப்போனால், நான் கற்றுக்கொள்ளத் தொடங்கிய அந்தச் சமயத்தில் ஒரு பாணியில் கற்றுக்கொள்ளும் ஒரு மாணவி,இன்னொரு பாணியில் பரதத்தை ஆடுபவர்களை பார்க்கக்கூடக் கூடாது. அவ்வளவு கடுமையாக இருப்பார்கள். 'அந்த வீட்டு மரபைப் பார்த்து உங்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறதா?' என்று உடனே குருநாதர் கேட்பார். தமிழ்நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் ஆலயங்களில் தேவர் அடியார்கள் மிகச் சிறப்பாக இந்தக் கலையைக் காப்பற்றி வந்தார்கள்.

ஒவ்வொரு ஆலயத்திலும், சாஸ்திரிய நடனமும், நாதஸ்வரமும், ஓதுவார்களின் இசையும் அந்தந்த கிராமத்துப் பொது மக்களுக்குக்கூட இலவசமாக சாஸ்திரிய ரீதியில் கிடைத்து வந்தன. இந்த 50 ஆண்டுகளில் என்ன நடந்தது என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். ஆயிரம் ஆண்டுகளாகத் தஞ்சை ஒரு கலைக்களஞ்சியமாக, அதுவும் பரதத்திற்குப் பேர்போன இடம் தஞ்சை; இங்கிருந்தும் மற்ற பந்தனைநல்லூர் போன்ற கிராமங்களிலிருந்தும் பெரிய பெரிய நடன ஆசிரியர்கள் சென்னைக்குச் சென்று விட்டார்கள்.

ஒரு காலத்தில், 50 ஆண்டுகளுக்கு முன்னால்- ஆடுவது என்பது சமூகத்தில் ஒப்புக் கொள்ளப்படாத ஒரு வழக்கமாக இருந்தது. ஆனால் இப்போதோ—

The pendulum has swung to the other extreme!

ஆடுவது என்பது ஒரு Status symbol ஒரு Fashion, Social Snobbery என்று ஆகிவிட்டது. சென்னையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது ஆடுவதற்கு இருக்கிறார். அநேகமாக சென்னையில் ஒவ்வொரு தெருவுக்கும் ஒவ்வொரு நடனப்பள்ளி இருக்கும். இது சென்னையைப் பொருத்தவரையில் சரி. ஆனால் தமிழகத்தில் இருக்கின்ற மற்ற இடங்களைப் பற்றிச் சற்று சிந்தித்துப் பாருங்கள். வழுவூரில் நடனம் கிடையாது. திருவாலங்காட்டில் ஒன்றுமே கிடையாது. எப்பேர்ப்பட்ட நடன சாலைகளிலும், ஷேத்திரங்களிலும் இன்று நடனம் பயிற்றுவிப்பதற்கு யாருமே இல்லை. நடனம் தெரிந்தவர்களை மற்ற மாவட்டங்களில் பார்ப்பதே அரிதாகிவிட்டது.

ஆகவே நம்முடைய சிந்தனைச் செல்வி- புரட்சித்தலைவி அவர்களுக்கு இங்கிருந்து நான் ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். எங்கிருந்து பரதம் வந்ததோ, எங்கிருந்து இசை வந்ததோ- அதாவது சென்னைக்கு வந்ததோ, ஆங்காங்கே அந்தக் கலைகளைத் திருப்பிக் கொண்டு செல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாவட்டங்களில் நடனப் பள்ளிகள் தொடங்க வேண்டும். நடனக் கல்லூரிகள் இசைக் கல்லூரிகள் தொடங்க வேண்டும். சென்னையில் மட்டும் அல்லாமல் அதாவது 'டீசென்ட்ரலைஸ்ட் கல்சுரல் ஆக்டிவிட்டீஸ்' செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், வெறும் தொலைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள்- சில சமயங்களில் தொலைக்காட்சியே தொல்லைக் காட்சியாக மாறிவிடுகிறது! அதில் வருகின்ற கலைகளைத் தான் கிராமப்புற வாசிகளும் இனிமேல் கற்றுக்கொள்ளுவார்கள். நம் கலைகள் அழிந்துவிடும். ஆகவே 21-ஆம் நூற்றாண்டுக்குச் சில முக்கியமான விஷயங்களை நாம் மேற்கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இசைக் கல்லூரிகளும், சாஸ்திரிய நடனக் கல்லூரிகளும் தொடங்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்ச் சமூகத்தைப் பற்றி இங்கே பேசிய மதிப்பிற்குரிய டத்தோ குமரன் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அதாவது தமிழர்கள் வெளிநாடுகள் சென்று இயங்கி வருகிறார்கள். மலேசியா, சிங்கப்பூர், சவுத் ஆப்பிரிக்கா, மொரீசியஸ், போன்ற பல நாடுகளில் நம் அன்புச் சகோதர சகோதரிகள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய பண்பாட்டுத் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற ஒரு முக்கியமான வேண்டுகோளை எடுத்துச் சொன்னார்கள்.

இதுகுறித்து டிசம்பர் 21-ஆம் தேதி சென்னை தமிழ் இசைச் சங்கத்தார் எனக்கு இசைப் பேரறிஞர் பட்டம் அளித்த அந்தச் சமயத்தில் இதையே நான் கூறி, தமிழ் இசையையும் நம் கலாச்சாரத்தையும் தமிழர்கள் இருக்கும் இடங்களில் எல்லாம் பரப்புவதற்கு நம் அரசாங்கத்தின் துணையோடு சில முயற்சிகளை மேற்கொண்டு, ஓதுவார்களை அங்கு அனுப்பி, நடன ஆசிரியர்களை அங்கு அனுப்பி நம் கலைகளை மீண்டும் அவர்கள் மறக்காமல் தொடர்புகொள்ளத் தேவையான சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன்.

நான் மொரீசியஸ் நாட்டுக்குச் சென்றிருந்தபோது அங்கு ஒரு டாக்சி ஓட்டுநரைச் சந்தித்தேன். உங்கள் பெயர் என்ன என்று நான் கேட்டபோது, அவர் டங்கிணமுட்டு என்று சொன்னார். என்ன என்று யோசனை செய்து பார்த்ததில் தட்சிணாமூர்த்தி என்பதே அது நீங்கள் இந்துவா என்றேன். இல்லை நாங்கள் திராவிடர் என்றார்.

கோவிலுக்குப் போகமாட்டீர்களா என்றேன். டூக்கே கோவிலுக்குப் போவோம் என்றார். டூக்கே கோவில் என்றால் என்ன என்று யோசனை செய்து பார்த்ததில் துர்க்கை கோவில் என்று தெரிகிறது. பிறகு வேறு என்ன ஆலயங்கள் எல்லாம் இருக்கின்றன என்றேன். நாங்கள் திராவிடர்கள், ஆகவே டூக்கே கோவிலுக்குப் போவோம், தெலுங்கு பேசுகிறவர்கள் ஆந்திரர்கள். அவர்கள் வேறு மதத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் இராமர் கோவிலுக்குப் போவார்கள். இந்தி பேசுகிற மக்கள்தான் இந்துக்கள்; அவர்கள் கிருஷ்ணர் கோவிலுக்குச் செல்வார்கள், இந்தியில் பாடுவார்கள் என்றார். நீங்கள் தமிழில் பாடுவீர்களா என்றேன். இல்லை நாங்கள் ஆங்கிலத்தில் தான் பேசுவோம் என்றார்.

எத்தனைக் குழப்பங்கள் பாருங்கள். ஆங்கிலேயர்கள் நம்மைப் பிரிப்பதற்காக எழுதி வைத்துவிட்டுச் சென்ற அந்த ஆரியர், திராவிடர் இனம் போன்றவைகளையெல்லாம் சரித்திரக்காரர்களே மறந்து விட்டார்கள். ஆனால் அந்த விஷயங்கள் எல்லாம் எவ்வளவு குழப்பங்களைச் செய்கின்றன என்று பாருங்கள்!

அப்படி ஆரியர், திராவிடர் இனம் என்று நம்மைக் குழப்பி விட்டுச் சென்ற ஆங்கிலேயர், அண்மையில் மொரீசியசில் இதுபோன்று மற்றொரு குழப்பத்தை ஏற்படுத்திவிட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆகவே அந்த மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய ஒரு கடமை இருக்கிறது. 21-ஆம் நூற்றாண்டில் நம் கலைகள் என்று நினைக்கும்போது ஆங்காங்கே இருக்கும் அவர்களையும் சேர்த்து நாம் நினைத்துக் கொள்கிறோம்.

மாறுதல்கள் எவ்வளவு வந்தாலும் நம்முடைய ஆதார அழகுணர்ச்சிகள் மாறாமல், அதேநேரத்தில் காலத்தைக் கடந்து நிற்கும் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லும் அளவுக்கு நல்ல கலைகள் வளர வேண்டும். அதற்காக எங்களைப் போன்றவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்களோ அதையெல்லாம் செய்ய நாங்கள் காத்திருக்கிறோம்; என்றும் எங்களுடைய பரிபூரண ஒத்துழைப்பைத் தருவோம்.

**மாலைக்கு முதற்பொருள் மணமுள்ள மலர். அதுபோலப் பேச்சுக்கு முதற்பொருள் சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள்.**

**—பேரறிஞர் அண்ணா**

# 25 மாவட்டங்களும் தலைநகரங்களும்

1. சென்னை மாவட்டம் - சென்னை.
2. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் - காஞ்சிபுரம்.
3. வடார்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் - வேலூர்.
4. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் - திருவண்ணாம்லை.
5. தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டம் - கடலூர்.
6. விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டம் - விழுப்புரம்.
7. தர்மபுரி மாவட்டம் - தருமபுரி.
8. காமராஜர் மாவட்டம் - விருதுநகர்.
9. கன்னியாகுமரி மாவட்டம் - நாகர்கோவில்.
10. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் - சிவகங்கை.
11. இராமநாதபுரம் மாவட்டம் - இராமநாதபுரம்.
12. சேலம் மாவட்டம் - சேலம்.
13. பெரியார் மாவட்டம் - ஈரோடு.
14. கோவை மாவட்டம் - கோவை.
15. நீலகிரி மாவட்டம் - உதகமண்டலம்.
16. திருச்சி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம் - திருச்சி (புதியது).
17. கரூர் தீரன் சின்னமலை கவுண்டர் மாவட்டம் - கரூர் (புதியது).
18. பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் - பெரம்பலூர் (புதியது).
19. புதுக்கோட்டை மாவட்டம் - புதுக்கோட்டை.
20. தஞ்சாவூர் மாவட்டம் - தஞ்சை.
21. நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் - நாகப்பட்டினம்.
22. திண்டுக்கல் அண்ணா மாவட்டம் - திண்டுக்கல்.
23. மதுரை மாவட்டம் - மதுரை.
24. சிதம்பரனார் மாவட்டம் தூத்துக்குடி.
25. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் - திருநெல்வேலி.

## நான்காம் அட்டை சொல்லும் செய்தி

## தமிழக மின்திட்டத்தில் முதலீடு

அமெரிக்க சி.எம்.எஸ். மின்சாரக் கம்பெனியின் தலைவரும், அமெரிக்க மின் விநியோகக் கம்பெனி ஒன்றின் துணைத் தலைவருமான திரு விக்டர் பிரைலிங், சி.எம்.எஸ். கம்பெனியின் நிர்வாக இயக்குநர் திரு ஜேம்ஸ் குக், அந்தக் கம்பெனியின் திட்ட அமல் இயக்குநர் திரு அனில் மிஸ்ரா மற்றும் சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதர் திரு திமோத்தி ஹவுசர் ஆகியோர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை 28.7.95 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர்.

சி.எம்.எஸ். மின் நிலையம் அமைவதில் அமெரிக்க முதலீடு வருவதில் உள்ள இடையூறுகளை அவர்கள் எடுத்துக் கூறினார்கள். விரைவில் பணிகள் தொடங்கும் வகையில் பணிகளை விரைவுபடுத்தும்படி அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். இந்திய அரசிடமிருந்து 'கியாரண்டி' பெறுவதில், கால தாமதத்தை நீக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு உதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

மாண்புமிகு பொதுப்பணி மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன், தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., ஆகியோரும் இந்த ஆலோசனையின்போது உடனிருந்தார்கள்.

## போர்டு கார் நிறுவனத்தினர் சந்திப்பு

சென்னை அருகே ரூபாய் 2 ஆயிரம் கோடி முதலீட்டில் ஆண்டுக்கு ஒரு இலட்சம் கார் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது தொடர்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, போர்டு மகேந்திரா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட இருக்கும் திரு ஜான் சி. பார்க்கர், இந்தியச் செயல்பாடுகளுக்கான இயக்குநர், லூயிஸ் ஸ்பீர், போர்டு மோட்டார் உற்பத்திப் பிரிவு இயக்குநர் திரு ஜெப் பாடி ஆகியோர் தலைமைச் செயலகத்தில் 25.7.95 அன்று சந்தித்துப் பேசினார்கள்.

தமிழ்நாட்டில் கார் தொழிற்சாலை தொடங்கப்பட்டால், விரைவில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்போம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதி கூறினார்.

இறுதியான முடிவுடன் அடுத்த மாத இறுதியில் மீண்டும் வருவதாக போர்டு நிறுவனத்தினர் மாண்புமிகு முதல்வரிடம் கூறினார்கள்.

இந்தச் சந்திப்பின்போது சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதர் திரு டிமோதிபி ஹவுசர், தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., தொழில்துறை முதன்மைச் செயலாளர், திரு சி. இராமச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

முன்னதாக, போர்டு நிறுவனத்தினர் கார் தொழிற்சாலைக்காக, தமிழக அரசு தருவதாக இருந்த இடத்தைச் சுற்றிப் பார்த்தனர்.






### உலகத் தமிழ் மாநாட்டுக் கட்டுரைகள் அடைவு

ஆசிரியர்: முனைவர் தி. மகாலட்சுமி

வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113.

விலை: ரூ.35 பக்கம்: 214

இந்த ஆண்டின் தொடக்கத்தில், தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி வெளியிடப் பட்டுள்ள அரிய நூலாகும் இது. முந்திய ஏழு உலகத் தமிழ் மாநாடுகளிலும் படிக்கப்பட்ட ஆய்வரங்கக் கட்டுரைகள்_ மலர்க் கட்டுரைகளின் நூலடைவாகத் திகழ்கிறது.

இந்நாட்டில் வாழும் தமிழர்கள் மட்டுமன்றி, வேறு எந்நாட்டில் வாழும் தமிழர்களும் எண்ணியெண்ணி இறும்பூதெய்தும் வகையிலே நடைபெற்று வருகின்றன உலகத் தமிழ்மாநாடுகள். அம் மாநாடுகளில் நடைபெறும் கருத்தரங்குகளில் கருத்துச் செறிவுமிக்கக் கட்டுரைகள் கற்றறிவாளர்களால் படிக்கப்படுகின்றன. மாநாட்டு மலரை அணி செய்கின்றன. இடம்பெற்ற கட்டுரைகள் அனைத்தும் எவ்வெத் தலைப்புகளிலே அமைந்திருந்தன என்பது அறியப்பட்டால் இனி நிகழவிருக்கும் உலகத் தமிழ் மாநாடுகளிலே புதிய தலைப்புகள் தரப்படலாம் அல்லவா? இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே 'உலகத் தமிழ் மாநாட்டுக் கட்டுரைகள் அடைவு' என்கிற இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

மூன்று இயல்களைக் கொண்டு விளங்குகிற இந்நூல் தமிழறிஞர்கள் விரும்பி வரவேற்கும்படியான நன்னூல்.

—'சோழராஜா'

### வாசன் தமிழ் நீதிச் செல்வம்

உரையாசிரியர்கள்: புலவர் ச. சீனிவாசன், வித்துவான் நா. பழனியப்பன்

வெளியீடு: சாந்தா பப்ளிஷர்ஸ், 5, ஸ்ரீபுரம் 2வது தெரு, சென்னை - 600 014.

விலை: ரூ.35 பக்கம்: 506

'செல்வத்துட் செல்வம், நீதிச் செல்வம்' என்று சொல்லக்கூடிய வகையில், தமிழ் மொழியில் ஏராளமான நீதி புகட்டக்கூடிய அரிய செல்வங்கள் குவிந்துள்ளன. அவற்றுள் பன்னிரண்டு செல்வங்களை உள்ளடக்கியதாக இத் தொகுப்பு அழகுறத் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, உலகநீதி, மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிவெண்பா, நீதிநெறி விளக்கம், அறநெறிச்சாரம், புதிய ஆத்திசூடி பாரதியார், பாரதிதாசன் ஆத்திசூடி ஆகிய பன்னிரண்டு நூல்களே அவை.

எளிதாக நினைவில் வைப்பதற்கும், ஒரு சேரவைத்து ஆய்வு செய்வதற்கும், கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் இந்நூல் பெரிதும் உதவும்.

காலத்துக்கு ஏற்ற வகையில், எளிய இனிய நடையில் எல்லாத் திறத்தாரும் படிப்பதற்கு ஏற்றவகையில் உரை விளக்கம் அமைந்துள்ளது இதன் தனிச் சிறப்பு. குறிப்பாக, பள்ளி மாணவர்களுக்குப் பயன்படும் கருத்துக் கருவூலம் இது.

—பி.வி. கிரி

### திருக்குறளும் புதுமைக் கருத்துக்களும்

ஆசிரியர்: அ.கி. பரந்தாமனார்

வெளியீடு: அல்லி நிலையம், 19, முத்து முதலித் தெரு, சென்னை 600 007

விலை: ரூ.15 பக்: 96

உலகப் பொதுமறையாம் திருக்குறளை, உலகப் பேரறிஞர்கள் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளார்கள் - ஆராய்ந்து வருகிறார்கள். இந்நூலில், அரசியல், பொருளாதாரம், பண்பாடு, உடல் நலவழி, சர்வோதயம் ஆகிய புதுமைக்கருத்துக்கள் ஆராயப்பட்டு உள்ளன. தமிழ் ஆர்வலருக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில், நூலில் கருத்து மணிகள் ஒளிவீசுகின்றன. ஆசிரியரின் தெளிவான சிந்தனை, நடை எல்லாம் மனத்தில் பதியத் தக்கனவாய் இருக்கின்றன.

### அமரத்துவத்தை நோக்கி

வெளியீடு: மகரிஷி க. அருணாசலம் அறக்கட்டளை, தமிழ்நாடு சர்வோதய மண்டல்.

விலை 12 பக்கம் 114

மகரிஷி க. அருணாசலம் அவர்களின் 85-வது பிறந்தநாள் விழா

'நூலநயம்' பகுதிக்கு, இரண்டு படிகள் நூல்கள் அனுப்ப வேண்டும்.

விற்கு வந்த வாழ்த்துச் செய்திகளின் தொகுப்பு இந்நூல்.

திரு அருணாசலம் உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் கல்வி பயின்று, பல்கலைக் கழகங்களில் சிறந்த பதவிகள் வகித்ததாலும், தலைசிறந்த ஆன்மீகவாதியாக, சிறந்த காந்தீயவாதியாக தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் என்பதை இந்நூல் கோடிட்டுக் காட்டுகிறது.

### உலகில் பெண்ணே சிறந்தவள்

ஆசிரியர்: இலக்கியச் சித்தர் தங்கவயல் லோகிதாசன்

வெளியீடு: தங்கவயல் பதிப்பகம்
52, முத்து முதலி தெரு,
சென்னை 600 014.

விலை ரூ.17 பக்கம் 136

**பெ**ண்களின் அறிவாற்றல், இதிகாசங்களில், சரித்திரத்தில் அவர்களின் பங்கு, மற்றும் சமயங்களில் பெண்கள், பெண் கவிஞர்கள், முதலான சிறப்புகளை எளிமையாக அழகாக எடுத்துக்கூறுகிறது இந்நூல்.

### 'அழகிய அந்தமரன்'

ஆசிரியர்: கடவூர் மணிமாறன்

வெளியீடு: விடியல்
வெளியீட்டகம்,
109, மேலைத் தெரு,
கிருட்டிணராயபுரம்,
639 102.
திருச்சி மாவட்டம்.

விலை: ரூ.25 பக்கம்: 160

**வி**.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கச் சார்பில், பல்துறைப் பெருமக்கள் ஒன்று கூடி தங்கள் தொழில், பதவி அனைத்தையும் மறந்து தமிழ்க் கவிஞர்களாய் அந்தமான் தீவுக்குச் சென்று திரும்பிய அனுபவ நூல் இது.

கப்பலிலேயே பாட்டரங்கம், நூல் வெளியீட்டு விழா, பட்டிமன்றம் என்று நிகழ்ந்த பல புதுமைகளை விவரிக்கிறது இந்நூல்.

### உணவும் வாழ்வும்

ஆசிரியர்: பிக்ஷு சுவாமிகள்

வெளியீடு: தமிழ்நாடு இயற்கை மருத்துவச் சங்கம்,
காந்தி நினைவு நிதி,
மதுரை - 625 020.

விலை: ரூ.15.00 பக்கம்: 142

**ப**ல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்ததன் பயனாகவும், நோயாளிக்குச் சிகிச்சை செய்து வந்ததன் பயனாகவும், சிகிச்சையில் உணவுச் சிகிச்சையே சிறந்தது என்கிறது இந்நூல்.

நான்கு பாகங்களாகப் பிரித்து எழுதப்பட்டுள்ள இந்நூலில் இயற்கை உணவு, உபவாசம், உணவு வகைகள், எவ்வாறு உண்பது? நோயும் அதற்கான உணவு வகைகளும், உணவுக்குத் துணைக் கருவிகளான ஒத்தடம், மட்புச்சு, தொட்டிக் குளியல், யோகாசனம் போன்றவையும், உண்ண வேண்டிய உணவுகளும் அவற்றின் குணங்களும் என்று மிக விரிவாக, எழுதப்பட்டுள்ள பயனுள்ள நூல் இது.

—குமாரசாமி



### குணவாகடம்

பதிப்பாசிரியர்: முனைவர் வே. நெடுஞ்செழியன்

வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம்,
தரமணி,
சென்னை 600 113

பக்கம்: 189 விலை ரூ.40

**ப**ழம்பெருஞ் சுவடிகளைத் தேடிப்பிடித்து, அவற்றைத் தனி நூலாக வெளியிடும் பெருமையைப் பெற்றிருக்கிறது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். அவ்வமைப்பின் மூலம் அவ்வாறாக வெளியிடப்பட்டிருப்பதே 'குணவாகடம்' என்கிற இந்த நூல்.

சிந்து வெளியில் தோன்றிய தாகக் கருதப்படும் சித்தமருத்துவம் தொடர்பான இந்நூல், அகத்தியரால் எழுதப்பட்டது என எண்ணப்படுகிறது. வட நாட்டிலும் தென்னாட்டிலும் 37 அகத்தியர்கள் இருந்தார்கள் எனக் குறிப்புகள் பல உள்ளன. இந்நிலையில் இதை இயற்றியவர் கி.பி.16-ஆம் நூற்றாண்டினராக இருக்கலாம் எனப் படுகிறது.

இந்த நூலில் நோய்கள் ஆராயப்படுகின்றன. நோய்களின் குறி குணங்கள் சொல்லப் படுகின்றன. அவற்றின் தன்மைகள், நோய் தீர்க்கும் வழிவகைகள் தெரிவிக்கப்படுகின்றன.

பழஞ்சுவடிகளில் உள்ள பைந்தமிழை இவ்வாறு நூலாக்கிய பெருமுயற்சியில் வெற்றி கண்டிருக்கிறார் பதிப்பாசிரியர்.

ஆகமொத்தத்தில் சித்த மருத்துவத்துறைக்குச் சிறந்த புதையல் போல் உருவாக்கித் தரப்பட்டிருக்கிறது இந்நூல்.

—'முடிகொண்டான்'



# இலக்கியத்தில் காதல்

## புலவர் இளஞ்செழியன்

**எ**ன்தொண்டை வெண்கலத்தில்
வார்த்தெடுத்த
தொண்டை, தொண்டை; எனினும் இந்த
என்தொண்டை தன்னோடு என்றனுக்குச்
சண்டை சண்டை; பொறுத்துக் கொள்வீர்!
ஓடையிலே பூக்காத
ஒய்யாரத் தாமரையே, தமிழே! வெப்பக்
கோடையிலும் எனக்குநல்ல
குளிர்தருவாய் விளங்குகின்ற
தமிழே! அந்தப்
பாடையிலே ஏறும்நாள்
வரைக்கும்என் பக்கம்வரும்
தமிழே! இந்த
மேடையிலே என்கவிதை
மிதந்துவரச் செய்பவளே,
வணங்குகின்றேன்!

தஞ்சையிலே விளைந்துவரும்
செந்நெல் நீ, கன்னல் நீ!
உன்னைத் தூக்கிக்
கொஞ்சையிலே இங்கேநான்
எதைநினைப்பேன்! என்னையே நான்
மறந்து போவேன்!
புஞ்சையிலே பிறந்தவன்நான்.
புழுதியிலே வளர்ந்தவன்நான்.
தமிழே உன்னைத்
தஞ்சையிலே படித்ததனால்
தகுதிபெற்றேன் - புலவனானேன்,
பாடுகின்றேன்.

தாயிருந்து நடத்துகின்ற
தக்கதொரு தஞ்சைநகர்
தமிழ்மாநாட்டில்,
வாயிருந்து பாடுகின்ற
வாய்ப்பு எனக்குக் கிட்டியதால்
பாடுகின்றேன்!
காயிருந்து, கனியாத
கசப்புடைய மனமுடையோர்
இம்மா நாட்டை
நோயிருந்த கண்களுடன்
நோக்குகின்றார், தாக்குகின்றார்;
தாக்கிடட்டும்

இருக்கின்ற நிலைமாற்ற
ஒரு புரட்சி மனப்பான்மை
இந்த நாட்டில்
இருக்கின்றதா என்று
எண்ணி எண்ணிப் பார்க்கின்ற
தலைவியன்றோ
இருக்கின்றார் இன்று!
இவரையன்றித் தமிழுக்கு
ஏற்றம் சேர்க்க
இருக்கின்றாராஇங்கே
இன்னும்ஒரு தலைவர்? நீர

எண்ணிப் பாரீர்!

வரமாக வந்துதித்து
வாய்த்திருக்கும் தமிழகத்தின்
முதலமைச்சர்
கரமாக நான்எனது
கவிதைகளை அவருக்குப்
படைத்திருப்பேன்
உரமாக நான்இருப்பேன்.
உயர்வாக அவருடைய
புகழைச் சொல்வேன்.
தரமாக என்னுடைய
தமிழ்இருக்க முதலமைச்சர்
தருவாய் நிற்பார்.

இவரைப்போல் முதலமைச்சர்
இன்னுமொரு நூற்றாண்டு
போனபோதும் எவர் வருவார்?
எவர்வந்த போதினிலும்
இவரைப்போல்
தொண்டா செய்வார்?
அவர் வருவார், இவர் வருவார்,
ஆளுதற்கென்றே நீர் அலைந்திடாதீர்!
இவரேதான் எப்பொழுதும்
முதலமைச்சராய் வருவார்.
வணங்கு கின்றேன் !

கவியரங்கைத் தொடங்கிவைத்த
கவியரசி இந்திரகுமாரிக்கு
என் வணக்கம்.
செவியரங்கு பலருக்குச்
செம்மைநிலை தன்னில்இல்லை
என்பதாலே, கவிரங்கின் வழியாகக்
கருத்துக்கள் கூறியுள்ளீர்,
உங்கள் பேச்சால்
புவியரங்கு சீர்திருந்தும்,
புலமைநலம் மேன்மையுறும்,
புயல் அடங்கும்.

மந்திரமாய்ச் சொல்லிருக்கும்,
மல்லிகைகள் அதில்மணக்கும்,
பேசும் போது
எந்திரமாய் இருப்போரும்
எழுந்தோடி வந்துங்கள்
பேச்சைக் கேட்பர்.
சுதந்திரமாய்ப் பேசுகின்ற
சுயக்கவிதை வாணியே, ஓர்
சுடர் நிலாவே!
இந்திர குமாரியேஎன்
இதயத்தால் உங்களைநான்
வணங்கு கின்றேன்.

புரட்சித்தலைவியின்
போர்ப்படைத் தளபதிகளாக
வீற்றிருக்கின்ற அமைச்சர் பெருமக்களே!
உங்கள் அனைவருக்கும் என் வணக்கம்!





குருநாதர் சுரதாவே, எனக்கு வேறு
குலநாதர் உன்னை விட்டால் யாரும் இல்லை.
ஒருநாதர் நமக்கெல்லாம் உண்டு அந்த
உத்தமர்தான் பாவேந்தர். அவரை யன்றி
வருநாதன் கவித்துறையில் பலர் வந்தாலும்,
வரவேற்க முடியவில்லை என்னால், நீரே
குருநாதர், குலநாதர், கவிதைத் தூதர்
குளத்துமலர் தாமரையாய்க் குவிக்கின்
றேன்கை!

அவையோரே, அரங்கத்தில் எனை நீக்கி
அறுபடை வீடுபோல இருக்கின்ற
கவிஞர்களே, தீயதான
வினைநீக்கிப் பாடவல்லீர் என்பதால்நீர்
விதிநீக்கிப் பாடினும் குற்ற மில்லை.
தளை நீக்கிப் பாடினும், தமிழை நீக்கித்
தான் பாட ஒருநாளும் ஒப்ப மாட்டீர்.
பனை நோக்கிப் பாடாமல் வானை நோக்கிப்
பாடுங்கள், படையுங்கள், வணங்கு கின்றேன்!

அவையோரே, அரங்கத்தில் அமர்ந்துள் ளோரே
ஆசையிலே ஒரு துளியும் நரை தோன்றாத
அவையோரே! மீசைமட்டும் நரைத்துள் ளோரே!
அறுபதிலும் அவையோரே, காதல் தேடும்
அவையோரே, காதலிக்க நேரம் தன்னை
அன்றாடம் மறைவாக ஒதுக்கு கின்ற
அவையோரே, அரும்பான பருவத் தோரே!
அனைவரையும் இளஞ்செழியன் வணங்கு
கின்றேன்!

காதலுக்கு வழிவைத்துக் கொண்டு நல்ல
கருப்பாதை சாத்திக்கொண் டிருப்பபோரே,
ஏன்
காதலுக்கு மட்டும்அதை வைத்துக்
கொண்டீர்!
கருப்பாதை சாத்தியபின், இருவ ருக்கும்
ஆதரவாய் மிஞ்சுகின்ற ஒன்று அந்த
அன்புடைய நற்காதல் என்று தானே?
சாதலுக்குப் போகும்வரை துணை யிருக்கும்
காதலுக்கு இணையாக இன்னொன்று
இல்லை.

> பெண்களின் நிலை உயரும்போது, ஆண்களின் நிலையும் உயரும். இவ்விருவரின் நிலையும் உயரும்போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்து விடும்!
>
> –அண்ணல் காந்தியடிகள்

காதலுக்கு வயதில்லை. முதுமை யில்லை!
கண்ணற்ற ஒருவனுக்கும் காதல் தோன்றும்!
ஏதுமற்ற வறுமையிலும் சுடு நெருப்பாய்
எரிக்கின்ற காதலினை வெல்வார் இல்லை.
போதிமரப் புத்தனுக்கும், துறவு ஞானம்
பூத்தது அவன் காதலித்த பின்பே யாகும்!
வேதாந்தி என்பவனும் காதலுக்கு
விதிவிலக்காய் இருந்ததாக வரலாறு
இல்லை.

காதல் என்றால் காய்தல்தான்.
மருந்து இல்லாத
காய்ச்சல்தான் மேனியிலே மிஞ்சும், துஞ்சும்.
ஜோதிராம லிங்கராய்நாம் காதல் தன்னை
சுட்டெரிக்க முடியுமானால் வெற்றி கிட்டும்!
வீதியிலே தள்ளாடும் கிழவனையும் விட்டு
வைப்பதில்லை இந்தக் கெட்ட காதல்.
ஜாதிஇல்லை காதலுக்கு; காதல் செய்த
சாதனைகள், சரித்திரங்கள் கோடி கோடி!

அந்தியிலே சந்தியிலே காதல்; காட்டில்
அடர்ந்துள்ள தோப்பினிலே காதல்;சோற்றுப்
பந்தியிலே உண்ணுகையில் காதல்; வண்டிப்
பாதையிலே படுகையிலே காதல்; வேட்டித்
தொந்தியிலே மறைந்திருந்து காதல்; தண்ணீர்த்
துறையிலே காத்திருந்து காதல்; கோவில்
நந்தியிலே நின்றிருந்து காதல் ;இன்று
நம்முடைய காதலுக்கோர் கணக்கே இல்லை!
கொஞ்சம்இல்லை காதல்இங்கே!
கனாவில் இங்கே

**எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, 4.1.1995 அன்று நடைபெற்ற கவியரங்கில் 'காதல்' என்ற தலைப்பின்கீழ் பாடிய கவியரங்கக் கவிதையிலிருந்து.**

குஷ்புவுடன் காணுகின்றான் காதல்; ரோஜா
கொஞ்சவில்லை என்றவர்மேல் கூஜாக்
காதல்!
கூடாத காதல்களைக் காண்கின்றோம் நாம்.
தஞ்சாவூர் பொம்மையிடம் காதல்
கொள்ளும்
தன்மையைப் போல் ஆண்கள் இங்கே
மதிமயங்கி
பஞ்சாகி எங்கெங்கோ பறந்து சென்று
பரிதவித்துப் போகின்றார் காதலாலே!

படக்காதல் நிஜம் என்று நம்பு கின்றார்!
பலர்அதனால் வீணாகி வெம்பு கின்றார்.
படக் காதல் வாங்குகின்ற பணத்துக் காக
பறந்தோடி ஆடுகின்ற பாட்டுக் காதல்!
மடக் காதல். வாழ்க்கையிலே மலராக் காதல்!
மதிப்புள்ள காதல்நம் சங்க நூலில்
இடம்பெற்ற காதல் என்பேன். இனி நான்
அந்த
இலக்கணத்துக் காதலினை எடுத்துரைப்பேன்.

கண்டவுடன் அரும்புவதே நமது சங்க
காலத்தின் காதலாகும். ஆணும் பெண்ணும்
கண்டவுடன் கண்கலந்து அவர்கள் உள்ளம்
காத்திருக்க நேரமின்றிக் கலக்கு மானால்
பண்புஎந்தத் துறவுமின்றிப் பாயுமானால்
பணங்காசு பார்க்காமல் விரும்பு மானால்
உண்டங்கே காதல்என்பேன்! இயற்கை யான
உறவுக்குப் பெயரேதான் காதல் என்பேன்!

காரணத்தால் மலர்வதென்று காதல். நெஞ்சக்
காந்தத்தால் அதுமலரும். முத்து வைரத்
தோரணத்தால், தங்கத்தால் தாலி யாலே
துளிர்க்கின்ற கால்காசுக் காத லாகும்.
யாரென்று தெரியா ஓர் பெண்ணும் ஆணும்
செம்மண்ணில் பெய்தமழை நீர்போல் ஒன்று
சேர்வதுதான் காதலாகும். குறுந்தொகை
நூல்
செப்புகின்ற செய்தி இது அறிந்து கொள்வீர்!

குலம்வகுத்துத் தமிழகத்தைக் கெடுத்தோர்
உண்டு.
கொள்கைகளை வகுத்தவர்கள் தமிழர்கள்,
ஐந்து
நிலம்வகுத்து, அததற்குநெறி வகுத்து, நிலம்
தோறும் காதல் முறை வகுத்து நல்ல
வளம் வகுத்துத் தந்தார்கள் வையம் உய்ய,
வகுத்தவற்றில் நம்பிக்கை வளர்த்திட்
டார்கள்.
நிலவகுப்பில் குறிஞ்சி, முல்லை, மருதம்,
பாலை,
நெய்தல் என்று நேர்த்தியுடன் பெயர்வைத்
தார்கள்.

கூடுவது குறிஞ்சியாகும். காத லர்கள்
கொஞ்சுவதும் குறிஞ்சியாகும். பிரிந்து
நின்று
வாடுவது பாலையாகும். வரும் வரைக்கும்
வருந்துவது முல்லை யாகும். ஆற்றா
மையால்
தேடுவது இரங்கல் என்னும் நெய்தல் ஆகும்.
பிரிந்துவரும் தலைவனிடம் தலைவி வீட்டில்
ஊடுவது மருதமாகும். இவை அனைத்தும்
உணர்த்துவது தமிழர்களின் காதலாகும்.
தலைவன் என்னும் சொல்இந்த நாளில்
நாட்டின்
தலைவரையே குறிப்பதாகும். இலக்கி
யத்தில்
தலைவன் என்றும் தலைவி என்றும் காதல்
செய்தோர்
தமையேநாம் கூறுவது வழக்க மாகும்.
தலைவன் தலைவிஎன்று காதல் தன்னை
தாங்கும் இந்த அமைப்புமுறை உலகில் எந்த
இலக்கியத்திலும் காணாப் புதுமை யாகும்!





## வனம்

**இந்தியாவின் வனப்பகுதி 7.5 கோடி எக்டேர் ஆகும். இது மொத்த நிலப்பரப்பில் 22 சதவிகிதம். இங்கு 45,000 வகையான தாவரங்கள் காணக் கிடைக்கின்றன. இவற்றுள் 5,000 வகைகள் இந்தியாவிற்கே உரித்தானவை. நமது காடுகளில் 81,000 உயிரினங்கள் உள்ளன. இவற்றுள் பறவை வகைகளின் எண்ணிக்கை மட்டுமே 1,228 ஆகும். 57,525 வகையான பூச்சிகள் காணக் கிடைக்கின்றன.**

**தற்போது இந்தியாவில் 75 தேசியப் பூங்காக்களும், 421 வன விலங்குச் சரணாலயங்களும், புலிகளைக் காப்பதற்கான சிறப்புத் திட்டப் பகுதிகள் 21-ம், உயிரின வளத்தைப் பாதுகாப்பதற்கான 8 சிறப்புப் பகுதிகளும் உள்ளன. இவற்றின் மொத்தப் பரப்பளவு இந்திய நிலப்பகுதியில் 4.3 சதவிகிதம் ஆகும்.**

# அறிவியல் வளர்ப்போம்!

**கவிஞர் வி.மு. உலகநாதன்**

இன்று நமக்குத் தேவை எது? - அதை
எண்ணிச் செய்தல் நலமாகும்.
என்றும் வாழ்வில் முன்னேற - அந்த
இனிதாம் அறிவியல் சிறப்பாகும்!
(இன்று)

ஆக்கம் நல்கும் அறிவியலே - நம்மை
அழகாய் வாழ வகைசெய்யும்.
ஊக்கம் கொண்டே நாமெல்லாம் - நாளும்
உழைப்போம் புதுமை நலங்காண்போம்!
(இன்று)

அழிவே செய்யும் பொருள்களையே -
காணும்
அறிவியல் மனத்தைச் செலுத்தாமல்,
பழியே இல்லாப் புதுமைகளைக் - கண்டு
படைத்தல் அறிவியல் நெறியாகும்!
(இன்று)

பற்றாக் குறையைப் போக்குவதற்கு -
அறிவுப்
பண்பைப் போற்றல் கடனாகும்.
பற்றால் நாட்டின் நலங்காக்க - இன்பப்
பயனாம் அறிவியல் வளர்த்திடுவோம்!
(இன்று)

## கல்வி



**வரும் 2000-மாவது ஆண்டுக்குள் எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி அளிக்க இலக்கு உள்ளது. தற்போது இந்தியா கல்விக்கு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. நாட்டில் தற்போது 7.5 இலட்சம் ஆரம்ப மற்றும் உயர் தொடக்கப்பள்ளிகள் உள்ளன.**

**ஆறு வயது முதல் 14 வயதுக்கு உட்பட்ட 17 கோடி குழந்தைகள் உள்ளனர். இதில் 14.5 கோடி குழந்தைகள் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். 90 சதவிகித குழந்தைகளுக்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்திலேயே ஆரம்பப் பள்ளிகள் உள்ளன.**

# கணிப்பொறி என்றால் என்ன?



'கணக்கிடும் செயல்களைச் செய்யக்கூடிய ஒரு பொறியே' கணிப்பொறி. கணிப்பொறியின் அடிப்படைச் செயல்களை மூன்றாகப் பிரித்துக் குறிப்பிடலாம்:

1. அது, எண்களைக் கூட்டுகிறது.

2. அது, விவரங்களைக் கணிப்பொறியின் ஒரு பகுதியிலிருந்து வேறு பகுதிக்கு மாற்றித் தருகிறது.

3. அதன் செயல்களின் விளைவாக எளிமையான முடிவுகளை எடுக்கிறது.

இந்த மூன்று செயல்களைக் கூட கணிப்பொறியின் மிக மிக அடிப்படையான உறுப்புகள் வெறும் கூட்டல்களின் மூலமே செய்கின்றன. கணிப்பொறிக்கு உண்மையில் கூட்டுவதற்குத் தான் தெரியும். கூட்டலின் மூலமே அது கழித்தல், வகுத்தல், பெருக்கல் ஆகிய கணிதச் செயல்களைக்கூட செய்து தருகிறது. இதற்கான ஏற்பாடுகளைக் கணிப்பொறி இயந்திரத்தினைத் தயாரித்துத் தருபவர்களே செய்து விடுகிறார்கள் என்பதால், இது பற்றிக் கணிப்பொறியினைப் பயன்படுத்துபவர்கள் அதிகம் கவலைப்படத் தேவையில்லை.

கணிப்பொறியினை எத்தகைய வேலைகளுக்குப் பயன்படுத்தலாம்? மனிதனின் அடிப்படை கணக்கிடும் செயல் 'எண்ணுதல்' அல்லது 'கூட்டுதலே' என்பதால் மனிதன் செய்யக்கூடிய, பெரும்பாலான வேலைகளைக் கணிப்பொறி மூலம் செய்யலாம். மனிதன் தன்னுடைய அறிவினைப் பயன்படுத்தி செய்யக்கூடிய வேலைகள் யாவையும் கணிப்பொறி செய்யும் திறன்படைத்தது.

கணிப்பொறியானது கணக்கிடும் செயலை மட்டுமே செய்யக்கூடியதாக இருந்தால் அதற்கு இவ்வளவு பெருமைகள் கிடைத்திருக்காது. கட்டளையிடக்கூடியதாக இருப்பதே இதன் சிறப்புக்குக் காரணமாகும்.

**கட்டளையிடக்கூடியது என்றால் என்ன?**

கணிப்பொறியிடம் பல சொற்களால் அடங்கிய ஆணைகளின்படி அதற்குக் கொடுக்கப்படுகின்ற எவ்வளவு தகவல்களையும் அது தானியங்கியாகச் செயல்பட்டு நாம் கேட்கிற விடைகளைத் தரக்கூடியதாக உள்ளது. தானியங்கியாகச் சொன்னபடி கேட்டுச் செய்யக்கூடிய தன்மையும், மிகவும் விரைவான செயல்முறையும் அதற்கு அளவற்ற சக்தியினையும், வல்லமையையும் தருகின்றது.

எல்லாக் கணிப்பொறிகளுக்கும் உள்ளீடு (Input) மையச் செயலகம் (Central Processing Unit) வெளியீடு (Output) ஆகிய மூன்று செயல்களுக்கான அலகுகள் உள்ளன.

'உள்ளீடு' என்பது கணிப்பொறியினுள் நாம் செலுத்த வேண்டிய தகவல்கள், கட்டளை ஆகியவற்றை உள்ளே வாங்கிக் கொள்கின்ற கணிப்பொறியின் உறுப்பாகும். மையச் செயலகத்தினுள் 'நினைவகம்' (Memory Unit) கணித அளவை அலகு (Arithmetic Logic Unit) கட்டுப்பாட்டு அலகு (Control Unit) ஆகிய மூன்று பெரும் பிரிவுகள் உண்டு.

நினைவகம் கணிப்பொறியினுள் செலுத்தப்பட்ட விவரங்களையும், ஆணைகளையும் சிறப்புக் குறியீடுகளின் மூலம் தன்னுடைய இடத்தில் இருப்பு வைத்துக் கொள்கிறது. கணித அளவை, அலகு கணிப்பொறியில் செலுத்தப்பட்ட விவரங்களைக் கூட்டல், கழித்தல், போன்ற கணக்கீடுகளைச் செய்தும், பெறப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு முடிவுகளை எடுத்தும் செயலாற்றுகிறது.

கட்டுப்பாட்டு அலகானது மையச் செயலகம் சரியான முறையில் பணிகளைச் செய்கிறதா என்று கண்காணித்துச் செயல்படுத்தி வைக்கின்றது.

வெளியீடு என்பது, நாம் வேண்டுகின்ற விடைகளை நமக்குத் தருகின்ற உறுப்பாகும். மையச் செயலகமே கணிப்பொறியில் 'மூளை'யாகச் செயல்படுகின்றது.

**நன்றி: 'கணிப்பொறியின் பயன்கள்' திரு. இராம்குமார்.**



# தமிழ் வளர்ச்சி: "பற்றாளர்களே பகையாகக் கூடாது!"

–டாக்டர் வ.செ. குழந்தைசாமி

**20**-வது நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இருக்கும் நாம், இன்றைய நிலையையும் ஆய்ந்து பார்ப்போமேயானால் ஒரு விந்தையான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. பழைய காலத்தில் ஒரு நாட்டில் ஏழைகள் இருந்தார்கள்; செல்வந்தர்கள் இருந்தார்கள். ஆனால் இன்றைய உலகில் செல்வந்த நாடுகள், முன்னேறிய நாடுகள் என்று ஒரு பகுதி- ஏழை நாடுகள் என்று ஒரு பகுதி!

உலகிலே இரு வகையாக, இரு வகையான நாடுகளாகப் பிரிந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை என்றும் இருந்ததில்லை. ஒரு புறம் ஏழை நாடுகள்; இன்னொரு புறம் செல்வந்தர்கள் நாடுகள்.

இந்த முன்னேறிய செல்வம் படைத்த நாடுகளில் இருக்கும் மக்களின் தொகை 23 சதவிகிதம்; இந்த ஏழை நாடுகள் அல்லது முன்னேறிக் கொண்டு இருக்கும் நாடுகள் என்று கூறுகிறோமே? அங்கு இருக்கும் மக்கள் தொகை 77 சதவிகிதம். முன்னேறியுள்ள நாடுகளில் இருக்கும் அந்த 23 சதவிகித மக்கள் உலக வளத்தின் 80 சதவிகிதத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்!

இந்த உலகில் எந்த நாளிலும் இல்லாதிருந்த ஒரு நிலையை நாம் 20-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பார்க்கிறோம். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாவதற்குக் காரணம் என்னவென்றால், இந்த முன்னேறிய நாடுகளின் நிலப்பரப்பு அல்ல; முன்னேறிய நாடுகளின் இயற்கை வளங்கள் அல்ல; முன்னேறிய நாடுகளின் மக்கள் தொகை அல்ல; அவர்கள் பேசும்மொழி அல்ல; அவர்கள் பின்பற்றும் மதம்கூட அல்ல.

மூன்றே மூன்று அடிப்படைக் காரணங்களினால் இன்று முன்னேறிய நாடுகளின் 23 சதவிகித மக்கள், உலகின் 80 சதவிகித வளங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மூன்று காரணங்களில் ஒன்று— அறிவுத் துறைகளில் அவர்கள் அடைந்திருக்கும் உச்ச நிலை. அதுவும் அறிவியல் தொழில்துறையில் அவர்கள் அடைந்திருக்கும் உச்ச நிலை.

இரண்டாவதாக – அறிவியல் தொழில்நுட்பத்தில் புதியனவற்றைப் படைக்கும் ஆற்றல்.

மூன்றாவதாக – இப்படி புதியனவாகப் படைத்தவற்றை அந்தப் பொதுமக்கள் பொருளாதார வளர்ச்சிக்காக, சமுதாய வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு திறமை!

இந்த மூன்றும் இவ்வளவு முக்கியத்துவம் பெற்று இருக்கும் போது, நமது நிலைமை என்ன?

இன்று ஓரளவுக்கு அறிவுத் துறையில் புதியனவற்றைப் புனையக்கூடிய ஆராய்ச்சிக் கூடங்கள் இருக்கின்றன. ஆனால் கற்றவற்றை, ஆராய்ச்சிக் கூடங்களில் புனைந்து, புதியனவற்றைப் பொதுமக்கள் அளவில் பரந்த அளவில் மாநிலத்தில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய திறன் பெற்ற மக்களை நாம் இன்று உருவாக்கவில்லை.

இன்று இருக்கும் நிலை எப்படி என்றால், ஒரு அணைக் கட்டு கட்டி ஏராளமான தண்ணீரைத் தேக்கி வைத்திருக்கிறோம். அதற்குப் பெரிய முதலீட்டையும் செய்திருக்கிறோம். ஆனால் அதுமட்டும் மக்களுக்குப் பயன்படுவதில்லை. அங்கிருந்து பெரிய கால்வாய் வேண்டும். பின்னர் சிறிய கால்வாய் வேண்டும். அதுவும் போதாது. அதைப் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு நிலம் பண்படுத்தப்பட வேண்டும். பயன்படுத்தக்கூடிய திறன் வாய்ந்த வேளாண்மையாளர்களும் இருக்கவேண்டும்.

இன்று நமது நிலை என்னவென்றால், தேக்கப்பட்ட அணையிலே தண்ணீர் இருக்கிறது. அதுபோன்று ஆய்வு நிறைகள் இருக்கின்றன. அதைப் பயன்படுத்தக்கூடிய திறமையுடைய மக்களை நாம் உருவாக்கவில்லை.

நான் ஒரு சான்று கூற விரும்புகிறேன். 1960-லிருந்து 1985 வரை, உலக வளம் இரண்டு மடங்காகி இருக்கிறது. இப்படி இரண்டு மடங்காக இருக்கும் இந்த உலக வளம் எல்லோருக்கும் சேர்ந்து இருக்கிறதா என்றால் 100க்கு 90 பேர் படித்த நாடுகளுக்கு மட்டும் இந்த உலக வளம் போய்ச் சேர்ந்திருக்கிறது. ஓரளவு 100க்கு 50 பேருக்குமேல் படித்தவர்களுக்கு ஒரு சிறிய பங்கு போய்ச்சேர்ந்தது. 50 பேருக்கும் கீழான படித்தவர்கள் உள்ள நாட்டுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை.

50 பேருக்குக் கீழான படித்தவர்களுடைய நாட்டுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை. எனவே, இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனைத் தமிழ் மக்கள் பெறவேண்டுமானால், தமிழ் நிலம் வளம்பெறவேண்டுமானால் பண்டைக்காலம் தொட்டுப் பேசப்பட்டுவரும் பசிப்பிணி இந்த நாட்டிலிருந்து அகல வேண்டுமானால், அறிவியல் அறிஞர்களுடைய கல்வி மட்டும் போதாது; அவர்களுடைய கண்டுபிடிப்பு மட்டும் போதாது; இவற்றைப் பயன்படுத்தக்கூடிய பரந்த மக்கள் தொகையை நாம் உருவாக்கவேண்டும்.

எனவே, அந்த அடிப்படையில் பார்க்கும்போது கல்லூரி அங்கத்திலோ அல்லது பல்கலைக்கழக அரங்கத்திலோ 'அறிவியலும், தமிழும்' என்று பேசுவது மட்டுமின்றி, இப்படிப் பட்ட பொதுமக்கள் அரங்கத்திலும் அது பேசப்பட வேண்டியது தேவையாகிறது.

அதற்கு முக்கியமாக வேண்டியது, எல்லா மட்டத்திலும் அறிவியலைத் தமிழில்

> **இறைவனை இரண்டு வழிகளில் அணுகமுடியும். ஒன்று இசையால் மற்றொன்று கடுமையான தவத்தால். மந்திரங்கள் ஓதுவது மட்டும் தவமாகாது. தவம், மனதை ஐக்கியப் படுத்துவதன்மூலம் கிடைக்கும். இசைக்கும் போதும் மனம் ஐக்கிய மாகத்தான் வேண்டும்!**
>
> **–டாக்டர் எம்ஜி.ஆர்.**

படித்திருக்கவேண்டும். எந்தவொரு அறிவுத்துறை தாய் மொழியில் இல்லையோ, அந்த அறிவுத்துறை சமுதாயத்திற்குச் சொந்தமானது அல்ல. நானோ, அல்லது மற்ற சிலரோ மட்டும் அறிவியல் கல்வித்துறையில் மேம்பட்டு இருப்பது எந்த விதத்திலும் மக்களுக்குப் பயன்படக்கூடிய ஒன்று அல்ல. அது தேக்கிவைக்கப்பட்ட நீர்-அணையில் இருக்கும் நீரைப் போன்றது. அது மக்கள் மன்றத்தில் சேரவேண்டுமானால் அந்த அறிவியல் துறை, தொழில் நுட்பத்துறை மக்கள் மொழியில் இருக்கவேண்டும்.

எது மக்கள் மொழியில் இல்லையோ, எது சமுதாயத்தின் மொழியில் இல்லையோ அது சமுதாயத்திற்குச் சொந்தமானதாகாது. எனவேதான், இன்று நாம் பயிற்று மொழி பற்றி அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம்; நீண்ட நாளாகப் பேசிக்கொண்டிருக்கிறோம்.

இந்தப் பயிற்றுமொழி என்று வரும்போது நான் ஒரு குறளை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

'வினைவலியும் தன்வலியும்
மாற்றான் வலியும்
துணைவலியும் தூங்கிச்
செயல்.

அறிவியல் தொழில்நுட்பத்தைத் தமிழில் கொண்டுவர வேண்டுமானால் அதன் அளவு என்ன, பரிமாணம் என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்று கணிப்பொறி போன்ற ஒரு துறையை எடுத்துக் கொண்டால் ஐந்தாண்டுகளுக்குள் அறிவுத்துறை இரட்டிப்பு ஆகிறது. மின்சாரம் போன்ற ஒரு தொழிலை எடுத்துக்கொண்டால் 10 ஆண்டுகளில் அந்தத் துறை அறிவு இரண்டு மடங்காகிறது. மற்ற 'மெக்கானிக்கல் எஞ்சினீயரிங்', 'இயற்பொறியியல்' போன்ற துறைகளை எடுத்துக் கொண்டால், 10லிருந்து 15 ஆண்டுகளுக்குள் அது இரட்டிப்பு ஆகியது. இந்த வேகத்தையும் நாம் தாக்குப் பிடிக்க வேண்டும். அதே சமயத்தில் இதுவரை வளர்ந்துள்ள அறிவியல் கலைகளையும் தமிழில் கொடுக்கவேண்டும். இதுதான் இன்றிருக்கும் வினையின் வலி. தன் வலி.

நமது வலிமை என்ன என்பதை நாம் எண்ணிப் பார்ப்போமேயானால் ஒன்று சங்க காலத்திற்குப் பிறகு களப்பிரர் காலம் வந்தபோது, பாலி மொழியும், வட மொழியும் ஆட்சி மொழிகளாக இருந்தன.

பல்லவர் காலத்திற்கு வந்தபோது வட மொழி ஆட்சிமொழியாக இருந்தது.

பிறகு, சோழர், பாண்டியர் இடைவெளி தாண்டி நாயக்கர் காலத்திற்கு வந்தபோது 'சான்ஸ் கிரிட்டைஸ்டு தெலுகு'- 'வட மொழி வயப்பட்ட தெலுங்கு' ஆட்சி மொழியாக இருந்தது.

மொகலாயர் காலத்தில் அரேபிய மொழியும், பார்சிய மொழியும் ஆட்சி மொழியாக இருந்தது.

அவர்களுக்குப் பின் வந்த ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்தது.

> **அறிவினாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை: அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்!**
>
> **–அறிஞர் அண்ணா**

கிட்டத்தட்ட இந்த 2 ஆயிரம் ஆண்டுத் தமிழர் வரலாற்றில் 1,300 ஆண்டுகள் தமிழ ஆட்சி மொழியாக இருந்து வளரக் கூடிய வாய்ப்பை இழந்து நின்றிருக்கிறது என்பதை முக்கியமாக நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்று இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கும் எந்த மொழிக்கும் இப்படிப்பட்ட ஒரு நிலை இருந்ததாக நமக்குத் தெரியவில்லை. இது ஒரு குறைபாடு!

இரண்டாவதாக, மனித வளர்ச்சியை நாம் இன்று மூன்று யுகங்களாகப் பிரிக்க முடியும். வேளாண்மை யுகம், தொழில் யுகம், உயர் தொழில்நுட்ப யுகம் ஆகியவையே அவை. வேளாண்மை யுகம் 18-வது நூற்றாண்டில் ஓரளவிற்கு முடிவுக்கு வந்து, அதன் இறுதியில் தொழில் யுகம் உருவாகியது. 1950க்குப் பின்னர் 20-வது நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து உயர் தொழில்நுட்பம் உருவாகியது. 18-வது நூற்றாண்டில் இருந்து 1950 வரையுள்ள காலப்பகுதி மிகக் குறுகியதானாலும் மனித சமுதாயத்தின் ஒரு முழு யுகம் அது என்று நாம் கொள்ளவேண்டும்.

அதற்குப் பிறகு இந்த 50 ஆண்டுகள் மூன்றாவது யுகத்தின் ஆரம்பப் பகுதி. இந்தப் பகுதியில் வளர்ந்த அறிவுத் துறைகள் அத்தனையும் தமிழ் வளரக் கூடிய வாய்ப்பை இழந்துவிட்டது. எனவே, பழமையை நாம் ஈடுசெய்யவேண்டும். புதிதாக உருவாக்கப்பட்ட அறிவுத் துறையைத் தமிழில் கொண்டுவர வேண்டும். எனவே, நம்முன் ஒரு சாதாரண பணியன்று; ஒரு மகத்தான பணி இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அடுத்தாற்போல் மாற்றான் வலி. நமக்கு மாற்றான் என்று வேறுயாரும் வெளியிலிருந்து கிடையாது. நமக்குத் தமிழ் வளர்ச்சியைப் பற்றி பகைவர்கள் என்று இருப்பார்களானால் அதிலே மிகப் பெரிய பங்கு வகிக்கும் பகைவர்கள் நாமேதான்.

ஏனென்றால், தமிழால் முடியுமா? இப்படி ஒரு பெரிய விவாதம். எப்படியோ தமிழகத்தில் எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் அதை வாதப் பொருளாக்குவது என்பது நமது பண்பாடாக வளர்ந்துவிட்டது. கிட்டத்தட்ட பட்டிமன்றம் என்பது இன்று நடக்கும் ஒன்று அல்ல. அது கிட்டத்தட்ட தமிழர் பண்பாட்டின் ஒரு பகுதியாகவே இருந்துவருகிறது.

ஹீப்ரோ மொழி என்பது பேச்சு மொழியாகக்கூட இருக்கவில்லை. இன்று இஸ்ரேல் இருக்கும் பகுதியில் ஆஸ்திரேலியாவில் இருந்து யூதர்கள், ஜெர்மனியில் இருந்து யூதர்கள், அமெரிக்காவில் இருந்து யூதர்கள்- யாருக்கும் ஹீப்ரோ மொழி தெரியாது. அவர்கள் அந்தந்த நாட்டு மொழியைத்

**உடைமாறுவது முக்கியமல்ல; உள்ளம் மாறுவதும் உயர்ந்த கருத்துக்கள் உள்ளத்தில் பதிவதும்தான் மிக முக்கியம்.**

***அறிஞர் அண்ணா***

தான் பேசி வந்தார்கள்.

அதற்குப் பிறகு அவர்கள் இஸ்ரேல் என்று கூறப்படும் நாட்டுக்கு வந்து ஓரளவுக்கு வழக்கிழந்துபோய் ஆங்காங்கே கலோக்கிய மொழி என்ற அளவிலே பேசிக் கொண்டு இருந்த மொழியை இன்று ஒரு இலக்கிய மொழியாகி, பள்ளியிலிருந்து பி.எச்டி., பட்டம் வரை இன்று ஹீப்ரோ மொழியில் தான் இருக்கும் அளவுக்கு நமக்குப் பின்னர் அந்த நாட்டை ஏற்படுத்தியவர்கள் செய்திருக்க முடியுமானால் 2,500 ஆண்டு பாரம்பரியமுள்ள ஒரு மொழியில் முடியுமா என்ற கேள்வியை எழுப்புவது நமது பண்பாட்டில் இருக்கும் ஒரு அடிப்படைக் குறை என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இரண்டாவதாக, தமிழைப் பயிற்சி மொழியாக்குவதில் ஒரு முனைப்பட்ட நோக்கு, ஒரு முனைப்பட்ட முயற்சி தமிழகத்தில் இருப்பதாகத் தோன்றவில்லை.

எப்பொழுதுமே குறிப்பிட்ட ஒரு நோக்கத்தோடு உறுதியோடு ஒரு பணியில் நாம் ஈடுபடுவோமானால், நாம் அதில் வெற்றி பெறுவது உறுதி. நான் யாரையும் குறைசொல்ல விரும்பவில்லை.

ஆட்சி எதுவாக இருந்தாலும் சரி; மொழி என்று வரும் பொழுது தமிழர்களுக்கு ஒரு மொழிக்கொள்கை வேண்டும். அப்படிப்பட்ட கொள்கை ஒன்று இல்லாமல், அது ஏதோ கட்சிக் கொள்கையாக ஓர் உருவத்தை எடுத்துவந்திருக்கிறது.

இரண்டாவதாக- ஒரு கட்சியில் கூட ஒருவர் தமிழகத்தில் கல்வி அமைச்சராக இருந்தால் ஒரு அணுகுமுறை; இன்னொருவர் தமிழகக் கல்வி அமைச்சராக இருந்தால், அதே கட்சியில் கூட இன்னொரு அணுகுமுறை என்கிற ஒரு வரலாறு தமிழ் நாட்டில் இருந்திருப்பதை சற்று ஆழமாகப் பார்த்தோமானால் அறியலாம். அதற்குப் பிறகு ஆட்சியில் இருந்து அரசு நடத்துபவர்கள்- நடத்தும் பொறுப்பைக் கொண்டவர்கள், அமைச்சர்கள், 'பாலிசி'- கொள்கை வகுப்பவர்கள். அந்தக் கொள்கையை நிறைவேற்றுபவர்களிடத்தும் ஓரளவு அதில் ஆர்வம் இருந்தாலொழிய கொள்கை வகுப்பவர்களுக்கு எவ்வளவு ஆர்வம் இருந்தாலும் கடைசியில் அது நடைபெற இயலாது.

ஒரு சிறு சான்று கூற விரும்புகிறேன். இது சுய புராணம் என்று நீங்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது.

1974-வது ஆண்டில் நான் தொழில்நுட்பக் கல்வியின் இயக்குநராகப் பொறுப்பேற்ற போது- மாண்புமிகு நாவலர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தார்கள். தமிழகத்தில் கல்விச் செயலராகத் திருதிரவியம் அவர்கள் இருந்தார்கள். நான் அவர்களிடத்தில் சொன்னேன்- டிகிரி அல்லது பட்டப்படிப்பு வகுப்பில் முதலில் தமிழ் கொண்டு வருவதைவிட பாலிடெக்னிக் - அந்த தொழிற் பயிற்சி கல்வி நிலையிலே நாம் தமிழைக் கொண்டுவருவது தொடக்கமாக அங்கும் எல்லா பாலிடெக்னிக்குகளிலும் கொண்டு வரக்கூடாது. சிலவற்றைத் தேர்ந்தெடுத்து- அங்கு ஆறு பாடம் இருக்குமானால் அதில் இரண்டு பாடத்தில் சொல்லிக் கொடுப்போம். ஏனென்றால் நாம் இருமொழிக் கொள்கையாளர்கள். இரு மொழிக் கொள்கை என்று வரும்பொழுது எந்த ஒரு துறையானாலும் தமிழில் பேசவேண்டிய நேரத்திலே அந்தத் துறைபற்றித் தமிழில் பேசமுடிய வேண்டும். அல்லது ஆங்கிலத்தில் பேச வேண்டிய நேரத்தில் அந்தத் துறை பற்றி ஆங்கிலத்தில் பேசவேண்டும்.

இன்று இரு மொழி என்று சொன்னால் என்னைப் பொறுத்தவரையில் உங்களைப் போன்றவர்களோடு பேசும் போது இருமொழி, அவை பொறியியல் கல்லூரிகளில் என்று வரும்போது ஒரு மொழியில் இருந்துகொண்டிருக்கிறோம். அங்கு இரு மொழி இன்றுவரை வரவில்லை. எனவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னபோது அமைச்சர் அவர்கள் உடனே ஒத்துக்கொண்டார்கள். கல்விச் செயலரும் ஊக்கம் அளித்தார்கள்.

நான் பொறுப்பேற்றது மார்ச் மாதம். ஜூன் மாதத்தில் அது



நடைபெறவேண்டும் என்று முடிவு செய்து அப்போது பி.ஏ., பி.எஸ்ஸி., மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்களைக் கொடுத்தார்கள். அதே சலுகையை இவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று பேசி அந்தச் சலுகை அவர்களுக்கு வழங்கப்பட்டது. பிறகு இந்தத் திட்டம் எழுத்து வடிவில் அரசாங்கத்தின் ஆதரவு அனுமதிக்குப் போகிற போது கல்வித்துறையில் அனுமதிக்கப்பட்டு நிதித்துறைக்கு அனுமதி கோரியபோது, அதற்கு நிதித்துறையினர் எங்களிடம் முன்னதாகவே அனுமதி பெறவில்லை என்று உதவி செய்ய மறுத்துவிட்டார்கள். நான் எவ்வளவோ வாதாடியும் பார்த்தேன்.

,மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேரவையில் பேசும் போது- பேரவையில் நிதிநிலை அறிக்கையில் பேசும்போது, நாங்கள் தமிழைப் பயிற்சி மொழியாக்குவதற்குத் தொழிற் கல்வித்துறையில் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை உருவாக்க இருக்கிறோம் என்று பேசினார்கள். அதையும் எடுத்துக் கொண்டு காட்டினாலும் இது முக்கியம் இல்லை. எங்களுடைய அனுமதி இல்லாது செயற்படுத்தப்பட்ட ஒன்றினுக்கு இப்போது ஆதரவு தருவது என்பது இயலாது என்று கூறி விட்டார்களாம்.

எதற்காகக் கூறுகிறேன் என்றால், அரசியல் மட்டத்தில் மட்டும் அன்று, அரசியல் கொள்கைகளை வகுப்பவர்களில் யார் யார் அதிகம் அதைப் பயன்படுத்துகிறார்களோ அந்த அளவிலும் அதில் ஒரு ஈடுபாடு இல்லாதிருந்தாலொழிய இப்படிப்பட்ட ஒரு மாபெரும் திட்டத்தை நாம் செயல்படுத்தமுடியாது என்பதற்காகத்தான் நான் இதைக் கூற விரும்புகிறேன்.

எனவே, ஆட்சியாளர்களுக்கு இந்த ஈடுபாடு இருக்கவேண்டும். அந்தக் கொள்கையை நிறைவேற்றும் அதிகாரிகள் மட்டத்தில் இந்த ஈடுபாடு இருக்க வேண்டும். பொதுமக்களைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய ஒரு திறமையும் நமக்கு இருக்க வேண்டும்.

அடுத்தாற்போல், பயிற்சி மொழியைப் பற்றி ஒரு சில திட்டங்கள். பள்ளி நிலையில் பொதுக் கல்வி என்பது 12-வது வரை உள்ள பள்ளி நிலை. அந்த நிலை வரை நாம் தமிழைப் பயிற்று மொழியாக்கிட அறிவியல் தொழில்நுட்பம் அங்கும் இருக்கிறது. அந்த அளவுக்குப் பயின்று செல்லுகிறவர்கள் அனைவருக்கும் நாம் தமிழைப் பயிற்று மொழியாக்குவோமானால் பெரும்பாலும் இவர்கள்தான் மீண்டும் கிராமத்திற்குச் சென்று பணிபுரிபவர்கள். இது முதல் திட்டம்.

இரண்டாவது கட்டமாக வரும்போது பி.ஈ., பி.டெக்., என்பதைத் தமிழ்ப்படுவதை விட, டிப்ளமோவை ஒத்த மற்ற வகுப்புகளில் தமிழ் பயிற்று மொழியாக இடம்பெற வேண்டும்.

மூன்றாவதாகப் பெரும்பாலும் மக்களுக்குள்ளேயே பணிபுரிகிறவர்கள் மருத்துவர்கள்.

அதை அடுத்து, மாநிலத்திற்குள்ளேயே பணிபுரிபவர்கள் வேளாண்மைத் துறையினர்.

பின்னர், பொறியியல் துறை. கிட்டத்தட்ட அவர்கள் நாடு முழுவதும், உலகம் எங்கும் பணிபுரிபவர்கள்.

இப்படி கட்டம் கட்டமாக நாம் ஒரு 'டைம் டேபிள்' என்பதை வகுத்து, அதைப் பயிற்று மொழியைக் கொண்டு வருவது என்ற ஒரு முறையை ஏற்படுத்தினால் ஒழிய நாம் பயிற்று மொழித் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற முடியாது என்பது எனது தாழ்மையான கருத்து. பயிற்று மொழிக்கு நூல்கள் இல்லை. அதற்குத் தேவையான இலக்கியங்கள் உருவாக்கப்படவில்லை என்பது இன்னொரு கருத்து. இது சற்று ரேடிக்கல் என்று சொல்லுவோமே அப்படித் தோன்றலாம்.

கிட்டத்தட்ட ஒரு மொழியைப் பயிற்று மொழியாகப் பயன்படுத்துவது என்று முடிவுசெய்து தொடங்கிவிட்டால், பெரும்பாலும் இந்த நூல்களை உருவாக்குவது அவ்வளவு பெரிய காரியமாக இருக்காது. ஆனால், மொழித்துறையில் நமது மொழி அறிஞர்கள் ஒருசில நெளிவு சுளிவுகளுக்குத் தங்களைச் சமமாக்கிக் கொள்ளவேண்டும். 21-வது நூற்றாண்டுக்குச்

**உலகுக்குப் பயன்படும் பாதி மனித சக்தியை நாம் பெண்ணடிமை மூலம் விரயப்படுத்திக் கொண்டிருக்கிறோம்!**

***-தந்தை பெரியார்***

சென்று கொண்டிருக்கும் நாம், கிட்டத்தட்ட நான் கூறியது போல் சங்க காலத்திற்குப் பின்னர் அறிவுத் துறைகளில் பெரும்பான்மையாக வளர்சசி பெற இயலாத ஒரு சூழ்நிலையில் தவித்துக்கொண்டிருக்கும் ஒரு மொழியை இப்படிப்பட்ட ஒரு தேவைக்கு மாற்றவேண்டுமானால் ஒரு சில புரட்சிகரமான மாற்றங்களை நம்து தமிழ் அறிஞர்கள், தமிழ்ப் புலவர்கள் ஒத்துக்கொள்ள மறுப்பார்களேயானால் அவர்களே தடைக் கற்களாகிவிடுகிறார்கள்.

சில சமயத்திலே ஒரு மொழியின் வளர்ச்சி பகைவர்களாலும் தடுக்கப்படுகிறது; இன்னும் சில சமயங்களில் பற்றாளர்களாலும் தடுக்கப்படுகிறது. இன்று தமிழைப் பொறுத்த வரை பகைவர்கள் யாரும் இல்லை. பற்றாளர்களே சில சமயங்களில் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறார்கள்.

புதிய சொற்களை உருவாக்குவதில் எத்தனையோ நெளிவு சுளிவுகளை இன்று மற்ற மொழிகள் ஏற்றுக்கொண்டு இருக்கின்றன. நான் ஒரு சில சான்று கூற விரும்புகிறேன்.

ஆங்கிலத்தில் (National) நேஷனல் என்ற சொல் இருக்கிறது. அதிலிருந்து Nationalised என்ற சொல் வந்தது. ஆனால் அவர்களே Private என்பதிலிருந்து Privatesis என்ற சொல்லை உருவாக்கவில்லை. To make Private என்றுதான் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஜெர்மன் மொழியில் அப்படி இல்லை.

> **இலக்கியமும் அரசியலும் ஒன்றை மற்றொன்று தழுவிச் செல்லுகிறபோதுதான் முறைப்படியான ஜனநாயகம் அமையும்!**
>
> **—அறிஞர் அண்ணா**

நேசுநேரல் எனபதிலிருந்து நேசுநேரலைசேரியன். அதே மாதிரி பிரிவாட் என்பதிலிருந்து பிரிவாட்சைரேரியன் என்ற சொல்லைப் பல நாட்களாக அவர்கள் பயன்படுத்தி வந்தார்கள். அதைப் பார்த்து இன்று ஆங்கிலம் பேசும் மக்கள் பிரைவேட்டசைஸ் என்று எழுதுகிறார்கள்.

20 ஆண்டுகளுக்கு முன்பு இருக்கும் அகராதியைப் பார்த்தால் Nationaliseஎன்று இருக்கும். Privatesis என்று இருக்காது. இப்படி எத்தனையோ சொற்களை அவர்கள் ஓரளவு நெளிவு சுளிவுகளைப் பயன்படுத்தி உருவாக்கியிருக்கிறார்கள்.

தமிழில் நாம் அப்படி சொற்களை உருவாக்குவதற்கு முயற்சி செய்யவேண்டும். நாம் அப்படி சொற்களை உருவாக்குவதற்கான உத்திகளை எங்களைப்போன்றவர்கள்படைப்பதைவிட, தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இருக்கும் தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழ்ப் புலவர்கள் படைத்துக் கொடுக்கவேண்டும். இந்த வேலையை நாம் இரண்டாகப் பகுத்துக்கொள்ள வேண்டும். ஒன்று- அந்தத் துறையில் நூல்களை உருவாக்குவது, அந்தத் துறையைச் சேர்ந்தவர்களால்தான் செய்ய முடியும். ஆனால் அந்தத் துறையில் நூல்களை உருவாக்குவதற்குப் புதுச் சொற்களை உருவாக்கும் சில உத்திகளைப் படைப்பதற்குத் தமிழ்ப் புலவர்கள் துணைசெய்ய முடியும்.

இன்று நான் கேட்பதெல்லாம், தமிழ் வளர்ச்சி என்று வரும்போது கடந்த 25, 30 ஆண்டுக் காலமாக நமது தமிழ்ப் பல்கலைக் கழகங்கள், தமிழ் வளர்ச்சிக்கு எந்த அளவுக்குத் துணைபுரிந்திருக்கிறார்கள் என்பதை ஒரு ஆர்ராய்ச்சியாக எடுத்துக்கொண்டு அது நமக்கு நிறைவாக இருந்தால் திருப்திப் படுவோம். அப்படி இல்லாவிட்டால் எதிர்காலத்தில் அவர்களால் என்ன செய்ய முடியும்? எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஒரு காலத்தில் கல்வி என்பது கற்பிப்பது, ஆராய்ச்சி என்று மட்டும் இருந்தது. ஆனால் இன்று உலக அளவில், இந்தியா அளவில் கல்வி என்பது கற்பிப்பது, ஆராய்ச்சி மட்டும் அல்ல: கல்வி 'டெவலப் மண்டல் ஆக்டிவிட்டி'- வளர்ச்சித் திட்டத்திற்கும் பயன்பட வேண்டும். எனவே, வளர்ச்சித் திட்டத்திற்கும் பயன்படவேண்டுமானால் இலக்கியத் துறையைச் சேர்ந்தவர்கள் அங்குமட்டும் இல்லாது பலவகையான அறிவுத் துறைகள் தமிழில் வருவதற்குச் சொற்களை எப்படி உருவாக்குவது என்பதில் ஒரு துணையாக நிற்க வேண்டும்.

ஒரு சான்று கூற விரும்புகிறேன். Budget என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். மிகச் சாதாரணமான சொல். எளிதாக எல்லோரும் பயன்படுத்திக் கொண்டிருப்பது. அதற்கு நாம் என்ன சொல்கிறோம்? நிதிநிலை



அறிக்கை என்கிறோம். அல்லது வரவுசெலவு அறிக்கை என்கிறோம். ஆனால் ஆங்கிலத்தில் இன்று Water Resources Budget என்கிறார்கள். Energy Budget என்கிறார்கள், அந்த Budget என்ற சொல்லிலிருந்து Budget time என்ற ஒரு வினை உருவாகிறது; அதையே பயன்படுத்தி Budget Control என்ற ஒரு உரிச் சொல் உருவாகிறது. நாம் 'நிதிநிலை அறிக்கை' என்று வைத்துக்கொள்வோமேயானால், பட்ஜெட், பட்ஜெட்டரி கண்ட்ரோல், எனர்ஜி, வாட்டர் ரிசோர்சஸ் பட்ஜெட் என்பதற்கெல்லாம் அதிலிருந்து ஒரு புதிய சொல்லை உருவாக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிச் செய்யும்பொழுது, ஆங்கிலத்திலே ஒரு பாடத்தைப் படிப்பதைவிட, தமிழிலே படிப்பது கடினமாக ஆகிவிடுகிறது. இது தமிழின் குறை அல்ல. அந்தப் புதிய சொற்களை உருவாக்குவதற்கு வேண்டிய சில புதிய உத்திகளை நாம் படைக்கவில்லை என்பதைத்தான் நான் இங்கே கூற விரும்புகிறேன்.

இலங்கையில் 'பாதிடு' என்று ஒரு சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். நாம் இதை ஏற்றுக் கொள்வோமேயானால், அப்போது, நிதி பாதிடு, நீர்வளப் பாதிடு, சக்தி பாதிடு என்று- எனெர்ஜி பட்ஜெட், வாட்டர் ரீசோர்சஸ் பட்ஜெட் அண்டு பைனான்சியல் பட்ஜெட் என்பதை மொழி பெயர்ப்பது எளிதாகிவிடுகிறது. அதே போல பட்ஜெட்டரி, பட்ஜெட்டிங், என்னும்போது, பாதிடு செய்தல், பட்ஜெட்டரி கண்ட்ரோல் என்கிற போது பாதீட்டு ரெகுலேஷன் என்று சொல்வது எளிதாகிவிடுகிறது.



> ☆ **அறிவானது, மனிதனுடைய வாழ்வின் அஸ்திவாரமாகும். எனவே, மாணவர்கள் தங்களது முயற்சிகள் அனைத்தையும் பகுத்தறிவின் சக்தியை நிர்வகிக்கக் கூடியவைகளாக அமைத்துக்கொள்ள வேண்டும்.**
>
> ☆ **தீண்டாமை, மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல, பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இது அடிமைத்தனத்தைக் காட்டிலும் மிகவும் மோசமானது.**

எனவே, செய்ய இயலாது என்பதல்ல. ஆனால் அதற்கான சிந்தனையை நாம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆங்கிலத்தில் இன்னும் கூறவேண்டுமென்றால் Atom என்ற ஒரு சொல்லை எடுத்துக்கொள்ளுங்கள். அந்த ஒரு சொல்லிலிருந்து ஆட்டமைஸ், அணுக்கள் ஆற்றுவது. 'ஆட்டமைசர்', அணுக்கள் ஆற்றுவதற்குப் பயன்படுத்தக் கூடிய ஒரு கருவி. கிரேக்க காலத்திலிருந்து அணுவை அடிப்படையாக வைத்து ஒரு தத்துவம் இருந்தது. எனவே, அதை ஆட்டம் என்பதிலிருந்து ஆட்டோமிசம் என்ற ஒரு தத்துவத்தை உருவாக்கினார்கள். அதை நம்புகிறவர்களுக்குஆட்டமிஸ்டிக், ஆட்டமிஸ்டிஸ் என்ற ஒரு சொல்லை உருவாக்கினார்கள்.

எனவே தமிழில் புதிய புதிய சொற்களை உருவாக்குவதற்கு நாம் சில உத்திகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

ஆங்கிலத்தில் அப்படி ஏராளமான உத்திகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதையும் நாம் ஓரளவுக்கு எண்ணிப்பார்த்துச் செய்வ்து மிகவும் முக்கியம் என்று கருதுகிறேன்.

சில புதிய முயற்சிகளைப் புதிய உத்திகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு மனப்பான்மையை அறிஞர்கள் பெற வேண்டும். அதை மக்களிடத்திலே பரவவிட வேண்டுமென்பதற்காகச் சில வசதிகளை அரசு உருவாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**—தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் ஆற்றிய உரை.**

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்
# செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்




## சிறப்பு அம்சங்கள்

- 5 $^1/_2$ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.

DIRP/DIS/95



ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927





**தூய** பட்டு

**தூய** சரிகை



ராஜகம்பீரமான ஊதா...

செந்தூரப்பூபோல் சிகப்பு...

மங்களகரமான மஞ்சள்...

வான்வெளிபோல் நீலம்...

கற்பனைக் கடங்கா

அற்புத வண்ணங்களில்

நேர்த்தியான பட்டு,

நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.









அக் 1995
காப்பகம்
சென்னை-600 008

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர்!

**நிகழ்ச்சிகளில் சில....**



திரு. ஆர்.எஸ். மனோகர் - நேஷனல் தியேட்டர்ஸ் - 'திருநாவுக்கரசர்' நாடகம்.

பதினாறு கவனக நினைவாற்றல் நிகழ்ச்சி: திருக்குறள் இரா. கனகசுப்புரத்தினம்



## இந்த இதழில்...


விடுதலை நாள் விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை .................... 2

சுகந்தரும் சுதந்தரம்
நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை .................... 13

சென்னையில் தெற்காசிய விளையாட்டுப் போட்டி .................... 14

'கான்வென்டில்' சேரும் தொட்டில் குழந்தைகள் .................... 17

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மகாவீரர் சிற்பம் .................... 19

காஞ்சிப் பெரியவர் விழா: மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை .................... 20

பெருந்தலைவர் காமராஜர் வாரிசுகளுக்கு உதவி .................... 24

காயிதெமில்லத் நூற்றாண்டு விழா
புதுக்கோட்டை மாவட்டம் .................... 26

பெரியாறு வைகை-பேரணை இணைப்புக் கால்வாய்த் திட்டத் தொடக்க விழா .................... 29

மாணவர் பக்கம் .................... 32

கணிணிக்கு ஏற்ற தமிழ்
–திரு சுஜாதா .................... 34

பொது விஞ்ஞானம்
–திரு முத்துக்கருப்பன் துணைவேந்தர் .................... 42

நாமக்கல் கவிஞர்
கவிஞர் பொன்னடியான் .................... 45




### இதழ்தோறும் ஓர் இனிய குறள்

*ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு*
*ளார்கோமான்*
*இந்திரனே சாலுங் கரி. (25)*

ஐந்து புலன்களாலாகும் ஆசைகளை ஒழித்தவனுடைய வல்லமைக்கு, வானுலகத்தாரின் தலைவனாகிய இந்திரனே போதுமான சான்று ஆவான்.


# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026

ஆடித் திங்கள் : 31

மலர்: 26 இதழ்: 4

16.8.1995

விலை ரூபாய்: 3





# “மகளிர் உரிமைகளைப் பெற்றுத் தருவதில் உலகம் முழுமைக்குமே தமிழகம் முன்னோடியாக விளங்குகின்றது!”

## விடுதலைநாள் உரையில் மாண்புமிகு முதலமைச்சர் பெருமிதம்

நமது தாய்த் திருநாடு - பாரத மணித் திருநாடு, அந்நியரின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு, சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கிய நன்னாள் இந்நாள். இந்தியத்- தேசிய வரலாற்றில், தேசிய நீரோட்டத்துடன் கலந்து, நாம் அனைவரும் இந்தியர்- ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள், என்கின்ற உணர்வை ஊட்டி வளர்த்து, தேசிய நீரோட்டத்துடன் இணைந்து, இந்திய விடுதலை வரலாற்றில், தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்ற, தியாக பூமி தமிழகம் ஆகும். அன்று கிளர்ந்தெழுந்த விடுதலை உணர்வும், ஒருமைப்பாட்டு உணர்வும் இன்றும் தமிழக மக்கள் மனங்களிலே, பொங்கி எழுகின்றது என்றால் அது மிகையாகாது. “வேற்றுமையில் ஒற்றுமை காண்கின்ற” ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்தான், இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் நாம் அனைவரும் என்பதை, எண்ணி மகிழ்கின்ற இனிய திருநாள் இந்நன்னாள்.

சுதந்திரக் காற்றை நாம் சுவாசிக்க வேண்டும் என்பதற்காகத் தங்கள் உயிர் மூச்சை அர்ப்பணித்த, தியாக சீலர்களின் அருந் தியாகங்களை நினைவுகூர்ந்து, நமது நன்றிக்கடனை அவர்களுக்கு உரித்தாக்கும் நல்ல நாள்- இந்நாள்.

இந்த நாட்டின் விடுதலைக்காகத் தங்களது உயிரையும், உடைமைகளையும் அர்ப்பணித்த, தியாக சீலர்களின் ஆன்மா சாந்தி அடைய வேண்டுமென்றால், இந்தப் பரந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும், அடிப்படை வசதிகளான, உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றை நாம் பெற்றுத் தந்தாக வேண்டும். அந்த உணர்வுடன்தான் உங்கள் அன்பு அன்னையின் ஆட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக, ஏழை எளிய மக்கள் வாழ்வில் வளம் பெறுவதற்கும் ஏற்றம் பெறுவதற்கும், நல்லபல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

எங்கே அமைதி கொலுவீற்றிருக்கிறதோ, அங்கேதான் வளர்ச்சி அரங்கேறும். இது சரித்திரம் காட்டுகின்ற உண்மை. எனவேதான், ஒரு காலத்தில் இருள் போலச்





## அட்டை சொல்லும் செய்தி:

சூழ்ந்திருந்த ஆயுதக் கலாச்சாரத்திலிருந்து, தமிழகத்தை மீட்டு, மீண்டும் அமைதிப் பூங்காவாக மாற்றி, நிலைத்த வளர்ச்சிக்கு வித்திட்டோம். மக்கள் நலனை மட்டுமே மனதில் முன்நிறுத்தி, தமிழகத்தை எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகளைத் துணிவுடன் எதிர்கொண்டதால்தான், இன்று பல பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்பட்டுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

சமூகநலத் திட்டங்கள், நம் மாநிலத்தில் ஒரு உறுதியான ஈடுபாட்டுடன் செயல்படுத்தப்பட்டதால், குழந்தைகளின் இறப்பு விகிதம் வெகுவாகக் குறைந்துள்ளது. குழந்தைகளின் ஊட்டச் சத்து, கூடியுள்ளது. கருவுற்ற தாய்மார்கள், மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் நலம், பொதுவாகப் பெருகியுள்ளது. பள்ளியில் பயிலும், மாணவ மாணவியர்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப் படுகின்றது. அரசுத் தொட்டிலில் இடப்பட்ட குழந்தைகள் அன்போடும் ஆதரவோடும் வளர்க்கப்பட்டு மற்றவர்களைப் போல் சீராட்டிப் பாராட்டி 'கான்வென்ட்' பள்ளிகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எங்கள் அரசு இதயமுள்ள ஒரு அரசு என்பதை, இது எடுத்துக்காட்டும் என்று நம்புகிறேன். பெண் சிசுவதை, வரதட்சணைப் பிரச்சினை போன்ற புரையோடிப்போன சமுதாயக் கொடுமைகளுக்கு, ஒரு நிரந்தரத் தீர்வு காண நாம் மேற்கொண்ட முயற்சிகள், இன்று நல்ல பலன்களை அளித்து வருகின்றன. தொட்டில் குழந்தைகள் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம், பள்ளிக் குழந்தைகள் மருத்துவ நல முகாம்கள் ஆகியவை சமுதாயத்தில் ஒரு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளன. இவற்றுடன், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டத்தின் சிறப்பான செயல்பாடு, துணைக் கண்டத்தின் மற்ற மாநிலங்களின் கவனத்தை, ஏன் உலக நாடுகள் பலவற்றின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.



சமூகநலத் திட்டங்களில், நாம் செய்கின்ற முதலீடுகளை விழலுக்கு இரைத்த நீர் என்று ஒரு காலத்தில் வர்ணித்தவர்கள், இன்று "அது தான் விடியலுக்கு வழி" என்று, நம் திட்டங்களை அப்படியே கடைப்பிடிக்க முன்வந்துள்ளார்கள். நாம் நடந்து வந்த பாதை, எத்தனைச் சரியானது என்பதை, நாம் பெற்ற வெற்றிகள், விளக்கிக்கொண்டிருக்கின்றன என்றால், அது மிகையாகாது.

சமூகநலத் திட்டங்களையும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும் தனி மனித முன்னேற்றத் திட்டங்களையும், செயல்படுத்தி வரும் அதே நேரத்தில், தமிழகத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு,



**சுதந்திர தின விழாவின்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், உடல் ஊனமுற்றோர் நலனுக்காகச் சீரியமுறையில் பணியாற்றியவர்களுக்கு விருதுகளை வழங்கினார்கள்.**

சீரிய தொழில் துறை முன்னேற்றத்திற்கும், எங்கள் ஆட்சியில் ஒரு புதிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 'புதிய தொழில் கொள்கையை' ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் அறிவித்ததோடு, தாராளமயமாக்கும் மற்றும் தனியார் மயமாக்கும் கொள்கையை முழுமையாகப் பயன்படுத்தி பெரிய முதலீடுகளில் அமைந்த பெரிய தொழில்களைத் தொடங்கி அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம்.

குறிப்பாக, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரித் திட்டம், வட சென்னை அனல் மின் நிலையத்தின், இரண்டாம் கட்டத் திட்டம் Sterlite நிறுவனத்தாரின் தாமிர உருக்குத் தொழிற்சாலை மற்றும் Thapar Dupont நிறுவனத்தாரின் Nylon 6.6 செயற்கை இழை தயாரிக்கும் தொழிற்சாலை போன்றவை தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விரைவில் Ford கம்பெனியின் கூட்டோடு, தனியார் துறையில், Car தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினையும் தமிழகத்தில் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. TIDCO நிறுவனம், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 25 பெரிய தொழிற்சாலைகளை, 20,000 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கி உள்ளது ஒரு மகத்தான சாதனையாகும். இவ்வாறு, கடந்த நான்கு ஆண்டுகளில், 76,628 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீட்டில், பல பெரிய தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மிக்க பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரதட்சணை போன்ற பல்வேறு சமுதாயக் கொடுமைகளில் இருந்து பெண்களைக் காப்பாற்றுவதற்கும் சட்டப்படி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கும் தமிழகத்தில் 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் துவக்கியுள்ளோம். மகளிர் உரிமைகளைப் பெற்றுத் தரும் மகத்தான பணியில், இந்திய நாட்டிற்கே ஏன், உலகம் முழுமைக்குமே, தமிழகம்

முன்னோடியாக விளங்கி வருகின்றது என்பதை, மிக்க பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கும், கடந்த நான்கு ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளை முன்னிட்டு சுமார் 65 கோடி ரூபாய் செலவில், ஒரு கோடியே 20 இலட்சம் பேருக்கு இலவசமாக வேட்டி சேலை வழங்கி வருவது உங்கள் அன்பு அன்னையின் ஆட்சியில்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆண்டொன்றுக்கு 1000 கோடி ரூபாய்க்கு மானியச் சுமையைக் கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு இடையேயும் ஏற்றுக் கொண்டு, விவசாயிகளுக்குத் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கி வருகின்றோம். இந்த உன்னதத் திட்டம், இந்த ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களது அரசின் முயற்சியால், உலக வங்கியின் நிதி உதவியோடு, சென்னை நகருக்குக் குடிநீர் வழங்க புதிய வீராணம் திட்டத்திற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதேபோல், கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டு, கிருஷ்ணா நீர் சென்னைக்குக் கொண்டு வரப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையில், தமிழகம் பின்தங்கியிருந்த நிலையை மாற்றி, இன்று விளையாட்டுத் துறைக்குப் புதிய ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுத்ததோடு, வரும் டிசம்பர் மாதத்தில் தெற்கு ஆசிய நாடுகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளை மிகப் பிரம்மாண்டமான முறையில் சென்னையில் நடத்த எங்கள் அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதற்காகப் புதிய விளையாட்டு அரங்கங்களும், விளையாட்டு மைதானங்களும் நீச்சல் குளங்களும் விளையாட்டு வீரர்கள் தங்க விளையாட்டுக் கிராமம் ஒன்றும் 240 கோடி ரூபாய் செலவில், எங்கள் அரசு உருவாக்கி வருகின்றது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நான் உண்மையிலேயே மிக்க மன நிறைவு அடைகிறேன்.

**நமக்குச் சுதந்தர இந்தியாவைப் பெற்றுத் தருவதற்காகத் தங்கள் இன்னுயிரைக் காணிக்கையாக்கிய தியாக தீபங்களுக்கு அஞ்சலி செலுத்துவது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.**

**—டாக்டர் எம்.ஜி.ஆர்.**

தொன்மையும், புராதனச் சிறப்பும் வாய்ந்த, தமிழகத் திருக்கோயில்களைப் பராமரிப்பதில், எங்கள் ஆட்சி காட்டி வருகின்ற ஈடுபாட்டைத் தமிழக மக்கள் மறக்க மாட்டார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆயிரக்கணக்கான திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்கு விழா நடைபெற்றுவரும் அதே நேரத்தில், எல்லாக் கோயில்களிலும், அனுதினமும் விளக்கு எரிகின்ற, ஒரு திட்டத்தையும் தீட்டி, ஒரு கால பூஜையாவது அவற்றில் நடைபெற வழி வகுத்தது உங்கள் அன்பு அன்னையின் அரசுதான் என்பதைப் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு, இதே கோட்டைக் கொத்தளத்தில் இருந்து, நான் உரையாற்றும்போது, தமிழகத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனக் குடியிருப்புகளுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் 125 கோடி ரூபாய் செலவில் 1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் செய்து தரப்படும் என்று குறிப்பிட்டிருந்தேன். பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெருவிளக்கு, இணைப்புச் சாலைகள், மயான வசதி, மற்றும் மயானப் பாதை வசதி ஆகிய ஐந்து அடிப்படை வசதிகளை எல்லா ஆதி திராவிடக் குடியிருப்புகளுக்கும், ஏற்பாடு செய்து தருவதோடு, ஆதிதிராவிட மக்களுக்கு, இலவச வீட்டுமனைப் பட்டாக்களும், போர்க்கால அடிப்படையில் வழங்கப்படும் என்றும் உறுதி கூறியிருந்தேன்.



சென்ற ஆண்டு அறிவித்த திட்டத்தின்படி, இதுவரை கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 8 ஆயிரம் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள், இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 2,807 ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்கு மயானப்பாதை வசதியும், 2,422 குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதியும், செய்துதரப்பட்டுள்ளது. 1,730 குடியிருப்புகள், தெரு விளக்கு வசதியைப் பெற்றுள்ளன. இலட்சத்து 8 ஆயிரம் குடிசைகளுக்கு இலவச மின் விளக்கு வசதியும் செய்துதரப்பட்டுள்ளது.

1996-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் எல்லா ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்கும் எல்லா அடிப்படை வசதிகளும் 5 இலட்சம் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்கப்படும் விதத்தில் அரசு இயந்திரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்டை நாட்டிலே ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் பிரச்சினையால் எழுந்துள்ள பாதகமான சூழ்நிலையினால் நமது தமிழகத்து மீனவர்களின் வாழ்க்கையில் ஒரு தேவையற்ற பிரச்சினை ஏற்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாகத் தமிழக மீனவர்களின் பிரச்சினைகளை, அணுகி ஆராய்ந்து அவர்தம் துயர்துடைக்க நல்ல பல திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது. ஆனால், நமது அப்பாவி மீனவர்கள் இலங்கைக் கப்பற்படையின் அத்துமீறல்களுக்கு அடிக்கடி பலியாகி வருகிறார்கள்.

சமீபத்தில் ஹெலிகாப்டர் விமானத்திலிருந்து ஒன்றுமறியாத தமிழக மீனவர்கள் மீது குண்டு வீசித் தாக்குதல் நடத்தி இருக்கிறார்கள். அன்றொரு நாள் கச்சத் தீவைத் தாரை வார்க்காமல் இருந்திருந்தால் இன்று தமிழக மீனவர்களுக்கு இத்தகைய அவல நிலை நிச்சயம் ஏற்பட்டிருக்காது. பல முறை மத்திய அரசையும் பாரதப் பிரதமரையும் கடிதம் மூலமாகவும் நேரிலும் இந்தக் கொடுமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டும் இதுவரை நிரந்தரத் தீர்வு கிடைக்கவில்லை.

மீனவப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையாக மாறிவிட்ட இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

60 வயதைக் கடந்த மீனவப் பெருங்குடி மக்களின் நலன் காக்க மாதம் ஒன்றுக்கு 160 ரூபாய் ஓய்வூதியம் வழங்கும் புதிய திட்டம் ஒன்றைத் தமிழக அரசு விரைவில் செயல்படுத்தும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் இத்திட்டத்தின் மூலம், 15,000க்கும் மேற்பட்ட நலிவடைந்த மீனவப் பெருங்குடி மக்கள் தொடக்க நிலையிலேயே பயன் அடைந்திருக்கிறார்கள் என்பதையும், இத்திட்டம் விரைவில் விரிவுபடுத்தப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த நான்காண்டுக் காலத்தில் பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைத்து ஏழை எளிய மக்கள் அனைவரும், குறைந்த விலையில் அத்தியாவசியப் பண்டங்களைப் பெறுகிற நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு வருமான வரம்பு எதுவும் இன்றி, எல்லாக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் சாதாரண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகின்றது.

கிராமப் புறங்களில் வசிக்கும் எனது அன்பிற்குரிய தாய்மார்கள் மற்றும்

**மக்கள் தங்களுக்குத் தாங்களே கட்டுப்பாடு அமைத்துக்கொண்டு எல்லாவற்றிலும் சுயநலத்தைத் துறந்து நடப்பதையே சுதந்தர ஆட்சி அல்லது மக்களாட்சி என்கிறோம்.**

**—காந்தியடிகள்**

சகோதரிகள் எல்லா அத்தியாவசியப் பண்டங்களையும் பெற, பல மைல் தூரம் நடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதைக் கருத்தில் கொண்டு, 500 குடும்ப அட்டைகளுக்கும் அதிகமாக உள்ள கடைகளைப் பிரிக்க ஆணையிட்டுள்ளேன். இந்தப் புதிய கிளைக்கடைகள் அந்தந்தக் கிராமங்க்ளிலே வசிக்கும் மகளிரைக் கொண்டே நடத்தப்படுகின்ற புதிய திட்டம் ஒன்று எனது ஆணையின் பேரில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதையும் மிக்க மிகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் வாழும் தாய்மார்கள் மற்றும் சகோதரிகள் இத்திட்டத்தினால் பயன் பெறுவார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

வளர்ந்துவரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் நாட்டு நடப்புகளும் கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்குச் சென்றடையவேண்டும் என்கின்ற எண்ணத்துடனும் ஏழை எளிய மக்களும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பதற்காகவும் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட 6 கோடி ரூபாய் செலவில் 4000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் உள்ள 12,500 ஊராட்சிகளில் அமைந்துள்ள 65,500 குடியிருப்புகளில் இதுவரை 23,500 குடியிருப்புகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள எல்லாக் குடியிருப்புகளுக்கும் குறைந்தது ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியாவது வழங்கவேண்டும் என்பதே எனது பேரவா. எனவே, தற்போதுள்ள விதிமுறைகளைத் தளர்த்தி 50 குடும்பங்கள் வசிக்கும் ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க வேண்டும் என ஆணை வழங்கியுள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன. இத்திட்டத்தின்படி 75 கோடி ரூபாய் செலவில் 50,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் எல்லாக் குடியிருப்புகளுக்கும் 1996-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் வழங்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது ஊராட்சிகளில் மாட்டு வண்டிகள், மூன்று சக்கர வண்டிகள் மிதி வண்டிகள் மற்றும் சைக்கிள் ரிக்ஷாக்கள் போன்றவற்றிற்கு வாகன வரி விதிக்கப்பட்டு வருகின்றது. இத்தகைய வாகனங்களை வைத்திருப்பவர்கள் பெரும்பாலும் ஏழை எளிய மக்கள் என்பதால் அத்தகைய மக்களின் நலனில், எங்கள் அரசு கொண்டுள்ள ஆத்மார்ந்த ஈடுபாட்டை வெளிப்படுத்தும் வண்ணம், இனி ஊராட்சிகளில் அத்தகைய வாகனங்களுக்கான வாகன வரி விதிப்பு முழுமையாக ரத்து செய்யப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதனை அமல்படுத்தத் தேவையான சட்டத் திருத்தம் விரைவில் கொண்டுவரப்படும்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகுப்பு வீடுகள் கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பயன்படுகின்றன. குறிப்பாக, ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் மிக அதிகமாகப் பயன் அடைகிறார்கள். தமிழகத்தில் இதுவரை கட்டி முடித்து இலவசமாக வழங்கப்பட்ட 2,23,000 வீடுகளில், 1,35,000 வீடுகள் உங்கள் அன்பு அன்னை ஆட்சிக்கு வந்த நான்காண்டுக் காலத்தில் கட்டி வழங்கப்பட்டவை என்பதையும், இந்த ஆண்டு மட்டும் 70,150 கான்கிரீட் தொகுப்பு வீடுகள் கட்டப்பட உள்ளன என்பதையும் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமின்றி, தொகுப்பு வீடுகளை 14,000 ரூபாய்க்குள்

**☆ சுயநலமே ஒழுக்கக் கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இதுதான் ஒழுக்கத்திற்கு நாம் கொடுக்கக்கூடிய ஒரே இலக்கணம் ஆகும்.** — *சுவாமி விவேகானந்தர்*



கட்டிமுடிக்க வேண்டும் என்ற விதிமுறையை ஒதுக்கிவிட்டு, RCC தளத்துடன் கூடிய கான்கிரீட் வீடுகளை மட்டுமே தமிழக அரசு இலவசமாகக் கட்டிக் கொடுக்கின்றது. இதனால் ஒவ்வொரு வீட்டிற்கும் ஏற்படும் கூடுதல் செலவினமான 7,000 ரூபாயை எங்கள் அரசு முழுமையாக ஏற்றுவருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல நேரங்களில் தொகுப்பு வீடுகள் கட்டப்படும் இடங்களுக்கு உடனுக்குடன் அடிப்படை வசதிகள் செய்து தரப்படுவதில்லை. இந்தக் குறையை நீக்கி, இனி தொகுப்பு வீடுகள் கட்டப்படும்போது குடிநீர், இணைப்புச் சாலை வசதி, தெருவிளக்குகள் போன்ற அடிப்படை வசதிகளுடன், ஒருங்கிணைந்த முறையில் அமைத்துத்தர ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஒருங்கிணைந்த முயற்சி ஊரக வளர்ச்சிக்கு ஒரு புதிய வேகத்தை வழங்கும் என்று நம்புகிறேன்.

அறிவியல் வளர்ச்சியின் ஓர் அங்கமான மின் வசதி, பொருளாதார வசதியில்லாத ஏழை எளிய மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்காக எங்கள் அரசு "ஒரு குடிசைக்கு ஒரு இலவச மின் விளக்குத்" திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

200 சதுர அடிக்கு மிகாத களிமண் சுவர்களை மட்டுமே கொண்ட கூரை வேய்ந்த குடிசைகளுக்கு மட்டும் இந்த இலவச மின்வசதி வழங்க விதிமுறைகளில் இடம் இருக்கிறது. இதனால் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தமிழக அரசால் இலவசமாகக் கட்டி வழங்கப்படும் கான்கிரீட் வீடுகளுக்கும் இந்த இலவச ஒரு விளக்கு மின் வசதியை வழங்க, தற்போதுள்ள விதிமுறைகள் தளர்த்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பெரும்பாலும் சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழுகின்ற மக்கள் மற்றும் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் ஆகியோர் பயன்பெறும் வண்ணம் இத்திட்டம் மேலும் விரிவாக்கப்படுவதால், தமிழக அரசின் நிதிச்சுமை ஆண்டொன்றுக்கு 15 கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்தாலும், இதனால் பயன் பெறுவோரின் எண்ணிக்கை அதிகமாகும் என்பதை மனதில்கொண்டு உங்கள் அன்பு அன்னையின் அரசு அந்தச் சுமையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள் விபத்தில் உயிர் இழந்தாலோ அல்லது ஊனமுற்றாலோ 25,000 ரூபாய் நிவாரண உதவித் தொகை வழங்கும் "விவசாயிகள் இலவச ஈட்டுறுதித் திட்டம்" ஒன்று இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டிலுள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது ஒரு மெட்ரிக் டன் விவசாய விளைபொருளை விற்பனை செய்யும் விவசாயிகள் மற்றும் குத்தகைக்காரர்கள் இந்த இலவச ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்வதற்குத் தகுதி உடையவர்கள் ஆவார்கள். இத்திட்டம் சிறிது சிறிதாக விரிவாக்கம் செய்யப்பட்டு பின்னர் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் 65 வயதை அடைந்த உடன் 25,000 ரூபாய் மானிய உதவித் தொகையாகப் பெறுகின்ற நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்த எங்கள் அரசு திட்டமிட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண் பெருங்குடி மக்களுக்கு உதவும் இத்திட்டம் இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட வீரர்களுக்கு வழங்கப்பட்டு

***தீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண்டிக்கத்தக்கது குடி என்ற சாபக் கேடுதான்.***

***—காந்தியடிகள்***

# ரேடியோ பேஜிங் சேவை

ரேடியோ பேஜிங் சேவை தற்போது நாட்டில் 22 நகரங்களில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் இந்த சேவை உள்ளது. அகமதாபாத், பெங்களூர், பம்பாய், கல்கத்தா, சண்டிகார், தில்லி, எர்ணாகுலம், ஐதராபாத், இந்தூர், ஜெய்பூர், கான்பூர், லக்னௌ, லூதியானா, பூனா, ராஜ்கோட், சூரத், திருவனந்தபுரம், வதோத்ரா, விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் இச்சேவை உள்ளது. அமிர்தசரஸ், போபால், நாக்பூர், பாட்னா, வாரணாசி ஆகிய நகரங்களில் இச்சேவை விரைவில் தொடங்கப்படும், சில நகரங்களில் அகில இந்திய வானொலி பண்பலை பேஜிங் சேவையைத் தொடங்கியுள்ளன.

வந்த மாதாந்திர ஓய்வூதியத் தொகை, நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, அதாவது 1992-ஆம் ஆண்டு 400 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. சுதந்திரத் திருநாளை முன்னிட்டு செப்டம்பர் மாதம் முதல் இந்த ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு 1000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாகவும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்குக் கொடுக்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை 500 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஆண்டொன்றுக்கு 6 கோடி ரூபாய் கூடுதல் நிதிப்பளுவை ஏற்படுத்தும் இத்திட்டத்தின் மூலம் 11,000 குடும்பங்கள் பயன்பெறுவார்கள்.

தமிழக அரசின் MAHAM நிறுவனம் செயல்படுத்திவருகின்ற மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களில் இதுவரை 80,000-க்கும் மேற்பட்ட மகளிர் பயன்பெற்று வருகின்றனர். இவர்கள் சுயதொழில் வளர்ச்சிக்குத் தேவையான நிதியை வழங்குவதற்கும், ஆயுள்காப்பீட்டு வசதியைச் செய்து தருவதற்கும் Risk-cum-Development Fund என்ற ஒரு நிதி விரைவில் ஏற்படுத்தப்படும். [illegible] வேலைவாய்ப்பில் ஈடுபட்டுவரும் மகளிரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும்போது, அவர்களது குடும்பத்திற்கு 10,000 ரூபாய் நிவாரண உதவித் தொகை இந்த நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நன்னாளில் ஏழை எளிய மக்களின் நலன் காக்க சமூக நல மற்றும் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை ஒரு புதிய முனைப்புடன் முழு வேகத்துடன் செயல்படுத்த உங்கள் அன்பு அன்னையின் அரசு உறுதி பூண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் காட்டிய இலட்சியப் பாதையில் மக்கள் பணி ஆற்றி வரும் உங்கள் அன்பு அன்னையின் ஆட்சி, ஏழை எளிய மக்களுக்கு வளமான வாழ்க்கையைப் பெற்றுத் தருவதையே தனது தாரக மந்திரமாகக் கொண்டு செயல்படும் என்று உறுதி அளித்து விடைபெறுகிறேன்.

***—15.8.95 அன்று கோட்டைக் கொத்தளத்தில் சுதந்திர தின விழாவில் தேசியக் கொடி ஏற்றிவைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.***





# விடுதலைநாள் விழா நிகழ்ச்சிகள்

தமிழ்நாடு அரசு இந்தியாவின் 49-வது விடுதலை நாள் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

15.8.95 அன்று காலை முதலே மழை பெய்த போதிலும் எக்குறையுமின்றி இவ்விழா இனிதே நடைபெற்றது. அன்று காலை சரியாக 8.30 மணிக்கு மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அரசு தலைமைச் செயலகத்திற்கு வந்து சேர்ந்தார்.

மழையையும் பொருட்படுத்தாமல், வீதியின் இருபுறமும் திரண்டிருந்த மக்கள் வாழ்த்து முழக்கம் செய்து அவரை வரவேற்றார்கள். மலர்ந்த முகத்தோடு கையசைத்தும், கரங்குவித்தும் அம் மக்களுக்கு மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார் மாண்புமிகு முதலமைச்சர்.

கோட்டை முன்னால் வந்திறங்கிய அவரை அரசு தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். அணி வணக்கம் ஏற்கும் மேடைக்கு அவரை அழைத்துச் சென்று முப்படைத் தளபதிகளையும், காவல்துறை உயர் அதிகாரிகளையும் சென்னை மாநகர ஷெரீப்பையும் அறிமுகப்படுத்தினார்.

அதன்பின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல்துறையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். பிறகு, தலைமைச் செயலகத்தின் முன்னுள்ள கோட்டைக் கொத்தளத்திற்கு வந்து தேசியக் கொடி ஏற்றி வைத்து விடுதலை நாள் வீர உரை நிகழ்த்தினார்.

பிறகு, கீழே சமூகநலத்துறை சார்பில் அழைத்து வரப்பட்டிருந்த உடல் ஊனமுற்றோருக்கு இனிப்பு வழங்கினார், இதமாகப் பேசி மகிழ்வித்தார்.

உடல் ஊனமுற்றோர் நலனுக்காகச் சிறந்த முறையில் பணியாற்றியவர்களுக்கு விருதுகளும், பரிசுகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

விடுதலை நாள் விழாவில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும், விடுதலைப் போராட்டத் தியாகிகளும் வருகை தந்திருந்தனர்.

அந்த மழையிலும் கோட்டைக்கு எதிரே இருந்த புல்வெளியில் எழில்மிகு இவ்விழாவைக் கண்டு மகிழ ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல்.ஆர்.

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

**கிசான் விகாஸ் பத்திரம்**

**செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்**




**சிறப்பு அம்சங்கள்**

- 5 1/2 ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.

DIRP/DIS/95



# சுகந்தரும் சுதந்தரம்!

## நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை





இந்திய நாட்டின் சுதந்தரத் திருநாள்
இன்பம் யாவையும் இனிமேல் தருநாள்;
செந்தமிழ்த் தாயின் திருப்புகழ் பாடித்
தெய்வம் தொழுவோம் யாவரும் கூடி.

அன்னிய ஆசைகள் அனைத்தையும் ஒழித்தோம்;
அடிமை என்னும் சொல்லையும் அழித்தோம்;
பொன்னையும் சுகத்தையும் செலவழித் தேனும்
பூரண சுதந்தரம் அடைந்திட வேணும்.

அன்பின் ஆண்மையும் ஆற்றலும் வளரும்;
அன்னை பாரதத் தாய்மனம் குளிரும்;
துன்பம் யாவையும்தொலைத்திட முடியும்;
சோற்றுத் தரித்திர மாவது விடியும்.

முச்சுடர் ஒளிதரும் நம்கொடி நிழலில்
முற்றிலும் சத்திய சாந்தநல் வழியில்
மெச்சிடும் நன்மைகள் மிகமிகக் கொடுப்போம்;
மேதினி எங்கணும் கொடுங்கோல் தடுப்போம்.

எல்லாத் தேசமும் எமக்கினி உறவாம்;
எவரும் செய்திடும் நன்றியை மறவோம்;
நல்லார் யாரையும் நலமுறக் காப்போம்;
நலிப்பவர் எவரும் நடுங்கிடப் பார்ப்போம்.

சுதந்தரம் சுதந்தரம் சுதந்தரம் ஒன்றே
சுகந்தரும் சுகந்தரும் சுகந்தரும் என்றும்;
பதந்தரும் பலந்தரும்; பரமனைக் காணும்
பக்தியென் பவருக்கும் சுதந்தரம் வேணும்.





# சென்னையில் தெற்காசிய விளையாட்டுப் போட்டி

## 7 நாட்டுத் தலைவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் அழைப்பு

## ஒலிம்பிக் சங்கப் பிரதிநிதிகள் கூட்டம்

"**சா**ர்க் நாடுகளான பாகிஸ்தான், வங்காளதேசம், நேபாளம், பூடான், மாலத்தீவு, இலங்கை, இந்தியா ஆகியவற்றின் தலைவர்கள் அல்லது பொதுச்செயலாளர்கள் பிரதிநிதிகளாகப் பங்கு பெற்ற கூட்டம், 5.8.95 அன்று தலைமைச் செயலகத்தில் நடந்தது.

அன்று மாலை-பிரதிநிதிகள், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களைச் சந்தித்தனர். இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் தலைமை ஏற்று அவர்களை அழைத்து வந்திருந்தார்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., கல்வித்துறைச் செயலாள்ர் எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப., மற்றும் தொடர்புடைய துறைகளின் அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு கே. பொன்னுசாமி, மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி ஆகியோரும் இந்தச் சந்திப்பின் போது உடனிருந்தனர்.

தொடக்கத்தில் திரு பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள், ஒலிம்பிக் சங்கங்களின் பிரதிநிதிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

திரு பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள், தனது வரவேற்புரையில், விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் தமிழக முதலமைச்சர் காட்டும் தீவிர ஆர்வத்தை விளக்கினார்.

சர்வதேச அமைப்புத் தடகளப் போட்டி மற்றும் ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பைக் கால்பந்துப் போட்டி போன்ற பல்வேறு சர்வதேச விளையாட்டு நிகழ்ச்சிகள் முதல்வரின் ஆர்வத்தால் சென்னையில் வெற்றிகரமாக நடந்தேறியதை திரு பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் சுட்டிக்காட்டினார்.





மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமைதான் 7-வது தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியை நடத்தும் அரிய வாய்ப்பை இந்திய ஒலிம்பிக் சங்கம் பெற உதவியது என்றும் அவர் கூறினார். சர்வதேசத் தரத்துடன் தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியை நடத்த அவர் காட்டும் ஆர்வம் தொடர்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் போட்டியை வெற்றிகரமாக நடத்தி முடிக்க இந்திய ஒலிம்பிக் சங்கம் முழு ஒத்துழைப்பையும் நல்கும் என டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் உறுதி அளித்தார்.

தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியைச் சீரோடும் சிறப்போடும் நடத்தத் தமிழக அரசு கடமைப்பட்டுள்ளது என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் உறுதி கூறினார்.

விளையாட்டுக் கிராமம் சர்வதேசத் தரத்துடன் கட்டப்பட்டுவருவதை மாண்புமிகு முதல்வர் சுட்டிக்காட்டினார். இது தவிர, அனைத்து ஸ்டேடியங்களும் இதர வசதிகளும் சர்வதேசத் தரத்துடன் அமைந்து வருவதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

### ரூ.200 கோடி செலவு

இந்தப் போட்டிக்கான மொத்தச் செலவுத் தொகையான ரூ.200 கோடியில் இந்திய அரசு பெயரளவிலான உதவித் தொகை வழங்கும் நிலையில், மொத்தச் செலவையும் தமிழக அரசே ஏற்றுக் கொள்கிறது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார். சர்வதேசத் தரத்துக்கு ஏற்ப, ஏதாவது இன்னும் தேவையா என்பது குறித்து ஆலோசனைகளை பிரதிநிதிகளிடமிருந்து வரவேற்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்.

பல்வேறு வகையில், விளையாட்டுப் போட்டிக்கான திட்டங்கள் கண்டுள்ள முன்னேற்றத்தைத் தலைமைச் செயலாளர் அவர்கள் விளக்கினார். தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியின் வரலாற்றில் தற்போதுதான் சர்வதேசத் தரத்துடன் விளையாட்டுக் கிராமம் உருவாகி வருவதாக அவர் தெரிவித்தார். அதிக அளவிலான விளையாட்டுக்களில் (14 விளையாட்டுக்கள்) அதிக எண்ணிக்கையிலான வீரர்கள், வீராங்கனைகள் சென்னைப் போட்டியில் கலந்து கொள்ள இருக்கிறார்கள் என்றும் தலைமைச் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் சார்பில், இலங்கை ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு. ராய் டிசில்வா நன்றி கூறினார். 1984-ஆம் ஆண்டு தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டி தொடங்கப்பட்டது முதல் தனக்குத் தொடர்பு உண்டு என்றும், விளையாட்டுத்துறை வளர்ச்சியின்பால் இத்தகைய ஈடுபாடு கொண்ட முதல்வரை ஒருபோதும் பார்த்தது கிடையாது என்றும் அவர் அப்போது குறிப்பிட்டார். விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் மாண்புமிகு முதல்வர் காட்டும் அக்கறையும், ஆர்வமும், ஊக்கமும் ஈடுஇணையில்லாதது. அனைத்துக் கட்டடப் பணிகளையும் அக்டோபர் மாதத்துக்குள் செய்து தருவதில் கண்ணும் கருத்துமாகச் செயல்படும் அதிகாரிகளையும் இந்த ஆர்வம் சூழ்ந்துள்ளது.

## பெண் கல்விக் கும்மி!

—சீனி. விஜயராணி

பெண்ணெனத் தோன்றிடும் பேறுபெற்றோம் - அந்தப்
பிறைமுடி யானிலோர் கூறுபெற்றோம்
மண்ணினில் மங்கையர் மாண்புறவே - நல்ல
மாசில்லா மார்க்கத்தைக் காண்குவமே!

வீடுசி றப்பதும் பெண்ணாலே - என்று
வேதங்கள் செப்பின முன்னாலே;
நாடுமுன் னேறிடும் தன்னாலே - நாங்கள்
நற்கல்வி பெற்றிடில் மண்மேலே!

மங்கையர் கல்வியில் தேர்ந்திடவே - நெஞ்சில்
மடமைகள் மாய்ந்து தூர்ந்துவிடும்;
பொங்கிய வெள்ளம்போல் ஞானமுற - இந்தப்
பூதலத் தின்புகழ் வானுயரும்!

பள்ளியெ னும்கோவில் நாடிடுவோம் - அங்கு
பல்கலைச் செல்வங்கள் தேடிடுவோம்;
தெள்ளிய திண்மதி பெற்றிடவே - நம்மைத்
தேடியே வந்தெய்தும் வெற்றியெலாம்!

வண்டமிழ் ஔவைநம் முன்னோடி - அவள்
வார்த்தைகள் வாழ்வியல் கண்ணாடி;
தண்டமிழ்க் காவியம் நாம்படைப்போம் - பெண்ணைத்
தாழ்த்திடும் பேதமெல் லாம்உடைப்போம்!

பாரதி போற்றிய பண்புகளைப் - பெற்றுப்
படைத்திட வந்தோம் விண்புகழை;
சாரதி யாகி நடத்திடுவோம் - நாட்டைச்
சமத்துவம் என்னும் தடத்தினிலே!

உயர்ந்த தரத்துடன் மாண்புமிகு முதல்வர் அளித்துள்ள உதவிகள், அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டி அல்லது காமன்வெல்த் போட்டியை நடத்தும் வாய்ப்பை சென்னை நகரம் உறுதியுடன் கோர வழிவகுத்துவிட்டது என்றும் திரு. ராய் டிசில்வா கூறினார்.

நிகழ்ச்சியின் இறுதியாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பேசுகையில், அனைத்து நாட்டுத் தலைவர்களும் தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியைக் காணவரும்படி வேண்டுகோள் விடுத்தார். தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி தங்களது நாட்டின் தலைவர்களையும், மற்றவர்களையும் சென்னைப் போட்டியைக். காண வருமாறு அழைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

தனது பங்காக, இந்திய அரசின் வெளியுறவுத்துறை வழியாக, நாட்டுத் தலைவர்களுக்கும் முறைப்படி அழைப்பை அனுப்பப்போவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்.





## "கான்வென்ட்டில்" சேரும் தொட்டில் குழந்தைகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தொட்டில் குழந்தைகள் திட்டத்தினைத் தொடர்ந்து, 64 பெண் குழந்தைகள் இத்தொட்டில்களில் போடப்பட்டு உயிர் பிழைத்தனர்.

இதில் சில குழந்தைகள் இப்போது பள்ளிக் கூடங்களுக்குச் செல்லும் வயதை நெருங்கிவிட்டார்கள். இந்தக் குழந்தைகளுக்கு நன்முறையில் கல்வி அளிக்க வேண்டும், அவர்கள் வளர்ப்புக் கல்வி பற்றி கண்காணித்து மாதந்தோறும் அறிக்கை தர ஒரு கண்காணிப்புக் குழுவை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தர விட்டுள்ளார்.

தொட்டில்களில் போடப்பட்ட குழந்தைகளில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் மகாலட்சுமி, தனலட்சுமி, பாக்கியலட்சுமி, ஜெயலட்சுமி என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பெயரிடப்பட்ட 4 குழந்தைகள் இப்போது பள்ளிக் கூடங்களுக்குச் செல்லப் போகிறார்கள்.

9.8.95 அன்று முதல் சென்னை நகரில் உள்ள பெரிய கான்வென்ட்டுகளுக்குப் படிக்கச் செல்லும் அந்தக் குழந்தைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் ஆசி பெற, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி இந்திர குமாரி அவர்கள் தலைமைச் செயலகத்திற்கு அழைத்து வந்தார். அந்தக் குழந்தைகள், கான்வென்ட்டுக்கு உரிய சீருடை, காலணிகள் மற்றும் டை அணிந்து பெரிய செல்வந்தர்கள் வீட்டுக் குழந்தைகள் போல மிடுக்காக வந்தபொழுது அங்குக் கூடியிருந்தவர்களுக்கு அதிக ஆச்சரியத்தைக் கொடுத்தது.

அந்தக் குழந்தைகளை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி இந்திர



திருச்சி மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, அதில் கருரைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்துக்குத் தீரன் சின்னமலை பெயர் சூட்டப்படும் என்று அறிவித்ததற்கும், சென்னையில் தீரன் சின்னமலை கவுண்டர் சிலைவைக்க இடம் கொடுத்ததற்கும் கொங்கு வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு பிரிவினர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தனர். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் திரு என்.அரிபாஸ்கர், இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர் (5.8.95).

குமாரி அவர்களும், சமூக நலத்துறைச் செயலாளர் திருமதி கரியாலி, இ.ஆ.ப., அவர்களும் குழந்தைகளின் கைகளைப் பிடித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். குழந்தைகளின் கைகளில் சிறிய மலர்க் கொத்துக்கள் இருந்தன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கண்களில் நீர் ததும்ப மிகவும் உணர்ச்சி வசப்பட்டு, அந்தக் குழந்தைகளை ஒவ்வொருவராகத் தூக்கி வைத்து முத்தம் கொடுத்தார்கள். குழந்தைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மலர்க் கொத்துக்களைக் கொடுத்தார்கள்.

பின்பு, ஒவ்வொரு குழந்தையாக அழைத்துத் தமிழிலும், ஆங்கிலத்திலும் கேள்விகள் கேட்டார்கள். குழந்தைகளைத் தட்டிக் கொடுத்து சிறிது நேரம் அவர்களுடன் பேசிக் கொண்டு இருந்தார்கள்.

மேலும், அங்கு மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி இந்திர குமாரி மற்றும் சமூகநலத்துறைச் செயலர் திருமதி கரியாலி, இ.ஆ.ப., அவர்களிடம், இந்தக் குழந்தைகள் நன்றாகப் படிக்க எல்லா ஏற்பாடுகளையும் கண்ணுங் கருத்துமாகச் செய்ய வேண்டும் என்றும், கண்காணிப்புக் குழுவினர் மாதம் ஒருமுறை இது தொடர்பாக அறிக்கை தர வேண்டும் என்றும், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் அவ்வப்போது தொட்டில் குழந்தைகளின் படிப்பு பற்றித் தனக்குத் தகவல் தரவேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்மைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

பின்பு, தொட்டில் குழந்தைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் விடைபெற்றுச் சென்றனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறைக்குத் தொட்டில் குழந்தைகள் வந்து சென்றபொழுது [illegible] வர்கள் [illegible] அந்தக் குழந்தை [illegible]





# 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மகாவீரர் சிற்பமும், வட்டெழுத்துக் கல்வெட்டுக்களும் கண்டுபிடிப்பு

**த**மிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை வரலாற்றுச் சிறப்புமிக்க வட்டெழுத்துக் கல்வெட்டுடன் கூடிய மகாவீரர் சிற்பம் ஒன்றை மதுரை மாவட்டம் வடுகப்பட்டி என்ற ஊரில் கண்டுபிடித்திருக்கிறது. மகாவீரர் சிற்பத்தின் இடப்புறம் வட்டெழுத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இது தவிர இரண்டு கற்பலகைகளிலும் வட்டெழுத்துக் கல்வெட்டு எழுதப் பெற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவை வடுகப்பட்டியைச் சேர்ந்த திரு உதயசந்திரன் என்பவரது நிலத்தில் வெகு நாளாகக் கிடப்பதை திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த காசியல் கழக உறுப்பினர் திரு ஏ. மனோகரன் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை திருச்சிராப்பள்ளி பதிவு அலுவலர் திரு கி. ஸ்ரீதரன் பார்வைக்குக் கொண்டு வந்தார்.

தாமரை பீடத்தில் மகாவீரர் ஆடையேதுமில்லாமல் கைகளைத் தொங்கவிட்டு நேராக நின்ற நிலையில் சிற்பம் உள்ளது. இவரது இருபுறமும் சாமரங்களும் தலைக்கு மேலாக குடையும் காட்டப்பட்டுள்ளன. இவரது காதுகள் நீண்டு பெரிய துளையுடையனவாக உள்ளன. இவரது இடப்புறம் வட்டெழுத்துக் கல்வெட்டுள்ளது. சிற்ப அமைதி மற்றும் கல்வெட்டு எழுத்தமைதியைக் கொண்டு இது கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம். இச்சிற்பம் 4.5 உயரமும் 1.5 அடி அகலமும் உள்ளது. இதில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு மாலைக்குளம் என்ற ஊர் மீண்டும் சீரமைக்கப்பட்டு விளைநிலமாகக் கொண்டு வரப்பட்டதைத் தெரிவிக்கிறது.

இரண்டு பலகைக் கற்களில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு மூன்று பக்கங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்தமைதியைக் கொண்டு இக்கல்வெட்டும் கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம்.

இக்கல்வெட்டு மானசித்த நல்லூர் என்ற பெயருடைய மாலைக்குளம் என்ற ஊரில் உள்ள தர்மசாலை மற்றும் குளம் ஆகியவை அத்தாணிகள் என்ற சமண வணிகர்களது வீரர்களுக்குச் சொந்தமாக ஆகிறபடியால் இவற்றிற்கு எல்லைக்கற்கள் நடப்பட்டு, இவைகளைப் பிற சமயத்தார் மற்றும் அவர்களது கூலிப் படையினரால் தாக்குதல் மற்றும் அழிவுகளிலிருந்து திசை ஆயிரத்து ஐந்நூற்றுவரான பெரிவாரியன், வெம்பன் வயிரியன், கட்டாணைராமன் மற்றும் சமண வணிகரது வீரர்கள் ஆகியோர் பாதுகாக்க வேண்டும் என்ற செய்திகளைக் குறிப்பிடுகிறது.

இக்கல்வெட்டிலிருந்து மானசித்தநல்லூரான மாலைக்குளம் சமண மதத்திற்குரிய ஒரு சிறப்பிடம் என்பதும், இங்கு திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் என்ற வணிகர் குழுவினர் வாழ்ந்தனர் என்பதும் தெரிய வருகிறது. இந்த வணிகர் குழு தங்களுக்கென்று தனியாக அத்தாணிகள் என்ற பாதுகாப்புப் படையை வைத்திருக்கிறது. அத்தாணிகள் என்பது அத்திகோசம் என்ற வடமொழிச் சொல்லின் தமிழாக்கமாக இருக்கலாம்.

இத்தகவல்களைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் திரு நடன காசிநாதன் தெரிவித்தார்.

***11.8.1995* அன்று நடைபெற்ற காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகள் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.**



# "மனிதகுல மேம்பாட்டிற்காகத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டவர் பெரியவர் ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகள்!"

## காஞ்சிபுரம் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் உரை

**கா**ஞ்சிப் பெரியவர் என்றும், மகா சுவாமிகள் என்றும், உலகெங்கும் வாழ்கின்ற இறையன்பர்களால், அன்போடும் பக்தி யோடும் வணங்கப் படுபவரும் இந்தியாவின் தலைசிறந்த ஆன்மிகவாதிகளில் முக்கியமானவராக, அனைவராலும் போற்றப்படுபவருமாகிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி, மகாஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகள் அவர்களுடைய **60-வது** பிறந்த நாள், சஷ்டியப்தபூர்த்தி மணி விழாவில் பங்கேற்று, இங்கே



பெருந்திரளாகக் குழுமியிருக்கின்ற, உங்கள் அனைவரையும் க்ாண்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

இந்தச் சீரிய விழாவில் கலந்து கொள்வதாக இருந்த பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள் நேற்று என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்கள். காஞ்சிப் பெரியவர் அவர்களின் மணி விழா நிகழ்ச்சியில் எப்படியாவது கலந்து கொள்ள வேண்டும் என்று, தான் மிகவும் விரும்பியதாகவும், இருப்பினும் திடீரென்று ஏற்பட்ட உடல்நலக் குறைவினால், இந்த விழாவில் பங்கேற்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது என்பதையும் என்னிடம் தெரிவித்தார்கள். காஞ்சி மாநகருக்கு வருகைதந்து, இந்த விழாவில் கலந்துகொள்ள முடியாததற்கு மாண்புமிகு பிரதமர் அவர்கள் மிகுந்த வருத்தத்தை என்னிடம் தெரிவித்தார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக வரலாற்றின் ஆன்மிக வளர்ச்சியில் இந்தியாவுக்கு எப்போதுமே ஒரு தனி இடம் உண்டு. ஏனென்றால், புதிய சிந்தனைகள், புதிய தத்துவங்கள், மதங்கள் வடிவிலே வளர்ந்த பூமி இது. பல புண்ணிய சீலர்கள், அவதரித்த இடம் இது. காஞ்சியைப் போல, பல ஆன்மீகத் திருத்தலங்களைக் கொண்ட தமிழகம், இந்திய நாட்டு ஆன்மீக வளர்ச்சிக்கு ஆற்றிய பெரும் சேவை, சரித்திரத்தில் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தியத் திருநாட்டின் இறைத் தன்மைக்கு எடுத்துக் காட்டுகளாகத் தனது நீண்ட வரலாற்றுப் பின்னணியுடன், பண்பாட்டுப் பலகணிகளாக விளங்கும் தலைசிறந்த திருக்கோயில்கள் அமைந்துள்ள மாபெரும் திருத்தலம்தான் காஞ்சி மாநகர் என்ற இந்தப் புனித பூமி. இந்தியாவின் ஆன்மிக ஊற்றாக விளங்கிக்கொண்டிருக்கும் இத்திருத்தலத்தில், இறைப் பணியையும், சமுதாய முன்னேற்றத்தையும் இணையச் செய்து மனித குல மேம்பாட்டிற்காகத் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டு இருக்கும் பெரியவர், ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகளின் மணி விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறுவது மிகவும் ஏற்புடையதாகும். இன்று காஞ்சி மாநகர், விழாக்கோலம் பூண்டிருப்பதைக் கண்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இறைப் பணி என்பது ஆலயப் பணி என்பதோடல்லாமல், வாழும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் நலிவடைந்தோரின் நல்வாழ்விற்கும் அன்னைத் தமிழின் ஏற்றத்திற்கும் வேத ஆகமக் கல்வியின் வளர்ச்சிக்கும் வழி வகுக்கும் ஒரு மாபெரும் பணி என்ற புதிய தத்துவத்தை, இன்று உலகிற்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் உணர்த்திக்கொண்டு வருகின்றது.

ஒரு நூற்றாண்டுக்குமேல்,



இவ்வுலகில் நம்மிடையே வாழ்ந்து, எண்ணற்றோருக்கு வாழ்க்கையின் உண்மைப் பொருளையும், நம்பிக்கையையும் உன்னத அருளையும் வழங்கிக் கொண்டு இருந்த, காஞ்சி மாமுனிவர், பரமாச்சாரியார் மகா சுவாமி அவர்களின் பூவுடல் மறைந்தாலும், இன்றும் அவர் புகழுடல் மறையவில்லை. அவர் வழி நின்று அவர் போதித்த தத்துவங்களையும் அவர் எடுத்துரைத்த ஏற்றமிகு கருத்துக்களையும் மக்கள் மத்தியில் பரப்ப, சீரிய முறையில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் செயலாற்றி வருவதை எண்ணி நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உலகத்தில் நல்லவை பெருகி, அல்லவை அழிய வேண்டும், என்ற மனித குலத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஆன்மிகம் ஒரு புதிய வழியைக் காட்டிவருவதை எண்ணி நான் பெருமிதம் அடைகிறேன்.

இறையுணர்வு என்பது திருக்கோயில்களில் மட்டுமின்றி, மனித உள்ளங்களிலேயும், மனித சமுதாயத்தை மேம்படுத்துவதிலேயும், தூய உணர்வுடன் சமுதாயப் பணி ஆற்றுவதிலும் அடங்கியிருக்கின்றது என்பதைத் தமது எண்ணற்ற ஆன்மிக, சமூக, மற்றும் சமுதாய நலப் பணிகள் மூலம், எடுத்துக்காட்டி வருபவர் காஞ்சிப் பெரியவர் அவர்கள். புதிய திருக்கோயில்களைக் கட்டுவித்து, தொன்மையும் சரித்திரச் சிறப்பும் மிக்க ஆன்மிக பாரம்பரியத்தைப் பாதுகாத்து வருவதோடு சமுதாய நலனைக் கருத்தில்கொண்டு, கல்விச் சாலைகள், மருத்துவமனைகள், மற்றும் நூலகங்கள் போன்ற பல்வேறு அமைப்புகளை ஆங்காங்கே ஏற்படுத்தி அனைத்துத்தரப்பு மக்களுக்கும் சேவை செய்துவரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், பல்வேறு அறிநிலையங்களையும் பசு பாதுகாப்பு நிலையங்களையும், மருத்துவமனைகளையும், கல்விச் சாலைகளையும் நடத்தி வருகின்றது. முதியோர், மன வளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லங்களும், வேதபாடக் கல்விச் சாலைகளும், நடைபெற்றுவருகின்றன. நம்முடைய வேத சாத்திரங்களையும் தொன்மையான கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் காப்பாற்றி



## தமிழகத்தில் பிறப்பு விகிதம் குறைந்துள்ளது!

**த**மிழகத்தில் 1984-இல் ஆயிரம் பேருக்கு 28 சதவிகிதமாக இருந்த பிறப்பு விகிதம், **1995**-இல் **19** சதவிகிதமாகக் குறைந்து விட்டது. இனிவரும் ஆண்டுகளில் மேலும் குறைந்து **15** சதவிகிதமாகி விடும் என்று மாநிலக் குடும்ப நலக் குழு உறுப்பினர் திரு டி.வி. அந்தோணி அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்.

சேலம் அருகே ஜாரி கொண்டலாம்பட்டியில் உலக மக்கள் தொகை நாள் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு திரு டி.வி. அந்தோணி அவர்கள் பேசினார்.

தமிழக மக்கள் நல்வாழ்வுக்காகத் தமிழக அரசு **15** அம்சத் திட்டத்தைத் தீட்டியுள்ளது. கேரளத்தில் பிறப்பு விகிதம் **17.2** சதவிகிதமாகும் தமிழகத்தில் **19.2** சதவிகிதமாகும். பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழகத்தில் ஆண்டுக்கு **11** இலட்சம் குழந்தைகள்தான் பிறக்கின்றன. இங்கு **15** அம்சத் திட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்துவதன் மூலம், குழந்தைகள் பிறப்பை மேலும் கட்டுப்படுத்த முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அதன் பெருமைகளை உலகறியச் செய்வதிலும் அதன்மூலம் மக்களுக்கு, அமைதியான வாழ்க்கையைப் பெறச் செய்வதுமே தனது தலையாய கடமையாகக் கொண்டு, இந்த ஸ்ரீமடம் இயங்கி வருகின்றது. எனவே, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், மேற்கொண்டு வருகின்ற அனைத்து அறப் பணிகளும், மென்மேலும் வளர்ந்து செழித்தோங்க வேண்டும் என்ற எனது பேரவாவினைத் தெரிவித்துக்கொண்டு, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் மேற்கொள்ளும் நற்பணிகளுக்குத் தமிழக அரசு உறுதுணையாக விளங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள தொன்மையும், சரித்திரச் சிறப்பும் வாய்ந்த, நமது கலாச்சாரத்தின் பலகணிகளாக விளங்கும், தமிழகத்தின் திருக்கோயில்களைப் பராமரிப்பதில் எங்கள் அரசு எடுத்துவருகின்ற நடவடிக்கைகளை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். தமிழகத்தின் பட்டிதொட்டிகளில் அமைந்துள்ள, எல்லாத் திருக்கோயில்களிலும் குறைந்தபட்சம் ஒரு கால பூஜையாவது நடைபெற வேண்டும் என்பதற்காக, எங்கள் அரசு செயல்படுத்திவருகின்ற திட்டம், மக்கள் மத்தியில் பெற்றுள்ள வரவேற்பை அனைவரும் நன்கு அறிவீர்கள். சிதிலமடைந்த பல திருக்கோயில்களுக்கு, எங்கள் ஆட்சியில் சம்புரோக்ஷணமும், திருப்பணிகளும், முழுமையாக நடைபெற்றுள்ளன. இந்தப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழகத்தின் பாரம்பரியம் மிக்க திருக்கோயில்களின் பராமரிப்பில், தமிழக அரசு என்றென்றும் முன்னணியில் நிற்கும் என்பதில் சந்தேகம் இல்லை. மக்கள் மனங்களில் புதிய நம்பிக்கையையும், நல்ல ஆன்மிக உணர்வையும் ஏற்படுத்தி, அதன்மூலம் இந்தச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் வழி வகுக்கின்ற திருக்கோயில்களின் பராமரிப்பு, மேலும் செம்மையாகவும் சிறப்பாகவும் மேற்கொள்ளப்படும் என்ற உறுதியை, இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

காஞ்சிப் பெரியவர் அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடனும், நீண்ட ஆயுளுடனும் பல்லாண்டு வாழ்ந்து, மென்மேலும் இறைப் பணியையும், சமூகப் பணியையும் மேற்கொண்டு, சீரிய புகழையும், எல்லாச் சிறப்புகளையும் அடையவேண்டும் என்று உங்கள் அனைவரின் சார்பிலும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் பெருமை, உலகெங்கும் பரவ வேண்டும் என்ற எனது பேரவாவினையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீரோடும் சிறப்போடும் நடைபெறும் காஞ்சிப் பெரியவர் மணி விழாவில் கலந்துகொள்ள எனக்கு அழைப்பு விடுத்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்திற்கும், காஞ்சிப் பெரியவர் அவர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொண்டு விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.



# பெருந்தலைவர் காமராஜர் வாரிசுகளுக்கு உதவிகள்- மாண்புமிகு முதல்வர் வழங்கினார்

**பெ**ருந்தலைவர் காமராஜர் அவர்களின் தங்கையின் பேரன் திரு ஆர். கனகவேல் அவர்களுக்கும், காமராஜர் அவர்களின் மற்ற வாரிசுகளுக்கும் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே அறிவித்து இருந்தார்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஏழு இலட்சம் ரூபாயில் காமராஜர் குடும்பு நல நிதி (Kamaraj Family Welfare Fund) ஒன்றை ஏற்படுத்தி அந்தப் பணத்தை வைப்பு நிதியில் இட்டு அதன்மூலம் கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு காமராஜர் அவர்களின் வாரிசுகளுக்கு மாதா மாதம் நிதி உதவி வழங்குகின்ற திட்டம் ஒன்றையும் அறிவித்து இருந்தார். மேலும், திருமதி நாகம்மை அவர்களின் மகள் திருமதி மங்களம், திருமதி கமலா தேவி மற்றும் திரு கனகவேல் ஆகியோருக்கு, தமிழக அரசின் சார்பில் இலவசமாக வீடுகள் வழங்குவதற்கு ஆணையிட்டு இருந்தார்கள்.

8.8.95 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் வாரிசுகளைத் தலைமைச் செயலகத்திற்கு வரவழைத்து அந்த உதவிகளை நேரில் வழங்கினார்கள்.



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் ஏழு இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ள காமராஜர் குடும்ப நல நிதி, நிரந்தர வைப்பு நிதியில் வைக்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு 5 பேருக்குப் பிரித்துக் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:

திருமதி கமலாதேவி அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 2,333 ரூபாயும், திருமதி ஆர். மங்களம் அவர்களுக்கு 1,166, திரு கே. ஜவஹர்லால் அவர்களுக்கு மாதம் 1,166 ரூபாயும், திரு கே. மோகன் அவர்களுக்கு 1,166 ரூபாயும், காமராஜர் அவர்களின் சிதைக்குத் தீமூட்டிய தங்கையின் பேரன் திரு கனகவேல் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 2,333 ரூபாயும், மேலும் 5 ஆண்டுகளுக்கு அவற்றைப் பெறுவதற்கான காசோலைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நேரில் வழங்கினார்கள். மொத்தம் 5 ஆண்டுகளுக்குரிய பின் தேதியிட்ட காசோலைகள் அவர்களிடத்தில் வழங்கப்பட்டன. மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தபடி, திருமதி நாகம்மையின் மகள் திருமதி மங்களத்திற்கு மதுரையில் வீடு ஒன்றினை ஒதுக்கீடு செய்து அதற்கான ஒதுக்கீட்டு ஆணையை அவர்களிடம் வழங்கினார்கள்.

திருமதி நாகம்மையின் மற்றொரு மகளான திருமதி கமலாதேவி அவர்களுக்கு விருது நகரில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றினை இலவசமாக வழங்கி, அதற்குரிய ஒதுக்கீட்டு ஆணையையும் அவர்களிடம் நேரில் வழங்கினார்கள்.

திருமதி நாகம்மையின் பேரன் திரு கனகவேல் அவர்களுக்கு சென்னையில் ஒரு உயர்தர வருவாய்ப் பிரிவில் அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றை இலவசமாக வழங்கி அதற்குரிய ஒதுக்கீட்டு ஆணையை அவர்களிடம் நேரில் வழங்கினார்கள்.

திருமதி நாகம்மையின் பேரனும், திரு கே. மோகன் அவர்களின் மகனான திரு சிவகுமார் தனக்கு அரசு பணியிடம் வேண்டும் என்று கேட்டு இருந்த கோரிக்கையை ஏற்று, அவருக்குப் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்து அதற்குரிய நியமன ஆணையையும் திரு சிவகுமாரிடம் வழங்கி தனது வாழ்த்துக்களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக்கொண்டார்கள்.

அவர்களது குறைகளைக் கேட்டு அறிந்ததோடு, அவற்றைக் களைவதற்கு ஏற்பாடுகளைச் செய்து அனைத்து உதவிகளையும் உடனடியாக வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் வாரிசுகள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

**சோம்பலினால் உடல் மட்டுமல்ல; உள்ளமும் கெட்டுவிடுகிறது.**
**-சாரதா தேவி.**

**உங்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை பிறக்காதவரையில் இறைவன் மீது உங்களுக்கு நம்பிக்கை பிறக்காது.**
**-விவேகானந்தர்.**





# புதுக்கோட்டை மாவட்டத்தில் காயிதெ மில்லத் நூற்றாண்டு விழா

**பு**துக்கோட்டை மாவட்டத்தில், கோட்டைப்பட்டினத்தில் கண்ணியத் தென்றல் காயிதெ மில்லத் நூற்றாண்டு விழா 18.8.95 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் முன்னிலை வகித்தார்.

காயிதெ மில்லத் புகைப்படக் கண்காட்சி மற்றும் காயிதெ மில்லத் உருவப் படத்தை மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவிற்கு வருகைதந்த அனைவரையும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வெ. வரபிரசாத ராவ், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் பேசும் பொழுது கூறியதாவது.

"நபிகள் நாயகம் சொன்ன அறிவுரையின்படி யார் இந்தச் சமுதாயத்திற்கு நன்மை செய்கிறார்களோ அவர்களுக்கு விசுவாசமாக இருங்கள் என்றார். நமது புரட்சித்தலைவி அவர்கள் இதுவரை இல்லாத வகையில் உலமா பென்சன் 1,700 பேருக்கு ரூ.400 வீதம் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

"மேலும் கணக்கெடுத்து எத்தனைப் பேர்கள் உள்ளார்களோ அத்தனைப் பேர்களுக்கும் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். முஸ்லீம் சமுதாயத்தினர் மயானத்திற்குச் சுற்றுச் சுவர் அமைக்க ரூ.15 இலட்சமும், வக்ஃப் வாரியக் கட்டடம் கட்ட ரூ.5 இலட்சமும் முதல்வர் வாரி வழங்கி உள்ளார்கள். எத்தனைப் பேர் முதலமைச்சர் வந்துபோய் இருக்கிறார்கள். ஆனால், எவரும் நமது சமுதாயத்தைக் கவனிக்கவே இல்லை. வக்ஃப் வாரியக் கடனை அடைக்க ரூ.70 இலட்சம் வழங்கினார்கள். ஒவ்வொரு ஆண்டும் 30 இலட்சம் நிதி ஒதுக்கப்படும் என நமது முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்" என்றார்.

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தமிழ்நாடு மாநிலத் தலைவர் திரு அப்துல் சமது அவர்கள் பேசியபோது:

"மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்திற்குக் காயிதெ மில்லத் மாவட்டம் எனப் பெயரிடப்படும் எனத் தெரிவித்தார். காலத்தின் விதி வசத்தால் அவர் விட்டுச் சென்ற பணியைப் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றினார். மேலும் உலமாக்களுக்கு உதவித்தொகை வேறு எந்த மாநிலத்திலும் வழங்கப்படவில்லை. தமிழ்நாட்டில் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் 1,700 பேருக்கு ரூ.400 மாதந்தோறும் வழங்க வகை செய்தார். அது மட்டுமல்ல, இன்னும் எத்தனைப் பேர் இருக்கிறார்கள் எனக் கணக்கெடுத்து அத்தனைப் பேர்களுக்கும் வழங்கப்படும் என ஆணைபிறப்பித்துள்ளார்கள். அதுமட்டுமல்ல, அண்ணா நினைவிடம், புரட்சித் தலைவர் நினைவிடம் போல் கண்ணியத் தென்றல் காயிதெ மில்லத் அவர்களுக்கும் நினைவிடம் அமைக்கத் தகுதியான ஒரு நல்ல இடம் ஒதுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். இதற்கெல்லாம் நமது சமுதாயம் நன்றி பாராட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசியபோது:

"யார் யார் பெருமைக்கு உரியவர்களோ, யார் யார் புகழுக்கு உரியவர்களோ அவர்களுக்கு எல்லாம் பெருமை சேர்ப்பதில் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் தவறியதே இல்லை. வித்தகர்களுக்கு, நாடு போற்றும் நல்லவர்களுக்கு, கவிஞர்களுக்கு, தியாகசீலர்களுக்கு, நாட்டுக்காக உழைத்த நல்லவர்களுக்குத் தமிழக அரசு – புரட்சித்தலைவி அரசு விழா எடுக்கிறது. கன்னியாகுமரி மாவட்டம் கேரளத்திலிருந்து பிரிந்து தமிழ் நாட்டுடன் இணைய போராடிய நேசமணியைப் போற்றிப் புகழ எண்ணி அவரது பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை இந்த மாதம் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் கொண்டாட முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு உள்ளார்.

"கண்ணியமிகு காயிதெ மில்லத் அவர்கள் இந்தியத்தாய் பெற்றெடுத்த நல்ல பிள்ளை. இஸ்லாத்தின் அறம் தழைக்க பூத்த முல்லை. உறுதிகொண்ட மனம், ஒப்பற்ற ஞானம், ஒழுக்கத்தின் சான்று, சமத்துவப் பண் அத்தனையையும் மொத்தமெனக் குத்தகைக்குப் போகாமல் சொந்தமெனக் கொண்டவர். சந்தமிகு செந்தமிழின் மைந்தர். தாய்மொழிப் பற்றினோடு நாட்டுப்பற்று மிக்கவர். சீனப் போரும் – பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின் போது எடுத்துக்கொண்டு தடுத்தாண்டவிதமும் அவர் நாட்டுப்பற்றுக்குச் சான்று பகர்கின்றன.

"தமிழ் ஆட்சிமொழியாகப் பலரால் பல வகையில், பல்

**தேசத்தொண்டு என்பது, மனித சமுதாயத்தின் தொண்டு என்பதேயாகும்!**

**–அண்ணல் காந்தியடிகள்**

## சுற்றுச் சூழல் வெப்பமடைவதால் மலேரியா

உலகின் சுற்றுச் சூழல் வெப்பமடைந்து வருவதாகவும், இதன் காரணமாகவே உலகில் மலேரியா, மஞ்சள் காய்ச்சல் நோய் போன்ற நோய்கள் ஏற்படுவதாகவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இதனால் ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கானோர் இறக்க நேரிடுகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் கோடைக் காலத்தில் வெப்பம் உயரக் கூடும் என்றும், கடும் அனல் காற்று வீசக் கூடும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். இந்த ஆண்டுத் துவக்கத்தில் அமெரிக்காவில் சிகாகோ நகரில் ஐந்து நாட்களுக்குக் கடும் காற்று வீசியபோது, 500 க்கும் அதிகமானோர் இறந்து போனதை அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். அந்த ஐந்து நாட்களின்போது வெப்பம் 41 டிகிரி செல்ஸியஸையும் தாண்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

டெங்கு காய்ச்சல், மஞ்சள் காய்ச்சல் போன்ற நோய்களின் கிருமிகளைப் பரப்பும் கொசுக்கள் அதிகமாக வளர்வதற்கு வெப்பமான சீதோஷ்ண நிலையே காரணம் என்று டாக்டர் பால் எப்ஸ்டீன் என்னும் விஞ்ஞானி கருத்து தெரிவித்துள்ளார்.

இந்தியா, கொலம்பியா, கென்யா, கோஸ்டாரிகா ஆகிய நாடுகளில் இத்தகைய கொசுக்கள் அதிகமாக இருப்பதாக இவர் கூறுகிறார். துவக்கத்தில் 1000 மீட்டர்களுக்குத் தாழ்வான இடங்களிலேயே இந்த வகைக் கொசுக்கள் காணப்பட்டதாகவும், ஆனால் இப்போது 2000 மீட்டர்களுக்கு மேல் உயரமுள்ள இடங்களில் கூட இவை காணப்படுவதாகவும் டாக்டர் பால் எப்ஸ்டீன் சொன்னார்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

---

வேறு காலகட்டங்களில் கூறப்பட்டன. காயிதெமில்லத் தமிழ்ப் பற்று தமிழில் தகுதிமிக்கது என முழங்கவைத்தது. இவற்றையெல்லாம் ஆய்ந்து, சமூகநீதி காத்த வீராங்கனை புரட்சித் தலைவி அவர்கள், காயிதெமில்லத் அவர்களின் பெயரில் மாவட்டம், நெடுஞ்சாலை, கல்லூரி எனப் பாமாலை சூட்டிக் கௌரவித்துக் கொண்டிருக்கிறார். பாதொடுக்கத் தமிழுண்டு, பைந்தமிழில் இனிமை உண்டு, யார்க்கும் இங்கு வீரமுண்டு. யானை பலம் எமக்கு உண்டு. வேற்றுமையில் ஒற்றுமை. வேதனையில் சாதனையும் நீக்கமற இணைந்ததுவே நெஞ்சினிக்கும் பாரதம் என முழங்கியவர் காயிதெமில்லத் ஆவார்கள்" என்றார்.

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்கள் பேசும்போது கூறியதாவது:

"கண்ணியத் தென்றல் காயிதெமில்லத் நூற்றாண்டு விழா புதுக்கோட்டை மாவட்டத்தில் கோட்டைப்பட்டினத்தில் தான் நடக்கவேண்டுமெனப் புரட்சித்தலைவி விரும்பினார். அவர் விருப்பத்தைப்போல அவர் , எண்ணியதைப்போல விழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. கோட்டைப்பட்டினத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லையென்று அறிந்தவுடன் அதற்காக ரூ.35 இலட்சம் ஒதுக்கி குடிநீர் வழங்க ஆணை பிறப்பித்துள்ளார். அனைத்துத் தொகுதிகளையும் தனது சொந்தத் தொகுதிபோல் கருதி அதன் தேவைகளை உடன் நிறைவேற்றுபவர் நமது முதல்வர். எந்த நாட்டிலும் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு எல்லா மதத்தினரும் இந்தத் தமிழகத்தில் தான், அனைவரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். எந்த ஒரு திட்டம் தீட்டினாலும், அதன் பலன் ஏழை எளிய மக்களின் தேவைகளை அறிந்து உடன் நிறைவேற்றுபவர். நமது தமிழகத்தைப் பார்த்துதான் வேறு மாநில முதல்வர்கள் பல திட்டங்களைத் தீட்டுகிறார்கள் என்பதை வெளிநாட்டவரும் கவனித்து வருகிறார்கள்" என்றார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஜீனத் சர்புதீன், திரு சி. குழந்தைவேலு, திரு எஸ். சண்முகநாதன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

முன்னதாக 'மனிதப் புனிதர் காயிதெமில்லத்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் கவிஞர் இளந்தேவன், பேராசிரியர் கே.எம். காதர், நாகூர், இசட் ஜபருல்லா, தஜம்முல் முகமது, பேராசிரியர் அப்துல் கறீம் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.





# மதுரை மாவட்ட அலங்காநல்லூரில் பெரியாறு வைகை - பேரணை இணைப்புக் கால்வாய்த் திட்டத் தொடக்க விழா!

**ம**துரை மாவட்டத்தில் வைகை அணையிலிருந்து பேரணை வரை சுமார் 32 கி.மீ. நீளமுள்ள இணைப்புக் கால்வாய் சுமார் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

நீர் வளத்தைச் சிக்கனமாகவும், சீராகவும் பயன்படுத்தப் பெரியாறு வைகை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இக்கால்வாய் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் குறைகளை அகற்றிடவும், நீர் ஆதாரத்தை முழுமையாகப் பயன்படுத்தவும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆலோசனை மற்றும் உத்தரவின் பெயரில் உலக வங்கியின் நிதியுதவியுடன் 1991-ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இத்திட்டத்தின் தொடக்க

விழா, 13.8.95 அன்று மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு அ.மா. பரமசிவன் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் தமது தலைமையுரையில் கூறியதாவது: "ஏழை விவசாயிகளின் நலனைப் பெரிதும் போற்றிப் பாதுகாப்பதிலும், துயர்களை உடன் துடைப்பதிலும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நிகர் அவரே! 1987-ஆம் ஆண்டு மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் தொடக்கிய இத்திட்டத்தினை 1995-இல் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நிறைவேற்றியுள்ளார்" என்றார்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் தமது விழாப் பேருரையில் கூறியதாவது:

"போதிய நிதியாதாரம் இல்லாத போதிலும், மக்களுக்குப் பலன் தரும் எந்த ஒரு திட்டத்தையும் உலக வங்கி போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் உதவியுடன் நிறைவேற்றுவதில் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவிக்கு நிகர் அவரே. தமிழ்நாட்டில் புதிய நீர் ஆதாரங்களுக்கான வாய்ப்பும், நிலத்தடி நீர் குறைவதையும் கருத்தில் கொண்டு, நாட்டின் அனைத்து நீர்வள ஆதாரங்களை நிலைப்படுத்தும் வகையில், சுமார் ரூ. 1,200 கோடி உலக வங்கியின் நிதியுதவியில் விரைவில் தொடங்கப்பட்டு ஏழு ஆண்டுகளில் முடிக்கப்படவுள்ளது. மேலும் ரூ.12 கோடியில் கண்மாய் மற்றும் கால்வாய்களைச் சீரமைக்கும் பணியும் விரைவில் தொடங்கப்படவுள்ளது. உசிலம்பட்டியில் 58 கால்வாய்த் திட்டம், 61 கிராமக் கண்மாய்த் திட்டமாக 28 கோடி ரூபாயிலும், போடிப் பகுதி மக்களுக்கு ரூ.13.5 கோடியில் 18 கால்வாய்த் திட்டத்தினையும் இப்படிப் பல நலத்திட்டங்களை அடுத்து வரும் சந்ததியினரின் நலங்களைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள்" என்றார்.

**இத்திட்டத்தின் பயன்கள்**

1991-ஆம் ஆண்டு உலக வங்கி நிதியுதவியுடன் இப்பணி துவங்கப்பட்டு 1995-ஆம் ஆண்டு முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

தடுப்பு அணையிலிருந்து பேரணைவரை சுமார் 32 கி.மீ. தூரம் முழுவதுமாகப் பக்கவாட்டிலும் தரை மட்டத்திலும் புதிய கான்கிரிட் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளதால், நீரின் வேகம் 16 மணி நேரத்திலிருந்து 5 மணி நேரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

10 சதவிகிதம் நீர் உறிஞ்சப் படுவது முழுமையான அளவில் தடுக்கப்பட்டுவிட்டதால் கடைமடைப் பகுதிகளுக்கும் ஒரே நாளில் தண்ணீர் சென்றடைவதால், இதுநாள் வரை ஒரு போகம் சாகுபடி செய்து வந்த விவசாயப் பெருமக்கள் இனி மேல் இருபோகம் விவசாயம் செய்ய ஏதுவாகிறது.

"திருமங்கலப் பிரதான கால்வாய் மூலம் பலன் பெறும் விவசாயிகளுக்கும் பலனளிக்கும் வகையில், பேரணையின் மதகுக்கு முன்புறம் வைகை ஆற்றின் குறுக்கே தரைமட்டத்திற்குச் சுமார் 6 மீட்டருக்குக் கீழ் 2 மி.விட்டமுள்ள சுமார் ரூ.4 கோடியில் கான்கிரிட் சுரங்கம் அமைத்து அதன்மூலம் நீர் கொண்டு செல்லப்படுகிறது.

"மஞ்சளாறு வராக நதி மற்றும் கிளை ஆறுகளைக் கடக்கும் இடத்தில் இணைப்புக் கால்வாய் மேல் தொட்டிப் பாலம் மூலம் கொண்டு செல்லும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது.

"இக்கால்வாயின் இருபுறங்களிலும் உள்ள சுமார் 60 கிராமத்தைச் சேர்ந்த கிராம மக்களுக்குப் பயன்பெறும் வகையில் 13 நடைபாலங்களும் 17 வண்டிப் பாலங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

"இத்திட்டத்தின் மூலம் சுமார் 56,940 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், பாசனப் பரப்பில் நெல் உற்பத்தித்திறன் ஒரு எக்டேருக்கு 3 டன்னிலிருந்து 6 டன்னாக உயர்ந்துள்ளது.

"நீர் விரயம் முற்றிலுமாகக் குறைக்கப்பட்டுள்ளதால் புதிதாகப் பெரியகுளம் திண்டுக்கல் அண்ணா மாவட்டம் நிலக்கோட்டையைச் சார்ந்த சுமார் 4,000 ஏக்கர் கூடுதலாகப் பாசன வசதி ஏற்பட்டுள்ளது".

*-மு.பா. அன்புச்சோழன்*
*உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)*
*மதுரை மாவட்டம்.*

## பொன்மொழிகள்

☆ மனிதனுக்குள் ஏற்கெனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்.

— சுவாமி விவேகானந்தர்

ஆண்கள் மரங்கள். பெண்கள் அந்த மரத்தை ஆதாரமாக, கொழு கொம்பாகச் சுற்றிப் படரும் கொடிகள். குழந்தைகள் அந்தக் கொடிகளில் குலுங்கி ஆடும் நறுமண மலர்கள்.

— இங்கர்சால்



# ஒற்றுமை காப்போம்!

அந்நியர்கள் நம் மண்ணில், முதன் முதலில் காலெடுத்து வைத்துக்கட்டிய இக்கோட்டையின் கொத்தளத்தில், நம் விடுதலைக் கொடி இன்று பட்டொளி வீசிப் பறப்பது, நம் சுதந்திரத்தின் மகிமையை உலகுக்கு உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

விடுதலை நாள் விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில், அதற்கு வித்திட்டவர்களின் தியாகங்களைப் பெருமையோடு நினைவுகூர்வது நம் கடமையாகும்.

எனவே, தாய்த்திரு நாட்டின் விடுதலைக்காகத் தம் உயிர், உடல் உடைமைகளை ஈந்த பல்லாயிரக்கணக்கான விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் சார்பில் எனது வீர வணக்கத்தை அஞ்சலியாக்குகிறேன்.

இந்திய நாட்டில் அமைந்திருந்த நூற்றுக்கணக்கான சிற்றரசுகள் தமது பெருமைகளை மறந்து, தங்களுக்குள் சண்டையிடுவதையே வாடிக்கையாகக் கொண்டிருந்ததால் தான், தேசிய உணர்வு அவர்களிடமிருந்து விடைபெற்று வெகுதூரம் சென்றுவிட்ட நிலையில், அடிமை வாழ்வு நாம் அழைக்காமலேயே குடியேறியது; நமது சுய மரியாதையையே அடித்து வீழ்த்தியது.

இந்தப் படிப்பினை நமது நினைவில் இன்றும் நிலைத்திருப்பதால்தான் பல்வேறு மொழியினர், வெவ்வேறு இனத்தவர் நிறைந்து வாழும் நிலையிலும், நாம் பெருமையோடு உலக அரங்கில் மிகப் பெரிய மக்களாட்சி எனும் மாட்சிமையோடு தலை நிமிர்ந்து நிற்கிறோம். இப்பெருமையை நாம் ஒவ்வொருவரும் என்றென்றும் கட்டிக் காக்கவேண்டும் என்று உறுதி கொள்ளவேண்டும் என்பதை இவ்வேளையில் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

**— புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-1-லிருந்து.**

## மாணவர் பக்கம்



# தூரம் நேரம் சுருக்கிடுவோம்

—கவிஞர் மனசை ப. கீரன்

இருக்கும் இடத்தே இருந்துகொண்டே
எடுக்க, தொழில்கள் ஆற்றிடவே
சுருக்காய் வேலை முடித்திடவே
தோன்றிப் பல்கும் "ரோபோ"க்கள்!

நடக்கும் போதும் தொலைதகவல்
நமது சட்டைப் பைகளிலே
கிடக்கும் கருவி செய்திகளைக்
கேட்டுக் கொடுக்கும் "பேஜர்"தான்!

உலகின் எந்த மூலையிலும்
ஒளிரும் நிகழ்ச்சி நம்கூடம்
நலமே காட்டும் தொலைக்காட்சி!
நடத்திக் காட்டும் கணிப்பொறிகள்!

நோக்கப் படங்கள், கணக்குகளும்
நொடியில் போட்டுக் காட்டிவிடும்
காக்கக் கோடி தகவல்கள்
காலம் காலம் காத்தளிக்கும்!

தொலைவு காலம் உலகினிலே
சுருக்கம் நுணுக்க அறிவியல்கள்
'மலையோ'! என்று மலைத்தல்போல்
வகையாய் வழங்கும் கற்பகமே!

காசி, கடல்கள் தாண்டுவதும்
கருதின் முடிவே, என்றார்கள்!
ஊசி நுனிபோல் கணிப்பொறிகள்
உடனே முடிக்கும் அறிவியல்கள்!



# தெரிந்து கொள்ளுங்கள்!

## அமெரிக்கா

இதற்குப் புது உலகம் என்று பெயர். சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்புவரை இக்கண்டத்தைப்பற்றி ஐரோப்பியருக்கு ஒன்றும் தெரியாது. இதைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான மைல் தொலைவு கடல் சூழ்ந்து நிற்பதுதான் இதற்குக் காரணம். கடலில் மேற்குத் திசையில் சென்று இந்தியாவுக்கு வழி காண முயன்ற கொலம்பஸ், அமெரிக்காவின் கரையைக் கண்டபோது தாம் இந்தியாவைக் கண்டுபிடித்துவிட்டதாக நினைத்தார். 'அமெரிக்கஸ் வெஸ்ப்பூசியஸ்' என்ற இத்தாலிய நாடாய்வாளர் இது ஒரு புது உலகம் என்று கண்டார். இவரைப் பாராட்டும் வகையில் இக்கண்டம் அமெரிக்கா என்றே வழங்கி வருகின்றது.

அமெரிக்காக் கண்டம் இரண்டு பெரிய நிலப்பரப்புக்களைக் கொண்டது. ஒன்று வட அமெரிக்கா, மற்றொன்று தென் அமெரிக்கா; கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், மெக்சிக்கோ ஆகிய மூன்று பெரிய நாடுகள் வட அமெரிக்காவில் உள்ளன. மெக்சிக்கோவிற்குத் தெற்கு ஏழு சிறிய நாடுகள் உள்ளன. இவை இருக்கும் பகுதியை மத்திய அமெரிக்கா என்றும் சொல்லுவதுண்டு. என்றாலும், இது வட அமெரிக்காவின் ஒரு பகுதிதான். தென் அமெரிக்காவில் 13 நாடுகள் உள்ளன.

வட அமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய பகுதிகளைப் பனாமா என்னும் ஒரு சிறிய பூசந்தி இணைக்கிறது. இரண்டு பகுதிகளிலும் பெரிய பெரிய மலைகளும், ஆறுகளும் உண்டு. சில இடங்களில் காடுகள் செழித்து ஓங்கி வளர்ந்துள்ளன. உலகத்தில் மிகச் செழிப்பான கண்டம் அமெரிக்காதான். நிலக்கரியும், இரும்பும், பெட்ரோலியம் எண்ணையும், வேறு தாதுப்பொருள்களும் ஏராளமாகக் கிடைக்கின்றன.

ஐரோப்பியர் சென்று குடியேறுவதற்கு முன்பே இங்குப் பழங்குடி மக்கள் பலர் வாழ்ந்து வந்தார்கள். அவர்களை அமெரிக்க இந்தியர்கள் என்று சொல்வார்கள்.

கனடாவிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பெரும்பாலோர் பேசும் மொழி ஆங்கிலம். கனடாவில் குவிபெக் பகுதியில் பிரெஞ்சு மொழி பேசுவோர் அதிகம். மற்ற நாடுகளில் அதிகமாகப் போர்ச்சுக்கீசிய மொழியும், ஸ்பானிய மொழியும், பிரெஞ்சு மொழியும் வழங்குகின்றன.

## மாணவர் பக்கம்



# 'பிரமிட் கோபுரம்' என்றால் என்ன?

பண்டைய எகிப்து, கிறிஸ்துவுக்குச்சற்றேறக் குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நிலையானதோர் ஐக்கிய அரசாங்கத்தை நிறுவி கி.மு. ஆறாம் நூற்றாண்டு வரையில் தனிச் சுதந்திர நாடாக வாழ்ந்து வந்தது. இன்று நாம் பெருமைப்பட்டுக் கொள்ளும் நாகரிக வாழ்க்கையின் பல துறைகளிலும் அது சிறப்புற்று விளங்கியது. இந் நீண்ட கால அற்புத வரலாற்றில் பேரோக்கள் எனப் பெயர் பெற்ற மாமன்னர்கள் அதனை ஆண்டு வந்தனர். நாட்டின் நலனுக்கான காரியங்கள் பல செய்தும் நல்லாட்சி வழங்கியும் வந்த அவர்களை மக்கள் தேவர்களெனப் போற்றி வந்தனர். மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டிருந்த அவர்கள், தம் மன்னர்கள் இறந்த பின்னரும் தொடர்ந்து பெருமையுடனும் பாதுகாப்புடனும் அழியாமலும் இருக்க வேண்டுமென விரும்பினர். உடலில் 'கா' எனும் இரண்டாம் உயிர் ஒன்று குடி கொண்டிருந்தது என்றும், உடல் அழிந்தாலும் அது அழிவதில்லை என்றும், ஆகவே, உயிர்போன பிறகும் உடலை அழியாமல் பாதுகாப்பது நலமென்றும் அவர்கள் கருதினர்.

உடல் அழியாதிருக்கும் பொருட்டு மருந்தூட்டி அதைப் பாதுகாத்தனர். இங்ஙனமாக மன்னரின் உடலைப் பாதுகாக்கவே பிரமிட் எனும் பிரம்மாண்டமான சமாதிகளைக் கட்டினர். இச்சமாதிகள் அல்லது கல்லறைகள் பிரமிட் உருவில், அதாவது பட்டைக் கூம்பு உருவில், அமைந்திருப்பதால் 'பிரமிட்' என்றழைக்கப்படுகின்றன. பிரமிட் அடி சதுரமானது. நான்கு பக்கங்களும் முக்கோண வடிவுடையன. அவை உச்சியில் ஒன்று சேர்வன.

எகிப்திய மொழியில் 'பிரமிட்' என்ற சொல்லுக்கு 'விண்ணேறுவதற்கான இடம்' என்ற பொருள் உண்டு.

பிரமிட் எகிப்திய மக்களின் நம்பிக்கையினின்றும் எழுந்தது. அவர்கள் தம் ராஜ்ஜியத்திற்கு நிலைபேறும் திடநிலையும் உறுதியும் அளிக்கப் பேரவாக் கொண்டனர். அவர்களை ஆண்ட பேரோ மன்னன் தேசீய வாழ்வில் கண்கூடான உருவம். அவனது சடலம் கொண்ட பிரமிட் தமக்கும் தம் மன்னருக்கும் அமரத் தன்மையை உத்தரவாதம் அளிக்கிறது. இதுவே பிரமிட்டின் உட்கருத்து.

எகிப்தில் இன்றும் காணப்படும் மிகப் பழைய பிரமிட்டைச் சகாராவில் அமைத்தவன் ஜோசர் எனப்படும் பெருமன்னன். இவன் மூன்றாவது அரச வம்சப் பரம்பரையைச் சேர்ந்தவன். அவன் படிவரிசையில் அமைத்துக் கட்டிய பிரமிட் உலகிலேயே மிகப் பழைய கற்கட்டடமாகும். உலகக் கட்டடக் கலையின் ஆரம்பத்தையே இங்கு காணலாம். ஒரு பெரிய நினைவுச் சின்னத்தைக் கற்களில் அமைக்க மானிடன் செய்த முதல் முயற்சி இது.

**நன்றி: 'மன்னர் தளகர்த்தர்' என்னும் நூலில், திரு. ப. கோதண்டராமன்.**

## அறிவியல் கண்டுபிடிப்புகள்

- ஸ்காட்லாந்தைச் சேர்ந்த கிரிக் பாட்ரிக் மாக்மில்லன் என்பவர் 1839 -ஆம் ஆண்டு மிதிவண்டியைக் கண்டு பிடித்தார்.
- இங்கிலாந்தைச் சேர்ந்த பெய்ர்டு என்பவர் 1926 -ஆம் ஆண்டு (TELEVISION) தொலைக்காட்சிப் பெட்டியைக் கண்டு பிடித்தார்.
- பிரிட்டனைச் சேர்ந்த சுருகியர் என்பவர் 1824 -ஆம் ஆண்டு முதன் முதலாக மின்காந்தம் (ELECTRIC MAGNET) கண்டு பிடித்தார்.
- பிரான்சு நாட்டைச் சேர்ந்த தின்மானியர் என்பவர் 1830-ஆம் ஆண்டு தையல் பொறியைக் கண்டு பிடித்தார்.
- ஜெர்மனியைச் சேர்ந்த சோகன் குட்டன் பெர்க் 1445-ஆம் ஆண்டு, முதல் அச்சுப் பொறியைக் கண்டு பிடித்தார்.
- பிரிட்டனைச் சேர்ந்த முனைவர் ஆலன் எம். டியூரிங் 1824 ஆம் ஆண்டு முதல் கணினியைக் (COMPUTER) கண்டு பிடித்தார்.

# கணிணிக்கு ஏற்ற தமிழ்!

**– சுஜாதா**

**க**ணிணியியலைப் பற்றிச் சொல்ல எனக்கு என்ன தகுதியிருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம். நான் 10,12 ஆண்டுகளாகக் கணிப்பொறியைப் பற்றித் தமிழில் எழுதும் எழுத்துக்களுக்கெல்லாம், எழுதும் கட்டுரை, கவிதை, கதைகள் எல்லாவற்றுக்கும் கணிப்பொறியைப் பயன்படுத்தி வருகிறேன். அந்த ஒரு விதத்தில் எனக்கு லேசான தகுதியிருக்கிறது.

கணிணிக்கு ஏற்ற மொழி தமிழ் மொழி என்பதில் சற்றேனும் ஐயமில்லை. இதற்கு முக்கியமான காரணம், அந்த எழுத்தில் எண்ணிக்கைகள் குறைவு; கூட்டெழுத்துக்கள் இல்லை. நேராக வரிக்கு மேலும் கீழும் விசித்திரக் கிரீடங்களும் தொங்கல்களும் இல்லாமல் எழுதப்படும் மொழி அது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த இலத்தீன் கிரேக்க மொழிகள், சமஸ்கிருத மொழிகள் வழக்கொழிந்து விட்டபோது தமிழ் மட்டும் இன்று பேசப்படுவதற்கு முக்கியமான காரணம் அதன் வரி வடிவத்திலும் இலக்கண விதிகளிலும் உள்ள எளிமைதான் என்று எண்ணத் தோன்றுகிறது.

தமிழில் எழுத்துக்கள் குறைவு என்று சொன்னார்கள். அதாவது ஒரே ஒரு 'க' தான் இருக்கிறது. ஒரே ஒரு 'ச' தான் இருக்கிறது என்று கிண்டல் செய்வார்கள். என்னப்பா இது ஒரே ஒரு 'க'வை வைத்துக்கொண்டு 'கா(K)ந்தி' என்றாலும், 'கா(G)ந்தி' என்றாலும் ஒரேமாதிரி எழுதுகிறீர்கள் என்று நான் பெங்களூரில் இருந்தபோது கேட்டார்கள்.

இப்படிப் பார்க்கிறபோது கணிப்பொறி ஆக்கத்திற்குப் பார்க்கிறபோது, கணிப்பொறியில் விசைப் பலகையில் எல்லா எழுத்துக்களும் தமிழ் எழுத்துக்களும் அடங்கிவிட்டு இன்னும் நிறைய மிச்சம் இருக்கிறது. புதிய எழுத்துக்களுக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறது. இரண்டாயிரம் 'ஆண்டு பழமையான ஒரு மொழி இன்றைய கணித இயலுக்குத் தகுந்தாற்போல் இருப்பதே ஒரு மிகப் பெரிய ஆச்சரியம்!

தமிழுக்கும் கணிணிக்கும் உள்ள தொடர்புகள் எழுதுவதிலேயே தொடங்கிவிட்டன.

'டிசிஎம்' என்னும் நிறுவனம் இந்தி மொழிச் சொல் தொகுப்புக்கு வகை செய்கிறது. சொல் தொகுப்பு என்பது WordProces என்று சொல்லுவார்கள். அதாவது சொல் தொகுப்புச் சாதனம் என்பது சொல்லாக்கத்திற்கு நாம் பயன்படுத்துகிற ஒரு கருவி. அதை, அச்சடிக்கவும் முதற் பயிற்சிகள் செய்யத் தமிழில் திருவள்ளுவர் என்கிற மென்பொருளைக் கொண்டுவந்து மென்பொருள் என்பதற்கு 'சாப்ட் வேர்' (Software) என்று பொருள். மெல்லினம் என்று கூட சொல்லலாம்.





மென்பொருள் என்பதை சாப்ட்வேருக்குப் பயன்படுத்துகிறோம். மென்பொருளைக் கொண்டு திருவள்ளுவர் பிரபலம் அடையாததற்குக் காரணம், அப்போதைய கணிப்பொறிகள் அதிகவிலை என்பதுதான். தொடர்ந்து பாண்டிச்சேரி, பெங்களூர் போன்ற நகரங்களில், தனியார் நிறுவனங்கள் தமிழில் மென்பொருள் சொல் தொகுப்பு உருவாக்கின.

பாண்டிச்சேரியில் 'ஆரோவில்' 'Awroville' என்ற சொல்லைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஜெனித் நிறுவனமும் பெங்களூரில் எஸ்.ஆர்.ஜி. நிறுவனமும் இதன் முன்னோடிகள். இவர்கள் அனைவரும் பி.சி. என்னும் சொந்தச் சிறு கணிணி மூலம்- பி.சி. என்பது பர்சனல் கம்ப்யூட்டர் . சிறு கணிணி மூலம் தமிழ்மொழி எழுத்துக்களை உள்ளீட்டு திரையில் எழுதி, திருத்தி அச்சிடும் 'மேசைப் பிரசுரம்' (Desk of Publication) செய்வதற்குண்டான நிரல்கள் நிமித்தம் சாப்ட்வேர் ஆகிறது.

Programme என்று சொல்லாம். உண்டான நிரல்களைத் தான் அமைத்தார்கள். மேசைக் கணிணியின் விலை குறையக் குறைய இவைகள் தொடர்பான சாதனங்களைப் பத்திரிகை நிறுவனங்களிலும், பள்ளிகளிலும் பயன்படுத்தினார்கள்.

மேற்படிப்புக்காக வெளிநாடு சென்ற தமிழர்கள் பலர் அங்கே தத்தம் தமிழ் ஆர்வங்களைப் புதுப்பிக்கும் வகையில் திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற வைகளைக் கணிப்பொறிக்குள் நுழைத்து மகிழ்ந்தனர்.

இவ்வகையில் நல்ல எண்ணத்துடன் தொடங்கிய பல முயற்சிகள் ஆர்வமடங்கியதும் முடங்கிப் போயின. இதற்கு முக்கியக் காரணம் ஆராய்ச்சியாளர்களையும், ஆர்வலர்களையும் ஒருங்கிணைத்து வழிநடத்த ஒரு தனிப்பட்ட அமைப்பில்லாதது. தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம், பற்பல அண்டை மாநிலப் பல்கலைக் கழகங்கள், இவைகளின் தமிழ் ஆராய்ச்சிப் பிரிவுகள் மேலை நாட்டின் பல்கலைக்கழகங்களில் கீழ்த்திசை மொழி ஆராய்ச்சி நிறுவனங்கள் தனிப்பட்ட ஆர்வலர்கள் அனைவரும் தனித் தனித் தீவுகளாக இயங்கியதால்தான் அவர்கள் முயற்சிகள் எல்லாம் கடலில் பெய்த மழையாகிறது;

இந்த மாநாட்டுக்கு ஆயிரக் கணக்கான தமிழர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களில் பலருடன் நான் பேசியபோது எதைக் கேட்டாலும் 'ஓ, அதுவா? அதை நான் அப்போதே செய்து விட்டேன்!' என்று கூறுகிறார்கள். ஒரு நண்பர் வந்தார். கையில் 'லேப் டாப்' என்னும் மடிப்பினை எடுத்துவந்தார். அதில் திருக்குறள் முழுவதையும், நாலாயிரம் திவ்வியப் பிரபந்தம் முழுவதையும் அமைத்து எந்த ஒரு வார்த்தை கொடுத்தாலும் அந்த வார்த்தைக்குப் பொருளிலோ பிரபஞ்சத்திலோ எத்தனை முறை எந்தப் பாடல்கள் வந்துள்ளன என்று உடனே திரையில் தமிழ்காட்டும் நிரலில் எழுதியுள்ளது. அருமையான முயற்சி.

தமிழ் நூல்கள் அனைத்திற்கும் தகவல் தளம் அமைத்தால் ஆராய்ச்சிக்கு மிகவும் பயன்படும். இதிலுள்ள ஒரே ஒரு குறை தமிழை அதனுள் செலுத்தும்போது ஆங்கிலம் போல் உச்சரிக்க வேண்டும். தமிழ் என்றால் 'டிஏஎம்ஐஇசெட்' என்று அடியுங்கள் என்கிறார்கள்.

இப்படிச் செய்திருப்பதற்கு முக்கியக் காரணம், அவர் சொன்னது அமெரிக்காவில் தமிழ் தெரியாத பிள்ளைகள் ஆங்கிலம் கற்க உதவும் என்ற விநோதமான காரணம் அது. கண் எதிரிலேயே 'டிஏஎம்ஐஇசட்' என்று எழுதிப் படித்தால் தமிழ் என்று தெரிகிறது. அதை அடையாளம் கண்டுபிடிக்க முடிகிறது. எப்படி வடிவம் பரீட்சயம் இல்லாது காண முடியும் என்று புரியவில்லை.

அவரிடம் நான் ஒரே ஒரு கேள்விகேட்டேன். சிங்கப்பூரில் நா. கோவிந்தசாமி என்கிற ஆராய்ச்சியாளர் மாய்ந்து மாய்ந்து 27 தமிழ் எழுத்தாளர்களின் 25,372 உயிர் மெய் ஒலிகளைத் தற்காலிக உரை நடை இலக்கியத்தை அலசி, புழக்கத்தை ஆராய்ந்து, 'Frequency'ஐ இடது கையில் முக்கிய விரல்களில் அதிகம் புழங்கும் எழுத்துக்கள்

★ **எல்லோருக்கும் உதவி செய்து கொண்டிருப்பது முடியாத காரியம். ஆனால், உதவி செய்கிறமாதிரி பேசலாமில்லையா!**

**–வால்ட்டேர்**

வருமாறு மிக எளிய முறையில் ஒரு 'கீ போர்டு' அமைத்திருக்கிறார்கள். நூற்றுக் கணக்கான பள்ளிகள்- 200 பள்ளிகளிலும் சிங்கப்பூரில் பயன்படுத்துகிறார்கள்.

பள்ளிகளில் பயன்படுத்துகிறார்களே அது தெரியுமா என்று கேட்டதற்கு கோவிந்த சாமியார் யார் என்று கேட்டார்கள். அன்பர்களே, உத்திரவாதமாகச் சொல்வேன், இன்று எத்தனைப் பேர் தமிழ் கணிணி ஆராய்ச்சி செய்கிறார்களோ அத்தனை விசைப்பலகை இட ஒதுக்கம் - கீ போர்டு லொகேஷன்ஸ் என்று சொல்வார்கள். அத்தனை விசைப் பலகைகள் இட ஒதுக்கம் உள்ளது. இதை ஆங்கிலத்தில் எண்ணிப் பார்க்கும்போது, மிக அபத்தமாக இருக்கிறது.

தஞ்சாவூரில் ஏ.எஸ்.டி.எப்., திருச்சியில் பி.எஸ்.டி.எப்., அல்லது பி.டி.எஸ்.எப். என்று ஒவ்வொரு இடத்திலேயும் அந்த டைப்ரைட்டருடைய லே போர்டு மாறினால்? அதைப்போல ஒரு குழப்பம் தற்காலக் கணிணி இயலில் எந்த விசைப்பலகை ஒதுக்கீட்டையும் செயல்படுத்த ஒரு நாளில் முடியும். ஆனால் இதில் மிக முக்கியம், அனைவரும் ஒருவிசைப்பலகை இட ஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்க வேண்டியதுதான்.

அனைவரும் ஒரு விசைப்பலகை இடஒதுக்கீட்டை -எதுவாயிருந்தாலும் பரவாயில்லை- கடைப்பிடிக்கவேண்டியது. இதில் நேர விரயம் தவிர்க்கப்படும். திரு. நா. கோவிந்தசாமியின் கணிணி விசைப்பலகையை நான் மிகவும் உற்சாகத்துடன் பரிந்துரைக்கிறேன். ஆறு மணி நேரத்தில் பழகிவிடும்படியான ஒரு மின்பொருள் அதற்கு எழுதியிருக்கிறார். தானே சொல்லித்தரும்- "கையைத் தவறாக வைக்கிறீர்கள்" என்று அதுவே சொல்லித் தரும். கொஞ்சம் திட்டக்கூட திட்டும்!

இதிலிருந்து மைய அரசின் மின்னணு இயலே டிபார்ட்மெண்ட் ஆப் எலக்ட்ரானிக்ஸ் கொண்டுவந்திருக்கும். இன்ஸ்கீ சங்கேதத்திற்கு அல்லது உலகின் அனைத்து மொழிகளையும் அடக்கவல்ல யூனிகோர்டு என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள். 64 பிட்லே வந்துவிட்டு, உலகத்திலுள்ள அத்தனை மொழிகளையும் ஒரு கோடு கொடுத்திருக்கிறார்கள். அந்த சங்கேதத்திற்கு மாற்றிக்கொள்ளும் இடைநிலை காரியத்தைக் கணிணிக்குள் மென்பொருள் ஆக எழுதிச் செயல்படுத்த முடியும். விசைப் பலகை ஒதுக்கீடு என்பது இந்த இயலுக்கு நுழைவாயில் போல இதில் குழப்பம் வைக்கவே கூடாது. அறிவியலில் தமிழ் அறிவியல் வளரவேண்டுமென்றால், கணிணி விசைப்பலகையில் எல்லோரும் ஒரு விசைப் பலகையைக் கடைப்பிடிப்பது மிகவும் முக்கியம்.

**★ மற்றவர்களின் உழைப்புக் காரணமாகத் தான் நாம் நல்லபடி உயிர்வாழ்கிறோம் என்பதை ஒரு நாளைக்கு நூறு தடவை நான் ஞாபகப்படுத்திக் கொள்கிறேன்.**

**—ஐன்ஸ்டைன்**

இப்போது ஒவ்வொரு பத்திரிகை அலுவலகத்திலும், ஒவ்வொரு கணிப்பொறிகளைப் பயன்படுத்துகிறார்கள். தட்டச்சு இயந்திரத்தின் விசைப்பலகை ஒதுக்கீடு, மற்றொரு இடத்திற்குப் போனால் அந்த ஒதுக்கீடே இருக்காது. மறுபடியும் நான் எழுதின கதை கட்டுரைகளை மீண்டும் மீண்டும் திரும்பத் திரும்ப அவர்கள் அச்சடித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

இந்த மாநாட்டில் விசைப் பலகை ஒதுக்கீட்டிற்கு ஒரு முடிவு கண்டால் அந்த ஒரு சாதனையே போதும். அடுத்து, தமிழில் சொல் தொகுப்புச் சாதனங்கள். சொல் பகுப்புச் சாதனங்கள். வேர்டு ப்ராஸஸ்ர்ஸ். இவைகளிலும் பலவகைப் பட்டன - நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுகின்றன. வசதிகள் மாறுகின்றன. அவைகளை இயக்கும் விசைகள் மாறுகின்றன. இது தவிர்க்க இயலாது.

இருப்பினும் ஒரு சொல் தொகுப்பு மென்பொருள், கணிப்பொறிக்கு உள்ளே செலுத்தப்பட்ட அந்த முயற்சி வீணாக்காமல் அதே மற்றொரு சொல் தொகுப்பு மின்பொருள் ஏற்றுக்கொள்ளுமாறு அவைகளிடையே பரிமாற்றக் குறியீடுகள் இண்டர்மீடியேட்டரி எக்ஸ்சேஞ்ச் என்று சொல்வார்கள்.

நிலைநிறுத்துமாறு நம்மிடம் சொல்தொகுப்பு விற்கும் நிறுவனங்களிடம் உத்திரவாதம்பெற வேண்டும். விதவிதமான சொல் தொகுப்புச் சாதனங்கள்



இருக்கிறது. அவைகளுக்குள்ளே பரிமாற்றங்களுக்குண்டான குறியீடுகளை நீங்கள் ஒரு சொல் தொகுப்பில் உள்ளிட்ட தமிழ் எழுத்துக்கள் மீண்டும் மற்றொரு சொல் தொகுப்புச் சாதனத்தைப் பயன்படுத்தும்போது, மீண்டும் அவைகளை அச்சடிக்க வேண்டியதில்லை. இன்று திருநெல்வேலியிலே தயாரிக்கப்பட்ட தகவலை சென்னையில் ஏற்கும்போது, மீண்டும் கணிணிக்குள் ஆரம்பத்திலிருந்து செலுத்துவதுபோன்ற வீணான காரியங்களைத் தவிர்க்க வேண்டும்.

தமிழ் எழுத்துக்கள் அனைத்திற்கும் கணிணியில் குறியீடுகள் உள்ளன. இது ஆதாரமான விஷயம். இது இன்றி இந்த முறை இல்லை. ஆயினும் இது எந்த அளவில் ஒருமைப் படுத்தப்பட்டுள்ளது. ஸ்டேண்டர்டைசேஷன் என்பதைக் கணிப்பொறியியல் அறிந்த குழு ஆராய்ந்து பரிந்துரைக்க வேண்டும்.

இதெல்லாம் அவர்கள் சமாச்சாரம் என்று ஒதுக்கிவிட முடியாது. எழுத்துக்களையும் வார்த்தைகளையும் கணிப்பொறிக்குள் நுழைத்துவிட்டோம். அவைகளை அதன் காந்தத் தகடுகளில் ஞாபக அடுக்குகளிலும் எழுதிவிட்டோம். இன்றைய சூழ்நிலையில் தமிழ்மொழியில் அத்தனை இலக்கியங்களையும் இன்றைய தேதி வரையில் எழுதப்பட்ட தமிழ்மொழியில் எழுதப்பட்ட அத்தனை இலக்கியங்களையும் அத்தனைப் பத்திரிகைகளையும், அத்தனை வார்த்தைகளையும் சி.டி.ராம்

**அறிவை நம்புங்கள்**
**அப்போதுதான் விஞ்ஞான**
**அற்புதங்களையெல்லாம்**
**நம்மால் செய்யமுடியும்!**

**—தந்தை பெரியார்**

போன்ற லேசர் தகடுகளில் எழுதிவிட முடியும்.

பழந்தமிழ் இலக்கியத்தின் அத்தனை நூல்களையும், நாட்டுப்புறப் பாடல்களையும், பக்திப் பாடல்களையும், சித்தர் பாடல்களையும் காப்பாற்ற வேண்டியது நம் கடமை. இதில் விருப்பு வெறுப்பு வேண்டாம். சுல் சங்க நூலா, பக்தி நூலா அல்லது சித்த மருத்துவமா என்பதுப் பற்றிக் கவலையே இல்லை. தமிழில் நம்மிடம் இருக்கும் அனைத்து இலக்கியங்களையும் காப்பாற்றி அவைகள் அனைத்தையும் இந்த அறைக்குள் அடைத்துவிட முடியும். இது சர்வதேச நெட் வொர்க். கலைப் பொறி வளையத்தில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இந்த பிரம்மாண்டமான தகவல் தளத்தைத் தகவல் வெள்ளம் என்று சொல்கிறார்கள். அல்லது செய்திக் கடல் என்றுகூட சொல்லுகிறார்கள். இதை அடையாளம் காட்ட அவைகளை வகைப்படுத்த ஒரு எளிய முறை கொண்டுவரவேண்டும்.

தகவல் தளங்களைச் சேர்த்து வைக்க அரசு அரட்டு இன்ப மிக்ஸ் போன்ற பல்வேறு மென்பொருள்கள் இருப்பினும் அவைகளின் வசதிகளைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்த ஓர் அடையாள முறை வகுக்க வேண்டும். உதாரணமாக சங்கம் என்றால் ஒன்று. ஒன்று ஒன்று என்றால் புறநானூறு. ஒன்று, இரண்டு என்றால் ஐங்குறு நூறு. ஒன்று, இரண்டு, மூன்று என்றால் ஐங்குறு நூற்றில் மூன்றாவது பாடல். இதில் ஏதாவதுஒன்று நூலக இயலாளர்கள் லைப்பரரி சயனிட்ஸ் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இந்தத் தமிழ்த் தகவல் கடலைப் பயனுற ஆராய்வதற்கோ, படித்து மகிழ்வதற்கோ டேட்டா பேஸ் தகவல்கள் மின் தகவல் தளங்கள் அனைத்தையும் தனக்குள் பரிமாறிக்கொள்ளும் இடைநிலைக் குறையீடுகளை ஒருங்கிணைந்துவிட்டால், மற்ற வசதிகளை டேட் ஆப் பேஸ் கவனித்துக் கொள்ளும். ஆனால், இவைகளின் பிரண்ட் எய்ட் லூசர் என்ற பேஸ். முன் அமைப்பு தமிழில் இருப்பது நலம்.

இந்தத் தருணத்தில் தமிழில் சீ.கோபால்ட் போன்ற கணிப்பொறி மொழிகளும், தாஸ் போன்ற மின் பொருள்களும் அவைகளின் தமிழ் வடிவம் வேண்டுமா என்று அறிஞர்கள் யோசித்து முடிவு காண வேண்டும். இன்று ஜப்பான், சீனா நாடுகளுக்குச் சென்றால் நவீன, கணிப்பொறி மின்பொருள்கள் அனைத்தும் அவரவர் மொழியிலேயே திரையில் தெரியும். சி போன்ற மொழிகளைப் பயன்படுத்தும் போது அவர்களின் மொழிகளில் ஆதார ஆணைகளை ஆங்கிலத்தில் வைத்துக் கொண்டு கமண்ட்ஸ் எனும் விளக்கக் குறிப்புகளைத் தத்தமது

மொழிகளில் வைத்துக் கொள்கிறார்கள். இது ஒரு முறை. இந்த முறையை நாமும் ஏற்கலாம்.

அதுவும் வேண்டாம்- முழுதும் மொழி என்றால் சில எளிய கணிப்பொறிகளில நூறு வார்த்தைகளுக்கு டூ வொயில் பிரிண்ட் பார் நெக்ஸ்ட் போன்றவற்றிற்கு ஈடான தமிழ்ச் சொற்களைத் தீர்மானித்து, அனைவரும் அதே சொற்களைப் பயன்படுத்த வேண்டும். இந்த கணிப்பொறி என்ற வார்த்தையைப் பொறுத்து எவ்வளவு குழப்பங்கள் வருகின்றன என்றால் கணணி என்கிறார்கள். கணிப்பொறி என்கிறார்கள். கணிப்பான் என்கிறார்கள். ஒரு நாள் பேராசிரியர் நன்னன் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது கணிப்பொறி என்பது தப்பு. அலைகடல் மாதிரி அது. கணிப்பொறி என்பதில் அந்தப் பகர ஒற்றுக் கூடாது என்றார். ஒரே குழப்பம் எல்லாவற்றிற்கும். எல்லோரும் சேர்ந்து கணிப்பொறி என்றால், அது ஒரு மற்றொரு ஓசை. அதைப்பற்றி நாம் உணர்ச்சி வசப்பட வேண்டியதே இல்லை. தஞ்சாவூரிலும், கணிப்பொறி, திருச்சியிலும் கணிப்பொறி, சென்னையிலும் கணிப்பொறி அதுதான் நமக்குத் தேவை.

தஞ்சாவூரில் கணிணி, இதில் கணிப்பான், அதில் கணிமம். இன்னும் ஒரு பன்னிரண்டு வார்த்தைகள் என்னால் சொல்ல முடியும். மாவட்டத்திற்கு மாவட்டம் மாற்றக் கூடாது. கல்பாக்கம் சீனிவாசன் சில வார்த்தைகளைப் பரிந்துரைத்திருக்கிறார். நல்ல கட்டுரைகளை எழுதியிருக்கிறார். கணிப்பொறிக்குள்ளே சென்றால், ஆங்கிலம் இல்லை, தமிழ் இல்லை, குஜராத்தி இல்லை, எல்லாம் பயனறி. அதறகு மொழி உணர்ச்சி இல்லை. அது அன்னை கன்னித் தமிழ் என்றெல்லாம் சொல்லாது. கணிப்பொறி தமிழில் அத்தனை இலக்கியங்களையும் பத்திரமாகச் சேர்த்துவிட முடியும். அது தான் முதற்கண் முக்கியமான கா்ரியம்.

2000 ஆண்டுளாக எழுதப்பட்ட அத்தனை நூல்களையும் அவைக்ளின் இலக்கியத் தரத்தைப் பற்றியோ- அது பக்தியோ அல்லது எவ்வகையான இலக்கியம் என்பதைப் பற்றியோ கவலைப்படாமல் அந்தத் தகவல் தளத்தை அதற்குள் செலுத்த வேண்டியது மிக முக்கியம். அவைகளை நாம் ஆராய்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் அனுபவ இன்பத்திற்கும் ஏற்றவாறு, மிக அதிவேகத்தில் அவைகளைத் திரைக்குக் கொண்டு வந்து அவைகளைப் பயன்படுத்த முடியும். அதோடு காரியம் முடிவதில்லை.

இதுவரை கணிப்பொறி செய்ததை எல்லாம் அந்த இயந்திரத்தைத் தமிழுக்கு எவ்வாறு மின் பொருளிலும் சில சமயம் வன் பொருளிலும் மாற்றுவது தமிழுக்கு ஏற்றவாறு. ஆனால் கணிணியில் சகல வசதிகளையும் தமிழுக்காகப் பயன்படுத்த கணிணிக்குத் தமிழ் தமிழ்யைக் கற்றுக்கொடுக்க வேண்டும். அதறகு முதலில் அதற்கு, கணிப்பொறிக்கு இலக்கணம் போதிக்க வேண்டும். நம் இலக்கணத்தின் விதிகளைக் கணிப்பொறியின் பார்வையிலிருந்து இருவகையாகப் பிரிக்கலாம். எழுத்தறிவு, மொழியறிவு என்று. நம் இலக்கண விதிகள் அனைத்திலும் இவைகள் இரண்டும் கலந்திருக்கின்றன.

உதாரணம் ஆல், ஓடு, உடன் மூன்றாம் வேற்றுமை உருபு. இது ஒரு விதி. இது எழுத்தறிவு. ஆனால் பெயர் எச்சம், வினை எச்சம் என்பது மொழியறிவு. எது பெயர்ச்சொல் எது வினைச்சொல் என்று கணிப்பொறியைக் கேட்காதீர்கள். கணிப்பொறிக்குத் தெரியாது. அது மொழி அறிவு ஆகிறது. கணிப்பொறிக்கு எழுத்தறிவு கொடுப்பது எளிது. மொழியறிவு கஷ்டம். மொழியறிவு சம்பந்தப்பட்ட இலக்கண அறிவுகளைக் கம்ப்யூட்டர் கற்க வேண்டும் என்றால் அந்த விதிகளைக் கணிப்பொறிக்கு ஏற்ப எழுதவேண்டும்.

இந்த மன்றத்தில் கூடியிருக்கும் அறிஞர்களிடத்தில் ஒரு கோரிக்கை வைக்கிறேன். கணிப்பொறியாளர்களுக்கு ஒரு புத்தகம் தேவைப்படுகிறது. ஒரு புதிய புத்தகம் நீங்கள் எழுத வேண்டும். அதன் பொருள் விளக்கத்தை மட்டும் தருகிறேன். மற்றதெல்லாம் நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். புத்தகத்தின் தலைப்பு 'இன்றைய தமிழ்' அல்லது 'நாளைய தமிழ்' என்று வைத்துக்கொள்ளலாம். கணிணியியலுக்காக அடைப்புக் குறிப்புகள் முதல் பகுதி இலக்கண விதிகள். நன்னூல் சூத்திரங்கள் அல்ல; தெளிவாகக் கணிணி ஆக்கத்திற்கேற்ப எளிதாகத் திரும்ப எழுதப்பட்ட விதிகள். அதே விதிகள் தான்.

இலக்கணம் எழுதும் போது இலக்கண விதிகளையும், விவரங்களையும் குறிக்க வேண்டும். இந்த சூத்திரங்களில் உள்ள கணிணப் பண்புகளை அடையாளம் காட்டும் வகையில் இருக்கவேண்டும்.

உதாரணமாக, இந்த், அந்த, வந்த, ,எந்த, அப்படி, எப்படி, இப்படி போன்றவற்றின் முன் வல்லெழுத்து மிகும். இந்தப் புத்தகம், அந்தப் பெண் என்பதுபோல கணிணியியல் எழுதிச் செயல்படுத்தலாம். உயிர் முன் க,ச,த,ப வந்தால் இரட்டிக்கும். இவைகளெல்லாம் விதிகள். ஆனால் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும், உயிர் உயிர், உயிர்மெய், மெய் மெய், மெய் உயிர் என்று நால்வகையாய் உணர்வதாகும் என்பது ஒரு நன்னூல் சட்டம் இருக்கிறது.

இது கணிப்பொறிக்குத் தேவையேயில்லை. இது விதி இல்லை. ஒரு விவரம். புணர்ச்சியியலை வர்ணிக்கிறது. இது கணிப்பொறிக்குத் தேவையில்லை. இவ்வாறு விதிகளைத் தனிப்படுத்தி, எழுதப்பட்ட ஒரு இலக்கணப் புத்தகம் தற்காலத் தமிழ் இலக்கணம் என்பது எழுதப்படவேண்டும். அடுத்து பெயர்ச் சொல், வினைச் சொல், உரிச்சொல், பெயர் உரை, வினைஉரை, என்ற சொற்களைக் குறிப்பிடும் அகராதித் தேவை.

இதற்கு ஒரு நல்ல உதாரணம் கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. ஆனால் ஏனோ உரிச்சொற்கள் அதில் குறிப்பிடப் படவில்லை. எதெல்லாம் பிற மொழிச் சொற்கள் எனவும் விவரமும் தரும் அகராதி வேண்டும். ஏனென்றால், பிற மொழிச் சொற்களுக்கு - வட மொழிச் சொற்களுக்குத் தமிழில் இலக்கண விதிகள் மாறுபட்டது. சங்க காலம் என்பதில் தகர ஒற்று வராது. அதற்கு முக்கியக் காரணம் சங்கமம் என்பதும், காலம் என்பதும் சமஸ்கிருத வார்த்தைகள் என்கிறார்கள். பிற பொருள், பிறமொழிச் சொற்களுக்கு விதிகள் வேறானது.

நிகண்டு பற்றி எல்லாரும் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஒரு சொல் பல பொருள், பல பொருள் ஒரு சொல் என்று நம்மிடையேயிருக்கும் மிக அருமையான நிகண்டுகள் இருக்கின்றன. பழைய நிகண்டு நமக்கும் தெரியும் கணிப்பொறி நிகண்டு. எப்படிப்பட்ட நிகண்டு எதற்காகத் தேவை என்பதைச் சொல்கிறேன். பழைய நிகண்டுகள் எல்லாம் அது தோன்றிய காலத்திலேயிருந்து இவ்வாறான பயனுக்கென்று ஆக்கப்பட்டவை அல்ல.

அகராதி நிகண்டு என்று ஒருவர்தான் எழுதியிருக்கிறார். மற்றவையெல்லாம் கட்டளை, கருத்துரைபோன்ற சிக்கலான செய்யுள் வடிவத்திலிருக்கின்றன. கணிப்பொறியாளர்களுக்குத் தேவை கிரசாரஸ் என்று சொல்வார்கள். ஒவ்வொரு சொல்லுக்கும் மாற்றுச் சொற்கள் ஒன்றிரண்டாவது உண்டு. இதனால் என்ன பயன்?

ஆங்கிலச் சொல் தொகுப்பு மென்பொருட்கள் ஸ்பெல் செக், ஸ்டைல் செக் என்ற வசதிகள் உள்ளன. எழுத்துப் பிழைகளை நீக்க ஸ்பெல் செக். திரும்பத் திரும்ப ஒரு சொல்லைப் பயன்படுத்தினால் அவற்றிற்கு மாற்றுச் சொற்களைப் பயன்படுத்த ஸ்டைல் செக். சென்னையில் மொழி அறக்கட்டளையில் ஸ்பெல் செக் முயற்சி இப்போது கவனிக்கத்தக்கது. அவர்கள் ஓசைப்படாமல் ஒரு புரட்சியைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இவ்வாறு பிழை திருத்தவும்,

**ஆண்மைக்கழகு அகிம்சை. அதைப் பற்றிக் கோழைக்குத் தெரியாது!**

**—அண்ணல் காந்தியடிகள்**

**★ துக்கமாக இருக்கும்போது அதைப் பகிர்ந்து கொள்ள எவரும் தேவையில்லை. ஆனால், சந்தோஷமாக இருக்கும்போது அதைப் பகிர்ந்து கொள்ள ஒருவர் இருந்தால், அந்தச் சந்தோஷம் இரட்டிப்பாகிறது.**

**—மார்க் ட்வெயின்**

நடையைத் திருத்தவும் ஒரு கணிப்பொறி தேவைப்படுகிறது. தமிழ் எழுத்துக்களில் கணிப்பொறிகளை அடையாளம் கண்டுகொண்டு கணிப்பொறியால் தமிழைப் படிக்கமுடியும். அவைகளை எழுத்துக்களாக்கி வார்த்தைகளாக உச்சரிக்கவும் இயலும். அதற்கான வன்பொருள் மென்பொருள் சாதனங்களை ஓ.சி.ஆர். என்பார்கள். ஆப்டிகல் கேரக்டர் ரிகனிசன்.

அவைகளுக்குத் தமிழ் எழுத்துக்கள் தனித்தனியே எழுதப்படுவதும் சில தெளிவான குழப்ப நீக்க விதிகள் இருப்பதும் பெரும்பேறு என்றே சொல்லலாம். இப்போது கலைச்சொல் அமைப்பில் மிக முக்கியமான சங்கதிகளைச் சொல்ல விரும்புகிறேன். பழைய நிகண்டுகளில் உள்ள வழக்கொழிந்த சொற்களை மீண்டும் பயன்படுத்தலாம். புதிய கலைச்சொற்கள் உண்டாக்குவதற்குண்டான ஆதார விதிகளைப் பற்றி இங்கே சொன்னார்கள். அட்டோனிஸன். ரூல்ஸ் என்று. அதாவது பட்ஜெட், பட்ஜெட்டரி, பட்ஜெட் கண்ட்ரோல் என்று அந்த மாதிரி அட்டோனிஸன் அது ஒட்ட வைக்கும் விதி. அந்த விதிகளை நாம் ஜப்பான், ஜெர்மானிய ஆங்கில உதாரணங்களிலிருந்து அமைக்கலாம்.

கலைச் சொற்களைப் பற்றி உணர்ச்சிவசப்படக்கூடாது. எல்லோரும் ஒரே கலைச் சொற்களைப் பயன்படுத்துவது முக்கியக் குறிக்கோளாகி அதற்கென்றே ஒரு வாரியம் தனியாக அமைக்கலாம். தமிழில் சொற்கள் இல்லை, என்பவர்களைப் பொருட்படுத்தத் தேவையில்லை. அக்லூடினேஷன் இல்லை என்று சொல்பவர்களை நம்பாதீர்கள். ஆனால் கலைச் சொல் ஆக்கத்திற்கு-கல்வியமைச்சர் இங்கே இருக்கிறார். அவரிடம் தமிழில் கலைச் சொல் ஆக்க வாரியம் ஒன்றை அமைக்க வேண்டுகிறேன். அவர்கள் பரிந்துரைக்கும் பயன்படுத்தும் கலைச் சொற்களைத்தான் எல்லோரும் எல்லா எழுத்தாளர்களும் பயன்படுத்த வேண்டுமென்கிற ஒரு விதி வகுக்கலாம். இவ்வாறு செய்தால் என்ன நிகழும்? என்று சொல்லிவிட்டு முடிவைத் தெரிவிக்கலாம்.

நான் ஒரு விஞ்ஞானக் கதை எழுத்தாளர். இவை அனைத்தையும் செய்தால் அடுத்த உலகத் தமிழ் மாநாட்டில் – எப்போது வரும்? மூன்று ஆண்டு, இரண்டு ஆண்டு – அடுத்த உலகத் தமிழ் மாநாட்டில் உத்தரவாதமாகக் கீழ்க்காணும்படி நிகழும்...

இப்படிச் செய்தால்? கையெழுத்திடப்பட்ட ஒரு கடிதம் வருகிறது. பையன் சிங்கப்பூரில் இருக்கிறான் அவன் எழுதுகிறான். 'அன்புள்ள அப்பா வணக்கம். தாயாருக்கு என் அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்கள் கடிதத்தைப் பார்த்து மகிழ்ந்தேன். தாங்கள் அனுப்பிய ரூ.300 பெற்றுக்கொண்டேன். நூல்கள் வாங்கிவிட்டு பாக்கி ரூபாயை, ரூ.பத்து ரூபாயை உணவு விடுதிக்குச் செலுத்திவிட்டேன்' இந்த மாதிரி ஒரு கடிதம் வந்தது.

இந்தக் கடிதத்திற்கு ஒரு ஒளி வருடி- ஸ்கேனர், அதில் கொடுத்தால் ஒரு விதமான பொருளில் அது அந்தக் கடிதத்தை எனக்குப் படித்துக் காட்டும். எனக்குச் சோம்பேறித்தனமாக இருந்தால் அது ஒரு மிஷின் பொருளில் நல்ல தமிழில் நல்ல உச்சரிப்புடன் ஆதாரமான ஒரு சராசரி தமிழினை உச்சரிக்கும். மெட்ராஸ் தமிழில், 'என்ன வாத்தியாரே' என்றெல்லாம் பேசாது. இதை ஒரு ஒளி வருடி மூலம் ஸ்கேனர் என்ற மிஷன் பொருளில் படித்துக் காட்டும்.

படித்துக் காட்டுவது மட்டுமல்லாமல், இந்தக் கடிதத்தில் சில பிழைகள் இருக்கின்றன. அதை ஒவ்வொன்றாகத் திருத்தலாம். பிழைத் திருத்தமும் செய்யலாம். 'அன்புள்ள' என்பதை அன்பான அப்பாவிற்காக என்று இரண்டு வரிகள் வந்திருக்கிறது. இரண்டாவது முறை அன்பார்ந்த என்று பயன்படுத்தியிருக்கலாம் என்று சொல்லும். பாக்கி என்ற ஒரு வார்த்தை எனக்குப் பிடிக்கவில்லை, அதற்குப் பதிலாக

**எது அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை.**

*—சுவாமி விவேகானந்தர்*



# சென்னை மாநகராட்சியின் தீவிரத் துப்புரவுப்பணி முகாம்

எழில்மிகு சென்னை 2000 திட்டத்தின்கீழ், சென்னை மாநகராட்சியின் அனைத்துக் கோட்டங்களிலும் ஒவ்வொரு பிரிவாகத் தீவிரத் துப்புரவு மற்றும் சுகாதாரப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ், மண்டலம் 3,6 மற்றும் 9 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாநகராட்சி இயந்திரப் பொறியியல் துறை, துப்புரவுத்துறை, மருத்துவப் பிரிவு, மலேரியாப் பிரிவு, மழைநீர் வடிகால் துறை முதலிய துறையின் தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் ஒருங்கிணைந்து தெருக்களில் குப்பைகளை அப்புறப்படுத்துதல், சாலை ஓரங்களில் உள்ள கட்டட இடிபொருட்களை அப்புறப்படுத்துதல், கொசு மருந்து தெளித்தல், கொசு மருந்து புகை போடுதல், தெருவிளக்குகளைப் பழுதுபார்த்து அனைத்து தெருவிளக்குகளையும் எரிய வைத்தல், மழைநீர் வடிகால் கால்வாய்களில் தூர் வாருதல் போன்ற பணிகள், மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு மருத்துவ முகாம் நடத்தி இரத்தப் பரிசோதனை, பொதுப்பரிசோதனை, மலேரியா பரிசோதனை போன்ற பரிசோதனைகள் செய்யப்பட்டன. இதற்கென மாநகராட்சி மருத்துவர்கள் அடங்கிய குழு செயல்பட்டது.

மிச்சம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாமா என்று கேட்கும். இவ்வாறாகப் பிழை திருத்தம் செய்து உன் மகனின் எழுத்து மிக மோசமாக இருக்கிறது. அதை அச்சடித்துக் கொடுக்கவா என்று அச்சடித்துக் கொடுக்கும். வேண்டுமென்றால் ஒரு பெண் குரலிலும் அது வாசித்துக் காட்டும்.

எனக்கு மகளே இல்லை; ஒரு மகள் என்று தீர்மானிக்க வேண்டுமென்றால் பெண் குரலிலும் வாசித்துக் காட்டும். தமிழில் அத்தனை இலக்கியங்களிலேயும் இந்த மாதிரியான வசதி ஏற்படும். தமிழில் அத்தகைய இலக்கியங்களையும் தமிழில் அன்றுவரை எழுதப்பட்ட, அந்த அடுத்த நாடு வரை எழுதப்பட்ட, அத்தனை இலக்கியங்களையும்... தகடுகளில் பத்துத் தகடுகள் வரும். செய்தியாளர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று பிரமிப்பாக இருக்கும். அப்படியே எழுதிக்கொண்டு அவைகளை உலகெங்கும் விநியோகிக்கலாம்.

திருக்குறளில் 11,597 சொற்கள் உள்ளன. அதில் 4,888 வெவ்வேறு சொற்கள் ரிபீட்டட். வள்ளுவரின் ஹை டோக்கல் ரேஸியோ என்று எழுத்தாளர்கள் சொல்வர். ஹை டோக் என்றால் சொல் நடை-சொல் வளம். வள்ளுவரைப் பொறுத்தவரையில் அது 4,215. அந்த மாதிரியான ஒரு ஸ்டேட்மெண்ட் பண்ணலாம்.

இந்த மாதிரியாக ஒரு சந்திப் பிழைகள் இலக்கணப் பிழைகள் பெரிய 'ற' சின்ன 'ர' போன்றவற்றைப் பற்றிக் கவலைப்படாது. விசைப்பலகை மூலம் விரைவில் மிக விரைவில் தமிழை உள்ளீட்டால் அல்லது தமிழ் வார்த்தைகளைப் பேசினால் கணிப்பொறி வேகமாக இயங்கி திரையிலிருந்து எழுத்துக்களாகத் தோன்றும். நல்ல காலம். சுயமாகக் கதை கவிதைகள் மட்டும் எழுத முடியாது. என் போன்ற எழுத்தாளர்களின் பிழைப்பைக் கெடுக்கக் கூடாது. மற்ற அனைத்து ஆராய்ச்சியாளர்களையும் இடம் பெயர்த்துவிடும்.

அடுத்த தமிழ் மாநாட்டில்-மேடையில் ஒரே ஒரு கணிப்பொறி மட்டும் மனித வடிவத்தில் நின்றுகொண்டிருக்கும். நன்றி வணக்கம்.

# பொது விஞ்ஞானம்

**திரு. முத்துக்கருப்பன்**
**துணை வேந்தர்**
**பாரதிதாசன் பல்கலைக் கழகம்**

**த**மிழ் உயர்தனிச் செம்மொழி. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின் உயிர்ப்புடன் விளங்கும் ஒருசில மொழிகளில் தமிழும் ஒன்று. ஒரு தலைமுறையின் கலாச்சாரத்தை அடுத்த தலைமுறைக்காகத் தாங்கி நிற்கும் கருவூலமாகத் திகழ்ந்து வந்துள்ளது நமது தமிழ் மொழி.

இன்று அறிவியல் தமிழ் வளர்ச்சி பற்றிப் பெரிதும் எண்ணி வருகிறோம். நம் முன்னோர்கள் அறிவியல் தொழில் நுட்பத் துறைகளிலே தம் பெருமையை நிலைநாட்டியதை நாம் நன்கு அறிவோம். அவர்கள் அறிவியலில் சிந்தனை வளத்தோடு திகழ்ந்தார்கள் என்பதற்கு இந்தத் தஞ்சைத் தரணியிலே நம் கண்முன்னே வானளாவ நிற்கும் தஞ்சைப் பெரிய கோயிலே ஒரு எடுத்துக்காட்டு. தமிழரின் கட்டடக் கலை, சிற்பக் கலை, நீரியல் துறை, வேளாண்மைத் துறை, சித்த மருத்துவத் துறை என்ற நுட்பங்களையெல்லாம் இன்று நாம் கண்கூடாகக் கண்டு மகிழ்கின்றோம். ஆகவே, வளம் பெற்ற தமிழ் மொழி அறிவியல் நுணுக்கங்களை விளக்கவல்ல மொழியாகும்.

எந்த ஒரு செய்தியையும் நாம் உணரவும், அறியவும் முக்கியமான கருவியாக இருப்பது மொழி. எனவே, தாய்மொழியான தமிழ் மூலம் அறிவியலைக் கற்கும் வாய்ப்பை நம் மாணவர்கள் பெற வேண்டும். தாய்மொழியில் அறிவியல் கல்வியே சிறந்தது. அதுதான் ஒரு மாணவன் நல்ல முறையில் படிக்க, புரிந்து கொள்ள, சிந்தனையோடு செயலாற்றவைக்கும் திறன் உடையது.

ஆகையால், மற்ற பல நாடுகளில் உள்ளதுபோல் தமிழ் மொழியில் அறிவியலைப் பயிற்றுவிக்க வேண்டும் என்பது நமது அரசாங்கத்தின் கொள்கை. நமது தமிழ் மொழி இன்றைய அறிவியல் வாழ்விற்கும், பொது அறிவியலின் வளர்ச்சி வேகத்திற்கும் ஈடுகொடுத்து, நல் உலகின் மேம்பாட்டிற்கு ஏற்ற கருவியாக அது மாறி பயன் தர வேண்டும் என்பதே நம் எல்லோருடைய விருப்பம்.

இன்றைக்கு மாறிவரும் வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும் அடித்தளமாய் அமைந்து இருப்பது பொது அறிவியல் ஆகும்.

அன்றாடம் புதுப்புது அறிவியல் சிந்தனைகளும், சித்தாந்தங்களும், சோதனைகளும், சாதனைகளும், இவை படைக்கும் சாதனங்களும் பல்கிப் பெருகி வருகின்றன. மேலும், அறிவியல் மிகுந்த வேகத்துடன் வளர்ந்து வருவதால் அதன் தாக்கம் அன்றாட வாழ்விலும், கல்வித் துறையிலும் வேளாண்மைத் துறையிலும், மருத்துவத்திலும், தொழில் வளத்திலும், நாட்டின் பொருளாதாரத்திலும் மிகவும் அதிகம் ஆகும்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் நிகழும் பொது அறிவியல் வளர்ச்சியினை நாம் அறிந்து பயன்பெற வேண்டும். இந்த அறிவியல் தமிழ் வளர்ச்சியை முற்றிலும் அடைய மூன்று வகையாகச் செயல்படலாம். ஒன்று பொது மக்களின் தேவைக்கேற்ற அறிவியல் தமிழ். பொது மக்கள் உடல் நலம் பேணவும், கால்நடை மற்றும் உழவுத் தொழில் சிறப்பு அடையவும், சுற்றுப்புறச் சூழல் மேன்மை அடையவும், தொழில் நுட்பம் பெருகவும், பொது அறிவியலைத் தெரிந்து கொள்ளவும் ஏற்ற வகையில் மக்களுக்குப் புரியும் தமிழில் தர வேண்டும். இதில் ஓரளவு வெற்றி கண்டுள்ளோம் என்றே சொல்ல வேண்டும்.



வானொலி, தொலைக் காட்சி, நாளேடுகள், வார இதழ்கள் மூலம் அறிவியலின் முன்னேற்றத்தை மக்கள் பெறுகிறார்கள். இதில் இன்னும் வளர்ச்சி அடையப் பல வழி வகைகள் உண்டு. நம் சமுதாய வளர்ச்சிக்குத் தமிழ் அறிஞர்களும், அறிவியல் அறிஞர்களும் நிறையவே செய்யவேண்டி உள்ளது.

இரண்டாவதாக, இளங்கலை, முதுகலை வகுப்புகளில் பொது அறிவியல் பாடங்களைத் தமிழில் பயிற்றுவித்தல்.

நம் அரசாங்கத்தின் ஆதரவுடன், பாடத் திட்டங்கள் 20 ஆண்டுகளுக்கு முன்பே கல்லூரிகளில் கொண்டுவரப்பட்டுள்ளன. பல கலைச்சொல்லாக்கக் கருத்தரங்கங்களும் நடைபெற்றுள்ளன. இன்னும் நடைபெற்றுவருகின்றன. அறிவியல் தமிழ் அகராதிகள் வெளிவந்துள்ளன. மேலும், மாணவர்களுக்கு அறிவியலைத் தமிழில் கற்பிக்கவும், தேர்வுகளை எழுதவும் வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், தமிழ் வழிக் கல்வி பாடத்திட்டத்தில் விரும்பிச் சேரும் மாணவர்கள் குறைவு.

வெளியிடப்பட்ட ஆயிரக் கணக்கான அறிவியல் பாட நூல்கள் எதிர்பார்த்த அளவுக்குப் பயன்படுத்தப்படவில்லை. தமிழ் மொழிப் பற்று இருந்தாலும் தமிழில் அறிவியலைக் கற்க ஆர்வம் இருந்தபோதிலும், இந்த நிலைக்குக் காரணம் என்ன என்று கண்டறிய வேண்டும்.

மூன்றாவதாக, தமிழ் மொழியில் அறிவியல் ஆராய்ச்சிக் கட்டுரைகளை, முனைவர் பட்டய ஆய்வுகளைச் சமர்ப்பித்தல். இது மூன்றாவது நிலை வளர்ச்சி ஆகும்.

பாரதிதாசன் பல்கலைக் கழகம், கலைப்புலத்தில் - Faculty of Arts முனைவர் பட்ட ஆய்வுக் கட்டுரைகளைத் தமிழில் அளிப்பதற்கு வழிவகை செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடலாம்.

அறிவியலில் கலைச் சொல்லாக்கம் மிக இன்றியமையாதது ஆகும். சில அறிவியல் பெயர்கள், சொற்கள், குறியீடுகள் மொழி வேறுபாடின்றி மாற்றம் இல்லாமல் பயன்படுத்தப்பட வேண்டும். அம்மாதிரி சொற்களை மொழிபெயர்ப்பது தகவல் பரிமாற்றத்திற்கு உகந்தது அல்ல. எடுத்துக்காட்டாக, மீட்டர், ஆம்பியர், ஓம் போன்ற சொற்களைக் குறிப்பிடலாம். லேசர், டி.என்.ஏ. எயிட்ஸ் போன்ற இடுகுறியீடு சொற்களும் உண்டு. சில பரிணாமத்தைக் குறிக்கும் எழுத்துக்களும், குறியீடுகளும் உண்டு. இம்மாதிரியான சொற்களை மொழிபெயர்ப்பது சிறப்பு ஆகாது. சில சொற்களை ஒலி மாற்றம் செய்து பயன்படுத்தலாம். சிலவற்றை அப்படியே பயன்படுத்தலாம்.

நிகண்டுகளையும், இலக்கியங்களையும் இக்கோணத்தில் பரிசீலனை செய்யலாம். இதற்கு ஒரு தகுந்த டேடா பேஸ் சொற்களின் தொகுப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். ஆங்கிலச் சொற்களை மொழி பெயர்க்கும்போது பொது விதிகளையும் வழக்குகளையும் தெரிந்து செயல்படுதல் வேண்டும். சில முன் ஒற்றுகளையும் (பிரிபிக்ஸ்) சில பின் ஒற்றுகளையும் (சபிக்ஸ்) முன்னரே பயன்படுத்தப்பட்டு இருக்கக்கூடும் மைக்ரோப் என்னும் சொல் நுண்ணுயிர் என்று வழக்கில் இருந்தால், மைக்ரோ வேவை நுண்ணலை எனக் கூறலாம்.

ஆங்கிலச் சொற்களில் பல இலத்தீன் மற்றும் கிரேக்க மொழிகளிலிருந்து வந்தவை. அவற்றை மேம்போக்கான முறையில் மொழிபெயர்த்தால் காலப்போக்கில் அச்சொற்களின் பயன்பாடு முடக்கப் பட்டுவிடும். ஆக்கத்திறன் என்ற பொருள்கொண்ட இன்ஜினியரிஸ் என்ற இலத்தீன் சொல்லிலிருந்து இன்ஜினியரிங் என்ற சொல் பிறந்துள்ளது. என்ஜினைச் சார்ந்த இன்ஜினியரிங் என்று நினைத்து, பொறியியல் என மொழிபெயர்த்தோம்.

**காலத்திற்காகத்தான் கருத்துக்கள்; கருத்துகளுக்காகக் காலமல்ல. காலத்திற்கேற்பக் கருத்துக்களை மாற்ற வேண்டும்; காலத்திற்கு ஒவ்வாத கருத்துக்களை ஒதுக்கித் தள்ள வேண்டும்.**

**- அறிஞர் அண்ணா**



பொறிகள் பயன்படுத்தப்படாத பொறியியலை என்ன என்று கூறுவோம்?

எடுத்துக்காட்டாக, சேப்டி என்ஜினியரிங்.

இக்கருத்தரங்கின் தலைவர் பேராசிரியர் குழந்தைசாமி அவர்களுடைய நூலில் இக் கருத்துக்களை விரிவாக தெளிவு படுத்தியுள்ளார்கள்.

என்னுடைய ஆராய்ச்சித் துறையில் இம்மியூனிட்டி தடுப்பாற்றல் என்றும், இம் மியூனாலஜி தடுப்பாற்றலியல் என்றும் கொள்ளலாம். நோய்த் தடுப்பாற்றலியல் என்று கூறு வது இவ்வியலின் விளக்கம் ஆகும். 'லிம்போசைட்டை' வெள்ளை அணுக்கள் என் கிறோம். ஆனால், இது வெள்ளை அணுக்களில் ஒரு வகையாகும். தடுப்பாற்றலுக்கு ஒரு முக்கிய உறுப்பு தைமஸ் ஆகும். இதைத் தைமஸ் என்று கூறுவதே எளிதாகும்.

பயோ டெக்னாலஜியைத் தொழில் நுட்ப உயிரியல் என்றும், மாலிக்யுலர் பயோ லெஜியை மூலக்கூறு உயிரியல் என்றும் கூறுகிறோம்.

ஆனால், இன்னும் குறுகிய அளவிலான கலைச் சொற் களைக் கண்டறிவது நலமாகும். அறிவியல் தமிழ் வளர்ச்சிக்குக் கீழே குறிப்பிடும் வகையில் ஆவன செய்யவேண்டுமென்று வேண்டு கிறேன்.

ஒன்று – கலைச் சொற்கள் சுருக்கமாக, சிறப்பானதாக இருக்கவேண்டும். ஆங்கில கிரேக்க அடிப்படையை உணர்த் தும் வகையில் இருப்பது பல மாற்று அல்லது கூட்டுச் சொற்கள் அமைய ஏதுவாகும். இரண்டாவதாக, கலைச் சொற்கள் தமிழ் இலக்கியம் சார்ந்ததாக – பழக்கத்தில் இருப்பதாக இருந்தால் நல்லது. மக்களின் நடைமுறை வழக் கத்தில் இயல்பு கொண்டதாக இருத்தல்வேண்டும். எடுத்துக் காட்டாக, பல்கலைக்கழகம், வானொலி கோப்பு, புலம், துறை, இயற்பியல் வானியல், வானிலை, மணித்துளி, நேர் முகத் தேர்வு, விலங்கியல், சுற்றுச் சூழல் உயிரியல் போன்ற சொற்கள் நன்கு பழக்கத்தில் இருந்துவருகின்றன.

மூன்றாவதாக, படைக்கப் பட்ட புதிய கலைச் சொல் அதற்கு உண்டான எல்லாப் பொருளையும் பெறச்செய்ய வேண்டும். அந்தச் சொற்களைத் தனியாகப் பார்த்தால், அவற் றுள் அடங்கிய பொருள் அனைத்தையும் புரிந்துகொள்ள இயலாது. அந்தச் சொல்லை அடக்கிய சொற்றொடர் அமைப் பில் எடுத்துக்காட்டி, பழக்கத் திற்குக் கொண்டுவந்து, மக்களை ஏற்கச் செய்யவேண்டும்.

திரும்பத் திரும்ப அந்தச் சொல் ஒரு குறிப்பிட்ட பொரு ளுடன் பழக்கத்திற்கு வந்தால் தான், அறிவியல் தமிழாகவும் சிறப்பாகவும் இருக்கும். இப்பொழுது பண்டைய தமிழ் இலக்கியங்களுக்கு Data base எனப்படும் செய்தித் தொகுப்பு அமைக்கப்பட்டு வருகிறது.

அதேபோல், அறிவியல் கலைச் சொற்களுக்கு ஒரு சிறந்த கம்ப்யூட்டர் சாப்ட்வேர், கணிணி மொழி அல்லது சுஜாதா அவர்கள் சொன்னது போல், மென்பொருள் வழியாக ஒரு செய்தித் தொகுப்பு அமைக்கப் படவேண்டும்.

நான்காவதாக, அறிவியல் அறிஞர்களும், தமிழறிஞர்களும் கொண்டிருக்கிற ஒரு மைய அமைப்பின் மூலம் கலைச் சொற்களை ஒருங்கிணைத்து பொதுப்படையான வழக்கத் திற்குக் கொண்டுவரச் செய்ய வேண்டும்.

ஐந்தாவதாக, அறிவியல் உண்மைக் கருத்தை அத்துறை வல்லுநர்கள் நன்கு அறிவார்கள். இருப்பினும் அறிவியல் தமிழின் வளர்ச்சி அறிவியல் மற்றும் தமிழறிஞர்கள் கூட்டுமுயற்சி யால் சிறப்புறும் என்பது என் கருத்து. அறிவியல் அறிந்த தமிழ் நுட்பர்களும், தமிழ் அறிந்த அறிவியல் அறிஞர்களும் சேர்ந்து செயலாற்றவேண்டும். எதனை யும் ஒத்த நோக்கோடு ஒருங் கிணைத்துக் காணும் சிறந்த மனப்பாங்கு வேண்டும். அது போல், இவ்விரு துறைப் பாடங் களையும் சேர்த்து பயிற்று விக்கக்கூடிய பட்டப்படிப்பும் அமைத்திடுதல் வேண்டும். இவ் வாறு பலருடைய ஒத்துழைப் புடன் அறிவியல் தமிழ் மேலும் வளர்ச்சி அடைய ஆவன செய்ய வேண்டும்.

**(தஞ்சையில் நடைபெற்ற 8-ஆம் உலகத் தமிழ் மாநாட் டில் ஆற்றிய உரையிலிருந்து).**





# நாமக்கல் கவிஞர்

## கவிஞர் பொன்னடியான்

**மாண்புமிகு முதல்வர்க்கு**

எட்டா உச்சியில் இருந்த தமிழ் அமுதை
எல்லா மக்கள் கைக்கும் எட்ட
ஏழை மக்களும் எடுத்து உண்ண
எட்டாம் உலகத் தமிழ் மாநாடு கண்டாய்;
தன்னிகரில்லாத் தனிப் புகழோடு
தலை நிமிர்ந்து நின்ற தஞ்சைக் கோயிலும்
தன்னடக்கத்தோடு
தலை குனிந்துகொண்டதாம்! ஏன்?
உன்புகழ் அதனினும் உயர்ந்து விட்டதாம்.
சோழ வளநாடு சோறுடைத்து என்ற
சுந்தரச் சொல்லும் உயிர் பெற்றுவிட்டதாம்;
சோழ ராஜன், ராஜராஜன்
ஆண்ட புவியும் அன்புத் தலைவிஉன்
காலடி பட்டதால் சிறகுகள் முளைத்து
வானில் பறந்துஉன் வாழ்த்துக்கள் பாடுதாம்
உன்புகழ் உருவை உளத்தால்
வணங்கினேன்.

**தலைவருக்கு:**

தலைவரே, நான் உங்கள்
தலைதடவ மாட்டேன்.
உங்கள் தலை காக்க
எந்தன் தலைகொடுக்கவும்
தயங்க மாட்டேன்.
உலகம்கூறும் எப்பித்தும் இல்லாத
புலவன் உன்னுள் ஏன்
புலமைப்பித்து மட்டும் இணைந்ததய்யா?
தப்பித்தோம், யாம் பிழைத்தோம்
என்று ஓடி
தமிழ்ப் பகைவர்தாம் மறைவார்
உன்னைக் கண்டால்.
முப்பித்து மட்டும் உனக்கு உண்டு;
ஆமாம், முத்தமிழின் பித்தன் நீ;
மூப்பில்லாத முப்பாலின் பித்தன் நீ.
முத்தமிழின் பித்தன் நீ.

பாவேந்தர் தம் முறுக்கேற்றும்
கவிதைகளின் பித்தன் நீயே!
கலப்பில்லா நற்றேனைக்
கடைகள் எல்லாம் தேடிவந்தோம்
இனிமேல் யாம் அலையமாட்டோம்;
உன் நரைத்தேன் இருக்கிறதே?
தேனை நரைத்தேன் என்று சொன்னீர்கள்;
நரை என்றால் தேன் என்று!
எனவே, கலப்பில்லா நற்றேனைக்
கடைகள் எல்லாம் தேடி
அலைய மாட்டோம்.
உன் தலைமை வணங்குகின்றேன்,
வாழ்த்துகின்றேன்.

**மாண்புமிகு கு.ப. கிருஷ்ணர்க்கு:**

உனைச் சுமந்தோடும் உந்து வண்டியும்
தூய பழந்தமிழ் என்னைச் சுமந்து

தமிழ் முழக்கோடு தாவி ஓடுமாம்;
அதனால் உன் பயண வண்டியும்
எங்களுக்குக்
கும்பிடுகின்ற கோயிலானது!
நீ அக்கோயிலில் குடியிருக்கின்ற
தமிழ்நலம் காக்கும் தமிழ்ச் சாமி ஆனாய்!
உலகுள தமிழர்கள் உன் துணிச்சல் கண்டு
உச்சரித்துள்ளனர் உன் பெயர் தன்னையே;
மாண்பமை அமைச்சரே வணங்குகின்றேன்.

**மாண்புமிகு தென்னவர்க்கு:**

முன்னர் பழந்தமிழ் மண்ணை ஆண்ட
மன்னவர் வழியில் மாத்தமிழ் பிழைக்கும்
தேன்தமிழ்ச் செல்வர்
மாண்புடைத்தென்னவர்
திருத்தொண்டிற்கும் என்
கரம் கூப்பினேன்.
அலைகடலென இங்கு
அணி திரண்டிருக்கும்
மதிப்புடை மக்களை - மலர்களை
வணங்கினேன்!
தேசியக் கவிஞர் நாமக்கல் ராமலிங்கம்
பாமரர்க்கும் பண்டிதர்க்கும்
பாடுபடும் தோழர்கட்கும்
தேமதுரச் செந்தமிழ் தித்திக்கப்
படைத்தளித்த
நாமக்கல் கவிஞன் புகழ் உரைப்பேன்; அந்த
நற்கவி சீர் பாட்டில் படம் பிடிப்பேன்;
மாமலைமுன் ஓர்கடுகாய்
மாகவி புகழ்முன் நின்று பாமகள்
துணையுடனே
பாரதப் பெருங்கவியின் பண்புநலம்
அத்தனையும் தொடுப்பேன்;
அந்தப் பாட்டு முதல்வன் பெருமை
வடிப்பேன்!
இருபதாம் நூற்றாண்டு ஈன்ற கவிஞரில்
காந்தியக் கவிமகன், தேசியத் திருமகன்
நாமக்கல் கவி ராமலிங்கனார்,
தன்னேரில்லாத் தனிப்புகழ்க் கவிஞர்.
தமிழை, தமிழரை தமிழினப் பெருமையை
தமிழ்ப் பண்பாட்டை, தம்முயிராகப்
போற்றிப் பாடிய புதுமைக் கவிஞர் அவர்.
தமிழ் இலக்கியம் தலை நிமிர்ந்திடவே,
எண்ணிலாப் படைப்புகள்
இயற்றிய அறிஞர்.
விடுதலை வேள்வியில் விளைந்த கவிஞர்.
போராட்ட வீரராய், புடம்
போட்டெழுந்தவர் அவர்.
உயர்ந்த ஓவியர் ஒப்பிலாப்பாடகர்.
நாவல், சிறுகதை, நாடகம் என்று
எழுதிக் குவித்துநம் இதயம் கவர்ந்தவர்.
தேர்ந்து, தெளிந்த திறனாய்வாளர்!
சொல்லாண்மை மிக்க, மேடைப் பேச்சாளர்!
தேயாத் திறன்மிகு தேசியம் காக்க
ஓயாதுழைத்த உத்தமக் கவிஞர்!
கருணை மாமுனி அண்ணல் காந்தியின்
காந்தீயம் காக்க கண்விழித்து உழைத்தவர்.
விடுதலைக் கவிஞர் பாரதிக்கும்
புரட்சிக் கவிஞர் பாரதிதாசர்க்கும்
கிடைக்காச் சிறப்புயர் கவிமா மன்னரை
தேடி வந்து, திருவடி தொழுதது! ஆம்.
இந்த நாட்டின் இணையிலாக் கவிஞரை
அந்த நாளின் தமிழக அரசு
வருந்தி அழைத்து, வாழ்த்துகள் பொழிந்து
முதல் அரசவைக் கவிஞர் என்று
அரியணை அமர்த்தி, அதன் புகழ் காத்தது.
இந்த மண்ணின் விடுதலைக்காக
சிறையில் பாடிய சிந்திசைக்கவிஞர்க்கு
மற்றொரு பெருமையும் மடியில் விழுந்தது.
கவிஞரில், முதல் மேலவை உறுப்பினர்
என்னும் பதவியை இவர்க்கு அளித்து
முத்தமிழுக்கே முடிசூட்டி மகிழ்ந்தார்,
ஏழைப்பங்காளர் எனும் புகழ்பெற்ற
கர்மவீரர் காமராஜர்!

இந்திய மண்ணின்
இணையிலாக் கவிஞர்க்கு
இன்னொரு சிறப்பும் இணைந்துகொண்டது.
மத்திய அரசின் மாண்புறு பட்டமாம்
பத்மபூஷன் பட்டம் பெற்ற
முதல் தமிழ் இலக்கியக் கவிஞர்
என்னும் சிறப்பே அந்தச் சீர்மிகு சிறப்பாம்!

இத்தனைச் சிறப்பும் மொத்தமாய்ப் பெற்ற
முத்தமிழ்க் கவிஞர் இவரேயாவார்.
படித்தவர், பட்டம் பெற்றவர்கள்
பாரத நாட்டில் பெருகி விட்டால்
வேலையில்லாத்திண்டாட்டம் வெடித்து,
நாடு நொடிந்து விடும் என்பதை
அன்றே நன்கு உணர்ந்து
இளைஞர்க்கு அறிவுரை பல உரைத்தார்.
"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்".
'எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ'
என்ற நம் கவிஞர் பொன்னுரையை
இன்றைய இளைஞர்கள் ஏற்றுவிட்டால்
வெற்றிகள் வீடு தேடி வரும்;
விடியலும் நாளை ஓடி வரும்!
விஞ்ஞானத்தால் கொல்லுவதை
வீரர்கள் போரெனச்சொல்லுவதோ?
அஞ்ஞானத்தின் வடிவன்றோ
அணுகுண்டாகிய வெடிகுண்டு?
எனவே,
'ஆயுத பலத்தை நம்பாதே
ஐரோப்பியர் போல் வெம்பாதே'
—என்று தேசிய கவிஞர் தெளிந்துரைத்தார்!
தேவையில்லாத போரை எதிர்த்தார்.
போரிலா உலகம் காண்பதற்கே
புகழ்க்கவி அவர் வழி நாம் நடப்போம்!

அன்றே இந்த ஆண்மைக் கவிஞர்
மோகனூர் தந்த முத்தமிழ்ச் செல்வர்
குழந்தைத் திருமணக் கொடுமையை
எதிர்த்தார்.
கொடிய சிசுக்கொலை, வரதட்சணை
எல்லாம்
பழம்பெரும் நாட்டின் பழிச்செயல் என்றார்.
பழி வரும் தீண்டாமையால் எனப்
பகைத்தார்.
விதவை மணமும், கலப்பு மணமும்
வேண்டும் நாட்டில் யாண்டும் என்றார்!
மதுவிலக்கே வாழ்க்கை நோக்கு என்று
உழைத்தார்.
மறுமலர்ச்சிப் பாதை பல காட்டி
அழைத்தார்.
ஒற்றுமை கெடுத்து, வேற்றுமை விதைக்கும்
உருப்படாச் செயல்களை நாளும்
வெறுத்தார்.
மற்றவர்க்காகவே தன்னைத் தந்து
மகாத்மா வழியில் பழிகள் பொறுத்தார்.
கொடுஞ்சிறை, அவர்நலம் குலைத்தபோதும்
கொள்கை மறவர் குலையாது நெஞ்சைத்
தொடும் பல படைப்புகள் எழுதிக்
குவித்தார்.
தூரிகை மன்னன் வரலாறு படைத்தார்.
நாம் மக்கள் - புழு, பூச்சி, விலங்கு அல்ல.
நாடு, மொழி, இனம் வாழ உழைப்போம்
என்றே நாமக்கல்லாய்த் தேய்ந்த ஏழை
மக்கள்
நலம் நாடி, நாமக்கல் கவிஞர் வாழ்ந்தார்.
மலை முழுங்கி மல்லப்பர்களையும்
நாட்டு மக்களுக்காய் உழைக்கும்
நல்லோர்களையும்
மலை முழுங்கி மல்லப்பர்களையும்
'மலைக் கள்ளன்' கதை மூலம் வடித்துத்
தந்தார்!
என்றும் நம் மனங்களிலே இடம் பிடித்து
வாழுகிற
மலைக் கள்ளன் வேடமிட்ட எம்.ஜி.ஆர். ஐ
மறந்திடவா முடியும் நாம்?
தமிழர் வாழ்வின் நிலைக்களமாய்
வாழுகின்ற
தமிழ்ப் பண்பாட்டை நிலை நிறுத்தும்
பல புதினம் படைத்தளித்தார்
பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்
பணம் என்ற மோகத்தின் விசை
தீரவேண்டும்.
கூட்டாளி வர்க்கங்கள் குணம் மாற
வேண்டும்.
குற்றவேல் தொழில் என்ற மனம் மாற
வேண்டும்.
வேறுள்ளோர் துன்பங்கள் கண்ணாறக்
கண்டும்
நாட்டோடு சேராத தனிபோக உரிமை
நடவாது இங்கு இனி என்று

**மக்கள் ஒவ்வொருவரும் மற்றவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும். ஒற்றுமையாக வாழ வேண்டும். மற்றவர்களுக்காகக் கடவுளிடம் பிரார்த்தனை செய்யுங்கள். உங்களைக் கடவுள் ஆசீர்வதிப்பார்.**

**—அன்னை தெரசா**

**'ஏன்? எதனால்? எப்படி? எதற்காக?' என்ற கேள்விக் குறிகளை நிறுத்திச்சரியான விடை, பகுத்தறிவுக்கு ஏற்ற பதில் கிடைத்த பிறகே எதையும் செய்யவேண்டும்.**

**— இங்கர்சால்**

# வழிகாட்டிகள்



நாட்டு விடுதலைக்காகச் சிறையில் வாடியவர்கள், தீவுகளுக்குத் துரத்தப் பட்டவர்கள், மண்டை பிளக்கப் பட்டவர்கள், குடும்பச் சுகத்தை இழந்த வர்கள், தடியடியால் இறந்த குமரன், தூக்குமேடை ஏறிய பகத்சிங், சொத்தைப் பறிகொடுத்த சிதம்பரம் பிள்ளை போன்ற வீரத் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்த வேண்டும். அவர்கள் சிந்திய இரத்தமும், கண்ணீரும் நமது வீர வணக்கத்துக்கு உரியன. அவர்கள் நமக்கு வழிகாட்டிகள்.

நாம் அறிதல் பெருமை -
என்று பாட்டாளி மக்களுக்காய்க்
குரல் நாளும் கொடுத்தார்!
பணத்தாசை மனிதர்களை நிதம் பார்த்துச்
சிரித்தார்!

நாட்டுக்கும் மக்களுக்கும் நாம்
உழைக்காவிட்டால்
நாளை வரும் சமூகம்தான் நமைப்
பழிக்கும் என்றார்.
பாட்டாளர் நல்வாழ்வே தம்வாழ்வாய்
எண்ண
பகட்டறியா நம் கவிஞர் ராமலிங்கர்
வாழ்ந்தார்.
கூட்டுறவால் நாம் உயர்வோம் என்று
குரல் தந்தார்.
குறையில்லா நிறைவாழ்வைக் கண்டு
கவி சென்றார்
தமிழ்நாட்டில் தமிழ் இசையின்
இயக்கங்கள் வெல்லத்
தளராமல் குரல் கொடுத்தார்.
அவரவர் மொழியில் அவரவர் கேட்பதே
இசை எனப்படுவதன் இன்பம் தருவது.
புரியா மொழியில் இசையைப் புகட்டல்
கண்களைக் கட்டி காட்சி காட்டுதல்!

தமிழன் சொந்தத் தாய்மொழிச் சொல்லில்
இசையைக் கேட்க இச்சை கொள்வதே
தமிழ் இசை என்பதன் தத்துவமாகும்.

என்று தமிழ் இசை காக்க
மார் தட்டி நின்றார்!
"தமிழன் என்ற பெருமையோடு
தலை நிமிர்ந்து நில்லடா!
அமிழ்தமென்ற தமிழின் இசை
அண்டம் முட்ட உலகெலாம்
அகிலதேச மக்களும் தன்னாசை
கொள்ளச் செய்யடா!"
—என்று ஆணையிட்ட அமர கவியின்
அன்பு வேண்டுகோள் எலாம்
அன்னை நாட்டின்
மக்கள் நாம் ஒன்றுசேர்ந்து
நெஞ்சில் ஏற்றுவோம்.
மானமுள்ள, மதிப்புள்ள மாண்பு
வாழ்க்கை மணந்திடும்
புதிய நாடு ஒன்று காண
விடியல் கீதம் பாடுவோம்!
வானை முட்டும் புகழைத் தொட்டு
வாழ்ந்த வீர மரபினர்
வையம் எங்கும்
வளமை சேர்க்கும் வாய்மை,
மெய்மை வழி செல்வோம்.
தேனில், அமுதில், பாலில்,
கரும்புப் பாகைப் பெய்து செய்தமிழ்
திக்கு எட்டும் பரவ அமைதி உலகம்
படைத்து வெல்லுவோம்.
வாழ்க தேசியக் கவிஞர் நாமக்கல்லார் புகழ்!
வெல்க செந்தமிழ்.
வணக்கம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23








# தமிழரசு

1.9.1995 ரூ.3



நிகழ்ச்சிகளில் சில....



மாஸ்டர் ஸ்ரீதர் நாடகக் குழுவினரின்
“வெற்றிக்கனி” - நாடகம்




மாணவர் அரங்கம்:
செல்வன் கே. கமலக்கண்ணன்
செல்வி கல்தானா தில்ரஷ்
செல்வி ப. காயத்திரி

# இந்த இதழில்...


புதிய அமைச்சர்கள் பதவியேற்பு ............ 2

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை ...................... 3

பட்டமும் செய்தியும் ....................................... 10

குமரித்தந்தை மார்ஷல் நேசமணி நூற்றாண்டு விழா ....................................... 13

தமிழ்கூறும் நல்லுலகம்
—மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா ............... 17

இராமநாதபுரம் மாவட்டத்தில் காயிதெமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் நூற்றாண்டு விழா ......................... 20

சிதம்பரனார் மாவட்டத்தில் “டோக்ரா” திட்டம் ....................................... 22

விருதுநகரில் பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா ....................................... 24

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்
—கவிஞர் கலி. பூங்குன்றன் ......................... 26

இராஜா ரவிவர்மா தீட்டிய சர்.டி. முத்துசாமி ஐயரின் ஓவியம் பாதுகாப்பு ....................................... 30

21-ஆம் நூற்றாண்டும் கலைகளும்
—திரு. கணபதி ஸ்தபதி ............................. 34

மாணவர் பக்கம் ....................................... 40

நூல்நயம் ....................................... 41

பேசும் பொம்மைகள் ....................................... 43




**இதழ்தோறும் ஓர் இனிய குறள்**

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்ய வல்லவரே பெரியோர். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.


## தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026
ஆவணித் திங்கள் : 16
மலர்: 26 இதழ்: 5
1.9.1995
விலை ரூபாய்: 3

## புதிய அமைச்சர்கள் பதவியேற்பு



1.9.95 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் முன்னிலையில், நெல்லிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு சி. தாமோதரன் அவர்கள் கால்நடைத்துறை அமைச்சராகவும், கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராகவும் பதவி யேற்றனர்.

புதிய அமைச்சர்களுக்கு மேதகு ஆளுநர் திரு எம். சென்னாரெட்டி அவர்கள் பதவிப் பிரமாணமும் ரகசியக்காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார்.







# 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தொடர்ந்து அமல்படுத்துவோம்

## மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாடு சென்னை கோட்டையில் 23.8.95 அன்று தொடங்கியது. மாநாட்டை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கிவைத்துப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

இந்த அரசு மக்களுடைய உரிமைகளுக்காகவும், நலனுக்காகவும் செயல்படுகிறது. எப்போதுமே சாதனைகளுக்குத் தான் முக்கியத்துவம் அளித்து வருகிறது.

எனவே, நாங்கள் என்ன செய்தோம் என்பதை மட்டும் பேசும் கூட்டமாக மட்டும் இல்லாமல், வரும் மாதங்களில் நாம் என்ன பணிகளைச் செய்ய வேண்டும் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்தந்த மாதங்களைச் சாதனை மாதங்களாக மாற்றும் மாநாடாக இது திகழ வேண்டும் என்பது தான் என்னுடைய விருப்பமாகும்.

### முதல் இடம்

தமிழ்நாட்டின் திட்ட ஒதுக்கீடு 2750 கோடி ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டதற்கு மாறாக 2,775 கோடி ரூபாய் பயன்படுத்தி சாதனை படைத்துள்ளோம் என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தை நல்ல முறையில் வெற்றிகரமாக நிறைவேற்றியதில் தமிழ்நாடு முன்னணியில்





இருக்கிறது. இந்த ஆண்டும் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றியதில் நாட்டில் தமிழ்நாடு தான் முதல் இடத்தில் இருக்கிறது. இதற்காக நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பாராட்டுகிறேன்.

திட்டக் குறியீடுகளில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சாதனை படைத்துள்ளதில் நான் மகிழ்ச்சி அடைந்தாலும், வளர்ச்சி என்பது வெறும் எண்ணிக்கை விளையாட்டு அல்ல என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஏழ்மைக்கு எதிராக உள்ள போராட்டம் தான் மிகவும் கடுமையான பணியாகும்.

**வாழ்க்கைத்தரம்**

நீர், உணவு, குடியிருக்கும் இடம், ஆரோக்கியம், கல்வி போன்ற அடிப்படை மனிதத் தேவைகளை நிறைவேற்றுவதில் ஒரு நிரந்தரத் திருப்தியோடு நமது பணிகளை நிறைவேற்ற வேண்டும். நமது கிராமங்களில் உள்ள வாழ்க்கைத் தரம் இந்த அடிப்படை வசதிகளைத் தான் சார்ந்து இருக்கிறது.

குடும்ப நலத் திட்டத்தை 15 அம்சத் திட்டத்தின் கீழ் கொண்டுவர நான் அறிவித்த அறிவிப்பு, கடந்த ஆண்டு குடும்பநலத் திட்டக் குறியீடுகளை எய்த வழி வகுத்துள்ளது என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். வரும் மாதங்களிலும் இதில் நமது முயற்சிகளை



ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும்.

**2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி!**

பொது விநியோக முறையில் சாதாரண ரக அரிசி விலையை, கிலோ 2 ரூபாய் என்ற அளவில் வைக்கும் முயற்சியில் ஈடுபடும் சில மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்று. இதனால் மட்டும் ஆண்டுக்கு 515 கோடி ரூபாய் மானியம் வழங்க வேண்டியது இருக்கிறது.

ஏழைகளுக்கு, அவர்களால் வாங்கக் கூடிய விலையில், உணவுப் பொருட்களை வழங்கும் சமுதாயக் கட்டாயங்களை நிறைவேற்றும்போது அதற்கான. மானியத் தொகையை வழங்கும் எந்தவித இழப்பீட்டு நடவடிக்கைகளிலும் மத்திய அரசாங்கம் துணையாக இல்லை. ஆனால், விலை - வாசிகளைக் குறைப்பதற்காக விவசாயி களுக்கு மத்திய அரசாங்கம் ஊக்கத் தொகை நிர்ணயிக்கும்போது மாநில அரசும் ஊக்கத் தொகை வழங்குகிறது.

**தொடர்ந்து அமல் நடத்துவோம்!**

மத்திய அரசின் மானியத் தொகை எதையும் பொருட்படுத்த மாட்டோம். மத்திய அரசு உதவி கிடைக்காவிட்டாலும் தமிழ்நாட்டில் உள்ள ஏழைகளுக்கு 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை அரசு தொடர்ந்து அமல் நடத்தும் என்பது தான் இந்த அரசின் நிலையான உறுதி என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

ஏழைகளுக்கு அரிசி மற்றும் அத்தியா வசியப் பண்டங்கள் வழங்குவதில் தமிழக அரசு பெரு முயற்சி எடுத்துச் சாதனை படைத்துள்ளது. இந்தப் பயன்கள் எந்தவிதத் தாமதமும் இல்லாமல் ஏழைகளுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன்.

**கண்காணிப்பு**

சரியான தரத்தில், சரியான எடையில், அளவில் உணவு மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் ஏழைகளுக்குப் போய் கிடைக்கும் வகையில் பொதுவிநியோக முறை செயல்பாட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும்.

**வேலைவாய்ப்பு**

ஏழைகள் குறிப்பாகப் பெண்கள் அத்தியாவசியப் பண்டங்களை வாங்க நீண்ட தூரம் நடந்து செல்லும் கஷ்டத்தைப் போக்கும் வகையில், ஒவ்வொரு குக் கிராமத்திலும் கிளை விற்பனைக் கடை களைத் திறக்க வேண்டும் என்று இப்போது நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்தக் கடை ஒரு பெண் அல்லது மகளிர் குழுக்களாலோ நடத்தப்படும். இது அவர்களுக்கு வேலைவாய்ப்பையும் பெருக்கும். தமிழ்நாடு முழுவதும் இத்தகைய புதிய விற்பனைக் கடைகள் திறக்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

**குடிநீர் வசதி**

வீடு, உணவு, குடிநீர்ப் பிரச்சினை, விளக்கு ஆகிய பிரச்சினைகளை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த வசதிகள் இல்லாத கிராமங்களில் குறைந்தபட்சம் ஒரு குடிநீர்க் குழாய் அல்லது கிணறு மற்றும் தெரு விளக்கு வழங்கப்பட வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது.

அதோடு, பல்வேறு காரணங்களால், குடிநீர்த் திட்டம், தெருக்கள், விளக்குகள் ஆகியவற்றின் பராமரிப்பு பாதிக்கப்பட்டு இருப்பதாக என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. பொருள் பற்றாக்குறை, பல்வேறு இலாக்காக்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்புப் பிரச்சினை, கண்காணிப்புக் குறைவு ஆகியவை காரணமாகத் தான் பராமரிப்புப் பணிகள்

பாதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பொதுக் குடிநீர்க் குழாயிலும் தண்ணீர் வருகிறதா தெரு விளக்குகள் எரிகிறதா என்பதைத் தவறு ஏற்படாமல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் கண்காணிக்க வேண்டும்.

**சோதனை நடத்த வேண்டும்**

கிராமப்புறச் சாலைகள் மீது உங்கள் தனிக் கவனம் தேவை. அவற்றை மேம் படுத்தவும், பராமரிக்கவும் தனிப்பட்ட முறையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

பொதுச் சொத்துக்களைச் சரியான முறையில் பாதுகாப்பது அரசாங்கத்தின் முதன்மைப் பொறுப்பு ஆகும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சுதந்திரமாகச் சோதனை நடத்தி, குறைபாடுகளைச் சரி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ஆதிதிராவிடர் நலன்**

அடிப்படை வசதிகளில் உள்ள பற்றாக் குறைதான் ஆதிதிராவிடர்களுக்கும் மற்ற சமூகத்தினருக்கும் இடையே மோதல் ஏற் படுவதற்குக் காரணம் ஆகும்.

ஆதிதிராவிடர்கள் தனிமைப்படுத்தப் படுவதை ஒழிப்பதற்காக ஆதிதிராவிடர் களுக்கு அடிப்படை வசதிகள் வழங்கும் மிகப்பெரிய திட்டம் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதன்படி குடிநீர் விநியோகம், தெரு விளக்கு, சாலை வசதிகள் ஆகியவை வழங்கப்படும். இந்தத் திட்டம் இந்த ஆண்டு இறுதியில் முடிவு அடையும். இந்த ஆண்டு, 30 ஆயிரம் ஆதிதிராவிடர் களின் குடியிருப்புகளை மேம்படுத்துவதற் காக ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டது. இது தொடர்பாக நாம் ஒருங்கிணைந்த செயல் பாட்டு முறையைக் கைக்கொள்ள வேண்டும்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், அனைத்துத் தொகுப்பு வீடுகளுக்கும் குடிநீர் வசதி, இணைப்புச் சாலைகள், மின்சாரம் ஆகியவை வழங்கப்படும். இந்தத் திட்டம் 1996-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவு அடையும்.

**நவம்பர் மாதம் பஞ்சாயத்து தேர்தல்**

வருகிற அக்டோபர், நவம்பர் மாதத்தில் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்படி மாநிலத் தேர்தல் ஆணையத்தை அரசு கேட்டுக் கொண்டு உள்ளது. சுமுகமான முறையில் தேர்தலை நடத்த மாவட்ட நிர்வாகம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

சமூகத்தில் அமைதியும் ஒழுங்கும் இருந்தால்தான் முன்னேற்றப் பணிகள் நடைபெற முடியும். எனவே, என்ன விலை கொடுத்தாலும் பொது ஒழுங்கைக் காப் பாற்ற வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

**எதிர்க்கட்சிகள் புகார் ஆதாரமற்றது**

எதிர்க்கட்சிகளின் ஜனநாயகமுறைப் போராட்டங்களை இந்த அரசு நசுக்குவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. இது உண்மைக்கு மாறானது.

பிற கட்சியினைச் சேர்ந்த மூத்த தலைவர்கள்கூட தனிப்பட்ட முறையில் முற்றிலும் ஜனநாயகத்துக்குப் புறம்பாகத் தாக்கிப் பேசினாலும் அவை எல்லாம் அனுமதிக்கப்படுகிறது. பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்தப்படும்என்றும் மாமூல்வாழ்க்கை பாதிக்கப்படும் என்றும் வன்முறை கட்ட விழ்த்து விடப்படும் என்றும் உறுதியான தகவல் கிடைக்கும்போது மட்டும் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

மொத்தத்தில் நம் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு கெடாமல் இருப்பது மகிழ்ச்சிக்கு உரியது. இதற்குக் காரணமான போலீசை நாம் பாராட்ட வேண்டும். அவர்கள் உயிருக்கு ஏற்படும் ஆபத்தையும், எதிர்ப்பு களையும் பொருட்படுத்தாமல் துணிச்சலுடன் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் அவர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஆனால், சமீபத்தில் நடந்த வெடிகுண்டுச் சம்பவங்களை நாம் எளிதில் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இந்தச் சம்பவங்களில் சிலவற்றின் பின்னணி யில் மதவாதம் இருப்பது சந்தேகிக்கப் படுகிறது. மதவாதம் என்னும் பயங்கரமான தீய சக்தி பரவாமல் தடுக்க வேண்டும். இந்தச் சக்திகளுக்கும் போதை மருந்து கடத்தல் மற்றும் அன்னியச் சக்திகளுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி விசாரணை நடத்தி இந்தச் சக்திகளை வேரறுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கூறினார்.

தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பிற்பகலில் காவல்துறை அதிகாரிகள் கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமை உரையாற்றினார். பின்பு காவல்துறை அதிகாரிகள் தங்கள் கருத்துக்களைத் தெரி வித்தனர். அந்தந்த மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்தும், பொதுவான பிரச்சினைகள் குறித்தும் அவர்களுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவா தித்தார்.

**நம்பிக்கை இல்லாமல் செய்யும் முயற்சி, அடிவாரம் இல்லாத கிணற்றை ஆழம் காண முயற்சி செய்வதற்கு ஒப்பாகும்.**

**—அண்ணல் காந்தியடிகள்**



**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, சென்னையில் உள்ள ஜப்பான் நாட்டுத் தூதர் திரு யுசுகி சுக்கூ அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார் (30.8.95)**

# காவல்துறையின் தகவல் நுட்பங்களை மேம்படுத்த சென்னையில் ரூ.350 கோடி செலவில் டிஜிடல் டிரங்க் ரேடியோ!

## மாண்புமிகு முதல்வர் தகவல்

சென்னையில் தலைமைச் செயலகத்தில் 23.8.95 அன்று நடந்த காவல்துறை அதிகாரிகள் மாநாட்டைத் தொடங்கிவைத்து மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:

போலீஸ் படையினர் திறமை மற்றும் ஆற்றலை மேம்படுத்தும் வகையில் தகவல் நுட்பங்களை மேம்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

மாவட்டங்களுக்கு இடையே தகவல் தொடர்பை ஏற்படுத்த டிஜிடல் மைக்ரோ வேவ் முறையை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

உடனடியாகத் தகவலைப் பெற்று உடனடி நடவடிக்கைகளை எடுக்க வசதியாக சென்னையில் 3.5 கோடி ரூபாய் செலவில் டிஜிடல் டிரங்க் ரேடியோ முறையை அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்குள் போலீஸ் நிலையங்களிலிருந்து மாநிலப் போலீஸ் தலைமை அலுவலகம் வரை அனைத்து மாவட்டங்களிலும் கம்ப்யூட்டர் வசதி ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

சப்-இன்ஸ்பெக்டர் வேலைகளுக்கான நேரடித் தேர்வில் 20 சதவிகித இடங்களைத் தேவையான கல்வித் தகுதிகளோடு ஐந்து ஆண்டு அனுபவம் உள்ள காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்காக ஒதுக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளேன்.

மேலும், 600 சப்-இன்ஸ்பெக்டர் பதவிகளைத் தலைமைக் காவலர்களாக இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு அளித்து நிரப்ப வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளேன். மேலும், 26 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் திறக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 24 பெண் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், 145 பெண் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்கள் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

காவல் துறையினருக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்கள் உண்மையிலேயே அவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பதைக் கவனிக்க போலீஸ் டைரக்டர் ஜெனரல் அலுவலகத்தில் ஒரு மூத்த அதிகாரி மாவட்டப் போலீஸ் நல அதிகாரி என்று நியமிக்கப்பட உத்தரவிட்டுள்ளேன்.

அந்த அதிகாரி மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து, நலத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதைக் கண்காணித்து ஆய்வு நடத்துவார். போலீசாருக்கான நலத் திட்டங்களில் மாவட்டப் போலீஸ் சூப்பிரண்டெண்டுகள் போதிய கவனம் செலுத்த வேண்டும்.

நமது மாநிலத்தில் மோட்டார் வாகன விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வருகிறது. இத்தகைய விபத்துக்களைப் புலனாய்வு செய்யும் அதிகாரிகள், பாதிக்கப்பட்டவர்கள் போதுமான இழப்பீட்டைப் பெறும் வகையில் முதல் தகவல் அறிக்கை, அந்த விபத்தில் ஈடுபட்ட வாகன உரிமையாளர் பற்றிய தகவல், இன்சூரன்சு கம்பெனி பெயர் போன்றவற்றைப் பாதிக்கப்பட்டவர்களுக்கும், மாவட்டச் சட்ட உதவிக் கமிட்டிக்கும் வழங்கி, புலனாய்வை வேகமாக முடிக்க வேண்டும் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது.

இதில் – உத்தரவு சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று இன்னமும் புகார்கள் வருகின்றன.

மாவட்டப் போலீஸ் சூப்பிரண்டெண்டுகள் இதைத்தீவிரமாகக்கண்காணித்துப் பாதிக்கப்பட்டவர்கள் எந்தவிதத் தாமதமும் இல்லாமல் இழப்பீட்டுத் தொகை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.





### தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்:

# நட்டுவாங்கப் பயிற்சிபெற மானியம் வழங்கும் திட்டம்

இன்று உலகம் போற்றும் பரதநாட்டியம் தமிழகத்திற்கே உரிய ஓர் ஒப்பற்ற நடனக் கலையாகும். பரதநாட்டியம் பயிலுவதில் ஆர்வம்காட்டும் அனைவரும் அக்கலைக்கு உயிர்மூச்சான நட்டுவாங்கம் பயிலுவதில் ஆர்வம் காட்டாமல் இருப்பதென்பது ஊர் அறிந்த உண்மை. இந்நிலை இனியும் தொடரக் கூடாது என்பதற்காகவும், இளங்கலைஞர்கள் நட்டுவாங்கக் கலையில் தகுந்த பயிற்சி பெறவேண்டும் என்பதற்காகவும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் மூலமாக நட்டுவாங்கப் பயிற்சி பெற மானியம் வழங்கும் திட்டம் ஒன்றினை 1993-ஆம் ஆண்டு அறிவித்தார்கள்.

1993-94-ஆம் ஆண்டிற்குத் தகுந்த வல்லுநர்களைக் கொண்டு 15 மாணவிகளுக்குச் சிறப்பான பயிற்சி அளிக்கப்பட்டது. தொடர்ந்து 1995-96-ஆம் ஆண்டிற்குப் பின்வரும் பாணிகளில் புகழ்பெற்ற பரதநாட்டிய ஆசிரியர்களால் ஆசிரியர் ஒருவருக்குச் சிறந்த மூன்று மாணவிகள் வீதம் தேர்வு செய்யப்பட்டு செப்டம்பர் முதல் தேதியில் இருந்து தமிழ்நாடு இயல்; இசை, நாடக மன்ற வளாகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

திரு. சீத்தாராம சர்மா - கலாஷேத்திரா பாணி

திரு. உடுப்பி லட்சுமிநாராயணன் காஞ்சிபுரம் - எல்லப்பா பிள்ளை பாணி

திரு. எஸ்.கே. காமேஸ்வரன் - வழுவூரார் பாணி

திருமதி. இந்திரா ராஜன் - பந்தணைநல்லூர் பாணி

திருமதி. ரேவதி இராமச்சந்திரன் மெலட்டூர் பாணி

பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கும், பயிற்சிபெறும் மாணவிகளுக்கும் மதிப்பூதியம் மற்றும் உபகாரச் சம்பளம் வழங்கப்படுகின்றது.



# படமும் செய்தியும்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, தலைமைச் செயலகத்தில் சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் சந்தித்துப் பேசினார்கள். இந்தச் சந்திப்பின்போது, மாண்புமிகு கல்வியமைச்சர் திரு கே. பொன்னுசாமி, தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர் (18.8.95)



கிரீஸ் நாட்டு இளவரசி ஐரின் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். (30.8.95) இந்தச் சந்திப்பின்போது, தமிழக அரசு செயல்படுத்திவரும் சமூகநலத் திட்டங்கள், சுகாதாரத் திட்டங்களுக்கு, கிரீஸ் நாட்டு இளவரசி அவர்கள் தமது மனமுவந்த பாராட்டைத் தெரிவித்தார்.

முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு, ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கிரீஸ் நாட்டு இளவரசி அவர்கள் வழங்கினார்.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பழம்பெரும் கோயில்களைப் புனரமைப்பு செய்து, அவற்றைப் பராமரிக்கும் திட்டத்துக்காக, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு கிரீஸ் நாட்டு இளவரசி அவர்கள் பாராட்டு தெரிவித்தார்.

– உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்

# செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்




## சிறப்பு அம்சங்கள்

- 5 ½ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

சிறுசேமிப்பு – செழுமையின்

DIRP/DIS/95



# குமரித் தந்தை மார்ஷல் நேசமணி நூற்றாண்டு விழா

'குமரித் தந்தை' என்று குமரி மாவட்ட மக்களால் போற்றப் படுபவர் மார்ஷல் நேசமணி அவர்கள். கன்னியாகுமரி மாவட்டம், பள்ளியாடி கிராமத் தில் அப்பலோஸ் - ஞானம்மாள் தம்பதியினருக்கு 1895-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12-ஆம் தேதி அவர் பிறந்தார். கல்வியில் தலைசிறந்து விளங்கிய அவர், முதலில் ஆசிரியராகப் பணி யாற்றினார். பின்பு சட்டக் கல்லூரியில் பயின்று தலை சிறந்த வழக்கறிஞர் ஆனார்.

மக்கள் நலனில் அதிக ஆர்வம் கொண்ட மார்ஷல் நேசமணி, திருவிதாங்கூர் கொச்சி ராஜ்ஜியத்தின் கீழ் இருந்த தற்போதைய குமரி மாவட்டத்தைத் தாய்த் தமிழ கத்தோடு இணைக்கப் பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடு பட்டார். திருவிதாங்கூர்-தமிழ்நாடு காங்கிரஸ் தலை வராக இருந்து அந்தப் போராட் டம் தீவிரம் அடையவும் வழிவ குத்தார்.

1948 முதல் 1955 வரை இடைவிடாது நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக, 1956-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் நாள் தாய்த் தமிழ கத்துடன் இணைந்து, குமரி மாவட்டம் உதயமானது.

## நெஞ்சில் நிறைந்தவர்

குமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணையவும், குமரி மாவட்ட நலன் காக்கவும், மார்ஷல் நேசமணி ஆற்றிய பணிகள் மறக்க முடியாதவை. போராட்டக் காலத்தில் உடல் நலம் குன்றிய போதிலும், கடைசி நிமிடம் வரை மன உறுதி குன்றாமல் வாழ்ந்த நேசமணி அவர்கள், 1968-ஆம் ஆண்டு மரணம் அடைந்துவிட்டார் எனினும், தான் ஆற்றிய மக்கள் பணியால், செயற்கரிய செய லால், குமரி மாவட்ட மக்களின் நெஞ்சங்களில் என்றும் நிறைந்து நிற்கின்றார்.

மார்ஷல் நேசமணி அவர்கள், குமரி மண்ணில் பிறந்து 100 ஆண்டு ஆகிறது. இதையொட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், குமரித் தந்தை மார்ஷல் நேசமணி அவர்களுக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாட ஆணை பிறப்பித்து, அன்னாரின் புகழுக்கு மகுடம் சூட்டினார்.

குமரித் தந்தை மார்ஷல் நேசமணி அவர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாட ஆணை பிறப்பித்து புகழுக்குப் புகழ் சேர்த்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் குமரி மாவட்ட மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள்.

இதன் அடிப்படையில், அரசு சார்பில் 'குமரித் தந்தை' மார்ஷல் நேசமணி அவர்களின் நூற்றாண்டு விழா 19.8.95 அன்று குமரி மாவட்டம் தக்கலையில் உள்ள காமராஜர் பேருந்து நிலைய வளாகத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

## விழாக் கோலம்

மாவட்டம் முழுவதும் விழாக் கோலம் பூண்டிருந்தது. மார்ஷல் நேசமணி அவர்களுக்கு நூற் றாண்டு விழா கொண்டாட ஆணைபிறப்பித்துச் சிறப்புச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, வண்ண வண்ணச் சுவரொட்டிகள் எங்கும் ஒட்டப்



பட்டிருந்தன. தக்கலையில் இரவைப் பகலாக்கும் வண்ண வண்ண விளக்குகளும், அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய மின் விளக்குக் கோபுரங்களும் பார்த்தவர்களைமகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின. பல்லாயிரக் கணக்கான மக்கள் இவ்விழாவிற்கு வருகைதந்து கண்டு களித்தனர்.

விழாவையொட்டி 19.8.95 அன்று மாலை 3.00 மணிக்கு நேசமணி போக்குவரத்துக் கழகக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 'மக்கள் தலைவர் மார்ஷல் நேசமணி' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கிற்குப் பேராசிரியர் ஐசக் அருமைராஜ் தலைமை வகித்தார். 'பாராளுமன்ற வித்தகர்' என்ற தலைப்பில் பேராசிரியர் கே. முகமது பரூக் அவர்களும், 'ஒரு வரலாற்றின் தொடக்கம்' என்ற தலைப்பில் பேராசிரியர் வி.எம்.ஏ. சுரேந்திராவும், 'விடுதலை வீரர்' என்ற தலைப்பில் புலவர் என். பாலரசும், 'ஒடுக்கப் பட்டோரின் வழக்கறிஞர்' என்ற தலைப்பில் பேராசிரியை ஜாஸ்மின் ஆசீரும், 'புதிய சிற்பி' என்ற தலைப்பில் டாக்டர் பி. பத்மனாபன் தம்பியும் உரையாற்றினார்கள்.

**சிறப்புக் கூட்டம்**

அதன்பின் மார்ஷல் நேசமணி அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இவ்விழாவுக்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் .தலைமை தாங்கினார். மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு கு. லாரன்ஸ் அவர்கள் முன்னிலை வகித்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். ராஜகோபால், இ.ஆ.ப., வரவேற்றுப் பேசினார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் விழாத் தொடக்கவுரை ஆற்றினார்.

விழாவில், குமரித் தந்தை மார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவினையொட்டி, மார்ஷல் நேசமணிக்குப் புகழ் சேர்க்கும் வகையில் அன்னாரது வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

இக்கண்காட்சியை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் திறந்து வைத்தார்.

குமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணையப் பாடுபட்ட தியாகிகள் 107 பேரை மேடைக்கு அழைத்துப் பொன்னாடை போர்த்தி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கவுரவித்தார்கள்.

இதைப்போன்று நேசமணியின் திருவுருவப் படத்தைச் சிறப்பான முறையில் வரைந்த ஓவியர் திரு விஜய் நாராயணனுக்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பொன்னாடை அணிவித்துப் பாராட்டினார்.



**அமைச்சர்கள் உரை**

இவ்விழாவிற்குத் தலைமை வகித்து மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசியதாவது:

'குமரி மாவட்டத்தைத் தமிழகத்துக்கு மீட்டுத்தந்து மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மார்ஷல் நேசமணிக்குப் புரட்சித் தலைவி அரசு விழா எடுத்திருக்கிறது. புகழுக்கும், பாராட்டுக்கும் உரியவர்களை இந்த அரசு பெருமைப்படுத்த என்றும் தவறியது இல்லை. இதற்கு இந்த விழா ஒரு நல்ல உதாரணம் ஆகும்.

"மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், மார்ஷல் நேசமணி போன்று மன உறுதி படைத்தவர். உச்சியில் இருப்பவர்களைக் கண்டும் அச்சப்படாதவர். இமய மலையை அசைத்தாலும் அசைக்கலாம்: ஆனால், தமிழக மக்களின் இதயத்தில் இருந்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை எந்த விதத்திலும் அசைக்க முடியாது. எந்தத் துரோகத்தாலும் அவரது ஆட்சியை வீழ்த்தவோ குன்றாப் புகழுக்குக் குறை ஏற்படுத்தவோ முடியாது."

விழாவில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு கு. லாரன்ஸ் அவர்கள் பேசியதாவது:

"குமரி மாவட்ட மண்ணில் இருந்து விடுக்கப்படும் அனைத்துக் கோரிக்கைகளையும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு நிறைவேற்றத் தயாராக இருக்கிறது. மார்ஷல் நேசமணியின் உருவப் படத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைக்க ஆவன செய்யப்படும். குமரி மாவட்டத்தைத் தாய்த் தமிழகத்தோடு இணைக்கப் பாடுபட்ட தியாகிகளின் பிரச்சினைகளை வருகிற செப்டம்பர் 14-ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நேரில் அறிந்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சி மேற்கொள்ளப்படும். மார்ஷல் நேசமணி பிறந்த ஊரான பள்ளியாடியில் உள்ள ரெயில் நிலையத்துக்குக் குமரித் தந்தை மார்ஷல் நேசமணியின் பெயரைச் சூட்ட மத்திய அரசு முன்வர வேண்டும்".

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் பேசும்போது கூறியதாவது:

**ஓர் இலையின் மேலுள்ள பனித்துளி போல, உனது வாழ்க்கை, காலத்தின் விளிம்புகளில் நடனமாடிக் கொண்டிருக்கட்டும்.**

**—கவிஞர் தாகூர்**

"இ.காங்கிரசார் நேசமணியை மட்டுமல்ல ; காமராஜரையும், மகாத்மா காந்தியையும் மறந்து விட்டார்கள். தேர்தல் நேரத்தில் மட்டும் ஓட்டுக்காக அவர்களைப் பற்றி வேண்டாவெறுப்பாக நினைப்பார்கள். மேடைகளில் பேசுவார்கள்.

"இவர்கள்தான் தமிழ் நாட்டில் மீண்டும் காமராஜர் ஆட்சியை அமைப்போம் என்கிறார்கள். காமராஜர் குடும்பத்துக்கு அவர்களால் உதவி செய்ய முடியவில்லை. ஆனால், மனித நேயத்தோடு அவர்களுக்கு உதவிய புரட்சித்தலைவியின் செயலையாவது பாராட்டினார்களா? என்றால் அதுவும் இல்லை."

நேசமணி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பேசியதாவது:

"தமிழ்நாட்டில் பல்வேறு முதல் அமைச்சர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கிறார்கள். ஆனால், இந்த மாநிலத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது இன்றைய முதல் அமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்தான். இந்த அரசு விடுதலை பெற, தங்களை வருத்திக் கொண்ட தியாகிகளை மதிக்கின்ற அரசு. அதனால்தான் அவர்களின்உதவித்தொகையை ரூ.1,500 ஆக உயர்த்தியது. ஆனால், மத்திய அரசு இன்னும் இதுபோன்ற அறிவிப்பை வெளியிடவில்லை.

'தமிழக வரலாற்றில் தங்களுக்கென்று தனி இடத்தைப் பிடித்த காயிதெ மில்லத், வள்ளலார், இராமசாமி படையாட்சியார், திருவள்ளுவர் போன்றோரின் பெயரால் மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

"தகுதி உள்ளவர்களை மதிக்கின்ற இந்த அரசு அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை முன்னேற்றி வருகிறது. குறிப்பாகத் தொழில்துறை, போக்குவரத்துத் துறை, கல்வித் துறை போன்றவற்றில் விரைவான வளர்ச்சியினை எட்டியுள்ளோம். மார்ஷல் நேசமணியின் படம் அனைத்து நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் விரைவில் வைக்கப்படும்."

**நலத்திட்ட உதவிகள்**

விழாவில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 15 பேருக்கு ரூபாய் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 450 மதிப்புள்ள கடன் உதவி அளிக்கப்பட்டது. நலிந்தோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் தலா ரூ.5 ஆயிரம் வீதம் 10 பேருக்கு 50 ஆயிரமும், குமரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி சார்பில் 99 பேருக்கு, ரூ.5 இலட்சத்து 44 ஆயிரத்து 750 மதிப்புள்ள கடன் உதவிகளையும், இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு கு. லாரன்ஸ் அவர்கள் வழங்கினார்.

உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, மற்றும் கல்லூரிகளுக்காகத் தனித்தனியாக நடைபெற்ற பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கான பரிசுகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வழங்கினார்கள்.

இவ்விழாவில் திரு எஸ். ஆஸ்டின், எம்.பி., டாக்டர் அம்ம முத்துப்பிள்ளை, எம்.எல்.ஏ., திரு அப்பு நடேசன், எம்.எல்.ஏ., தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு எப்.எம். இராஜ ரெத்தினம், குமரி மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் கவிஞர் டி. சதாசிவம், பால் வளத் தலைவர் திரு எல். நீல கண்டன் ஆகியோர் பேசினார்கள்.

விழா முடிவில், மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு எஸ்.எம். பஷீர் நன்றி கூறினார். விழாவில் செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் (வெளியீடு) திரு இரா.பா. கார்மேகம் அவர்கள் கலந்துகொண்டார்.

விழாவில் கடைசியாகத் திரைப்பட இசை அமைப்பாளர் திரு சங்கர் கணேஷ் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பெண்கள் அதிக அளவு வந்திருந்தனர்.

**—எஸ்.எம். பஷீர்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவல**
**நாகர்கோவில்**

## இளைஞர்களுக்கு இனிய மொழி

**அறிவு:**

'அறிவுக்கு இந்த வையகம் எப்போதுமே தன் வணக்கத்தைச் சொல்லும். திறமைக்கு ஆதரவைத் தரும். தூய உள்ளமதை வரவேற்கும்'.

**மனிதன்:**

'மனிதன் தன் மனதில் எழும் வினாக்களுக்கு தனக்குத் தானே பதில் அளிக்கக்கூடிய பயிற்சியைப் பெற வேண்டும். மனிதன் பகுத்தறிவு படைத்தவனாக உருவாக வேண்டும்.

**நம்புவதும் செய்வதும்:**

'ஏன்? எதனால்? எப்படி? எதற்காக?' என்ற கேள்விக் குறிகளை நிறுத்தி சரியான விடை, பகுத்தறிவுக்கு ஏற்ற பதில் கிடைத்த பிறகே எதையும் செய்யவேண்டும்.



# தமிழ்கூறும் நல்லுலகம்

## திரு சேடபட்டி இரா. முத்தையா

**மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்**

முச்சங்கம் நடந்து தமிழ் வளர்த்த பின்னர், முச்சங்கமும் மருவிய காலத்தில் வள்ளல் பாண்டித்துரையார் தொடங்கிய 4ஆம் தமிழ்ச் சங்கமும் நடைபயிலுகிற மதுரையிலேயிருந்து வந்தவன் என்கிற அந்த ஒரு உரிமை, தகுதி, ஏனைய தகுதிகளால்- எளியோனாகிய என்னை இந்த மகத்தான விழா நிகழ்ச்சியின் மாநாட்டில் அமர்த்தி அழகு பார்த்துக் கொண்டிருக்கிற நம்முடைய வணக்கத்திற்குரிய என்னுடைய தாய்க்கு என் தனி வணக்கம் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சைத் தரணி, வரலாற்றுக் காலத்திலேயிருந்து இதுவரையிலேயும் நாம் கேள்விப்பட்டவரையில் மூன்று பெரும் விழாக்களைக் கண்டதாகக் குறிப்பிடலாம்.

ஒரு விழா, இந்தத் தரணியை ஆண்ட இராஜராஜனுடைய பட்டாபிஷேகம் மிகப் பெரிய அளவிலே நடந்தது; அதை இந்த நகரம் கண்டிருக்கலாம்.

அதன் பின்னர், அவர் கட்டிமுடித்த தஞ்சைப் பெரிய கோவிலுடைய குடமுழுக்கு விழா, மிகப் பெரிய அளவில் சீரோடும் சிறப்போடும் நடந்திருக்கலாம்; அது இரண்டாவது விழா.

ஆனால், அந்த இரண்டு விழாக்களிலுமே அதிகபட்சம் சோழ நாட்டு மக்கள் மட்டுமே கூடியிருந்திருப்பார்கள். ஆனால் மூன்றாவதாக- நம்முடைய தங்கத் தலைவி நடத்தியிருக்கிற இந்த 8-ஆம் உலகத் தமிழ் மாநாட்டிலேதான் சோழ நாடு மட்டுமல்லாமல், சேர, சோழ, பாண்டிய, பல்லவ நாடுகளிலேயிருந்து தமிழகமே கூடியிருக்கிறது என்பதோடு, தமிழ்கூறும் நல்லுலகமே கூடியிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூற ஆசைப்படுகிறேன். அந்த அளவிற்கு - அந்த இரண்டு விழாக்களையும் விஞ்சுகிற அளவிற்கு உலகத் தமிழன் இன்றைக்கு இறும்பூது எய்தி நிற்கிற அளவிற்கு இந்த விழா நடைபெற்று முடிந்திருக்கிறது.

நம்முடைய என்றுமுள செந்தமிழாம் தாய்த் தமிழை, இலக்கண இலக்கியச் செறிவோடு வளர எருவிட்டு வளர்த்தவர்கள் எண்ணற்றவர் ஆவர்.

சங்க காலத்திலேயிருந்து அந்த வரிசையினரை எடுத்துக்கொண்டால் – சங்ககாலத்திற்கும் முற்பட்ட காலத்திலிருந்தே அந்த வரிசை தொடங்கும். அந்த வகையில் அந்த வரிசையினர்களில் ஒல்காப்புகழ் தொல்காப்பியன் இருந்தான்; வான்புகழ் வள்ளுவன் இருந்தான்; வார்த்தைகள் வாரி வழங்கியதில் வள்ளலாகத் திகழ்ந்த கம்பன் இருந்தான்; கவி காளமேகம் அங்கு இருந்தான்; கண்ணகிக்குச் சிலை வடிக்க வடக்கிலிருந்து கல்கொணர்ந்த சேரன் செங்குட்டுவன் தம்பி இளங்கோ இருந்தான்; தமிழ் மூதாட்டி ஔவை இருந்தார். இன்னும் வரிசைப்படுத்திக் கொண்டே சென்றால் அரிசில்கிழார், அஞ்சில்-ஆந்தையார், அறிவுடை நம்பி, ஆலந்தூர்க்கிழார், ஆந்தையார், இளங்கீரனார், இளையனார், ஒக்கூர் மாசாத்தியார், ஒண்சாத்தன்,

கருவூர்க்கிழார், கபிலர், கணியன் பூங்குன்றனார், காக்கைபாடினியார், கூலவாணிகன் சாத்தனார், கூடலூர்க்கிழார், கோப்பெருஞ்சோழா, கோவூர்க்கிழார், சாத்தனார், சீத்தலைச் சாத்தனார், சேந்தன பூதனார், நச்செள்ளையார், நப்பசலையார், நல்மகனார், நெற்றிக்கண் திறப்பினும் குற்றங்குற்றமே என இறைவனுடனேயே சொற்சிலம்பமாடிய நக்கீரனார், நாகனார், மதுரைக் கண்ணனார், மாங்குடி மருதனார், மாமூலனார், மோசிகீரனார், முன்னாகனார், தாமோதரனார், தாயங்கடனார், திருத்தக்க தேவர், வெள்ளிவீதியார், வள்ளலார் என இத்தனைப் பேர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்து வளர்த்த தமிழ் மூன்றும் இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் எனப்படும்.

அதைத் தொடர்ந்து இவர்கள் மட்டும் அல்லாமல், தேவாரம் அருளிய அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்பாரும், திருவாசகம் தந்த மாணிக்கவாசகரும், பாடிப் பாடி வளர்த்த தமிழ், மூன்று தான். இயல், இசை, நாடகம். பின்னாளில், ஆழ்வார்களும், நாயன்மார்களும் இருந்து வளர்த்த தமிழும் இந்த நூற்றாண்டில் நாம் அறிந்த எட்டயபுரத்துத் தலைப்பாகைப் புலவன் பாரதியும், அவன் தாசன் பாவேந்தனும், அள்ள அள்ளக் குறையாத பாட்டுச் சுரங்கங்களைத் தந்து சென்ற பட்டுக்கோட்டையாரும், கண்ணதாசக் கவியரசனும் யாத்துத் தந்த தமிழும் மூன்றுதான்; இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ்.

அயல்நாட்டுப் பிரஜையாகப் பிறந்திருந்தாலும், தமிழுக்கு அருந்தொண்டாற்றிய கால்டுவெல் - போப்பும், அணிக்கு அணி சேர்ப்பதில் முன்னின்ற இந்த நூற்றாண்டினுடைய தனிப்பெரும் தமிழ்ச் சான்றோர்களான மறைமலை அடிகளும், உ.வே.சா.வும், வேங்கடசாமிநாட்டாரும், பசுமலை பாரதியும், மு.வ.வும், தேவநேயப்பாவாணரும், இலக்குவனார், ஔவை, இராசமாணிக்கனார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. என எண்ணற்ற இத்தகைய சால்புமிக்க சான்றோர்களும், கூடி வளர்த்த தமிழும் மூன்றுதான்; இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ்.

அடுத்து, இந்தப் பேரன்பர்களிடத்தில் அழுந்தமான பிடிப்புக் கொண்டிருந்த எழுத்துச் சீர்திருத்தம் தந்த, தந்தை பெரியார், முத்துத் தமிழ் காப்பே என் முதற்கடமை என முழங்கிய பேரறிஞர் அண்ணா, அந்த அண்ணாவின் இதயக் கனியாம் நம் இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய இந்த நூற்றாண்டின் எடுத்துக் காட்டான இந்தத் தலைவர்கள் கண்டதும், கேட்டதும், வளர்த்ததும் மூன்று தமிழ்தான்; இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ், மங்காத் தமிழ், சீரிளமை சிதையா திறன்மிகு தமிழ், முத்தமிழ்தான். இன்றைக்கு நான்காம் தமிழ். ஆமாம், பெரியவர்களே! அறிவியல் தமிழ்.

இந்த மாநாட்டின் மூலம் பெற்றுள்ளோமே அதைப் பெற்றெடுத்த தாய்தான் நம் தாய், மாணிக்கத் தாய், மாசறு மரகதத்தாய், மங்காப்புகழ் மிக்க புரட்சித் தாய், சிங்கநகர் தாய், தங்கத் தமிழகத்தை ஆளும் தமிழர் தாய், நம் மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்கள்.

ஈராயிரம் ஆண்டுகளாக இருந்துவந்த இந்த முத்தமிழ், இன்றைக்கு நான்காம் தமிழையும் தன்னோடு இணைத்துக் கொள்கிற சிறப்பைப் பெற்றிருக்கிற இந்தச் சிறப்பைத்தான் இந்த மாநாட்டின் மூலம் இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் நாட்டுக்கு வழங்கியிருக்கிறார்கள். நாளைக்கு இந்த மாநாட்டின் மூலம் நீங்கள் என்ன சாதித்தீர்கள் என்று எவரேனும் கேட்பார்களேயானால், நம்முடைய தோழர்கள் நெஞ்சுயர்த்திச் சொல்லலாம்- "நாங்கள் கண்டிருப்பது அறிவியல் தமிழ்" என்று ஆணித்தரமாகச் சொல்லக்கூடிய ஒரு சாதனையை, இந்த மாநாட்டின் மூலம் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் நமக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

இப்படி, ஈராயிரம் ஆண்டுகளாக



இல்லாத சிறப்பை இந்த மாநாடு, இன்றைக்குப் பெற்றிருக்கிறது என்பதுதான் இந்த எட்டாவது தமிழ் மாநாடு- எட்டாவது புகழை எட்டியிருக்கிறது என்பதற்குரிய எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு காலகாலமாக, இவ்வளவு புலவர்களும், இவ்வளவு தலைவர்களும் இருந்து செய்யமுடியாததை இன்றைககு மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள செய்கிறேன் என்று துணிந்து அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், எடுத்த காரியந்தைச்செய்து முடிப்பதில் வெற்றியைத் தவிர வேறொன்றைக் கண்டறியா அந்தத் தலைவியாலே முடியும் என்கிற காரணத்தினாலேதான், இன்றைக்கு இவ்வளவு பெரிய முயற்சியில் இந்த மாநாட்டில் நாம் ஈடுபட்டு இருக்கிறோம். இப்படி நான்காம் தமிழாக அறிவியல் தமிழை இன்றைக்கு வழங்கியிருப்பதோடு கூட, தாய்த் தமிழைக் காப்பதற்கு முன்நின்றவர்களை இந்த மாநாட்டின் மூலம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தொடங்கிய அன்றைக்கே சிறப்புச் செய்து, முத்துத் தமிழ் காப்பதிலே நான் முன்நிற்பேன் என்பதையும் அறிவித்திருக்கிறார்கள்.

'தீந்தமிழுக்கு ஒரு தீங்கு வந்த பின்னர், இந்தத் தேகம் இருந்து ஒரு லாபம் உண்டோ'? என முழங்கி அன்றைக்கு மொழிப் போராட்டத்தில் தங்களுடைய தேக்குமர தேகத்தைத் தீயிலே வைத்துக்கொண்டு சந்தனம் மணப்பது போல் எரிந்து செத்தார்களே- தீரன் சின்னசாமி, சிவலிங்கம், அரங்கநாதன், சத்தியமங்கலம் முத்து, கீரனூர் முத்து, ஆசிரியர் வீரப்பன், மாணவ மாவீரன் மாயவரம் சாரங்கபாணி, அண்ணாமலை நகர் இராசேந்திரன் - இந்தத் தியாக தீபங்களுடைய குடும்பங்களை அழைத்து - இப்போது மூன்றாவது தலைமுறைக்குக் கூட சில குடும்பங்கள் வந்துவிட்டார்கள், அந்தக் குடும்பங்களையும் இன்றைக்கு அழைத்து வைத்து, இந்த மாநாட்டின் மூலம் சிறப்புச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், இந்தத் தமிழ்க் காப்பில் முன்னணியிலே நான் நிற்பேன், தமிழ் மொழியைக் காப்பேன் என்கிற அந்தச் சூளுரையையும் இந்த மாநாட்டின் மூலம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறில்லை. அந்த அளவுக்கு, சிறப்புக்குரிய இந்த மாநாட்டின் மூலம் எண்ணற்ற சிறப்புகள் பலவற்றைச் சேர்த்திருக்கிற இந்தச் சீரிய பல முயற்சிகளுக்கிடையிலேதான், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் தமிழ் வளர்ச்சி ஒரு பணி, தமிழ்க் காப்பு இன்னொரு பணி என்கிற வகையில் இன்றைக்குத் தொடங்கியிருக்கிற இந்தத் தொடக்கம் நிச்சயம் வெற்றிபெறும்.

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு, இங்கே வருகை புரிந்திருக்கிற நம்முடைய மாண்புமிகு இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களுடைய நிறைவுரையோடு நிறைவு பெறவிருக்கிறது. எட்டாவது உலகத் தமிழ் மாநாடு முடிகிறது. ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாட்டை எங்கோ ஒரு நாட்டில் நடத்துவார்கள். ஆனால், அடுத்து என்றைக்கு உலகத் தமிழ் மாநாடு தமிழ்நாட்டில் நடைபெறவிருக்கிறதோ, அன்றைக்கும் - அந்த மாநாட்டையும், நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள்தான் நடத்துவார்கள் என்பதற்குரிய சாதனைதான் நான் சொன்ன அந்த நான்காம் தமிழான அறிவியல் தமிழையும் இந்த மாநாட்டின் மூலம் நமக்குப் பெற்றுக் கொடுத்திருக்கிற சாதனையாகும்.

இப்படிப்பட்ட சாதனைகளுக்கு மத்தியிலேதான், இன்றைக்கு வெள்ளம் போலத் திரண்டிருக்கிற இந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்து, "இங்குள்ள தமிழர்கள் ஒன்றாகக் கண்டு எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் என்று ஊது, ஊது சங்கே" என்று பாவேந்தன் பாரதிதாசனுடைய சங்கொலி முழக்கத்தை முழங்கவேண்டியிருக்கிறது.

அந்த வகையில் 'எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' என்ற நாதத்தை முழங்கி மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுடைய இந்த மகத்தான சாதனையைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றைக்கும் வாழ்த்தும், வணங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## இராமநாதபுரம் மாவட்டத்தில்

# காயிதெமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் நூற்றாண்டு விழா

இராமநாதபுரம் மாவட்டம் வெளிப்பட்டிணத்தில் 27.8.95 அன்று தமிழக அரசின் சார்பில் காயிதெமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் பிறந்தநாள் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் விழாத் தலைமை யேற்றார். மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வ. சத்தியமூர்த்தி அவர்கள் காயிதெமில்லத் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து விழாப் பேருரையாற்றினார். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர்மீரான் அவர்கள், காயிதெமில்லத் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்.

விழாவில், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சான்வத்ராம், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார். செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் விழாத் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

விழாவில், தமிழ்நாடு வக்ப் வாரியத் தலைவர் திரு முகமது ஆசிப், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் அனைத்திந்தியப் பொதுச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைவர் திரு ஏ.கே.ஏ. அப்துல் சமது, சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். சுந்தரராஜ், இராமநாதபுரம் மாவட்டத் திருக்கோயில் களின் நிர்வாக வாரியத் தலைவர் திரு எஸ். ராஜேந்திரன், பேராசிரியர் திரு கே.எம். காதர் மொகிதீன், திரு இசட் ஜபருல்லா, தமிழ்நாடு ஹஜ் கமிட்டி உறுப்பினர் திரு எஸ்.ஏ. சீனிக்சட்டி. ஆகியோர் வாழ்த்துரை வழங்கி னார்கள்.



விழாவில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசியதாவது:

"இந்த நாட்டுக்கு யார் பெருமை தந்தார்களோ, யார் மக்கள் மனதில் நிற்கிறார்களோ அவர்களைப் பெருமைப் படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தயங்கியதில்லை. மொழிப்பற்று, தேசப்பற்றுமிக்கவர் காயிதெமில்லத். இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு ஏற்பட்டபோது, அதைத் தடுக்க முதலில் நின்றவர் அவர். சீனப் போரின்போது தனது மகனைப் போருக்கு அனுப்பியவர். இந்தியாவின் ஆட்சிமொழியாகத் தமிழ்தான் இருக்க வேண்டும் என்று முழக்கமிட்டவர். கேரளாவில் முஸ்லீம் லீக் துணையுடன்தான் காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. அங்கே ஆளுபவர்கள் இவருக்கு விழா எடுப்பது பற்றி நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை. செங்கோட்டையில் இருப்பவர்கள் இவரை நினைத்துப் பார்க்கவில்லை. ஆனால், செயிண்ட்ஜார்ஜ் கோட்டையில் இருப்ப வர்தான் அவருக்கு விழா எடுத்து வருகிறார். இன்று மதவெறி தூண்டப் படுகிறது. ஓட்டு வாங்குவதற்காக மத உணர்வுகளைத் தூண்டக்கூடாது. ஒருவரின் ஜாதி பற்றிப் பேசக்கூடாது. அவர் என்ன சாதித்தார் என்பது பற்றித்தான் பேச வேண்டும்".

– விழாவில், காயிதெமில்லத் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வ. சத்தியமூர்த்தி அவர்கள் பேசியதாவது:

"இந்தியாவிலேயே மதக் கலவரம் இல்லாத மாநிலம் தமிழ்நாடுதான். அதற்குக் காரணம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருப்பதுதான். இங்கு சட்டம் ஒழுங்கு சீராக இருப்பதுதான் காரணம். அப்துல்சமது இன்று பாராட்டப் படுகிறார் என்று சொன்னால், அது காயிதெமில்லத் பாராட்டப்படுகிறார் என்றுதான் அர்த்தம்".

விழாவில், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் காயிதெமில்லத் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசியதாவது:

"புரட்சித்தலைவி அவர்கள் 'வக்ப்' வாரியத்திற்கு ரூ.70 இலட்சம் நிதி வழங்கினார். ஒவ்வொரு ஆண்டும் இந்த வாரியத்திற்காக ரூ.30 இலட்சம் நிதி வழங்க உத்தரவிட்டார். இதை இஸ்லாமிய சமுதாயம் உணர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். விண்ணப்பித்தவர்களுக்கெல்லாம் 'உலமா' பென்ஷன் வழங்க, புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டார். பென்ஷன் தொகை ரூ.250 ஆக இருந்ததை ரூ.400 ஆக உயர்த்தினார்".

– செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. கே.பி. நல்லதம்பி நன்றியுரையாற்றினார்.

### கலப்பு மணம்

☆ "கலப்பு மணம் காதல் வழியே கூடுகிறதென்பதற்கு விளக்கவுரை வேண்டுவதில்லை. காதல்-சாதி மதம், சில நாடு முதலிய கட்டுக்களைக் கடந்தது. ஒருவன் தனக்கு ஒத்த ஒருத்தியையும் அவ்வாறே ஒருத்தி தனக்குத் தக்க ஒருவனையும் தெரிந் தெடுக்கும் உரிமையுடையது கலப்பு மணம்".

–தமிழ்த்தென்றல் திரு.வி.க.

# சிதம்பரனார் மாவட்டத்தில் 'டோக்ரா' திட்டத்தின் மூலம் 200 மகளிர் குழுக்கள் : 2000 பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு நிதி உதவி செய்ய அரசு திட்டம்

**சி**தம்பரனார் மாவட்டத்தில் ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (டோக்ரா) கீழ் 200 மகளிர் குழுக்கள் அமைக்கப் பட்டு, அதன் மூலம் 2,000 பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்குத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அ. பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெண்களின் சம்பாதிக்கும் சக்தி உயர்வு பெற்றால், தானாகவே அந்தக் குடும்ப அங்கத்தினர்களின், குறிப்பாக குழந்தைகளின் உணவு, சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றில் சிறந்த முன்னேற்றம் அடைய வாய்ப்புண்டு என்று அரசு கருதி, பெண்களின் வாழ்க்கையில் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காக, ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (Development of Women and Children in Rural Areas) உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் கிராமத்தில் உள்ள பெண்களின் வருமானத்தைப் பெருக்கிடவும், அவர்களுக்குப் பல்வேறு விதமான தொழில்களில் பயிற்சிகள் அளிப்பதற்கு ஏதுவாக 10 பெண்கள் அடங்கிய ஒரு குழுவாக 200 மகளிர் குழுக்கள் நமது மாவட்டத்தில் உள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் குறைந்தது 15 மகளிர் குழுக்கள் அமைக்கப்பட உள்ளது. இதுவரை மாவட்டத்திலுள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களிலும் உடனடியாக 100 மகளிர் குழுக்கள் அமைப்பதற்கான ஆயத்தப் பணிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனத் திட்ட அலுவலரின் மூலமாக உதவித் திட்ட அலுவலர்கள், 'ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், முக்கிய சேவிகாக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**ஒருவனிடம் இருக்கும் ஊக்கமே அவனுடைய நிலையான உடைமையாகும்.**

**–திருவள்ளுவர்**

ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டமானது, தமிழ்நாட்டில் இதற்கு முன்பாக ஒருசில மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வந்தது. தற்பொழுது இத்திட்டமானது விரிவடைந்து தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இந்த ஆண்டு செயல்படுத்தப்படவுள்ளது.

'டோக்ரா' திட்டத்தின் கீழ் சிதம்பரனார் மாவட்டத்தில் முதற்கட்டமாக 30 குழுக்களை அமைப்பதற்கு ரூ.7.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் மகளிர் குழு ஒவ்வொன்றிற்கும் மத்திய, மாநில அரசுகள் சரிபாதி நிதி ஒதுக்கீடு செய்கின்றன. மேலும் 'யுனிசெப்' நிறுவனம் (ஐக்கிய நாடு சர்வதேசக் குழந்தைகள் மற்றும் கல்வி நிறுவன அமைப்பு) மத்திய அரசு ஒதுக்கிடும் நிதியில் 50 சதவிகிதத்தைக் - குழுக்களை அமைப்பதற்கு வழங்குகிறது. இதன்படி ஒவ்வொரு குழுவிற்கும் மத்திய, மாநில அரசுகள் தலா ரூ.10,000மும், 'யுனிசெப்' நிறுவனம் ரூ.5,000மும், ஆக மொத்தம் ரூ.25,000 ஒரு குழு அமைப்பதற்குச் சுழல் நிதியாக வழங்கப்படுகிறது. 10 பெண்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப் பட்டு, தங்களது பகுதியில் கிடைக்கப்பெறும் (தங்கள் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான) கச்சாப் பொருட்களை வாங்குவதற்கும், சில தொழில்களில் பயிறசி வழங்குவதற்கும் இந்தச்சுழல் நிதி பயன் படுத்தப்படும். இவ்வாறு அமைக்கப்படும் குழுக்களில் உள்ள பெண்களின் குழந்தைகளுக்கு அரசு, சமூகநலத்துறை மூலம் வழங்கிவரும் அனைத்து நல உதவிகளையும் பெறச் செய்யவும், குழந்தைகளைப் பராமரிக்கவும் இத்திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

நமது மாவட்டத்தில் பாய் முடைதல், பிரம்புக்கூடை முடைதல், பனை ஓலைப் பொருட்கள் செய்தல், தையல், கோழிப் பண்ணைகள் அமைத்தல் போன்ற 36 வகையான தொழில்கள் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. இந்த மகளிர் குழுக்கள் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள கிராமங்களில் அமைவதற்குத் தொண்டு நிறுவனங்கள் ஏற்பாடு செய்ய முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்நிறுவனங்களின் மூலம் அமைக்கப்படும் குழுக்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு, இக் குழுக்களில் உள்ள பெண் உறுப்பினர்களுக்கு வங்கிகள் மூலமாக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு வகையான தொழில்களைச் செய்வதற்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி பெற்றுத் தரப்படும். இவ்வாறு அமைக்கப்படும் மகளிர் குழுக்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்கள் மிக அதிக அளவில் சேர்த்துக் கொள்ளப் பட்டு, இவர்களின் பொருளாதார வாழ்க்கையை உயர்த்திட அரசு எண்ணியுள்ளது.

டோக்ரா திட்டத்தின் கீழ் இவ்வாறு அமைக்கப்படும் மகளிர் குழுக்கள் சிறப்பாகச் செயல்படும் பொழுது பெண்களின் பொருளாதார வாழ்க்கை முன்னேறுவதுடன், சார்பின்றி இயங்கவும், தன்னம்பிக்கையுடன் செயல்படவும் இத்திட்டம் வழி கோலுவதாக அமைகிறது. மகளிர் குழுக்கள் அமைப்பதற்குத் தேவையான அனைத்து விவரங்களையும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மூலமாகத் தெரிந்து, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்கள் இத்திட்டத்தில் மிக அதிக அளவில் சேர்ந்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**துரை. ராஜ்குமார்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
சிதம்பரனார் மாவட்டம்.

## அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை:**

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 21.8.95 அன்று டெல்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது, சென்னையில் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் தொடங்கி வைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நேரில் அழைப்பு விடுத்தார். முன்னதாக மாண்புமிகு துணைக் குடியரசுத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்களையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சந்தித்துப் பேசினார்.**

**நான்காம் அட்டை:**

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 24.8.95 அன்று தலைமைச் செயலகத்தில் அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள், காவல்துறை அதிகாரிகளின் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.**



# விருதுநகரில் பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாள் விழா

விருதுநகர் கே.வி.எஸ். நடுநிலைப் பள்ளி பழனிச்சாமி நாடார் கலையரங்கில், தமிழக அரசு சார்பில் பெருந்தலைவர் காமராசர் பிறந்த தின விழா 29.8.1995 அன்று மிகச் சிறப் பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு வந்திருந்தவர் களை, காமராசர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு வி. கனகராஜ், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் விளக்கவுரை யாற்றினார்.

மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை தாங்கினார். அப்போது அவர் பேசியதாவது:

"யார் யார் பெருமைக்கு உரியவர்களோ, யார் யார் இந்த மண்ணின் விடுதலைக்குப் பாடு பட்டார்களோ, அவர்களை எல்லாம் பாராட்ட, புரட்சித் தலைவி அரசு என்றும் தயங்கியது இல்லை என்பதற்கு இந்த விழா ஓர் எடுத்துக்காட்டு. பெருந்தலைவர் காமராசர் இந்த நாட்டிற்காக உழைத்தவர். ஏழை பங்காளராக இருந்து, ஏழை எளிய மக்களின் வாழ்க்கையை உயர்த்த பாடுபட்டவர்.

"அறிவுமிக்க சமுதாயம் உருவாக வேண்டும் என்று எண்ணிக் கல்விக் கண்ணைத் திறந்துவைத்த பெருமை காமராஜருக்கு உண்டு. அவர் மறைந்த பிறகும் இந்த நாட்டு மக்கள் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் அவர் சரித்திரம் படைத்தவர் என்பதால் தான்".

பெருந்தலைவர் காமராசர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசினார். அவர் பேசியதாவது:

"யார் யார் இந்த நாட்டிற்குப் புகழ் சேர்த்தார்களோ, யார் யார் இந்த நாட்டிற்குப் பாடுபட்டார் களோ அவர்கள் பிறந்தநாளைப் புரட்சித் தலைவர் அவர்களும், அவர் வழியில் வந்த புரட்சித் தலைவி அவர்களும் கொண் டாடிக் கொண்டு இருக் கிறார்கள். வாழ்ந்து காட்டிய பெரியவர்கள் வரலாறு, வாழ வேண்டும் என்று எண்ணுகிற இளைஞர்களுக்கு, மாணவர் களுக்கு எடுத்துக்காட்டாக அமையும்.

அதனால்தான் 32 பேர்களின் பிறந்தநாள் விழாவை அரசு கொண்டாடி வருகிறது. காமராசர் தங்கைக்கு மாதந் தோறும் ரூ.1,000 வழங்கிக் கொண்டிருந்தார் புரட்சித் தலைவி. காமராசரின் தங்கை பேரன்கள் வசதியற்று இருக் கிறோம் என்று சொன்னபோது, 4 பேருக்கு வீடும் தந்து, 7.50 இலட்சம் ரூபாயும் தந்து காப்பாற்றிய பெருமை புரட்சித் தலைவியையே சேரும்.

"நாட்டுக்கு உழைத்தவர் களுக்கு நன்றி செலுத்துகிற பண்பு, புரட்சித்தலைவிக்கு உண்டு. மொரார்ஜி தேசாயும், லால்பகதூர் சாஸ்திரியும், பிரதமர் பதவிக்குப் போட்டி யிட்டபோது சாதாரணமாக அந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்தவர் காமராசர். ஆனால் காமராசர் தனித் தனியாக எம்.பி.க்களைக் கூப் பிட்டு யாரை ஆதரிக்கிறீர்கள் என்று கேட்டு, லால்பகதூர் சாஸ்திரியைப் பிரதமர் என்று அறிவித்தார். அதேபோலத்தான் இந்திரா காந்தியையும் பிரதமர் ஆக்கினார். பெருந்தலைவர் காமராசருக்குப் பள்ளிப் படிப்புதான் குறைவு. ஆனால், அனுபவ அறிவு அதிகம். 6வது வரைதான் படித்தாரே தவிர, ஆங்கிலப் பத்திரிகைகளை எல்லாம் படிப்பார்.

"கொள்கை வெற்றி பெற வேண்டும், ஜனநாயகம் வாழ வேண்டும் என்று எளிமையாய் வாழ்ந்தவர் அவர். காமராசர் ஆடம்பரத்தை விரும்பாதவர். பகட்டை விரும்பாதவர். எதைப் பற்றியும் கவலைப்படாதவர், பெருந்தலைவர் காமராசர்."

விழாவில், சட்டமன்ற உறுப்பினர்கள், திரு சஞ்சய் ராமசாமி (விருதுநகர்), திரு கே. பாலகங்காதரன் (சிவகாசி), திருமதி வி.ஜி. மணிமேகலை (அருப்புக்கோட்டை), மாவட்டப் பால்வளத் தலைவர் திரு சு. சுந்தரபாண்டியன் ஆகியோர் பேசினார்கள்.

விழாவில், 131 பேர்களுக்கு ரூ.4.75 இலட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வழங் கினார்.

காமராசர் பிறந்தநாள் விழாப் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற விருதுநகர் கே.வி.எஸ். மேல்நிலைப் பள்ளி மாணவர், எம். முரளி, 2வது பரிசு பெற்ற அதே பள்ளியின் மாணவர் ஜே. பாலமுருகன், கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சத்திரிய மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவி ஏ. அமுதமொழி, 2-வது பரிசு பெற்ற சவுடாம்பிகா மேல்நிலைப் பள்ளி மாணவர் ஓய். கனகராஜ் ஆகியோர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். சிறுசேமிப்புக் குழுக்களில் பரிசு பெற்றவர் களுக்கு, மாருதி கார் போன்ற பரிசுப் பொருட்களையும் வழங்கினார்.

விழா முடிவில், மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு மு. பிச்சையா அவர்கள் நன்றி கூறினார்.




உரிமைகளை மட்டும் மனத்தில் வைத்துக் கொண்டு நம்முடைய கடமைகளை மறந்து விட்டால், அந்த உரிமைகளை நாம் என்றும் அடையமாட்டோம். கடமைகளைச் செய்து தீர்த் தோமானால் உரிமைகள் தாமே வந்து சேரும். கடமைகளைச் செய்யாமல், உரிமைகளை அடைய ஓடினோமானால் உரிமைகள், கொள்ளி வாய்ப் பிசாசைப் போல் நம் கைக்கு எட்டாமல் தூர மாகவே போய்க் கொண்டிருக்கும். நாம் ஓட ஓட அதுவும் கைக்கு எட்டாமல் முன்னால் ஓடும்.

—அண்ணல் காந்தியடிகள்

# புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

- கவிஞர் கலி. பூங்குன்றன்

## தமிழ்த்தாய் வாழ்த்து

தென்றலாம் தேன்குடத்தில்
தித்திப்பை எடுத்தவளே!
மன்றலாம் மலர்த்தோப்பில்
மயக்கும் தேன் குடித்தவளே!
சென்றதோர் இடமெல்லாம்
சீர்த்தி முடித்தவளே!
வந்தாரை வாழ வைத்து
வாதை மிக உற்றவளே!
சந்தனத் தமிழாலே
தன்மான வணக்கத்தை
நிந்தன் தாவாயில்
பூசிட எண்ணினேன்!
கையகலத் துணியோடு
காரிருள் மாதொருத்தி
வந்த வேகத்தில்
வாய்நாறச் சொன்னாளே!

என்பெயர் தான்புராணம்
தமிழின் ஞானமென்றாள்.
மன்னிக்க முடியாது,
மரியாதை உனக்கில்லை;
புண்ணிய பாவமென்று
பொய்க்கதை மிகச் சொல்லி
புண்ணாக்கிப் போட்டாயே
புத்தியின் சாளரத்தை!
கண்ணாம் ஒழுக்கத்தை
கழுவேற்றிக் கொன்றாயே!



முன்னால் நில்லாதே
மூண்டிடும் பெருந்தீ -
என்று சொல்லுமுன்
எங்கோ பறந்தாளே!
இராவணன்முன் நின்ற
சீதைபோல் இன்னொருத்தி
எல்லாம் புலப்பட
என்முன் நின்றாள்;
என்பெயர் இதிகாசம்
என்று ரைத்தாள்.
அன்னைத் தமிழுக்கு - இது
காச மென்றுரைத்தேன்
ஒண்ட வந்தவளே - எம்
குடியைக் கெடுத்தவளே!
எண்ணி நால்வருண
இருளால் கவிழ்த்தவளே!
மனுநீதிக் கொள்ளியாலே
மயானம் செய்தவளே!
என் தமிழ் அன்னையின்
வயிற்றைக் கிழித்தவளே
கன்னட மலையாளம்
களிதெலுங்கு அத்தனையும்
சண்டையிட வைத்து
சந்தில் மறைந்தவளே!
சதிகாரி நடைகட்டு,
கருமாதி நடக்குமுன்!
என் உதடு அசையுமுன்
எதிரில் அவளில்லை!
அன்னைத் தமிழை
எண்ணிடும் போதெல்லா

என்னை அறியாமல்
இரத்தக் கொதிப்பு!
இந்நேரம் இடியுடன்
எண்ணத்தில் மின்வெட்டு!
குவிந்துபோன தமிழ்நிலத்தை
கொள்கையின் புவியீர்ப்பால்
அவிழ்ந்து மலரச்செய்த
அய்யா பெரியாரின்
அறிவு மூலதனமாம்
அழியாப் பெரு நிதியும்
வியத்தகு கவிதை
வேழப் பிளிற்றாலே
உலுக்கி நம்தோளை
உரிமை பேசவைக்கும்
புரட்சிக் கவிவேந்தன்
பாடிய நூற்பாவும் - அடடே
அன்னைத் தமிழில்
ஆனை மிடுக்கு!
ஆயிரம் வணக்கம்
அருமைத் தமிழ்த்தாயே!

## பெரியார் வாழ்த்து

வெல்லும் வாளெடுத்து
வைதிகத்தின் விலாஎலும்பில்
கொல்லும் இடமறிந்து
குறி பார்த்து வீசி
வெல்லும் பகுத்தறிவை
வீடெலாம் ஏற்றிவைத்த
வெண்தாடி வேந்தருக்கு
வீரத்தின் நல்வணக்கம்!



## தலைவர் வாழ்த்து

வெண்தாடிப் பெரியாரின் சிந்தனை
வெள்ளாவி
வெளுப்பிலே சுடர்விடும் வெள்ளை
முடியோனே!
புரட்சிக் கவிஞனின் புலிப்பால் உண்டு
புலியின் நகத்தைத் தூரிகை யாக்கி
பூகம்பக் கவி வழங்கும் புலவனே
பகையின் வேரை யழிக்கும் மறவனே
பாவேந்தர் பிள்ளைத் தமிழெனும் முத்து
மாலையைத் தமிழுக்குத் தந்த முதல்வனே
மதுரையில் நடந்த தமிழ் மாநாட்டிலும்
மறக்குணம் காட்டிய மானச் சுடரே!
மரியாதை எங்களுக்கு! உன் தலைமையில்
மதுகவி பாடும் பேறு பெற்றோம்!

வணக்கம் புலமைப் பித்தரே!
வாழ்க தமிழ்வாழ! வானத்து நீளமாய்!

## அவை வணக்கம்

பச்சைத் தமிழர் அத்தனைப் பேரும்
பாரோர் போற்றும் பாவலர் மணிகள்
பாரதி தாசன் பரம்பரை வந்த
பாட்டுக் குயில்கள் கவரி மான்கள்!
கூழுக்குப் பாடிக் கவிதைப் பாலைப்
பாழுக்கு ஊற்றும் கூலிக எல்ல!
அடிதொறும் எதுகை மோனை தவறா
அடியார்காள்! அடியேன் அன்பு வணக்கம்!
தமிழரின் அறியாமை அடிமை ஆயுள்
தஞ்சைக் கோபுரம் போலே நெடிது!
தமிழரின் பழம்பெருமை என் பதெல்லாம்
தடிஎடுத்து சண்டை போட்ட தல்லால்
தலைநிமிர் கவுரவம் தனியே இல்லை
கோயிலைக் கட்டிய இராச ராசன்
கோலத் தமிழை வெளியே தள்ளி
ஆரிய வடமொழி ஆணவக் காரியை
அர்ச்சனை மொழியென ஆணை செய்தவன்!
வீதியில் நிற்கும் தகுதி உள்ளவன்
வெயிலும் அவனைக் காய்கின்றதே!
தமிழன் கட்டிய கோயிலுக் குள்ளே
தமிழனும் இல்லை தமிழும் இல்லை
தமிழர் வீதிப் பள்ளி களிலும்
தாயில்லாப் பிள்ளையாய் தமிழும் ஆனதே!
வேற்று நாடாய்த் தமிழகம் ஆனதோ?
வீதி எல்லாம் வேற்றுமொழி நாற்றம்!
தஞ்சைத் தமிழரே தரணிவாழ் தமிழரே!
தன்மான வணக்கம் தணலாய் எழுக!
சமூக நீதி காத்தவீ ராங்கனை
தமிழையும் காப்பார் என்றநம் பிக்கையில்
கூடி யிருப்பது மக்கள் அல்ல
கொள்கை அறிவிப்பின் எதிர்பார்ப்பு
வெள்ளம்!

நெல்மணக்கும் தஞ்சைத் தரணி தன்னில்
நெஞ்சக் கழனியில் தேன்மழை பாயும்
தமிழ்மா நாட்டு மகிழ்ச்சியில் குளித்து
மயிலா டுதுறைக் காரன் பாடுகின்றேன்
புரட்சிக் கவிஞன் பெருமை பாடிட
பெற்ற பேற்றினை எண்ணி மகிழ்கிறேன்.

## புரட்சிக்கவிஞன்

பெரியார் கொளுத்திய தன்மான வெளிச்சம்
பேசு மொழியெலாம் பகுத்தறிவு முழக்கம்!
இனமான கொள்கையின் எழுச்சி விளைச்சல்

எழுத்தும் செயலும் இணைந்த துணிச்சல்!
தோன்றி மறைந்த புலவர் தொகையில்
சாகாப் புலவன் சாதனை வகையில்
புரட்சிக் கவிஞன் ஒருவனே
புவியில் நிகராய்ப் புலவனும் எவனே?

கூர்மை கொண்ட எழுத்து
கொஞ்சம் ஏட்டில் பழுத்து!
நேர்மை விம்மும் கழுத்து
நெளியாது எதிரிமுன் படுத்து!
போருக் கழைக்கும் பார்வை
பைந்தமிழ் மயிலுக்குப் போர்வை!
யாருக்கும் அடங்கா சினம் - பெரி
யாருக்கு மட்டும் அடங்கும் குணம்!

தேர்போல் அழகுக் கவிதை
தீட்டும் இவனோ புதுவை!
வேர்போய்ப் பழுக்கும் பலாவும் - இவன்
கவிதைக்கு நாக்குத் துழாவும்!
சீருக்கு வைத்த சொல்லும்
சீறும்; செருமுகம் வெல்லும்!
பாரதி பாட்டும் ஓடும் - பாரதி
தாசன் பாட்டு முன்னே!

புரட்சி நெருப்பில் போட்டு முடிக்க
புரட்சிப் படையாம் கவிதை தந்தவன்!
சுரண்டல் அமைப்புச் சமூகச் சுருளினை
சுயமரி யாதைத் தத்துவப் போரால்
புரட்டி முடிக்க வந்ததோர் புலவன்
புரட்சிக் கவிஞன் பாரதி தாசன்!

பிறப்பில் பேதம் பேசும் உலகை
பெரியார் பார்த்த வெறியில் நோக்கி
புராணக் கவிதை சேனைகள் நடத்தி
எழுச்சிக் காவியப் பாசறை சமைத்தவன்!
மறவாக் கவியால் மக்கள் மத்தியில்
மாப்புகழ்க் குடித்தனம் நடத்தி வருபவன்
பரவாத் திசையெலாம் பாரதி தாசன்
பாக்கலம் செலுத்திப் பாடுவோம் புகழையே!

நெருப்புக் கவிதையால் நெடுநாள் குப்பை
நெடியில் பிறந்த கடவுள் மதங்களின்
தருக்கு வேர்களைச் சுட்டுப் பொசுக்கிய
தந்தை பெரியாரின் தத்துவப் புத்திரன்!
வெறுத்து மனிதனைக் கூறு பிரிக்கும்
வேத மதத்தினை வேட்டுக் கவிதையால்
நொறுக்கித் தள்ளிய நூதனச் சூரியன்
பெரியார் ஒளியை வாங்கிய சந்திரன்!





பெண்ணை அடிமைச் சந்தையில் விற்கும்
பேத மதத்தினை மோதி மிதித்த
வெண்தாடிப் பெரியார் வீரக் கரத்தினில்
வெற்றியாய்ச் சிரிக்கும் வேகப் போர்வாள்!
தன்னலம் கொழுத்துப் பிறர்நலம் சுரண்டும்
திமிங்கல மனிதரைத் தேடி யழிக்கும்
மன்பதைப் பெரியார் மகத்துவம் உணர்ந்த
மண்ணின் மைந்தன் மாபெரும் கவிஞன்!

புரட்சிக் கவிஞன் புதுமைப் பாவலன்
புரட்டுகள் அறியாப் பச்சைப் பாலகன்!
திரண்டு மிளிர்ந்த மீசைக் காரன்
திராவிடம் மீட்கும் ஆசைக்காரன்!
வரவை நினைத்துப் பாட மாட்டான்
வயிற்றுக்குக் கவிதையை விற்க மாட்டான்!
படுத்தாலும் யானை குதிரை உயரம்
பாரினில் இவனோ கவிதைச் சிகரம்!

படிந்து போகும் கவிஞனல்ல
பாய்ந்து சீறும் படையின் பெருக்கம்!
படிந்து போன பழமை மிருட்டை
பறக்கச் செய்த பாட்டுச் சூரியன்!

இடிந்து போன இனத்தின் மானம்
எடுத்துக் கட்ட வந்த ஏந்தல்!
மடிந்து போன இலக்கிய வானை
மலர்ச்சிக் கவியால் புதுக்கிய வீணை!

பெரியார் கருத்துக் கருவில் வெடித்து
புரட்சிக் கவியாய்ப் பொங்கி வந்தவன்!
பெரியார் வாயின் அசைவுக் குறிப்பை
பெரிதாய் உணர்ந்து இலக்கியம் படைத்தவன்!
சரியாய் இலக்குக் குறியை வைத்து
சாதியைச் சாய்த்திடும் சண்ட மாருதம்
வரியாம் புலிகளின் நகத்தினைச் சீவி
வைதிகம் கிழித்திடும் நாத்திக வைரம்!
புரட்சிக் கவிஞன் பாரதிதாசன்
புதிய உலகின் பொன்னே ருழவன்!
கரவு அறியாக் கால மேகம்
கவிதை விளைச்சலில் கருத்துமுப் போகம்!
வரவு வறுமைப் பரிசென் றாலும்
வணங்காக் கொள்கையின் வெற்றி முரசம்!
பகுத்தறிவு மன்றத்தில் உலகமென்ற
பழயமுத லாளியினை நிற்க வைத்து
வெடிகுண்டு வினாக்களை வீசித் தள்ளி
வேரோடு பழமைதனை சாய்த்த வீரன்
மாந்தோப்புக் குளிரிலே காதல் பாட்டு
மாபழியாம் சாதிக்கோ அங்கே வேட்டு!
இருட்டறை யில் உள்ளதடா உலகம்
இருக்க லாமா சாதிக் கலகம்?
வினாவில் நெளிவது வார்த்தை யல்ல;
வெடிமருந்துப் பட்டறையின்வேட்டுச் சத்தம்!

எல்லார்க்கும் எல்லாம் என்ப தான
இலட்சியம் காட்டும் 'பாண்டியன் பரிசு'
வடக்குச் சழக்கை வட்டி முதலாய்
அடக்கி முடிக்கும் 'தமிழச்சியின் கத்தி'!
தெய்வ மொழிஎனத் தேரில் மிதக்கும்
தீங்கை முறிக்க தடந்தோள் தூக்கும்
தன்மான காவியம் 'தமிழி யக்கம்'
தமிழர்க்குக் கிடைத்த பெருமி லக்கம்!

விதவைப் பெண்ணின் இளமைக் கோரிக்கை
விண்ணப்ப மல்ல உரிமைப் பேரிகை!
அடிவ யிற்றா லன்றோ கத்தினான்
அடடே! அதுவன்றோ மனித நேயம்!
காதலுக்கு வழிவகுத்துக் கருப்பாதை சாத்தும்
கவிஞனின் வரிகள் காலத்தின் குறிகள்!
விஞ்ஞானக் கண்கள் விரலில் முளைத்தவன்
வெகுதூரப் பார்வையால் மானுடம்
கணித்தவன்!

அள்ளி யணைக்கும் 'அழகின் சிரிப்பு'
அரிமா வாக்கும் 'இளைஞர் இலக்கியம்'
நாட்டைக் கவரும் 'நல்ல தீர்ப்பு'
நால்வகை கூறும் பன்மணித் திரள்
மூட நோயை முற்றிலும் போக்கும்
மூலிகை பூக்கும் 'சஞ்சீவி பர்வதம்'
'புரட்சிக் கவிஞன்' படைப்பு களெல்லாம்
புதுமைக்கு அழைப்பு பழமைக்குச் சீட்டு!

பெரியார் கவிதை எழுத வில்லையா?
புரட்சிக் கவிஞன் எழுதிய தென்ன?
பெரியார் பேச்சின் கவிதைப் பதிப்பு
படிப்போம் நாளும் பாட வகுப்பு!
நெஞ்சில் தேக்கி நிமிர்ந்து நடப்பின்
நிமிட முடியுமுன் விடுதலை நமக்கே!
இருபதாம் நூற்றாண் டென்ன - இவன்

எண்ணமும் எழுத்தும் எந்நூற் றாண்டும்!
இனிப்பைத் தின்னும் நாக்குக்கு - பின்
இன்சுவை உண்டாலும் இனிப்பு அளிக்காது!
புரட்சிக் கவிஞனின் புதுசுவைப் பாடல்
கொம்புத் தேனைச் சுவைக்கும் நாக்கு
மற்ற கவிஞர் மதுவில் தோய்த்து
மடித்துத் தந்தாலும் சுவைப்ப தில்லை;
சர்க்கரை நோயாளி களுக்கு எச்சரிக்கை!

பாவேந்தர் பாடலை அளந்து உண்க!
இறக்கி வைத்த மூலிகைச் சாறு
இறக்கும் தமிழர் பிழைக்கு மாறு
இரத்தம் சுண்டும் சிந்தனை யோடு
இராப்பகல் வடித்த இலக்கியச் சோறு!
உண்பாய் தமிழனே உண்பாய் - இன்றேல்
வீழ்ச்சி ஆசையை உறுதி செய்வாய்!
பழம்பழம் பெருமையைப் பேசிப் பேசி

பாழ்பட்டுப் போனது நாக்குத் தண்டும்!
விழுந்த இடத்தில் மீண்டும் விழாதே
விழி எழு! வீசி நடந்து பழகு!
புரட்சிக் கவிஞன் வார்த்தை யல்ல!
புறப்படும் தடமும் அவன்! போய்ச் சேரும்
புத்துலக இடமும் அவனே!

(தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது 2.1.1995 அன்று நடைபெற்ற கவியரங்கில் பாடிய கவிதை)

# இராஜா ரவிவர்மா தீட்டிய சர்.டி. முத்துசாமி ஐயரின் ஓவியம் பாதுகாப்பு

**டாக்டர் வே. ஜெயராஜ்**
**வேதிய பாதுகாப்புக் காப்பாட்சியர்,**
**அரசு அருங்காட்சியகம், சென்னை.**

இந்தியாவின் முதல் இந்திய நீதிபதியாகச் சென்னை உயர்நீதிமன்றத்தில் பணியாற்றிய சர்.டி. முத்துசாமி ஐயர், தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவாரூருக்கு அருகில் உச்சுவாடி என்ற கிராமத்தில் 28.1.1832இல் பிறந்தார். ஏழ்மை நிலை காரணமாக அவரால் படிப்பைத் தொடரமுடியவில்லை. மாதம் ஒரு ரூபாய் சம்பளத்தில் ஒரு கர்ணத்திடம் பணியாற்றினார். அவரது திறமையை வியந்த திரு. முத்துசாமி நாயக்கர் என்ற வட்டாட்சியர் அவர் படிக்க உதவி புரிந்தார். பல்வேறு துறைகளில் பணியாற்றிய இவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தற்காலிகத் தலைமை நீதிபதியாகவும் பணியாற்றினார். 25.1.1895இல் உயிர்நீத்தார்.

தெருவிளக்கில் படித்து முன்னேறிய மாமேதை என்று இவரை அழைக்கிறோம். இவரது சிறந்த பணியைப் பாராட்டி இவருக்கு 'நைட்' என்ற பட்டத்தை அளித்தனர், இந்தியாவில் ஆண்ட ஆங்கிலேயர்கள். இங்கிலாந்திலேயே இவரது பளிங்கு உருவச்சிலையைச் செய்து கொண்டுவந்து அதனை, சென்னை உயர்நீதிமன்றத்தில் அமைத்தனர். இன்றும் அந்தச் சிலையைக் காணலாம்.

## சர்.டி. முத்துசாமி ஐயரும் இராஜா ரவிவர்மாவும்

1885-இல் சர்.டி. முத்துசாமி ஐயர் உயர்நீதிமன்ற நீதிபதியாக உயர்வு பெற்றார். கேரள மாநிலத்திலுள்ள கீழ்மானூரில் 1848ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் நாள் பிறந்த இராஜா ரவிவர்மா சிறந்த உருவ வரைவுக்கலைஞராக விளங்கி அவரது தனிப்பாணியில் ஏராளமான சிறந்த மேதைகளையும் அரசர்களையும் ஓவியங்களாக உருவாக்கிக் கொண்டிருந்தார். 38 வயது நிரம்பிய இவர், 1886-இல் சர்.டி. முத்துசாமி ஐயரின் ஓவியத்தை வரைந்துள்ளார். துணியில் செய்யப்பட்ட இந்த ஓவியம் மரச்சட்டம் பொருத்தப்பட்டுக் கிழிந்த நிலையில் சென்னையிலுள்ள சர்.டி. முத்துசாமி ஐயரின் பேரன் திரு டி.எஸ்.முத்துசாமியிடம் இருந்தது. அவர் அந்த ஓவியத்தை அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்க விருப்பம் தெரிவித்ததால் அந்த ஓவியம் அருங்காட்சியக வேதிய பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகத்தில் பெறப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## ஓவிய அமைப்பு

இவ்வோவியம், துணியில் எண்ணெய் வர்ணத்தால் தீட்டப்பட்டு அலங்காரச் சட்டத்தில் பொருத்தப்பட்ட 44 x 34 அளவுள்ளது. இதில் சர்.டி. முத்துசாமி ஐயர் உட்கார்ந்த நிலையில் தீட்டப்பட்டிருக்கிறது. இடுப்பில் வேட்டியும், உடலில் கோட்டும் அணிந்துள்ளார். தலையில் தலைப்பாகை, கழுத்தில் இரண்டாக மடிக்கப்பட்ட அங்கவஸ்திரம், கழுத்தில் விக்டோரியா உருவம் பொறிக்கப்பட்ட பதக்கமும், கோட்டில் ஒரு பதக்கமும் காணப்படுகின்றன. நாற்காலியில் உட்கார்ந்துள்ள அவரது வலதுகை, ஓவல் வடிவப் பளிங்கு மேசையின்மேல் தாங்கலாக வைக்கப்பட்டுள்ளது.



பாதுகாக்கப்படுமுன் ஓவியத்தின் தோற்றம்

இந்த ஓவியம் வரைந்து ஏறத்தாழ நூறு ஆண்டுகளாகிவிட்டபடியால் ஓவியத்தில் பூசப்பட்ட வார்னிஷ் செம்பழுப்பாக மாறி ஓவிய நுணுக்கங்களை மறைத்திருந்தன. இந்த ஓவியம் ஏற்கெனவே இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது மக்கள் தங்களைப் பாதுகாக்க சென்னையை விட்டு வெளியேறியபோது விழுந்து கிழிந்துவிட்டதாகவும் அது திரு இராமையா ராஜு என்ற ஒரு புகைப்படக்காரரால் செப்பனிடப்பட்டது என்பதும் தெரிகிறது. செப்பனிட்ட ஓவியர், தான் செப்பனிட்ட பின் வர்ணம் தீட்டியது தெரியாமலிருக்க அங்கவஸ்திரத்தை முற்றிலுமாக மாற்றி வர்ணம் தீட்டிவிட்டார், 1969-இல்; அதன்பின், கிழிந்த பகுதிகள் செய்தித்தாட்களைக் கொண்டு ஒட்டப்பட்டது என்பது, ஒட்டப்பட்ட காகிதத்தில் காணப்பட்ட தேதியிலிருந்து தெளிவாகிறது. வலதுகைப் பகுதியில் ஏற்பட்ட கிழிவை ஒட்ட ஒரு ஓவியம் வரையப்பட்ட துணிப்பகுதி வஜ்ஜிரம் கொண்டு

பாதுகாக்கப்பட்டபின் ஓவியத்தின் தோற்றம்



பின்பகுதியில் ஒட்டப்பட்டிருந்தது.

### பாதுகாப்புப் பணிகள்: தேவையற்றவை அகற்றப்படுதல்

ஏற்கெனவே கிழிந்த பகுதியில் ஒட்டப்பட்டிருந்த துணி நார் நாராகக் கிழித்து எடுக்கப்பட்டது. வஜ்ஜிரம் பட்டு திடமாக ஒட்டி இருந்ததால் சிறிது சிறிதாகத் தேய்த்து எடுக்கப்பட்டது. செம்பழுப்பு நிறமாக நிறமாறிய வார்னிஷ் (பென்சீன்) கரைப்பான் தோய்ந்த பஞ்சினால் கவனமாகத் தேய்த்து எடுக்கப்பட்டது. அங்கவஸ்திரப் பகுதியில் செப்பனிடும்போது வரைந்த பகுதியும் பென்சீன் உதவியால் அகற்றப்பட்டது.

### ஓவியம் செப்பனிடுதல்

ஓவியத்தில் தீட்டப்பட்டிருந்த வர்ணங்கள் சிதைந்துவிடாமலிருக்க மெல்விய அமிலமில்லா காகிதம் கொண்டு மைதா பசையினால் காற்றுக்குமிழிகள் இல்லாமல் ஒட்டி உலர்த்தப்பட்டது. ஓவியம் தீட்டப்பட்ட துணியினை ஒத்த துணி கண்டறியப்பட்டு நீரில் பலமுறை ஊற்வைத்தும் உலர்த்தியும் பாடம் செய்யப்பட்டது. சுருக்கங்கள் நீக்கிய பின் ஓவிய அளவிலும் சற்றுப் பெரிதாக வெட்டி அதன்மீது மேஸ்டிக் ரெசின் தேன் மெழுகு கலவை (1:4) உருகிய நிலையில் பூசப்பட்டது. அதுபோன்று அழுக்கு நீக்கிய பின், ஓவியத்தின்





**முன்னேற்றம் அடைவதற்கு முதலில் தன்னம்பிக்கையும், அடுத்தபடியாக இறைவன் மீது நம்பிக்கையும் வேண்டும்.**

பின்பகுதியிலும் உருகிய மெழுகு ரெசின் கலவை பூசப்பட்டது. மெழுகு ரெசின் கலவை பூசப்பட்ட ஓவியத்தின் பின்புறம் புதிய துணியின் மெழுகு ரெசின் கலவை பூசப்பட்ட பகுதி சரியாக ஒன்றோடு ஒன்று ஒட்டும் விதம் வைக்கப்பட்டது. சுமார் 70-90° செ.கி. வரை சூடாக்கப்பட்ட துணி தேய்க்கும் இரும்புப் பெட்டியால் வழவழப்பான காகிதம் வைக்கப்பட்ட புதிய துணியின் மீது நடுப்பகுதியிலிருந்து ஓரமாகத் தேய்த்து உருகிய அதிகப்படியான மெழுகு ரெசின் கலவை சீராக்கப்பட்டு எஞ்சியவை அகற்றப்பட்டது. உடனே ஓவியத்தின் மீது ஓவிய அளவிற்கேற்ற ஒரு கண்ணாடி வைக்கப்பட்டு, நன்கு ஒட்டும்படி அழுத்தப்பட்டது. சில மணி நேரம் கழித்து கண்ணாடி அகற்றி வழவழப்பான காகிதம் அகற்றப்பட்டது. பழைய துணியும் புதிய துணியும் ஒட்டி ஓவியத்திற்குப் புதிய பலனளித்தது.

இம்முறையில் ஒட்டியமையால் பழைய துணியின் கடினத் தன்மை நீங்கி மெதுவானது. மேலும், பின்னர் இதைவிடச் சிறந்த முறை கண்டுபிடிக்கப்படின் அதனைப் பயன்படுத்த வாய்ப்பளிக்கும் வண்ணம் மிக எளிதாக ஒட்டிய துணியைச் சூடாக்கி எடுத்துவிடலாம். முற்பகுதியில் ஒட்டப்பட்ட மெல்லிய காகிதத்தை ஈரப்படுத்தி நகத்தின் உதவியால் அகற்றப்பட்டது. முற்பகுதிக்கு ஊடுருவியிருந்த மெழுகு-ரெசின் கலவையும் பசையும் பென்சீன் கொண்டு அகற்றப்பட்டன.

### புதுப்பித்தல்

கிழிந்த பகுதிகள் துத்தநாக ஆக்ஸைடு மற்றும் பருத்தி எண்ணெய்ப் பசையால் நிரப்பப்பட்டு உலர வைக்கப்பட்டன. பின்னர் தகுந்த எண்ணெய் வர்ணம் பூசப்பட்டது. வர்ணம் உலர்ந்த பின், ஓவியத்தின் மீது கண்ணாடி படாத வண்ணம் கண்ணாடி பொருத்தப்பட்டது. ஓவியத்தின் பின் தூசு, மற்றும் பூச்சிகள் செல்லாதவாறு மரத்தகடு பொருத்தப்பட்டது.

### ஓவியம் அன்பளிப்பு

சிறந்த ஓவியரின் படைப்பாகிய இந்த ஓவியத்தை அருங்காட்சியகத்தில் பலரும் கண்டுகளிக்கும் நோக்குடனும் பல்லாண்டுகளுக்குப் பாதுகாக்கும் எண்ணத்துடனும் சர்.டி.எஸ். முத்துசாமி ஐயரின் பேரன் திரு டி.எஸ். முத்துசாமி, சென்னை அருங்காட்சியகத்திற்கு அளித்துள்ளார். அருங்காட்சியக வாரத் தொடக்கவிழாவில் 7.3.95 அன்று, டி.எஸ். முத்துசாமி ஐயர் அவர்கள், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் கே. பொன்னுசாமி அவர்களிடம் அளித்தார். இன்றைய நாளில் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் பெருமளவில் ஓவியங்கள் அருங்காட்சியகங்களுக்கு அன்பளிப்பாக அளிக்கப்படுகின்றன.

இந்தியாவிலும் பலர் தங்களது அரும்பொருட்களை அருங்காட்சியகங்களில் பாதுகாக்க முன்வந்திருப்பது பாராட்டுவதற்குரியது. திரு. டி.எஸ். முத்துசாமி தனது அன்பளிப்பால், அவரது பெயரை அன்பளிப்பாளர் பட்டியலில் பொறித்துவிட்டதோடு அல்லாமல், சென்னை அருங்காட்சியகத்தில் இரவிவர்மாவின் படைப்பில் ஒன்றை அதிகரித்துள்ளார்.

பெயர் பெற்ற ஓவியரால் தீட்டப்பட்ட சிறந்த மேதையின் ஓவியம், திறம் படைத்த பாதுகாப்பு ஆய்வகத்தால் பாதுகாக்கப்பட்ட பின், சென்னை அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்க்கப் பாதுகாப்பது நமக்குப் பெருமையன்றோ!



## உவமைக் கவிஞருக்கு இராஜராஜன் விருது

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம் "மாமன்னன் இராஜராஜன்" பெயரில் வழங்கும் படைப்பிலக்கியப் பரிசு இந்த ஆண்டு உவமைக் கவிஞர் சுரதா அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில் பரிசுத் தொகை ஒரு இலட்சம் ரூபாயும், பாராட்டிதழ் ஒன்றும் அடங்கும்.

18.8.95 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் "மாமன்னன் இராஜராஜன்" படைப்பிலக்கியப் பரிசினைக் கவிஞர் சுரதா அவர்களுக்கு, வழங்கி, தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கவிஞர் சுரதா அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, பரிசுத் தொகை ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையையும், வழங்கி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கியுள்ள பாராட்டு நற்சான்றிதழ்களையும் நேரில் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு கே. பொன்னுசாமி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஔவை நடராசன், தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறைச் செயலாளர் திரு ஆர். கிறிஸ்துதாஸ்காந்தி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் டாக்டர் பி. அப்துல்ரஸாக் ஆகியோர் உடன் இருந்தார்கள்.

# 21-ஆம் நூற்றாண்டும் கலைகளும்!

–திரு கணபதி ஸ்தபதி

**நா**ம் முத்தமிழைப் பற்றி அடிக்கடி பெருமையாகப் பேசி வருகிறோம். இதில் எனக்குக் கொஞ்சம் கோபமும், கவலையும் உண்டு.

ஐந்தமிழ் என்று சொல்லக் கூடாதா? என்ன தப்பாம்? இப்படி நான் பல்கலைக்கழகத்தினுடைய முன்னாள் துணை வேந்தர் திரு வி.ஐ. சுப்பிரமணியம் அவர்களையே கேட்டேன்.

ஒரு 'கீ நோட் அட்ரஸ்' கொடுப்பதற்காக என்னைக் கூப்பிட்டிருந்தார்கள். மேடையிலே அருகருகிலே உட்கார்ந்து கொண்டிருந்தோம். அப்போது, 'என்ன ஐயா! மூன்று தமிழையும் முத்தமிழ் என்று சொல்லுகிறோமே? கட்டடத் தமிழ் என்று ஒன்றிருக்கிறதே- அதன்பிறகு, சிற்பத் தமிழ் என்று ஒன்றிருக்கிறதே- ஐந்தமிழ் என்று சொல்லக் கூடாதா?' என்றெல்லாம் கேட்டேன்.

அவர்கள் சொன்னார்கள்-'நீ சிற்பச் செந்நூல் எழுதிவிட்டாய்; ஆகையினால், நான்காவது தமிழ் என்று சொல்லலாம்; ஐந்தாவது ஒன்றும் இல்லையே!' என்று சொன்னார்கள். நான் சொன்னேன் 'என் தமிழ், வேறு தமிழ்; காதால் கேட்கக்கூடிய தமிழ் அல்ல; கண்ணால் பார்க்கக் கூடிய தமிழ்!' என்று சொன்னேன்.

எத்தனைக் கட்டடங்களை, எத்தனைக் கோயில்களை, எத்தனைச் சிற்பங்களையெல்லாம் உண்டாக்கியிருக்கிறோம். அவையெல்லாம் என்னவாம்? ஆக, காதால் கேட்கக்கூடிய கலைகள், கண்ணால் பார்க்கக்கூடிய கலைகள் என்று பார்க்கும் போது, இந்த முத்தமிழ் காதுதான் - ஆனால், கண்ணாக- கண்கொண்டு பார்க்கக்கூடிய கலையாக இருக்கக்கூடியவை, கட்டடங்களும் சிற்பங்களும்தான். ஆகையினாலே, இந்த ஐந்து கலைகளுமே உணர்வை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுவதனாலே, உணர்வை மூலமாகக் கொண்டு இருப்பதனாலே, இவற்றையெல்லாம் ஐங்கலைகள் என்று சொல்ல வேண்டும். அப்பேர்ப்பட்ட ஒரு ஏற்றத்தைக் கொடுக்கவேண்டும்.

---

**நல்ல குடும்பம் என்பது, வரவுக்கு மிஞ்சி செலவு செய்யாமல் இருப்பதாகும். தமது வாழ்க்கைச் செலவை வரவுக்கு உட்பட்டே அமைத்துக் கொள்ளவேண்டும். இப்படிப் பட்ட குடும்பந்தான் கண்ணியமான குடும்பம்.**

**–தந்தை பெரியார்**

---

அது எது? இந்த 21-வது நூற்றாண்டு என்பதை நான் மிகப் பணிவன்போடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் கொஞ்சம் சமஸ்கிருதம் படித்திருக்கிறேன். கொஞ்சம் சமஸ்கிருதத்திலே ஏதாவது சொன்னால், கோபித்துக் கொள்ளதீர்கள்.

சமஸ்கிருதத்தைப் பொறுத்த வரைக்கும், 'தி இண்டியன் இங்கிலீஷ்' என்று ஒன்றிருக்கிறதே பார்த்தீர்களா, அதே மாதிரி, 'ட்ராவிடியன் சான்ஸ்கிரிட்' என்று ஒன்று உண்டு. இது ரொம்பப் பேருக்குத் தெரியாது. ரொம்ப வருத்தப்படுகிறேன். ஆகையினால், 'ட்ராவிடியன் சான்ஸ்கிரிட்'லேயிருந்து சில சுலோகங்களை 'க்வோட்' செய்வேன்; மன்னித்து விடுங்கள்.

வேதம் இருக்கிறதே, அதற்கு ஒரு பெயர் தனிப் பெயர் உண்டு. சிற்பிகளாகிய நாங்கள் ஒரு வேதம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கும் ஒரு தனிப் பெயர் உண்டு. இவை இரண்டும் என்ன என்பதை ஒரு உபநிடத வாக்கியத்தை உங்களிடம் சொல்லி, நான் விளங்கவைப்பேன்.



கடவுள் ஒருவர்தான் என்று சொல்கிறோம். உலகத்தில் எல்லோருமே, அதில் ஒன்று. வேறுபாடே கிடையாது. ஆனால், உபநிடதம் என்ன சொல்கிறது? கடவுள் இரண்டு, பிரமன் இரண்டு, என்று ஒரு உபநிடதம் சொல்கிறது.

எல்லோருமே என்ன செய்தோம்? என்ன இது, இரண்டு என்று சொல்கிறதே, அது தப்பாக இருக்கிறதே என்று சொல்லி, அதை ஒதுக்கி வைத்து விட்டார்கள்.

கடவுள் ஒன்று என்று சொன்னால், அது எல்லோருமே ஏற்றுக் கொள்ளக்கூடிய மிகப் பெரிய ஒரு கருத்து. ஆனால், இரண்டு என்று சொன்னால், எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் என்று ஒதுக்கியே வைத்துவிட்டார்கள். பல நூற்றாண்டுகளாக அந்தச் சுலோகமானது, அந்தப் பாடலானது வெளிவரவேயில்லை.

"த்வே பிரம்மனே வேதி தவ்வே". 'த்வே' என்றால் இரண்டு. 'பிரமன்' என்றால் பிரமங்கள். 'வேதிதவ்வே' என்றால் புரிந்துகொள்ள வேண்டும். Brahmam of two types - பிரம்மம் என்று சொல்லக் கூடியவை இரண்டாக இருக்கின்றன.

'த்வே பிரம்மனே வேதி தவ்வே, சப்த பிரம்ம பரஞ் செயது'.

ஒன்றுக்கு 'சப்த பிரம்மன்' என்று பெயர்; இன்னொன்றுக்குப் 'பரப் பிரம்மம்' என்று பெயர். அப்படியென்றால், சப்த பிரம்மத்திற்கு மேலே பரப் பிரம்மம் இருக்கிறது.

'சப்த பிரம்மனு விஷ்நாதஹா'- எவன் ஒருவனுக்குச் சப்த பிரம்மம் புரிகின்றதோ, அவனுக்குத்தான் பரப் பிரம்மம் 'அதிகட்சதே' பரப் பிரம்மமானது புரியும் என்று சொல்லுகிறார்கள்; கொஞ்சம் 'சிம்பிள்' ஆகச் சொல்கிறேன். சொல் எல்லாம் சப்த பிரம்மம் வகையைச் சேர்ந்ததல்லவா? ஆக, கண்ணால் பார்க்கக்கூடிய அடர்த்தி மிகுந்த Material or Physical Object என்று இருக்கிறதே, அவற்றிற்கெல்லாம் இன்னொரு பெயர் உண்டு. அதற்கு 'அர்த்தம் பிரம்மம்' என்று பெயர்.

---

**அற்புதக் கயிறு:**

**'ஆணையும் பெண்ணையும், கணவனையும் மனைவியையும், ஒரு உயிரையும் மற்றொரு உயிரையும், என்றென்றும் பிரியாதபடி பிணைத்து வைக்கும் அற்புதக் கயிறே அன்பு'.. – இங்கர்சால்**

---

சொல்லும் பொருளும் வேறுவகையே கிடையாது. ஆக, ஒரு பிரம்மமானது, சொல்மயமாகவும், இன்னொரு பிரம்மமானது, பொருள்மயமாகவும் இருக்கிறது. இரண்டும் ஒன்றுதான். சொல்லும் பொருளும் ஒன்று. ஆக சொல்லினுடைய பொருள் தெரியுமானால், அந்தப் பொருள் தெரிந்தவன் தான் பரப்பிரம்மத்தை அடைய முடியும், புரிந்துகொள்ள முடியும்.

இந்த இரண்டு இருக்கிறது பார்த்தீர்களா, அதிலே இயல், இசை, நாடகம் என்று சொல்லக் கூடிய அத்தனையும் சேர்ந்து சப்த பிரம்மமாகப் போய் விட்டது. ஆக, காதால் கேட்கக் கூடிய கலைகள், அதையும்விட மேலான ஒரு பொருளைப் பற்றித்தான் பாடுகின்றன; பேசுகின்றன. இந்த அர்த்த பிரம்மம் இருக்கின்றதே, பொருள் பிரம்மம், அதுதான் Architecture and Culture,கட்டடமும், சிற்பமும். கட்டடம் எல்லாம் சாதாரணமான பொருள் அல்ல.

கட்டடமும் வழிபாட்டிற்குரிய ஒரு பொருளாக இருப்பதையெல்லாம் நான் ஆராய்ச்சி மூலமாகக் கண்டு, இப்போது உலகம் பூராவும் பரப்பிக் கொண்டிருக்கிறேன். ஆக, இந்தப் பிரம்மம் ஆனது, இரண்டு என்று சொல்லும் போது, சொல் வகையைச் சார்ந்தது; பொருள் வகையைச் சார்ந்தது என்று சொல்லும் போது, இந்த இரண்டும், அந்த மூன்றும் ஐந்து.

இந்த ஐந்தும் சேர்ந்து ஒன்றைத்தான் கூறுகின்றன என்ற பொருளிலே பார்க்கும் போது, உண்மையிலேயே என்னுடைய தாபம் உண்மையானது என்று நீங்கள் கருதுவீர்கள் என்று நினைக்கிறேன்.

ஆகையினால், இனிமேல்

முத்தமிழ் என்பதை விடுத்து, ஐந்தமிழ் என்று சொன்னால் ரொம்பப் பெருமைப்படுவேன் என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தஞ்சாவூரில் *200* அடி உயரமான இந்த பிரகதீஸ்வரர் கோவிலைக் கட்டினானே, விமானத்தைச் செய்தானே, குஞ்சரமல்லன் இராஜராஜ பெருந்தச்சன் என்ற பெயருடைய ஒரு பெரிய சிற்பி? அந்த வழிவந்தவன் நான். என்னுடைய மூதாதையர்கள்தான் கட்டினார்கள். நான் தஞ்சையிலே பிறந்தவன்தான். இன்றைக்கும் தஞ்சாவூர் ஸ்தபதி என்று எனக்குப் பெயர்.

ஆகையினால், அந்த ஒரு பெருமையிலே உங்களுக்கு ஒன்று சொல்வேன். இப்போது நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்றால், நம்முடைய தமிழ் மரபிலே வந்த கோயில்கள், சிற்பங்கள், இவையெல்லாம் அயல் நாடுகளிலும் வருவதற்கும், பரவுவதற்கும் அரும்பாடு பட்டுக்கொண்டிருந்தேன். தனிமையாக.

இப்போது சொல்லப் போனால், தமிழ்நாட்டினுடைய மரபுச் சிற்பங்களும், மரபுக் கட்டடங்களும்தான் ரொம்ப அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன. அமெரிக்காவிலே மட்டும் 35 கோயில்கள் வந்தாகி விட்டது. நான் போகாத 'ஐலேண்டே', 'ஓவர்சீஸ்' நாடே கிடையாது. எல்லா இடங்களிலும் அவையெல்லாம் வந்து கொண்டிருக்கின்றன.

*21*-ஆம் நூற்றாண்டிலே, அங்கே இது ஒரு பெரிய இயக்கமாக வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வளவு நன்றாகப் பரவி வருகின்றன. இந்த நிலையிலே, ஒரு சில வாக்கியங்களைச் சொல்ல வேண்டும். கலை மரபுகள் என்று சொல்லி, இசை மரபாக இருக்கட்டும், நடன மரபாக இருக்கட்டும், அல்லது சிற்ப மரபாக இருக்கட்டும்; ஒவ்வொரு நாட்டிலேயும் மக்கள் அந்தமர்திரி ஒரு மரபைத் தோற்றுவித்திருக்கிறார்கள். நான் சொல்ல ஆசைப்படுவது, ரொம்பப் பணிவுடனும், ரொம்ப அடக்கத்துடனும் நம்முடைய இசைக்கு, நம்முடைய சிற்பத்திற்கு, நம்முடைய கட்டடத்திற்கு, நம்முடைய நாட்டியத்திற்கு, நம்முடைய இலக்கியங்களுக்கு இணையாக எந்த ஒரு மரபும் இல்லை. ஒரு ஆராய்ச்சி மேடையிலே எல்லாக் கலைகளையும் வைத்துப் பார்த்து எடைபோட முடியுமானால் இந்த ஐந்து கலைகளும்தான் உச்சநிலையில் இருக்கும் என்று நான் சொல்லவில்லை; அயல் நாட்டு மக்களேபேச ஆரம்பித்து விட்டார்கள்!

***வாழ்க்கைச் சங்கீதம் இரண்டு கம்பிகளின் இன்னிசையால் நிரூபிக்கப்படுகின்றது. ஒன்று தொண்டு, மற்றொன்று அன்பு. தொண்டு உலகத்தைக் களிக்கச் செய்கின்றது. அன்பு மனத்தைக் களிக்கச் செய்கின்றது.***

***—காண்டேகர்***

"இதற்கு என்ன காரணம்? ஏன் உங்கள் மரபு மட்டும் இப்படி இருக்கிறதே?" என்று கேட்டார்கள். நம்முடைய கோயில் மாதிரி வேறு எங்கே யாவது கோயில் இருக்கிறதா? கோயில் ஒன்றுதான். ஆனால், இந்தமாதிரி இல்லை. இசை உண்டு. இந்த மாதிரி அந்த இசை இல்லை. ஆக, இந்தமாதிரி வேறுபட்டு, மற்ற மரபுகளிலே இருந்து அதிகமாக வேறுபட்டு, உங்களுடைய ஐந்து கலைகளும் இருக்கிறதே, அதனுடைய நுட்பம் என்ன? இரகசியம் என்ன? என்று என்னை மேலை நாடுகளுக்குச் செல்லும்போதெல்லாம் கேட்பார்கள்.

இப்போதெல்லாம் வேலைகளை அதிகம் பண்ணாமல், பேசுவதைத்தான் அதிகம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆகையினால், பெரியோர்களையெல்லாம் காணக்கூடிய பெரிய ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

நான் சொன்னேன் இந்தக் கலைக்கு வாய்த்திருக்கக்கூடிய இலக்கணம் தான் இதற்குக் காரணம்.

**"யாமறிந்த மொழிகளிலே**
**தமிழ்மொழிபோல்**
**இனிதாவதெங்கும்**
**காணோம்"**

—என்று சொன்னாரே, அந்த இனிமையை உண்டாக்கியது, அந்த இலக்கணம் - அதுதான் இனிமைக்குக் காரணம். ஆக, நாம் வைத்திருக்கக்கூடிய இலக்கணம், சிற்பங்களினுடைய இனிமைக்குக் காரணம். அதே மாதிரிதான் நாட்டியத்திற்கும், அதேமாதிரிதான் இயலுக்கும், அதேமாதிரிதான் இசைக்கும் என்பதை நான் எடுத்துச் சொன்னேன்.

இந்த இலக்கணம் என்ன இலக்கணம்? இது எப்படித் தோன்றியது? இது யாருடைய இலக்கணம்? இதைச் சொல்லி விட்டால், இங்கேதான் ஒரு பெரிய விஞ்ஞானமானது இலக்கணங்களுக்கு, 'மியூசிகாலஜி'க்கு அடியில் ஒரு விஞ்ஞானம் இருக்கிறது. என்னுடைய 'டெக்னாலஜி'க்கு அடியில் ஒரு பெரிய விஞ்ஞானம் இருக்கிறது.

அந்த விஞ்ஞானம் இருக்கிறதே, அது 'காஸ்மாலஜி' என்று சொல்லப்படும். பிரபஞ்ச விஞ்ஞானம் என்று சொல்லப்படும். பிரபஞ்சத்திலே எத்தனையோ விதமான பொருள்கள் எல்லாம் தோற்றம் கொண்டிருக்கின்றன. 'த்ரீ டைமென்ஷனிலே' கண்ணால் பார்க்கக்கூடிய அத்தனையுமே, அவற்றை 'த்ரீ டைமென்ஷனிலே' பார்ப்போமேயானால், அவை அளவுகள் கொண்டிருக்குமானால், அவற்றையெல்லாம் யார் உண்டாக்கியதாகச் சொல்கிறோம்? இறைவன் படைத்தான் என்றெல்லாம் சொல்கிறோம். இறைவனே ஒரு சிற்பியாக இருந்து படைத்திருப்பானேயானால், அதற்கு ஒரு அளவு முறை இருக்குமானால், அதற்கு ஒரு இலக்கணம் இருக்குமானால், அந்த இலக்கணத்தைக் கொண்டு, அவற்றையெல்லாம் படைத்திருப்பானேயானால், அவையெல்லாம் இனிமையாக நம் கண்களுக்கு இருக்குமானால், அப்படியென்றால் அவன் ஒரு இலக்கணத்தைக் கையாண்டிருக்கிறான்.

***ஒருவன் தன் மனத்தில் சினத்தை எண்ணாதிருப்பானானால், நினைத்த நன்மைகளைஎல்லாம் அவன் ஒருங்கே பெறுவான்.***

***—திருவள்ளுவர்***

யார்? கண்களுக்குத் தெரியாத அந்தப் பரம்பொருள். சப்த பிரம்மம், அர்த்த பிரம்மம் என்ற அந்த இலக்கணம்தான். அதன் பிறகு சிற்ப இலக்கணமாக, கட்டட இலக்கணமாக இருக்கிறது.

ஆகையினால்தான், இந்தக் கலைகள் எல்லாம் கண்ணால் பார்க்கப்படும் போதும் சரி, காதால் கேட்கப்படும்போதும் சரி; இந்த பூமியில் நாம் நிற்பதே இல்லை, இருப்பதே இல்லை. பறந்து மேல்நோக்கியே செல்வோம். ஆகையினால்தான் நுண் கலைகள் என்று பெயர் பெற்றது.

அப்பேர்ப்பட்ட ஒரு 'ஷட்டில் கிராம்மர்' ஒரு 'ஷட்டில் டெக்னாலஜி'. இவற்றைக் கொண்டு இந்த ஐங்கலைகளும் ஒரே இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்து இருப்பதனாலே, இவையெல்லாம் மறைந்து வருகின்றனவே என்ற ஒரு அவமானம் எனக்கு உண்டு.

அதிலே சிற்பக் கலைக்கு இந்த இருபது இருபத்தைந்தாண்டுகாலமாகச் செயலாற்றி வரும் கலைஞர்களுடைய ஆசிகள் ரொம்ப உதவி செய்து இருக்கின்றன. இதிலே ஒரு பெரிய விஞ்ஞானம் இருக்கிறது.

இந்த விஞ்ஞானமானது, முக்கியமான ஒரு பொருளை மூலமாக வைத்து வளர்ந்திருக்கிறது. 'மாடர்ன் சைன்ஸ்' நான்கு இருக்கிறது பாருங்கள், வாயு, அக்னி, தண்ணீர்- அதற்குப் பிறகு நிலம் இவற்றைதான் ஏற்றுக் கொண்டிருக்கிறதே தவிர, ஆகாசம் ஒரு ஸ்பேஸ்ஐ ஏற்றுக் கொள்ளவே மாட்டேன் என்கிறது. நான் "ஏன் அப்படி?" என்று கேட்டேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள்? 4 'எலெமெண்ட்ஸ்' தான் சாஸ்திரம். 5 என்பது கிடையவே கிடையாது என்கிறார்கள்.

என்ன காரணம் என்றால், அந்த 'ஸ்பேஸ்' என்பதை 'டெஸ்ட் ட்யூப்' இல் அடங்க மாட்டேன் என்கிறது நிற்க மாட்டேன் என்கிறது. ஆகையினால், நம்மால் 'மெஷர்' பண்ண முடியவில்லை. ஆகையினால், நம்மால் 'மெஷர்' பண்ணமுடியாத, 'பிசிகல் அனலிசிஸ்' பண்ண முடியாத ஒன்று தேவையில்லை என்று விட்டுவிட்டோம். ஆனால் அந்த ஸ்பேஸ் ஐ நாம் என்னவாக வைத்திருக்கிறோம்? மூலமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆகையினால், ஆகாசமே பிரபஞ்சமாக மாறுகிறது என்று எல்லாம் பேசுகிறோம். மதத்திலே பேசுகிறோம், எங்கெல்லாமோ பேசுகிறோம்.

அதைப்பற்றி ஒன்று சொல



## இசை என்பது என்ன?

உலகத்தில் எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு, நமது சொந்த மொழியாகிய தமிழுக்கு உண்டு. ஆங்கிலத்தை, இயல் ஆங்கிலம், இசை ஆங்கிலம், நாடக ஆங்கிலம் என்று முப்பிரிவாகப் பிரித்துப் பார்ப்பதில்லை. உலகின் மிகப் பழமையான மொழிகளான, கிரேக்கம், இலத்தீனம், வடமொழி, ஹீப்ரு (Hebrew) சீனம், ஆகிய மொழிகளைக் கூட, இப்படிப் பிரித்துச் சொன்னதில்லை. தமிழ் மொழி ஒன்றுக்கு மட்டும் தான், இந்தத் தனிச் சிறப்பு இயல்பாகவே அமைந்திருக்கின்றது.

மற்ற மொழிகளிலும் இயல் உண்டு, இசை உண்டு, நாடகமும் உண்டு. ஆனால், மொழியைக் குறிப்பிடும்போது, 'முத்தமிழ்' என்று, தமிழைக் குறிப்பிடுவது போல, வேறு எந்த மொழியையும் அழைக்கின்ற மரபு உலகில் இல்லை.

இயலாய், இசையாய், இனிய கூத்தாய், இப்படி மூன்றாய் விளங்குகின்ற முத்தமிழுக்கு, மன்றம் வைத்து, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என்னும் பெயர் சூட்டி, மரபை மங்காது காத்து வருகின்றது நம் அரசு.

கவிதையும் உரைநடையும், இலக்கியத்தின் ஏனைய வடிவங்களும், இயல் என்னும் பெயரில் ஒளி வீசக் காண்கின்றோம். முற்காலம் முதல் தற்காலம் வரை, படைக்கப்பட்டிருக்கின்ற இலக்கியங்கள், காலத்தால் அழியாத மாபெரும் படைப்புகளாக விளங்குகின்றன. அந்த இயலுக்கும் ஏற்ற சிறப்பை, இன்று நாம் வழங்குகிறோம். வாய்ப்பாட்டையும், வகை வகையான இசைக் கருவிகளின் இன்னிசையையும், இசை என்கிறோம்.

எது நம்மை இசைய வைக்கின்றதோ, அது இசை. இறைவனையே இசை என்றும், இசைப்பயன் என்றும், பாடி மகிழ்ந்த பெருமக்கள் நமது முன்னோர்கள். 'ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய், என்னுடைய தோழனுமாய்' என்று, சுந்தரர் தேவாரம் சொல்லி மகிழ்கிறது.

— புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி - 2-லிருந்து

வேன். இந்த 'ஸ்பேஸ்' இருக்கிறதே, அதற்குத் தமிழ் மரபிலே அசுவின் என்று பெயர். அகவெளி என்று பெயர். அதற்குத் தகராகாசம்; அதற்குப் பிறகு சிற்றாகாசம். இப்படியெல்லாம் பலவிதமான பெயர்.

அதேமாதிரி, வெளியிலே ஒன்றிருக்கிறதே அதற்கு ஆகாசம் என்றுதான் பெயர் வைத்திருக்கிறோம். அதற்குப் பேருள்ளம் என்று பெயர் இதற்குச் சிற்றுள்ளம் என்று பெயர். ஆக, ஒரு ஸ்பேஸைப் பற்றி, ஒரு அடிப்படையான 'கான்செப்ட்' நமக்கு ஏற்கெனவே இருக்கிறது.

இந்த ஸ்பேஸ் எனக்கு உள்ளே இருக்கிறதா? இல்லையா? இந்த ஸ்பேஸ் என்னுடைய உடம்புக்குள்ளே இல்லையானால், நான் என்ன ஆவேன்? 'கொலாப்ஸ்' ஆகிவிடுவேன். இந்தச் சுவருக்கு 'வேல்யு'வே கிடையாது. ஆகையினால், இப்பேர்ப்பட்ட ஒரு 'ஸ்பேஸ்' ஐ உள்ளே வைத்துக் கொண்டு பலவிதமான காரியங்களைச் செய்கிறேன். விந்தைகளைச் செய்கிறேன். பேசுகிறேன். அத்தனைக்குமே இந்த 'ஸ்பேஸ்' தான் காரணம்.

அதேமாதிரி உலகத்திலே தோன்றிய ஞாலக் கோள்கள் என்று சொல்லக்கூடிய அத்தனையுமே அந்த 'ஸ்பேஸ்' சினுடைய வெளிப்பாடுகள். ஆக, 'ஸ்பேஸ்' ஆனது, எனக்குள்ளே இருக்கிறதே, அது என்ன பண்ணுகிறது என்பதை ஆங்கிலத்திலேயே சொல்கிறேன். Space experiences; vibrates; vibrates into special forms...

இந்த உள்ளமானது, இந்த அகவிண்ணானது, உணர்கிறது. உணர்ந்தவை தொடர்புகளாக ஆக்கிக் காட்டுகின்றன. அந்தத் தொடர்புகள் வழியே, தொடர்புகள் அளவுகளாக, வடிவங்களாக மாறுகின்றன. இதுதான் அந்த 'ஸ்பேஸ்'சினுடைய ஒரு அடிப்படையான விஞ்ஞானம். Space experiences;space vibrates, space turns into forms.

ஒரு 'ஃபார்ம்' என்ன? 'ஓரல் ஃபார்ம்'. காதால் கேட்கக்கூடிய ஃபார்ம். அது முத்தமிழ். அதற்குப் பிறகு, 'விசுவல் ஃபார்ம்' என்று ஒன்று இருக்கிறது. கட்டடமும் சிற்பமும். இதில் கணக்கு ஒன்று இடையில் இருக்கிறது. பேசுவது எல்லாம் வடிவங்கள். உள்ளம் உணர்வதெல்லாம் வடிவங்கள். வடிவம் என்ன என்றால், அதற்கு அளவுகள் தேவை. உள்ளேயும் வடிவங்கள் தோன்ற வேண்டும், வெளியேயும் வடிவங்கள் தோன்ற வேண்டும். அந்த வடிவங்களுக்கு அளவாக இருக்கக்கூடியவையெல்லாம், இந்த இதயத் தொடர்பு இருக்கிறதே பார்த்தீர்களா, வைப்ரேஷன் மியூசிகல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸிலே, 'வைப்ரேஸன்'ஐ உண்டாக்குகிறதே, மியூசிகல் ஸ்பேஸ்'ஐ உண்டாக்குகிறதே 'மியூசிகல் பேட்டன்ட்ஸ்'ஐ உருவாக்குகிறதே, அதேமாதிரி இங்கே தொடங்கக்கூடிய இவையெல்லாம், 'மியூசிகல் ஸ்பேஸ்' மாதிரி, 'ஸ்பேஸை' உண்டாக்கி ஸ்பெஷல் 'வால்யூம்ஸை' உண்டாக்குகிறது.

இப்பேர்ப்பட்ட ஒரு பெரிய அடிப்படை விஞ்ஞானமானது மரபுகளிலே, இந்த ஐந்து கலைகளுக்கும் அடிப்படையான மரபுகளிலே இருந்து வருகிறது. ஆகையினால், இதற்கு ஒரு இடமானது, அண்ணா பல்கலைக்கழகத்திலோ அல்லது சென்னைப் பல்கலைக் கழகத்திலோ ஒரு 'சேர்'ஐ உருவாக்கி, 'ட்ராடிஷனல் சைன்ஸ் அண்டு டெக்னாலஜி' என்று வைத்தால், அவற்றை மேலும் மேலும் நாம் ஆராய்ச்சி செய்யலாம். அதன் மூலமாகக் கலைகளுக்கு ஒரு பெரிய ஆக்கமும் ஒரு பெரிய அடிப்படை பிணைப்பும் ஏற்படும்.

இப்படிப்பட்ட ஒரு இன்ஸ்டிட்யூட் கர்னாடகத்திலே வர இருக்கிறது. அங்கே இருக்கக் கூடிய சிற்பிகள் எல்லாம், அங்கே இருக்கிற அமைச்சர்களைப் போய்க் கேட்டு, ஒரு 'இன்ஸ்டிட்யூட்' ட்ராடிஷனல் சைன்ஸஸ் அண்டு டெக்னாலஜி' என்ற ஒன்றை ஆரம்பிக்க இருக்கிறார்கள். ஒரு பல்கலைக் கழகமே வர இருக்கிறது. அதற்குப் பலவிதமான உதவிகளைச் செய்யவேண்டுமென்று என்னைக் கேட்டார்கள்.

நம்முடைய மாநிலத்திலேயே, மாமல்லபுரத்திலே ஒரு சிற்பக் கல்லூரி வைத்திருக்கிறோம். அந்தக் கல்லூரியிலே, இப்பேர்ப்பட்ட விஞ்ஞான விஷயங்களையெல்லாம் புகுத்தி, அதனுடைய 'ஸ்டேட்டஸையும்' உயர்த்தி, அதை ஒரு பல்கலைக்கழகமாக ஆக்கிக் காட்ட முடியும். அந்த மாதிரி ஆக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களால் முடியும்.

உண்மையிலேயே இந்தக் காரியத்தை அவர்கள் செய்துவிடுவார்களேயானால், நிச்சயமாக அவர்களுடைய பெயர் இந்தக் கலைகள் இருக்கும்வரை இருக்கும். இதை யாரும் இதுவரை செய்யவே இல்லை. அதைச் செய்வதற்கு, 21-வது நூற்றாண்டு வரை காத்திருக்க வேண்டும் என்பதும் இல்லவே இல்லை. 21-வது நூற்றாண்டை நாளையே தொடங்கி வைக்கலாம்!






தொன்றுதொட்டு, அந்தக் காலத்திலிருந்தே நாடகம், தமிழர்களின் வாழ்வில் உண்டு பண்ணியுள்ள ஊக்கம், அளவிட முடியாதது. திரைப்படக் கலை வ்ளர்ச்சி அடைவதற்கு முன்னர், மேடை நாடகங்களை நடத்தியதில், புகழும், பெருமையும் கொண்ட பல நாடகக் குழுக்கள், தமிழ்நாட்டில் இயங்கி வந்திருக்கின்றன. தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், நவாப் ராஜமாணிக்கம், டி.கே.எஸ். சகோதரர்கள், மற்றும் நாடகக் காவலர் ஆர்.எஸ். மனோகர் போன்ற அறிஞர்கள், நாடகக் கலையின் வளர்ச்சிக்காக, அருந்தொண்டாற்றி இருக்கிறார்கள் என்பது, நம் அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். சமூக நாடகங்களும், புராண நாடகங்களும், மக்களுக்குத் தேவையான கருத்துக்களை வழங்கியதோடு மட்டுமல்லாமல், இந்திய சுதந்திரத்திற்கும் எழுச்சி ஊட்டிய வரலாறு நம்மிடம் உண்டு.

நாடகக் கலையினை வெற்றிகரமாக நடத்துவதில், சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. நாடகங்கள் ஒவ்வொரு முறையும் நடத்தப்படும்போது, புதிதாக ஒரு நாடகம் அரங்கேற்றுவதைப் போன்ற நிலையை உண்டு பண்ணுவதற்கு, அசாத்தியத் திறமை வேண்டும். நாடகத்தைப் பார்க்கின்ற ரசிகர்கள், நாடக நடிகர்களின் நடிப்பின் நுணுக்கங்களை, நேரடியாக ரசித்து, தங்கள் கருத்துக்களையும் பாராட்டுகளையும் வெளிப்படுத்துகிற வாய்ப்பு, நாடகத்திற்கு மட்டுமே உண்டு. எனவே, நடிகர்கள் சரிவர நாடகக் காட்சிக்கு ஏற்றாற் போல், உணர்ச்சிகளைக் காட்டத் தவறினால், நாடகம் வெற்றி அடைய இயலாது; நடிகர்கள் பாராட்டுப் பெற முடியாது. அதிலும் குறிப்பாக நகைச்சுவை மேடை நாடகங்களில், நடிகர்கள் நகைச்சுவை ததும்ப வசனங்களை உச்சரிக்கும் முறையிலும், குரலின் ஏற்ற இறக்கத்திலும், உடலின் அசைவிலும் தான், நகைச்சுவை உணர்வினை வெளிப்படுத்த முடியும்.

புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி - 2-லிருந்து

**மாணவர் பக்கம்**



# தெரிந்து கொள்ளுங்கள்!

## புவி ஈர்ப்பு விசை

**விஞ்ஞானி** ஐசக் நியூட்டன் ஒரு நாள் தன் தோட்டத்திற்குச் சென்றார். ஓர் ஆப்பிள் மரத்தின் அடியில் அவர் படுத்திருந்தார். ஓர் ஆப்பிள் பழம் நேராகத் தரையில் விழுந்தது. அந்த ஆப்பிள் ஏன் கீழே விழ வேண்டும்? பக்கவாட்டில் செல்லக்கூடாதா? மேலே போகக் கூடாதா? என்றெல்லாம் அவர் யோசிக்கத் தொடங்கினார். அதன் பலனாகக் கிடைத்ததே புவி ஈர்ப்பு விசை! நம் பூமிக்கு எதையும் இழுக்கக் கூடிய ஆற்றல் உண்டு! அதனால் தான், மேலே எறியப்படும் பொருளெல்லாம், பூமியால் கவரப்பட்டுக் கீழே வந்து விடுகின்றன!

புவி ஈர்ப்பின் அடிப்படையில் சில அதிசயங்கள் உள்ளன. பைசா நகரத்தில் சாய்ந்த கோபுரம் ஒன்று இருக்கிறது. ஆனால், அது விழாமலே நின்று கொண்டிருக்கிறது. அதே போன்று, பொலோன் நகரத்திலும் ஒரு சாய்ந்த கோபுரம் உள்ளது. அர்ஹாங்கெல்ஸ்க் நகரத்தில் சாய்ந்த மணிக்கூண்டு ஒன்றும் விழாமல் நிற்கின்றது! அதற்கெல்லாம், காரணம், புவி ஈர்ப்புத்தான்!

அந்தக் கோபுரங்களின் அடிப்படை அஸ்திவாரங்கள் மிக ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ளன. ஆகையால், விழாமல் நிற்கும் சாய்ந்த கோபுரங்கள் அதிசயங்களாக உள்ளன.

நாம் இரண்டு கால்களில் நிற்கின்றபோது, நம் உடலின் புவி ஈர்ப்புக் குத்துக்கோடு இரண்டு பாதங்களின் பரப்பிற்குள் விழுவதால், நாம் இடையூறு இல்லாமல் நிற்க முடிகின்றது. ஆனால், ஒற்றைக்காலில் நின்றால் தள்ளாட வேண்டியது தான்! புவி ஈர்ப்புச் சரியில்லாததால் இந்த நிலை. உடலின் புவி ஈர்ப்பு மையக் குத்துக்கோடு, ஒரு பாதத்தில் விழமுடியாததால் தான் தடுமாற்றம் ஏற்படுகிறது.

'தெரியுமா உங்களுக்கு?' என்னும் நூலில், டாக்டர் சோ. சேசாசலம்





## சிட்டுக் குருவியே சிறகை விரி!

**—கவிஞர் பல்லவன்**

முடியும் உன்னால் முடியும் - நீ
முயன்றால் எதுவும் முடியும்!
முடியும் உன்னால் முடியும் - இமய
முடியைத் தொடவும் முடியும்!

படியும் நன்கு படியும் - வெற்றிப்
படிகள் உன்கீழ்ப் படியும்!
படியும் நெஞ்சில் படியும் - கருத்தால்
பாரைத் திருத்த முடியும்!

படரும் சாம்பல் படரும் - சோம்பல்
படர்ந்தால் நெருப்பும் குளிரும்!
வடியும் வியர்வை வடியும் - துடைத்து
வையம் பெருமை அடையும்!

இடியும் தடைகள் இடியும் - உன்
இதய பலத்தால் பொடியும்!
விடியும் நாளை விடியும் - நீ
விழித்தால் இருளும் மடியும்!

விரியும் சிறகை விரியும் - உனக்கு
விரிந்த உலகம் புரியும்!
சிரமம் இருக்கும் சிரியும் - உனக்குச்
சிகரத் தின்தலை தெரியும்!

**வாழ்க்கையில் தைரியமாக இருப்பதைவிட மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்.**

**—மூதறிஞர் இராஜாஜி**

**மன உறுதி இல்லாதவனுடைய உள்ளம் குழம்பிய ஒரு கடலுக்குச் சமமானது.**

**—பாரதியார்**

# நூல் நயம்



### எழுநிலை மாடம்

ஆசிரியர் : டாக்டர் நா. செயப்பிரகாசு

வெளியீடு : அருள்ஒளி பதிப்பகம்
20ஏ, 5-ஆம் தெரு
வள்ளுவர் கோட்டம்
சென்னை 600 034

பக்கம்: 112 விலை: ரூ.15

**ஏ**ழு அடுக்குகள் கொண்ட எழுநிலை மாடம் போல, ஏழு எழில்மிகு கட்டுரைகள் இந்நூலை அலங்கரிக்கின்றன. கட்டுரைகள், பகுத்தும் தொகுத்தும் பாங்குற அமைக்கப்பட்டுள்ளமை நூலின் சிறப்பம்சமாகும். முதல் மாடம், இரண்டாம் மாடம் என்று ஏழு மாடங்கள் எனப் பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியிலும் தமிழின் இனிமை தோய்ந்த ஆய்வுக் கட்டுரைகள் அணி செய்கின்றன.

இன்றைய அறிவியல் உலகில் இலக்கியக் கல்வியின் இடங்குறித்து முதல் கட்டுரையில் ஆராயப்படும் கருத்துக்கள் இன்றைய சூழலுக்கு மிகவும் ஏற்றவையாக உள்ளன. "கடந்தகால உண்மைகளைக் கனிவுடனும், கலை நயத்துடனும் கருத்தில் பதிய வைத்து நிகழ்கால மாந்தரை எதிர்கால ஏற்பாடுகளுக்கு ஏற்றன செய்யத் தூண்டுவது இலக்கியக் கல்வியே ஆகும்" என்று முடிவுரையில் சொல்லி, அதன் அடிப்படையில் நடைபோட அனைவரையும் அழைக்கின்றார் ஆசிரியர்.

இதேபோல, பாவேந்தர் பாரதிதாசனின் ஆய்வுரைகளும் அணிந்துரைகளும், புதுக்கவிதைகளில் இறையுணர்வு ஆகிய கட்டுரைகளும்புதுமை நோக்கோடு எழுதப்பட்டுள்ளன. தமிழ்நாடு பெயர் மாற்ற வரலாறு, ஒரு பயனுள்ள கட்டுரை. இதேபோல மறைமலையடிகளாரின் சிந்தனைகள் குறித்து ஆசிரியர் அற்புதமாக ஆராய்ந்து வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் இதயத்தில் இடம் பிடிக்கின்றன. மொத்தத்தில் இந்நூலைத்தமிழாராய்ச்சி மாணவர்களும், தமிழன்பர்களும் படித்துப் பயன் பெறலாம்.

**—பி.வி.கிரி**

### கம்ப்யூட்டர் நிகழ்ச்சிகளை அமைப்பது எப்படி?

ஆசிரியர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு

வெளியிட்டோர்:
மணிமேகலைப் பிரசுரம்,
4, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.

பக்கம்: 135 விலை: 19

**த**மிழில் அறிவியல் வளர்ச்சி பெறவேண்டியது அவசியம் என்ற கருத்து நாடெங்கும் கற்றறிவாளர்களால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. அந்தக் கருத்துக்கு வலிவூட்ட உதவிடும் நூலாகும் இது. கம்ப்யூட்டர் தொடர்பான பல நூல்களை வெளியிட்டிருக்கும் மணிமேகலைப் பிரசுரத்தார் இதனையும் எழிலுற வெளியிட்டிருக்கிறார்கள்.

நிகழ்ச்சி அமைக்க வேண்டியதில் கவனிக்க வேண்டியவை, அட்டையைத் துளையிடுதலும் சோதனை செய்தலும், நிகழ்ச்சிப் பட்டியல் அமைத்தல், கம்ப்யூட்டர் நிகழ்ச்சி மொழிகள், பைனரி எண்கள் முறை, புளோசார்ட்டிங் பேசிக் நிகழ்ச்சி அமைத்தல், போர்ட்ரான் நிகழ்ச்சி அமைப்பு, கோபால் நிகழ்ச்சி அமைப்பு, கோபால் மொழியில் உள்ள சொற்கள் வரிசை என்பன போன்ற பத்துத் தலைப்புகளின் கீழான கட்டுரைகள் வகைபட இதிலே தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சிறு குறை - எழுத்துப் பிழை நீக்குவதில் இன்னும் சற்றுக் கவனம் செலுத்தியிருக்கலாம்.

வளர்ந்துவரும் அறிவியல் தமிழுக்கு வலிமை சேர்த்திடும் நூல் இது.

**—சோழராஜா**

### இதழியல் நுட்பங்கள்

ஆசிரியர்: முனைவர் சி. இராசா

வெளியீடு: பார்த்திபன் பதிப்பகம்,
ஏ-12, எல்.ஐ.சி. காலனி,
திருச்சி 620 021.

பக்கம்: 162 விலை ரூ.35

**அ**றிவியல் துணையுடன், இதழியல்துறை இன்று அதிவேகமாக வளர்ந்து வருகிறது. நாளிதழ், கிழமை இதழ், திங்களிருமுறை இதழ், திங்களிதழ், காலாண்டிதழ், ஆண்டிதழ் என்று பன் முகங்களில் அதன் பரிமாணம் வெளிப்படுவதைப் பார்க்கின்றோம்.

'ஜனநாயகம்' என்னும் மாளிகையைத் தாங்கும் தூண்களில் ஒன்றாகப் பத்திரிகைகள் விளங்குகின்றன. இந்தத் தூண், உறுதியாகவும் அதே சமயத்தில் உறுதுணையாகவும் சமதாயத்துக்குப் பயன்பட வேண்டும். பத்திரிகை

களில் எழுதுவது, தொகுப்பது, அதை வெளியிடுவது என்பதெல்லாம் கண்ணும் கருத்துமாகச் செய்யப்பட வேண்டிய கடமையாகும்.

பொதுவாக, இதழ்கள் என்பது சமுதாய வயலுக்குத் தூவப்படும் தரமான உரமாகும். எனவே, இதைக் கையாளுவதில் நாம் எச்சரிக்கையுடனும் அதே சமயத்தில் இதய சுத்தியோடும் இருக்க வேண்டும். அந்த வகையில் இதழியல் துறை ஒளி விளக்காய் விளங்கிட, இதழியலார்கள் பொறுப்புணர்ச்சியோடு பணியாற்றிட வேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்லும் சொற்சித்திரமாக விளங்குகிறது இந்த நூல்.

நூலாசிரியர் ஏற்கெனவே இதழியல் தொடர்பான நூலொன்றை வெளியிட்டிருக்கின்றார். அதனைத் தொடர்ந்து இந்நூல் சில விளக்கங்களுடன் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

செய்தி என்றால் என்ன என்பதற்கு விளக்கம் கூறி, அதனைச் சேகரிக்கும் முறையைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர். அத்துடன், செம்மையாக்கம் (எடிட்டிங்) தலைப்பு, தலையங்கம், படங்கள், நாளிதழின் பிற்பகுதிகள், பக்கப்புனைவு (பேஜ் மேக்கப்) என்று ஒரு பத்திரிகை உருவாக்குவதற்கான கூறுகளைப் பகுத்தும் தொகுத்தும் கூறியிருப்பது, இதழியல் துறையில் ஆசிரியருக்குள்ள முழு ஈடுபாட்டைத் தெள்ளிதின் காட்டுகிறது.

நாளிதழ் நிறுவனம், பத்திரிகை நெறிமுறை, சட்டங்கள் இதழியல் தோற்றம் ஆகியன குறித்தும் அலசி இருப்பதோடு, இதழியல் நுணுக்கங்கள், நுட்பங்கள் குறித்தும் தக்க சான்றுகளும் பல்வேறு இதழ்களிலிருந்து தரப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

பொதுவாக இதழியல் துறையில் இருப்பவர்க்கும், இத்துறை ஆர்வலருக்கும் இந்நூல் மிகச் சிறந்த கையேடாக விளங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**—பொன். மறைமலை**

## மனித உடற் கூறுபாடு (வினா - விடைகள்)

ஆசிரியர்: டாக்டர் எஸ். சிதம்பரதாணுப் பிள்ளை

வெளியீடு: சித்த மருத்துவ நூல் ஆராய்ச்சி நிலையம்
E 32, அண்ணாநகர் கிழக்கு,
சென்னை - 600 102.

பக்கம்: 197 விலை: ரூ.100

உடற் கூறுபாடுகளைத் தமிழில் விளக்கப் படங்களோடு அற்புதமாக விளக்கும் நூல் இது.

தமிழ் மருத்துவத்தில் மனித உடற் கூறுபாடுகளை விளக்கும் நூல் இதுவாகத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

உடற் கூறுபாடுகளைக் கற்கும் அனைத்துமுறைகளும் மருத்துவ மாணவர்களுக்கும், மருத்துவர்களுக்கும்கூட இந்நூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கேள்வி பதில் முறையில் அமைந்திருப்பது படிக்க எளிதாக இருக்கின்றது.

**—குமாரசாமி**

## சுற்றுப்புறச் சூழலில் மாசுபாடுகள் (அறிவியல் கதைகள்)

ஆசிரியர்: கவியழகன், எம்.ஏ.,

வெளியீடு: கார்த்திக் பதிப்பகம்
36-A கோவிந்தன் சாலை
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.

பக்கம்: 143 விலை: ரூ.16

சுற்றுப்புறச் சூழலில் மாசுபாடுகள் அதிகரித்துள்ள நிலையில், அவற்றால் விளையும் தீமைகளை நாளைய தலைவர்களாகிய இன்றைய மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில், மூன்று கதைகளின் வாயிலாக உணர்த்த முற்பட்டுள்ள ஆசிரியரின் முயற்சி பாராட்டுதற்குரியது.

முதல் கதையில் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சுப் புகையில் தாவரங்கள் பாதிக்கப்படுவது குறித்தும், மரங்களை வளர்ப்பதால் நாம் பெறும் நன்மைகள், அவற்றை அழிப்பதால் விளையும் தீமைகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

நாம் அனைவரும் அன்றாட வாழ்வில் சந்திக்கும் மாபெரும் பிரச்சினையாகிய ஒலி மாசுபாடு குறித்து இரண்டாவது கதையில் விவரிக்கப்பட்டுள்ளது. ஒலி மாசுபாட்டால் ஏற்படும் உடல், மன ரீதியான பாதிப்புகளை அறிவியல் விஞ்ஞான வளர்ச்சியும் இயன்ற அளவு குறைக்க அறிவுறுத்தும் விதத்தைத் தெளிவுபடுத்தும் கதை இது.

வாழ்க்கையின் அத்தியாவசியமான தேவைகளுள் ஒன்றான குடிநீர், தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளால் மாசுபாடுவதைச் சித்திரிக்கும் விதத்தில் மூன்றாவது கதை அமைந்துள்ளது.

எளிய தமிழில் இனிய நடையில் அமைந்துள்ள நன்னூல் இது.

**—கு. மல்லிகா**

# பேசும் பொம்மைகள்

'**கை**த்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கிலை ஒத்துக்கொள்' என்றார் நாமக்கல் கவிஞர். அவர் வாக்கு பொய்க்கவில்லை.

இன்று, கிராமப்புறங்களில் ஆயிரக்கணக்கான கைவினைஞர்கள், கைத்தொழிலைக் கற்றுக் கொண்டதன்மூலம் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

நவராத்திரி என்றதும் நமக்குப் பொம்மைக் கொலுவே நினைவுக்கு வரும். கண்ணைக் கவரும் வண்ண வண்ண பொம்மைகள், நம் எண்ணம் கவரும் வகையிலே வரிசை வரிசையாகக் காட்சியளிக்கும்.

குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் கூடப் பொம்மைகள் என்றால், கொள்ளை ஆசைதானே!

நவராத்திரிக் கொலுவை முன்னிட்டு, இன்று சென்னை மாநகரில், வழக்கம்போல் பொம்மைக் கொலுக் கண்காட்சிகள் நடைபெற்று வருகின்றன.

குறளகத்திலுள்ள காதி கிராப்ட், அண்ணாசாலையிலுள்ள பூம்புகார், காதி கிராமோத்யோக் பவன் ஆகியவை கண்ணையும் கருத்தையும் கவரும் வகையிலே பொம்மைக் கொலுக் கண்காட்சிகளை நடத்தி வருகின்றன.

### காதி கிராப்ட்

நமது கலாச்சாரம், கலைத் திறன், நாகரிகம் ஆகியவற்றைப் பன்னெடுங்காலமாக உலகுக்கு எடுத்துக்காட்டி வரும் தொழில்களில் மட்பாண்டத் தொழில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். மிக அற்புதமான கற்பனை வடிவங்களைக் கைகளின் மூலம், மண் பொம்மைகளிலும், மட்பாண்டங்களின் வடிவிலும் படைத்துத் தரும் நம் தமிழ் நாட்டின் மட்பாண்டத் தொழிலாளர்களின் திறமை போற்றுதலுக்குரியதாகும்.

வேகமாக மாறிவரும் இந்த நாகரிக உலகத்தில் நமது தொன்மையான கலாச்சாரமிக்க மண்பாண்டத் தொழில் நசிந்து விடாமல் பாதுகாத்து, அத்தொழிலில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான கிராமப்புற ஏழை மண்பாண்டத் தொழிலாளர்களுக்கும், காகிதக் கூழ் பொம்மைகள் செய்யும் தொழிலாளர்களுக்கும் போதிய வேலை வாய்ப்பு அளித்து, வாழ்க்கைக்குத் தேவையான ஊதியம் வழங்கி அவர்களைப் பாதுகாக்கும் தலையாய பணியில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கடந்த 35 ஆண்டுகளாகத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டுள்ளது.

**கிராமப்புறங்களில் வாழும் எண்ணற்ற ஏழை எளிய கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரம் உயர பொம்மைக் கொலுக் கண்காட்சிகள் வழிகோலுகின்றன.**

**1,25,864 மண்பாண்டக் கைவினைஞர்கள், கதர் வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர். இதில் 51,165 பேர் மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது.**

வாரியத்தின் 5 அலகுகள் மூலமாகவும், 119 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், மட்பாண்டத் தொழில் திட்டங்களை வாரியம் திறம்படச் செயல்படுத்தி வருகிறது. 1994-95-ஆம் ஆண்டில் மட்பாண்டத் தொழிலாளர்களின் மூலம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் உற்பத்தி 1,800 இலட்சமாகும்.

14,947 மண்பாண்டக் கைவினைஞர்கள் சொந்தமாகத் தொழில் செய்ய வாரியம் நேரிடையாக நிதி உதவி அளித்துள்ளது. 1,25,864 மட்பாண்டக் கைவினைஞர்கள், வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்புப் பெற்று வருகின்றனர். இதில் 51,165 பேர் மகளிர் என்பது குறிப்பிடத்

தக்கது. இவர்களில் பெரும்பாலோர் கிராமப்புறங்களில் வாழும் நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

தமிழ்நாட்டில் விருத்தாசலம், வீரப்பெருமாநல்லூர், திண்டிவனம், கடலூர், காஞ்சிபுரம், சென்னை கொசப்பேட்டை, அரும்பாக்கம் ஆகிய இடங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட கலைநயமிக்க பொம்மைகள் குறளகம் காதி கிராப்ட்டில் பெருமளவில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இது தவிர மாவட்டத் தலைநகரங்களில் உள்ள கதர் அங்காடிகளிலும் பொம்மைகள் ஏராளமாக விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

களிமண் போன்ற பல்வேறு மண்வகைகளில் வழுவழுப்பான அழகுமிகு தோற்றத்தில் பொம்மைகள், காகித கூழ் பொம்மைகள், மெருகேற்றப்பட்ட பலவண்ண மண் பொம்மைகள், செம்பு, கறுப்பு, வெள்ளை உலோகத்தில் தயாரிக்கப்பட்ட பொம்மைகள், சந்தனமரம், ரோஸ்வுட், நெட்டி, கொம்புகள் ஆகியவற்றில் தயாரிக்கப்பட்டுள்ள ஏராளமான பொம்மைகள் பல்வேறு வண்ணங்களில் காதி கிராப்டில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கண்ணாடிக் குச்சியைக் கொண்டு உருவாக்கப்பட்ட கலை நயம் மிக்க மிகச் சிறிய பெரிய பொம்மைகள் நம்மை வெகுவாகக் கவர்கின்றன.

மேற்கு வங்காளம், கோலாப்பூர் கேரளா, ஆந்திரா முதலிய இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் புதிய ரக நவீனமான பொம்மைகள் காதி கிராப்டில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. குறைந்த பட்சம் ரூ.1லிருந்து ரூ.5,000 வரை விலையுள்ள பொம்மைகள் மக்களின் தேவைக்கேற்ப ஏராளமாக விற்பனைக்கு உள்ளன.

**பூம்புகார்**

பூம்புகார் விற்பனை நிலையம்.. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஆண்டுதோறும் கொலு பொம்மைகள் கண்காட்சியை நடத்தி வருகின்றது.

இந்தக் கொலு பொம்மைகள் கண்காட்சியில் காகிதம், மற்றும் களிமண்ணால் செய்யப்பட்ட பொம்மைகள், கண்ணைக் கவரும் வகையில், பலவித வண்ணங்கள் தீட்டப்பட்டு, பலவித உருவங்களில் வடிவமைக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

காகிதப் பொம்மைகளில் தசாவதாரம் செட், க்ல்யாண செட், ராமர் செட், காய்வகைகள் செட், பழவகைகள் செட் மற்றும் கொலு கண்காட்சிக்கு வைக்கக் கூடிய பல்வேறு வகையான பொம்மைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மண்ணினால் செய்யப்பட்ட மீனாட்சிக் கல்யாணம், முருகன் வள்ளி தெய்வானை, லக்ஷ்மி, சரஸ்வதி, விநாயகர், பாலாஜி தாயார் செட்டுகளும், கஜலக்ஷ்மி, திருச்செந்தூர் முருகன், மயில் முருகன், திருவேற்காடு கருமாரியம்மன், நடனவிநாயகர், ராதாகிருஷ்ணன், பிள்ளையார்ப் பட்டி விநாயகர், பொம்மைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. மற்றும் பல்வேறு வகையான கலைநயம் கொண்ட கைத்திறன்மிக்க பொருட்களும் இக்கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

சிறப்புத் தள்ளுபடியாக 10 சதவிகிதம் அளிக்கப்படுகிறது.

**காதி கிராமோத்யோக் பவன்**

சென்னை மாநகரத்திலேயே பொம்மைக் கொலு கண்காட்சியானது, காதி கிராமோத்யோக் பவனில் முதலில் 1969-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

சென்னை அண்ணாசாலையில் உள்ள காதி பவனில் பொம்மைக் கொலு கண்காட்சி ஆரம்பித்ததுபோல், அவ்வை சண்முகம் சாலையில் உள்ள காதி பவன் வளாகத்திலும் பொம்மைக் கொலுக் கண்காட்சி நடந்து வருகிறது.





இந்தப் பொம்மைக் கொலுக் கண்காட்சியில் மகாராஷ்டிரா, கோலாப்பூர், கொண்டபள்ளி, லக்னோ, கல்கத்தா, பண்ருட்டி, பாண்டிச்சேரி, காஞ்சிபுரம், கடலூர், மீஞ்சூர், சென்னையில் உள்ள கொசப்பேட்டை ஆகிய இடங்களில் தயார் செய்யப்படும் பொம்மைகள் இடம் பெற்றுள்ளன.

இந்த ஆண்டு புதிதாக, மியூசிக் பேபி செட், பூநூல் கல்யாண செட், நடன அரங்க செட், சிறுவர் பூங்கா செட், கணபதி மியூசிக் செட், சிவன்ராத்திரி செட் போன்ற புதிய செட்களும், தனிப்பட்ட புதிய பொம்மைகளும் இடம் பெற்றுள்ளன.

மண், காகிதக்கூழ், உலோகம், மரம், கருங்கல், பீங்கான், பளிங்குக்கல், துணி முதலியனவற்றால் தயார் செய்யப்பட்ட் பொம்மைகளைப் பார்க்கிறபோது பிரமிப்பே ஏற்படுகிறது.



பொதுவாக, பொம்மைக் கொலு வீட்டுக்கு அழகை மட்டும்ல்ல, மனத்துக்கு மகிழ்ச்சியையும் தருகின்றது. குறிப்பாக, குழந்தைகள் மனத்திலே குதூகலத்தை மட்டுமல்ல, மன வளர்ச்சிக்கும் அவை வழிகோலுகின்றன. அதுமட்டுமல்ல, ஏழை எளியவர்களின் கைத்திறமையால் உருவான பொம்மைகள் நியாயமான விலையில் கிடைப்பதற்கும், அதன்மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் வாழ்க்கைக் கோடு மேலே உயருவதற்கும் வழிவகை ஏற்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு நாம் குறிப்பிட வேண்டும்.

–பி.வி. கிரி

# மதுவிலக்கில் மனப்புரட்சி

## செல்வன் கமலக்கண்ணன்

**வ**ங்கக் கடலாடி, வான்பொதியில் நடமா-, சங்கம் மூன்றாடி, சாரலிலே விளையாடி, தங்கக் குடியாடி, தளிரும் மலராடி, விண்ணில் விளையாடி, மண்ணில் தவழ்ந்தோடி, எங்கும் ஒளிர்ந்தோங்கும் பொங்கும் பொலியமுதாம் எங்கள் தமிழே!

சிங்க நடையும், சிங்காரத் தென்றல் நடையும், பொங்கு கடல் நடையும், பூவையரின் மென் நடையும், புரட்சிப் புது நடையும், என் புதுத் தமிழ் நடையில் காட்டி '21-ஆம் நூற்றாண்டை நோக்கி' எனும் இனியதொரு கருத்து வண்டி பூட்டி தெவிட்டாது உரைக்கின்றேன் தீந்தமிழில் தீட்டி. அவைக்கு என் முதற்கண் வணக்கம், தமிழ்ச் சுவைக்கு என்றும் நான் இணக்கம், இதுவே என் தமிழ்ச் சான்றோர் உரையின் துவக்கம், இனி பொருளுரைக்கு வருவதே அவை அடக்கம்.

காவிற்கு அழகில்லை பூவின்றி, நாவிற்கு அழகில்லை நயமின்றி, பாவிற்கு அழகில்லை பொருளின்றி, அதுபோல் மனிதனுக்கு அழகில்லை அறிவியல் இன்றி. இன்று நாம் உலகில் வளர்ந்துவரும் நாடுகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். சீரழிந்துபோன ஜப்பானிய பூமி இன்று சிங்காரபுரியாக வளர்ந்திருக்கிறது. உடைந்து நொறுங்கிப் போய்விட்ட ஜெர்மானிய நாடு இன்று உல்லாசப் பயணிகளை வரவேற்கும் உற்சாகப் பூமியாகத் திகழ்கிறது. இலண்டன் மாநகரமானலும், இங்கிலாந்து தேசமானாலும் அங்கே வளமான வாழ்வு காணப்படாத கண்டமாக இருந்து, முதலில் ஆங்கிலேயர் அங்கே குடியேறி இது தம்முடைய நாடு என்று உரிமையாக்கிக் கொண்டபின் வளர்ந்திருக்கும் அமெரிக்கத் திருநாடு. இத்தகைய முன்னேற்றங்களுக்குக் காரணம் என்னவென்றால், முக்கிய சக்தி என்னவென்றால் அதுவே அந்நாட்டு மக்களின் அறிவியல் அறிவு. இன்றே இவ்வளவு அறிவியல் வளர்ச்சியெனில் 21-ஆம் நூற்றாண்டில் உள்ள அறிவியல் வளர்ச்சியைக் கூறவா வேண்டும்? முத்திரை பதித்த சித்திரை நிலவில், இத்தரை மீது நித்திரையில் கிடக்கும் மக்கள் குடியேறி வாழும் காலம்தான் 21-ஆம் நூற்றாண்டு. வெளுக்கும் கிழக்கு நோக்கி வேள்வி செய்யமால், அஸ்தமன மேற்கை அப்போதே கீறி சூரியனைப் பறித்தெடுக்கும் ஆற்றல் பெற்ற வீர இளைஞர்கள் உருவாகும் காலந்தான் 21-ஆம் நூற்றாண்டு.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண ஏற்றதோர் பாதை அமைத்திட, தொழிலாளர் தோழர்களின் தொல்லைகளை நீக்கி, விவசாயிகள் வாழ்வில் விரைவில் முன்னேற்றம் காண, நலிவுற்று, மெலிவுற்றுக் கிடக்கும் அடித்தட்டுச் சமுதாயங்கள் பொலிவுற்று விளங்க எழிலுற்ற திட்டங்களைத் தீட்டி மகளிர் முன்னேற்றம் காண மகத்தான பாதை அமைத்து அன்னை பாரதம் அகிலத்தில் சிறந்து விளங்கும் காலந்தான் 21-ஆம் நூற்றாண்டு.

மானுடமானது சமுதாய வீதியில், சரித்திரத் தேரோட்ட, சாதனைக் கோலமிட, சகாப்தங்கள் படைக்க, சங்கநாதம் இசைக்க, தூக்கிய வாள் முனைகளுக்கும் துப்பாக்கி முனைகளுக்கும் மத்தியில் எண்ணற்ற திருப்புமுனைகள் பல பெற்றுத் தந்த ஒரு திருப்புமுனையாக அமையும் காலந்தான் 21-ஆம் நூற்றாண்டு.

திருமணமாகிவிட்ட தம்பதிகளுக்கு இடையில் ஆண் பெண் இருவருக்கும் தங்களுடைய வாழ்க்கையில் – நடையிலும் சமபங்கு, அணியும் உடையிலும் சம பங்கு, உண்ணும் வடையிலும் சமபங்கு, அளிக்கும் கொடையிலும் சமபங்கு, தாங்கும் எடையிலும் சமபங்கு, தூக்கும் எடையிலும் சமபங்கு, மக்கள் தொகைப் பெருக்கத் தடையிலும் சமபங்கு, நாட்டைக் காக்கும் படையிலும் சமபங்கு, வினாவும் விடையிலும் சமபங்கு, சமுதாயக் கடையிலும் சமபங்கு, இப்படி பத்திலும் சமபங்கு, ஏன் சொத்திலும் சமபங்கு என்று பெண்களுக்குச் சமபங்கு அளிக்கும் காலம்தான் 21-ஆம் நூற்றாண்டு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த தமிழன் தன் இன்தமிழ் இலக்கியச் சோலையில் இருத்திவிட்டுச் சென்ற இன்பக் கருத்து மலராம் திருக்குறளைப் புரட்டிப் பாருங்கள்

'கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'

– என்றாரே தெள்ளுதமிழ்க் குறள் பகன்ற சொல்லுதமிழ் வள்ளுவனார், அத்தகைய கல்வியிலும் முன்னேற்றம் அடையும் காலம்தான் 21-ஆம் நூற்றாண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. வெற்றிபெறும் வேளையிலே களத்தை விட்டோடும் வீரன், விருதுவரும் நேரத்திலே விழிதுயில் கொண்டிருக்கும் வேந்தன், பாதிநாள் போனபின் மீதிநாள் படிக்கும் மூடன், பூப்பூக்கும் முன்பாகப் புருசருக்கு விலைபோகும் பூவையரின் வாழ்வு. இவர்களைப் போல் மருத்துவத் துறையிலும் முன்னேறாத ஒரு நாட்டின் எதிர்காலமும் கேள்விக் குறியில்தான் இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை, அத்தகைய மருத்துவத் துறையிலும் முன்னேற்றம் அடையும் காலந்தான் 21-ஆம் நூற்றாண்டு. இப்படி நன்மைகள் பல இருப்பின், தீமைகளும் பல இருக்கின்றன. நாம் நூற்றுக்கணக்கான சாதிமத வேறுபாடுகளுக்குத் தீண்டாமை உணர்வுகளுக்கு நம்மையும் பலிகொடுத்துவிட்ட காரணத்தினால் நம்மையும் உட்படுத்திக்கொண்டு ஆட்படுத்திக்கொண்டுவிட்ட காரணத்தினால், இந்தச் சமுதாயத்தின் முன்னேற்றமே ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலம்

## பொன்மொழிகள்

**உண்மைக்காக எதை இழக்க வேண்டுமானாலும் இழக்கலாம். ஆனால், எதன் பொருட்டும் உண்மையைத் துறக்கலாகாது.**

**–சுவாமி விவேகானந்தர்**

**உண்மையே சொல், அது உன் வார்த்தையைப் பாதுகாக்கும். கலந்து யோசனை செய், அது உன் சிந்தனையை வளமாக்கும்.**

**–வள்ளலார்**

**ஜனநாயகத்தில் ஒவ்வொரு குடிமகனும் சிந்திக்கும் திறனுள்ளவராகவும், கல்வியறிவு உடையவராகவும் திகழ்தல் வேண்டும்.**

**–டாக்டர் அம்பேத்கர்**

பின்நோக்கிக் கிடக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

'இருட்டறையில் உள்ளதடா, உலகம்; சாதி இருக்கின்றது
என்பானும் இருக்கின்றானே'

– என்ற பாவேந்தரின் பாட்டு வரிகளுக்குப் பைந்தமிழ் ஏட்டு வரிகளுக்கு, பண்பிதயக் கூட்டு வரிகளுக்கு, ஊட்டம் கொடுத்தோமா என்றால் இல்லை. கிழக்கே பிறந்தவன் கீழானவன், மேற்கே பிறந்தவன் மேலானவன், வடக்கே பிறந்தவன் வாழப் பிறந்தவன், தெற்கே பிறந்தவன் தேயப் பிறந்தவன் என்ற வர்க்கப் பிரிவினைகளும் வக்கிரச் செயல்களும் வலம் வந்துகொண்டிருப் பதைத் தடுத்தோமா என்றால் இல்லை.நேற்றைய பொழுது கண்ணீரால் கரைந்தது. இன்றைய பொழுது செந்நீரால் நிறைந்தது, நாளைய பொழுது எப்படி விடியுமோ என்ற கேள்விக் குறியில்தான் இந்த மானுடமானது சமுதாய வீதியில் நடமாடிக் கொண்டிருக்கிறது. சமுதாயக் குற்றங்களும் நடனமாடிக் கொண்டிருக்கின்றன.

தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டுப்போன பாரத தேசம் தன்னை வாழ்வித்துத் தந்த அண்ணல் காந்தியடிகளும், உலக நாடுகள் உச்சாணிக் கொம்பில் வைத்து உவகைக் கூத்தாடிய உன்னதத் தலைவி இந்திரா காந்தி அவர்களும், பார் முழுதும் போர்ப் பறையை தீக்கிரையாக்கி சமாதானப் புறாவைச் சமதர்மப் பாதையிலே பறக்கவிட்ட ராஜீவ் காந்தி அவர்களும், துப்பாக்கிகளே தேசியம், வெடிகுண்டுச் சப்தங்களே தேசிய கீதம், செங்குருதி வாடைகளே பொதுவுடைமைச் சித்தாந்தம் என்ற கோட்டான்களின் கொடூரச் சதிக்கு ஆளாகி இந்தியாவின் இதயம் துப்பாக்கிக் குண்டுகளால் தூளாகி, ரத்தச் சேற்றினை முத்தமிட்டவாறே ஜனநாயகப் புறா பாழாகி, அந்தச் சோகம் முழுவதும் ஒரு கூரிய வேலாகி பாரத மாதாவின் நெஞ்சைத் தேய்த்ததே! ஐயகோ! நெஞ்சம் பதைத்ததே. எனவே, 21-ஆம் நூற்றாண்டில் சாதிக் கறையான்களும், தீண்டாமை மத இன வெறி ஆபாசப் புற்றுகளும் வன்முறைகளும் மிகுந்து இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

'முப்பது கோடி முகமுடையாள் உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள்' என்றுபாரதி பாடினான் அன்று. 80 கோடி முகமுடையாள் எதிர்காலத்தை எண்ணி ஏங்குகிறாள் என்று பாடத்தோன்றும் அளவுக்கு இன்று மக்கள் தொகை பெருகிவிட்டது. மேலும் மதுவின் காரணமாக மக்கள் ஒளி இழந்த வீடாக, உயிர் இழந்த உடலாக, களை மலிந்த பயிராக, கவினிழந்த மலராக அல்லலுறு கிறார்கள். அதற்காகத் தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களின் மதுவிலக்கில் மனப்புரட்சி என்ற திட்டம் பாராட்டுக் குரியதாகும்.

நாளைய உலகங்களே, நம்பிக்கை நட்சத்திரங்களே, நாட்டின் முதுகெலும்புகளே, நல்லதொரு விடிவெள்ளிகளே, நாடி நரம்புகளே, நவபாரதத்தின் நவீன சிற்பிகளே, ரத்த நாளங்களே, இதயத்துடிப்புகளே, மாணவர்கள்தான், எனவே மாணவர்கள் ஆகிய நாம் உழைப்பு-நம்பிக்கை என்ற இரு தண்டவாளங்களின்மீது முயற்சி என்னும் இயந்திர வாகனத்தைச் செலுத்தி – சோர்வு, வறுமை என்னும் விபத்துக்களைத் தவிர்த்து 21-ஆம் நூற்றாண்டு நோக்கி இனிய பயணம் மேற்கொள்வோமாக!

நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திருத்தல் நன்றோ, சொல்வீர்! தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும். இந்தக் கொள்கை இனிது விளங்க மந்தக் கொள்கை மாய்ந்து விலக எந்தக் குறையும் ஏற்படாதிருக்க சந்தத் தமிழில் ஒலிப்போம் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி நல்கி சென்று வருகிறேன். நன்றி, வணக்கம்.

**(உலகத் தமிழ் மாநாட்டுப் பேச்சுப் போட்டியில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து 4.1.95)**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய பட்டு

தூய சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23








திரு. டி.கே.எஸ். நாடகமன்றம்
"இராசராச சோழன்" நாடகம்

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995
யாதும் ஊரே யாவரும் கேளிர்!

# கலை நிகழ்ச்சிகளில் சில...

திரு. டி. சங்கரமூர்த்தி -
பஞ்சமுக வாத்தியம்




தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026
ஆவணித் திங்கள் : 31
மலர்: 26 இதழ்: 6
16.9.1995
விலை ரூபாய்: 3


# இந்த இதழில்...


சொல்லேர் உழவர் நம் அண்ணா
- மாண்புமிகு முதல்வர் ........................................ 2

ஊனமுற்றோருக்கு ஒவ்வொருவரும் உதவ வேண்டும்
- மாண்புமிகு முதல்வர் உரை ........................ 3

படமும் செய்தியும் ........................................ 9

திராவிடமணி
இரட்டைமலை சீனிவாசன் ........................ 13

வீரத்தின் விளைநிலம்!
- கவிஞர் இளந்தேவன் ........................ 17

இவர்தான் பாரதி! ........................................ 23

ஆசிரியர் தினம்
- மாண்புமிகு முதல்வர் வாழ்த்துச் செய்தி ........................ 24

பெண்ணின் பெருமை-குடும்பம்
- முனைவர் இராம சௌந்தரவல்லி ............ 26

புதுக்கோட்டை மாவட்டம்
பல்துறைப் பணி விளக்க முகாம் ............ 33

பெண்களுக்குப் பெரியார்
தந்த சிறப்பு ........................................ 36

மலைவாழ் மக்களின்
வாழ்க்கையில் மறுமலர்ச்சி ........................ 41

காமராசர் மாவட்டம்
பல்துறைப் பணி விளக்க முகாம் ............ 43

குற்றாலத்தில்
குதூகலச் சாரல் விழா! ........................ 46




## இதழ்தோறும் ஓர் இனிய குறள்

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு (27)

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்படும் ஐந்தன் வகைகளையும் ஆராய்ந்து அறிய வல்லவனுடைய அறிவில் உள்ளது உலகம்.



# சொல்லேர் உழவர் நம் அண்ணா !

## —மாண்புமிகு முதல்வர்

எந்த மாமனிதரின் காலடிச் சுவடுகளை, நாம் காலம் தோறும் பின்பற்ற வேண்டுமோ, எந்த தவப் புதல்வரின் கருத்துகளை, நாம் காலாகாலத்திற்கும் செயல்படுத்த வேண்டுமோ, அந்த மாமனிதரான பேரறிஞர் அண்ணாவின் பிறந்த பொன்னாளை, இன்று மகிழ்ச்சியோடு கொண்டாடிக் கொண்டிருக் கிறோம்.

இந்த நாள், இன்றைய காலகட்டத்தில், ஒவ்வொரு தமிழனும் தன்னையும், தனது இலக்கையும் அறிந்துகொள்ள வேண்டிய நன்னாள்.

நாம் அறிஞர்களுக்கும், சான்றோர் களுக்கும் இப்படி விழா நடத்துவது, அவர்கள் நினைவைப் போற்றுவதற்காக மட்டுமல்ல, அவர்கள் வகுத்துத் தந்துள்ள பாதையில், நாம் சரியாக நடைபோடு கிறோமா, என்பதைத் தெரிந்துகொள்ளவும் தான்!

சிலர் பிறந்த தாயகத்துக்காக மட்டும் போராடுவார்கள்.

சிலர் பேசும் தாய்மொழிக்காக மட்டும் போராடுவார்கள்.

ஆனால், தாயகத்துக்காகவும், தாய்மொழிக்காகவும், காலமெல்லாம் போராடி, வெற்றிமேல் வெற்றி கண்ட தலைவர்களில், முன்வரிசையில் முன்னணித் தளபதியாய், தளநாயகராய்த் திகழ்பவர், நம் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்.

'வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி வேண்டும்' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினார். அந்த எழுச்சியைத் தமிழகத்துக்கு மட்டுமல்ல தமிழுக்கும் உருவாக்கித் தந்தவர் பேரறிஞர் அண்ணா.

'போர் வீரர்கள் செல்வதற்கு முன் பாதை போடுவோர், கரடுமுரடான பாதைகளைச் செப்பனிட்டு, முன்னே செல்வது போல, நம்முடைய எதிர்காலச் சந்ததிகளுக்கு நாம், முள்ளும் கல்லும் புதரும் போல, நம் சமுதாயத்தில் அடைந்துள்ள ஆபாசங் களையும், ஊழல்களையும் அறவே ஒழித்து, நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்துவிட்டுச் செல்வது, நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்', என ஒரு முறை அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

சமுதாயச் சாலையைச் செப்பனிடுவது ஒன்று, அந்தச் சாலையில் நடைபோடும் போர் வீரனாக விளங்குவது, வேறொன்று, ஆனால், இந்த இரண்டு சாதனைகளின் அருமையான தொகுப்புதான், பேரறிஞர் அண்ணா.

அண்ணா அவர்கள் பாதையை உருவாக்கிய தொண்டர் மட்டுமல்ல அந்தப் பாதையில், ஏறுநடை போடும் வீரர்கள் பலரை உருவாக்கிய தீரர். நல்ல நாற்றங்காலையும் உருவாக்கி, அதில் நல்ல பயிர்களையும் வளர்த்துத் தந்த, சொல்லேர் உழவர் ஆவார் நம் அண்ணா. அவரது இந்த முயற்சிகளின் நன்கொடை தான், இன்று நாம் காண்கின்ற, உலகம் [illegible] பாராட்டுகின்ற தமிழ்ச் சமுதாயம் [illegible] நாம் அமைத் திருக்கும் இந்த [illegible]

—'புரட்சி [illegible]



199918



# ஊனமுற்றோருக்கு ஒவ்வொருவரும் உதவ வேண்டும் !

## அனைத்து நாட்டு அறிஞர்கள் தொழில் நுட்ப மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை

ஊனமுற்றோருக்கான உதவி உப கரணங்கள் உற்பத்தி மற்றும் விநியோகிப் பதில் தன்னிறைவு பெறச் சர்வதேச அறிஞர்கள் தொழில்நுட்ப மாநாடு, 5.9.95 அன்று சென்னை 'பார்க் ஷெராட்டன் ஓட்டலில்' தொடங்கியது. இந்த மாநாட்டை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், குத்து விளக் கேற்றி தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு மத்திய நலத்துறை அமைச்சர் திரு. சீதாராம் கேசரி அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு தமிழக சமூக நலத் துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி அவர்கள் வரவேற்றுப் பேசினார். இந்த மாநாட்டில் உடல் ஊன முற்றோருக்கு உதவும் பயிற்சியாளர்களுக்குச் சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

'உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காகத் தமிழக அரசு அனைத்து உதவிகளையும் செய்யும்.

உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காகத் தமிழக அரசு சில மாதங்களுக்கு முன்பாகக் கொள்கைத் திட்டம் ஒன்றை அறிவித்தது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் முதன்முதலாக இத்தகைய திட்டம் அறிவிக்கப்பட்டது.

உடல் ஊனமுற்றோருக்குத் தயாரிக்கும் கருவிகள்- பார்ப்பதற்கு அழகாகவும், பொருத்தமாகவும், விலை குறைவாகவும் இருக்கவேண்டும்'.

—மாண்புமிகு முதல்வர்

## ● நான்காம் அட்டை செய்தி:

இந்த மாநாட்டில் உலகெங்கிலும் இருந்து 22 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

இந்த மாநாட்டை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்துப் பேசினார். அவர் பேசியதாவது:

மிக முக்கியமான சர்வதேச அறிஞர்கள் தொழில்நுட்ப மாநாட்டைத் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இத்தகைய மாநாட்டை நடத்த சென்னை நகரைத் தேர்ந்தெடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அயல்நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் வந்திருக்கிறீர்கள். நீங்கள் இங்கு இருக்கும் போது, தமிழ்நாட்டின் கலாச்சாரம், பண்பாட்டைத் தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காகச் சில மாதங்களுக்கு முன்பு மாநில அரசு ஒரு கொள்கைத் திட்டத்தை வகுத்து அறிவித்தது. உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்கு ஒருங்கிணைந்த ஒரு திட்டத்தை இந்தியாவிலேயே தமிழக அரசுதான் முதன்முதலில் அறிவித்தது. உடல் ஊனமுறுவதைச் சீக்கிரம் கண்டுபிடிப்பது, அதனைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது, அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதி; வேலைவாய்ப்புப் பயிற்சி, பொருளாதார ரீதியில் அவர்களுக்கு மறுவாழ்வு தருவது போன்ற சேவைகள் என்ற நோக்கத்தில் இந்தக் கொள்கைத் திட்டம் வகுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றும்போது; நிச்சயமாக உடல் ஊனமுற்றவர்கள் இந்தச் சமுதாயத்தில் சொந்தக் காலில் நிற்கமுடியும்.

உடல் ஊனமுற்றோர், கண்பார்வையற்றோர், கால் அசைக்க முடியாத நிலையில் உள்ளவர்கள், மன வளர்ச்சி குன்றியவர்கள் ஆகியோருக்கு உதவி செய்ய நிதி ஒதுக்குவதில் நாங்கள் தயக்கம் காட்டவில்லை. தேவையான நிதியை ஒதுக்கி வருகிறோம். இதுமட்டுமல்ல, உடல் ஊனமுற்றோருக்குச் சேவை செய்யும் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது.

இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளில் இருந்து நிபுணர்கள் வந்திருக்கிறீர்கள். உங்களுடைய அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொள்வீர்கள். அதன் மூலம் உடல் ஊனமுற்றோர் சந்திக்கும் இடர்ப்பாடுகள், சவால்களுக்கு நல்ல தீர்வுகளை நீங்கள் காண முடியும்.




ஸ்டீபன் ஹாகின்ஸ் என்ற விஞ்ஞானி பற்றி உங்களில் பலர் தெரிந்திருப்பீர்கள். அந்த விஞ்ஞானி சிறு வயதில் இருந்தே நடக்க முடியாத நிலையில் இருந்தார். எழுத முடியாது. தானே உணவு உட்கொள்ள முடியாது. முன்னால் விழுந்த முகத்தை அவரால் நிமிர்த்த முடியாது. யாராவது ஒருவர்தான் அவரது தலையை நிமிர்த்தி வைக்க வேண்டும். அவர் பேசுவது புரியாது. அப்படிப்பட்டவர், உடல் ஊனமுற்றோருக்கான சக்கர நாற்காலியில் அமர்ந்து கொண்டு சாதனை படைத்தார். கணித மாமேதை ஆனார். உடல் ஊனம் என்பது ஒரு பெரிய விஷயமல்ல என்பது ஸ்டீபன் ஹாகின்ஸ் வாழ்க்கையில் இருந்து தெரிந்து கொள்ளலாம். இன்றைக்கு அவர் நவீன கம்ப்யூட்டர் உபகரணங்களைக் கொண்டு நன்றாகப் பேசுகிறார்.

இன்றைய சூழ்நிலையில் நவீன உபகரணங்களை அனைவருக்கும் தருவது என்பது இயலாத காரியமாகும். இதுபோன்ற நவீன தொழில்நுட்பம், கருவிகள், ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான் நமது நோக்கம். இதுதவிர, அவர்களுக்குள் ஒளிந்து கிடக்கும் திறமைகளையும் வெளிக் கொண்டு வருவது நமது கடமையாகும்.

இசை, கைவினைப் பொருட்களை உருவாக்குதல், ஓவியம் வரைதல் போன்றவைகளில் உடல் ஊனமுற்றவர்கள் திறமைமிக்கவர்களாக இருக்கலாம். அந்தத் திறமைகளை எல்லாம் நாம் வெளிக் கொண்டு வரவேண்டும். இத்தகைய ஊக்கத்தை அவர்களுக்கு அளிப்பது மிகவும் முக்கியம்.

புதிய தொழில் நுட்பத்துடன், உள்ளூரில் கிடைக்கும் பொருட்களை வைத்து- மனித சக்தியை வைத்து கருவிகளைத் தயார் செய்ய வேண்டும். உபகரணம் செய்து கொடுக்கும் போது அவற்றைப் பொருத்துவதற்குப் பயனுள்ளதாக இருக்கும்.

உடல் ஊனமுற்றோருக்கான உபகரணங்களைச் செய்யும்போது, அது அழகாக வும் இருக்க வேண்டும். சிரமப்படக் கூடாது. கருவியை எடுத்தவுடன் எளிதாகப் பொருத்தும்படி இருக்க வேண்டும். அதே சமயத்தில் விலையும் நியாயமாக இருக்க வேண்டும். உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமானால், எப்படி மூக்குக் கண்ணாடியையும், பல் செட்டையும் எளிதாக மாட்டுகிறார்களோ, அதேபோன்று உடல் ஊனமுற்றோருக்கான கருவிகளைப் பொருத்துவது எளிதாக இருக்க வேண்டும். விஞ்ஞானத் தொழில் நுட்பம் உடல் ஊனமுற்றோருக்கு நல்வாழ்க்கையைக் கொடுக்கும். இப்போது கம்ப்யூட்டர் உலகம். பிரச்சினைகளைக் கம்ப்யூட்டர் மூலம் தீர்வு காண முடியும். புதிய புதிய தொழில்நுட்பம் வரவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக உடல் ஊனமுற்றோருக்கு நாம் ஒவ்வொரு வரும் தேவையான அனைத்து உதவிக்ளையும் செய்ய வேண்டும்.

இந்த மாநாட்டில் அறிஞர்கள் கலந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுங்கள். புதிய தீர்வுகளைத் தாருங்கள். உடல் ஊனமுற்றோர் நலனுக்காகத் தமிழக அரசு



## தலைவர் அண்ணா

தமிழ் மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற எண்ணங்களையும், அவற்றிற்கான நல்ல தொண்டு பற்றிய நோக்கங்களையும், எல்லோருடைய உள்ளங்களிலும் பல ஆண்டுகளாக விதைத்து வளர்த்த தலைவர் அறிஞர் அண்ணா. தம் பேச்சாலும், எழுத்தாலும் தமிழர் விழிப்புக்காகவும், முற்போக்குக்காகவும் பலவகையாலும் பாடுபட்டு வந்த பெருமகனார் அவர்.

–டாக்டர் மு. வரதராசனார்

அனைத்து உதவிகளையும் செய்ய உறுதி பூண்டுள்ளது. இந்த மாநாட்டில் நீங்கள் நல்ல தீர்வுகளைச் சிபாரிசுகளைத் தாருங்கள். அவைகளை எங்களது கொள்கைத் திட்டத்தில் சேர்த்து, மேலும் சிறந்த முறையில் செயல்படுத்த வழிவகுக்கும்.

—இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் அறிவியல் தொழில் நுட்ப ஆலோசகர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் பேசினார்.

இந்த மாநாட்டுக்கு, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

"உடல் ஊனமுற்றோருக்கான கருவிகளை மிகுந்த தொழில் நுட்பத்துடன் குறைந்த விலையில் தயாரிக்க வேண்டும். அத்தகைய கருவிகள் எளிதாகப் பொருத்திக் கொள்ளவும் வசதியாக இருக்க வேண்டும்" என்று அந்தச் செய்தியில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூறியிருந்தார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி அவர்கள் வரவேற்றுப் பேசுகையில்-

"உடல் ஊனமுற்றோர் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம். உடல் ஊனமுற்றோருக்கு நல்வாழ்வு அளித்ததில் பல்வேறு விருதுகளையும் பெற்றிருக்கிறோம். உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காக இன்று 10 கோடி ரூபாயை இதுவரை இல்லாத அளவுக்கு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்" என்று குறிப்பிட்டார்.

விழா முடிவில், மத்திய நலத்துறைக் கூடுதல் செயலாளர் நன்றி கூறினார்.

# மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. சீதாராம் கேசரி அவர்கள் பாராட்டு!

**ஊ**னமுற்றோருக்கான உதவி உபகரணங்கள் உற்பத்தி மற்றும் விநியோகிப்பதில் தன்னிறைவு பெற சர்வதேச அறிஞர்கள் தொழில்நுட்ப மாநாடு சென்னையில் நடைபெறுவது மிகவும் பொருத்தமானதாகும். "ஊனமுற்றோர்களுக்காக விரிவான மறுவாழ்வுக் கொள்கையை வகுத்து அதை அதிக அக்கறையோடும், சிரத்தையோடும் மக்கள் ஒத்துழைப்போடு வெற்றிகரமாக அமல் நடுத்திவரும் ஒருசில மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்று", என்று மாண்புமிகு மத்திய நலத்துறை அமைச்சர் திரு சீதாராம் கேசரி அவர்கள் மனம் திறந்து பாராட்டினார்.

"பல்வேறு அலுவல்களுக்கு இடையில், இந்தக் கருத்தரங்கில், கலந்து கொண்டிருப்பதன் மூலம் ஊனமுற்றிருப்பவர்கள் நலனில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு இருக்கும் அக்கறையும், ஆர்வமும் வெளிப்படும்" என்று அவர் குறிப்பிட்டார்.

சென்னையில், 5.9.95 அன்று நடந்த இந்தக் கருத்தரங்கில், மாண்புமிகு மத்திய நலத்துறை அமைச்சர் திரு. சீதாராம் கேசரி அவர்கள் தலைமையுரையாற்றினார்.

"ஊனமுற்றோர் நலவாழ்வு குறித்து சட்டம் ஒன்றை உறுப்பினர் நாடுகள் இயற்றிட வேண்டும் என்பது இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் முக்கிய விஷயங்களில் ஒன்று. ஊனமுற்றவர்கள் விஷயத்தில் அவர்கள் நலனுக்காக விரிவான சட்டம் ஒன்றை நாம் நாடாளுமன்றத்தில் ஏற்கெனவே அறிமுகப்படுத்திவிட்டோம் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.





மனவளர்ச்சி குன்றிய நபர்கள் நலவாழ்வுக்காக அதிகாரப்பூர்வமாகச் சட்டரீதியிலான அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் நாம் தீவிரமாகி இருக்கிறோம்.

பலவிதத்தில் ஊனமுற்றிருக்கும் நபர்களின் நலவாழ்வுக்கென, சென்னையில் தேசியக் கழகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு நிலம் நன்கொடையாகத் தருவதற்குத் தமிழக முதல்வர் அவர்கள் சம்மதித்திருக்கிறார். அவருக்கு இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊனமுற்றோருக்கான உதவி உபகரணங்களை அவற்றில் பெரும்பாலானவற்றை நாம் இறக்குமதி செய்தே வந்தோம். ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டிருக்கிறது. இங்கே ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சியைப் பார்த்தாலே போதும், ஊனமுற்றோருக்கான உதவி உபகரணங்களில் பலவற்றை நாமே உள்நாட்டில் பிரெய்லி சாதனம், காது கேட்கும் கருவி, செயற்கைக்கால்... இப்படி தயாரிப்பதில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

டேராடூனில் பார்வை இழந்தவர்களுக்கான தேசியக் கழகம், அவர்களின் கல்வி மற்றும் மறுவாழ்வுக்கான 50 பொருட்களைத் தயாரித்து வருகிறது. அரசுத்துறை நிறுவனங்கள் மட்டுமில்லாமல், தனியார் நிறுவனங்களும், தொண்டு நிறுவனங்களும் ஊனமுற்றோருக்கான உதவி உபகரணங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளன.

இந்தக் கருவிகள் ஊனமுற்றவர்கள் வாங்கும் விதத்தில் அவர்கள் கைக்குக் கட்டுப்படியாகும் விலையில் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுதான் இன்றைய அவசியமாகும். இந்நிலையில் அவர்களுக்கு ஏற்படும் அதிகப் பளுவைக் குறைப்பதற்காகத் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்போடு திட்டங்களை வெற்றிகரமாக அமல் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஊனமுற்ற நபர்களுக்கு இதுமாதிரி அரிய சேவை ஆற்றி வருவதற்காக நாட்டில் 550-க்கும் மேலான தொண்டு நிறுவனங்கள் மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறுகின்றன."

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களின் அறிவியல் துறை ஆலோசகர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் இக்கருத்தரங்கில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார். இருதய அறுவைச் சிகிச்சைக்குப் பின் பொருத்தப்படும் பேஸ் மேக்கர் கருவி, புற்று நோய்க் கண்டுபிடிப்புத் தானியங்கிக் கருவி, கண் அறுவைச் சிகிச்சைக்குப் பின் பயன்படுத்தப்படும் 'காதேடெர்' ஆகிய உயர் தொழில் நுட்பம் வாய்ந்த மருத்துவ உபகரணங்கள் யாவும் அடுத்த (1996-இல்) ஆண்டில் கட்டுப்படியாகும் விலைக்குக் கிடைக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

இந்தியத் தொழில்நுட்ப நிபுணர்கள், மருத்துவ நிபுணர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவை வைத்துக்கொண்டு உள்நாட்டிலேயே ஊனமுற்றோருக்கான உதவி உபகரணங்களைத் தயாரிப்பதில் முன்னேற்றம் காணப்பட்டு வந்துள்ளது என்றும், மத்தியப் பாதுகாப்பு அமைச்சகத்தைச் சேர்ந்த ஏவுகணைத் தொழில்நுட்ப நிபுணர்களும் கூட இந்த ஊனமுற்றோருக்கான உயர் தொழில்நுட்ப உபகரணங்கள் தயாரிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்
# செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்




## சிறப்பு அம்சங்கள்

- 5 1/2 ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.
- 1.4.95 முதல் தமிழ்நாட்டில் உள்ள அஞ்சலகங்களில் ரூபாய் 1,000/-மும் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கு 2% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,
வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,
'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

சிறுசேமிப்பு – பெருமையின் அடையாளம்.

DIRP/DIS/95





பேரறிஞர் அண்ணா அவர்களின் 87-வது பிறந்தநாளையொட்டி, அண்ணாசாலையிலுள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மாலை அணிவித்தார் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர். (15.9.95)

# படமும் செய்தியும்

வ.உ.சி. பிறந்தநாளையொட்டி, சென்னைத் துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனார் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்தனர் (5.9.95).





அமெரிக்க வர்த்தக வளர்ச்சித் திட்டத் துணை அமைச்சர் திரு ரேமாண்ட் விக்கெரி அவர்கள், தலைமைச் செயலகத்தில் 13.9.95 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சந்தித்துப் பேசினார். தமிழ்நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், பல நடவடிக்கைகளை எடுத்துவருவது பாராட்டுக்குரியதாகும் என்று அவர் கூறினார். அப்போது அவர் அமெரிக்காவுக்கு வருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அழைப்பு விடுத்தார்.

அமெரிக்காவைச் சேர்ந்த போர்டு கார் நிறுவனமும், டுபாண்ட் நைலான் நிறுவனமும் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஏற்பாடு செய்ததற்காக தனது நன்றியை மாண்புமிகு முதல்வர், அவர்களுக்குத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் தொழில் நுணுக்கம் வாய்ந்த புதிய ஹைடெக் தொழிற்சாலைகள் ஏற்படுவதற்கு வசதியான சூழ்நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கியதற்கும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது மற்றொரு அமெரிக்கத் துணை அமைச்சர் திரு ஒயிட்னர், அமெரிக்க வர்த்தக அமைச்சகத்தின் இந்திய விவகார அதிகாரி, அமெரிக்க மின்துறை அமைச்சரின் உதவியாளர் திரு பாப்ரெய்லி வினியார்டு மற்றும் சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதர் திரு டி.பி. ஹவுசர், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.





சென்னையில் நடைபெற்ற ஆசிரியர்கள் தின விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு க. பொன்னுசாமி அவர்கள், டாக்டர் புரட்சித்தலைவி நல்லாசிரியர் விருதினை வழங்கினார். மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு மு. அம்மமுத்துப் பிள்ளை அவர்கள் உடன் உள்ளார் (5.9.95).

சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் இலவசப் பரிசுக் கூப்பன்களை, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்டார். அதனைச் சிறுசேமிப்பு ஆலோசனைக் குழுவின் துணைத்தலைவர் டாக்டர் ஜெ. பரந்தாமன், எம்.எல்.ஏ., அவர்கள் பெற்றுக்கொண்டார்.





மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களின் தலைமையில் நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நில வரி பற்றிய ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில், நடைபெற்றது. இக் கூட்டத்தில், முதன்மை ஆணையர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர் திருமதி லடிகா டி.படல்கர், இ.ஆ.ப., வருவாய்த் துறைச் செயலர் திரு எஸ். மெய்கண்டதேவன், இ.ஆ.ப., நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித்துறை இயக்குநர் திரு எஸ். மணிமாறன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். (12.9.95)

**இருட்டறையில் ஒரு தீபம்:**

மனிதன் ஓர் உண்மையைக் கண்டு பிடித்தான் என்றால், இருட்டறையில் ஒரு தீபத்தை அவன் ஏற்றினான் என்று பொருள்!.

ஆண்கள் மரங்கள், பெண்கள் அந்த மரத்தை ஆதாரமாக, கொழு கொம்பாகச் சுற்றிப் படரும் கொடிகள் குழந்தைகள் அந்தக் கொடி களில் குலுங்கி ஆடும் நறுமண மலர்கள்.

**உழைப்பு:**

இயற்கையின் தடைகளைத் தாண்டினால் தான், மனிதன் முன்னேற முடியும். உழைப்பினாலும், சிந்தனையினாலுமே அது சாத்தியப்படும்.

அனைத்திற்கும் உழைப்பே அஸ்திவாரம், உழைப்பின்றி கடினமான உழைப்பின்றி, முன்னேற்றம் என்பது முடியாத காரிய மாகும். **–இங்கர்சால்**



600 008

# 'திராவிடமணி' இரட்டைமலை சீனிவாசன்

–ரகமி

**"திராவிடமணி" திவான் பகதூர் இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு இந்த ஆண்டு, 135-வது பிறந்த ஆண்டு மட்டு மன்றி, 50-வது நினைவாண்டு மாகிறது. அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இக் கட்டுரை வெளியிடப்படுகிறது!**

**1930**-ஆம் ஆண்டு நவம்பரில் "முதலாவது வட்டமேசை மாநாடு " இலண்டன் மாநகரில் கூடியது. பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து அம்மாநாட்டிற்கு வந்திருந்தவர்களுக்கு ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் தமது "வின்சர் காஸ்சல்'' என்னும் ராஜ மாளிகைக்குச் சிறப்பு விருந்தளிக்க அழைத்திருந்தார். மாளிகையில் மன்னர் தம்பதியர், வந்திருந்தவர்களைக் கைகுலுக்கி வரவேற்று உபசரித்து, தேநீர் விருந்தும் அளித்தனர். அடுத்து ஓர்முறை ஜார்ஜ் மன்னர் அந்தப் பிரதிநிதிகளிடம், "தீண்டாமை!" என்று கூறுகிறார்களே, அப்படியானால் தீண்டாமை என்றால் என்ன?" என்று கேட்டார்.

இதற்கு அங்கு வந்திருந்தவர்களில் உயரமும், முகத்தில் நல்ல முறுக்கு மீசையோடு தோற்றமுடைய அப்பிரமுகர் மிக்க துணிச்சலோடு, மிகுந்த அர்த்த புஷ்டியான ஆங்கிலத்தில், "மேன்மைதங்கிய மன்னர் பிரானே! "தீண்டாமை" என்பது மேல் சாதியினருக்கும், கீழ் சாதியினருக்கும் ஒன்று சேரா்த இடைவெளியாகும். இதில் மேல் சாதியினரால் ஒதுக்கப்பட்டவர்களே கீழ் சாதியினர். இவர்களை மேல் சாதியினர் தீண்டவேமாட்டார்கள்!" என்பதற்கான காரணங்களை விளக்கினார். இதனைக் கேட்டதும் வியப்படைந்த ஜார்ஜ் மன்னர், "அப்படியானால் கீழ் சாதியினரில் ஒருவர் திடீரென நடுத்தெருவில் விழுந்துவிட்டால் அப்போது அவனை மேல் சாதியினன் தூக்கிவிட மாட்டானா?" என்றதற்கு அப்பிரமுகரே, "தூக்கியே விட மாட்டான்" என்றார். இதற்கு மன்னர் மேலும் திடுக்கிட்டு, "அன்ன அநியாயம்! எனது ஆட்சியில் அவ்விதம் நடக்க பார்க்கவும் விடமாட்டேன்!" என்றார். அன்று பிரிட்டிஷ் ராஜாங்க ஐந்தாம் ஜார்ஜ் மன்னரிடம் கைகுலுக்கி அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் மன்னரே வியக்கும்படி ஆங்கிலத்தில் பதில் கூறியவர் நம் தமிழகத்தே தாழ்த்தப்பட்டக் குலத்தில் பிறந்த தமிழர்தான் "இரட்டைமலை சீனிவாசன்'' ஆவார்.

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டம் கோழியாளம் என்ற கிராமத்தில் 1860-ஆம் ஆண்டு ஜூலை 7-ஆம் நாள் திரு "இரட்டைமலை", திருமதி ஆதிலட்சுமி தம்பதியருக்குப் பிறந்தவர் "இரட்டைமலை சீனிவாசன்". இவருக்கு பெற்றோர் இட்டப்பெயர் சீனிவாசன். தன் பெயரோடு தந்தையின் பெயரையும் முழுமையாக இணைத்துக் கொண்டதனால், "இரட்டை



**'இரட்டைமலை' சீனிவாசன்**



இலண்டனில் நடந்த வட்டமேசை மாநாட்டிற்குச் சென்று திரும்பியவர்களுடன் 'இரட்டைமலை' சீனிவாசன். படத்தில் பூமாலை அணிந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்) ஏ.டி. பன்னீர்செல்வம், 'இரட்டைமலை' சீனிவாசன், பொப்பிலிராஜா, சர்.ஏ. ராமசாமி முதலியார்.

மலை சீனிவாசன்" என்ற பெயரே பிரபலமாகி நிலைத்து விட்டது. இவரது முன்னோர்கள் "சாம்பவ சந்ததியர்" எனப் படுவர். ஆதியில் சென்னையில் கிழக்கிந்தியர் ஆட்சிக்காலத்தில் தஞ்சாவூரிலிருந்து வியாபார நிமித்தமாகச் சென்னைப் பட்டிணத்திற்கு வந்ததாக, அவரது வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் கூறுகிறது.

தொடக்கத்தில் இவர் தமது கல்வியை, கோழியாளம் திண்ணைப் பள்ளியில் தொடங்கி, அடுத்து செங்கல்பட்டிலுள்ள ஆரம்பப் பாடசாலையில் சேர்ந்து பயிற்றார். பின்பு கோவையிலிருந்து சொந்த உறவினர்கள் மூலம் மேல்படிப பிற்காக கோவை வாசியானார். அங்கு அவர் படித்தப் பள்ளியில் பெரும்பாலும் உயர்ந்த சாதி மாணவர்களே. அதே பள்ளியில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் என்போர் 3 சதவிகிதமே இருந் தனர். அந்நாளில் சாதிகோட் பாடுகள் மிக்க கொடுமையாக இருந்த காலமாகும். அதனால் மாணவன் "இரட்டைமலை சீனிவாசன்" இதர மாணவர் களுடன் பழகினால் தனது சாதி, குடும்பம் இவைகளைப் பற்றி அறிய நேரிட்டால், அம்மாண வர்கள் தன்னைப் பற்றித் தாழ் வாக எண்ணக் கூடும் என்ற கவலையால் அன்றாடம் பள்ளிக்கு, ஆரம்ப மணி அடித்த பின்னரே வகுப்பிற்கு வருவதும், பள்ளி விட்டதுமே, எல்லா மாணவர்களைவிட, தானே வகுப்பை விட்டு வேகமாக வெளியேறி ஓடிச் சென்று விடுவாராம். இதோடு சக மாணவர்களோடு சேர்ந்து விளையாட முடியாத கொடுமை யினால், அந்த மாணவனின் பிஞ்சுமனம் ஏங்கியது.

படிப்பின் முழுத்திறமையால் மாணவன் இரட்டைமலை சீனிவாசன் கோயம்புத்தூரில் கல்லூரி மாணவராக இருந்த போதே **1887**-ஆம் ஆண்டு தமது **27**-ஆம் வயதில் அரங்கநாயகி என்பவரைத் திருமணம் புரிந்தார். பின்பு அவர் நீலகிரியிலேயே, ஓர் ஐரோப்பிய வியாபார நிறுவனத் தில் கணக்காயராக சுமார் பத்து ஆண்டுகள் பணியாற்றினார். இக்காலத்திலும் இரட்டைமலை சீனிவாசன் மனதில் இந்தத் தீண்டாமையை எப்படி ஒழிப்பது? என்பதே பெரும் கவலையாகவே சூழ்ந்து கொண்டது.

இலண்டன் மாநகருக்குச் சென்று தாழ்த்தப்பட்டோர் இடுக்கண்களை பிரிட்டிஷ் அரசாங்கத்தாரிடம் அனுதாபத் தைப் பெற பம்பாயிலிருந்து கப்பல் மார்க்கமாக சென்றவர் சிறிது காலம் கீழ் ஆப்பிரிக் காவைச் சேர்ந்த ஜான்சி பாரிலும் தங்கியவர், பின்பு தென்னாப்பிரிக்காவுக்குச் சென் றார். அங்கு 'நெட்டா'வில் தங்கி அங்கு நீதிமன்றத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றி வந்ததோடு, அங்கு காந்தியடிகள் வழக்கறிஞராகப் பணியாற்றி வருகையில், அவருக்கு மொழிப் பெயர்ப்பாளராக இருந்ததோடு, அவருக்குத் தமிழ் மொழியையும், அவர் தமது பெயரை 'மோ.க. காந்தி' என எழுதக் கற்றுத் தந்தவரும் இவரே!

**1921**-இல் சென்னைக்குத் திரும்பிய 'இரட்டைமலை' சீனிவாசன் மீண்டும் அரசியலில் பங்குகொள்ள அந்நாளில் பிரபல கட்சியாக விளங்கிய



'நீதிக்கட்சி' (ஜஸ்டிஸ் பார்ட்டியில்) இணைந்து செயல்படத் தொடங் கினார். **1923**-ஆம் ஆண்டி லிருந்து **1938**-ஆம் ஆண்டு வரை யில் சென்னை மேல்சபைக்கு நியமன உறுப்பினராகப் பணி யாற்றினார். **1924**-ஆம் ஆண்டு ஆகஸ்டு **25**-ந் தேதி சட்டசபை கூடியபோது 'இரட்டைமலை' சீனிவாசன் அவர்கள் தாழ்த்தப் பட்ட சமூக மக்கள், இதர எல்லாப் பொது மக்களுக்கும் சமமாகப் பொதுச்சாலைகளில் நடக் கவும். பொதுக் கிணறுகளில் நீர் எடுக்கவும், மற்றும் சில தீர் மானங்களைக் கொண்டுவந்ததை அரசு ஏற்றுக்கொண்டு இதற் கான தனிச் சிறப்பு அறிக்கை, அரசாங்க கெசட்டிலும் பதிவா கியது.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றங்களுக்காகப் பல வழிகளில் அயராது பாடுபட்டு உழைத்துவந்த காரணத்தினால் பிரிட்டிஷ் அரசாங்கம் இவருக்கு **1926**-ஆம் ஆண்டு பிப்ரவரி **20**ந் தேதி 'ராவ் சாகிப்' என்ற சிறப்புப் பட்டத்தையும் அளித்து கௌரவித்தது. தாழ்த்தப்பட்ட இன மாணவர்களின் கல்விக் காக இவர் 'தாழ்த்தப்பட்டோர் கல்விக் கழகம்' என்பதைனத் தொடங்கி அதுவே படிப் படியாக வளர்ந்து, 'சென்னை மாகாண ஷெட்யூல்டு கிளாஸ் பெடரேஷன்' என்ற பெயரோடு சிறப்புற்றது.

வாழ்க்கையில் இவருடன் பொதுத் தொண்டிலும், தாழ்த் தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றம் அடைய, கணவனோடு இணைந்து உழைத்த அவரது மனைவி திருமதி அரங்கநாயகி அம்மாள் **1928**-ஆம் ஆண்டு பிப்ரவரி **4**-ந் தேதி காலமானார். அந்த அம்மையாரின் சடலம் சென்னை ஓட்டேரி மயானப் பூமியில் நல்லடக்கம் செய்யப் பட்டது. மனைவியை இழந்த துயரம் மிகுந்திருந்த போதிலும், அவர் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக வாதாட **1930**-ஆம் ஆண்டு இலண்டனில் நடந்த 'முதலாவது வட்ட மேசை மாநாட்டில்' கலந்துகொள்ள இந்தியாவிலிருந்து சென்ற பிரமுகர்களில் டாக்டர் அம்பேத்கர், ஏ.டி. பன்னீர் செல்வம், ஆகாகான், மகம்மது உஸ்மான் சாகிப், 'ஆற்காடு பிரமுகர்' ஏ. இராமசாமி முதலியார், ஏ.பி. பாத்ரோ மற்றும் பலருடன் 'இரட்டை மலை' சீனிவாசன் அவர்களும் மிகப் பிரபலமானவரே.

'முதல் வட்ட மேசை மாநாட்டில்' 'இரட்டைமலை' சீனிவாசன் தாழ்த்தப்பட்ட சமூக மக்களுக்கு அரசியலில் அதி காரம் வழங்கினால்தான் 'தீண்டாமை' என்ற கொடி நோய் ஒழிந்துபோகும், அதோடு வயது வந்தோர் அனைவருக்கும் பொதுத் தேர்தலில் வாக்குரிமை வழங்கவேண்டும், சட்டசபையில் ஆதிதிராவிட மக்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் அளித்தால் தான் அவர்களது வாழ்க்கையும் முன்னேற்றம் அடையும்!" என ஆணித்தரமாக உரையாற்றினார். ஏற்கெனவே இவருக்கு 'ராவ் சாகிப்' கௌரவப் பட்டம் அளித்த அதே பிரிட்டிஷ் அர சாங்கம் இவருக்கு **1931**-ஆம் ஆண்டு 'ராவ் பகதூர்' பட்டமும் அளித்து மேலும் சிறப்பித்தது.

டாக்டர் அம்பேத்கர் அவ ருக்கு தென்னிந்தியத் தாழ்த்தப் பட்ட மக்களைப் பற்றிய சரியான விவரங்களைச் சேகரித்து அவைகளைத் தனக்குத் தானே முறைப்படி பரிசீலித்து அதனை அவருக்குக் கொடுத்துதவினார். தென்னிந்திய தாழ்த்தப்பட்ட இன மக்களைப் பற்றி டாக்டர் அம்பேத்கர் தகுந்த ஆதாரங் களோடு பேசுவதற்கு மூல காரணகர்த்தாவாக விளங் கியவர், 'இரட்டைமலை' சீனிவாசன் அவர்களே ஆவார். ஆனால், டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களைப் புத்த மதத்திற்கு மாறவேண்டும் என்று பிரசாரம் செய்ததை மிக்க பலமாக எதிர்த்துக் கண்டித் தவரும் 'இரட்டைமலை' சீனிவாசனே ஆவார்! இதனால் இவர்கள் இருவருக்குமே கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டது. இது விஷயமாக இவர்கள் இருவருக் கும் சமரசம் செய்ய வந்தவர் களிடம் 'இரட்டைமலை' சீனிவாசன் "நான் ஒரு இந்தியன்! இந்து மதத்தின் கலாச்சாரப் பெருமைகளையும் கூறும் தென்னகத்துத் 'தமிழனாக' இருக்கவே விரும்புகிறேன். மற்ற மதங்கள் அவசியமில்லாதது!" என வாதாடியவர் தனது வாழ் நாள் முழுவதும் அதையே கடைப்பிடித்து வந்தார்.

**திடமான எண்ணத்தைவிட, அருமையான குணம் வேறொன்றுமில்லை.**

**—தியோடர் ரூசவெல்ட்**

இவரது சீரிய பணியைப்

பாராட்டி அரசு இவருக்கு 1936 ஜனவரிப் புத்தாண்டுத் தினத்தில் 'திவான் பகதூர்' கௌரவப் பட்டமும் அளித்து சிறப்பித்தது. 1937-இல் தமிழகத்தில் நடந்த பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் ஓர் இணைக் கட்சி யான 'சுயராஜ்யக் கட்சிக்கும்', 'ஜஸ்டிஸ் கட்சி' என்ற நீதிக் கட்சிக்கும் கடும் போட்டியாக இருந்து இறுதியில் சுயராஜ்ஜியக் கட்சியே பெரும் வெற்றி பெற்றுத் தமிழகத்தில் முதன்முறையாக ஆட்சியை அமைத்தது. அப்போது சென்னை மாகாணத்தின் மந்திரிசபைக்கு இராஜாஜி அவர்களே 'பிரீமிய'ராகப் பதவி ஏற்றார். அந்நாளில் தமிழக முதலமைச்சருக்குப் 'பிரீமியர்' அல்லது 'பிரைம் மினிஸ்டர்' என்ற பெயரும் இருந்தன. சென்னை மாகாண முதலமைச்சராக இராஜாஜி இருந்தபோது, 'இரட்டைமலை' சீனிவாசன் 'ஜமீன்தார்களின் நிலங்களைக் கைப்பற்றி ஜமீன் ஒழிப்பு' செய்வதோடு, கைப்பற்றிய நிலங்களை உழவர்களுக்கு வழங்க வேண்டும்!' என்று வாதாடினார்.

அந்நாளில் ஆதிதிராவிட மக்களின் நலனுக்காகப் பாடுபட்டு வரும் 'இரட்டைமலை' சீனிவாசனின் சேவையை மேலும் பாராட்டும் வகையில் 'தமிழ்த்தென்றல்' என்றழைக்கும் திரு.வி.க. அவர்கள் 'திராவிட மணி' என்ற பட்டமும் வழங்க ஓர் விழாவிற்கும் ஏற்பாடாகியது. அந்த விழாவிற்கு தமிழகப் பிரீமியர் இராஜாஜியும் கலந்துகொண்டார். தமது பாராட்டில் இராஜாஜி அவர்கள் '... அரசியலில் நாங்கள் இருவரும் வெவ்வேறு கட்சியாக இருப்பினும், தாழ்த்தப்பட்ட மக்கள் நலனில் எங்கள் இருவருடைய கொள்கையும் ஒன்றுதான். 'திராவிடமணி' என்ற பட்டத்திற்கு இவரே மிக பொருத்தமானவர்! திருப்பதியில் ஏழுமலைகளைக் கடந்து சென்று அந்த 'சீனிவாசனை'த் தரிசிக்கலாம்! ஆனால் இந்த புனிதமான தமிழகம்பதியிலே 'இரட்டைமலை'யிலேயே நம் சீனிவாசனைச் சுலபமாகக் காணலாம். நமக்கு ஐந்துமலைத் தூரம் நடை மிச்சம்!' என்றதுமே அந்த விழாவில் எழுந்த கரவொலி எங்கும் எதிரொலித்தனவாம்!.

சிறிது காலம் சென்னையை அடுத்த பூந்தமல்லியில் வசித்து வந்த, 'இரட்டைமலை' சீனிவாசன், சென்னையில் பார்க்டவுன் என்றழைக்கும் பகுதியில் பெரியமேட்டிற்கு வந்து வசிக்கலானார். இங்கு வீரபத்திரன் தெருவில் 4-ஆம் எண்ணுள்ள இல்லத்தில் வசித்துவந்தார். சிறிது காலம் உடல்நலமின்றி தீவிரச் சிகிச்சைகள் அளித்தும் எவ்வித பயனுமளிக்காத காரணத்தினால் 1945-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ந் தேதி செவ்வாய்க்கிழமை காலமானார். அப்போது அவருக்கு வயது 85. சென்னை ஓட்டேரி மயானத்தில் அவரது அன்பு மனைவியின் கல்லறைக்கு அருகிலேயே 'தீண்டாமை ஒழிப்பதை' இலட்சியமாகக் கொண்ட 'தாழ்த்தப்பட்ட மக்களின் திலகம்' என போற்றும் 'இரட்டைமலை' சீனிவாசனின் உடலும் நல்லடக்கம் செய்யப்பட்டு இன்றோடு 50 ஆண்டுகள் கடந்துவிட்டன.



**ஆழ்ந்த மனிதாபிமானி!**

எளிய வழிமுறைகள், தூய்மையான சிந்தனைகள், எல்லோரிடத்தும் பரிவு - அண்ணாவின் இம்மூன்று தன்மைகளும் அவர்பால் என்னை ஈர்த்தன. அவர் நிதானமிக்கவர்; ஆழ்ந்த மனிதாபிமானி.

—டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார்

# வீரத்தின் விளைநிலம்! வெற்றியின் திருவுரு! பாடுவோம் எங்கள் பைந்தமிழ்த் தாயின் புகழ்!

**—கவிஞர் இளந்தேவன்**

தென்றலுக்கு மென்மைதனைச் சொல்லித் தந்து,
தேனமலர்க்கு நறுமணத்தைக் கற்றுத் தந்து,
அன்றிலுக்குக் காதல்மனப் பாங்கைச் சொல்லி,
அரவிந்த மலருக்குச் செம்மை தந்து,
முன்றிலிலே விளையாடும் குழந்தை கட்கு
முத்தமிழைச் சுவைக்கின்ற பயிற்சி தந்தாய்,
என்றைக்கும் இளையவள்நீ தமிழே, உன்னை
எண்ணுபவர்க்கு எந்நாளும் முதுமை யில்லை,

தீப்புனலில் நீராடும் கவிதை நெஞ்சத்
திறம்எனக்குத் தந்துவிடு தமிழே, உன்னைப்
பாப்புனலில் நீராட்டி மகிழ்வேன் யார்க்கும்
பதில்உதவி நான்செய்யா திருந்த தில்லை.
வாய்ப்புனலே காளத்தி யப்ப ருக்கு
வழிபாடாய் அமைந்ததை நீ அறிவாய் இந்தச்
சேய்ப்பறவை சிற்றலகில் கவ்வி வந்த
சிறுமலரை நீமறுக்க நியாய மில்லை.

போதையிலே சிலருக்குக் கவிதை தோன்றும்.
பொடிமட்டையால்சிலர்க்குக் கவிதை தோன்றும்,
பாதையிலே தேர்போன்ற பாவை மார்கள்
பவனிவரப் பலருக்குக் கவிதை தோன்றும்.
வாதையிலே சிலருக்குக் கவிதை தோன்றும்,
வார்த்தையுடன் போராடிக் கவிதை தோன்றும்
ஏதுபொருள் தரஎனக்குக் கவிதை தோன்றும்?
இனிப்பொன்றைத் தந்துவிட்டால் கவிதை தோன்றும்!

**(வேறு)**

அந்த-
இனிக்கும் இளமைஉன் இதழ்களிலே இருப்பதனால்
மணித்தமிழே உன்னை மன்றத்தில் வணங்குகிறேன்.

**(வேறு)**

தமிழ் கூறும் நல்லுலகே, உன்றன் காதில்
தங்களது கீதத்தை இசைக்க வந்த
அமிழ்தூறும் வாய்க்குயில்கள் ஆறு; பாடும்
அரும் தமிழர் சால்புகளோ ஏழு; பாட்டில்
தலைமறக்கும் திக்குகளோ எட்டு; பொங்கித்
ததும்புகின்ற இன்சுவைகள் ஒன்ப தானால்
கமழ்கவிதை அரங்குக்கு வணக்கம் கூறக்
கைகுவியச் சேர்ந்திடும்என் விரல்கள் பத்து.

**(வேறு)**

பாவலர் பாடல் கேட்டுப் பின்புதான்
பரிசு வழங்குதல் பண்டைய வழக்கம்.
பரிசு கொடுத்துவிட்டுப் பாடல் கேட்கிறார்



**வாழ்க்கையில் வெற்றி பெறுவதே கல்வியின் நோக்கம் என்று கருதுவது தவறு. வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம்.**

**—டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்**

## தவப்புதல்வன் அண்ணா!

நாடு புகழ்ந்தேத்தும் நல்லபே ரறிஞன்
பாரிலுள் ளோருக்குப் பைந்தமிழ்ச் சாரதி
மலராடு சோலையில் வண்டாடு புதுமலர்
வழக்காடு மன்றத்தில் தேர்ந்த வழக்காடி
இன்னபுகழ் சேர்த்த எமதருமை அண்ணா
தாங்குபுகழ் தமிழினத்தின் தானைத் தலைவன்
ஓங்கியசீர் பாரதத்திற்குற்ற தனித்தலைவன்
தரணிபுகழ் அன்னை தமிழின் தவப்புதல்வன்

—தவத்திரு குன்றக்குடி அடிகளார்

பைந்தமிழ் முதல்வர் புரட்சித் தலைவி!
கொடையிலேகூட இவர் புரட்சி செய்கிறார்.
ஐந்தாம் உலகத் தமிழ்மா நாடு
கண்ணதாசன் தலைமையில் அரங்கம்
புரட்சித் தலைவர் எதிரே இருக்கிறார்.
பொங்கி வந்தது கவிதை எனக்கு!
காரணம் என்ன? மதுரையில் நான் அன்றோர்
கவிதை முன் அல்லவா கவிதை பாடினேன்!
எட்டாம் உலகத் தமிழ்மா நாடு
சுரதா தலைமையில் சொற்றமிழ் அரங்கம்
எதிரே இருக்கிறார் புரட்சித் தலைவி
பொங்கும் கங்கையாய் எனக்குள் கவிதை!
காரணம் என்ன? தஞ்சையில் இன்றொரு
காவியத்தின் முன் அல்லவா கவிதை இசைக்கிறேன்!

**(வேறு)**

எட்டுத் திசையும் வெற்றி முழக்கும்
இன்பத் தமிழின் மாநாடு
இத்தரை போற்றும் முத்தமிழ் முதல்வர்
கூட்டிய எட்டாம் மாநாடு

எத்திசை வாழும் தமிழரும் ஒன்றாய்
இணைகிற எட்டாம் மாநாடு
எங்கள் தமிழ்மொழி, எங்கள் தமிழ்மொழி!
எனும்இசை கேட்கிற மாநாடு

தொன்னூற் றைந்தாம் ஆண்டு பிறக்கையில்
தோன்றுது புத்தொளி தஞ்சையிலே
தொன்மைத் தமிழின் புதுமைப் பயிர்கள்
துலங்குது காவிரி நஞ்சையிலே

ஆயிரம் ஆயிரம் அருமைகள், பெருமைகள்
அழகிய முத்தமிழ் தனி உடைமை



அறிவியல் தமிழ்என்னும் நான்காம் பிரிவும்
அன்னைக் காகும் இனிஉடைமை!

ஆயிரத்திருநூ றாகிய அறிஞர்கள்
ஆய்வாம் மணிமுடி சூடுகிறார்.
அறிவுத் திருமகள் புரட்சித் தலைவி
அழைப்பினில் தஞ்சையில் கூடுகிறார்.

இயலும், இசையும், இன்றமிழ்க் கூத்தும்
எல்லா வேளையும் விருந்தாகும்
(-காலை, மாலை என்ற கணக்கே
இங்கே கைது செய்யப்பட்டுவிட்டது.)
இத்தனை காட்சியை எப்படிக் காண்பது

என்பது வார்த்தையின் தவிப்பாகும்.
புரட்சித் தலைவியின் அழைப்பை ஏற்றுப்
பூமிப் பந்தே மகிழ்கிறது!
பூவிரி சோலை காவிரிக் கரையில்
புதிதாய்த் தமிழ்யுகம் எழுகிறது.

தங்கத் தமிழ் மகள் வடிவினிலே ஒரு
தாரகை வந்தது மண் மீது!
தத்தித் தவழ்ந்த தமிழக வளர்ச்சி
தாவி எழுந்தது விண் மீது.

மகத்தில் பிறந்தவர் ஜகத்தை ஆள்வது
மாநிலம் சொல்லும் பழஞ்செய்தி.
மகமே இங்கு மாமகளாக
வந்து பிறந்தது புதுச்செய்தி!

பெரியார், அண்ணா, புரட்சித் தலைவர்
பெருமைகள் சேர்ந்தொரு பெண்ணாச்சு.
பெண்மைக்கரசி புரட்சித் தலைவி
என்னும் தமிழர் கண்ணாச்சு.

ஆயிரம் காலப் பயிராய் எங்கள்
அருமைத் தலைவி புகழ் வாழ்க!
அங்கயற் கண்ணி குங்குமம் எங்கள்
அரசர்க்கரசி தனைக்காக்க!

சக்தி குமாரன் தேவன் பாடும்
சங்கத் தமிழ் இது தோழர்களே,
சந்தனப் பொதிகைச் செந்தமிழ் போல
சந்ததம் முதல்வர் வாழியவே!

**(வேறு)**

சமூக நீதி காக்கும் வீராங்கனை வழிகாட் டுகின்ற
வரலாற்றுப் பாதையில்

சமூக நலம் காக்கும் அமைச்சர் அவர்களே,
அமைச்சர் எல்லாம் இப்படிக் கவிதை பாடினால்
கவிஞர் எல்லாம் என்ன ஆகலாம்?
அமைச்சர்கள் ஆகலாம்!
வராது இருக்கிறார் மலேசிய நாட்டின்
முன்னாள் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள்.
மலேசியா -
நாடா அது?
செந்தமிழ், நற்சீனம், சிறந்த மலாயினம்
செப்பும் இம்மூன்றையும் சேர்த்துக் கட்டிய
நாடா அது!
மாபெரும் தமிழர் சாமுவேலர் இங்கு வந்திருக்கிறார்
மாரிமுத்து அவர்கள், என் இதயம் கவர்ந்த
ஈழத்தமிழரின் பிரதிநிதியாய்த்தொண்டமான் அவர்கள்,
அமைச்சர் பெருமக்கள் எல்லோர்க்கும் என்
வணக்கம்.
பேரவைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் பெருமக்காள், ஆன்றோரே, சான்றோரே
அனைவர் பெயரையும் நான் அவசரமாய்ச்
சொன்னாலும்
ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாடு வந்துவிடும்!
ஆகையால்,
ஒற்றை வணக்கம் நான் உரைக்கின்ற போதினிலே
உங்கள் திருப்பெயரை என் உதடுகள் சொன்னதாய்
கணக்கு வைத்துக் கொள்ளுங்கள்;
கை தட்ட மறக்காதீர்!
வங்கக்கடல் இன்று வழிமாறி உள்புகுந்து
தங்கக் கடலாகித் தஞ்சையிலே கூடியதா?
கடல் என்றாலே இது ஆழக்கடல்,
பசுபிக் கடலைப் போல்!
பசுபிக் என்றாலே அமைதி என்பதனால்
அப்பெயரை வைத்தார்கள்.
ஒரு வேளை
கடல் என்று சொன்ன காரணத்தால் எல்லோரும்
அமைதியாய்க் கவி அரங்கம் கேட்கிறாரோ?
எனக்குத் தெரியாது!
உங்கள் இதயத்தைத் தொட்டுப் பார்க்கின்ற
இனிய வரிகள் வந்தால்
அவ்வப்போது உங்கள் கரங்களுக்கு வேலை
கொடுங்கள்.
இதுதான் இந்த நாட்டுக்குத் தேவையான **கரசேவை!**
வங்கக் கடல் இன்று வழிமாறி உட்புகுந்து
தங்கக் கடல் ஆகித் தஞ்சையிலே புகுந்ததா?
புனித நதிகூடும்
முக்கூடல் சங்கமம் போல்,
இது மனித நதிகூடும் மகத்தான சங்கமமா?
கண்ணெட்டும் வரைக்கும் கருத்திருக்கும் தலைகள்.
சாயம் பூசாமலே கருத்திருக்கும் தலைகள்!
கண்ணெட்டும் வரைக்கும் கருத்து இருக்கும் தலைகள்
கவியரங்க மேடையிலும் கருத்து இருக்கும் தலைகள்;



### உள்ளம் கொள்ளை கொண்டவர்!

தொல்காப்பியரும், திருவள்ளுவரும் இளங்கோவடிகளும் திருமுறை ஆசிரியர்களும் சேக்கிழாரும் கம்பரும் புகமுடியாத தமிழ் உள்ளங்களிற் புகுந்து நின்று ஒளிவளர் விளக்கேற்றிய அறிஞர் அண்ணா, எழுத்தும் பேச்சும், அன்பும் இன்பமும் கொண்டு கோடிக்கணக்கினரான தமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட திறம், வரலாற்றில் இதுகாறும் ஒருவரும் பெற்றிராத பெருஞ் சிறப்பு.

—பேராசிரியர் ஔவை
சு. துரைசாமிப் பிள்ளை.

ஆம் கருத்து இருக்கும் தலைகள்!

அரங்கத் தலைவர் சுரதா
சுரதா தமிழின் சுரதம் சுரதா
சுரதா தமிழைத் தவிரத் துதியா
விரதா கரதா மரைகள் குவியச்
சுரதா அருளைச் சுரதா சுரதா

தேக்கும் கவிதைப் புனல் நீ சுரதா,
தேனார் தமிழின் திறம் நீ சுரதா
யாக்கும் கவிதைக்கெது காரணம்? உன்
மூக்குப் பொடியா மொழிவாய் சுரதா?

**வீரம்**

காதலுக்கு எத்தனை வயது?
கண்களுக்கு எத்தனை வயது-
அத்தனை வயது காதலின் வயது!

வீரத்திற்கு எத்தனை வயது?
இரத்தத்திற்கு எத்தனை வயது?
அத்தனை வயது வீரத்தின் வயது!

வீரத்திற்கு எத்தனை வலிமை?
வானத்தின் இடிக்கு என்ன வலிமை,
அந்த வலிமை வீரத்தின் வலிமை!

வீரம் இல்லாதவன் கையிலே கேடயம்.
தோசைக் கல்லுக்குத் தோதாக இருக்கும்.
வீரம் இல்லாதவன் கையிலே போர்வாள்,
நகக்கண் இடுக்கில் சிக்கிக்கொண்டிருக்கும்

அழுக்கை அகற்ற மட்டுமே பயன்படும்!
சங்கப் புலவர்கள் கண்ட சால்பு
வீரம் - மகத்தான வீரம்!

இன்றைக்குக்கூட வீரர்கள் இருக்கிறார்.
தோழனிடம்ஒரு வீரன் சொன்னான்-
"வேங்கையை நேற்று வேட்டையாடினேன்
இதோ பார்த்தாயா வேங்கையின் கால்கள்!"
நண்பன் கேட்டான்-
"தலையைக் கொண்டு வந்திருக்கலாம் இல்லையா?
கால்களை ஏன் காட்டுகின்றாய்?"
வீரன் விளக்கினான்-
"நான் என்ன செய்வது
எனக்கு முன் எவனோ கொண்டுபோய்விட்டான்!"
இதுவா வீரம்?

பிளந்த வாயுடன் முதலைகள் மொய்க்கும்
பள்ளம், அதனைச் சுற்றிலும் மேடை
வேடிக்கை பார்க்கத் திரண்டது கூட்டம்
அழகி ஒருத்தி கைக்குட்டையை
அந்தக் குளத்திலே வீசியெறிந்தாள்;
நினைவு வையுங்கள்-
முதலைகள் மொய்க்கின்ற மாபெரும் குளம்.
"குட்டையில் மூழ்கிக் கைக்குட்டையைக் கொண்டுவரும்
அற்புத வீரனைத் திருமணம் புரிவேன்
விருப்பம் உள்ளவர் விரைக" என்று உரைத்தாள்.
அறிவிப்பு முடிந்ததும்
அமைதி, அமைதி, அப்படி அமைதி!
'குபீர்' என ஓசை!
குளத்தில் எவனோ குதித்துவிட்டிருக்கிறான்.

ஒரு நிமிடம்! ஒரே ஒரு நிமிடம்!
உயரே இருந்தவர்
உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்க.
கைக்குட்டையுடன் அவன் கரையிலே ஏறினான்.
எல்லோர் விழிகளும் அவனையே நோக்கின;
எத்தனை வீரம் என்றிசை பாடின.
அவனோ யாரையோ தேடிக் கொண்டிருந்தான்;
"என்னதம்பி விஷயம்" என்றொரு முதியவர் கேட்டார்;
"எவனோ என்னைக் குப்புறத் தள்ளினான்.
அவனை உதைக்கத் தேடிக் கொண்டிருக்கிறேன்"
என்று சொன்னானாம்.
இப்படிச் செயற்கை வீரமும் உண்டு!
பெண்களைப் பார்க்கையில்
பேச்சாளர் எல்லாம் ஊமைகள் ஆகிறார்கள்.
All orators are dumb when beauty pleadeth!

காளையை அடக்கும் காளைக்கே பெண்ணைக்
கட்டிக் கொடுப்பது அன்றைய வழக்கம்.
கலித்தொகைப் புலவன் கவிதை சாட்சி
இது நடக்குமா?
"இதோ பாரம்மா இவன்தான் வீரன்
காளையை அடக்கிய கட்டிளம் காளையை
மணந்துகொள்ள மகிழ்ச்சிதானே?"
எனத் தாய் கேட்டாள்.
என் சொல்வாள் இன்றைய திருமகள்?
"அம்மா அறியாத அசடுநீ இதைக் கேள்!
மாட்டையே அந்தப் பாடு படுத்தினான்
மங்கையை என்ன பாடு படுத்துவான்?
எனக்கு வேண்டாம்" என்று சொல்கிறாள்.

ஆண்மை இங்கு பெண்மை அடைகிறது;
பெண்மை இங்கு ஆண்மை அடைகிறது!
ஆகவே, இங்கு சோதனைக் குழாய்களே
கருத்தரிக்கின்றன!

நாம்எல்லாம் எப்போதும்
வீரத்தைப் பற்றி விளக்கமாய்ப் பேசுவோம்.
நாங்கள் எல்லாம் பாட்டுடைத் தலைவராகப்
பவனி வந்தாலும்,
வீட்டுக்குள் நாங்கள் எல்லோரும் பாட்டுடைத்
தலைவர்கள்தான்
மனைவியின் பாட்டுடைத் தலைவர்களே நாங்கள்!

எமலோகத்தில் ஒரு நாள் நடந்தது-
பூலோகத்தில் இருந்து புதியதாய் வந்திருந்த
ஆண் ஆவிகளை வரிசையாய் நிற்க வைத்தார்கள்.
மனைவி சொல் கேட்கும் கோழைகள் ஒருபுறம்
மனைவி சொல் கேளாத மாவீரர் மறுபுறம்.
ஆவிகள் எல்லாம் அப்பாவிகள் ஆக,
ஒரே வரிசையில் அணிவகுத்திருந்தன.
மனைவி சொல்லே மந்திரம் என்றன,
ஒரே ஓர் ஆவி ஒதுங்கி நின்றிருந்தது.

எமனுக்கு மகிழ்ச்சி; எல்லையில்லா மகிழ்ச்சி.
பூலோகத்தில் ஒரு பயலாவது இப்படி
மனைவி சொல் கேளாத மாவீரனாக
இருக்கின்றானே என்று மகிழ்ச்சி.
இருந்தாலும் அவன் வாயிலிருந்தே அதை
வரவழைக்க எமனார் கேட்டார்-
"என்னடா பயலே நீ என்ன
துணைவிக்கு அச்சாத துணிச்சல் மிக்கவனோ?"
என்று கேட்டதும், ஆவி உரைத்தது
"இப்படிப்பட்ட சமயங்களில் எல்லாம்
எப்படிச் செயல்படுவது என்று எனது மனைவி
எனக்குச் சொல்லி அனுப்பாததாலேதான்
தனித்து நிற்கிறேன்" என்று சொன்னானாம்.
இதைக் கேட்டவுடன் எமதர்மராஜர்
மயங்கி விழுந்தார்!
ஏனென்றால் அன்றைக்கு
எமகண்ட வேளையில் சபைக்கு வந்திருந்தார்!

பெண்கள் உரிமை பற்றிப் பேசுவதற்கு நாம் யாரோ,
அவர் நமக்கு உரிமைகளை
அளித்திருப்பதால் அன்றோ
அரங்கத்தில் இன்றைக்கு ஆர்ப்பாட்டம்
நடத்துகின்றோம்!
அனைத்துலக ஆண்கள் ஆண்டு
International men's year!
அனைத்துலக ஆண்கள் ஆண்டு ஒன்று கொண்டாட
பெண்கள் அனுமதித்தால் பேருதவியாக இருக்கும்:

நான் பார்தியைக் கேட்டேன்,
செல்லம் மாளைக் கேட்டுச்செப்புவதாகச் சொன்னான்.
பாவேந்தர் பாரதிதாசனைக் கேட்டேன்
பழனியம்மாளைக் கேட்டுப் பகர்வதாய்ச்
சொல்லிவிட்டான்!
என் வீட்டிலும் அதே கதைதான்!

அன்றைய வீரம்
"சிற்றில் நற்றூண் பற்றி
யாங்காகியரோ நின் மகன்?"
கேட்கிறான் ஒரு நண்பன்:
"தாயே உன் மகன் எங்கே?"
அப்போது சொல்கிறாள்
"அவன் எங்கோ தெரியாது.
புலி இருந்து போகிய மலைக்குகை போல
ஈன்ற வயிறு இதுதான். தோன்றுவான்
எங்கோ போர்க்களம் தனிலே!"
பெற்ற வயிறு இது; ஆனால்
எங்காவது போர்க்களத்தில் போய்ப்பார் என்றாள்.

இன்றைக்கு எப்படியிருக்கும்?
தாய் சொல்கிறாள்
"பஜாஜ் வண்டியில் பாங்குற வந்து
மச்சியைத் தேடும் மதனகோபாலனே
ஈன்ற வயிறோ இதுவே,
தோன்றுவான் ஏதோ தியேட்டரில்தானே".
இப்படி உரைப்பாள் என்று சொன்னாலும்,
பாம்புக் குட்டிக்குப் பல் விளக்கத் துடிக்கின்ற
இளைய வீரர்கள் இன்னும் இருக்கிறார்

# அண்ணாவும் நாதஸ்வரமும்

அண்ணா அவர்களுக்கு நாதசுர இசை என்றால் மிகச் சின்னஞ்சிறு பருவத்திலிருந்தே மிக்க ஆர்வம் உண்டு. நடு இரவில், நிலவொளிக் காலத்தில் தோழர் இராசரத்தினம் அவர்களின் நாதஸ்வர இசை, தெருக் கோடியிலே எழும்ப- அதனைத் தொலைவில் நின்று கேட்பதிலே அண்ணா அவர்களுக்குத் தனி விருப்பம்.

அறிஞர் அண்ணா அவர்கள் திருவாடுதுறை இராசரத்தினம் அவர்களின் நாதசுர இசையிலே திளைத்து, அவரைப் பலபடப் பாராட்டிப் போற்றி மகிழ்ந்து அவரோடு இனிய முறையிலேயே பழகி வந்தார்கள்.

நாதசுர மன்னர் டி.என். இராசரத்தினம் அவர்களின் நாயனக் கச்சேரி அண்மையில் எங்கேனும் உண்டு என்றால், அங்கு போகும் வாய்ப்பு இருக்கிறதென்றால், அண்ணா அவர்கள் அங்கு ஓடோடிப் போய் இருந்து, அவரது நாதசுர இசையைக் கேட்டு மகிழ்வார்கள்.

அவையில் தம் எதிரே அண்ணா அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்துவிட்டால், தோழர் இராசரத்தினம் அவர்கள் பெருமகிழ்ச்சியுற்று, பெரு முயற்சி எடுத்து, மிகத் திறம்பட நாயனம் வாசித்துக் காட்டுவார்கள்.

திருச்சியில் தோழர் டி.பி. பொன்னுசாமி அவர்கள் வீட்டுத் திருமணம் ஒன்றிற்குத் தோழர் இராசரத்தினம் அவர்களின் நாதசுர இசையரங்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. நாதசுர இசையரங்கு முடியும் தறுவாயில் அறிஞர் அண்ணா அவர்கள் அங்கு வந்தார்கள். அண்ணா அவர்கள் வந்துவிட்டார்கள் என்பதை அறிந்தவுடனே, தோழர் இராசரத்தினம் அவர்கள் தம் களைப்பையும் பாராமல், வாசிப்பை நிறுத்த வந்த நிலையை மாற்றி, மேற்கொண்டு ஒன்றரை மணி நேரம் மிக நேர்த்தியாகத் திறம்பட வாசித்துக்காட்டினார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!.

–திரு. பொன். கு. கோதண்டபாணி எழுதிய 'அறிஞர் அண்ணா வாழ்க்கையில் சுவையான சம்பவங்கள்' என்னும் நூலிலிருந்து.

சங்க காலத்து வீரர்களைப் போல
அண்மைக் காலத்திலும்
வீரத்தின் விளைநிலம் வ.உ.சி. இருந்தார்,
பாடல் எரிமலை பாரதி இருந்தான்,
வாலிபப் புயலாய் வாஞ்சி இருந்தான்.

வாஞ்சி என்பவன் வீரனே அல்லன்;
அவன் ஒரு அற்புதமான ஆராய்ச்சி மாணவன்.
எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டு
ஆராய்ச்சி அரங்குக்கு வரவேண்டிய
ஆராய்ச்சி மாணவன்.
வாஞ்சி என்பவன், என்னதான் செய்தான்?
அனைத்தையும் சுட்டால் Ash கிடைக்கிறது.
அந்த ஆஸ்சையே சுட்டால் எது கிடைக்கிறது?
என்று ஆராயப் போனவன்!

வீரம் இல்லாத அடிமை இனத்திற்கு
சுதந்திரம்கூட சுமையாய் இருக்கும்.
எருமைக்கும் அடிமைக்கும் என்ன வேறுபாடு?
கழுத்துப் புண்ணைக் கொத்திக்கொண்டிருக்கும்
காக்கையை விரட்ட
எருமை மாடு தன் தலையை ஆட்டும்.
அடிமை மனிதனோ அந்த நேரத்திலும்
எஜமான் உத்தரவை எதிர்பார்த்திருப்பான்.

இயற்கையில் ஒரு காட்சி,
தினசரி நாம் காண்கின்ற காட்சி,
நகர்ப்புறங்களில், சிற்றூர்ப் புறங்களில்.
குஞ்சின் கூக்குரல் நெஞ்சைக் கிழிக்க கோழி வந்தது
குன்றி மணிபோல் சின்ன கண்கள்
சிவந்துபோயிருந்தன
என்ன காரணம்?
ஏகாதிபத்திய ப் பருந்து தலைக்குமேல்
பறந்து கொண்டிருந்தது.
குஞ்சைக் கவ்வப் பறந்தது பருந்து.
எதிர்த்துத் தாக்க முனைந்தது கோழி.
கண நேரம்தான்.
வென்றதோ கோழி,
விரைந்ததோ பருந்து,
விண்ணிலே கேலிச் சிரிப்பும் எழுந்ததே,
ஆமாம் தோழனே
வென்றது கோழிதான்,
ஏகாதிபத்தியப் பருந்து அல்ல.
விசித்திரம் இதிலே யாதோ என்றால்
பருந்தின் ஆற்றலில் பாதிதான் கோழி
பறக்கும் கலையையும் மறந்துவிட்டிருந்தது.
கோழிக்கு வீரத்தைக் குறைவறக் கொடுத்தது
தாய்மைதான.

தாய்மைதான் வீரம்!



தமிழ் இனம் காக்கும் தமிழக முதல்வர்
தாய்போல் இப்படி நம்மைக் காக்கிறார்.
வெற்றித் தலைவியின் விழி இரண்டில்தான்
வீரம் வந்து நெருப்பெடுக்கிறது!
அச்சம் என்பது,
புரட்சித் தலைவியை அணுகக் கூட அச்சப்படுவது.
வீரத்திற்கு விதைதான் தியாகம்; புரட்சித் தலைவி
உண்ணா நோன்பு இருந்து உடலை வருத்தி அன்று
உரிமை பெற்றுத் தந்தாரே அதுவும் வீரம்தான்.
தன்னை வருத்துகின்ற மாபெரும் தியாக வீரம்!

வீரத்திற்கு விதைதான் தியாகம்!
கோழையின் மனைவி குங்குமம் வைக்கிறாள்.
வீரனின் மனைவி விதவையாய் நிற்கிறாள்.
தியாகமே இதனைத் தீர்மானிக்கிறது!
சாவு எனக்கு மற்றொரு வாழ்க்கை
சவக்குழி எனக்கொரு ஆடாத தொட்டில்
ஏற்ற கடவுள் கிடைக்கிற வரைக்கும்
எனக்கு நானே மாபெரும் தெய்வம்.
என்ற நினைப்பே இன்றைய தமிழர்க்கு
எப்போதும் தேவை!
அதை நமக்கு
வழங்க வந்திருக்கிறார் புரட்சித் தலைவி என்பது
வண்ணம் பூசப்படாத உண்மை
சாயம் பூசப்படாத சத்தியம்!
அவர் தாழ்த்தப்பட்ட இனத்திற்குக் கேடயம்
பிற்பட்டோரின் அற்புதக் கவசம்
தாழ்ந்த தமிழரின் கையிலே போர்வாள்
தருக்கரின் கொடுக்கை நறுக்கிடும் அரிவாள்.
புதுப்பிக்கப்பட்ட புறநானூறு,
புதியதாய் எழுந்த கலிங்கத்துப் பரணி
நில்லாமல் சுழலும் நிர்வாகப் பம்பரம்
நினைத்தை முடிக்கும் புயல்வேகச் செயல் திறம்
பார்த்தால் தென்றல், பகைத்தால் நெருப்பு,
பொறுத்தால் பூமி, பொங்கினால் மாகடல்,
குணத்தால் தங்கம், கொதித்தால் சிங்கம்!

பாரதியின் சிந்தனையின் வளமும்
பாவேந்தன் கற்பனையின் நயமும்,
பாட்டுச் சூரர் சுரதாவின் திறமும்,
வார்த்தைத் தேர் இழுக்கும் புலமைப்பித்தன் நயமும்
இந்தப்பார் இருக்கும் நாள்வரைக்கும் இருக்கும்!
(இந்தப் பட்டியலில்
இந்தத் தேவனது தேன்தமிழையும்
சேர்த்துக்கொள்ளுங்கள்.)
இவையெல்லாம் இந்தப் பார் இருக்கும்
நாள்வரைக்கும் இருக்கும்.
எங்கள் பைந்தமிழ்த் தாய் தனது புகழ்
அதையும் தாண்டும்!



# இவர்தான் பாரதி

இருபத்தியேழு வயதான பாரதி பாண்டிச்சேரியில் ஊக்கமும் செழிப்பும் கொண்ட கவர்ச்சிகரமான இளங்காளையாயிருந்தார்; பாரதி அழகுப் புருடராக விளங்கினார்; சிவந்த, மெல்லிய மேனியும் பிரகாசமான கண்களும் கூர்மையான மூக்கும் அகன்ற நெற்றியும் இவரை உண்மையிலேயே கம்பீரத் தோற்றங்கொண்டிருக்கச் செய்தன. அவர் மனைவியார் பாரதி பொன்னிறமாயிருந் தாரெனக் கூறுகிறார். பாரதியின் உடற்தோற்றங் குறித்து வ.ரா. கூறுவதைப் படியுங்கள்:

"பாரதியார் சுந்தர ரூபன்; மாநிறம், ஐந்தரை அடிக்கும் கொஞ்சம் அதிகமான உயரம். அவரது மூக்கு, மிக அழகானது; அவரது கம்பீரமான முகத்துக்கு அளந்து அமைக்கப்பட்டதைப் போலிருக்கும் அந்த அழகிய மூக்கு. சீசர், இராஜகோபாலாச்சாரியார் ஆகியவரது போல வளைந்த மூக்கல்ல. சீசர் மூக்கு நடுவில் உயர்ந்து, நுனியில் கூர்மையாகி, கண்டவர்களைக் கொத்துவது போலத் தோன்றும். பாரதியாரின் மூக்கு கடைசல் பிடித்தது போலிக்கும்; நீண்ட நாசி, அந்த நீளத்தில் அவலட்சணம் துளிக்கூட இருக்காது.

பாரதியின் கண்கள் செவ்வரிபடர்ந்த செந்தாமரைக் கண்கள். இமைகளின் நடுவே அக்கினிப் பந்துகள் ஜொலிப்பது போலப் பிரகாசத்துடன் விளங்கும். அந்தக் கண்களை எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலும் தெவிட்டாது.

அவரது நெற்றி பரந்த நெற்றி. பாரதியாருக்கு மீசை உண்டு. அது பார்க்க ரொம்ப நேர்த்தியாக இருக்கும். தானாகவே வளர்ந்தது; மிக்க பெருமிதத்தோடு புன்சிரிப்பது போலத் தோன்றும்".

பாரதியை நேரில் கண்டு அவர்பால் உள்ளத்தைப் பறிகொடுத்த கவி சுத்தானந்த பாரதி அவரது தோற்றத்தை வருணிக்கும் வகை இது:

"கோபுரம் போல நிமிர்ந்து, 'அச்சமில்லை, தலை குனியாதே தமிழா' என்று பேசும் அந்த வீரத் திருமுகம் நமது கண்முன் நிற்கிறது. அறிவும் வீரமும் பொழியும் அந்தக் கனல் விழிகளே நம் முன் நிற்கின்றன, தீக்கொழுந்து போல் நிமிர்ந்து நிற்கும் அவரது மீசை".

—'சுப்பிரமணிய பாரதி' என்னும் நூலில்
திருமதி எஸ். விஜயபாரதி

எவ்விதம் ஒரு அரிமா தன்னுடைய கூரிய நகங்களைப் பதியவைத்து அடையாளம் உண்டாக்குகிறதோ, அது போன்று நான் என்னுடைய மனத்திடத்தால் என் பெயரை உலக வரலாற்றில் பதிய வைப்பேன். என்னுடைய இந்தத் தீவிரமான அவாவே என்னுடைய ஒவ்வொரு அணுவிலும் ஊடுருவிச்சென்று நிறைந்து நிற்கிறது.

—முசோலினி

# கல்விச் செல்வம்



## ஆசிரியர் தினம் குறித்து

## –மாண்புமிகு முதல்வர் வாழ்த்துச் செய்தி

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு (செப்டம்பர் - 5) மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டு உள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது:

உலகு போற்றும் தத்துவ மேதைகளில் ஒருவராகத் திகழ்ந்த முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர், டாக்டர் எஸ்.



ராதாகிருஷ்ணன் பிறந்த நன்னாளே இந்தியாவில் ஆண்டுதோறும் 'ஆசிரியர் தினம்' எனக் கொண்டாடப்படுகிறது. அம்மாமனிதரின் நினைவைப் போற்றுகின்ற வண்ணம், ஆசிரியர் தினம் நாடெங்கும் கொண்டாடப்படுகின்ற இவ்வினிய வேளையில், தமிழகத்தைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி அறிவை வளர்ப்பதன் மூலம்தான், ஒரு நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், வாழும் மக்களின் முன்னேற்றத்திற்கும் வழி வகுக்க முடியும் என்ற உண்மையை உணர்ந்து செயல்பட்ட உலக நாடுகள் பல இன்று வளர்ச்சிப் பாதையில் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கின்றன.

கேடில் விழுச் செல்வமாம் கல்விச் செல்வத்தை அனைவருக்கும் நல்கி, நாட்டையும் வீட்டையும் உயர்த்தும் உன்னதப் பாதையில், சமுதாய உணர்வுடன் ஈடுபட்டு, கடமையாற்றி வரும் நமது மதிப்பிற்குரிய ஆசிரியப் பெருமக்களின் உன்னத சேவையை உளமாரப் போற்றுகின்ற வகையில், ஆண்டுதோறும் நாம் 'ஆசிரியர் தின' விழாவைக் கொண்டாடி வருவதும் மிகவும் ஏற்புடைய செயல் ஆகும். எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்கும் மாபெரும் பணியில் கடமை உணர்வுடன் ஈடுபட்டுள்ள ஆசிரிய சமுதாயத்தின் சேவையை நினைவுகூர்ந்து நன்றி பாராட்டும் நல்ல நாள் இந்நாள்.

சமுதாய வளர்ச்சியில் முக்கியப் பங்கு கொண்டுள்ள பொறுப்பு வாய்ந்த ஆசிரியப் பெருமக்களின் நல்வாழ்விற்கும் நலனுக்கும் தேவையான ஆக்கபூர்வமான திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வரும் தமிழக அரசு, அவர்கள் வாழ்வில் ஏற்றம் பெறவும், மன மகிழ்ச்சியோடு பணியாற்றவும், எல்லா நடவடிக்கைகளையும் உறுதியுடன் மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் முறையாகக் கட்டாயத் தொடக்கக் கல்விக்குச் சட்டமியற்றி, கல்வி வளர்ச்சியில் முன்னோடியாக விளங்கும் தமிழகம், ஒரு புதிய எழுச்சியுடன் ஆசிரியர் தினத்தைக் கொண்டாடும் இந்த இனிய வேளையில், அரிய கல்விப் பணியாற்றி, தமிழக அரசு ஆண்டுதோறும் வழங்கி சிறப்பிக்கின்ற நல்லாசிரியர் விருதுகளைப் பெறுகின்ற இருபால் ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும், எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கும் மாபெரும் பொறுப்பை, ஆசிரியப் பெருமக்கள் உவகையுடன் ஏற்று, உன்னதப் பணியாற்ற வேண்டும் என்றும், அத்தகைய ஆசிரியப் பெருமக்களின் வாழ்வில் எல்லா வளமும் நலமும் வந்து சேர வேண்டும் என்றும் நெஞ்சார வாழ்த்துகிறேன்.

## மாவீரர் வ.உ.சி.



மறைந்த மாவீரர் வ.உ.சிதம்பரனார் அவர்களையும், அவர் நாட்டின் விடுதலைக் காகவும் ஆற்றிய அரும்பெரும் தொண்டு களையும் மக்கள் மறக்க முடியாது.

உண்மையாகவே நாட்டுக்கு விடுதலை யும், மக்களுக்கு நல் வாழ்க்கையும் ஏற்பட வேண்டும் என்ற பொதுநல நோக்குடன் பேரையும் புகழையும் விரும்பாமல் ஆடம்பரம் அற்ற வாழ்க்கையை நடத்தி நாட்டுப் பணியாற்றியவர் வ.உ.சி.!

வெள்ளையன் இந்த நாட்டை விட்டு விரட்டப்பட வேண்டுமானால், அவனுடைய ஆதிக்கத்தின் ஆணிவேரான வியாபாரத் துறையைத்தான் முதலில் கைப்பற்ற வேண்டும் என்ற ஒரு சிறந்த திட்டத்தை, முதலில் வகுத்த பெருமை சிதம்பரனாருக்கே உரியதாகும்.

1906-இல் அவரால் ஆரம்பிக்கப்பட்ட "சுதேசிக் கப்பல் கம்பெனி" இந்தச் சிறந்த நோக்கத்துடனேயே தொடங்கப்பட்டது ஆகும்.

–பேரறிஞர் அண்ணா

## பெண்ணின் பெருமை:

# குடும்பம்

**—முனைவர் இராம சௌந்தரவல்லி**

**த**மிழ் என்பதை ஆரிய அரசனுக்குக் கற்பித்துக் கொடுக்க கபிலர் என்ற மகா புலவர் ஒருவர் செய்த முயற்சி என்ன தெரியுமா? அவருக்குத் தமிழ் எழுத்துக்களைக் கற்பிக்கவில்லை. தமிழ் இலக்கண இலக்கியங்களைச் சொல்லித் தரவில்லை. தமிழ் என்றாலே இந்தத் தமிழ் மண்ணிலே பிறந்திருக்கக்கூடிய பெண்ணின் பெருமைதான் தமிழ் எனப்படும் என்றுதான், 'குறிஞ்சிப் பாட்டு' என்ற ஒரு மிகச் சிறந்த இலக்கியத்தைக் கற்பித்தார்; இந்தத் தமிழ் மண்ணிலே தோன்றிய ஒரு பெண் எப்படி தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வாள் என்பதைக் கற்பித்துக் கொடுத்தார்.

அந்த வகையிலேதான் தமிழ் மாநாடு கூட்டியிருக்கின்ற தமிழக முதலமைச்சர் 'பெண்ணின் பெருமை' என்ற கருத்தரங்கினுக்குச் சிறப்பிடம் கொடுத்து இருக்கின்றார்.

'குடும்பம்' என்று பேசுங்கள் என்று எனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்தப் பெண்ணியம் என்பதும், பெண் உரிமை என்பதும், பெண் உரிமைச் சங்கங்கள் சார்ந்து பேசுவது என்பதும், ஒரு மரபாக மாறிப்போய்விட்டதோ என்று கூட எனக்குச் சில சமயங்களிலே எண்ணத் தோன்றும்.

அப்படிப் பேசுவதால், நமக்கு ஏதாவது பயன் இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்க்கும் போது, 'குடும்பம்' என்ற தலைப்புக்குள் நுழைகின்றபோது- இந்தச் சிந்தனைகளைக் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு, நம்முடைய தமிழ்ப் பாரம்பரியத்துக்கு ஏற்ப, தமிழ் மாநாடு கூட்டுகின்ற நாம், தமிழ்க் குடும்பங்கள் எப்படி இருந்தன, இந்தத் தமிழ்க் குடும்பங்கள் பெண்ணால் எப்படிப் பெருமைப்பட்டன, ஒரு பெண் குடும்பத்தால் எப்படிப் பெருமைப்பட்டாள் என்பதைப் பேசுவது சிறந்தது என்று நினைக்கிறேன்.

### இரசாயன மாற்றம்

ஓர் அரும்பு தோன்றுகிறது, மொட்டாக வளர்கிறது. பிறகு மலராக மலருகின்றபோது அதனுடைய மணம் அதற்கும், பிறருக்கும் பயனடைவதாக அமைகிறது. அதுபோன்றதுதான் ஒரு பெண்ணினுடைய வாழ்க்கையும்.

அவள் சிறுமியாக நடமாடுகின்றவரையிலும் பெண் பெருமைக்குரியவள் என்று யாரும் அவளைச் சொல்லுவதில்லை. குழந்தைதான்; எத்தனை வயதானாலும் அவள் சின்னக் குழந்தையாகத்தான் கருதப்படுகின்றாள். ஒரு குடும்பத்திற்குத் தலைவியாக ஆனபிறகு, வேறு யாரும் அவளுக்கு அந்த மரியாதை தர வேண்டாம், தானாகவே தமிழ்ப் பெண் தன்னை உயர்த்திக் கொண்டுவிடுகிறாள். ஒரு இரசாயன மாற்றம் அவளுக்குள்ளேயே ஏற்பட்டுவிடுகின்றது. அது ஒரு இரண்டு நாள், ஐந்து நாள் குடும்பத் தலைவியாகப் பொறுப்பேற்ற, 5-வது நாளிலேயே அந்தப் பெண்ணினுடைய உணர்வுகள் மாறிப் போய்விடுகின்றன.

20 வயது வரைக்கும் நம்ம வீடு, நம்ம வீடு என்று சுற்றிவந்த பெண், இப்போது ஒரு குடும்பத் தலைமையை ஏற்றுக்கொண்டு கணவன் வீட்டுக்குப் போய்விட்டுத் திரும்பிவருகிறாள் என்றால், தன் தாயிடம் பேசுகின்றபோது 'எங்கள் வீட்டிலே' எனத் தான் தொடங்குவாள்.

அந்த வார்த்தை எப்போது அவள் வாயில் வந்துவிடுகிறதோ, அன்றைக்கே அந்தப் பெண் மாறிப்போனாள் என்பது



தான் உண்மை. இந்த மாற்றம் யாராலும் ஏற்படுத்தப்படுவதில்லை. அல்லது கட்டாயமாகத் திணிக்கப்படுவதில்லை இது இயல்பாக அவளுக்குள்ளேயே மாறிப்போன ஒன்று.

இதைத்தான் நம்முடைய தமிழ் இலக்கணம் ஒன்று மிக அழகாக எடுத்துக்காட்டுகிறது. கணவன் வீட்டிற்குச் சென்று திரும்புகின்ற ஒரு பெண் கூறுகின்றாள்.

'அம்ம வாழி தோழி -என்று மகிழ்வோடு பேசத் தொடங்குகிறாள்.

### கலங்கிய நீரிலும் சுவை

அவள் கணவன் வீடு ஒரு பாலை நிலம் மாதிரி; ஒரு காடு மாதிரி, 'தண்ணீர் இல்லாத காடு'- நமக்கு அந்த வார்த்தை நன்றாகத் தெரியும். அந்தக் காட்டுக்குப் போய்விட்டு வருகின்ற பெண் அவள். தாய் வீட்டிலே என்ன இருக்குமாம்? தேன் கலந்த பால் உண்டு இங்கே!

அப்படிக் குடித்து, சுவைத்து, மகிழ்ந்து, செல்வச் செழிப்போடு வளர்ந்தவள்தான்! ஆனால், ஐந்தாறு நாளிலே திரும்ப வந்த பெண் என்ன சொல்கிறாள்', நம் வீட்டுத் தேன் மயங்கு பாலைவிட இனிமையானது, அவனுடைய நாட்டிலே மான் குடித்துவிட்டு எஞ்சி, ஒரு சின்ன பள்ளத்திலே கிடக்கக்கூடிய கழுனி நீர்!' என்கிறாள்.

'கழுனி நீர்' என்று 'சொன்னால் கலங்கிய அந்தச் சிறிய அளவு நீர். அந்த நீரே, தலைவன் நாட்டு நீர் என்பதால் சுவை உடையது என்கிறாள்.

> **எக்கணத்திலும் என் உள்ளம் தளர நான் அனுமதிப்பதில்லை. எச்செயலைச் சாதிப்பதற்கும் குன்றா உழைப்பு, குறையா முயற்சி, கூரிய அறிவு ஆகிய மூன்றும் மிகவும் வேண்டற்பாலன.**
>
> **—எடிசன்**

இந்த உணர்வு ஐந்து நாள் அல்லது ஒரு வாரத்திற்கு முன்னால் அந்தப் பெண்ணுக்கு நிச்சயம் வருவது இல்லை!

தான் குடிக்கிற டம்ளரில் அண்ணன் குடித்துவிட்டால் எச்சில் பண்ணிவிட்டான் என்று சண்டை போட்ட அதே பெண் தான், இப்போது ஒரு வாரத்திற்குள்ளே இந்த மாற்றம் பெறுகிறாள்! இது அவளுக்குள் எப்படி ஏற்பட்டது? அதைத்தான் தமிழ் இலக்கியம் சுட்டிக் காட்டுகிறது.

### அன்பு சாம்ராஜ்யம்

இவள் குடும்பத்திலே பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, இவளுக்குள்ளே ஏற்படுகின்ற மிகப் பெரிய மாற்றம் இது. இந்த மாற்றம் இருக்கின்றதே, இது கட்டாயத்தால் வருவதில்லை. இது அடிமைத்தனத்தின் வெளிப்பாடு அல்ல. ஒரு அன்பு சாம்ராஜ்யத்திற்கு இவள் என்றைக்குத் தலைவியாகிறாளோ அன்று தானாகவே ஏற்படக்கூடிய ஒன்று.

### அடிமைத்தனம் அல்ல

தியாகம் செய்யவேண்டும் என்றாலே தாய்மை உள்ளம் வேண்டும். தாய்மை உள்ளம் என்பது எவ்வளவு பரந்துபட்ட அன்பைத் தனக்குள்ளே பெற்றிருப்பது அது தனக்குக் கிடைக்கின்ற அன்புக்கு என்ன வரையறை சொல்கிறது?

நம்முடைய பண்டை இலக்கியங்கள் வாழ்க்கையைப் பிரதிபலிப்பவை! இன்றைக்கு நமக்கு முன்னால் வாழ்ந்து காட்டிய பெண்மை எவ்வாறு இருந்தது?

அவனோடு நான் வாழ்கின்ற இந்த வாழ்க்கை அவன் எனக்குத் தருகின்ற நட்புறவு, நட்பு என்றுதான் சொல்லப்பட்டது. கேண்மை என்றுதான் சொல்லப்பட்டது. அது அடிமைத்தனம் என்று சொல்லப்படவில்லை.

காலத்தின் மாற்றத்தால் அப்படிப்பட்ட எண்ணங்கள் ஒருவேளை வந்திருக்கலாம்.

ஆனால், பழைய இலக்கியம் சொல்வது கணவனுக்கும், மனைவிக்கும் இடைப்பட்ட உறவு இருக்கிறதே இது நட்புறவு போல் இருக்கவேண்டும். கேண்மையாக இருக்கவேண்டும்

### எல்லை எது?

அது எவ்வளவு பரந்துபட்டது? இதற்குமேல் எல்லையே கிடையாது, எல்லை சொல்ல முடியாத சில விஷயங்களைப் பேசுகின்றான் கல்லைஞன். அது நிலத்திலும் பெரியது என்றான். நிலத்தைவிட பெரியது என்று அதைச் சொல்ல முடியும். 'நிலத்தினும் பெரியது வானினும் உயர்ந்தது' – அதற்குமேல் எதுவும் உயர்வு இல்லையோ? அதை

அவனுடைய அன்பாக உவமையாக்கி- வானினும் உயர்ந்தது; நீரினும்- ஆறு அளவிலும், கடல் நீரினுடைய ஆழத்தை விடவும், இது ஆழமானது. எனவே, அகலத்திற்கும், உயரத்திற்கும், ஆழத்திற்கும் மூன்று கன பரிமாணங்களுக்கும் எதை எல்லையாகக் காட்டுகின்றோமோ அந்த எல்லையான அன்பை, எல்லையற்ற அன்பை அன்றைக்கு ஒரு பெண் உணர்கிறாள்.

பெருந்தேன் இழைக்கும் நாடனோடு நட்பு' என்றுதான் முடிப்பாளேயொழிய அது உறவு என்று மட்டும் நின்றுவிடுவதில்லை.

ஏதோ கணவன் மனைவியாக உடல் ரீதியாக அவர்கள் உறவு பெற்றுவிட்டார்கள் என்பதால் அது குடும்பம் என்று அமையவில்லை. அவர்களுக்குள்ளே நட்புறவு இருக்கவேண்டும். கொடுப்பதும், வாங்குவதும் என்பது பரஸ்பரம் நிகழ்கின்றபோதுதான் அந்தக் குடும்பம் சிறப்பாக அமைய முடியும் என்று மிகச் சிறந்த தத்துவத்தை அழகாகப் பண்டை இலக்கியங்களிலே, வாழ்ந்த தமிழ் மக்களுடைய வாழ்க்கை வழியாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

**ஜீவ ரகசியம்**

பெண்ணினுடைய இயல்பு என்ன தெரியுமா? தன்னோடு சேர்ந்தவனை எவ்வளவு முடியுமோ அவ்வளவு மேன்மைப் படுத்துவது!

நம்முடைய படைப்போ இரகசியமாகும். இந்தப் படைப்பின் இரகசியம் ஆண்மை என்பது, வலிமையானது பெண்மை என்பது மென்மையானது. இந்த இரண்டும் சேர்வதுதான் ஜீவ ரகசியம் என்பது.

ஆண் என்பவன் வலிமையானவனாகவே இருந்துவிடுவானேயானால், அவனுக்குள் வன்முறை உணர்வுகள்தான் தூண்டப்படுமேயொழிய அவனுக்குள் மென்மையான அல்லது சமுதாய உணர்வோ, ஆன்மீக உணர்வோ, ஒரு உயிர் நேயமோ எதுவுமே வருவதற்கு வாய்ப்பில்லை. இந்தப் பெண்மை இணைகிறபோது அது தானாகவே இளகிப் போய்விடுகிறது.

இந்தத் தத்துவத்தை எவ்வளவு எளிமையாக சங்கப் புலவன் சொல்கிறான்- "செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தன" என்கின்றான்; ஏதோ இரண்டு குடும்பங்கள் கலந்த கலப்பு அல்ல. இரண்டு பதவிகளுக்கிடையே ஏற்பட்ட கலப்பு அல்ல. இரண்டு பட்டங்களுக்கு இடையே ஏற்பட்ட பிணைப்பு அல்ல. இரண்டு செல்வந்தர்கள் குடும்பங்களுக்கிடையே ஏற்பட்ட ஒரு ஒப்பந்தம் அல்ல இது. அன்புடை நெஞ்சங்கள் கலந்தால் அதுதான் குடும்பம்.

அப்படி கலக்கின்றபோது இந்தக் குடும்பத்தினுடைய விளைவு என்னவாகும் தெரியுமா?

**வாழ்வியல் உண்மை**

செம்புலம் என்பது வள்மையான நிலம். இந்த வலிமை நிறைந்த நிலம் அதில் விழுகின்ற நீர் இருக்கிறதே இது இந்த நிலத்தைப் பண்படுத்தி மென்மையாக்கி இளகச் செய்து பயிர் விளைவதற்கு ஏற்றதாக ஆக்குகின்றது. இதனால் நிலம் தன் இயல்பை இழந்துவிடுவதில்லை; நீரும் தன் இயல்பை இழந்துவிடுவதில்லை.

இரண்டும் சேருகின்றபோது இந்தச் சமுதாயம் பயன் பெறுகிறது என்று சொன்னால், அதுதான் அன்புடை நெஞ்சத்தின் கலப்பின் விளைவாக இருக்க வேண்டும். இதுதான் பெண்ணிற்குரிய பெருமையாக குடும்பம் அவளுக்கு அமைத்துத் தருவது என்பது சங்கத் தமிழ் மக்கள் கண்ட வாழ்வியல் உண்மை.

**சொர்க்கம் எந்த மூலை?**

இந்தப் பெண்ணிடம் சகல சக்தியும் இருக்கிறது என்பதை அனுபவ ரீதியாக அறிந்தவர்கள் நாம். தமிழகத்தில் இருந்து கொண்டு பேசுவதால், இந்த மண் உலகத்தில் இருந்து கொண்டு, விண் உலகத்துச் சொர்க்கத்தை எங்களால் இங்கே வரவழைக்க முடியும் என்று அறைகூவியவர்கள் தமிழ்ப் பெண்கள். இதை உணர்ந்ததால் தான் நம்முடைய வள்ளுவன் பாடினான்-

> **நான் எதைச் செய்தேனோ, அதில் வெற்றி பெற்றேன். காரணம், நான் அதை உள்ள நிறைவோடு விரும்பினேன்.**
>
> **—நெப்போலியன்**



**'தாம்வீழ்வார் மென்றோள்**
**துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு',**

—என்றான்.

எவ்வளவு அனுபவப்பட்டிருந்தால் அவர் அப்படிப் பேசுவார்!

நீ வைகுந்தத்துக்கு வா என்று யாரோ அவனை அழைத்தார்களாம். சொர்க்கம் சொர்க்கம் என்று ஒன்று உள்ளது. அங்கே எல்லா இன்பமும் உங்களுக்குக் கிடைக்கும். கவலையே இல்லாமல் வாழ்க்கையை நடத்தலாம். நரை, திரை, மூப்பு எதுவும் கிடையாது. மானுடத் துன்பங்கள் எதுவும் இல்லாத சொர்க்கத்திற்கு வா என்று அழைத்திருக்க வேண்டும் ஒரு தலைவனை; அல்லது நமது வள்ளுவனையே!

அவர் என்ன சொல்லுகின்றார்? சொர்க்கம் என்ன சொர்க்கம், இந்த மண் உலகத்திலே இந்த வாசுகி அம்மை எனக்கு ஒரு சொர்க்கத்தை ஏற்படுத்தித் தந்திருக்கின்றாள். அவளுடைய மென்மையான தோள்களில் துயில்கின்ற உணர்வு இருக்கிறதே, துய்க்கின்ற இன்பம் இருக்கிறதே இதற்கு நேராக வைக்கின்றபோது அந்தத் தாமரைக் கண்ணான் உலகு எந்த மூலைக்கு!

மண்ணில் இருந்துகொண்டே நான் சொர்க்கத்தை அனுபவிக்க முடியும் என்றால் உங்களுக்குச் சொர்க்கத்தைப் படைத்துத் தருபவள் இந்தப் பெண். அவ்வளவு சர்வ சக்தி படைத்தவள்.

**சிலம்பும் செங்கோலும்**

அதனால்தான் சிலம்பிலே சொல்லுவார், இவள் தொட்டிலை ஆட்டுபவள் மட்டுமல்ல, தொல்லுலகையும் ஆள்பவள் என்பதை இன்றைக்கு நம்முடைய புரட்சித்தலைவி நிச்சயமாகக் காட்டிக் கொண்டிருப்பது, எந்த அளவிற்கு உண்மையோ அந்த அளவிற்கு உண்மையை நம்முடைய இளங்கோவடிகள் காட்டினார்.

ஒரு பெண்ணின் காலிலே இருக்கின்ற சிலம்பு, ஒரு மன்னவன் கையில் இருக்கிற செங்கோலைப் பம்பரமாக ஆட்டிவைக்க முடிந்தது என்று சொன்னால், பெண் நினைத்தால் எதையும் சாதிப்பாள் என்பதுதானே பொருள்?

**பாரதியின் உச்சம்**

எட்டையபுரத்திலே பிறந்த முறுக்குமீசை முண்டாசுக் கவிஞன், புரட்சிப் பெண்ணைக் குறிப்பிட்டு முதன் முதலில் குரல் கொடுத்தவன்- **'காதல் செய்யும் மனைவியே சக்தி கண்டீர், கடவுள் நிலை அவளாலே எய்தல் கூடும்'** -என்று பாடியவன் பராசக்தியிடம் போய் சில வரங்கள் கேட்கின்றான்.

வரங்கள் கேட்கிறபோது என்ன கேட்போம்? எவை எல்லாம் நமக்கு இல்லையோ அவற்றைக் கேட்போம். அவனோ வாழ்நாளில் வறுமையில் மிகவும் கஷ்டப்பட்ட ஒரு கவிஞன். அவன் கேட்டான்-

'காணி நிலம் வேண்டும்,
பராசக்தி காணி நிலம் வேண்டும்;
அந்தக் காணி நலத்திலே
ஒரு மாளிகை கட்டித் தரவேண்டும்.'

மிகவும் சிறிய ஆசைதான். ஒரே ஒரு வீடு வேண்டும். அவ்வளவுதான். ஆனால் அந்த ஆசையை வரிசையாக அடுக்கிக் கொண்டே போகிறபோது எந்த உச்சத்தை அந்தப் புலவன் தொட்டான் தெரியுமா?

பராசக்தியிடம் வேண்டுகின்றான்:

**'பாட்டுக் கலந்திடவே அங்கே**
**ஒரு பத்தினிப் பெண் வேண்டும்'**

எத்தனைச் செல்வங்கள் இருந்தாலும் பக்கத்திலே ஒரு பத்தினிப் பெண் இருந்தால்தான் எட்டையபுரத்துக் கவிஞருக்கும் பாட்டுக் கலக்கமுடியும் என்று சொன்னால், அவருடைய ஆற்றலை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அதனால்தான் என்ன சொன்னார் என்றால்-

**பாட்டுக் கலந்திடவே அங்கே**
**ஒரு பத்தினிப் பெண் வேண்டும்;**
**எங்கள் கூட்டுக் களியினிலே**
**கவிதைகள் கொண்டு**
**தரவேண்டும்.**
**எந்தன் பாட்டுத் திறத்தாலே**
**இவ்வையகத்தைப் பாலித்திட**
**வேண்டும்'**

—என்றான். நான் சமுதாயத்திற்குப் பயனுடைய ஒரு கவிஞனாக அமைய வேண்டுமென்றால் ஒரு பத்தினிப் பெண்

> **அறியாமை:**
>
> **'அறியாமை இரகசியத்தின் தாய், துன்பத்தின் பிறப்பிடம், குருட்டு நம்பிக்கையின் அன்னை. சங்கடம் தோன்றிய இடம். அழிவும் வறுமையும் வாழ்ந்து வரும் தாயகம்'.**
>
> **—இங்கர்சால்**

என் அருகே இருக்க வேண்டு மென்றான். அப்படியென்றால் இந்தக் குடும்பத்தினுடைய தலைமையிடம் எங்கே தரப் பட்டது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அந்தக் கவிஞனின் வாரி சாகத்தான் இன்றைய கவிஞர் ஒருவர் பாடினார்- கவிஞர் மீரா அவர்கள் மிகவும் அற்புதமாக -இந்தக் கவிதையை மனதிலே வைத்துக்கொண்டு பாடுகின் றார்-

**பராசக்தி! எனது மூதாதை ஒருவன்,**
**பராசக்தியிடம் வரம் கேட்டான்.**
**காணி, நிலம், மாட மாளிகை,**
**தென்ன்ந்தோப்பு ...**
**அது இது என்று வேண்டி,**
**இறுதியில் ஒரு பத்தினிப்**
**பெண்ணை வேண்டினான்.**
**நான் கேட்டிருந்தால் உன்னை**
**மட்டுமே கேட்டிருப்பேன்!**
**ஏனென்றால் உன்னைப் பெற்றால்!**
**உலகத்தில் உள்ள**
**எல்லாம் பெற்ற மாதிரிதானே!'**

—ஒரு பத்தினிப் பெண்ணைத் துணையாக, ஒருவன் அடை வான் என்றால் எல்லாமே பெற்றதுபோல்தான். அதனால் தான்

**இல்லாள் அகத்திருக்க**
**இல்லாதது ஒன்றும் இல்லை**

—என்றார்கள். அவள் இருக்கிறபோது அந்தக் குடும்பத் தில் இல்லாமை என்பதே கிடையாது என்பதுதான் தமிழர் நாகரீகம்.

அதைத்தான் கவியரசர் கண்ணதாசன் சொன்னார். வாழ்க்கையில் அவர் பல பெண் களைச் சந்தித்தவர்; பல நிலை யில் சந்தித்தவர்; பலசூழ்நிலை களில் சந்தித்தவர். அவர் சொல்லுகிறபோது-

**'எத்தனைப் பெண்கள்**
**மண்ணின் இருந்தென்ன**
**சத்தியம் சம்சாரம் அவள்**
**சாமி அவதாரம்!'**

—என்பார் என்று சொன்னால்

'குடும்பம்' என்ற தலைப்பில் தான் இதை வைத்துப் பாட முடியுமே தவிர, அதற்கு அப்பாற்பட்ட நிலையில், எந்த நிலையிலும் காண முடியாது.

## பெண்மையின் மேன்மை

இந்தப் பெண்மை சிறப் புறுவது, தாய்மை ஆகிற பொழுதுதான். ஒரு முறை நேதாஜி அவர்கள் கல்கத்தா மேயராக இருந்தபொழுது, அப்பொழுது ஆட்சியில் இருந்த பிரிட்டிஷ் கவர்னர் ஒருவருக்கு விருந்து கொடுத்தாராம்.

அந்த விருந்திற்கு வந்த கவர்னர், சுற்றிப் பார்த்தார். பெரிய மேஜை இருந்தது. அலங்கார வண்ண விளக்குகள் எல்லாம் இருந்தன. 'பிளவர் வாஸ்' அது இது என்று எல்லாவற்றையும் பார்த்தார். மின் விளக்கைப் பார்த்தார். மேலே காற்றாடி- மின் காற்றாடி சுற்றிக் கொண்டிருக்கிறது. இத் தனையையும் பார்த்துவிட்டு அந்த கவர்னர் கேட்டாராம்,

'நேதாஜி, இந்த விருந்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய திருக்கிறீர்கள். ஆனால் நான் பார்க்கிற ஒவ்வொரு பொருளும் எங்கள் நாட்டிலிருந்து உங் களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டது. மேலே சுழலுகினற

**சமாதானமும், சகிப்புத் தன்மையுமே நமது இலட்சியங்கள்.**

**—பண்டித ஜவகர்லால் நேரு**

மின்விசிறி, நாங்கள் வந்த பிறகு அறிமுகம் ஆன ஒன்று. இந்த இடத்தை ஒளிமயமாக்கிக் கொண்டிருக்கிற மின்சாரம் எங்களால் உங்களுக்கு வழங்கப் பட்டது. இங்கே இருக்கின்ற அத்தனைச் சௌகரியங் களையும் செய்து தந்தவர்கள் நாங்கள், இதில் உங்களுக்கு என்று சொல்லிக்கொள்வதற்கு என்ன இருக்கிறது?" என்று கேட்டிருக்கிறார்!

அப்பொழுது நேதாஜி சொன்னாராம், "விருந்தினரை அவமரியாதை செய்வது எங்களுடைய பண்பாடு அல்ல. இதற்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை!" என்றார்.

"இல்லை பரவாயில்லை, நான் அவமரியாதையாக அதை எடுத்துக்கொள்ள மாட்டேன், சொல்லுங்கள்" என்று மறுபடி மறுபடி அவர் வற்புறுத்திய தனால், நேதாஜி சொன்னார், "கவர்னர் அவர்களே, எங் களுக்கு உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, ஏன்- வாழ்வதற்கு மேலே கூரை கூட இல்லை. ஆனால் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் கற்புள்ள ஒரு தாயின் பிள்ளை என்பதிலே நாங்கள் பெருமைப்படு கிறோம், இது உங்களுக்கு இருக்கிறதா என்று நான் கேட்டால் அது அவமானப்படுத் தியதாக ஆகும்". என்றார்



**- 1995 ஜனவரித் திங்களில், தஞ்சை மாநகரில், நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் பெண்ணின் பெருமை எனும் தலைப்பில் நடைபெற்ற மகளிர் கருத்தரங் கில் பங்கேற்று, குடும்பம் என்னும் பொருள் பற்றி ஆற்றிய உரை.**

ஏனென்றால், அவர் அம்மா நான்காவது கணவரோடு வாழ்ந்து கொண்டிருந்தார்.

அப்படி அவர் சொன்ன பொழுது, இந்த மாதிரி ஒரு பிரச்சினையை எழுப்பி இருக்க வேண்டாமோ என்று கவர்னர் ஜெனரலே நினைத்தார் என்று சொன்னால், அப்படிப்பட்ட கற்புடைய தாயின் பிள்ளைகள் என்பதால்தான் நாம் பெருமைப் படுகிறோம்.

## பெருமை பெற்ற நாடு

அதனால்தான், இன்றைக்கு மேலை நாடுகள் எல்லாம் நம்மைப் பார்த்து வியக்கின்ற ஒரே ஒரு விஷயம் என்ன தெரியுமா? 20 ஆண்டுகள் வரையிலும் தனியாக வாழ்கின்ற ஒரு பெண், திடீரென்று முன்பின் தெரியாத ஒருவ னோடு, இவன்தான் கணவன் என்று திருமணம் என்ற சடங்கால் இணைக்கப்பட்ட பிறகு, அவனுக்காகவே தன்னை மாற்றிக்கொண்டு வாழ்கிறாளே, அது எப்படி முடிகிறது? இந்த வாழ்க்கையை நிரந்தரமாக உங்களால் எப்படி வாழ முடிகிறது என்று கேட்கிறார் களாம்.

அதற்கு நம்மவர்கள் சொல்லுகின்ற பதில் என்ன தெரியுமா? எங்களுடைய பெண்கள் மனைவிகளாகவே வளர்க்கப்படுகிறார்கள். வளர் கின்ற காலத்திலேயிருந்தே அந்தப் பக்குவத்தை இவர்கள் பெற்றுவிட்டார்கள். இந்த நாடு அதனாலேயே பெருமை பெற்றி ருக்கின்ற நாடு.

இன்னும் சொல்லப் போனால், இந்தக் குடும்பம் என்பது இருக்கிறதே இதைத் தயவுசெய்து கூண்டு என்று நினைக்காதீர்கள். ஏதோ பெண் உரிமை என்பது வேறு. எது உரிமையில்லையோ அவற்றை யெல்லாம் உரிமை என்று நினைத்துக்கொண்டு தவறு செய்வதும் இன்றைக்கு நாட்டிலே இருந்து கொண்டு தானிருக்கிறது. ஒவ்வொரு வெற்றி பெற்ற ஆணுக்கும் பின்னால் ஒரு பெண் இருக் கிறாள் என்பது எந்த அள விற்குச் சத்தியமானதோ அதே அளவிற்கு- வெற்றி பெற்ற ஒவ்வொரு பெண்ணுக்குப் பின்னாலும் ஒரு ஆடவன் இருக்கிறான் என்பது உண்மை யானது. இது ஒரு பரஸ்பரம். அவ்வளவுதான்.

அவர்களிடமிருந்து நாம் பெறுவதும் நம்மிடம் இருந்து அவர்கள் பெறுவதும் அது கணவனாகத்தான் இருக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை.

## கூண்டும் கூடும்

தந்தையால் ஒரு பெண் சிறப்புப் பெற்று இருக்கலாம். தமையனால் ஒரு பெண் மேன் மையான நிலையை அடைந்து இருக்கலாம். கணவனாலும் அடைந்திருக்கலாம். அதேமாதிரி தன்னுடைய மனைவியாலோ, தாயாலோ, வேறு பெண் ணாலோ ஒருவன் புகழ்பெற்ற நிலைக்கு வந்துவிடலாம். இது இரண்டுமே கொடுத்தலும், வாங்கலுமாக அமைவது. அதனால் தான் கூண்டு என்பது வேறு, கூடு என்பது வேறு என்று நான் சொல்ல விரும்புகின்றேன்.

கூண்டு என்றால் ஒரு கிளியைப் பிடித்து, அதன் இறகுகளை அறுத்துவிட்டு, உள்ளே அடைத்து, 'பொற் கூண்டுக்குள் இருக்கின்ற கிளியே, உனக்குப் பொற் கிண்ணத்திலே பால் சோறு தருகிறேன்' என்றால், அது மகிழ்ச்சி அடையப்போவது இல்லை. அப்படி ஒரு வாழ்க்கை அமையும் என்றால் அது குடும்பம் அல்ல. அன்புக் குத்தான் ஒரு பெண் ஆட்படு வாளே தவிர, அடிமைத்தனத் திற்கு நிச்சயமாக அவள் ஆட்படப் போவதும் இல்லை. அடிமைத்தனம் என்பது அச்சத்தை உருவாக்கலாம். அச்சம் காரணமாக நாம் சொல்லுவதற்கு எல்லாம் 'சரி' என்று சொல்லலாம். ஆனால் அன்பைப் பிரதிபலிக்கப் போவது இல்லை. அப்படி இருந்தால் அது குடும்பமும் அல்ல.

ஆனால் இரண்டு சிட்டுக் குருவிகள் சேர்ந்து கட்டுகின்ற கூட்டினைப்போல நம்முடைய தமிழ்க் குடும்பங்கள், அந்தக் குருவிகள் கட்டுகின்ற கூடுகள் போல் அமைவதால்தான், அதிலே அன்பிலே அரசாட்சி



தலைசிறந்த சமூகச் சீர்திருத்தவாதி!

தந்தை பெரியார் அவர்கள் இந்த நூற்றாண்டின் தலை சிறந்த சமூகச் சீர்திருத்தவாதி. ஈடிணையற்றத் தலைவர். பரிபூரணமான மனிதாபிமானி.

மனிதனை இழிவு செய்யும் தன்மைகளையும், பேதங்களையும், மூடநம்பிக்கைகளையும் எதிர்த்து இடையறாது புனிதப் போர் நடத்திய வீரர் அவர்.

மூடநம்பிக்கைகள் மனிதனுடைய அறிவை முடக்கி- அவனது முன்னேற்றத்தைத் தடுக்கின்றன என்பதை அவர் எடுத்துக்காட்டினார். சமூக அநீதிகளுக்கு எதிராகத் துணிவோடும் அப்பட்டமாகவும் குரல் எழுப்பியவர் அவர்.

தெளிவான தொலை நோக்குப் பார்வையுடனும், கொள்கைப் பிடிப்போடும், தம் காலத்துப் பொது வாழ்வில் மிகப் பிரம்மாண்டமான தோற்றத்துடன் தந்தை பெரியார் விளங்கினார்.

—டாக்டர் எம்.ஜி.ஆர்.

செலுத்திக் கொண்டிருக்கின்றாள் இந்தத் தமிழ்ப்பெண்.

அதனால்தான் பாரதிதாசன் சொல்லுவான் "இந்தக் குடும்பம் என்பது என்ன தெரியுமா? இரண்டு உடல்கள் சந்திக்கின்ற இடம் மட்டும் அல்ல; இரண்டு ஆன்மாக்கள் சந்திக்கின்ற இடம். இரண்டு அறிவு ஜீவிகள் சந்திக்கின்ற இடம். இந்த இடம் தான் புலவர்கள் திருக்குறளின் பொருள் ஆய்வதற்கு வகை செய்துவைத்த இடம்' என்றான்.

குடும்பம் என்பது வள்ளுவப் பேராசான் தந்த குறளை ஆய்வதற்கு உரிய இடம் என்று சொல்லுவோம் என்று சொன்னால், கோடீஸ்வர நாடுகள் இன்றைக்குத் தற்கொலை போன்ற நிலைகளிலே போய்க் கொண்டிருக்கிற பொழுது, நம்முடைய தமிழகம் பெருமைப் படுகிறது என்றால், அது இந்தக் குடும்பம் என்ற ஒரு அமைப்பினால் தான்.

அதனால்தான், நம் நாட்டுக் குடும்பங்களின் ஆணிவேராக, இந்தப் பெண் நிற்கின்ற காரணத்தினால் தான், பாரதிப் புலவன் பாடிச் சென்றான்

"எல்லோரும் அமர நிலை எய்தும் நன்முறையை இந்தியா உலகுக்கு அளிக்கும்; ஆம், இந்தியா உலகுக்கு அளிக்கும்; ஆம், ஆம் இந்தியா உலகுக்கு அளிக்கும்" என்றான். இத்தனை 'ஆம்' எதற்கு என்று நாம் பார்க்கின்றோம்.

மேலே பாடத் தெரியாமல் பாடியதையே மீண்டும் மீண்டும் பாடுபவனா பாரதி? இல்லை!

உலகம் அமர நிலை எய்தும் நிலையை, நன்முறையை இந்தியா உலகுக்கு அளிக்கும் என்றால் அந்த நன்முறைதான் குடும்பம் என்ற அமைப்பு. இதை கூண்டாகக் கருதுபவர்கள், அதில் தோல்வி அடைந்து விடுபவர்கள். குருவிகளின் கூடாகக் கருதி அதில் வெற்றி அடைவதற்கு இந்தப் பெண்ணே காரணம் ஆகின்றாள் என்ற உணர்வையும் நாம் பெறுவோம்! ★





## புதுக்கோட்டை மாவட்டத்தில்
# பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சி

புதுக்கோட்டைப் பொது அலுவலக வளாகத்தில் 1995 செப்டம்பர் 3 முதல் 11-ஆம் தேதி வரை பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சி, அரசின் சார்பில் மிகவும் சிறப்புடன் நடைபெற்றது.

நிகழ்ச்சியின் தொடக்க விழாவில், மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி, மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர்மீரான் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., புதுக் கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி. வரபிரசாத ராவ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

சிறுவர்கள் மகிழும் வண்ணம் அறிவியல் துறை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் அவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. புதுக்கோட்டை மாவட்டம், பல்வேறு துறைகளில் பெற்றுள்ள வளர்ச்சி ஒவ்வொரு அரங்குகளிலும் மிகவும் அருமையான முறையில் சித்திரிக்கப்பட்டு இருந்தது.

வேளாண்மைப் பொறியியல் துறை, ஊரக வளர்ச்சித்துறை, வனத்துறை, கூட்டுறவுத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, மின் துறை, சுற்றுலாத்துறை, மருத்துவம், சுகாதாரம், குடும்ப நலம், வருவாய்த்துறை, அறிவொளி இயக்கம், கல்வித்துறை, தொழில்துறை, பொதுப்பணித் துறை, சமூகநலத்துறை, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, ஆதி திராவிடர் வீட்டுவசதித்துறை, (தாட்கோ), ஸ்டெப்ஸ் பெண்கள் முன்னேற்றக் குழு எனப் பல்வேறு துறைகளும் அரசின் பல திட்டங்கள், புள்ளி விவரங்களுடன் விளக்கப்பட்டிருந்தன.



## சிந்தனையாளர் அண்ணா !

**சிந்தனையாளர்- சிறந்த எழுத்தாளர்- சீரிய சொற்பொழிவாளர் என்ற முறையில் அவர் பெரும் சிறப்புக்கள் பெற்றிருந்த அதே நேரத்தில், தாய் மொழியாம் தமிழ் மொழி மீது கொண்டிருந்த நியாயமான பற்றின் காரணமாக, அவர் மக்களுடைய எண்ணங்களையும், இதயங்களையும் கவர்ந்தார்.**

**–காயிதெமில்லத் முகமது இஸ்மாயில்**

மேலும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு வீடியோ ஊர்தி ஒதுக்கீடு செய்து அவற்றின் மூலம், ஒவ்வொரு நாளும் மூன்று கிராமங்களில் அரசின் பல்வேறு சாதனைகளை விளக்கும் வண்ணம் வீடியோ படக்காட்சி நடத்தப்பட்டது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் குழந்தைகளுக்கு இலவச மருத்துவ பரிசோதனை, தடுப்பூசிப் போடுதல், கருவுற்ற தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து வழங்குதல், இலவசக் கண் பரிசோதனை, முதியோர் உதவித் தொகை பெற, தகுதியான நபர்களைத் தேர்வு செய்தல், வங்கிக் கடன் பெற ஆலோசனைகள் வழங்குதல், இலவச நிலப்பட்டா, மனைப்பட்டா வழங்க மனுக்கள் பெறுதல், மகளிர் மேம்பாட்டுத் திட்டப்பணிகள் மேற்கொள்ளுதல், ஏழைகளுக்கு இலவச மரங்கள் வழங்குதல், சுய தொழில் தொடங்குவோருக்குத் தக்க ஆலோசனைகள் வழங்குதல், குடும்பநலம், சிறு சேமிப்புப் பணியில் தக்க ஆலோசனை வழங்குதல், ஊனமுற்றோருக்கு உதவி வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல், கால்நடைகளுக்கு மருத்துவம் செய்தல் போன்ற பணிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

மேலும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் நாடகம், கலை நிகழ்ச்சி ஆகியவற்றின் மூலம், அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் எடுத்துரைக்கப்பட்டன.

பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சியைத் தொடங்கி வைத்த மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி பேசும்போது குறிப்பிட்டதாவது:

"ஒரு அரசு பல்வேறு சாதனைகளைச் செய்யலாம். பல்வேறு துறையின் மூலம் மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைத் தரலாம். ஒரு அரசு, மக்களுக்குத் தேவையான நல்ல பல திட்டங்களைத் தரலாம். துணைச் சாலைகளைத் தொடங்கலாம், தேவையான அனைத்தையும் பூர்த்தி செய்யலாம். ஆனால், இவை அனைத்தும் மக்களுக்குச் செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துச் சொல்லுகின்ற துறைதான் இந்தச் செய்தித்துறை.

"இந்த அரசு என்ன செய்தது என்று கேட்பவருக்கு ஒரு நல்ல பதிலைச் சொல்லுகின்ற வகையில்தான், செய்தித்துறையின் மூலம் இந்தப் பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சி இங்கே அமைக்கப்பட்டுள்ளது.

"ஒவ்வொரு துறையிலும் முத்திரைப் பதிக்கின்ற வகையில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முழு அக்கறையும் கவனமும் எடுத்துக் கொண்டு இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் பெரும்பான்மையான தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளோம் என்று கூறிக்கொள்வதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

"புதுக்கோட்டை மாவட்டத்தை எடுத்துக்கொள்வோமேயானால், நீண்ட நாள் பிரச்சினை நல்ல குடிநீர் வேண்டும் என்பது. அந்தக் குடிநீர்த் தேவையை இரண்டே ஆண்டுக் காலத்தில் பூர்த்தி



செய்தது டாக்டர் புரட்சித் தலைவி அரசுதான்".

விழாவிற்கு த் தலைமையேற்று, பல்துறைப் பணி விளக்க முகாமினைத் தொடங்கிவைத்து மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டதாவது:

"இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டங்கள் இந்த மாநிலத்தில் நிறைவேற்றப் படுகின்றன. வளர்ச்சித் திட்டங்களாக இருந்தாலும் சரி, நலத் திட்ட உதவிகளாக இருந்தாலும் சரி, அல்லது இலவசத் திட்டங்களாக இருநதாலும் சரி, மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களாக இருந்தாலும் சரி, எந்தத் திட்டங்களாக இருந்தாலும் இந்தியத் துணைக் கண்டத்திற்கே அறிமுகப்படுத்தும் முதல் அமைச்சராகத் தமிழக முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

"எத்தனைத் திட்டங்கள் இந்த ஆட்சிக்காலத்தில் தீட்டப்படுகின்றது, திட்டத்தின் பயன் என்ன என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தீட்டப்படுகின்ற திட்டங்கள் எல்லாம் அடித்தள மக்களின் இதயங்களைத் தொட்டாக வேண்டும் என்பதற்காக இதுபோன்ற பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன.

"படித்துத் தெரிந்துகொள்வதைவிட, கேட்டுத் தெரிந்து கொள்வதை விட, கண்ணால் பார்த்தால் அது மனதில் நிலைத்து நிற்கும். பார்வைபட்டால் அது மனத்திரையில் நிலைத்து நிற்கும் என்ற வகையில் இப்படிப்பட்ட பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன".

விழாவிற்கு முன்னிலை வகித்து மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் பேசும்போது:

"புதுக்கோட்டையில் ரூபாய் 30 இலட்சம் செல்வில் குளிர் சாதனப் பெட்டி வசதியுடன் 8 எட்டு அறைகளைக் கொண்ட தமிழ்நாடு சுற்றுலா விடுதி தமிழ்நாடு சுற்றுலாத்துறை மூலம் விரைவில் அடிக்கல் நாட்டப்பட உள்ளது" என்று குறிப்பிட்டார்.

விழாவில் விளக்கவுரையாற்றிய செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் குறிப்பிட்டதாவது:

"அரசின் நலத்திட்டங்கள் எல்லாம் அடித்தளத்தில் உள்ள மக்களுக்காக — ஏற்றமிகு திட்டங்கள் எல்லாம் ஏழை எளியோருக்காக என்ற நோக்கத்தோடு, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பல சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்துவதோடு, அவை எல்லாம் மக்களைச் சென்று அடைய வேண்டும். மக்களுக்கு இந்தத் திட்டங்கள் எல்லாம் தெரிய வேண்டும், என்ன திட்டங்களை நிறைவேற்றுகின்றோம் என்பதை அறிய வேண்டும் என்பதற்காக இந்த ஆண்டு இத்தகைய பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியை 10 மாவட்டங்களில் நடத்துவதற்கு உத்தர விட்டுள்ளார்.

"இந்த ஆண்டு பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியினை முதன் முதலில் புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்."

விழாவிற்கு வருகைதந்த அமைச்சர் பெருமக்கள், அரசு அலுவலர்கள் ஆகியோரை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி. வரப் பிரசாத ராவ், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

துணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு மா. விஸ்வநாதன் நன்றியுரை கூறினார்.

திரைப்பட நடிகர் டைப்பிஸ்ட் கோபு நடித்த 'நல்லதே நடக்கும்' நாடகம், திரைப்பட நடிகர் பக்கோடா காதர் வழங்கிய 'நல்ல குடும்பம்' என்ற நாடகம், ஸ்ரீரங்கம் ரேவதி முத்துசாமி குழுவினரின் 'கந்தன் காவியம்' என்ற நாட்டிய நாடகம், சென்னை சுதாஸ் குழுவினரின் 'நீங்க நல்லா இருக்கணும்' நாடகம், திரைப்பட நடிகர் தில்லைராஜனின் 'வச்சகுறி தப்பாது' நாடகம், நேரு இளைஞர் மையம் வழங்கிய பல்சுவை நிகழ்ச்சி, நாட்டிய நிகழ்ச்சி மற்றும் 'அறிவொளி' யின் பள்ளி மாணவ மாணவியர் கலைநிகழ்ச்சி ஆகியவை அரசின் சாதனைகளை விளக்கும் வண்ணம் நடைபெற்றன.

# பெண்களுக்குப் பெரியார் தந்த சிறப்பு



**பெண்** ஆணைச் சார்ந்து வாழ வேண்டியவள் அல்லள் என்கின்ற முடிவான கருத்தைத் தம் முதலாகக் கொண்டிருந்த பெரியார் ஈ.வெ.ரா. தம் நாற்பத்தெட்டு ஆண்டு காலப் பொது வாழ்க்கையில், சொற்பொழிவை நிகழ்த்தத் தொடங்கும் முன் "சகோதரர்களே! சகோதரிகளே" என்றும், "தாய்மார்களே!" என்றும், பின்னாட்களில் "தோழர்களே, தோழியர்களே" என்றும் விளித்தே பேசிவந்தார்.

**விதவைத் திருமணம்**

விதவைகட்கு மறுமணம் செய்து கொள்ளும் உரிமை வேண்டும் என்று வாதாடியவர் பெரியார் ஈ.வெ.ரா. அத்துடன் பல விதவைகளுக்குத் தாமே முன்னின்று மறுமணம் நடத்தி வைத்திருக்கிறார். அவர் வாழ்வில் நடந்த செயல் ஒன்று அறியத்தக்கது:

"என் தங்கை தன் இளம் வயதிலேயே ஒரு பெண் குழந்தையையும், ஒரு ஆண் குழந்தையையும் விடுத்து விண்ணுற்றாள். அவற்றுள் அம்மாயி என்று அழைக்கப் பெறும் அப்பெண் குழந்தைக்கு அதன் 10-வது வயதில் சிறந்த செல்வாக்கோடு ஒரு செல்லக் கலியாணம் செய்து வைத்தோம். கலியாணம் செய்த 60-வது நாள் அப் பெண்ணின் கணவன் என்னும் 13 வயதுள்ள சிறு பையன், பகல் 2 மணிக்கு "விஷபேதி" யால் விண்ணுற்றான். அவன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்டதும் அப் பெண் குழந்தை என்னிடம் ஓடிவந்து "மாமா! எனக்குக் கலியாணம் செய்துவை என்று நான் உன்னைக் கேட்டேனா? இப்படி என் தலையில் கல்லைப் போட்டாயே?" என்று "ஓ" வென்று அலறிய சப்தத்தோடு என் காலடியில் அதன் மண்டையில் காயமுண்டாகும்படி திடீரென்று விழுந்தது. துக்கம் 'விசாரிப்பதற்காக அங்கு வந்திருந்த ஆண், பெண் உட்பட சுமார் 600, 700 பேர்கள் அக் 'குழந்தையையும் என்னையும் பார்த்த வண்ணமாய்க் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வடித்தனர். எனக்கும் அடக்கவொண்ணா அழுகை வந்துவிட்டது. ஆனால் கீழே கிடந்த அந்தக் குழந்தையை நான் கையைப் பிடித்துத் தூக்கும் போதே, மறுபடியும் அதற்குக் கலியாணம் செய்து விடுவது என்கின்ற உறுதியுடனே தூக்கினேன்' என்கிறார்!

அதே உறுதியுடன் மறுமணத்தை வேற்றூரில் முடித்தும் வைத்திருக்கிறார். அதனால்-



எனது அப்பா அழாத குறையாய், "அவமானம் வந்து விட்டதே" எனத் தலையில் கைவைத்து உட்கார்ந்து விட்டார். எங்கள் அம்மாவோ தூக்கில் தொங்கவே போய் விட்டார்கள்.

ஊரில் பலர் கூடினார்கள்; ஒருமனதாகச் சாதி நீக்கம் செய்து விட்டார்கள். நாங்கள் மூன்று வீட்டாரும் நீக்கப்பட்ட ஆறு வருஷம் வரை சாதியிலிருந்து தள்ளப்பட்டு (உறவினர் விலக்கம்) இருந்தோம்.

—என்கிறார். ஆக, விலக்கப்படுவோம் எனத் தெரிந்திருந்தும் ஊராரால் விலக்கப்பட்டிருந்த ஒரு செயலைத் துணிகரமாகச் செய்து முடித்து வெற்றியும் பெற்றார் பெரியார்.

அரசியல், சமூகவியல், சீர்திருத்தவியல், பெண் மக்கள் முன்னேற்றம் என்றும் சொல்லிக் கொண்டிருக்கும் பெரும்பான்மை மக்கள், இவ்வாறு சொல்வதைத்; தங்கள் தனி நல வாழ்விற்கும், உயர் தனிப் புகழுக்கும் விளம்பரம் தேடவே ஓர் உறுதுணையாகக் கொள்கின்றனர்.

பெரியார் ஈ.வெ.ரா. இவ்வாறு பொது வாழ்க்கையில் இரட்டைவேடம் போடும் போலிப் பேச்சாளர்களை அழுத்தந் திருத்தமாகக் கண்டிக்கிறார்:

பெண் மக்கள் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசுவோர், தங்கள் வீட்டுப் பெண்களைப் படுதாவுக்குள் வைத்துக் கொண்டும், விதவை விவாகத்தைப் பற்றிப் பேசுவோர் தங்கள் குடும்பங்களிலுள்ள விதவைகளைக் காவல் போட்டு, விதவைத் தன்மையைக் காப்பாற்றிக் கொண்டும் இருக்கிறார்களே தவிர, உண்மையில் ஒரு சிறிதும் நடவடிக்கையில் காட்டுவதில்லை

—என்று குற்றஞ் சாட்டுகிறார். ஆனால், பெரியார் தங்கள் வீட்டுப் பெண்களைத் திரைக்குள் வைத்துக் கொள்ளவில்லை.

தம் மனைவி நாகம்மையார், தங்கை கண்ணம்மாள் இவர்களைப் பெண்கள் என்ற அடிமைக் கண்ணோட்டத்தில் அடைத்து வைக்காமல், தமக்குற்ற துணைவர்களாக எண்ணித், தம்முடன் பல போராட்டங்களில் கலந்து கொளள வைத்தார்.

**கள்ளுக்கடை மறியலில் பெண்கள் பங்கு**

1921 -ஆம் ஆண்டில் நடைபெற்ற கள்ளுக்கடை மறியல் புகழ் பெற்றது. நவம்பரில் பெரியாரும், நண்பர்களும் சிறையேகினர். இச்சமயம் மறியலுக்கு நாகம்மையாரும், கண்ணம்மாளும் தலைமை தாங்கி நடத்தினர்; இவர்களைப் பின் தொடர்ந்த பெண்கள் பலர் மறியலிலும் கலந்துகொண்டனர்.

**நீங்கள் துணிவு மிக்கவர்களாக விரும்பினால், அவ்வாறே நடக்க முயலுங்கள். உங்களுடைய முழுநோக்கத்தையும் அதே இலக்கை அடைவதற்காகப் பயன்படுத்துங்கள். அச்சம் இருந்த இடத்தில் துணிச்சல் குடிபுகுவதைக் காண்பீர்கள்.**

**—வில்லியம் ஜேம்சு.**

இச்சமயம் பொதுவாகவே இந்தியாவில் நடந்து வந்த ஒத்துழையாமைக் கிளர்ச்சி சம்பந்தமாக, காங்கிரசுக்கும் அரசாங்கத்துக்கும் ஒரு சமாதான ஒப்பந்தப் பேச்சு நடைபெற்றது. இதற்காக, பம்பாயில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. அதற்குக் காலஞ் சென்ற சர் சங்கரன் நாயர் தலைவர். இம் மகாநாட்டின் பெயர் மாளவியா மகாநாடு. இம் மகாநாட்டின் நடவடிக்கை துவக்கப்படும் முன்பு திரு. பண்டிட் மாளவியா அவர்களும், சர். சங்கரன் நாயர் அவர்களும் மறியலை நிறுத்தி விட்டு நடவடிக்கை தொடங்கலாம்' என்று காந்தியாரைக் கேட்டுக் கொண்டார்கள். அப்போது காந்தியார்- 'மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை! அது ஈரோட்டிலுள்ள இரண்டு பெண்களிடம் இருக்கிறது. அவர்களைக் கேட்டாக வேண்டும்'

என்று பதிலுரைத்தார். இச் செய்தி, 19-1-22-ஆம் நாள் 'இந்து' பத்திரிக்கையில் வெளியிடப்பட்டிருக்கிறது. காந்தியார் இவ்வாறு சொன்னதற்குக் காரணம், ஈ.வெ.ரா.வின் மனைவி நாகம்மையார், அவரது தங்கை கண்ணம்மாள் ஆகிய இரு பெண்மணிகளும் மறியலுக்கு முக்கியக் காரணமானவர்கள். ஆதலால் அவர்களின் கருத்தையறிந்த பின்பே முடிவு செய்ய வேண்டுமென்று கருதிக் கூறியதே ஆகும்.

**நாகம்மையாரும் வைக்கமும் போராட்டமும்**

பெரியார் சிறைப்பட்டதும்

நாகம்மையார் முக்கியப் பங்கெடுத்துக் கொண்டார். தமிழ்நாட்டிலிருந்தும், மலையாளத்திலிருந்தும் ஏராளமான பெண்கள் இக்கிளர்ச்சியில் பங்குகொண்டனர். ஒரு மாதமானவுடன் பெரியார் விடுதலையானார். தடையுத்தரவை மீறியமையால், திரும்பவும் கைது செய்யப்பட்டு ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுத் திருவாங்கூர்ச் சிறைக்குக் கொண்டு போகப்பட்டார்.

'அதன் பிறகு நாகம்மையார் தலைமை தாங்கிப் பல பெண்களுடன் திருவாங்கூர் முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து புரட்சியான பெருங்கிளர்ச்சியையுண்டாக்கி விட்டார். இறுதியில் சத்தியாக்கிரகம் வெற்றி பெற்றது'.

**இல்லப் பணிகள்**

இப்படிப் பல போராட்டங்களில், நாகம்மையார் ஆற்றிய பணி வரலாற்றுச் சிறப்பு மிக்க பணியாகும். நேரிடையாகப் போராட்டங்களில் கலந்து கொண்டது மட்டுமின்றி, பெரியாரின் உடல்நலத்தைக் கவனித்துக் கொள்வது, அவர் பணிகள் அனைத்திற்கும் ஆதரவு தருவது, கழகத் தொண்டர்களுக்கு உணவு படைப்பது போன்ற பலவற்றை அன்புடனும், ஆதரவுடனும் செய்து வந்தவர் நாகம்மையார்.

**கழகப் பணியாற்றிய பல்வேறு பெண்கள்**

தோழியர்கள் டி.எஸ். குஞ்சிதம், மூவலூர் இராமாமிர்தத்தம்மாள், திருச்சி நீலாவதி, ஆர். அன்னபூரணி, இந்திராணி



பாலசுப்பிரமணியம், காரைக்குடி எஸ். விசாலாட்சி போன்ற பல பெண் மக்களும் இயக்கத்திற்காக உழைத்து வந்தனர்.

*13.11.1938*-இல் சென்னையில் 'தமிழ்நாட்டுப் பெண்கள் மகாநாடு' கூடிற்று. திருவாட்டி நீலாம்பிகை அம்மையார் (மறைமலையடிகள் திருமகள்) இதன் தலைவர். இம் மகாநாட்டின் பயனாகப் பெண்களும் மறியல் செய்ய புகுந்தனர். தோழியர்கள் டாக்டர் தருமாம்பாள், மூவலூர் இராமாமிர்தத்தம்மாள் முதலிய வீராங்கனைகள் மறியல் செய்தனர்; சிறை புகுந்தனர்.

"ஆசிரியர் ஈ.வெ. ராமசாமி நாயக்கர்" எனக் குறிப்பிட்டு வந்ததை மாற்றி *25.12.1927* 'குடி அரசு' மலர் முதல் 'ஆசிரியர் ஈ.வெ. ராமசாமி' என்று மட்டும் குறிப்பிட்டு, தம் பெயருக்குப் பின்னால் இருந்த நாயக்கர் என்ற பட்டத்தை நீக்கிவிட்டார். அது முதல் மற்றவர்கள் 'நாயக்கர்' என்ற சொல் இருந்த இடத்தில் பெரியார் என்ற சொல்லை முதன் முதலாகச் சேர்த்தார்கள்.

**பெண்கள் மாநாடு**

*12, 13,11.1938*-இல் தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு ஒற்றைவாடை அரங்கில் நடைபெற்றது. அவர்கள் நிறைவேற்றிய முதல் தீர்மானம்:

இந்தியாவில் இதுவரையும் தோன்றிய சீர்திருத்தத் தலைவர்கள் செய்யவியலாமல் போன வேலைகளை இன்று நமது தலைவர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் செய்து வருவதாலும், தென்னாட்டில் அவருக்கு மேலாகவும், சமமாகவும் நினைப்பதற்கு வேறொருவர் இல்லாமையாலும், அவர் பெயரைச் சொல்லிலும், எழுத்திலும் வழங்கும் போதெல்லாம் 'பெரியார்' என்ற சிறப்புப் பெயரையே வழங்குதல் வேண்டுமென இம்மாநாடு எல்லோரையும் கேட்டுக் கொள்கிறது. (விடுதலை 16, 11, 1948).



அந்த அறிவிப்பு தொல் வழக்கப்படி வேண்டுகோள் தன்மையிலும், ஏற்கெனவே வழக்கத்தில் இருந்த பெயரை விளம்பரப்படுத்தும் தன்மையிலும் அமைந்தது. எப்படி இருப்பினும், பெரியார் என்று அழைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்ற தீர்மானம், பெண்களால்தான் போடப்பட்டது என்ற சிறப்பு என்றும் பெண்களையே சாரும்.

**மாநாடுகளுக்கு அழைத்து வருதல்**

கோயிலுக்கும், திருமணம் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் மட்டுமே போய்வரும் பழக்கத்தை உடையவர்களாக மாறிப் போயிருந்த தமிழ்ப் பெண்டிரை-

பொதுக் கூட்டங்களுக்கு அழைத்து வருவது, மாநாடுகளுக்கு அழைத்து வருவது என்ற வழக்கத்தைத் தமிழ்நாட்டில் புகுத்தியவர் ஈ.வெ.ரா. அவர்களே யாவார்.

புரட்சி வழியில் செலுத்தும் புது வழக்கத்தை உண்டாக்கி விட்ட பெரியார் அவர்கட்குப் பெண்ணினம் நன்றிக்கடன் பட்டுள்ளது.

**மனைவிக்குத் தந்த மதிப்புரை**

நாகம்மாள் இறப்பிற்காக வருந்திப் பெரியார் பின்வருமாறு எழுதுகிறார்:

**'நாகம்மாளை 'மணந்து' வாழ்க்கைத் துணையாக்க் கொண்டு 35 வருட காலம் வாழ்ந்துவிட்டேன். நாகம்மாளை நான்தான் வாழ்க்கைத்** துணைவியாகக் கொண்டு இருந்தேனயல்லாமல் நாகம்மாளுக்கு நான் வாழ்க்கைத் துணையாக இருந்தேனா என்பது எனக்கே ஞாபகத்திற்கு வரவில்லை. நான் சுயநல வாழ்வில் 'மைனராய்' 'காலியாய்' 'சீமானாய்' இருந்த காலத்திலும், பொதுநல வாழ்வில் ஈடுபட்டுத் தொண்டனாய் இருந்த காலத்திலும் எனக்கு வாழ்வின் ஒவ்வொரு துறையின் முற்போக்குக்கும் நாகம்மாள் எவ்வளவோ ஆதாரமாய் இருந்தார் என்பது மறுக்க முடியாத காரியம்'.

—உணர்ச்சி வசப்படாத பெரியார் இந்த அளவுக்கு உருகி எழுதுகிறார். நாகம்மையார் அந்த அளவிற்கு உயிர்த் துணையாய் அவர் வாழ்க்கையில் பங்கு பெற்றிருந்த பாங்கு புலனாகும்.

உண்மையை மறைக்காமல் உரைக்கும் பெரியார், தம் வார்த்தைகளால் இழக்க முடியாத இன்னுயிர்த் துணைவரை இழந்த அவலத்தின் ஊடுருவல் தெள்ளிதின் விளங்குகிறது.

நாகம்மாள் உயிர் வாழ்ந்ததும், வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய தனக்காக அல்ல என்பதை நான் ஒவ்வொரு விநாடியும் நன்றாய் உணர்ந்து வந்தேன்.

—நாகம்மாள் மறைந்தது எனக்கு ஒரு....

அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா?

ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா?

இன்பம் போயிற்றென்று சொல்லட்டுமா?

உணர்ச்சி போயிற்றென்று சொல்லட்டுமா?

ஊக்கம் போயிற்றென்று சொல்லட்டுமா?

எல்லாம் போயிற்றென்று சொல்லட்டுமா?

எதுவும் விளங்கவில்லையே!!'

என்பதாகக் குமுறிக் கூறுகிறார். வாழ்க்கையில் சிறப்பிடம் பெற்றிருந்த, நாகம்மையார், பெரியார் உள்ளத்திலும் உயரிய ஒரு சிறப்பிடத்தையே பெற்றிருந்தார்.

**ஊர்வலத்தில் பெண்கள்**

தாம் நடத்துகின்ற ஊர்வலங்களில் பெண்களை முதலில் நிறுத்தி, முதன்மைச் சிறப்பு நல்குதல் அவர் பழக்கம். வீட்டுக்கு வெளியே வந்து தெருவில் நின்று வேடிக்கை பார்ப்பதே பெருங் குற்றமாகக் கருதப்பட்ட எண்ணப் போக்கைக் காலப் போக்கில் கரைத்து மாற்றியவர்- ஊர்வலங்களில் பெண்களைக் கலந்து கொள்ள

**எது வேண்டுமென்று திட்டவட்டமாக எண்ணி விட்டீர்களேயானால், அப்பொழுதே பாதி நிறைவேறியது போல் ஆகிவிடும். வெற்றி பெற வேண்டும் என்ற உங்களுடைய திடமான எண்ணம்தான் வேறு எதனையும்விட மிகமுக்கியமானதாகும்.**

**—ஆப்ரகாம் லிங்கன்**

வைத்ததன் மூலம் பெரும் புரட்சி செய்தார்.

தனிப்பட்ட முறையில் பேசும் போதுகூட பெண்களை மிகுந்த மரியாதையுடன் அழைப்பாராம்.

பொம்முச் செட்டித் தெரு, சென்னை-2 என்ற முகவரியுடைய தங்கள் இல்லத்தில், தம் துணைவர் திரு சி.டி.டி. அரசு அவர்கள் அழைப்பின் பேரில் ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுக் காலம் பெரியார் தங்கியிருந்த போது, அவர் அன்புடன் அழைப்பதையும், பாசம் காட்டிப் பேசுவதையும் நினைவுகூர்ந்து நெஞ்சம் நெகிழ்ந்தார் திருமதி கண்ணாம்பா அரசு.

'காலையில் இட்டலிகளை ஒரு தட்டில் வைத்து, சிறு கிண்ணத்தில் மீன் குழம்பையும் வைத்து, பலகாரம் சாப்பிட வந்தமர்ந்த பெரியார் முன்னால் பரிமாறினேன். ஓரிரு துண்டுகள் சாப்பிட்டார். "அம்மாதான் இப்படி வைப்பாங்க அவங்க வைக்கிற குழம்பு மாதிரியே இருக்குது" எனக் கூறிக் கண் கலங்கினார். ஒருவேளை, தன் தாயாரைப் பற்றிச் சொல்லுகிறார் போலும் என்று நான் நினைத்துக் கொண்டேன். பிறகுதான் அவர் 'அவங்க' என்றும் 'அம்மா' என்றும் மரியாதையாக அன்போடு குறிப்பிட்டது தன் மனைவியார் நாகம்மையாரை என்று தெரிந்தது'.

—என்றார் திருமதி கண்ணாம்பா அரசு.

பெண்களுக்குப் பெயர் வைக்கும்போது ருஷ்யா, பகுத்தறிவு, மிராண்டா என்றெல்லாம் பெயர் சூட்டி அதிலும் ஒரு புரட்சி செய்தார், அவர்.

## இறுதிச் சொற்பொழிவு

19.12.73 அன்று சென்னைத் தியாகராய நகரில் நடந்த கூட்டமே இறுதிக் கூட்டம். அங்குப் பேசும்போது,

'நீங்கள் விஷயங்களைத் தீவிரமாகக் கவனிக்கணும்... மளமளவென்று வரணும், ஆண் பிள்ளைகள் வரமுடியலை என்றால் அவர்கள் வீட்டுப் பெண் பிள்ளைகளை அனுப்புங்கள்; அனுப்ப முடியவில்லை என்றால் வேலைக்கு இரண்டு ஆளைப்பிடித்து அனுப்புங்கள் 'நீ போ எனக்காக' என்று.

—என்று குறிப்பிட்டார்.

இறுதிச் சொற்பொழிவிலும் கூட, பெண்கள் இயக்கப் பணிகளைக் கவனிக்க தீவிரமாகச் செயல்பட அழைக்கப்படுகிறார்கள். பெரியார் சிந்தனைகளில் பெண்கள் முதன்மை இடத்தைப் பெற்றிருந்தார்கள். இந்த நாட்டிற்காக அவர் என்னென்ன செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டாரோ, அந்த ஆசைகளில் எல்லாம் பெண் விடுதலையும் ஓர் ஊடுபொருளாகவே விளங்குகிறது.

(பேராசிரியை அரசு மணிமேகலையின்- 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகளில் பெண்கள்' என்ற நூலிலிருந்து).

### நல்ல சனநாயகவாதி!

அரசியலோடு நாகரிகத்தை - அரசியலோடு நாணயத்தை - அரசியலோடு நல்ல நோக்கத்தை - அரசியலோடு சனநாயகத்தை - அரசியலோடு உயர்ந்த பண்பாட்டை - இணைத்துத் தந்த நல்ல சனநாயகவாதி பேரறிஞர் அண்ணா அவர்கள்.

—டாக்டர் எம்.ஜி.ஆர்.





# மலைவாழ் மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி



மதுரை மாவட்டம் பெரியகுளத்தை அடுத்துள்ள மேற்கு தொடர்ச்சி மலைகளில் சோத்துப்பாறை என்ற மலையடிவாரத்திற்கு மேல் சுமார் 2,700 அடி உயரத்தில் 3,500 மலைவாழ்மக்கள் வாழ்ந்து வருகின்றனர். குறவன் குழி, சின்ன மூங்கில், பெரியமூங்கில், ஊத்துக்காடு, ஊரடி, சுப்பிரமணியபுரம், கரும்பாறை, தாயோன்கானல், பேச்சியம்மன் பாறை, துருவம் போன்ற பல கிராமங்களில் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அந்நியரின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றும் இப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்படாத விடியல், 48 ஆண்டுகளுக்குப் பின்பு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் ஏற்பட்டுள்ளது.

தங்களின் தோட்டங்களில் விளையும் இலவம், நார்த்தை, எலுமிச்சை, மா, பலா, வாழை, கரும்பு போன்ற விளைபொருட்களை விற்பனை செய்யவும், தங்களின் உடல் நலம் குன்றிய போது சிகிச்சை பெறவும், இவர்கள் கரடுமுரடான மலைப்பாதையில் செல்லவேண்டியுள்ளது.

இம் மலைவாழ் மக்கள் தங்கள் குறைகளை மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர், திரு இரா. சம்பத், இ.ஆ.ப. அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடி நடவடிக்கையாக, ஊத்துக்காடு மலைக்கிராமத்திற்கு, 3.9.95 அன்று, பெரியகுளம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஆர். ராமசாமி, போடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு வெ.பன்னீர் செல்வம் மற்றும் வன அலுவலர்கள் ஆகியோருடன் சென்றார். ஏறத்தாழ நான்கு மணி நேரம் செங்குத்தான 2,700 அடி உயரமுள்ள மலைப்பகுதியில் அனைவரும் நடைப்பயணம் மேற்கொண்டனர்.

மலைவாழ் மக்களிடையே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில், "சோத்துப்பாறையிலிருந்து ஊத்துக்காடு கிராமத்திற்கு 14 கி.மீ. தூரத்திற்குச் சாலை வசதி ஏற்பாடு செய்ய சுமார் ரூ.30 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. முதற்கட்டப் பணியான ரூ.10 லட்சம் ஒதுக்கீடு

# அண்ணா!

—பாவலர் பாக்கிய மணாளன்



தித்திக்கும் தேன்பாகில் செந்தமிழைச் சேர்த்தெடுத்தே
எத்திக்கும் ஈந்திட்ட ஈடில்லா - வித்தகராம்
பேரறிஞர் அண்ணாவின் பேராற்றல் கண்டிங்கே
சீராளர் என்றார் சிறந்து!

தந்தை பெரியாரின் தானைத் தலைவராய்
சிந்தனைச் செல்வராய் சீர்திருத்த - வேந்தராய்
பல்லோரும் போற்றும் பகுத்தறிவுப் பாசறையாய்
நல்லறிவோ டேகினார் நன்று!

சென்னையெனும் மாநிலத்தைச் செந்தமிழ் நாடென்று
மன்றத்தில் மாற்றியவர் வைத்ததாலே - மன்பதையில்
மாற்றாரும் பல்லாண்டு வாழ்கவென்று வாழ்த்திங்கே
ஏற்றமுடன் ஏற்றார் இனிது!



கோடைவீச் சென்றாலும் கொட்டுமழை என்றாலும்
வாடைவீச் சென்றாலும் வாடாமல் - மேடைதேடி
அண்ணாவின் பேச்சென்றால் ஆவலாய் ஓடிவந்தே
எண்ணத்தில் வைத்திட்டார் ஏற்று!

அழகு நடிப்பால் அடுக்கு மொழியால்
பழகும்நற் பண்பால் பரிவின் - அழகால்
கனிந்த அறிவால் கவர்ந்த பலரும்
புனிதரெனப் போற்றினர் பூத்து!

---

செய்யப்பட்டு பணி தொடங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்குள் இச்சாலைப் பணி முடிக்கப்படும்" என்று தெரிவித்தார்.

மேலும், கடந்த 24.9.95 அன்று சோத்துப் பாறையை அடுத்து 12 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள அகமலைக் கிராமத்திற்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இரா. சம்பத், இ.ஆ.ப. அவர்கள் நடைப்பயணம் மேற்கொண்டு ரூ.10 இலட்சம் செலவில் சாலை அமைக்கும் பணியையும் தொடங்கி வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அத்துடன், முதியோர் ஓய்வூதியம், குடும்ப அட்டை முதலானவை குறித்துக் கொடுக்கப் பட்ட மனுக்கள் மீதும் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி கூறினார்.





# காமராசர் மாவட்டத்தில் பல்துறைப் பணி விளக்க முகாம்

காமராசர் மாவட்டம், விருதுநகரிலுள்ள ஆட்டுச் சந்தைத் திடலில், பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சி 11.9.95 முதல் 17.9.95 வரை நடைபெற்றது.

11.9.95 அன்று பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சியை, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் விழாத் தலைமை யேற்றுத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

"ஒரு ஆட்சி எப்படி நடத்தப் பட வேண்டும், ஒரு முதலமைச்சர் எத்தகைய வேகத்தில் செயல்பட வேண்டும் என்று தெரிந்து கொள்ளத்தான் இந்தப் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன. ஒரு அரசாங்கம் தீட்டும் திட்டம் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். அந்தத் திட்டத்தைப் பற்றி மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தப் பணி இந்தப் பல்துறைப் பணி விளக்க முகாம் மூலம் செயல்பட்டு இருக்கிறது. உலகத்திற்கே எடுத்துக்காட்டாக அற்புதமான திட்டங்களை எல்லாம் புரட்சித்தலைவி செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். தீர்க்கதரிசனத்தோடு, தொலைதூரப் பார்வையோடு நினைத்ததை முடித்துக் காட்டுகிற முதலமைச்சராக இருக்கிறார். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டங்கள் இந்த மாநிலத்தில் நிறைவேற்றப் படுகின்றன.

"19 போக்குவரத்துக் கழகங்களை அரசு நடத்தி வருகிறது. வேறு எந்த மாநிலத்திலும் இதுபோல கிடையாது. 16,000 பேருந்துகள் தமிழ்நாட்டில் அரசுக்குச் சொந்தமாக இருக்கிறன. பொது உடைமையைக் கட்டி ஆளும் மேற்கு வங்காளத்தில் கூட இது இல்லை. போக்குவரத்துத் தொழி

லாளர்களுக்குப் பென்சன் திட்டத்தைக் கொண்டு வந்தது தமிழ்நாட்டில் தான்.

"ஒரு கோடியே இருபது இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.70 கோடி மதிப்புள்ள இலவச வேட்டி, சேலை வழங்கப் பட்டது. இப்போது மீனவர் களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்படும் என்று புரட்சித் தலைவி அறிவித்து இருக்கிறார். புரட்சித்தலைவியின் சிந் தனைகள் அனைத்தும் செயல் ஆகிறது. செயல்கள் சாதனை ஆகிறது. அந்தச் சாதனைகள் சகாப்தம் ஆகிறது."

பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சியை, மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வி.சத்தியமூர்த்தி அவர்கள் தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறியதாவது:

"இதுபோன்ற கண்காட்சி களை நடத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு மக்களைச் சந்திக்கின்ற தைரியம் இருக்கிறது. 4 ஆண்டுகளாக நாங்கள் எதுவும் செய்யவில்லை என்றால், இந்த விழாவை நாங்கள் நடத்த முடியாது. காமராசர் மாவட்டத் தில் இருந்த ஒரே அணை, பிளவக்கல் அணை தான். அதற்குப் பிறகு குல்லூர்ச்சந்தை, கோல்வார்பட்டி, ஆணைக் குட்டம், வெம்பக்கோட்டை அணைகள் கட்டப்பட்டிருக்கிறன். இப்போது இருக்கன்குடி அணை கட்டப்படவுள்ளது".

விழாவில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு சஞ்சய் ராமசாமி, அருப்புக் கோட்டை சட்டமன்ற உறுப் பினர் திருமதி வி.ஜி. மணி மேகலை, காமராசர் மாவட்டப் பால்வளத் தலைவர் திரு க. சுந்தரபாண்டியன், மாவட்ட நுகர்வோர் நீதிமன்ற உறுப்பினர் திருமதி.சக்தி கோதண்டம் ஆகி யோர் பேசினார்கள்.

காமராசர் மாவட்ட வருவாய் அலுவலர் திரு ஆர். வீரராகவன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இறுதியில், செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு மா. விசுவநாதன் அவர்கள் நன்றி கூறினார்.

கண்காட்சியில் அரசின் சாதனை குறித்த விளக்கப் படங்கள், திட்டங்கள் குறித்த மாதிரிகள், அரசின் நலத்திட்ட உதவிகள் குறித்த கையேடுகள் பொதுமக்களுக்கு வழங்கப் பட்டன.

காமராசர் மாவட்டத்தின் 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, சிறுசேமிப்பு, வரதட்சணை ஒழிப்பு, முதியோர் கல்வி, சுற்றுப்புறச் சூழல் ஆகியவை பற்றி வீடியோ படம் மூலம் பொதுமக்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது. தினசரி அரசின் சாதனை குறித்த நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள், பட்டி மன்றங்கள், மாவட்டம் முழு வதும் நடைபெற்றன. கண்காட்சி நடைபெற்ற இடத்தில் தினசரி இன்னிசை நிகழ்ச்சி, பட்டி மன்றம், நாடகங்கள் நடத்தப் பட்டன. மருத்துவப் பரி சோதனை, இலவசக் கண்காட்சி முகாம், கடன் உதவி ஆலோ சனைகள், மகளிர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள், இலவச மரக்கன்று வழங்குதல், குடும்ப நலம், கால்நடை மருத்துவம் ஆகியவை அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நடைபெற்றன.

**என்னுடைய வீட்டின் நாலா மருங்கிலும் சுவரெழுப்பப் பட்டு, என்னுடைய ஜன்னல் கதவுகள் அடைக்கப்படுவதை நான் விரும்பவில்லை. பல விதமான மண்வாசனைகளும், கலாச்சார நறுமணங்களும் என் வீட்டில் புகுவதையே நான் விரும்புகிறேன். ஆனால், அவை என்னை நிலைபெயரச் செய்ய நான் இடம் கொடுப்ப தில்லை.**

**—அண்ணல் காந்தியடிகள்**

17.9.95 அன்று பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சியின் நிறைவு நாள் விழா, காமராசர் மாவட்ட ஆட்சியர் திரு வ. கனகராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கொண்டாடப் பட்டது. இவ்விழாவில் அருப்புக் கோட்டை சட்டமன்ற உறுப் பினர் திருமதி வி.ஜி. மணி மேகலை, காமராசர் மாவட்ட பூால்வளத் தலைவர், திரு க. சுந்தரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் சிறந்த அரங்கு அமைத்த நிறுவனங்களுக்கு, காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

**அரசுத் துறை**

1. ஊரக வளர்ச்சித் துறை- முதல் பரிசு.

2. வேளாண்மைப் பொறி இயல் துறை - இரண்டாம் பரிசு.





# அறிவுச் சுரங்கம்

## -மாண்புமிகு முதல்வர்

**தந்தை பெரியாரது வாழ்க்கை வரலாறு ஒரு பயன் மரம். பலரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அனுபவச் சுரங்கம். இறக்கும்வரை சமுக மேம்பாட்டிற்காக உழைத்த ஒர பெரிய தலைவர் நம்மிடம் உண்டென்றால் அது தந்தை பெரியார் தான்.**

**பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசி அதற்காக உழைத்த உலகத் தலைவர் களின் வரிசையில் தந்தை பெரியார் அவர்களுக்கு முதலிடம் என்றைக்குமே உண்டு என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.**

**நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகிற மற்றொரு செய்தி, பெரியார் என்கிற சிறப்புப் பட்டம் 1938-இல் சென்னையில் நடத்தப்பட்ட தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்தான் அவருக்கு வழங்கப் பட்டது.**

**ஒரு பெரியாரைக் கண்டுபிடிப்பதில் ஆண்களைவிடப் பெண்களுக்கு எப்படிப் பட்ட தொலைநோக்கு எண்ணம் இருந் திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும் போது இன்றும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும். இருக்கிறது! அதுவும் தமிழ்நாட்டுப் பெண்களுக்குத் தலைவர் களைத் தேர்ந்தெடுப்பதில் இருக்கிற சாதுரியம், வேறு எந்த மாநிலப் பெண் களுக்கும் இல்லை என்றே கூற வேண்டும்.**

**ஒரு பெண்ணை முதலமைச்சர் ஆக்கி யிருக்கிற தமிழகத்தின் பெருந்தன்மைக்கு, தொலைநோக்குப் பார்வைக்கு, அரசியல் துணிவுக்கு, தந்தை பெரியாரின் பெண்ணடிமை ஒழிப்புக் கருத்துக்களே உரமாய், ஊக்கமாய் இருந்துள்ளன என்பதை எவரும் மறுத்திட இயலாது.**

**'புரட்சித்தலைவியின் முழக்கம்' தொகுதி-1-லிருந்து**

**அரசுத் துறை சார்ந்த நிறுவனங்கள்.**

1. மின் வாரியம் - முதல் பரிசு.

2. பாண்டியன் போக்கு வரத்துக் கழகம் - இரண்டாம் பரிசு.

3. வனத்துறை - மூன்றாம் பரிசு.

**தனியார் துறை**

1. மெட்ராஸ் சிமெண்ட்ஸ் - முதல் பரிசு

கண்காட்சியில் கலந்து கொண்ட அனைத்துத் துறை களின் அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சான்றிதழ் வழங் கினார்கள். விழாத் தொடக் கத்தில் காமராசர் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு மு. பிச்சையா அவர்கள் அனைவரையும் வர வேற்றார். விழா இறுதியில், விருதுநகர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு வேண்டியான், நன்றி கூறினார்.



# குற்றாலத்தில் குதூகலச் சாரல் விழா!

குற்றாலச் சாரல் திருவிழா **26.8.95** அன்று மாலை குற்றாலத்தில் உள்ள கலைவாணர் கலை அரங்கில் தொடங்கி வைக்கப் பெற்றது.

இவ்விழாவிற்கு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர்மீரான் அவர்கள் தலைமை ஏற்றார். மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்கள் சாரல் திருவிழாவைத் தொடங்கி வைத்து, சுற்றுலா வளாகத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேருரை ஆற்றினார்.

நெல்லை கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். சுற்றுலாத்துறை இயக்குநர் திரு வி. குணாளன், இ.ஆ.ப., அவர்கள் திட்ட விளக்கவுரை யாற்றினார். நாடாளுமன்ற உறுப்பினர் திரு எஸ். தங்கராஜபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பி. தர்மலிங்கம், திரு ஆர். முருகையா பாண்டியன், திரு டி. வேலையா, நெல்லை சிதம்பரனார் மாவட்டப் பால்வளத் தலைவர் திரு கே.ஆர்.பி. மணிமொழியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். விழா முடிவில், கலைமாமணி குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் இசை நிகழ்ச்சியும், மதுரை நர்த்தகி நடராஜன் குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றன.

**27.8.95** அன்று நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்ச்சியின் பல்வேறு அரசுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர். ஸ்ரீநாட்டியவித்யாலயா குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சியும், நெல்லை காஜா குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

**28.8.95** அன்று நடைபெற்ற மூன்றாம் நாள் நிகழ்ச்சியில் அரசுத்துறை அதிகாரிகள் பங்கேற்றனர். சென்னை ஏ. சுதா குழுவினரின் குச்சுபிடி நடனமும், நெல்லை அண்ணாதாசன் குழுவினரின் 'புலிகாக்கும் புரட்சித்தலைவி' என்னும் நாடகமும், மேலப்பாளையம் செய்யதுஅலி ரிபாய் மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

**29.8.95** அன்று நடைபெற்ற நான்காம் நாள் நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் கலை நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்துப் பேருரையாற்றினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமை ஏற்றார். நாடாளுமன்ற உறுப்பினர் திரு என். தங்கராஜபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் திரு பி. தர்மலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். தூத்துக்குடி சக்தி நாட்டியக் குழுவினரின் நடன நிகழ்ச்சியும், விஜய்விஸ்வநாத்தின் கர்நாடக இசைப் பக்திப் பாடல்கள் நிகழ்ச்சியும், திரைப்பட நடிகர் திரு கே. கண்ணன் குழுவினரின் நாடக நிகழ்ச்சியும் நடைபெற்றன.

**30.8.95** அன்று நடைபெற்ற ஐந்தாம் நாள் நிகழ்ச்சியில், அரசுத்துறையைச் சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். காந்தி கிராம அறக்கட்டளை ஆசிரமக் கலை நிகழ்ச்சியும், கரிவலம் கவிஞர் ராமசாமியின் காவடிச் சிந்து நிகழ்ச்சியும், ஸ்ரீவடிவுடையம்மன் பைன் ஆர்ட்ஸ் குழுவினரின் நாடகமும் இடம் பெற்றன.

அதேபோன்று, ஆறாம் நாள் நிகழ்ச்சி நடைபெற்ற நாளான **31.8.95** அன்று, அரசுத்துறையைச் சார்ந்த பல்வேறு அதிகாரிகள் பங்கேற்றனர். கட்டபொம்மன் போக்குவரத்துக்கழகக் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சியும், மதுரை இளையநிலா குழுவினரின் நாடகமும், சென்னை நித்தியப் பரதாஞ்சலி பத்மாவின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

**1.9.95** மற்றும் **2.9.95** ஆகிய இரண்டு நாட்கள் நிகழ்ச்சிகள் மாண்புமிகு பஞ்சாப் முதல்வரின் மறைவினையொட்டி நடத்தப்பெறவில்லை.

**3.9.95** அன்று மாலை 7.00 மணியளவில் சாரல் திருவிழாவின் நிறைவு நாள் விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று நிறைவு நாள் விழா சொற்பொழிவாற்றினார். திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் திரு து. சந்திரசேகரன் முன்னிலை வகித்தார். அரசு அலுவலர்கள் சிறப்புரையாற்றினார்கள். குடிசை மாற்று வாரிய செயற்பொறியாளர் திரு து. கணேசன் முன்னதாக வரவேற்றுப் பேசினார். குற்றாலம் நகராட்சி ஆணையாளர் திரு பி. தங்கமணி நன்றியுரையாற்றினார். காலை 10.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தென்மண்டலப் பண்பாட்டு மையத்தின் சார்பில், கலை நிகழ்ச்சியும், திரு இராஜகோபாலனின் மெல்லிசை நிகழ்ச்சியும், பல்லவி கிரியேஷன்சின் 'புதிய பார்வை' நாடகமும், நேரு இளைஞர் மையத்தின் சார்பில் கிராமியக் கலை நிகழ்ச்சியும், கோவில்பட்டி நளாயினி குழுவினரின் கிராமியப் பாடல் நிகழ்ச்சியும், இந்துமதி சுபாஷினியின் பரதநாட்டியமும், திரு சுலைமான் சேட்டின் மேஜிக் ஷோ நிகழ்ச்சியும், திருமதி லெட்சுமி இராமசாமியின் 'பரதநாட்டியமும்', வாசுதேவன் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சியும், திரு ஜெய்கணேஷ் குழுவினரின் நாடகமும் இவ்விழாவில் நடத்தப்பெற்றன.

இவ்விழா மற்றும் கலை நிகழ்ச்சிகளை ஆயிரக் கணக்கான பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் கண்டு களித்தனர்.

## பல்துறைப் பணி விளக்க முகாம்கள்

**தமிழக அரசின் சாதனைகள், திட்டங்கள், நலப்பணிகள் அனைத்தையும் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பகுதி மக்களும் அறியும் வண்ணம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1995 - 96 ஆம் நிதியாண்டில் புதுக்கோட்டை, காமராஜர், நீலகிரி, திருமபுரி, வட ஆர்க்காடு அம்பேத்கர், பெரியார், மதுரை, தென் ஆர்க்காடு வள்ளலார், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் ஆகிய பத்து மாவட்டங்களில் பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சியினை அமைக்க உத்தரவிட்டுள்ளார்.**

**எண்பத்து மூன்றில் தமிழ்**
**பகுதி - 1**

பதிப்பாசிரியர்: டாக்டர் அன்னிதாமசு

வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600 113.

பக்கம்: 292 விலை: ரூ.47

**ஆ**ண்டுதோறும் பல்வேறு துறைகள் குறித்து நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, கவிதை என்று பல்வேறு தலைப்பு களில் இலக்கியப் படைப்புகள் வெளிவருகின்றன. ஆனால், அவை குறித்த சரியான தகவல்களை எப்படிப் பெறுவது? என்கிற வினா தமிழார்வலர்களுக்கு எழுவது இயல்புதானே? அந்த வினாவுக்கு விடையாக வந்திருப்பது தான் இந்தத் தொகுப்பு நூல்.

இந்நூலில் 'திரைப்படம், திரையிசைப் பாடல், திங்கள் இதழ், மாத நாவல், குறுநாவல், சிறுகதை, இதழ்ச் சிறுகதை, வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம், மேடை நாடகம் ஆகிய பத்துத் தலைப்புகளில், அவ்வத்துறை வல்லுநர்கள் கட்டுரைகள் படைத் திருக்கிறார்கள்.

இதுபோன்ற தொகுப்புகள் வெளிவருவது, உலகம் முழுவதும் தமிழில் என்னென்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை உணர அவை துணைபுரிவதோடு, பிற்கால ஆய்வுக்கும் பயனாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**வாசன் ஜோக்ஸ்**

தொகுப்பாசிரியர்: துரை பிரிதிவிராஜ்

வெளியீடு: சாந்தா பப்ளிஷர்ஸ்




5, ஸ்ரீபுரம் 2வது தெரு சென்னை - 600 014.

பக்கம்: 316 விலை: ரூ.25

**இ**ன்பமும் துன்பமும் இரண்டறக் கலந்ததுதான் வாழ்க்கை என்றாலும், அதில் நகைச்சுவைக்கு முக்கிய இடமுண்டு. நகைச்சுவை மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. மகிழ்ச்சியாய் இருப்பது உடல் நலத்துக்கு நல்லது என்றும் கூறுவார்கள். அந்த வகையில் இந்த நூலில் ஏராளமான நகைச்சுவைத் துணுக்குகள் நிறைந்துள்ளன.

சமுதாயத்தில் பலரைச் சந்திக்கிறோம், சிந்திக்கிறோம். அத்தகையவர்களை நகைச்சுவை வடிவத்திலே இந்த நூலில் பார்க்கிறோம் - படிக்கிறோம்.

உதாரணத்துக்கு ஒன்று:

"டாக்டர் எனக்கு மூச்சுவிடக் கஷ்டமா இருக்குது!"

"கவலைப்படாதே, அதை நிறுத்திடறேன்!"

கைக்கு அடக்கமான கச்சிதமான புத்தகம். வயிறு வலிக்கச் சிரிக்கவைக்கும் சிரிப்புத் துளிகள். ஆம். அவை தேன் துளிகள்.

**உலக மகா இலக்கிய மேதைகள்**

ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசனார்

வெளியீடு: மணி பதிப்பகம், 58, எஸ்.பி.எஸ். முதல் தெரு, சென்னை - 600 014.

பக்கம்: 248 விலை: ரூ.3

இலக்கிய மேதைகள், இருளில் வழிகாட்டும் ஒளி விளக்குகள். அந்த விளக்கின் ஒளியிலே வாழ்க்கைப் பாடங்களை நாம் படிக்கலாம். பாதை மாறாமலும் நேர் வழி செல்லலாம். அவ்வாறு வழிகாட்டிய வரலாற்று நாயகர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார் நூலாசிரியர்.

ஜப்பான் நாவலாசிரியை முராஸகி ஹிகிபூ முதல் இங்கிலாந்து நாட்டின் சார்லஸ் டிக்கன்ஸ் வரை 25 இலக்கிய மேதைகள் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றனர்.

**தமிழ் இலக்கியம் கற்க!**

ஆசிரியர்: அ.கி. பரந்தாமனார்

வெளியீடு: அல்லி நிலையம் 19, முத்து முதலித் தெரு சென்னை 600 007

விலை: ரூ.13.50 பக்: 82

**த**மிழ் இலக்கியத்தை எப்படிக் கற்பது?

இந்த வினாவுக்கு விடையாக விளங்குகிறது இந்நூல். தொடக்கமே நூலின் முத்தாய்ப்பாக விளங்கு கின்றது. தமிழ் இலக்கியம் கற்க அடிப்படையான தமிழக வரலாறு, சமயக் குறிப்புகள், அகத்திணை, புறத்திணை விளக்கங்கள் எல்லாம் வகுத்தும் தொகுத்தும் கூறப்பட்டு உள்ளன. அத்துடன், இலக்கியம் கற்பதற்கான ஐந்தாண்டுத் திட்டமும் தீட்டப்பட்டுள்ளன. இலக்கிய ஆர்வலர்கள் இதயத்தில் பதியத்தக்க கருத்துக்கள் பல, நூல் முழுவதும் விரவி உள்ளன.

**- பொ. மறைமலை**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

199918



தூய
பட்டு

தூய
சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்



பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

